GROUNDWORK OF HISTORY

மூலாதாரச் சரித்திர நூல்

L. H. தொறஸ் பெரெரு
M. இரத்தினசபாபதி

பதிப்பாளர்
W. M. A. வாஹிட் அன்ட் பிரதர்ஸ்.

Publishers: W. M. A. WAHI[illegible] BROS., Colombo

இலங்கையினதும் உலகத்தினதும்

மூலாதாரச் சரித்திர நூல்

கொழும்பு, சென்ற் பெனடிக்ஸ் கல்லூரியில் சரித்திரபாட விரிவுரையாளாகிய

L. H. ஹொஹஸ் பெறெரு **B. A. (Lond.)**

கொழும்பு, சென்ற் பீற்றேஸ் கல்லூரியில் சரித்திரபாட விரிவுரையாளராகிய

M. இரத்தினசபாபதி **B. A. Hons. (Lond.)**

ஆகியோரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது.

மொழிபெயர்ப்பாளர்:

வித்துவான் **B. M.** யோசவ் பொன்ராசா

வித்துவான் **M. J.** வேதநாயகம்

(ஆதிகாலந் தொடக்கம் கி. பி. 1505-ம் ஆண்டு வரையும்)

கலிஷ்ட வகுப்புகளுக்கு உகந்தது

பதிப்பாளர்

W. M. A. வாஹிட் அன் பிரதர்ஸ்

233, பெரியதெரு, கொழும்பு.

1955

THE UNIFORM TAMIL EDITION OF

GROUND-WORK OF HISTORY

FOR JUNIOR CLASSES

BY

L. H. HORACE PERERA, B. A. (Lond.)

Certificate in Ceylon History (Ceylon),
English Trained, Senior Master in History and Government,—
St. Benedict's College

AND

M. RATNASABAPATHY, B. A. Hons. (Lond.)

English Trained, Senior Master in History and Government,
St. Peter's College

Approved by

THE EDUCATION PUBLICATIONS BOARD,
ALSO IN UNIFORM SINHALESE EDITION.

PUBLISHERS

W. M. A. WAHID & BROS

BOOKSELLERS, STATIONERS AND PRINTERS,

233, Main Street, COLOMBO.

1955

ரித்து அவற்றைப் பேச்சு, எழுத்து, அப்பியாசங்களாக சரித்திர ஆசிரியர் வகுப்பறைகளில் பாவிப்பது அவசியம்.

எமது தேச சரித்திரத்தை எழுதும் வேலையில் ஈடுபட்ட மறு ஆசிரியர்கள் போல, இந்நூல் ஆசிரியர்களும் ஓர் குறிக்கப்பட்ட எல்லையுள் இருந்து வெளிவராது உழைத்திருக்கின்றனர். சிறுகால எல்லையுள் அடங்கிய சிற்சில சரித்திர பாகங்களைப்பற்றி மிக விவேகத் துடனும் கல்வித்திறமையுடனும் சிற்சில ஆசிரியர்கள் நூல்கள் எழு தியிருப்பது உண்மைதான். ஆனால் இலங்கையின் சரித்திரத்தை ஓர் பிரிவினரின் சார்பாகவன்றி தேசியபான்மையில் வழுவாத ஆராய்ச்சி முறையில் சாஸ்திர விதிப்படி எழுதினவர் இது கால வரையில் ஒருவரும் இலர். எனினும், எமது தேச சரித்திர ஆராய்ச்சி இன்று இருக்கும் நிலையில் சென்றகால நிகழ்ச்சிகளை என்றும் மனதில் வைத்திருந்து அவற்றை வருங்கால மாணவர்களுக்கு எடுத்துக்காட் டிவருதல் திருப்தி அளிக்கின்றது.

கொழும்பு 3.
24-6-1952.

முகவுரை

"மூலாதார சரித்திர நூல்" எனும் பெயருடன் வெளிவரும் இந்நூலை எமது பள்ளிக்கூட கனிஷ்டவகுப்புகளின் உபயோகத்திற்கு வெளியிடுதலில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேம். இத்தகைய நூல் ஒன்றின் அவசியத்தை உணர்ந்த பல உபாத்திமார்களினதும் தலைமை ஆசிரியர்களினதும் வேண்டுகோளுக்கு நாம் இசைந்து சிலவருடங் களுக்குமுன்பே இவ்வேலையை ஆரம்பிக்கலாயினேம். ஆனால் தவிர்க்க முடியாதிருந்த வேலைகள் பல இருந்தமையால் இந்நூல் வெளியிடு வதில் தாமத முண்டாயிற்று.

கனிஷ்ட வகுப்பு மாணவர் விளங்கக் கூடிய முறையிலும், பாஷைநடையிலும், சரித்திரத்தின் மூலாதார நிகழ்ச்சிகளை வாசிக்கும் மாணவர்களுக்குச் சந்தோஷம் ஏற்படக்கூடிய பான்மையில் இந்நூலை எழுதுவதற்கு எம்மால் கூடியளவு முயன்றுள்ளோம். கனிஷ்ட வகுப்பு மாணவருக்குச் சரித்திரபாடம் "கண்கள் மூலமாகவும் கைகள் மூலமாகவும்" உருசிகரமாகப் புகட்டப்படவேண்டும். ஆதலால் அவர் கள் இந்நூலில் வாசிக்கும் பிரதான சரித்திர நிகழ்ச்சிகள் ஒவ்வொன் றும் புகைப்படப்பிரதிகளினுலோ அல்லது க்ஷேத்திரப்படம் தேசப்படம் முதலியனவற்றினுலோ விளக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பாடத் தின் முடிவிலும் கொடுக்கப்பட்டுள்ள "புதுமுறை அப்பியாசங்கள்" அப்பிரிவிலுள்ள பிரதான விஷயங்களை மனதில் அழுத்திவிடத்தக் கனவாக ஆயத்தஞ் செய்யப்பட்டன. ஒவ்வொரு பாடப்பிரிவையும் பலதரப்பட்ட கனிஷ்ட வகுப்புகளில் கற்பித்துத் திருப்தி அடைந்த பின்புதான் இறுதியாக இந்நூலிலே தொகுத்துக் கொண்டோம்.

சரித்திர சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றுக மாணவர்கள்முன் இந்நூலில் பவனிவரும் தன்மையில் அவர்கள் உண்மையில் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதும், சரித்திர கல்வியானது அவர்களுக்கு உருசி கர மற்றதாகத் தோன்றுதென்பதும் எமது நம்பிக்கை.

இந்நூலைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தும், குறை களைக் காட்டியும் உதவிய பலருக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் எல்லோரையும் இங்கே பெயர்களாற் குறிப்பிட இயலாது. எனினும், ஆசிரியர்கள் W. B. de அல்விஸ், D. சம்மன் முதலிய பெரியோர் அளித்த உதவியை இங்கு குறிக்காது விடமுடியாது. திரு.

W. M. A. வர்ணசூரியர் அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சரித்திரம் கற்பிக்கும் முறையைப் பற்றி நமக்கு அளித்தபோதனைக்கு நாம் அவருக்கு விசேஷ முறையில் நன்றிகூறுகிறோம். இந்திய அரசாங்க புதைபொருள் இலாகா அதிபரும், இலங்கைப் புதை பொருள் இலாகா அதிபரும், தத்தமக்குப் பதிப்புரிமையுள்ள பலபடங் களையும் நாம் இந்த நூலில் பிரதிசெய்யத் தடையின்றி அளித்த உத்தரவுக்கு அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள் ளுகிறோம். இறுதியாக இலங்கைச் சர்வகலாசாலை கல்விப் பிரிவின் விரிவுரையாளராகிய திரு. நேசய்யா அவர்கள் இந்நூலுக்கு எழுதிய கண்ணிய மதிப்புரைக்காக அவருக்கும் எமது நன்றியை அறிவித்துக் கொள்கிறோம்.

L. H. ஹெறஸ் பெறேரு
M. இரத்தினசபாபதி.

கொழும்பு.
15-7-1952.

பொருள் அட்டவணை

அத்தியாயங்கள்		பக்கம்
1. ஆதிகாலம்	...	1
சரித்திரம் என்பது யாது?	...	1
சரித்திரகாலத்திற்கு முந்திய காலம்	...	2
கற்காலங்கள்	...	6
உலோக காலங்கள்	...	14
மனிதனின் தொழில்களின் ஆதிவரலாறு	...	17
நாகரிகம் எவ்வாறு ஆரம்பமானது?	...	18
2. இலங்கை சரித்திர காலத்திற்கு முன் இருந்த விதம்	...	20
3. நாகரிகத்தின் தொடக்கம்	...	25
நைல் நதிப்பள்ளத்தாக்கின் நாகரிகம்	...	26
இரண நதிகளுக்கிடையிலுள்ள நாடு	...	33
இரும்புக்காலத் தொடக்கம்	...	38
அசிரியர்	...	39
எபிரேயர் அல்லது யூதர்	...	41
பார்சியர்	...	46
இந்தியா	...	50
(அ) இந்து நதிப்பள்ளத்தாக்கின் நாகரிகம்	...	50
(ஆ) ஆரியர்.	...	54
சீனா	...	57
4. புகழ்மிக்க புராதன கிறீஸ்	...	62
ஈசிய நகரங்களின் அழிவு	...	64
கிரேக்கர்கள்	...	66
பாரசிகர் யுத்தங்கள்	...	71
கிறீஸின் மகிமை	...	74
மசிடோனியன் ஆகிய பிலிப்பு	...	81
5. பண்டைய உரோமை	...	91
ஆரம்பங்கள்	...	91
உரோமை	...	94
உரோமையைப் பெருப்பித்தல்	...	95
உரோமர் வெற்றியின் பலாபலன்கள்	...	104
யூலியஸ் சீசர்	...	107
அகுஸ்தஸ் சீசர்	...	109
உரோமை உலகத்திற்குப் புரிந்த நன்மைகள்	...	112

பக்கம்

கிறீஸ்துவ மத எழுச்சி
நித்திய நகரமான உரோமை ... 117
... 123

6. பௌத்தம்–அதன் தோற்றமும் வளர்ச்சியும் 126
பூர்வ ஆரியர்களின் மதம்
பிராமணியம் ... 126
கௌதம புத்தர் ... 127
பௌத்தமும் பிராமணியமும் ... 130
மௌரியப் பேரரசு ... 135
அசோகன் ... 136
மௌரியக் கலைகள் ... 138
... 143

7. இலங்கையின் பூர்வ நாகரிகம் ... 147
ஆரியரின் வருகை
விருதுக் கம்பக் கூட்டத்தினர் ... 147
பௌத்தம வரவு ... 153
பௌத்தமதம் விரைவில் பரம்பியதற்கான காரணங்கள் ... 154
பௌத்தத்தின் செல்வாக்கு ... 160
... 162

8. மத்தியகாலத்தில் மேற்குநாடுகளின் நிலை 166
உரோமைப் பேரரசின் தளர்ச்சி
மிலேச்சர்களின் முற்றுகைகள் ... 166
இயசுத்தினியன் (இ. பி. 483-565) ... 167
பாப்பரசர்களின் அதிகார எழுச்சி ... 171
அர்ச். ஆசீர்வாதப்பரும் துறவிகளின் தொண்டுகளும் ... 174
முகம்மது 176
பரிசுத்த உரோமைப் பேரரசு ... 178
சிலுவை யுத்தங்கள்—சிலுவையும் பிறையும் ... 184
... 189

9. இலங்கை–அநுராதபுரக் காலம் 1 ... 192
பழைய குடியேற்றங்கள்
அரசியல் வரலாறு ... 192
அரசியல் முறை ... 195
நீர்ப்பாசனமும் விவசாயமும் ... 212
... 219

10. மகாயானக் கொள்கை; இந்துமதம் மறுமலர்ச்சிபெற்றுப் பரம்புதல் ... 227
மகாயான பௌத்தம்
இந்துமத மறுமலர்ச்சி ... 227
தென் இந்தியாவில் இந்துமதம் பரம்புதல் ... 231
... 237

பக்கம்

11 அநுராதபுரிக் காலம் II ... 244
புத்த சமய வரலாறு ... 245
இலக்கியம் ... 252
கட்டடக்கலை ... 255
சிற்பம் ... 259

12. பிற்கால தென் இந்திய்ப் பேரரசுகள் ... 268
சோழரின் பண்பாடு ... 271
2-ம் பாண்டியப் பேரரசு ... 273
விசய நகரப் பேரரசு ... 275

13. இலங்கை–பொலநறுவைக் காலம் I ... 280
அரசியல் ... 280
சோழ ஆட்சிக்கு சிங்களவரின் எதிர்ப்பு ... 282
1-ம் விசயவாகு (இ. பி. 1070-1114) ... 284
மகா பராக்கிரமவாகு ... 291
மீளவும் உள்நாட்டுக் கலகம்(இ.பி. 1186-1235) ... 305
நிசாங்க மல்லன் (இ.பி.1187-1196) ... 306
கலிங்க நாட்டு மாகன் ... 307

14. இலங்கை–பொலநறுவை காலம் II ... 310
சமயம் ... 310
கட்டடக்கலை ... 316
சிற்பம் ... 322
இலக்கியம் ... 326

15. மத்தியகாலத்தில் கிழக்கு நாடுகள் ... 328
மத்திய காலச் சீனத் தேசம்
பெரிய கான் அரசரின் பேரரசு ... 328
இரு பெரும் பிரயாணிகள்

16. ஐரோப்பா விழிப்படைதல் ... 339
மானியமுறை ஐரோப்பா ... 341
பாப்பரசரும் பேரரசனும் ... 345
புதுக்கல்வி ... 348
புது ஜனனத்தின் சில அம்சங்கள் ... 350
புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பொருட்கள் 358
புதுநாடுகள் கண்டு பிடிப்பதற்குச் செய்த பிரயாணங்கள் ... 361

பக்கம்

17. இலங்கை–தென்மேற்குத் திசையாக இடம் பெயரல் ... 373

இடப் பெயர்வுக்கான காரணங்கள் ... 373

அரசியல் வரலாற்றின் முக்கிய அம்சங்கள் 374

தலை நகரங்கள் மாறலும், புறநாட்டுப் படை எழுச்சிகளும் ... 376

புதிய மூன்று இராச்சியங்கள் ... 387

விவசாயமும் வர்த்தகமும் ... 393

பௌத்த இந்து மதங்கள் ... 394

இலக்கியம் ... 395

கட்டடக்கலையும் சிற்பமும் ... 396

கால அட்டவணை. ... 398

படங்கள்

		பக்கம்
1	தற்கால வேடர்களில் மூவர் ...	1
2	கற்பாறையில் அழுந்திய எலும்புகள் ...	3
3	பழைய கற்கால ஆயுதங்கள் ...	7
4	புதிய கற்கால ஆயுதங்கள் ...	8
5	இஸ்பானிய தேசத்தின் கற்குகைச் சித்திரங்கள் ...	11
6	எலும்பினால் செய்யப்பட்ட குற்றுவாளின் கைபிடி ...	12
7	புதிய கற்கால மட்பாண்ட ...	12
8	இலங்கையில் உபயோகிக்கப்பட்ட கல்லாயுதங்கள் ...	22
9	இலங்கையில் உள்ள ஒரு பழைய சமாதி ...	23
10	எகிப்தியரின் எழுத்துக்கள் ...	27
11	பிறமிட்ஸ் ...	29
12	காணய்க்கில் உள்ள கோயில் ...	30
13	ஸ்பிங்ஸ் சிலைகள் உள்ள வீதி ...	31
14	சுமேரியரின் எழுத்துக்கள் ...	35
15	பார்சீகர் நாணயம் ...	47
16	மகெஞ்சதாரேவில் கண்டெடுக்கப்பட்ட மண்ணலாக்கிய சித்திரச்சின்னம்—ஒரு நடனமாதின் உருவம் ...	53
17	சீனத் தேசத்தின் பெரிய மதில் ...	58
18	கொன்பியூசியஸ் ...	59
19	நொசஸீல் உள்ள ஓர் அரண்மனை ...	63
20	அதென்சிலுள்ள அக்கிறெபோலிஸ் ...	69
21	கிரேக்க ஆலயம் ...	75
22	அதெனா அணங்கு ...	76
23	ஒரு கிரேக்க நாடக அரங்கு ...	77
24	சொக்கிறத்திஸ் ...	78
25	பிளாற்றோ ...	79
26	அலெக்சாந்தர் ...	84
27	உரோமானியப் போர்வீரன் ...	96
28	கனிபல் ...	99
29	யூலியஸ் சீசர் ...	108
30	பாக்தாத்திலுள்ள ஓர் உரோமானிய வில்மாடம் ...	115
31	இஸ்பானியாவிலுள்ள ஓர் உரோமானியப் பாலம் ...	115
32	கொலிசியம் வெளித் தோற்றம் ...	116
33	கொலிசியம் உட்தோற்றம் ...	116
34	இயேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையப்படல் ...	120
35	நடராசர் ஆன சிவன் ...	127
36	கௌதம புத்தர் ...	132
37	சாஞ்சி தாது கோபம் ...	140

		பக்கம்
38	சாஞ்சியில் உள்ள தாது கோபங்கள்	143
39	சார்னுத்தில் காணப்படும் தூணின் மேலுள்ள சிங்க உருவங்கள்	144
40	உலோம முனிவரின் குகை வாயல்	145
41	புனித போதி விருட்சம்	155
42	மகிந்தன் குகை	156
43	இசுருமுனிய விகாரை	157
44	ரூவான்வலிசாய	158
45	அபயகிரி தாது கோபம்	158
46	அர்ச். சோபியா மேற்றிராசன ஆலயத்தின் முகடுகள்	172
47	அர்ச். அகுஸ்தினர்	175
48	பாப்பரசரின் மகிமை விருதுகள்	176
49	வனந்தரங்களில் அராபியர்	179
50	மெக்காவிலுள்ள காபர்வில் யாத்திரிகர்கள்	180
51	இஸ்பானியா, அல்கம்பிரு சிங்க மண்டபம்	182
52	கயிரேவிலுள்ள ஒரு மசூதி	183
53	சாளிமேனின் உருவச்சிலை	186
54	சிகிரியாக் குன்று	204
55	சிகிரியாக் கற்கோட்டை வாயில்	205
56	சிகிரியாச் சுவர்ச் சித்திரங்கள்	205
57	போதிசத்துவரின் சிலை சித்துல் பகுவா (இலங்கை)	229
58	இந்து ஆலயம் (குப்தர் காலம்)	234
59	அசந்தாவிலுள்ள ஒரு சுவர்ச் சித்திரம்	235
60	சார்நாத்திலுள்ள புத்தர் விக்கிரகம்	236
61	மாமல்லபுரத்திலுள்ள கற்சிற்பங்கள்	241
62	(1) மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள கோயில் (2) மாமல்லபுரத்திலுள்ள குகைக் கோயில்	241
63	அநுராதபுரியிலுள்ள சேதவனராம விகாரை	247
64	விஷ்ணுவின் உருவச்சிலை (கந்தளாய்)	250
65	லோப மகாசாய என்னும் ஆயிரங்கால் மண்டபத்தின் தூண்கள்	256
66	மாயாவின் கனவு	260
67	சரஸ்வதியின் அதிசயம்	260
68	நாக அரசன்	261
69	ஏழுதலை நாகம்	261
70	குப்தகால செல்வாக்கை பிரதிபிம்பிக்கும் சிற்பங்கள்	262
71	மனிதனதும் குதிரையினதும் தலை (இசுருமுனியா)	263
72	நாளந்த 'கெடிகே' (நாளந்த)	263
73	அநுராதபுரியிலுள்ள ஓர் கட்டடம்	266
74	தஞ்சூர்—இராஜராஜேஸ்வரி கோவில்	271
75	கோபுரங்கள்	274
76	பராக்கிரமவாகுவின் மாளிகை	300
77	இலங்காதிலக விகாரை	301
78	வட்டதகே	304
79	குமார பொக்குனம்	313
80	கிரி விகாரை	317
81	றன்கட் விகாரை	317
82	கல் விகாரை	318
83	பொத்குல் விகாரைக்கு எதிர்ப்புறமாயுள்ள சிலை	321
84	பொலநறுவையில் வட்டதாகேயின் வாசல்	323
85	வட்டதாகேயின் கிழக்கு வாசலிலுள்ள சந்திரகல்	324
86	ஒரு பிரபுவின் கோட்டை	342
87	ஒரு பழையகால அச்சகம்	351
88	அர்ச். பேதுருவானவர் தேவாலயம்	352
89	பியற்றே—மைக்கேல் ஆஞ்சலோ	354
90	ஜோன் குட்டன் பேர்க்	359
91	யப்பாகுக் குன்று	378
92	யப்பாகுவிலுள்ள படிக்கட்டுகளின் அமைப்பு	379

கூடுதல் திரப் படங்களும் தேசப்படங்களும்

		பக்கம்
1	சரித்திர காலத்திற்கு முந்திய காலம் ...	5
2	காலங்கள் (சகாப்தங்கள்) ...	16
3	நாகரிகம் தொடங்கிய பெயர் பெற்ற இடங்கள் ...	25
4	இணைநதிகளுக்கிடையிலுள்ள நாடு ...	34
5	மகெஞ்சதாரே, ஹரப்பா என்னும் ஸ்தலங்களைக் காட்டும் இந்தியாவின் படம் ...	51
6	சியன் நாகரிகம் பரம்பிய இடங்களைக் காட்டும் படம் ...	62
7	கிரேக்கருக்கும் பாரசீகருக்குமிடையில் உண்டான போர்கள் நடந்த இடங்கள் ...	72
8	அலெக்சாந்தரின் பேரரசு ...	83
9	கிரேக்க குடியேற்றங்கள் ...	93
10	கி. மு. 264-ல் உரோம கார்த்தசீனிய நாடுகள் ...	98
11	பியூனிக்கு யுத்தங்கள் நடந்த இடங்கள் ...	100
12	இரண்டாவது பியூனிக்கு யுத்த முடிவில் உரோமைப் பேரரசு ...	101
13	கி. பி. 14-ல் அகுஸ்தீசின் இறப்பின்போது உரோமைப் பேரரசு ...	110
14	பிராமணியமும் பௌத்தமத உற்பத்தியும் ...	134
15	அசோகப் பேரரசு ...	139
16	இலங்கையின் மழை வீழ்ச்சிப்படம் ...	148
17	பூர்வ சிங்கள குடியேற்றங்கள் I ...	149
18	பூர்வ சிங்கள குடியேற்றங்கள் II ...	149
19	பல்வேறு (யுகங்கள்) காலங்கள் ...	151
20	தொழில் முறை வரலாறு ...	152
21	ஆரியர் நாகரிகத்துக்கு உதவியன ...	152
22	இலங்கையில் பௌத்தத்தின் செல்வாக்கு ...	163
23	மிலேச்சரும் உரோமைப் பேரரசும் ...	167
24	கி. பி. 750-ல் முஸ்லீம் பேரரசு ...	181
25	கி. பி. 814-ல் சாலிமேனின் பேரரசு ...	187
26	உறுகுணையிலிருந்து இராச இரட்டைக்குச் செல்லும் பாதையைக் கொண்ட பண்டைய இலங்கைப் படம் ...	194
27	தென்இந்தியாவும் இலங்கையும் ...	196
28	சிகிரியாவின் பரும் படியான தோற்றப் படம் ...	206
29	தென்இந்தியா—கி. பி. 600—900 பல்லவப் பேரரசும்—பாண்டியப் பேரரசும் ...	209
30	அரசனும் அவையும் ...	214
31	இராசஇரட்டையின் பெரும் பிரிவுகளைக் குறிக்கும் இலங்கைப் படம் ...	215
32	மல்வத்துஓயா, கல்ஓயா, மகாவலிகங்கை ஆகியவற்றின் நீர்ப்பாசன வேலைகளைக் காட்டும் படம் ...	221
33	நீர்ப்பாசன வேலைகளின் மூன்று படிகள் ...	222
34	ஈனயான, மகாயான பௌத்தங்கள் ...	230
35	குப்தப் பேரரசு ...	233
36	திராவிட மொழிகள் ...	238
37	ஆதிகால இலிபியன் சாயல்கள் ...	252
38	தாது கோபம் ...	258
39	தென்னிந்தியாவும் இலங்கையும் ...	268
40	தென்னிந்தியா ...	269
41	விசய நகரப் பேரரசு ...	276
42	சோழரின் கீழ் இலங்கை (கி. பி. 1017-1070) ...	281
43	சோழருக்கு எதிராக விஜயவாகு செய்த இறுதிப் போராட்டத்தில் அவன் சேனைகள் சென்ற வழிகள் ...	283
44	சோழரின் எதிர்ப்பைத் தகர்க்க விஜயவாகு பிறநாடுகளுடன் செய்த உடன்படிக்கைகள் ...	285
45	2-ம் விக்கிரமவாகு அரசனனபோது இலங்கையில் இருந்த பிரிவுகள் ...	289
46	பராக்கிரமவாகு தக்கின தேசத்துக்கு அரசனனபோது இருந்த அரசியற் பிரிவுகள் ...	290
47	பராக்கிரமவாகுவின் சேனைகள் சென்ற வழிகள் கஜபாகுவையும் மானுபர்ணனையும் எதிர்த்தல் ...	292
48	பராக்கிரமவாகுவின் சேனைகள் சென்ற வழிகள் (சுகல என்பவளுக்கு எதிராக) ...	296
49	மகாவலிகங்கையின் நீர்ப்பாசன வேலைகள் ...	[illegible]
50	தாலத மாலுவா பொலநறுவை ...	311
51	பொலநறுவையின் படம் ...	315
52	கான் அரசரின் பேரரசு ...	329
53	மார்க்கோ போலோவின் பிரயாணம் ...	334
54	உரோமரின் பேரரசு ...	339
55	கிறிஸ்தவநாடு ...	346
56	கீழ்நாடுகளுக்கும் மேல் நாடுகளுக்குமிடையில் இருந்த இரு கடல் வழிகள் ...	363
57	வாஸ்கொடிகாமாவின் பிரயாணம் ...	365
58	கொலம்பசின் பிரயாணங்கள் ...	367
59	கே(கி. பி. 1233-1415) தலைநகர மாற்றங்கள் ...	377
60	ாட்டை ...	381
1	புதிய மூன்று இராச்சியங்கள் ...	390

முதலாம் அத்தியாயம்

1 ஆதிகாலம்

சரித்திரம் என்பது யாது?

சரித்திரம் என்னும் சொல்லின் கருத்தை ஆரம்பத்திலேயே நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிவதற்கு இப்பக்கத்தில் காணப்படும் படம் உதவும். இப்படத்தில் ஒரு வேடர் கூட்டத்தைக் காண்கிறோம். இவ்வேடர்களுடைய சீவியத்தைப் பற்றி இக்காலத்தில் அறிந்துவிட்டார்கள். அவர்களின் சீவியவரலாறு கீழே சுருக்கமாய்த் தரப்பட்டுள்ளது.



தற்கால வேடர்களில் மூவர்.

குகைகளும், இலை குழைகளாற் செய்யப்பட்ட குடிசைகளுமே அவர்களுடைய வீடுகளாகும். அவர்களின் வீடுகளில் தளபாடங்கள் இல்லை. ஆடையென அவர்கள் உடுப்பது மிகக்குறைவு. மிருகங்களினதும், பறவைகளினதும் மாமிசமே அவர்களின் பிரதான உணவாகும். அந்த உணவைச் சமைத்து உண்ணவும் அவர்கள் பழகிக்கொண்டார்கள். வேட்டையாடுவதுதான் அவர்களின் முக்கிய தொழில். அவர்களில் அநேகர் வில்லும், அம்பும் கொண்டு வேட்டை செய்பவராயினும் அத்தொழிலுக்குத் துப்பாக்கியை உபயோகிப்பவரும் உண்டு. அவர்களுட் சிலர் சில வகைப் பயிர்களை உண்டாக்கவும் அறிவர். மிகவும் இலகுவான ஒரு பாஷையை அவர்கள் பேசுகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் போவதில்லை. வயது வந்த ஆண்பிள்ளைகள் பெரியவர்களுடன் சென்று வேட்டையாடக் கற்றுக் கொள்வர். சிறுமிகள் தாய்மாருடன் இருந்து வீட்டில் வேலைகள் எவையேனும் இருந்தால் அவற்றைச் செய்வர். வேடர்கள்தான்


இலங்கைக் காட்டுவாசிகள். அவர்கள் சீவியம் ஆடம்பரமற்றது. எங்களுடைய சீவியத்துடன் அவர்கள் சீவியத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் அவர்களை நாகரீகமற்றவர்களென்று கருதுவோம்.

இன்றுள்ள வேடர்களை நாம் நாகரீகமற்றவர்களென்று கருதினும், ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இலங்கையில் இருந்த அவர்களின் முன்னோரிலும் பார்க்க இவர்கள் எவ்வளவோ திருத்தமடைந்திருக்கின்றனர். இவ்வேடரின் முன்னோரே இலங்கையின் புராதன குடிகள். அவர்கள் குகைகளில் வசித்தனர். ஆடைகள் அணிந்தவரல்லர். செப்பமற்ற ஆயுதங்களை உபயோகித்துக் காட்டு மிருகங்களைக் கொன்றனர். நெருப்பை எவ்வாறு உபயோகிப்பதென்பதை அறியாதவரானதால், கொன்ற மிருகங்களினதும், பறவைகளினதும் மாமிசத்தைப் பச்சையாகவே உண்டனர். எந்தப் பயிரையாவது விளைவிக்க அவர்களுக்குத் தெரியாது. பேசப் பாஷை தன்னும் அவர்கள் அறியாதவரானதினால் சைகைகளினாலேயும், ஒலிகளினாலேயும் தமது மனக் கருத்துகளை ஒருவருக்கொருவர் வெளியிட்டனர். இலங்கைத்தீவின் புராதன குடிகள் இவ்விதமாகவே வசித்து வந்தனர். அவர்களைக் காட்டுமிராண்டிகளென்று கூறிவிடலாம். இன்றைய இலங்கையரின் வாழ்க்கைக்கும், புராதன குடிகளின் வாழ்க்கைக்கும் உள்ள வேற்றுமையோ மிகப்பெரிது. இன்றைய இலங்கையர் கட்டடங்களில் வசிக்கின்றனர். வெவ்வேறு தொழில்களைச் செய்கின்றனர். விதம்விதமான ஆடைகளை அணிகின்றனர். பலவகை உணவுகளை அருந்துகின்றனர். சிறுபிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகின்றார்கள். நோயாளிகளுக்கென வைத்தியசாலைகளும், மருந்துச்சாலைகளும் உண்டு. பிரயாணத்துக்கும், தபால், தந்தி முதலிய போக்குவரத்துக்கும் உபயோகிக்கப்படும் விதம்விதமான சாதனங்கள் இவர்கள் தம்வாழ்க்கையை உல்லாசமாயும், இலகுவாயும் நடத்த உதவி செய்கின்றன. இலங்கையர் தம் முன்னோரின் காட்டுமிராண்டிச் சீவியத்திலிருந்து, இன்று நாம் காணும் நாகரீகத்திற்கு முன்னேறியிருக்கின்றனர். இம்மாற்றம் படிப்படியாகவே நடந்தேறியது. இவ்வாறு இலங்கையின் சீவியத்தில் படிப்படியாக நடந்தேறிய மாற்றத்தை நாம் கற்றுக்கொள்ளும் போது இலங்கைச் சரித்திரத்தையே கற்றுக்கொள்ளுகிறோம். இவ்வாறே உலகத்தின் மறுபகுதிகளிலுள்ள மனிதரின் சீவியத்தில் நடந்தேறிய மாற்றத்தைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் போது உலக சரித்திரத்தையே கற்றுக்கொள்ளுகிறோம்.

11 சரித்திர காலத்திற்கு முந்திய காலம்

உலக சரித்திரத்தை சரித்திர எல்லைக்குட்பட்டகாலம், சரித்திர எல்லைக்கு முந்திய காலம் என இரு கூறுகப் பிரிக்கலாம். கடந்த காலத்தில் நடந்தேறியவற்றைப்பற்றி எங்கள் முன்னோர் எழுதிவைத்

நுச் சென்றனவற்றிலிருந்து அறிகிறோம். ஆனால் எழுத அறியாத காலம் ஒன்றிருந்தது. சரித்திரத்திலே ஒருவகை எழுத்துச்சான்றுகளும் இக்காலத்தில் இருந்ததாய் இல்லை. ஆதிகாலத்து மனிதன் எழுதத் தெரியாதவனுயினும் அவன் உபயோகித்த கருவிகள், ஆயுதங்கள், கிடைவுற்ற கட்டடங்கள், குகைச்சித்திரங்கள், மட்கலங்கள் முதலியன உண்டு. இவைகளிலிருந்து ஆதிகாலமனிதர் எவ்வகையாக வாழ்ந்தனர் என்று ஒருவாறு யூகித்தறியலாம். எழுத்துச் சான்றுகள் இல்லாத காலத்தைச் சரித்திர எல்லைக்கு முந்திய காலமென்கிறோம். எழுத்துச்சான்றுகள் உள்ள காலத்தைச் சரித்திரகாலம் என்று கூறுகிறோம்.




கற்பாறையில் அழுந்திய எலும்புகள்.

சூரியனைச் சுற்றி இந்த உலகம் சுழல்கின்றது என்பதை நாம் அறிவோம். இருபது கோடி (200,000,000) வருடங்களாக இப்படிச் சுழல்கின்றது, என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தொடக்கத்தில் இவ்வுலகம் சுவாலித்தெரியும் ஒரு திப்பந்தமாய் இருந்தது. படிப்படியாகச் சூடு குறைந்து தற்போதைய உருவத்தை அடைந்துள்ளது. பலவகைப்பட்ட சீவபிராணிகள் அதன்கண் தோன்றின. ஆதிகாலத்

தில் இருந்த மிருகங்களின் எலும்புகள் தரையில் அழுந்தி இருப்பதால் இவ்வாறு கூறக்கூடியதாய் இருக்கின்றது.

பூமியில் மனிதன் மிகப்பிந்திய காலத்திலே தோன்றினன். எந்தக்காலத்தில் முதன்முதல் தோன்றினன் என்று வரையறவாகக் கூறமுடியாது. மனிதன் ஐந்து லட்சம் (500,000) வருடங்களுக்குமுன் தோன்றினன் என்பர் சிலர். ஆனல் இற்றைக்குச் சுமார் 6,000 வருடங்களுக்கு முதல் வசித்த ஆதி எகிப்தியர், பபிலோனியரது காலத்துக்கு முந்திய எழுத்துச் சான்றுகள் இடைக்காததினல் அக்காலத்தில் உள்ளமனிதர் எவ்வாறு சீவித்தனர் என்பதுபற்றிக் கூறுவது கலபம் அன்று. ஆனதினலேயே மனிதன் பூமியில்தோன்றிய காலந்தொட்டு இற்றைக்கு 6,000 வருடங்களுக்கு முன் உள்ள காலத்தைச்சரித்திர எல்லைக்கு முந்திய காலமென்கிறோம். ஆதிகால எகிப்தியர், பபிலோனியருடனே எழுத்துச்சான்றுகளுள்ள சரித்திரகாலம் தொடங்குகின்றது. சரித்திர எல்லையுள் அடங்கியகாலமும் அதற்கு முந்தியகாலமும் தேசத்துக்குத்தேசம் வித்தியாசப்படுகின்றன. எனினும் முழு உலகத்தையும் உற்றுப் பார்த்தால் உலக சரித்திரகாலம் ஆதி எகிப்திய பபிலோனிய காலங்களுடன் தொடங்குகின்றதெனலாம்.

ஆதிகால மனிதருடைய சீவியத்தின் தன்மையைப் பற்றி நாம் ஒருவகையில் யூகித்து அறிந்துகொள்ளலாம். வீடுவாசல்களோ, ஆயுதங்களோ அவர்களுக்கில்லை. ஆபத்திலிருந்து தம்மைக்காத்துக் கொள்வதற்குத் தமதுகைகளே அவர்களுக்கு உதவி. அவர்கள் ஆடை அணிந்ததில்லை. பாஷையென ஒன்றை அவர்கள் அறிந்ததுமில்லை. பழங்களை அருந்தியும் அவர்களால் கொல்லப்பட்ட மிருகங்கள் பறவைகளின் மாமிசங்களைப் புசித்தும் வந்தனர் போலும். தற்பாதுகாப்பு ஆயுதங்கள் இல்லாததால் காட்டிலே திரிந்த பெரிய வனமிருகங்களுக்கு அஞ்சிக் காலங்கழித்து வந்தனர். ஆதிகாலமனிதர் பெரும்பாலும் மிருகங்கள் போலவே வாழ்ந்தனர். எனினும் மனிதனுக்கும், மிருகத்துக்கும் இடையில் ஒரு பிரதான வேற்றுமை இருந்தது. மனிதன் தன் புத்தியைப் பயன்படுத்தக் கூடியவனுய் இருந்ததால் நாளடைவில் கருவிகளையும், ஆயுதங்களையும் கண்டுபிடித்தான். இப்படியாகத் தன் உணவைப் பெற்றுக்கொள்வதற்கும், வனமிருகங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் முன்னிலுங்கூடிய ஆற்றலை அடைந்துகொண்டான். தொடக்கத்தில் மனிதன் உபயோகித்



த ஆயுதங்கள் தட்டிக் கூராக்கப்பட்ட கற்களே. சுமார் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் கல்லாலாகிய ஆயுதங்கள் உபயோகிக்கப்பட்டன. கல்லாயுதங்கள் உபயோகிக்கப்பட்ட காலத்தைச் சரித்திரத்தில் கற்காலமென வழங்குவர்.


கற்காலங்கள்

மனிதசரித்திரத்திலே இருகற்காலப் பகுதிகள் இருந்தன. முன்னையதைப் பழையகற்காலம் என்றும் பின்னையதைப் புதியகற்காலம் என்றுங்கூறுவர். சக்கிமுக்கிக் கற்களால் ஆக்கிய முரட்டுத்தன்மையுடைய ஆயுதங்களையும், கருவிகளையும் மனிதன் உபயோகித்த காலத்தையே பழையகற்காலமென வழங்கினர்கள். அந்தக்காலத்திலே குகைகளே மனிதரின் வாசஸ்தானம். வேட்டையாடுவதே அவர்களின் பிரதான தொழில். அவர்கள், தேவைப்பட்ட உணவை வேட்டையாடியே பெற்றுக்கொண்டனர். நெருப்பின் உபயோகத்தை அவர்கள் அறியாதவராதலின் உணவைச்சமைத்து உண்ணும் முறை அக்காலத்தில் இல்லை. தாங்கள் கொன்ற மிருகங்களினதும், பட்சிகளினதும் மாமிசத்தைப் பச்சையாகவே உண்டனர். அம்மிருகங்களின் தோல்களால் தம் உடம்பைப் போர்த்துக் கொண்டனர். இல்லிதமாக ஆடையணியும் வழக்கம் அவர்களிடையில் உண்டாயிற்று. உணவு தேடுவதிலும், அடுத்தவேட்டைக்குத் தயார் செய்வதிலும், காட்டு மிருகங்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதிலும் அவர்களுடைய முழுநேரமும் செலவழிந்ததால் ஓய்வுநேரம் என்பது அவர்களுக்கு இல்லை.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குப் பின் மனிதன் இந்நிலையிலும் உயர்ந்த நிலையை அடைந்தான் தனது கற்கருவிகளையும், ஆயுதங்களையும் செவ்வையாக உருவப்படுத்தவும், கூராக்கவும், ஒப்பம் செய்யவும் அறிந்துகொண்டான். கத்தி, வாள், கோடரி, சம்மட்டி, அம்புமுனை முதலிய விதம்விதமான ஆயுதங்களைச்செய்து அவற்றை உபயோகித்துத் தன் சிவியமுறையில் பெரிதும் முன்னேற்றமடைந்தான். மனிதன் கல்லாயுதங்களை உருவப்படுத்தவும், கூராக்கவும், ஒப்பஞ்செய்யவும் தொடங்கியபோதே புதியகற்காலம் உலகசரித்திரத்திலே தோன்றியது.


கற்கால வாழ்க்கை

வாசஸ்தலங்கள்.



பழைய கற்கால ஆயுதங்கள்

ஆதிகால மனிதர்களுக்கு வீடுகளென ஒன்றுமில்லை. வனமிருகங்களிலிருந்து தப்பவேண்டி இருந்ததால் மரங்களின்மேல் அவர்கள் ஒதுங்கி இருந்திருக்கலாம். பழைய கற்காலத்தில் மனிதர் குகைகளில் வசித்து வந்தனர். இக்குகைகள் வனமிருகங்களிலிருந்தும், வெயில், மழை முதலியனவற்றிலிருந்தும் அவைகளுக்குப் பாதுகாப்பு அளித்தன. புதியகற்காலத்தில் தமக்கென வாசஸ்தலங்கள் உண்டாக்கிக்கொண்டனர். இவை ஒருவகையில் ஆதிகாலத்தவர் உபயோகித்த குகைகளைப் போன்றன. ஓர் அறையின் மூன்று சுவர்களைப் போலப் பாரிய கற்களை நாட்டி, அவற்றின்மேலே கூரை போல் இன்னொரு கல்லை வைத்தனர். டொல்மன்ஸ் என்று கூறப்படும் இக்கற் சமாதிகளான வாசஸ்தலங்களே மனிதனுல் முதன்முதல் கட்டப்பட்ட வீடுகளாம். இந்தக்கற்காலத்திலே மனிதன் தடிகளாலும், இலைகுழைகளாலும் செய்யப்பட்ட வீடுகளிலும் வசித்து வந்தான். நாட்கள் செல்லச் செல்ல இலைகுழைகளால் மறைக்கப்பட்ட இடைவெளிகளை மூடக் கழிமண்ணை உபயோகித்து வீடுகளுக்கு மட்சுவர்களை எழுப்பிக் கொண்டான். புதிய கற்கால இறுதிக்காலங்களிலே, அக்காலத்தின் திருந்திய ஆயுதங்களை உபயோகித்து, மரங்களைத் தறித்து மரவீடுகளையுங் கட்டிக்கொண்டான். இவ்வீடுகளிற் சில ஏரிக்கரைகளில் வன மிருகங்களிலிருந்து மனிதன் தப்பிக்கொள்ளுவதற்கு உகந்தனவாகவே கட்டப்பட்டன. ஏரிக்கரைகளில் இம்மர வீடுகளின் சிதைவுகள் சுவிட்சர்லாந்து தேசத்தில் கண்டுகொள்ளப் பட்டன. நியூகினியா தேசத்தில் இவ்வகையான வீடுகள் சிலவற்றில் இன்னும் மனிதர் வசிக்கின்றனர்.



புதிய கற்கால ஆயுதங்கள்.

உடை.

மரங்களின்மேல் ஒதுங்கியிருந்த காலத்தில் மனிதர் உடைகளென யாதொன்றும் அணிந்திலர்போலும். நாளடைவில் வேட்டையாடப் பட்ட மிருகங்களின் தோல்களை அவர்கள் அணிந்திருக்கலாம். அக்காலத்திலே திருத்தமான உடைகளை மனிதர் அணிந்தாரென நாம் கூறமுடியாது. உலகத்தின் சிற்சிலபாகங்களில் மரப்பட்டைகளையும் ஆடைகளென அணிந்து கொண்டனர். புதிய கற்காலத்தின் இறுதிக் காலத்திலே தான், மரப்பட்டைகளிலிருந்தும், நாணல் முதலிய சில புல்வகைகளிலிருந்தும் ஒருவகையான திருத்தமுற்ற ஆடைகளை நெய்துகொண்டனர்.

உணவு.

கற்கால மனிதர்களின் பிரதான உணவு மிருகங்களினதும், பறவைகளினதும் மாமிசமே. சிலபழங்களையும், தங்கள் திருத்தமற்ற ஆயுதங்களால் கிண்டி எடுத்த பச்சைக்கிழங்குகள், வேர்கள் முதலியனவற்றையும் உணவாக உபயோகித்தனர். மாமிசத்தை உலரவைத்து உண்ணும் வழக்கமும் அக்காலத்தில் சிலரிடை உண்டு. நெருப்பை உண்டாக்கவும், அதை மட்டுப்படுத்தவும் அறிந்ததன் பின்புதான் மனிதன் உணவைச் சமைத்து உண்ணத் தொடங்கினன்.

நெருப்பு.

சரித்திர எல்லைக்கு முற்பட்ட காலத்தில் நெருப்பையுண்டாக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது, அது மிகவும் பிரதானமான ஒரு சம்பவமாகும். இம்முறை தற்செயலாகவே கண்டுபிடிக்கப்பட்டது. இருகற்களை அல்லது தடிகளை ஒன்றோடொன்று தேய்க்கும்போது நெருப்புப் பொறிகள் பறந்தன. ஆதிகால மனிதர் இப்படி வேடிக்கைக்காகச் செய்துவந்தும் இருக்கலாம். இப்படிச்செய்யும் ஒரு சமயத்தில் சிலபொறிகள் சமீபத்திலிருந்த காய்ந்தபொருட்களில் பறந்து நெருப்பை

மூட்டிவிட்டன. மனிதன் இவ்வாறு நெருப்பு உண்டாக்கும் விதத்தை அறிந்துகொண்டான். நாளடைவில் நெருப்பை மட்டுப்படுத்தும் முறையையும் அறிந்து அதை உபயோகிக்கத் தொடங்கினன். நெருப்பிலிருந்து அக்கால மனிதன் அடைந்துகொண்ட பிரதானமான பயன் உணவைச் சமைப்பதற்கு அதை உபயோகித்ததேயாம், ஆனல் நெருப்பினல் அவனடைந்த வேறுபயன்களுமுண்டு. குளிரைப் போக்கவும், வனமிருகங்களிலிருந்து பாதுகாப்படையவும் அது பயன்பட்டது. வாசலுக்கு அருகில் நெருப்பை எரிப்பதால் வனமிருகங்கள் வீட்டின் உட்செல்லாமல் தடுக்கப்பட்டன. மேலும் பலமான தடிகளின் நுனிகளை எரித்துக்கூர்ப்படுத்திப் புதுப்புது ஆயுதங்களும் மனிதன் பெற்றுக்கொண்டான். முன்னே தான் செய்ய அறிந்துகொண்ட மட்பாத்திரங்களை நெருப்பிற் சுடுவதால் அவற்றைப் பலப்படுத்தவும் அறிந்தான். பாரிய மரத்துண்டுகளை அவற்றின் நடுவில் எரித்துக் கோதி, ஓடங்களும், மரக்கலங்களும் ஆக்கினன். குளிரைப்போக்கவும், பாதுகாப்பளிக்கவும் நெருப்பு உதவியதல்லாமல், பலவகைக்கருவிகளும், ஆயுதங்களும் செய்யவும் உதவி, மனிதனின் உணவுப்பேற்றையும் பெருக்கியது. நெருப்புப் பிரயோசனமும், அவசியமுமான ஒரு மூலவஸ்தாயிருந்ததால் ஆதிகாலமனிதன் விரைவில் அதை ஒரு தெய்வமென வணங்கினன். அக்கினி வழிபாடு சரித்திர எல்லைக்கு முற்பட்ட காலத்தில் பொதுவாய் எங்கும் காணப்பட்டது.

தொழில்.

கற்கால மனிதனின் பிரதான தொழில் வேட்டையாடுதலே. பழைய கற்காலத்தவரின் ஆயுதங்கள் செதுக்கப்படாத சக்கிமுக்கிக் கற்களாய் இருந்ததால், வேட்டையாடுந் தொழில் இலகுவாய் இருக்கவில்லை. புதிய கற்காலத்தில் திருந்திய ஆயுதங்கள் வழங்கப்பட்டதால் உணவு பெறுந்தொழிலும், தற்காப்பும் முன்னிலும் இலகுவாய் இருந்தன.

புதிய கற்காலத்தின் ஒரு பகுதியில் மனிதர் வனமிருகங்களுடன் பழகி அவற்றின் முரட்டுத்தன்மையைப் போக்கி அவற்றை வளர்த்து வரவும் தொடங்கிவிட்டனர். இந்தமுறை பரவிவரவே மனிதர் வேடர் நிலையிலிருந்து இடையர் நிலையைப் படிப்படியாக அடைந்தனர். வேட்டைமூலம் உணவுதேடிச் சிவிப்பதைவிட, அதிகமாக மிருகங்களை வளர்த்து அதன்பயனைக் காலங்கழித்து வரவுந்தொடங்கினர்.

அவர்கள் வேட்டையாடுந்தொழிலை முற்றுகக் கைவிட்டனர் என்று நாம் எண்ணிவிடப்படாது. முதன்முதல் நாய்களையும், பின்பு பசுமாடுகளையும் அதன்பின்பு ஆடுமாடுகளையும் வளர்த்து வந்திருக்கவேண்டும். நாய்கள் வேட்டையாடுந் தொழிலில் மனிதருக்கு உதவிபுரிய, ஆடுமாடுகள் குடிக்கப்பாலும், உண்ண மாமிசமும், அணியத்தோலும் அளித்து வந்தன போலும்.

இப்புராதன மனிதருட் சிலர் சேர்ந்து வாழ்ந்துவந்த ஓரிடத்தில் என்ன நடந்திருக்கலாமென யூகித்துப் பார்ப்போமாக. நாளடைவில் மனிதர் தொகையில் அதிகரித்தனர். ஆனால் அவர்கள் வேட்டையாடி வந்ததன்பயனாக அப்பக்கங்களிலுள்ள மிருகங்களின் தொகையோ குறைந்துகொண்டே வந்தது. அதனால் அவ்விடத்தைவிட்டு வேட்டையாடுதற்கேற்ற வேறுபக்கங்களிற் குடியேறினர் போலும்.

மிருகங்களை வளர்க்கத்தொடங்கிய பின்னர் மனிதனுக்கு வேறு ஒரு கவலை ஏற்பட்டது. தனக்கு மாத்திரமல்ல தன் ஆடுமாடுகளுக்கும் உணவைத் தேடவேண்டி இருந்ததே அக் கவலையாம். அவன் வளர்த்தமிருகங்களுட் பெரும்பாலானவை புல்லுண்ணும் மிருகங்களாம். அவற்றின் தொகையதிகரிக்க மேய்கிறதற்கு அண்மையில் புல்கிடைப்பது அரிதாயிற்று. அக்காலத்திலே மனிதனுக்குத் தாவர வகைகளையோ, தானியங்களையோ பயிர்செய்யும் வகைதெரியாதிருந்ததனால், தன் மிருகங்களுடன் புல்லிருக்கும் இடந்தேடிச் செல்லவேண்டியவனானன். ஆனதினால் கூட்டங்கூட்டமாகப் பலர் தம்மிருகங்களுடன் தமக்கும், அவற்றிற்கும் அவசியமான உணவுக்காக அலைந்து திரிந்தனர். இப்படியாகத் திரிபவர்களை நாடோடிகள் என்பர். அவர்கள் சீவியமும் நாடோடிச் சீவியமெனப்படும்.

புதிய கற்காலத்தின் இறுதிப்பாகத்தில் மனிதன் தனக்கும், தன்மிருகங்களுக்கும் தேவைப்படும் உணவில் சிலவற்றை தான் பயிரிட்டுப் பெற்றுக்கொள்ள முடியுமென உணர்ந்தான். அப்பொழுதுதான் பயிர்த்தொழில் ஆரம்பமானது. பெருந்தொகையினராய் இவ்விவசாயத் தொழிலைச் செய்யத் தொடங்கினதன் பின்புதான் மனிதர் இடம்விட்டு இடம் பெயருஞ் சீவியத்தைக் கைவிட்டு ஓரிடத்தில் நிலையான சீவியத்தை நடாத்தத்தொடங்கினர்.

பாஷை

ஆதிகாலமனிதரிடையே பாஷையென ஒன்று இருக்கவில்லையென்று நாம் முன்னரே அறிந்துள்ளோம். தம் உள்ளக்கருத்தைச் சைகைகளின் மூலமாகவும், திருத்தமற்ற ஒலிகளின் மூலமாகவும் அவர்கள் வெளிப்படுத்தினர். நாளடைவில் ஓர் ஒலியினாலோ அல்லது ஒலிக்கூட்டத்தினாலோ ஒரு குழுவினர் ஒன்றைக்குறிக்கவும், பிறதுபிறிதான ஒலிகளினாலோ அல்லது ஒலிக்கூட்டங்களினாலோ பிறிதானவற்றைக் குறிக்கவும் வல்லவராயினர். அந்தக்காலத்திலே தான் பாஷை ஆரம்பமானது. புதுப்புதுக் கருவிகளையும், ஆயுதங்களையும் உபயோகிக்கத்தொடங்கவே புதுப்புதுச் சொற்களும் எழுந்தன. நாடோடிகளாய்ச் சீவிக்கும்போது புதியபுதிய மிருகங்கள், பறவைகள், பிராணிகள், மீன்கள் முதலியனவற்றை அறிந்து, புதிய புதிய பெயர்களும் அவற்றுக்கு இடப்பட்டன. இப்படியாகப் புதியகற்

கால முடிவளவில் ஒருவகையில் உபயோகமான ஒரு பாஷையைக் கண்டுபிடித்துக் கொண்டனர். ஆனால் எழுதும் முறையோ கண்டு பிடிக்கப்படவில்லை.

சமயம்.

கபடமற்ற அக்காலமனிதர் தம்மிலும் உயர்பொருள் ஒன்றுண்டு என்றும் அப்பரம்பொருளே மனிதரை உண்டாக்கி அவர்களின் மரணத்துக்கும், சீவியத்துக்கும் காரணம் என்றும் உணர்ந்துகொண்டனர். அப்பரம்பொருளைக் கடவுளென மதித்துவந்தனர். மேலும் சூரியன், அக்கினி, நீர் முதலியன மிகவும் உபயோகமுள்ளனவென்பதையும் அவை உபயோகமுள்ளனவாய் இருப்பது மாத்திரமன்றிப் பெரிதும் சேதம் விளைவிக்கக்கூடியன என்பதையும் அவர்கள் அறிந்தனர். ஆகையினால் இவற்றையுந் தெய்வங்களெனக்கொண்டு வணங்கியும், பூசனை செய்தும் வந்தனர். மேலும், ஒருவன் இறக்கும்போது அவன் ஆவி உடம்பைவிட்டுப்பிரிந்து வேறு உலகத்திற்குச் செல்லும் என்ற நம்பிக்கையுடையவரானதால் அந்த ஆவிக்கு உதவி புரியுமாறும் தெய்வங்களுக்கு அவர்கள் பூசனைசெய்வது உண்டு.

கலை

புராதனகால மனிதருக்கு ஓய்வுநேரமென்பது இல்லை. அவர்கள் தமக்கு உணவு பெற்றுக்கொள்ளுவதிலும், வனமிருகங்களிலிருந்து



ஸ்பானிய தேசத்தின் கற்குகைச் சித்திரங்கள்.

தம்மைப் பாதுகாத்துக்கொள்வதிலுமே தமது நேரத்தைச் செலவிட்டனர். இவ்விரண்டில் ஏதேனும் ஒன்று செய்யாதிருந்த நேரங்களிலே அடுத்தவேட்டைக்காக இளைப்பாறி, ஆயுதங்கள் செய்துநேரத்தைச் செலவிட்டனர்.

ஆனல் புதிய கற்காலத்திலே திருந்திய ஆயுதங்களை உபயோகித்து வேட்டையாடுதல் முன்னிலுஞ் சுலபமாய் இருந்ததால் அக்கால மனிதருக்குச் சிறிது ஓய்வுநேரம் இருந்தது. இந்த ஓய்வுநேரத்தை மனிதன் பலவகைகளில் உபயோகித்துக்கொண்டான்.



எலும்பினல் செய்யப்பட்ட குற்றுவாளின் கைபிடி.



புதிய கற்கால மட்பாண்.

தனது ஆயுதங்களைச் சிறப்பாக உருவப்படுத்தியும், துலக்கியும் வரலானன். தான் வசித்த குகைகளின் கற்சுவர்களில் மிருகங்களினதும், பட்சிகளினதும் உருவங்களை வரைந்தும் நேரத்தைப் போக்கினன். பிரான்ஸ் தேசத்திலும், ஸ்பானிய தேசத்திலும் உள்ள சில கற்குகைகளில் கற்கால மனிதர் வரைந்த சித்திரங்களையும் நிட்டிய வர்ணங்களையும் இன்னும் காணலாம். இச்சித்திரங்களுட்சில 20,000 வருடகாலத்துக்கு முந்தியனவாம். மிருகங்களினதும், பட்சிகளினதும் தலைகளின் உருவங்களை எலும்புகளில் செதுக்கி, அவற்றைக் கத்திகளின் பிடிகளாக உபயோகித்தனர். புதிய கற்காலத்தில் வனையப்பட்ட பாண்களில் பல்வகை உருவங்களைக் காண்கிறோம். அவர்களுடைய பல்வேறு தெய்வங்களின் உருவங்களும் சிற்சில இடங்களில் செதுக்கப்பட்டுள்ளன. கற்கால மனிதர்கள் உருவாக்கிய சிலபொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. அவைகளின் படங்களை மேலே காண்க.

இந்த அத்தியாயத்தில், சரித்திர எல்லைக்கு அப்பாற்பட்ட காலத்தில் வசித்த மனிதனின் சீவியத்தைப்பற்றிப் படித்திருக்கிறோம். கற்கால மனிதர் எழுதிவைத்துப்போன ஒரு சாதனமும் எமக்குக் கிடையாததினல் அக்காலத்தைப் பற்றி யாம் அதிகம் அறிந்திலேம். எனினும் மனிதன் சிந்திருத்தமற்றவனுயிருந்து காலத்திலிருந்து முன்னேறி ஓர் இடத்தில் நிலையுள்ள சீவியம் நடாத்த எவ்வாறு நேர்ந்தது என்பதை அறியப் போதிய சான்றுகளுண்டு. அடுத்த அத்தியாயத்தில் எமது சொந்தநாட்டிலே வசித்தவர்கள் சரித்திரகாலத்துக்கு முன்னே எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை ஆராய்வோம்.

பயிற்சி I.

(1) கீழே வரும் எப்பிரிவை நீர் சரித்திரகால எல்லையுள் அடங்கிய காலமென்றும், அடங்காத காலமென்றும் வகுப்பீர்?

(அ) மனிதசரித்திரத்திலே எழுத்துச் சான்றுகள் இல்லாக்காலம்.

(ஆ) மனிதசரித்திரத்திலே எழுத்துச் சான்றுகள் உள்ளகாலம்.

(2) எத்தனை ஆயிரம் வருட அளவில் ஆதிமனிதன் உலகில் தோன்றியிருக்கக் கூடும்?

(3) எத்தனை ஆயிரம் வருட அளவில் உலகின் சரித்திர எல்லைக்குட்பட்ட காலம் ஆரம்பிக்கிறது?

(4) பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் உள்ள பிரதானமான வித்தியாசம் என்ன?

(5) மனிதன் சிலித்துவந்த பலவகையான வாசஸ்தலங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் காலவரிசைப்படுத்தி ஆதிகாலந் தொட்டு எழுதுக:
கற்சமாதிகள்; மரவீடுகள்; தடிகளாற் கட்டப்பட்டுக் களிமண்ணைச் சுவர்கள் நிரப்பப்பட்ட குடிசைகள்; மரங்கள்; குகைகள்; தடிகளாற் கட்டப்பட்டு இலைகளால் மூடப்பட்ட குடிசைகள்.

(6) மனிதன் நெருப்பு உண்டாக்கும் விதத்தை எவ்வாறு கண்டுபிடித்தான்? நெருப்பை எவ்வாறு பயன்படுத்திக்கொண்டான்?

(7) மனிதன் முதன்முதல் செய்துவந்த சிவனேபாயம் யாது? அதன்பின்பு எத்தொழிலைச் செய்தான்?

(8) பழைய கற்கால மனிதரிலும் பார்க்கப் புதிய கற்கால மனிதருக்குக் கூடிய ஓய்வு நேரம் எவ்வாறு கிடைத்தது?

(9) கற்கால மனிதரின் சித்திரக்கலை வேலைகள் சிலவற்றைக்கூறு?

(10) கற்கால மனிதர் (அ) நாடோடிகளாய்ச் சீவியம் நடாத்தினர், (ஆ) நெருப்பு, நீர், சூரியன் முதலியவற்றை வணங்கினர். மேலே தரப்பட்ட கூற்றுகள் ஒவ்வொன்றிற்கும் கீழே பலவகையான நியாயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான நியாயங்களை மாத்திரம் கோடிட்டுக் காட்டுக.

(அ) மனிதர் நாடோடிகளாய்ச் சீவியத்தை நடாத்தியது ஏனெனில்:

I அவர்கள் ஒரே இடத்தில் சீவித்து அலுத்துப் போயினர்.

II தங்களுக்கும், மிருகங்களுக்கும் வேண்டிய உணவைத் தேடி இடம்விட்டு இடம்பெயர வேண்டியவராய் இருந்தனர்.

III கூடிய பலம் உடையவர்களாலே இருந்த இடங்களிலிருந்து துரத்தப்பட்டனர்.

(ஆ) மனிதர், சூரியன், நெருப்பு, நீர் முதலியவற்றை வணங்கினர் ஏனெனில்:

I அவை மனிதனுக்கு மிகவும் உபயோகமாய் இருந்தன.

II வணங்குவதற்கு வேறொன்றும் இருக்கவில்லை.

III மனிதர் அவற்றிற்குப் பயப்பட்டனர்.

IV அவை உண்மையாகத் தெய்வங்களே.

உலோக காலங்கள்

கற்கால மனிதரின் சீவியத்தைப்பற்றி நாம் படித்துள்ளோம். தன் புத்தியைப் பயன்படுத்தி எவ்வாறு படிப்படியாய் மனிதன் சீர்திருந்தி வந்தான் என்பதையும் நாம் அறிவோம். கல்லால் செய்யப்பட்ட கருவிகளும், ஆயுதங்களும் பல ஆயிரவருடங்களாக உபயோகிக்கப்பட்டு வந்தன. அப்படி நடந்துவரும்போது, குறிப்பாக எப்போது என்று சொல்லமுடியாத ஒரு காலத்தில், மனிதன் இது வரையும் உபயோகித்துவந்த கல்லிலிருந்து வேறுபட்ட ஒரு பொருளைக் கண்டுகொண்டான். இது கல்லிலும் பிரயோயும், வலிமையுமுடையது. அதை ஒரு முறையில் தட்டி, அதிலிருந்து ஆயுதங்களும், கருவிகளும் செய்துகொள்ளக் கூடியவனாயிருந்தான். இப்பொருள் தான் செம்பு. மனிதன் உபயோகித்த முதல் உலோகப்பொருள் இதுவே. இவ்வாறே முதல் உலோககாலம் ஆரம்பித்தது.

இந்த உலோகப்பொருளில் மனிதன்முழுத்திருப்தி அடைந்திலன். செம்பையடித்து நீட்டி, விரும்பிய உருவங்கொடுத்து பலவகைக் கருவிகளையும் ஆயுதங்களையும் செய்யக்கூடியதாயிருந்த போதிலும், உரமுள்ள உபகரணங்கள் செய்துகொள்வதற்கு செம்பின்

பலம் போதியதாய் இருக்கவில்லை. ஆனதினால் இந்த உலோகத்தை எவ்வாறு போதிய வன்மையுறச் செய்யலாமென்ற யோசனையில் மனிதன் தன் சிந்தையைச் செலுத்தினன். இவ்வாறு இருக்கும் காலத்தில் தகர்மென்னும் பிறிதொரு உலோகவஸ்து மனிதனுக்கு அகப்பட்டது. செம்பையும், தகரத்தையும் கலந்துவிடுவதனால் மிகவும் உரமுள்ள வெண்கலமென்னும் உலோகத்தை ஆக்கலாம் என்பதை அறியலானான். இது திருப்தியைக் கொடுத்தது. வெண்கலத்தைத் தட்டி, நீட்டி எவ்வுருவத்திலும் மிகவன்மையுள்ள எந்தக்கருவியையோ, ஆயுதத்தையோ செய்துகொள்ளலாம்.

பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப்பின்பு தன் புதிய தேவைக்குத் தக்கதும், மேலும் கூடிய வலிமையுள்ளதுமான ஓர் உலோகத்தை மனிதன் கண்டுபிடித்தான். இதுதான் இரும்பு. செம்பைப்போல் தட்டி நீட்டக்கூடியதாய் இரும்பு இருந்ததல்லாமல், வலியகருவிகளும், ஆயுதங்களும் செய்துகொள்ளுவதற்குப்போதிய பலமுள்ளதாயுமிருந்தது. இரும்பு மிகச்சிறந்த உலோகம். இரும்பிலிருந்து உபகரணங்கள் செய்தகாலத்திலிருந்து இரும்புக்காலம் ஆரம்பமாகிறது. முதன் முதல் இரும்பை உபயோகித்தவர்கள் ஹிற்றைற்ஸ் என்னும் சாதியினரே. அவர்கள் கி. மு. 2,000 வருட அளவுபோல இரும்பாயுதங்களை உபயோகித்தனர். இரும்பிலிருந்து போராயுதங்கள் செய்து அவற்றைப் போர்முனையில் உபயோகித்தவர் அசீரியரே. அவர்கள் மிகப்பலமுள்ளவர்களாய் விளங்கி அநேகநாடுகளை அடிப்படுத்தினர். அவர்களின் வெற்றிக்கு முக்கிய காரணம் இரும்பாயுதங்களே. அவர்கள் அடிப்படுத்திய நாடுகளுக்கு இரும்பாயுதங்களைப்பற்றிய அறிவைக்கொண்டு செல்லவே, பலநாடுகளிலும் இரும்பு உபயோகிக்கப்படலாயிற்று.

மனித சரித்திரத்திலுள்ள பலகாலங்களைப்பற்றிப் படித்துள்ளோம். கற்காலம், செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலமெனப் பல காலங்களை முறையே மனிதனின் வரலாற்றிற் கண்டுள்ளோம். எல்லாத் தேசங்களிலுமுள்ள மனிதர் மேற்கூறிய காலங்கள் எல்லாவற்றையும் கண்டறிந்தனர் என எண்ணுதல் தகாது. உதாரணமாக நம் இலங்கைத் தேசத்தினரை எடுத்துக்கொள்ளுவோம். கி. மு. 500 வருட அளவில் இத்தீவிற்கு ஆரியர் இரும்பு ஆயுதங்களுடனும், கருவிகளுடனும் வந்தபோது இலங்கையர் புதிய கற்கால நிலையிலேதான் இருந்தனர். இவ்வாறு புதிய கற்காலத்திலிருந்த இலங்கையர் இரும்புக்காலத்தை உடனே அறிந்தனர். மேலும் நாம் மனதில் இருத்தவேண்டிய விஷயம்வேறொன்றுண்டு. அதுமேலே குறிக்கப்பட்ட வெவ்வேறு காலங்களும் (சகாப்தங்கள்) எல்லாத்தேசங்களிலும் உடன் காலத்தில் காணப்பட்டனவன்று என்பதே. உதாரணமாக: முதன்முதல் ஐரோப்பியர், அமெரிக்காவுக்குப் போனபொழுது அங்

குள்ள சுதேசிகள் கற்கால நிலையிலேயே இருந்தனர். இன்றும் இலங்கையின் வேடர்களும், அவுஸ்திரேலியாவின் சுதேசிகளும் இரும்புக் கருவிகளையும், ஆயுதங்களையும் உபயோகித்துவந்த பொழுதிலும் பெரும்பாலும் கற்கால மனிதரைப்போலவே வசிக்கின்றனர்.

காலங்கள் (சகாப்தங்கள்)



மனிதனின் தொழில்களின் ஆதிவரலாறு

மனிதனின் ஆதிவரலாற்றை நாம் வேறெருரு முறையினாலும் கற்றுக்கொள்ளலாம். அது அவனது தொழில்களின் மாற்றங்களை அவதானிப்பதனாலாம். பழைய கற்காலத்தில் மனிதன் முக்கியமாக வேட்டைத்தொழிலைச் செய்துவந்தான். புதிய கற்காலத்திலே வேட்டைத்தொழிலை மேலும் தொடர்ந்து நடாத்தி வந்தாலும் வனமிருகங்களைப்பிடித்து வளர்த்தும் வரலாயினன். இந்த மிருகங்களிலிருந்து தனக்கு வேண்டிய உணவையும், ஆடையையும் பெற்றுக்கொண்டான். மிருகங்களை வளர்க்கத் தொடங்கியதன்பின் வேட்டைத்தொழிலிலும் பார்க்க மிருகங்களை வளர்க்குந் தொழிலையே மனிதன் நாடினான். இவ்வாறு மனிதர் வேடர் பருவத்திலிருந்து மேய்ப்பர் பருவத்தையடைந்தனர்.

மிருகங்களை மேய்ப்பவன் தன்மந்தைக்குப் போதிய உணவுகிடைப்பதைக் கவனித்து வரவேண்டும். அவன் மேய்த்துவந்த மிருகங்களுட் பெரும்பாலானவை புல்மேயும் மிருகங்களாம். ஆனதினால் தன் மந்தைகளுக்கு வேண்டிய புல்லைத்தேடி அவற்றுடன் திரியவேண்டியவனானன். இப்படி அநேக வருடங்கள் கழிந்ததன்பின் மனிதர் தமக்கு வேண்டிய உணவைப் பயிரிட்டுக்கொள்ளத் தொடங்கினபோது அவர்கள் விவசாயிகள் அல்லது உழவர் பருவத்தையடைந்தனர்.

மனிதர் வேடராயும், மேய்ப்பராயும் இருந்த காலத்திலே நாடோடிகளாய் இடம்பெயர்ந்து திரிந்தனர். ஆனால் கமத்தொழில் செய்ய ஆரம்பித்தபோது ஓரிடத்திலே வசித்து நிலையுள்ள சீவியத்தை நடாத்தத் தொடங்கினர். நிலத்திலிருந்தே அதிகமாகத் தம் உணவைப் பெற்றுக்கொண்டதாலும், சிறு நிலத்துண்டையே திரும்பத்திரும்பப் பண்படுத்தி உணவுப்பொருளைப் பெற்றுவந்ததாலும் அந்நிலத்துண்டில் அதிக பற்றுடையவராயினர். அந்நிலத்தைவிட்டு அவர் அகன்றனராயின், அஃது ஒன்றில் அதிலுஞ்சிறந்த நிலத்தைப்பற்றிக்கொள்வதற்காய் இருக்கலாம். அன்றேல் அவரது நிலத்தைப் பிறர் கவர எண்ணி அவரை அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டதாலும் ஏற்பட்டிருக்கலாம்.

இவ்வாறு மனிதர் ஆரம்பத்தில் வேடராயிருந்து, பின்பு மந்தைகள் மேய்ப்பவராகி அதன்பின்பு விவசாயிகளாயினர். ஆனால் புதிய தொழில்கள் செய்யத் தொடங்கியபோது பழைய தொழில்களைக்கை விட்டாரெனக் கொள்வது தகாது. மிருகங்களை மேய்த்துவந்த காலத்திலேயும் முன்னிலுஞ் குறைவாக மிருகங்களை வேட்டையாடியும், மீன்களைப்பிடித்து உண்டும் வந்தனர். அப்படியே விவசாயத் தொழிலைச் செய்யத்தொடங்கிய காலத்திலும் மிருகங்களை மேய்க்குந் தொழிலை அவர்முற்றுகக் கைவிடவில்லை. மனிதர் பெரும்பாலும்

கமத்தொழில் செய்யத்தொடங்கினதன் பின்னும் அவர்களுட் பலர் மிருகங்களை வளர்த்தும், இடையிடையே வேட்டையாடியும், மீன்பிடித்தும் வந்தனர்.

நாகரீகம் எவ்வாறு ஆரம்பமானது?

மனிதன் நாடோடியாய்ச் சீவிப்பதைக் கைவிட்டு உழவுத்தொழில் செய்ய ஓரிடத்திலிருந்து, நிலையுள்ள சீவியத்தை நடாத்தத் தொடங்கியபோதே நாகரீகத்தின் பாதையில் முதலடி எடுத்துவைத்தனனெனலாம். வேடனும், மேய்ப்பனும் வாழ்ந்துவந்த காலத்தில் தனது வீட்டைத் திருத்தவோ அன்றேல் தனது சமயம், கலை முதலியவற்றைப்பற்றிச் சிந்தனைசெய்யவோ நேரமில்லாதவனுயிருந்தான். ஆனால் விவசாயியானதன் பின்பு அவன் நிலையில் பெரிதும் மாற்றமுண்டாயிற்று. நிலத்தையுழுது விதையை விதைத்ததன் பின்பு அறுப்புக் காலம் வருமளவும் அவன் கையினுற் செய்யப்படவேண்டிய வேலைகள் இல்லை. ஆனதால் வருடத்தின் ஒரு பெரும் பாகத்தில் ஓய்வுள்ளவனுய் இருந்தான். இந்த ஓய்வுநேரத்தை அவன் இப்போது தனதுவீடு, தான் உபயோகிக்கும் கருவிகள், ஆயுதங்கள் முதலியனவற்றையும், ஆடை, கலை, பாஷை ஆதியனவற்றையும் திருத்துவதில் செலவுசெய்தான். இவ்வேலைகளில் ஈடுபடவே நாகரீகத்தில் முன்னேற்றமடையத் தொடங்கினன்.

உழவுத்தொழில் செய்யத்தொடங்கியபின்பே மனிதன் நாகரீகத்தில் வளர்ச்சியுற ஆரம்பித்தான் என்பதற்கு வேறு ஒரு காரணமுண்டு. வேடராகவோ, மந்தை மேய்ப்பவராகவோ இருக்கும்போது பெருந்தொகை அடங்கிய கூட்டத்தினராய் மனிதர் சீவித்துவரமுடியவில்லை. அப்படி வசித்து வந்திருப்பின் அருகாமையிலுள்ள மிருகங்களோ, பசும்புற்களோ விரைவில் ஒழிந்திருக்கும். ஆகையினல் அக்காலங்களில் சிறுதொகைகளடங்கிய கூட்டத்தினராய் பலவிடங்களிலும் வசித்து வேட்டைத்தொழிலையோ, மந்தை மேய்க்குந்தொழிலையோ தத்தம் அருகாமையிற் செய்துவந்தனர். கமத்தொழில் செய்யத்தொடங்கியபோது பெருந்தொகையடங்கிய கூட்டத்தினராய்க் கிராமங்களில் வசிக்கத்தொடங்கினர். வயல்களிலிருந்து பெருந்தொகையடங்கிய கூட்டத்தினர் உணவு பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் கூட்டமாய் வசிப்பதால் ஒருவர்க்கொருவர் உதவக்கூடியவராயும் இருந்தனர்.

உதாரணமாக எல்லோருக்கும் பொதுவிற் பயன்படக்கூடிய வேலைகளில் பலருடைய உதவி அவசியம். இப்படியான வேலைகளிலும், வேலி அமைத்தல், தேவாராதனைக்குக் கோயில்கள் கட்டுதல், கிராமத்தில் அமைதியும், சமாதானமும் நிறுவத்தெண்டித்தல் முதலிய வேலைகளிலும் கிராமத்திலுள்ள பலரும் ஒருமித்துப் பங்குபற்றிக்கொண்டனர்.

மனிதர் கூட்டமாக வசிக்கும்போது மேற்கூறியவாறு ஒருமித்துச் சிலவேலைகளைச் செய்வதுமன்றி, எண்ணங்களிலும், அபிப்பிராயங்களிலும் பங்குபற்றிக் கொள்ளுகின்றனர். ஒரு குறித்த வேலையை ஒரு குறித்த முறையிலேதான் செய்யலாமென ஒருவர் எண்ணக்கூடும். இன்னெருவர் அம்முறையிலன்றிப் பிறிதொருமுறையில் செய்யலாமென்ற அபிப்பிராயமுடையவராய் இருக்கலாம். உதாரணமாக நீர்ப் பாய்ச்சல் வேலையை எடுத்துக்கொள்வோம், எல்லோருடைய அபிப்பிராயங்களும் ஒரேவிதமாக இருக்கமாட்டா, ஆனதினுல் ஒருங்குகூடிச் சீவிப்பதினுல், ஒரு கருமத்தை எவ்வாறு சுலபமாகச்செய்து முடிக்கலாமெனப் பலர் ஆலோசித்து அதைச் செய்து முடித்துவிடலாம். ஆனதினுல் பெரிய தொகையடங்கிய கூட்டத்தினராய்ச் சீவிக்கும் இம்முறை சீவியத்தைத் திருத்திக்கொள்வதற்குச் சாலவுஞ் சிறந்தது.

இவ்வாறு உழவுத்தொழில், மனிதர் தமது சீவியத்தைத் திருத்திக்கொள்வதற்கு வேண்டிய ஓய்வுநேரத்தைக் கொடுத்ததுமன்றி, அதற்குதவியாகப் பெருந்தொகையடங்கிய கூட்டத்தினராய்க் கிராமங்களில் வசிக்கவும் செய்து அதன் பயனுக ஒருவர்க்கொருவர் உதவி புரிந்து முன்னிலும் விரைவாக முன்னேற்றமடையவும் பலனளித்தது.

பயிற்சி II

1. மனிதன் முதன் முதல் உபயோகித்த உலோக வஸ்து யாது? அதனேடு திருப்தியடையாதது ஏன்? எவ்வாறு அதைத் திருத்திக்கொண்டான்?
2. மனிதன் கண்டுபிடித்த உலோகவஸ்துக்களுள் இரும்பு எவ்வகைகளில் தகுந்ததாய் இருந்தது?
3. மனிதனின் ஆதித்தொழில்களின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக.
4. விவசாயத்தொழில் செய்யுங்காலத்தில் மனிதனுக்கு வேட்டைத்தொழில், மேய்ப்புத்தொழிற் பருவங்களிலும் கூடிய ஓய்வு நேரம் இருந்ததேன்?
5. கமத்தொழில் மனிதனின் சீவியமுறையைத் திருத்திக் கொள்ள உதவிய இருவகைகளைக் கூறுக.

2-ம் அத்தியாயம்

இலங்கை சரித்திரகாலத்துக்குமுன் இருந்தவிதம்

வேறு அனேக நாடுகளில் இருந்தவர்களைப்போல் இலங்கையில் வாழ்ந்தவர்கட்கும் எழுதத் தெரிந்திருக்கவில்லை; எனவே அவர்களின் வரலாற்றை அறியக்கூடிய எழுத்துக்குறிப்புகளை அவர்கள் விட்டுச்செல்லவில்லை. இவங்கையின் பூர்வகுடிகளைப்பற்றிய குறிப்புகள் சில கதைகளில் காணப்படுகின்றன. இக்கதைகள் பிற்காலத்தில் எழுதப்பட்டதானும், முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் எழுத்துக்குறிப்புகளை விட்டுச் செல்லாததானும் இக்கதைகளின் ஆசிரியர்கள் சரித்திர காலத்துக்கு முற்பட்ட பழங் குடிகளைப்பற்றி நன்கு அறிந்திருக்கமாட்டார்கள் என்பது தெளிவு. சமஸ்கிருதத்தில் வான்மீகியால் எழுதப்பட்ட இராமாயணம் இக்கதைகளில் ஒன்று; மற்றையது மகாவம்சம். இந்த மகாவம்சமென்ற நூல் இலங்கையில் எழுதப்பட்ட அதி பழைய நூலாகும்; பாளி பாஷையில் மகாநாமன் எனப்பெயரிய பௌத்த பிக்குவினல் தொடர்நிலைச் செய்யுளாக இது யாக்கப்பட்டுள்ளது. இந்நூல்கள் இலங்கையின் பூர்வகுடிகளைப்பற்றி யாது கூறுகின்றன என ஆராய்வோம்.

இராமாயணம்

இந்தியாவில் கோசல நாட்டில் தசரதர் எனப்பெயரிய வல்லமைமிக்க ஒரு மன்னர் வாழ்ந்தார். அக்கால் வழக்கப்படி அவர்க்கு மனைவியர் மூவர் உளர், ஒவ்வோர் மனைவியிடத்தும் தசரதர்க்கு சிலமைந்தர் பிறந்தனர். முறையே மூத்தமனைவியிடத்து இராமரும், இரண்டாம் மனைவியிடத்து இலக்குமணன் சத்துருக்கினனும் இளைய மனைவியிடத்து பரதனும் பிறந்தனர். மனைவிகளின் பெயர்முறையே கௌசல்யா, சுமித்திரா கைகேசி என்பர்.

மன்னன் மக்களில் ஸ்ரீ இராமனிடமும், மனைவியரில் கைகேசி இடமும் அதி வாஞ்சை உடையவனுய் இருந்தான். அவன் கைகேசி இடம் வைத்திருந்த அன்பு காரணமாய் அவள் எதைக் கேட்டாலும் நல்குவதாக வாக்குப்பண்ணினன். வழக்கப்படி மூத்த குமாரனுகிய இராமனுக்கே அரசுரிமை சேரும்; ஆனல் கைகேசி தன்மகன் பரதனுக்கே முடிசூட்டவேண்டுமென்று பிடிவாதம் செய்தாள். இதன் காரணமாக இராமனைக்காட்டுக்கு அனுப்பவேண்டியதாயிற்று; பரதன் அரசகட்டிலேறினன் இராமன் தன்மனைவி சீதையுடனும் தம்பி இலக்குமணன் உடனும் கானகம் சென்றனன்.

இந்தியாவில் இச்சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது இலங்கையை இராக்கதர்கள் அல்லது அசுரர்கள் ஆண்டு வந்தார்கள். இராவணன் இலங்கை மன்னனுக விளங்கினன். இராவணன் சீதையின் அழகைக் கேள்விப்பட்டு இந்தியா போய் இராம இலக்குமணர் இல்லாத சமயம் அவளைக் கவர்ந்துகொண்டு வந்து இலங்கையில் சிறை வைத்தான்.

இராமன், தம்பி இலக்குமணனுடன் சீதையைத்தேடி அலைந்தான். கடைசியில் அவளை இராவணன் தூக்கிச்சென்றனன் என்றதை அறிந்து, வானர அரசனுகிய சுக்கிரீவனதும் வானரவீரன் அனுமானதும் துணையோடும் கடல் கடந்து இலங்கையை அடைந்து இராவணனுடன் போர் பொருதி வெற்றி பெற்று சீதையை மீட்டான்.

இராமன் இழந்த தன் அரசையும் பெற்று நல்லரசனுக நல்லாட்சி செய்தான் என மேலும் கூறுகின்றது.

இராமாயணக்கதை மிக இனியது; அதில் இலங்கையில் அரக்கர்கள் வாழ்ந்தார்களென்று குறிக்கப்படுகிறது. வரலாற்று நூலாசிரியர்கட்கு இச்செய்தி அத்துணை பயனுடையதல்ல.

மகாவம்சம்

மகாவம்சம் இலங்கையின் பழங்குடிகள் இயக்கர், நாகர் என நவில்கின்றது. மகாவம்ச ஆசிரியர் இவர்களை மனிதர்களல்ல (''அமானுஷ்'') என்று தீர்க்கமாகக் குறிப்பிடுகின்றார். மேலும் இயக்கர் பூமிக்குமேல் ஒரு யோசனை தூரத்திலும் நாகர் பூமியின் கீழ் ஒரு யோசனை தூரத்திலும் வாழ்ந்தார்களென அவர் அறைகின்றார். இயக்கர்களை இலங்கையினின்றும் அகற்றி இலங்கையை மக்கள் வாழ்வுக்கு உகந்தது ஆக்கவே, பகவான் புத்தர் இலங்கைக்கு வந்தாரென மேலும் மகாவம்சம் கூறுகின்றது. ஈண்டும் இலங்கையின் பழங்குடிகள் மனிதரல்லர் என்பது வலி உறுத்தப்படுகிறது.

இலங்கையின் பழங்குடிகளை அசுரர், மனிதரல்லர் எனக் கூறும் விவரங்கள், பண்டைக்கால வரலாற்றை நுணுகி ஆராயும் வரலாற்று ஆசிரியர்கட்கு எட்டுணையும் பயன் அளிக்கமாட்டா.

இலங்கையின் பழைய கற்காலம்

நாம் முன்கண்டதுபோல இலங்கையின் பழங்குடி மக்கள் எழுத்துக்குறிப்புகளை விட்டுச்செல்லாவிட்டாலும், அவர்கள் விட்டுச் சென்ற வேறு சில அடையாளங்கள் அவர்களின் வாழ்க்கை விவரங்களை ஓரளவிற்கேனும் அறியத் துணைசெய்கின்றன.

பழைய கற்காலத்தில் ஏனையநாடுகளில் உபயோகிக்கப்பட்டன போன்ற கல்லாயுதங்கள் இலங்கையிலுள்ள குகைகளிலும், குகைகளுக்கு அண்மையிலும் கண்டு எடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாயுதங்கள் இலங்கையின் பழங்குடிமக்கள் பழைய கற்காலத்தவர் என்று காட்டுகின்றன. ஆனால் இம்மக்கள் யார்? எங்கிருந்து இலங்கையில் நுழைந்தார்கள் என்பனபற்றித் திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. இன்று இலங்கையில் வாழும் வேடர்கள் இக்கற்கால மக்களின் சந்ததிகள் என நினைப்பது பெரும்பாலும் பொருத்





இலங்கையில் உபயோகிக்கப்பட்ட கல்லாயுதங்கள்.

தமுடையது. வேடர்களின் பழக்க வழக்கங்களை ஆராய்ந்தபோது அவர்களின் வாழ்க்கைக்கும் வேற்றுநாடுகளில் வாழ்ந்த கற்கால மனிதரின் வாழ்க்கைக்கும் அத்துணை வேறுபாடு காணப்படவில்லை. இதைக்கொண்டு இலங்கையின் பழங்குடி மக்களைப்பற்றி நாம் பரும் படியாக அறிந்துகொள்ளலாம்.

கற்கால மனிதரின் வாழ்க்கை


கற்கால மனிதர்கள் குகைகளில் சிலித்தார்கள். சில குடும்பங்கள் ஒருமித்து வாழ்ந்தன. இவ்வகையான ஒரு கூட்டம் பட்டி அல்லது கோத்திரம் எனப்பட்டது. இவ்வகைக்கூட்டமாக வாழ்ந்ததால் திறமையாக வேட்டையாடவும் சத்துருக்களிலிருந்து தங்களைப் பாதுகாக்கவும்

முடிந்தது. வெவ்வேறு கோத்திரத்தாருக்கிடையே சில வேளைகளில் சண்டைகள் ஏற்படுவதுமுண்டு.

இவர்கள் அற்பமாகவே உடையணிந்தார்கள்; இலைகளையும், மரப்பட்டைகளையும், மிருகங்களின் தோலையும் ஆடையாக அணிந்தனர். அன்னரின் பிரதான தொழில் வேட்டை ஆடுதல் ஆகும். காட்டுமிருகங்கள் இடத்துக்கிடம் அலைந்து திரிவதனால் இவர்களின் வாழ்க்கையும் அலைந்து திரியும் வாழ்க்கையாயிற்று. செப்பமற்ற கருமுரடான ஆயுதங்களால் கொன்ற மிருகங்கள் பறவைகளின் இறைச்சியை பச்சையாகவே அருந்தினர்கள். அவர்களுடைய ஆயுதங்கள் செப்பமற்றவையாயிருந்த காரணத்தான், உணவு தேடலிலேயே அவர்கள் காலத்தின் பெரும்பகுதி கழிந்தது. எனவே தங்கள் இருப்பிடம், உடை ஆகியவற்றை சீர்திருத்தம் செய்வதை நினைக்கத்தானும் அவர்கட்கு நேரங்கைக்கவில்லை. இப்பழங்குடி மக்கள் சூரியன், இடி, வர்ணன் (நீர்) முதலியவற்றை வணங்கினர்கள். இறந்த தங்கள் இனபந்துக்கள் வேறு உலகத்துக்குப் போயிருக்கிறார்கள் என்பதை நம்பினர்கள். தங்கள் இக்கட்டு இடைஞ்சல்களில் அவர்கட்குப் பலியிட்டு வணங்கினர்கள்.

புதிய கற்காலம்

புதிய கற்கால அடையாளங்களும் இலங்கையில் காணப்பட்டு இருக்கின்றன. படியகம்பளையில் ஒரு கற்சமாதியும், மட்டக்களப்பில்



இலங்கையில் உள்ள ஒரு பழைய சமாதி.

ஒரு பேழையும் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. யார் இச்சமாதியையும் பேழையையும் நிருமாணித்தார்கள் என்பது எமக்குத் தெரியாது. மிகவும் சேய்மையான ஒரு காலத்தில் இலங்கையின் பழங்குடிகள் பழய கற்காலத்தில் இருந்து புதிய கற்காலத்துக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பது மட்டும் எங்களுக்குத் தெரிகிறது.

இலங்கையின் புதிய கற்கால மனிதரைப்பற்றி அறியக்கூடிய வேறு சாதனங்கள் ஒன்றுமில்லை.

பயிற்சி

1. (அ) இலங்கையில் பழைய கற்காலத்தில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சிகள் உண்டு?

   (ஆ) இலங்கையில் பழங்குடி மனிதன் பழைய கற்காலத்திலிருந்து புதிய கற்காலத்துக்கு முன்னேறியிருக்கிறான் என்பதை எவ்வகைச் சாதனங்களால் நிறுவலாம்?

2. (அ) இராமாயணம் இலங்கையின் பழங்குடிமக்களைப்பற்றி என்ன கூறுகின்றது?

   (ஆ) மகாவம்சம் இலங்கையின் பழங்குடிகளைப்பற்றி என்ன கூறுகின்றது?

3. கீழ்வருந் தலைப்புகளில் இலங்கையின் கற்கால மக்களின் வாழ்க்கையைப்பற்றி ஒரு சிறுகட்டுரை வரைக.


   (அ) இல்லம்
   (ஆ) உடை
   (இ) கூட்டம்
   (ஈ) ஆயுதங்கள்
   (உ) தொழில்
   (ஊ) உணவு
   (எ) மதம்

மூன்றும் அத்தியாயம்

நாகரீகத்தின் தொடக்கம்

1. நைல் நதிப் பள்ளத்தாக்கு. 2. இணைந்திக்கிடைப்பட்ட நாடு.
3. இரும்புக்காலத் தொடக்கம். 4. அசீரியர்.
5. எபிரேயரும் யூதரும். 6. பார்சியர்.
7. இந்தியாவின் ஆதிவரலாறு. 8. சீனர்.

மனிதர் எப்பொழுது வேடராயும் மந்தை மேய்ப்பவராயும் அலைந்து திரிவதைவிட்டு விவசாயம்செய்து நிலையாய் ஓரிடத்தில் ஜீவிக்கத் தொடங்கினரோ அப்பொழுதே நாகரீகம் அடையத்தொடங்கினர் என்று முதலாம் அத்தியாயத்தில் படித்துள்ளோம். நாகரீகம் அடையத்தொடங்கினபின் வளம் பொருந்திய நிலத்தை அவர் விரும்புவது இயல்பன்றே? ஆனதினால், ஆதி நாகரீகங்கள் தோன்றிய இடங்கள் நதிப்பள்ளத்தாக்குகளாய் இருந்தன. நைல் நதிப்பள்ளத்தாக்கிலும், ரைகிறிஸ், யூபிறெட்டிஸ் என்னும் இணைநதிகளுக்கிடையிலுள்ள பிரதேசத்திலும், இந்து நதி, யாங்சிக்கியாங், ஹொவாங்கோ நதி ஓரங்களிலும் உலகத்தின் பெயர் போன நாகரீகங்கள் தோன்றின.



நாகரீகம் தொடங்கிய பெயர்பெற்ற இடங்கள்.

இந்நதிக்கரைகளில் ஆதியிலே குடியேறியவர்கள் உலோக காலத்தையும் ஏற்கனவே அறிந்திருந்தனர். அவர்கள் வெண்கலக் கருவிகளையும் ஆயுதங்களையும் உபயோகித்து வந்ததினால் கற்கால மனிதரின் நிலையிலும் அதிகம் முன்னேறியவராவர்.

அவர்கள் எழுதும் முறையையும் அறிந்திருந்தனர். ஆகவே, அவர்களின் எழுத்துச் சான்றுகள் நமக்குக் கிடைத்திருப்பதால், கற்கால மனிதர்களிலும்பார்க்க இவர்களைப்பற்றி நாம் அதிகம் அறிவோம். இவர் ஆரம்பத்தில் வரைந்தனவற்றிலிருந்தே எழுத்துச் சான்றுகள் உள்ள சரித்திரகாலம் தொடங்குகின்றது. இக்காலத்தைச் சரித்திர எல்லையுள் அடங்கிய காலம் என கூறுகின்றோம்.

நைல் நதி பள்ளத்தாக்கின் நாகரீகம்


நைல் நதியானது கிழக்காப்பிரிக்காவிலுள்ள மத்திய மலைப்பிரதேசங்களில் உற்பத்தியாகி, மணற்பாங்கான வனந்தரங்களின் ஊடாய் ஓடி, கடலுள் வீழ்கின்றது. மழைநாட்டிலுள்ள அமோகமான மழை வீழ்ச்சியின் பயனாக நைல் நதியானது வருடந்தோறும் வெள்ளப் பெருக்கெடுத்து இரு ஓரங்களிலுமுள்ள வெளிப்பிரதேசங்களுக்கு நீர் ஊட்டுகின்றது. வெள்ளப்பெருக்கு வற்றும்போது, பெருக்கெடுத்த வயல்களின் மீது பசைப்பர்ங்கான சிறந்த பசளையை விட்டுச் செல்கின்றது. இவ்வகையான நிலங்களிலே தானியங்களை விதைத்தால் தமக்கு வருடம் முழுவதும் வேண்டிய உணவுப் பொருளைப் பெற்றுக் கொள்ளலாமென, சில நாடோடிகள் அறிந்து நைல் நதி ஓரங்களில் குடியேறி பயிர்த்தொழிலை ஆரம்பித்தனர். நதியின் ஓரப்பிரதேசத்திலே செழிப்பான இடங்களில் சிறு சிறு கூட்டத்தினராக வசிக்கத் தொடங்கினர். இவ்வாறு, சுமார் கி. மு. 3,000 வருடமளவில் இவர்கள் ஒருவகையில் சீர்திருந்திய வாழ்வைத் தொடங்கினர் எனக்கூறலாம். இப்படி நைல் நதி ஓரத்தில் குடியேறியவர்களைச் சரித்திரத்தில் எகிப்தியர் என கூறுவர்.

எகிப்தியரின் எழுத்துக்கள்

முதல் இரு அத்தியாயங்களில் நாம் படித்த கற்கால மனிதர் களைப்போலன்றி, எகிப்தியர் எழுதும் முறையைக் கண்டு பிடித்தனர். இது எவ்வாறு நடந்ததெனக் காண்போம். எப்பொருளை எழுத்தில் குறிக்க விரும்பினரோ, அவர் அப்பொருளின் வடிவத்தை ஆரம்பத்தில் சித்திர ரூபமாக வரைந்தனர். ஒரு பூவைக்குறிப்பின் அப்பூவின் உருவத்தையும், ஒரு பறவையைக்குறிப்பின் அப்பறவையின் உருவத்தையும் படவடிவமாக வரைந்தனர். பின்பு ஒரு எண்ணத்தை உணர்த்த இரண்டு அல்லது அதற்குக்கூடிய சித்திரங்களைச்சேர்த்து வரைந்தனர்—பாலர் பத்திரிகைகளில் இக்காலத்தில் மலவுச்சித்திரப் போட்டிகளில் இவ்வகைப் படங்கள் வெளிவருவதுண்டு. உதாரண

மாக, சூரியனுடையவும் பூவினுடையவும் சித்திரங்கள் நெருக்கமாக வரையப்பட்டிருப்பின் அது சூரியகாந்திப்பூவைக் குறிக்கும். நாளடைவில் இப்படங்கள் நுட்பமின்றி வரையப்பட்டும், ஒரு படம் ஒரு பொருளை மாத்திரமன்றிப் பல பொருளைக் குறித்தும் வரலாயின—உதாரணமாக, ஒரு வட்டமானது சூரியனைமாத்திரமன்றி, நாளையும், வெளிச்சத்தையும் குறிக்க உபயோகிக்கப்பட்டது. மேலும் நாட்கள் செல்லச் செல்ல முன் ஒரு பொருளைக் குறித்த படம் சித்திரத் தன்மையிற் குன்றி சில குறிகளினற் பொருளை உணர்த்தி நின்றது. பினீசியர் இக்குறிகளை மேலும் குறுக்கி ஒரு நெடுங்கணக்கை வகுத்தனர். பினீசியரின் நெடுங்கணக்கிலிருந்தே ஆங்கில நெடுங்கணக்குப் பிறந்தது.

எகிப்தியர் இப்பட எழுத்துக்களை கல்லாலியற்றிய பிரேத அறைச் சுவர்களில் வரைந்ததுமன்றி நைல் நதி ஓரத்தில் வளரும் நெட்டி, அதாவது நாணற்புல்லிலிருந்து ஒரு வகைக்கடிதமும் செய்து கொண்டனர். இந்த நாணற்புல் 'பப்பிறஸ்' என அழைக்கப்படும். 'பேப்பர்' எனும் சொல் 'பப்பிறஸ்' எனும் சொல்லிலிருந்தே பிறந்தது. இந்தக்கடிதத்தில் எகிப்தியர்மையினால் எழுதினர். முதன் முதல் பட எழுத்துக்களில் எழுதியவர் எகிப்திய குருமாரே. அதனாலேயே இவ்வெழுத்தை ''ஹயரோகிளிபிக்ஸ்'' எனக்கூறுவர். அச்சொல்லின் பொருள் குருமாரின் எழுத்து என்பதே.



எகிப்தியரின் எழுத்துக்கள்

எகிப்தியரின் எழுத்துக்களுடன் எழுத்துச்சான்றுள்ள சரித்திரகாலம் ஆரம்பமாகின்றது. கற்கால மனிதரிலும் எகிப்தியரைப்பற்றி அதிகம் நாம் அறிந்திருப்பதற்குக்காரணம் அவர்கள் விட்டுச்சென்ற எழுத்துச்சான்றுகளே. இதுமாத்திரமன்று. தங்கள் வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்களை எகிப்தியர் தங்கள் மாளிகைகளின் சுவர்களிலும் இறந்தோரின் கல்லறைகளிலும் சித்திரித்திருக்கின்றனர். இந்த எழுத்துக்களுஞ் சித்திரங்களும் அவர்களுடைய வாழ்க்கையின் வரலாற்றை நாம் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்பட்டுள்ளன.

அரசியல் முறை

நைல் நதி ஓரத்தில் கூட்டங் கூட்டமாய்க்குடியேறிய எகிப்தியர் நாளடைவில் ஓர் அரசனின் கட்டளைக்குப் பணிந்து நடந்தனர். இவ்வரசனை 'பேரே' என அழைத்தனர். அரசனைத் தமது பிரதம தெய்

வமாகிய 'ரு' வின் புத்திரனென மதித்தும் வந்தனர். ஆனதினல் அரசனைப் பெரிதும் சங்கித்ததுமன்றி வணங்கியும் வரலாயினர். சட்டங் கள் இயற்றுவதும் தம் உத்தியோகஸ்தருக்குக் கட்டளைகள் கொடுப் பதும், சிறிய நீதிமன்றங்களிலிருந்து தனது கவனத்துக்குக்கொண்டு வரப்படும் வழக்குகளைத் தேறவிசாரித்து நீதி செலுத்துவதுமே அரச னின் பிரதான தொழில்களாகும். முழுத்தேசத்தையும் பல பிரிவு களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தலைவராக ஒவ்வோர் தேசாதிபதியை அரசன் நியமித்தான். இத்தேசாதிபதி தன் பிரிவில் அரசனின் ஆட்சியை நிலை நிறுவி, வரிகளை வசூலித்து, அப்பிரி விலுள்ள வழக்குகளை விசாரித்தும் வருவான்.

சமயம்

எகிப்தியர் சிறந்த மதக்கோட்பாடு உடையவர். பல தெய்வ வழிபாடு உடையவர். அவரின் பிரதான தெய்வம் 'ரு' என்னும் தெய்வமே. இத்தெய்வமே, உலகத்தையும் அதிலுள்ள சகல பொருட் களையும் படைத்தவர் என்னும் நம்பிக்கை உடையவர். அவர்களுக்கு மிகவும் பிரயோசனமாயிருந்த நைல்நதியை 'ஒசிறஸ்' என்னும் நாமங்கொண்ட தெய்வமென வணங்கினர். ஒரு ஆள் மரித்ததும் அவரின் உயிர் தூரத்திலுள்ள ஓர் தேசத்துக்குச் செல்கிறதென்றும் அவ்வுயிரானது பின்னொருகாலம் திரும்பவும் வந்து அவர் உயிர்த்து எழுவார் என்றும் அவர்கள் நம்பிக்கையுடையவர்களாய் இருந்தனர். ஆனதினல் இறந்தோரின் பிரேதங்கள் அழிந்து போகாமற் காத்து வருவதில் மிகவும் கவனஞ்செலுத்தினர். அப்பிரேதங்களுக்கு மருந் திட்டு, தயிலம் பூசி, அழிந்து போகாது கல்லாலாகிய ஸ்தம்பங்களில் 'மம்மீஸ்' எனக் காத்து வந்தனர். சென்ற ஆவியானது திரும்பவும் வந்து அந்த உடலிற் சேருமென்ற நம்பிக்கையே இதற்குக்காரணமா கும்.

கட்டடங்கள்

எகிப்தியர் தங்கள் தெய்வங்களுக்குப் பெருங் கோயில்களும், தங்கள் அரசர்களுக்குப் பெரும் மாளிகைகளும் கற்தம்பங்களும் கட்டினர். காணுய்க் என்னும் இடத்தில் ஒரு பெரிய கோயிலின் சிதைவுகளைக் காணலாம். இக்கோயிலின் சுவர்களில் எகிப்தியரின் வாழ்க்கையின் சில வரலாறுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. எகிப் தியரின் மிகப்பெயர் பெற்ற கட்டடங்கள் 'பிறமிட்ஸ்' என்பனவே. இப்பிறமிட்ஸ் எகிப்தியர்கள் தங்களின் இறந்த அரசர்களின் பிரேதங் களைக் காப்பதற்குக்கட்டிய கல்லறைகளே. சியோப்ஸ் என்னும் எகிப் திய அரசனின் கல்லறையே எல்லாப் பிறமிட்களிலும் பெரியது.



பிறமிட்ஸ்

அது 500 அடி உயரமுடையது. 13 ஏக்கர் விஸ்தாரமான நிலப் பரப்பில் கட்டி எழுப்பப்பட்டது. அழுத்தஞ் செய்யப்பட்ட பாரிய கற்பாறைகளை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கிச் செய்யப்பட்டது.

ஒவ்வொரு கற்பாறையும் சுமார் 30 அடி நீளமுள்ளது. பல்லா யிர அடிமைகளால் 20 வருடகாலத்தில் கட்டி முடிக்கப்பட்ட பாரிய கட்டடம் இது.

சிலைகள்

எகிப்தியரின் கோயில்களிலும் மாளிகைகளிலும் உள்ள பெரிய சிலைகளை அவர்கள் தங்களுடைய வெண்கலக் கருவிகளினதும் ஆயுதங் களினதும் உதவியால் இயற்றினர். எகிப்தியர்கள் கற்களில் செதுக் னவற்றில் மிகச் சிறந்தனவாய் விளங்குவனவற்றுட் சில 'ஸ்பிங்ஸ்' என கூறப்படும் சிலைகளாம். இவை, மனித உடல்களும் சிங்கத் தலைகளும் கொண்டன போன்ற பாரிய உருவங்களாம்.

பயிர்த்தொழிலும் வர்த்தகமும்

எகிப்தியரில் பெரும்பாலார் பயிர்த்தொழில் செய்பவரே. இவர் நைல் நதி ஓரத்தில் வெள்ளப்பெருக்கினல் விட்டுச் செல்லப்பட்ட பசளையினல் செழித்த தரையைப் பண்படுத்திப் பயிர்த்தொழில் செய்தனர். நெருப்பில் இட்டு இறுகச்செய்யப்பட்ட மட்கட்டிகளினல் கட்டி எழுப்பப்பட்ட சுவர்களுடைய சிறிய குடிசைகளில் இவர்கள் வசித்தனர். பயிர்த்தொழில் செய்பவரைவிட, மந்தைகள் மேய்ப்

பவர், கல் வெட்டுபவர், கல்லிற் செதுக்குபவர், சுவர் கட்டுபவர், நகை செய்பவர், சித்திரம் வரைபவர் முதலிய பலரும் அக்காலத்தில் வசித்தனர்.



காணப்பட்ட கோயில்

எகிப்து தேசத்தில் வர்த்தகத் தொழிலும் அதிகம் நடந்தது. வர்த்தகர் நைல் நதியில், சிறு ஓடங்களில் ஒரு கூட்டத்தினரிலிருந்து மறு கூட்டத்தினரிடஞ் சென்று அவரவர்களுக்குத் தேவைப்பட்ட பொருட்களில் வர்த்தகம் நடாத்தினர். எகிப்து தேசத்துக்கும் பிற தேசங்களுக்குமிடையிலும் வியாபாரம் நடந்தது. ஐரோப்பாவிலிருந்து பொன்னைப் பெற்றுக் கொண்டனர். ஆடு மாடுகள், திராட்ச இரசம், நற்கந்த புகைச்சரக்குகளை சிரியா தேசத்திலிருந்தும் பெற்றுக் கொண்டனர்.



ஸ்பிங்ஸ் சிலைகள் உள்ள வீதி

கல்வியறிவு

எகிப்தியர் எழுதும் முறையைக் கண்டு பிடித்தனர் என்பதைக் கண்டுள்ளோம். கால அட்டவணை (பஞ்சாங்கம்) தயாரிக்க முதன் முதல் அறிந்தவர்களும் அவர்களே. வருடத்தை 12 மாதங்களாகவும், 365 நாட்களாகவும் வகுத்தனர். சமய ஆராதனைகளைக் குறித்த காலத்தில் எகிப்திய குருக்கள் நடாத்துவதற்கு இக்கால அட்டவணை மிகவும் பயனளித்தது. எகிப்திய அறிஞரே கணிதக்கலையை ஆரம்பித்து வைத்தனர்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

எகிப்திய நாகரீகம் பரவுதல்

பலஸ்தினு, சிரியா முதலிய தேசங்களைப் பிற்கால எகிப்தியர் அடிப்படுத்தி எகிப்திய சக்கராதிபத்தியத்தை நிலை நாட்டினர். அடிப் படுத்தப்பட்ட தேசத்தினர் எகிப்தியரின் முறைகளைப் பின்பற்றியதால் எகிப்தியர் கண்டு பிடித்தனவற்றைப்பற்றிய அறிவும் அந்நாடுகளிற் பரவலாயிற்று.

வீழ்ச்சி

ஓர் அரசனின் கீழ் ஒருமித்து, ஐக்கியப்பட்டிருக்கும் காலத்திலே தான் எகிப்து தேசம் பலமும், ஆதிக்கமும் உடைய ஒரு தேசமாய் விளங்கிற்று. பிற்காலத்திலே பல பிரிவுகளும், பல அரசர்களும் தோன்றித் தங்களுக்கிடையில் போர் செய்து கொண்டதனால் எகிப்து தேசம் பலங்குன்றி கி. பி. 670 இல் அசீரியரினால் தோற்கடிக்கப்பட் டது.

பயிற்சி I

1. பின்வரும் வினாக்களுக்கு விடைகள் தருக.

I நதிப்பள்ளத்தாக்குகளிலேயே பழைய நாகரீகங்கள் எழுந்ததற்குரிய காரணங்களைச் சுருக்கமாக ஆராய்க.

II நதிப்பள்ளத்தாக்குகளில் குடியேறின காலங்களில் அம் மனிதர் பின்வரும் எக்கால மனிதராய் இருந்தனர்? (கற்காலம், செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும் புக்காலம்.)

III நைல் நதியின் இரு கரைகளிலும் உள்ள நிலம் எவ்வாறு செழிப்படைந்தது என்பதை விளக்குக.

IV எகிப்தியர் சாதாரணமாக என்ன பொருளில் எழுதினர்?

V எகிப்தியர் ஆரம்ப எழுத்துக்களை எவ்வாறு வழங்கினர்? ஏன் அப்படி வழங்கினர்?

VI தமது அரசரை எவ்வாறு எகிப்தியர் அழைத்தனர்? அரசருக்குக் காட்டிய பெரும் மதிப்புக்குக் காரணம் யாது?

VII எகிப்திய அரசரின் முக்கிய கடமைகள் எவை?

VIII பின்வரும் தலைக்குறிப்புகளின் கீழ் எகிப்தியரின் சமய அபிப்பிராயங்களைத்தருக.

(1) தெய்வங்கள் (2) மரணத்தின் பின் உள்ள சீவியம்.

IX இறந்தவர்களின் பிரேதங்களை எகிப்தியர் பாதுகாத்து வைத்தது ஏன்?

X எவ்வகையான கட்டடங்களுக்கு எகிப்தியர் பெயர் பெற் றவர்?

XI சியொப்ஸ் அரசரின் பிறமிட்டை பின்வரும் தலையங் கங்களின் கீழ் வர்ணிக்க:—

(1) உயரமும் விஸ்தாரமும்
(2) ஒவ்வோர் கற்பாறைகளின் அளவு.
(3) கட்டச் சென்ற காலம்.

XII 'ஸ்பிங்ஸ்' எனும் சிலையை விவரிக்க.

XIII எகிப்தியரின் சீவியத்தைப்பற்றி பின்வரும் தலையங்கங் களின் கீழ் எழுதுக:

(அ) வாசஸ்தலம்
(ஆ) கருவிகளும் ஆயுதங்களும்
(இ) தொழில்கள்

XIV வியாபாரிகள் ஒரு கூட்டத்தினரிடமிருந்து பிற கூட்டத் தினரிடம் எவ்வாறு சென்று வர்த்தகஞ் செய்தனர்?

XV எகிப்தியர் வர்த்தகஞ் செய்துவந்த வேறு இரு தேசங் கள் எவையெனக் கூறி அவற்றுடன் எப்பெருள் களில் வர்த்தகஞ் செய்தனர் என்பதையும் தருக.

2. இடைவெளிகளை நிரப்புக:

(அ) எகிப்தியர் ஒரு வருடத்தை —— மாசங்களாகவும் —— நாட்களாகவும் வருத்தனர்.

(ஆ) —— கலையறிவு எகிப்திய அறிஞர்களாலே ஆரம்பிக்கப் பட்டது.

(இ) மறுதேசங்களை அவர்கள் அடிப்படுத்தியதும் எகிப்திய —— பிறநாடுகளுக்குப் பரவிற்று.


(ஈ) எகிப்து தேசமானது ஓர் —— ஆட்சியின் கீழ் இருக்கு மளவும் பலமும் ஆதிக்கமும் உள்ள ஒரு நாடாய் இருந்து பின்பு பல எகிப்திய அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட போர் களினால் —— குன்றியது.

(உ) கி. பி. 670 இல் எகிப்து —— அடிப்படுத்தப்பட்டது.

II இரண்டு நதிகளுக்கிடையிலுள்ள நாடு

மறுபக்கத்திலுள்ள தேசப்படத்தில் இரு நதிகளைக்காண்பீர். அவை யூபிறட்டிஸ், ரைகிறிஸ் என்கிற நதிகளாம். இவ் விரு நதிகளுக்கு மிடையிலுள்ள நாட்டை மொசப்பத்தேமியா அல்லது பபிலோனியா எனக்கூறுவர். மொசப்பத்தேமியா என்ற சொல் லின் அர்த்தம் இரு நதிகளுக்கிடையிலுள்ள நாடு என்பதே. பபிலோ னியா என்று ஏன் கூறினர் எனின், யூபிறட்டிஸ் நதியோரத்தில்

உள்ள பபிலோன் என்னும் நகரமானது இத்தேசத்தில் தோன்றிய பல நாகரிகங்களுக்கு நடு இடமாக விளங்கினதினாலேயாம். இந்த நதிகளுக்கு வடக்கிலும், கிழக்கிலும் மலைத்தொடர்கள் உண்டு. தெற்கில் அராபிய பாலைவனம் இருக்கின்றது. இரு நதிகளுக்கும் இடையிலுள்ள இந்த நாடு மிகவும் வளம் பொருந்தியது. வட பகுதியிலுள்ள மலைப்பிரதேசத்தினரும், தென் பகுதியிலுள்ள பாலைவனத்தினரும் செழிப்புள்ள இப்பாகத்தை தம்மடிப்படுத்த முயன்றதால் பபிலோனிய நாடானது பலமுறையும் போர்க்களமாய் விளங்கிற்று. இப்பிரிவில் இந்த நாட்டிலே விளங்கிய பல நாகரிகங்களையும், இந்நாட்டைத் தம்மடிப்படுத்திய பல சாதியினரின் வரலாற்றையும் சுருக்கமாக ஆராய்வோம்.



(அ) ''சுமேரியா''

இணைநதிகளுக்கிடையிலுள்ள நாட்டில் முதன்முதல் குடியேறியவர்கள் சுமேரியரே. மலைப்பிரதேசங்களிலிருந்து வந்து செழித்த இச்சமநிலத்தில் இவர்கள் குடியேறினர். இவ்விடத்துக்கு இவர்கள் முதன்முதல் வந்த காலங்களில் சீர்திருத்தமற்றவர்களாய் இருந்து பின்பு பயிர்த்தொழில் செய்யத் தொடங்கி, எகிப்தியர் நாகரிகமடைந்த காலங்களிலேயே இவர்களும் சீர்திருந்திய வாழ்வை நடாத்தத்தொடங்கினர். (இ. மு. 3,000).

சுமேரியருடைய நாகரிகம் எகிப்தியருடைய நாகரிகத்தைப் போன்றது. வேற்றுமைகள் இருப்பின் அவை அவர்களுடைய நாடுகளின் சீதோஷ்ண நிலையையும், நிலத்தன்மையையும் பொறுத்தனவாம்.

எகிப்தியர்களைப் போலவே சுமேரியரும் ஒருவகை எழுத்து முறையையும் கண்டுபிடித்தனர். இதுவும் எகிப்திய எழுத்துக்களின் தொன்மை உடையது போலும். மொசப்பத்தேமியாவில் பப்பிறஸ் என்னும் நெட்டு வளர்வதில்லை. வேறு தகுந்த நெட்டுக்களும் இல்லை. ஆனால் சிறந்த களிமண் ஏராளமாய் உண்டு. ஆனதினால், இந்த மெதுமையான களிமண் தட்டுகளில் கூர் செய்யப்பட்ட சிறு தடிகளினால் எழுதி, அத்தட்டுகளைக் காயவைத்து எழுத்துச் சாதனங்களாக உபயோகித்தனர். இப்படி எழுதப்பட்டதனால் எழுத்துக்கள் ஆப்பு வடிவமுடையன. இவ்வெழுத்துக்களை ஆப்பெழுத்துக்கள் என்று கூறுவர். காயவைத்த களிமண்தட்டுகளை நெருப்பிலே சுட்டு இறுகச் செய்வர். இப்படி செய்ததினாற்றான் அத்தட்டுகளில் அநேகம் இன்று கிடைக்கப் பெற்றோம்..

அவர்கள் கட்டிய வீடுகளின் தன்மை அவர்கள் வசித்த நாட்டின் இயற்கையில் பெரிதும் தங்கியிருந்தது. எகிப்து தேசத்தில் உள்ள பெரிய வீடுகள் யாவும் கல்லாற் கட்டப்பட்டன. ஆனால் மொசப்பத்தேமியாவில் பாரிய கற்களைக்காண்பது அரிது. சிறந்த களிமண்ணையே விரும்பியளவு எடுத்துக் கொள்ளலாம். ஆனதினால் இந்நாட்டிலுள்ளவர்கள் தங்கள் மாளிகைகளையும், கோவில்களையும் களிமண் கட்டிகளினாற் கட்டினர்.



சுமேரியரின் எழுத்துக்கள்

மேற்கூறப்பட்ட சில வேற்றுமைகளைத்தவிர்த்தால் சுமேரியரின் நாகரிகமும் எகிப்தியரின் நாகரிகமும் ஒருவகைப்பட்டன வென்றே கூறலாம். சுமேரியரிற் பெரும்பாலர் களிமண் கட்டிகளினாற் கட்டப்பட்ட குடிசைகளில் வசித்து, பயிர்த்தொழில் செய்து வந்தனர். இவர்கள் நடாத்தி வந்த வர்த்தகத்தை எகிப்தியர் நடாத்திய வர்த்தகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சுமேரியரின் வர்த்தகம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. எகிப்தியர் வருடத்தை மாசங்களாகவும், நாட்களாகவும் பிரித்து ஒரு கால அட்டவணை வகுத்தனர். சுமேரியர் ஒரு சூரிய கடிகாரத்தைத் தயாரித்தனர். சூரிய வெளிச்சத்தைக் காரணமாகக்கொண்டு வகுக்

கப்பட்ட ஒரு நாளை மேலும் மணித்தியாலம், நிமிஷம், வினாடியென வகுத்தனர். இம்முறையை இன்றும் நாம் கடைப்பிடிக்கிறோம். ஆகையினால் சுமேரியர் உலகுக்கு சூரிய கடிகாரத்தையும், ஒரு நாளை மணித்தியாலம், நிமிஷம், வினாடியென வகுக்கும் முறையையும் கொடுத்ததற்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

சுமேரியரின் அரசியலானது எகிப்தியரின் அரசியல் போலன்று. ஒரு அரசனின் ஆணையில் முழு எகிப்து தேசமும் ஆளப்பட்டது. ஆனால் சுமேரியரின் முழு நாடும் ஒரு தலைவனினால் ஆளப்பட்டதில்லை. அவர்கள் ஆதியில் குடியேறிய சமவெளியில் உள்ள பிரதான இடங்கள் சுயாதீனமுடையனவும், பிறிது பிறிதான ஆட்சியுடையளவுமான இடங்களாக விளங்கின. இவ்வாறு சுமேரியர் ஒற்றுமையின்றி வாழ்ந்து வந்ததினால், பலங்குன்றியவராகி, பாலைவனத்திலிருந்து வந்த நாடோடிகளான "சிமைட்ஸ்" என்னும் சாதியினரால் தோற்கடிக்கப்பட்டனர்.

கி. மு. 2,100 ஆண்டு அளவில் பபிலோன் நகரில், இந்நாட்டில் மிகப்பெயர் பெற்ற அரசர்களில் ஒருவரான ஹமுருபி என்பவர் வாழ்ந்தார். அவரிடம் பலமுள்ள ஒரு சேனை இருந்ததினால் பபிலோனிய தேசம் முழுவதையும் விரைவில் தம்மடிப்படுத்தினர். எனினும் ஹமுருபியின் பெயர் அவர் போர் முனையில் அடைந்த வெற்றிகளினால் மாத்திரமன்றி, விசேஷமாய் அவர் இயற்றிய சட்டங்களினாலேயே நிலை நாட்டப்பெற்றது. இச்சட்டங்கள் ஒரு உயர்ந்த கற்றூணில் வரையப்பட்டிருந்தன. அக்கற்றூணை நாம் இன்றும் காணலாம்.

ஹமுருபியின் மரணத்துக்குப்பின் கி. மு. 1,800 இல் 'கசயிற்ஸ்' என அழைக்கப்பட்ட ஒரு முரட்டுச் சாதியினர் பபிலோனியா தேசத்தின்மேல் படை எடுத்தனர். இவர் ரைகிறிஸ் நதி ஓரத்திலுள்ள மலைப்பிரதேசத்தினர். இதே காலத்திலேயே 'ஹைகொஸ்' என்னும் பிறிதோர் காட்டு மிராண்டிச் சாதியினர் எகிப்தைத் தாக்கினர். இவ்விரு சாதியினரும் குதிரைகளைப் பழக்கி அவற்றை உபயோகிக்க அறிந்திருந்தனர். இவ்வறிவு இப்போது எகிப்தியருக்கும் பபிலோனியோருக்கு மிடையிலும் பரவலாயிற்று. இவ்வாறு குதிரைகள் மனிதருக்குப்பயன்படலாயின. பிரயாணங்களை முன்னிலும் இலகுவாகச் செய்யவும், செய்திகளை விரைவாக அனுப்பவும், சேனைகள் தீவிர பயணஞ் செய்யவும் குதிரைகள் பயன்படலாயின.

பயிற்சி ||

I இடைவெளிகளை நிரப்புக:

(அ) ரைகிறிஸ்-யூபிறெட்டிஸ் நதிகள் — — குடாவுள் விழுகின்றன.

(ஆ) ரைகிறிஸ்-யூபிறெட்டிஸ் நதிகளின் வடக்கே — — உள்ளன.

(இ) இவ்விரு நதிகளுக்குத் தெற்கில் — — பாலைவனந்திரம் உண்டு.

(ஈ) மொசப்பத்தேமியாவில் முதன் முதல் குடியேறியவர்கள் — —

(உ) வடக்கிலும் கிழக்கிலும் உள்ள — — வசித்தவர்களும் தெற்கில் உள்ள — — வசித்த்வர்களும் மொசப்பத்தேமியாவை அடிப்படுத்த விரும்பினர்.

(ஊ) இந்த நாடு — — இருந்ததினால் இதைப்பெற பிறர் விரும்பினர்.

(எ) இணைநதிகளுக்கிடையிலுள்ள இந்த நாடு — — அல்லது — — என்று கூறப்பட்டது.

II விடைகள்தருக:

(1) இந்நாடு மொசப்பத்தேமியா என்று கூறப்பட்டதேன்? ஏன் பபிலோனியா என்று கூறப்பட்டது?

(2) சுமேரியர் என்ன பொருளில் எழுதினர்? எகிப்தியர்போல பப்பிறஸ் என்னும் நெட்டியை உபயோகியாதது ஏன்?

(3) சுமேரியரின் எழுத்தை எவ்வாறு கூறுவர்?

(4) கட்டடங்களை எழுப்ப (அ) எகிப்தியர் (ஆ) சுமேரியர், பொதுவாக உபயோகித்த பொருட்கள் எவை?

(5) எகிப்தியர் கட்டடங்கள் எழுப்ப உபயோகித்த பொருட்கள் அல்லாது சுமேரியர் பிறபொருட்கள் உபயோகித்ததன் காரணம் யாது?

(6) ஒரு நாளின் மணித்தியாலம் எதுவென அறியச் சுமேரியர் உபயோகித்த கருவியாது?

(7) ஒரு நாளை எப்பிரிவுகளாக எகிப்தியர் பிரித்தனர்?

(8) சுமேரியர் பொதுவாக எவ்வகையான வீடுகளில் வசித்தனர்?

(9) சுமேரியரின் பிரதான தொழில் யாது?

(10) சுமேரியரை அடிப்படுத்திய பாலைவனச் சாதியினர் யார்?

(11) ஹமுருபி எதற்குப் பெயர் பெற்றவர்?

(12) (அ) எகிப்தியரை (ஆ) சுமேரியரை, கி. மு. 1,800இல் வென்ற முரட்டுச் சாதியினர் யார்?

(13) குதிரைகள் எவ்வாறு அக்காலத்தவருக்கு உபயோகப்பட்டன என்று விளக்குக.

III பின்வரும் தலையங்கங்களின் கீழ் சுமேரியரின் வாழ்க்கை வரலாற்றைத்தருக:

(அ) அவர்கள் சீவித்த இரு நதிகளுக்கிடையிலுள்ள தேசம்.

(ஆ) அவர்கள் எழுத்துக்கள்.

(இ) அவர்கள் வசித்த இல்லங்கள்.

(ஈ) அவர்களின் பிரதான தொழில்.

(உ) அவர்களுடைய அரசாட்சியில் இருந்த இழுக்கு.

(ஊ) அவர்களுடைய கடிகாரம்.

(எ) நாளைச் சிறு பிரிவுகளாகப் பிரித்த முறை.

(ஏ) யாரால் அடிப்படுத்தப்பட்டனர்.

III இரும்புக்காலத் தொடக்கம்.

மொசப்பத்தேமியாவைப் பற்றிய கதையைச் சற்று ஒதுக்கி ஆசிய துருக்கியின் மலைப்பிரதேசங்களில் ஒரு பேரரசை நிலைநாட்டிய ஒரு சாதியினரின் வரலாற்றைச் சிறிது கவனிப்போம். இவர்களுடைய நாடு மொசப்பத்தேமியாவுக்கு வடமேற்கிலுள்ளது. இவர்களைத்தான் 'ஹித்தைற்ஸ்' என்பர். இவர்களுடைய சக்கிராதிபத்தியம் எகிப்து, பபிலோனியா முதலிய தேசங்களின் எல்லைகள் வரையும் எட்டியது. தற்போது அவர்களுடைய இராச்சியத்தைப்பற்றி நாம் அதிகம் அறியோம். ஆராய்ச்சியாளர் சிறிது காலத்துக்கு முன்பே அவர்களுடைய எழுத்துக்களைக்கண்டு பிடித்தனராதலின் சிக்கிரம் அவர்களைப் பற்றிய வேறு பல விபரங்களை அறிவோமென நம்மலாம். நாம் தற்போது அவர்களைப்பற்றி அறிந்தவற்றுள் மிகப்பிரதானமானது அவர்கள் இரும்பின் உபயோகத்தை அறிந்தனரென்பதே. ஆதி எகிப்தியரும், மொசப்பத்தேமியாவில் ஒருவர் பின் ஒருவராய் ஆட்சிபுரிந்த பல சாதியினரும் செம்பு, வெண்கலம் ஆகிய இரு உலோகங்களினாற் செய்யப்பட்ட கருவிகளையும் ஆயுதங்களையும் உபயோகித்தனர் எனக் கண்டோம். ஆகவே அவர்கள் செம்பு, வெண்கலக்காலங்களுக்குரியவர். ஹித்தைற்ஸ் இரும்பைக் கண்டு பிடித்ததிலிருந்து உலகமானது இரும்புக்கால எல்லையுட் பிரவேசித்தது. பிறதேசங்கள் இவர்களிடமிருந்து இரும்பைப்பற்றி அறிந்தனர். இவ்வாறு உலகமானது இரும்பின் உபயோகத்தை நாளடைவில் அறிந்து கொண்டது.

இவர்கள் ஆசிய துருக்கியில் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் மொசப்பத்தேமியாவில் ஆண்டுவந்த சாதியினர் இரும்பைப்பற்றி இவர்களிடம் அறிந்து தமது நாட்டில் அவ்வறிவைப்பரப்பியது மன்றி தாம் அடிப்படுத்திய நாடுகளுக்கும் அதைக்கொண்டு சென்றனர்.

(ஆ) அசீரியர்

இக்காலத்திலே அசிரியா என வழங்கப்படும் நாட்டிலே கி. மு. 3,000 வருட அளவிலேயே ரைகிறிஸ் நதி உற்பத்தியாகும் பிரதேசத்தில் ஒரு பாலைவனச் சாதியினர் குடியேறினர். தேச படத்தைப் பார்த்தால் அசிரியா தேசம் பபிலோனியாவுக்கும் ஹித்தைற்ஸ் என்ற சாதியினரின் பேரரசுக்கும் எவ்வளவு சமீபத்தில் இருக்கிறதென்று விளங்கிக் கொள்ளலாம். பபிலோனியரிடமிருந்து அசிரியர் சில பிரதான விஷயங்களைக் கற்றுக்கொண்டனர். எழுதும் முறையையும், நாட்டை ஆட்சிபுரியும் வகையையும் அவர்களிடம் இருந்தே அறிந்தனர். மேலும், குதிரை, தேர் முதலியனவற்றின் உபயோகத்தைப் பற்றியும் பபிலோனியரிடமிருந்தே கற்றுக்கொண்டனர் போலும். இரும்பைப்பற்றி அசிரியர் கற்றுக்கொண்டது ஹித்தைற்ஸ் என்பவரிடமிருந்தே. அசிரியர் போரிற் பிரீதி உடையவர். இரும்பிலிருந்து சிறந்த போராயுதங்கள் செய்து கொள்ளலாம் என்று உணர்ந்து கொண்டனர். முதன் முதல் போர்முனையில் இரும்பாயுதம் உபயோகித்தவர் அசிரியரே. அவர்களைச்சூழ இருந்தவர்கள் உபயோகித்து வந்த செம்பு, வெண்கல ஆயுதங்களிலும் பல முள்ளன வாய் விளங்கினதால் அவர்கள் பல தேசங்களை அடிப்படுத்தி ஒரு மாபேரரசை நிறுவினர். கி. மு. 9ம் நூற்றுண்டில் சீரியாவையும், ஆபிரிக்காவையும் அடிப்படுத்தியபின், ஆர்மீனியா, மீடியா எனும் தேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர். கி. மு. 750இல் பபிலேனியாவையும், கி. மு. 670இல் எகிப்தையும் வென்று முன்னெரு போதும் உலகம் கண்டிராத பாரிய பேரரசை நிறுவினர்.

அசிரியர் பபிலோனியாவில் இருந்த பழைய நகரங்கள் ஒன்றையும் தமது தலை நகராக்கிக் கொள்ளவில்லை நினிவே என்கிற நகரையே தமது தலை நகரமாக்கினர். அவர்களுடைய மிகப்பெயர் பெற்ற அரசன் செனசெரிப் என்பவரே. இவரே பலஸ்தினுவையும், பபிலோனியாவையும் அடிப்படுத்தியவர். இவரே நினிவேயில் பிரமிப்புக்குரிய மாளிகைகளையும் கோயில்களையும் கட்டியவர். இக்கட்டடங்களின் சுவர்களில் அசிரியர் செய்த யுத்தங்களிற் சிறந்த சம்பவங்கள் சித்திரிக்கப்பட்டன.

அசிரியர் அநேக தேசங்களை வென்று ஒரு மா பேரரசை நிலைநாட்டினர். அடிப்படுத்தப்பட்ட மக்களைக் கொடுந்தன்மையாக ஆண்டு வந்ததினால் அவர்களால் வெறுக்கப்பட்டனர். ஆனதினால் அம்மக்களை ஆண்டுவருவது அவர்களுக்குச் சுலபமாய் இருக்கவில்லை. இதுவுமன்றி, அநேக யுத்தங்களில் ஈடுபட்டதினால் அசிரியரின் பலமும் குறைந்து போயிற்று. பலங்குறைந்த நிலையில் இருந்தபோது பாலைவனத்திலிருந்து வந்த பிறிதோர் சாதியினரான சால்டியரால் தோற்கடிக்கப்பட்டனர். அவர்கள் அடிப்படுத்திக் கொடுமையுடன்

ஆண்டுவந்த தேசத்தவரும் அவர்களுக் கெதிராய்ப் போர் செய்யத் தொடங்கினர். இவ்வாறு இம்மக்களால் உள்ளிருந்தும், சால்டிய ரால் புறத்திருந்தும் தாக்கப்பட்டதால் அசீரியாின் ஆட்சி கி. மு. 606ஆம் ஆண்டில் குலைந்துவிட, சால்டியர் பபிலோனில் குடி யேறினர்.

சால்டியர் இப்போது பபிலோனில் தமது ஆதிக்கத்தை நிறுவி னர். நபுக்கதனெசார் என்பவரே அவர்களுடைய பெயர் பெற்ற அரசர். அவர் ஜெருசலேம் நகரை வென்று, அதை அழித்து, அங்குள்ள அநேக யூதரைக் கைதிகளாக்கி பபிலோனுக்குக் கொண்டு சென்றார்.

நபுக்கதனெசாரின் மனைவியருள் ஒருத்தி பார்சிக தேசத்தவள். பார்சிய தேசம் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்துள்ளது. அதனுடன் பபிலோனிய தேசத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், பபிலோ னியா தட்டை நாடு என்றே கூறவேண்டும். நபுக்கதனெசாரின் பார்சிக மனைவி மலைப்பிரதேசங்களில் மிக விருப்பமுள்ள வளானதால், செய் குன்றுகளையும், செயற்கை மலைகளையும், இவ்வர சன் தனது நாட்டில் கட்டுவித்து அவற்றின் சாரல்களில் நிழல் கொடுக்கும் மரங்களையும் வளர்ப்பித்தான். இவைகளையே பபிலோ னியாவின் ''தொங்கு சோலைகள்'' என கூறுவர்.

சால்டியரின் ஆதிக்கம் அநேக வருடகாலத்துக்கு நீடித்திருக் கவில்லை. கி. பி. 539இல் பாரசிகரால் அவர்கள் தோற்கடிக்கப்பட் டனர்.

பயிற்சி III

1. இடை வெளிகளை நிரப்புக:

   (அ) இரும்பு ஆயுதங்களை உலகில் முதன் முதல் உபயோகித் தவர — — .

   (ஆ) அசீரியர் — — நதி உற்பத்தியாகும் பிரதேசங்களிலி ருந்து வந்த — — (பாலைவனம் அல்லது மலை) சாதியர்.

   (இ) அசீரியர் — — உபயோகத்தை ஹித்தைற்ஸ் எனும் சாதியினரிடமிருந்து கற்றனர்.

   (ஈ) குதிரையினதும் தேரினதும் உபயோகத்தை — — இருந்து கற்றனர்.

   (உ) இரும்பாயுதங்களை — — யில் முதன் முதல் உபயோ கித்தவர் அசீரியரே.

2. விடைகள்தருக:

   (அ) ஒரு தேசப்படத்தில் அசீரியர் அடிப்படுத்திய நாடுகளைக் குறிக்க.

   (ஆ) அடிப்படுத்தப்பட்ட மக்கள் அசீரியருக்கு எதிராக எழுந் தது ஏன்?

   (இ) அசீரியரின் பலம் குறைந்ததன் காரணத்தை விளக்குக.

   (ஈ) அசீரியரை எதிர்த்து வென்ற பாலைவனச் சாதியினரின் தொகையையும் அவர்களின் பெயர்களையுந் தருக.

   (உ) அசீரியரைத் தோற்கடிக்க அவர்களால் அடிப்படுத்தப் பட்ட சாதியினர் யாது செய்தனர்?

   (ஊ) சால்டியரின் மிகப் பெயர்பெற்ற அரசன் யார்?

   (எ) அசீரியரில் மிகப் பிரசித்திவாய்ந்த அரசன் தனது பார்சிக தேச மனைவியைப் பிரியப்படுத்தச் செய்த பெயர் பெற்ற செயல் யாது?

   (ஏ) அவ்வரசன் யாரை வென்று, கைதிகளாக்கி பபிலோனுக் குக் கொண்டு சென்றான்?

   (ஐ) சால்டியர் யாரால் தோற்கடிக்கப்பட்டனர்?

   (ஒ) சால்டியர் தோற்கடிக்கப்பட்ட வருடம் யாது?

(இ) எபிரேயர் அல்லது யூதர்

இணைநதிகளுக்கிடையிலுள்ள நாட்டினது வரலாற்றைத் திரும் பவும் சற்று ஒதுக்கி, நபுக்கதனெசரால் கைது செய்யப்பட்டு, ஜெருச லேமுக்குக் கொண்டு செல்லப்பட்ட யூத சாதியினரின் வரலாற்றைச் சிறிது ஆராய்வோம்.

யூதரை எபிரேயர் என்றுங் கூறுவர். இவர் அராபிய தேசத் திலிருந்து வந்தனர். இவர்களுடைய ஆதித்தலைவரில் மிகச் சிறந் தவர் ஆபிரகாம் என்பவரே. இவர் கி. மு. சுமார் 2,000 வருட காலத்தில் வசித்தனர். ஆட்டு மந்தைகளை மேய்த்துக் கொண்டு, நோலாற் செய்த கூடார வீடுகளில் வசித்து, புலம் பெயர்ந்து திரிந்த ஒரு கூட்டத்துக்குத் தலைவராய் ஆபிரகாம் விளங்கினர். பழைய ஏற்பாட்டிலிருந்து ஆபிரகாம் இப்படிப் புலம் பெயர்ந்து திரிந்த காலத்திலே தமது கூட்டத்தினரைக் கொண்டு கானான் (இப்போது பலஸ்தீன) தேசத்துக்குச் செல்லும்படியாகக் கடவுளாலே ஏவப்பட்டாரென அறிகிறோம். அவ்விடம் செழித்த தரையாய் இருந்ததால் யூதர் மிகவும் சந்தோஷமாய்க் காலங்கழித்தனர்.

சிறிது காலத்துக்குப்பின் கானான் தேசத்தில் கொடிய ஒரு பஞ்சம் தலைகாட்டியது. எகிப்து தேசத்தில் போதிய உணவு உண்

டெனக் கேள்விப்பட்டு யூத சாதியினர் அங்கு சென்றனர். தொடக்கத் தில் எகிப்தில் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தனரெனினும் பின்பு எகிப்தியரால் அடிமைகளாக்கப்பட்டதனால் யூத சாதியினர் அங்கே பெரிதும் கஷ்டத்துக்கு உள்ளாகினர்.

கி. பி. சுமார் 1,200ம் ஆண்டளவில் யூதர்களிடையில் மோசேஸ் எனும் பெயர் கொண்ட ஒரு தலைவர் தோன்றினர். யூதரை அடி மைத்தனத்திலிருந்து மீட்டு வாக்குப்பண்ணிய நாடாகிய கானான் தேசத்துக்கு அழைத்துச் செல்ல மோசேஸைக் கடவுள் தெரிந் தெடுத்தாரென பழைய ஏற்பாடு கூறுகின்றது. எகிப்து அரசனகிய பேரோ யூதரை நாட்டுக்கு வெளியே செல்லவிடாது முதலில் தடுத்து நின்றுனெனினும் இறுதியில் மோசேஸ் யூத சாதியினரைக் கொண்டு வெளியேற அரசன் அனுமதித்தான்.

எகிப்திலிருந்து பலஸ்தீனுவுக்குப் போகும்வழி வனந்தரப் பிரதேசத்துக்கு ஊடாகச் செல்கின்றது. யூதசாதி யினர் இவ்வழி யாற் போகும்போது, நீரும் உணவுமின்றிப் பெரிதும் வருந்தினர். வருத்தத்தின் கடூரத்தினால் எகிப்துக்குத் திரும்பிவிடவும் எண் ணினர். ஆனால் கடவுளிலே மோசேஸுக்குள்ள விசுவாசமே அவர்கள் கானான் தேசத்தை அடையுமளவும் அனுபவித்த வருத்தங்களைச் சகிக்கச் செய்தது. எனினும் எபிரேயர் கானான் தேசத்தை அடையு முன்னமே மோசேஸ் இறந்து விட்டார்.

எபிரேயர் வனந்தரத்தினூடாகப் பிரயாணஞ் செய்யும்போது, மோசேஸ் செபஞ் செய்வதற்காக ஓர் மலைக்குச் செல்வது வழக்கமாய் இருந்தது. இப்படி அவர் மலைக்குச் சென்ற ஒரு தருணத்திலேயே தற்பொழுது சகல கிறிஸ்தவர்களும் அனுசரிக்கும் பத்துக் கற்பனைகள் கடவுளால் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்பர்.

எபிரேயர் கானான் தேசத்துட் பிரவேசித்தபோது அங்கு வசித்த சாதியினருடன் சண்டை செய்ய வேண்டியிருந்தது. நாளடைவில் அவர்களை வென்று அங்கே குடியேறினர். அப்போது புலம் பெயரும் வாழ்க்கையும் அவர்களுக்கு முடிவடைந்தது. தோலாற் செய்த கூடார இல்லங்களைவிட்டு, கல்லால், நிலையுள்ள வாசஸ்தலங்களைக் கட்டிக் கொண்டனர்.

கானானில் குடியேறியதும், எபிரேயர் தம்மை ஆட்சிபுரிய ஓர் அரசனையுந் தெரிந்தெடுத்தனர். கல்லாற் கட்டி எழுப்பப்பட்ட மாளி கையில் முதன் முதல் வசித்த எபிரேய மன்னர் தாவீது என்பவரே. சலமோன் அரசன் தனக்கு ஒரு பெரிய மாளிகை கட்டியது மன்றி தேவனுக்கு உகந்த வாசஸ்தலமாக ஒரு பாரிய கோயிலும் கட்டி எழுப்பினர். சலமோன் இறந்து சிறிது காலத்துள் கி. மு. 701 இல் எபிரேயர் அசிரியராற் தோற்கடிக்கப்பட்டு பின்பு பபிலோனிய

அரசனகிய நபுக்கதனெசராலும் அடிப்படுத்தப்பட்டனர். இவ்வரசன் ஜெருசலேம் நகரை அழித்து அநேக யூதரைக் கைதுசெய்து பபிலோ னுக்குக் கொண்டு சென்றான். அங்கே யூதர் கி. பி. 529-ம் வருட மளவும் கைதிகளாக வசித்தனர். அவ்வருடத்திலே பார்சீக மன்னனு கிய சைறஸ் என்பவன் பபிலோனியாவை வென்றபோது யூதர்களை சிறையிலிருந்து நீக்கி தங்கள் நாடு செல்லப் பணித்தனன்.

எபிரேயர் தங்கள் நாட்டுக்குத் திரும்பியதும் தங்களுடைய வர லாற்றையும், தங்களுடைய மதப்போதனைகளையும் எழுதிவைத்தனர். இவை எல்லாவற்றையும் தொகுத்து பழைய ஏற்பாடு என்னும் திவ்விய நூல் எழுதப்பட்டது. பழைய ஏற்பாடானது கிறீஸ்தவரின் விவிலிய நூலின் முதற் பாகமாகும்.

எகிப்தியரைப் போலவோ அன்றேல் அசிரியரைப் போலவோ யூதசாதியினர் பலமும் ஆதிக்கமும் படைத்தவர் அல்லர். எனினும் அவர்களுடைய மதத்தலைவர்களின் போதனைகள் இன்று உலகத்தின் எத்திசையிலும் பரவி பல கோடிக்கணக்கான சனங்களின் வாழ்க்கை யைச் சீர்ப்படுத்துகின்றன.

எபிரேயரின் மதக் கோட்பாடுகள்.

ஆதியில் நாகரீகம் தோன்றிய தேசங்களில் மனிதர் பல கடவுள் வழிபாடு உடையவராய் விளங்கினர். ஒவ்வொரு தேசமும் வெவ்வேறு கடவுளை வழிபட்டு வந்தது. ஆனால் யூத சாதியினரோ ஒரே தெய்வ வழிபாடுடையவராய் இருந்தனர். தாம் வழிபட்டு வந்த கடவுளை யூதசாதியினரின் கடவுளே என்று ஆதியில் எண்ணி வந்த போதிலும் விரைவில் அக்கடவுளே யூத சாதிக்கும் பிறசாதிகளுக்கும் உள்ள ஒரே கடவுளெனக் கொண்டனர்.

ஆதியில் வசித்தவருட் பெரும்பாலானவர் தங்கள் தெய்வங்க ளுக்குப் பயந்து ஒழுகி வந்தனர். அத்தெய்வங்கள் தங்களுக்குக் குறை செய்தவர்களைத் தண்டிப்பதே தொழிலுடையனவென எண் ணினர். யூத சாதியினரும் ஆதியில் இப்படியான மனப்பான்மை உடையவராய் இருந்தபோதிலும் நாளடைவில் கடவுள் நீதியுடையவ ரென்றும் சகல மனிதருக்கும் உரிய ஓர் அன்புள்ள பிதாவென்றும் எண்ணி வரலாயினர். கடவுள் ஒருவரேயென்பதும், அவர் எல் லோருக்கும் அன்புள்ள பிதா என்பதும் எபிரேயர் உலகத்துக்கு அளித்த கொடைகளாகும்.

உலகத்தின் மதக்கோட்பாடுகளின் ஆக்கத்துக்கு யூதசாதியினர் அளித்த வேறு ஒரு கொடை பத்துக் கட்டளைகளாம். இந்தக் கட்ட ளைகள் முன்னுள்ள பிறமத கட்டளைகளிலும் பார்க்க உயர்ந்த ஒழுக்க நிலையை இலக்காகக் கொண்டுள.

யூத சாதியினர் கடவுளைப் பற்றியும், பத்துக் கட்டளைகளைப்பற்றியும் கொண்டுள்ள அபிப்பிராயம் பல ஆயிரக்கணக்கான வருடங்களாக நிலைநின்று பல கோடி மனிதரின் வாழ்வைச் சீர்ப்படுத்தி வந்திருக்கின்றது.



பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, பெயர் பெற்ற மத ஆசிரியரான யேசுக் கிறிஸ்து எபிரேயரிடையில் அவதரித்து யூத சாதியனருடைய மதக் கோட்பாடுகளைத் திருத்தி அமைத்து கிறிஸ்து சமயத்தை ஆரம்பித்து வைத்தார்.

பயிற்சி IV

I இடைவெளிகளை நிரப்புக:

(அ) எபிரேயர் — — இருந்து வந்தனர்.

(ஆ) எபிரேயர் — — இல்லங்களிலே வசிக்கும் நாடோடி மனிதர்.

(இ) கானான் தேசத்திலே பஞ்சம் உண்டாக, அவர்கள் — — தேசத்துக்குச் சென்றபோது அங்கே யூத சாதியரை (இநேதியர்களாக, பகைவர்களாக, அடிமைகளாக) — — நடத்தினர்கள்.

(ஈ) பழைய ஏற்பாட்டில் கடவுள் எகிப்தியரை — — தேசத்துக்குக் கூட்டிச் செல்லுகிறதற்கு — — தெரிந்தெடுத்தாரெனக் கூறப்பட்டிருக்கிறது.

(உ) கானான் தேசத்தில் யூத சாதியினர் இடம்விட்டு இடம் பெயர்தலைவிட்டு — — சீவியத்தை நடாத்தத் தொடங்கினர்.

(ஊ) — — ஜெருசலேம் நகரை அழித்து யூத சாதியினரைக் கைதுசெய்து கொண்டுசென்றனர்.

(எ) பார்சிக மன்னன் — — என்பவர் பபிலோனியாவைக் கைப்பற்றியபோது எபிரேயரை விடுதலை செய்து அவர்களுடைய நாட்டுக்குச் செல்ல விட்டனன்.

(ஏ) எபிரேயருடைய வரலாறும் போதனைகளும் அடங்கிய நூல் — — என வழங்கப்படும்.

(ஐ) எபிரேயர் உலக மதக் கோட்பாட்டுச் செல்வத்துக்கு இரு கொடைகள் அளித்தனர். அவை (1) முதலாவது — — பற்றி அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயம். (2) இரண்டாவது — — கட்டளைகள்.

(ஒ) — — எபிரேயரிடையில் ஒரு பெரும் மத ஆசிரியராக அவதரித்தார்.

II விடைகள் தருக:

(அ) எபிரேயருடைய ஆதி வரலாற்றைப்பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் எழுதுக:
(1) இல்லம் (2) தொழில் (3) புலம் பெயரும் வாழ்க்கை அல்லது நிலையுள்ள வாழ்க்கை.

(ஆ) யூத சாதியினர் ஏன் எகிப்துக்குச் சென்றனர்? அங்கே எவ்வாறு காலங்கழித்தனர்?

(இ) யூத சாதியினரின் புகழ் பெற்ற அரசர்களின் பெயர்கள் மூன்று தருக.

(ஈ) இடைவெளிகளை நிரப்பி, எபிரேயர் கடவுளைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்தை முன்னிருந்த மதத்தினருடைய அபிப்பிராயத்துடன் ஒப்பிடுக:
(1) ஆதியிலுள்ளவர் — — கடவுள் வழிபாடு உடையவர். ஆனால் யூத சாதியினர் — — கடவுள் வழிபாடு உள்ளவர். (பல, இரு, ஒன்று).
(2) ஆதியிலுள்ளவர் ஒவ்வொரு தேசத்தவருக்கும் ஒவ்வொரு கடவுள் உண்டென்று விசுவாசித்தனர். ஆனால் யூத சாதியினரோ — — தேசத்தவருக்கும் ஒரே கடவுளே உண்டு எனும் கொள்கை உடையவர்.
(3) ஆதிகாலத்தவர் பிழைபோகும் மனிதரைக் கடவுள் — — என்று நம்பியிருந்தனர். ஆனால் யூதசாதியினரோ கடவுள் — — பிதாவெனும் கொள்கை கொண்டவர்.

(உ) எபிரேயர் உலகமத ஆக்கத்துக்கு அளித்துள்ள வேறு கொடைகள் எவை?

(ஈ) பார்சியர்

கஸ்பியன் கடலுக்கும் பார்சிகக் குடாவுக்குமிடையில் மலைப்பிர தேசமாகிய ஒரு பீடபூமி உண்டு. அதன் பெயர் ஈரான். இதுதான் பழையகாலத்திலே பார்சிகம் என்று வழங்கப்பட்டது. அதற்கு அண் மையில் மீடியா என்ற ஓர் இராச்சியம் இருந்தது. அது அடிக்கடி அசிரியரால் அடிப்படுத்தப்பட்டு வந்தது. கி. மு. ஏழாம் நூற்றாண் டில் மீடியா தேசத்தவர் சிதியரென்பவருடனும் பபிலோனியருடனுஞ் சேர்ந்து அசிரியரின் தலைநகராகிய நினிவேயை அழித்தனர்.

சுமார் 50 வருடங்களுக்குப்பின் பார்சிக தேசத் தரசனுகிய சைறஸ் என்பவனுல் மீடியா தேசத்தவர் தோற்கடிக்கப்பட்டனர். அப்பக்கத் திலே இருந்த தேசங்கள் சற்று முன்புதான் அசிரியருடைய ஆட்சியி லிருந்து விடுதலை பெற்றிருந்தன. இத்தேசங்கள், பார்சிகம் தலை யெடுத்து வருவதைக்கண்டு திகிலடைந்து, பார்சிகர் தங்கள் மேல் படையெடுப்பாரென எண்ணி, அத்தேச அரசனுகிய சைறசுக்கு எதிராக ஒன்றுசேர ஆலோசித்தன. இப்படியாக ஆலோசனைகள் நடந்து வரும் பொழுதே சைறஸ் அத்தேசங்களிற் சிலவற்றை அடிப்படுத்தி லீடியா தேசத்தின் மேற் படையெடுத்தான். அப்பொழுது சைறஸ் அரசனின் பேரரசு பார்சிகம் தொடக்கம் லீடியா வரைக்கும் உள்ள தேசங்களைக் கொண்டிருந்தது. பின்பு, சைறஸ், பபிலோனியாவி லுள்ள சால்டியரையும் வென்றான். அவனுடைய மகனுகிய கம்பிசஸ் என்பவன் எகிப்து தேசத்தையும் அடிப்படுத்தினன். ஆதலால் அவனுடைய காலத்தில் பார்சிக சக்கிராதிபத்தியம் இந்தியாவின் எல்லையிலிருந்து கஸ்பியன் கடல், கருங்கடல், மத்தியதரைக் கடல் வரையுமுள்ள பல பிரதேசங்களையும் எகிப்து தேசத்தையும் அடக்கி விளங்கியது. முன்னிருந்த அசிரிய பேரரசிலும் இது பெரியது.

சைறஸ், நீதியும் புத்தியுமுள்ள ஓர் அரசன். அசிரிய சக்கரவர்த் திகளைப்போல கொடூர குணமுடையவனல்லன். அடிப்படுத்தப்பட்ட மக்கள் தத்தம் மதங்களையும் பழக்க வழக்கங்களையும் அனுசரிப்பதை ஆதரித்தான். தனது சக்கிராதிபத்தியம் செல்வம் வாய்ந்ததாய் இருக்கவேண்டு மென்று விரும்பி, வர்த்தக விருத்திக்கு ஆகவேண் டியனவற்றைச் செய்தான். நகரங்களை ஒன்றுடனென்று இணைக்க வீதிகளைத் திறந்தான். ஓர் உலோக நாணய முறையையும் நிலை நாட் டினன். வீதிகள் திறக்கப்பட்டதால் வியாபாரிகள் ஓரிடத்திலிருந்து மறு இடத்துக்குத் தங்கள் பொருட்களுடன் பிரயாணஞ் செய்யக் கூடியதாய் இருந்தது. நாணயமுறை, விற்பதையும் வாங்குவதையும் அது சுலபமாக்கிற்று.

நாணயமுறை நடைமுறைக்கு வருவதற்கு முன், வியாபாரம் எவ்வாறு நடந்து வந்த தென்பதைச் சற்று கவனிப்போம். பழைய காலத் திலே ஒரு பொருளைக்கொடுத்து வேறு ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும் பண் டமாற்று முறை நிலவிவந்தது. அரிசி தேவைப்படும் வேடனொருவன் அதைப் பெற்றுக்கொள்வதற்கு ஓர் அளவான மாமிசத்துண்டையோ அல் லது தான் வேட்டையாடிய மிருகத் தின் தேவைப்படும் ஒரு பொருளையோ கொடுத்து பண்ட மாற்றுச்செய்வான். இது சுலபமான ஒரு முறையன்று. அரிசி தேவைப்படும் வேடன், யாரிடம் தேவைக்கு மேல்மிகுதியான அரிசி இருக்கிறதென்று அறியவேண்டியது மல்லாமல் அவர்களுக்குத் தன் வேட்டையிலைாகிய பொருள்கள் தேவைப்படுமோ வென்றும் அறியவேண்டும். மேல்மிகுதியாக அரிசி உள்ளவர்களுக்கு வேடன் கொடுக்கக்கூடிய பொருள் தேவைப்படாவிடில், அல்லது அவர்களிடம் அரிசி இல்லாவிடில் இப்பண்டமாற்று நடைபெற முடியாது. ஆனல் நாணய முறை நடைமுறையில் வந்ததின்பின் விற்பதும் வாங்குவதும் சுலபமாய்விட்டது. அவ்வேடன் தனது மாமிசத் துண்டையோ மற்றும் பொருளையோ விரும்பியவர்களுக்கு விற்று, பெற்றுக்கொண்ட பணத் தைக்கொண்டு தான் தேவைப்பட்ட அரிசியை, அதை விற்க விரும் புபவர் எவரிடமிருந்தும் வாங்கிக் கொள்ளலாம்.



பார்சிகர் நாணயம்

பழைய காலங்களிலே, சிப்பிகளையும், செம்புத்துண்டு, இரும்புத் துண்டு முதலியவற்றையும், நாம் நாணயங்களை இன்று வழங்குவது போல் உபயோகித்தனர். எகிப்தியர் வர்த்தகத்துக்குப் பெயர் பெற் றனர் என்று முன்பு படித்திருக்கிறேம். அவர்கள் தங்கள் வர்த் தகத்தின் பெரும்பாகத்தை பண்டமாற்று முறையில் நடாத்தின ரெனினும் பொன்வட்டங்களை நாணயங்களாகவும் வழங்கினர். இவ் வட்டங்கள் அளவிற் பெரிதாய் இருந்தன. அதனல் அவைகளை உடன் கொண்டு செல்வது சுலபமாய் இருக்கவில்லை. ஆனல் நாண யங்களோ கொண்டு செல்வதற்குச் சுலபமானவை. பார்சிக தேசமே முதன் முதல் பெறுமதிச் சின்னம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் உபயோகித்த கீர்த்திக்கு உரித்தானது.

சமய வழிபாட்டில், பார்சிகர் ஒரு பெரும் தீர்க்கதரிசியைப் பின்பற்றுவர். அவரின் பெயர் சொறயஸ்ரர். அவருடைய போதனை கள் அவெஸ்ரா என்னும் நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

கிறீஸ்தவருக்கு விவிலிய நூல் எப்படி மதிப்புள்ளதோ, சொறயஸ்ரரைப் பின்பற்றுபவருக்கு அவெஸ்ரா நூல் அப்படியான மதிப்புடையது. கடவுள் ஒருவரே உண்டென்றும், அவர் நாமம் அகுரு மஸ்டா என்றும், அவர் நன்மையின் கடவுளென்றும், தீமையின் தலைவரான அக்றிமனுடன் ஓயாது போராடுபவரென்றும் பார்சிகர் கொள்வர். நன்மை, தின்மை ஆகிய இரு பகுதிகளில் ஒரு பகுதியை மனிதர் சேரவேண்டும். மனிதனின் மரணத்தின் பின்பு அவன் ஆத்துமாவானது தீர்வையிடப்படும். அவன் செய்த நன்மைகள் அவன் செய்த தீமையிலும் கூடியனவாக இருந்தால் சந்தோஷமயமான இடத்துக்கு அவன் ஆன்மா செல்லும். தீமைகள் நன்மைகளிலும் கூடியிருப்பின் அது துக்கமயமான இடத்துக்குச் செல்லும். இவ்வாருன மதக் கொள்கைகள் பார்சிகரிடத்தில் உண்டு.

பார்சிக தேசத்தவர் தமது ஆட்சியை ஐரோப்பா தேசத்திலும் நிலைநாட்ட முயன்றனர். அவர்களின் முயற்சிகள் அனுகூலமடையவில்லை. அவர்கள் முதன் முதலாக எதிர்த்த ஐரோப்பிய சாதியினரை, பார்சிகர் வெல்ல முடியாததே அதன் காரணம். கிரேக்கர் ஒரு சிறு சாதியின ரெனினும் பார்சிக தேசத்தவரை மறித்து நின்று, அவர்களின் ஆட்சி ஐரோப்பாவிலே பரவச் செய்யாது தடுத்தனர்.

பயிற்சி V

1. இடைவெளிகளை நிரப்புக:

i ஈரான் தேசம் — — கடலுக்கும் — — குடாவுக்கும் இடையே உள்ளது.

ii பழைய காலத்தில் ஈரான் தேசத்தை — — என வழங்குவர்.

iii மீடியா தேசத்தவர் — — தோற்கடிக்கப் பபிலோனியருடனும் சீதியருடனுஞ் சேர்ந்தனர்.

iv பார்சிக மன்னன் — — என்பவன் மீடியா தேசத்தவரை வென்றான்.

v சைறசினுல் அடிப்படுத்தப்படுவதை — — பிறநாடுகள் அவ்வரசனுக்கெதிராக ஒன்று சேர்ந்தன.

vi அந்நாடுகள் ஒன்று சேர்வதற்குமுன், சைறஸ் அவற்றுள் — — அடிப்படுத்தினான்.

vii (a) வர்த்தகத்தை விருத்தி செய்ய சைறஸ் — — — — நகரங்களை ஒன்றுடன் ஒன்று தொடுக்க — — — திறந்தான்.

(b) — — — — முறையொன்றை நிலைநாட்டினான்.

viii பார்சிகருடைய பெயர் பெற்ற மத ஆசிரியர் — — என்பவரே.

ix பார்சிகருடைய திவ்விய நூல் — — என்பதே.

x பார்சிகருடைய பிரதானக் கடவுள் — — என்பவரே.

xi பார்சிகருடைய பிரதானக் கடவுளுக்கும் தீமையின் தலைவரான — — இடையில் ஓயாத போர் உண்டு.

xii ஐரோப்பாவில் பார்சிகரின் ஆட்சி பரவாது முதன் முதல் அவர்களைத்தடுத்தவர் — — சாதியரே.

2. விடைகள் தருக:

(i) ஒரு தேசப் படத்தில் பார்சிகரின் பேரரசைக் குறிப்பிடுக.

(ii) அசிரியர் தாம் அடிப்படுத்திய மக்களை எவ்வாறு ஆண்டனர்? பார்சியர் தாம் அடிப்படுத்தியவரை எவ்வாறு ஆண்டனர்?

(iii) வர்த்தக விருத்திக்குப் பாரசிக மன்னன் சைறஸ் செய்த இரு நன்மைகள் எவை?

(iv) பார்சிகரின் சமயத்தைப்பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் வரைக:

(அ) கடவுள் (ஆ) தீமை (இ) திவ்விய நூல் (ஈ) மரணத்தின்பின் சீவியம்.

(v) பார்சிகரின் ஆட்சியை ஐரோப்பாவில் பரவாது தடுத்தவர் யார்?

(அ) தொடக்கம் (ஈ) வரையுமுள்ள பிரிவுகளின் சுருக்கம்.

இந்தப் பிரிவுகளில் இணைநதிகளுக்கிடையிலுள்ள தேசத்தில் வாழ்ந்த பல சாதியினரைப்பற்றிப் படித்திருக்கிறோம். மெசப்பத்தேமியா அல்லது பபிலோனியா என்றுவழங்கப்படும் தேசமானது சரித்திரத்தில் அச்செழிப்புள்ள பிரதேசத்தைக் கைப்பற்ற முயன்ற சாதியினரிடை நடந்த யுத்தக்களமெனக் கூறலாம்.

அங்கு முதன் முதல் குடியேறிய சுமேரியர் மலைப்பிரதேசங்களிலிருந்து வந்தனர். இவர்களுடைய நாகரிகம் ஆதி எகிப்தியருடைய நாகரிகத்துடன் ஒரே காலத்தில் விருத்தி அடைந்து வந்ததினால் பலவகைகளில் இரண்டும் ஒத்திருந்தன. இவர்கள் பாலைவனத்திலிருந்து வந்த செமயிற்ஸ் என்பவரால் அடிப்படுத்தப்பட்டனர். இந்த செமயிற்ஸ் என்பவர் பபிலோனியாவில் அதன் பின்பு குடி

யேறினர். சுமார் 600 வருடங்களுக்குப்பின் செமயிற்ஸ் என்பவர் கசயிற்ஸ் என்னும் சாதியினரால் தோற்கடிக்கப்பட்டனர். கசயிற்ஸ் என்பவரும் அங்கு குடியேறி, ஆதியில் சுமேரியரால் அடிக்கோலப் பட்ட நாகரிகத்தில் வளர்ச்சியடைந்து வந்தனர். முன்னிருந்த பபி லோனியர், பின்வந்த கசயிற்ஸ் என்பவரிடமிருந்து குதிரை, தேர் என்னும் இரண்டின் உபயோகத்தையும் அறிந்து கொண்டனர்.

அதன்பின் இந்நாட்டை அடிப்படுத்தியவர் அசீரியராம். அவர்கள் ஹித்தைற்ஸ் என்பவரிடமிருந்து இரும்பின் உபயோகத்தையும், அதன் முன்பு தேர், குதிரை முதலியவற்றின் உபயோகத்தையும் அறிந் திருந்ததினால் மிகச் சுலபமாக பபிலோனியாவை மாத்திரமல்ல, அண்மையிலிருந்த பல நாடுகளையும் அடிப்படுத்திக்கொண்டனர். இவ்வாறு அவர் அசீரியப் பேரரசை நிலைநாட்டினர். அவர்களுடைய ஆட்சி மிகக் கொடூரமானதாயிருந்ததால் அவர் சால்டியரால் தாக்கப்பட் டபோது, அடிப்படுத்தப்பட்ட சாதியினரும் அவர்களுக்கெதிராய் எழுந்ததின் பயனாக அசீரியருடைய ஆட்சி கி. மு. 606 இல் முடிவு டைந்தது.

பின்பு சால்டியர் பபிலோனியாவிற்குடியேறி, யூதசாதியினரை வென்று அவரைக்கைது செய்து, பபிலோனியாவிலே சிறைவைத் தனர். இந்த யூத சாதியினர் உலக மதக் கோட்பாடுகளுக்கு அளித்த பெருங் கொடைகளை முன்னமே நாம் கண்டுள்ளோம்.


இக்காலத்திலே கஸ்பியன் கடலுக்கும் பார்சிகக்குடாவுக்கு மிடை யில் உள்ள மலைப்பிரதேசத்தில் ஒரு புதிய சாதியினரின் ஆட்சி எழுந்தது. அச்சாதியினரே பாரசீகர் ஆவர். அவர்கள் சால்டியரை வென்று, பபிலோனியாவை அடிப்படுத்தி அசீரியருடைய சக்கிராதிபத் தியத்திலும் மகத்தான ஒரு இராச்சியத்தை நிலைநாட்டினர். அவர்கள் ஐரோப்பாவில் தமது ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றபோது, கிரேக்க ருடைய முயற்சியினால் தடுக்கப்பட்டனர்.

III இந்தியா

(அ) இந்து நதிப் பள்ளத்தாக்கின் நாகரிகம்.

இந்து நதிப் பள்ளத்தாக்கும், நைல் நதி, ரைகிறிஸ்–யூபிறெற் றிஸ் நதிப் பள்ளத்தாக்குகள் போல ஒரு பழைய நாகரிகத்துக்கு இருப்பிடமாயிருந்தது. இந்து நதி கடலுடன் கலக்குமிடத்திலிருந்து 200 மைல்களுக்கப்பால் உள்ள இடத்தில் மிகப்பழமையான நாகரிகத்

தின் சிதைவுகளைக்கண்டு கொண்டனர். இந்த இடத்தை மகெஞ்ச தாரே" அதாவது 'இறந்தவர்களின் மேடு' என அழைப்பர். இந்த இடத்துக்கு மேலும் வடக்கே இது போன்ற நாகரிகச் சிதைவுகள் 'ஹரப்பர்' என்னுமிடத்திலும் கண்டு கொள்ளப்பட்டன. சரித்திர ஆராய்ச்சியாளர் இந்நாகரிகம் கி. மு. சுமார் 3,000 வருட அளவில் இருந்ததென அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் இந்து நதியில் இந்நாகரிகம் தழைத்தோங்கின காலத்திலேதான் நைல் நதியோரத் திலும், யூபிறெற்றிஸ், ரைகிறிஸ் நதிகளுக்கிடையிலுள்ள பிரதேசத் திலும் அப்பழைய நாகரிகங்கள் ஓங்கி வளர்ந்திருக்க வேண்டும். அப்படியானால் இந்து நதிப்பள்ளத்தாக்கின் நாகரிகம் குறிக்கப்பட்ட ஏனைய இரு நாகரிகங்களைப் போல அதே தொன்மையுடையது.



மகெஞ்சதாரே, ஹரப்பா என்னும் ஸ்தலங்களைக் காட்டும் இந்தியாவின் படம்

அவர்களின் எழுத்துக்கள்.

அந்நகரங்களின் சிதைவுகளுக்கிடையில் ஒரு வகையான எழுத் துக்கள் உள்ள பல சித்திரச் சின்னங்கள் (Tablets) கண்டெடுக் கப்பட்டன. இவ்வெழுத்துக்களை வாசிக்க வல்லார் ஒருவரும் இடைக் கப்பெறுமையால், அம்மக்களின் நாகரிகத்தைப்பற்றித்திடமாக அதிகம் கூறமுடியாதிருக்கின்றது.

நகரம்

சிதைவுகள் யாவும் ஒரு நகரின் சிதைவுகளைக் குறிக்கும்—வீதிகள் விசாலமானவையாயும், நேரானவையாயும் இருந்திருக்கக் காண்கிறோம். வீதிகளின் இரு மருங்கிலும் கட்டடங்களின் அழிவுகள் உள கட்டடங்கள் நெருப்பில் எரித்துப் பலப்படுத்தப்பட்ட செங்கட்டிகளானவை. சில கட்டடங்கள் இரண்டடுக்குகளும் அதற்குக்கூடிய அடுக்குகளுமுடையன. கட்டடங்களின் உள்நிலம் கல் பதிக்கப்பட்டது. வீடுகளுக்குக் கதவுகளும் சாளரங்களும் உண்டு. ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு கிணறும், குளிப்பறையும், நீர்கழிவழிகளுமுண்டு. வீதிகளின் பக்கங்களிலேயும் நீர் கழிக்கும் வாய்க்கால்களைக் காணலாம். ஒரு பாரிய குளிப்பறையே எல்லாவற்றிலும் அதிக வியப்புக்குரியது. இதன் நாலு பக்கங்களிலும் வெற்றிடமுண்டு. இவ்வெற்றிடத்துக்கப்பால் பல அறைகள் இருக்கின்றன. மத்தியிலேதான் தடாகம். இது 39 அடி நீளமும், 23 அடி அகலமும், 8 அடி ஆழமுமுடையது. தடாகத்தில் எதிர் இரு கரைகளிலுமிருந்து நீரிலிறங்கப் படிகள் உண்டு. தடாகத்துக்கு வேண்டிய நீர் அண்மையிலிருக்கும் ஒரு கிணற்றிலிருந்து பெற்றனர் போலும். இந்த நகரின் அழிவுகள் அந்நகரமக்கள் மிக நாகரிகம் படைத்தவரென்றும், பணச்செல்வாக்கு உடையவரென்றும், கட்டடங்கள் எழுப்பும் முறையை அறிந்தவரென்றும், நீரின் உபயோகத்தையும், அசுத்த நீர்க்கழிவு ஆரோக்கியத்துக்கு எவ்வளவு முக்கியமென்பதையும் அறிந்திருந்தனர் என்றும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றன.

மக்கள்


இம்மக்களின் பிரதான தொழில் பயிர்த்தொழிலெனவே தோன்றுகிறது. இவர்களிடையே நகைத்தொழில், நெசவுத் தொழில், இரும்புத் தொழில், கல் வெட்டுந்தொழில், சுவர் கட்டுந் தொழில், தச்சுத் தொழில் முதலிய பல தொழில்கள் செய்ய அறிந்தவர் வசித்தனர். மக்களின் பிரதான உணவு கோதுமை. ஆட்டினதும், பன்றியினதும் மாமிசத்தையும் உண்டனர். முட்டையும், மீனும் அவர்களுடைய உணவு வகைகளில் அடங்கியன. பருத்தியினாலும், ஆட்டு ரோமத்தினாலும் செய்யப்பட்ட ஆடைகள் தரிக்கப்பட்டன. சிதைவுகளுள் அநேக பொன், வெள்ளி, தந்த நகைகள் கண்டெடுக்கப்பட்டன. ஆணும், பெண்ணும் சங்கிலிகளும், மோதிரங்களும், காப்புகளும் அணிந்தனர். இந்நகைகளைவிடப் பெண்கள் மூக்கணியும், காதணியும், காலணியும் அணிந்தும் வந்தனர். ஆதி பபிலோனியர் போல இம்மக்களும் வெண்கலக் காலத்தவராயிருக்கவேண்டும். ஏனெனில், செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யப்பட்ட பல கருவிகள் இங்கே கண்டெடுக்கப்பட்டனவெனினும், ஒரு இரும்புத் துண்டுதானும் கண்ணுக் கெட்டவில்லை. எருத்து மாடு, எருமைமாடு, ஆடு,

யானை முதலிய மிருகங்களைச் சாதுவாக்கி வளர்த்தும் வந்தனர். மிருகங்களினதும், தெய்வங்களினதும் செதுக்கப்பட்ட சிறந்த உருவங்கள் அக்காலயில் அவர்களடைந்திருந்த உயர் நிலையைக் காட்டும்.

மகெஞ்சதாரேவில் கண்டெடுக்கப்பட்டன



மண்ணாலாக்கிய சித்திர சின்னம்



ஒரு நடனமாதின் உருவம்

சமயம்.

மகெஞ்சதாரே நகர மக்கள் ஒரு பெண் தெய்வத்தை வணங்கினர்கள். இத்தெய்வந்தான் மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகத் தோன்றுகிறது. மூன்று முகங்களும் ஒரு கொம்புள்ள தலையணியையு முள்ள வேறு ஒரு தெய்வத்தையும் அம்மக்கள் வழிப்பட்டதாகவும் தெரிகிறது. எனினும், அவர்களுடைய எழுத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்ளுமளவும் திடமாக ஒன்றும் சொல்ல முடியாது.

மகெஞ்சதாரே மக்கள் எந்தச் சாதியைச்சேர்ந்தவரென்றும் நாம் அறியோம். கன்னடம், மலையாளம், தெலுங்கு, தமிழ் முதலிய தென்னிந்திய பாஷைகளைத் தற்போது பேசிவரும் திராவிட மக்களின் முன்னோரே இம்மக்கள் என்பர் சிலர். வேறு சிலர் இவர்களுடைய நாகரிகம் பபிலோனியாவில் ஆதியில் வசித்த சுமேரியரின் நாகரிகத்தைப் பல வகைகளில் ஒத்திருந்ததினால், இம்மக்கள் இந்தி

யாவுக்கு மொசப்பத்தேமியாவிலிருந்து வந்தனரெனக் கூறுவர். முன்கூறியது போல, அவர்களுடைய எழுத்துக்களை வாசித்து விளங்கிக் கொள்ளுமளவும் இம்மக்கள் யார், அவர் எங்கிருந்து வந்தனரெனக் கூற முடியாது இருக்கிறோம். இவர் எச்சாதியினராய் இருப்பினும், ஆதி எகிப்தியர், சுமேரியர் போலவே மிக நாகரிகம் படைத்தவர் என்பது திண்ணம்.

பயிற்சி

(1) இந்து நதிப்பள்ளத்தாக்கில் பழைய நாகரிக சிதைவுகள் காணப்பட்ட இரண்டு இடங்கள் எவை?

(2) எத்தனை வருடங்களுக்கு முதல் இந்த நாகரிகம் தோன்றியது?

(3) அவர்களுக்கு எழுதும் முறை தெரியுமா?

(4) கீழே வரும் தலையங்கங்களின் கீழ் இந்நாகரிக அழிவுகளிலிருந்து அந்நாகரிகத்தைப்பற்றி யாது அறிவீர் என்பதைக் கூறுக:

(அ) வீதிகள் (ஆ) வீடுகள் (இ) நீரும், அதன்கழிவுமுறையும் (ஈ) பொதுஜனக் குளிப்பறை.

(5) அம்மக்களின் வாழ்க்கையைப்பற்றி பின்வரும் தலையங்கங்களின் கீழ் எழுதுக:

(அ) தொழில் (ஆ) உணவு (இ) உடை (ஈ) ஆபரணம் (உ) கருவிகள் (ஊ) மிருகங்கள்.

(6) இம்மக்கள் வணங்கிவந்த இரு தெய்வங்களையும் பற்றிக் கூறுக.

(7) இம்மக்கள் யாரென்பது பற்றிய அபிப்பிராயங்கள் என்ன?

(8) இம்மக்களைப்பற்றித்திட்டமாகக் கூற முடியாதிருப்பது ஏன்?

(ஆ) ஆரியர்

மனுக்குலம் பல சாதியினரைக் கொண்டுளது. நாம் இதுவரையும் படித்துள்ள பபிலோனியர், அசிரியர், சால்டியர், எபிரேயர் ஆகியவர் ஒரு சாதியையே சேர்ந்தவர். அவற்றை ஆரியசாதி என்பர் 'செமயிற்ஸ்' என்னும் சாதியினருக்கு ஆதியில் அராபியாவே நாம் அறிந்த அளவில் உறைவிடமாயிருந்தது. ஆனால் ஆரியருடைய ஆதி உறைவிடம் எதுவென்று திடமாகக் கூறமுடியாதிருக்கிறது. தற்காலத்திலே ஹங்கேரி தேசம், பொகிமியா தேசமெனப்படும் நாடுகளே அவர்களின் ஆதி உறைவிடமென பல அறிஞர் இக்காலத்திற் கூறுகின்றனர்.

ஆரியரின் ஆதி உறைவிடம் எது என்பது திடமாய் நாம் அறியாதிருப்பினும், அவர்கள் சனத்தொகையில் அதிகரித்ததனால், தமது உறைவிடத்தை விட்டுப் பிறநாடுகள் தேடிச்சென்று குடியேறினர் என்பதை அறிவோம். நாளடைவில் மேற்குத் திசையில்

பிரித்தானியா, ஜெர்மனி, கிரீஸ், பார்சிகம், இந்தியா முதலிய நாடுகளிலும் ஆரியர் குடியேறினர்.

சரித்திர வரலாற்றிலே ஆரியரை முதன் முதல் நாம் அறியும் போது அவர்கள் ஆட்டிடையர்களாய் தங்கள் மந்தைகளை மேய்த்து, அம்மிருகங்களினுடைய பால், மாமிசம், தோல், எலும்பு முதலியனவற்றிலிருந்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்ததைக் கண்டுள்ளோம். அவர்கள் நாடோடிகளாய்த் தமது மந்தைகளுக்கு வேண்டிய உணவையும் நீரையுந் தேடிப் பல இடங்களிலும் அலைந்து திரிந்தனர்.

ஆரியரின் ஆதி உறைவிடம் ஹங்கேரிப்பிரதேசமாயிருப்பின் அவர்கள் கீழ்த்தேசங்களுக்கு ஆசிய துருக்கியினூடாகவே சென்றிருக்க வேண்டும். இவ்வழியில் ஹித்தைற்ஸ் என்பவரைச் சந்தித்து அவரிடமிருந்து இரும்பின் உபயோகத்தை அறிந்திருப்பர். கி. மு. 2,000 தொடக்கம் கி. மு. 1,500 வரையுமுள்ள கால எல்லையுள் ஆரிய சாதியினர் கைபர் கணவாயூடாக இந்தியாவுள் வந்தனர். பாடுவதில் அவர்கள் அதிக விருப்பமுடையவர். தங்கள் தெய்வங்களுக்குக் கீர்த்தனங்கள் பாடினர். அவர்களுடைய கவிவாணர், ஆரியர்கள் போரிலடைந்த வெற்றிகளையும் புகழ்ந்து பாடினர். இக்கீர்த்தனங்களும், பாடல்களும் ஆரியருடைய இலக்கியமாயின. அவை எழுதப் படவில்லை. ஆனால் பரம்பரையாக மனனஞ் செய்யப்பட்டுவந்தன. அவர்களுடைய இலக்கியத்தில் பிரதானமானவை வேதங்களே. இத் திவ்விய கீர்த்தனங்களிலிருந்து ஆரியருடைய வாழ்க்கை வரலாறு அறியக்கிடக்கின்றது.

ஆரியர் இந்தியாவுள் கூட்டம் கூட்டமாக வந்தனர். ஒரு காலத்திலே அவர்கள் எல்லோரும் வந்து சேரவில்லை. ஒரு கூட்டம் வந்து பல காலஞ் சென்றபின் பிறிது ஓர் கூட்டம் வந்தது. அவர்கள் தங்களுடைய குடும்பங்களுடனும், வளர்த்து வந்த மிருகங்களுடனும் வந்து சேர்ந்தார்கள். கைபர்கணவாய் மூலமாக உள்ளே வந்து பஞ்சாப் பிரதேசத்தை அடைந்தனர். இந்த நாட்டின் பெயர், ஐந்து நதிகள் அங்கே இருப்பதனால் இடப்பட்டது. இவ்வாறுக ஆரியர் ஒரு செழிப்பான பிரதேசத்திலே குடியேறினர். இந்தியாவுள் பிரவேசித்தபோது ஆடு, மாடு மேய்ப்பவராய் இருந்த ஆரியர் நாளடைவில் பயிர்த் தொழில் செய்யத் தொடங்கினர். இந்தியாவுள் வந்துசேர்ந்த ஒவ்வோர் ஆரிய கூட்டமும் சில குடும்பங்களை அடக்கியதாய் இருந்தது. இக்கூட்டம் ஒவ்வொன்றும் பிறிது பிறிதான இடங்களிற் குடியேற அவ்விடங்கள் கிராமங்களாயின. கிராமம் ஒவ்வொன்றும் அக்குடும்பங்களில் அனுபவம் மிகுந்த பெரியார் பலர் கூடிய ஒரு சிறு குழுவினராலும், அவர்களின் தலைவனை கிராம அதிகாரியினாலும் மேற்பார்வையிடப்பட்டு வந்தது. இக்குழுவை 'கன்சபா' அதாவது

'கிராமச் சங்கம்' என்றும், கிராம அதிபரை 'காமினி' என்றும் வழங்குவர். ஆரியர் களி மண்ணினாலும், தடிகள், இலைகள் முதலியவற்றாலும் கட்டப்பட்ட குடிசைகளில் வசித்தனர். அவர் பருத்தியினாலும் ஆட்டு ரோமத்தினாலும் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்தும், நெல், வாற்கோதுமை முதலிய தானியங்களை விளைவு செய்தும், மந்தைகளை மேய்த்தும் வந்தனர்.

ஆரியரை அழகிய தோலுடைய மக்களென்பர். அவர்கள் இந்தியாவுள் வந்தபோது அவர்களுடைய சமூகத்தில் மூன்று பிரிவுகள் இருந்தன. அவர்களுள் உயர்ந்த பிரிவு குருக்களின் பிரிவாம். அவர்களைப் பிராமணரென்பர். அவர்களுக்குப்பின் இரண்டாவதாக போர்வீரரின் பிரிவு மதிக்கப்பட்டது. அவர்கள் சத்திரியர் எனப்பட்டனர். கடைசியான பிரிவு தொழிலாளரின் பிரிவாம். அவர்களை வைசியர் என்று அழைத்தனர். ஆரியர் இந்தியாவுள் வந்தபோது கறுப்பு நிறமுடைய மக்கள் இந்தியாவில் எற்கனவே எங்கு மிருந்தனர். ஆரியர் அழகிய நிறமுடையவரானதினால், அவர் கறுத்த நிறமுடைய மக்களை அவமதித்து, அவர்களுடன் சண்டை செய்து, அவர்களைக் கிழக்குப்பக்கமாகத்துரத்தினர். பின்பு தாம் அடிப்படுத்திய இம்மக்களுக்குத் தமது சமூகத்திலே ஒரு கீழான இடங்கொடுத்தனர். இவர்கள் ஆரிய சமூகத்தின் புதிய பிரிவாகிய நாலாவது பிரிவைச் சேர்ந்தனர். இவர்களை 'சூத்திரர்' என்றனர். 'சூத்திரர்' எனுஞ் சொல்லுக்கு அடிமைகள் என்பது பொருள். இந்திய சமூகத்தின் நாற் பெரும் பிரிவுகள் இவ்வாறு தோன்றின. சாதிப்பிரிவுகள் ஆரம்பமான காலம் இதுவே.

அவர்களின் சமயம்

ஆரியர் சூரியன், முழக்கம், நெருப்பு முதலியவற்றைத் தெய்வங்களெனக்கொண்டு முறையாகச் 'சூர்ய' 'இந்திர' 'அக்கினி' என அவைகளை வணங்கினர். இத் தெய்வங்களுக்கு மேலாக, பிரபஞ்சத்தின் அதிபதியாகிய 'தயஸ் பிற்றர்' எனும் தெய்வத்தை வணங்கினர். இத்தெய்வங்களின் கிருபையைத் தாம் பெற்றுக்கொள்ள வேண்டு மென்பதும் அதைப்பெறுவதற்கு, அத்தெய்வங்கள் விரும்பும் வேள்விகளைத் தாம் செய்யவேண்டு மென்பதும் ஆரியருடைய கொள்கையாயிற்று. ஆகவே அவ்வேள்விகளைச்செய்யும் முறையொன்று எழுந்தது. இம்முறைகளின்படி வேள்விகளைச் செய்து வந்தவர் பிராமணரே. மனிதன் ஒவ்வொருவனும் தொடர்பாகப்பல பிறவிகளாய் இவ்வுலகிற் பிறந்த பின்புதான் அவன் ஆன்மா உலக ஆன்மாவுடன் ஒன்றுகக்கலக்கு மென்பதும் ஆரியரின் சமயக்கொள்கைகளில் ஒன்று.

ஆரிய நாகரிகம் நாளடைவில் இந்தியா எங்கும் பரந்து, கி. மு. 500 இல் இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டது.

பயிற்சி

(1) ஆரியரின் ஆதி உறைவிடமாயுள்ள தேசம் யாது?
(2) ஆரியர் ஐரோப்பாவில் எப்பாகங்களிலே பரவினர்?
(3) ஆரியர் இரும்பின் உபயோகத்தை யாரிடமிருந்து கற்றனர்?
(4) நாம் எந்த இலக்கிய நூலிலிருந்து ஆரியரைப்பற்றி அறிகிறோம்?
(5) ஆரியர் இந்தியாவுக்கு வந்த காலம் எது?
(6) கீழ்வரும் தலையங்கங்களின்கீழ் பஞ்சாப்பில் குடியேறிய ஆரியரைப்பற்றி எழுதுக:

IV சீனர்

இப்போது நாம் நதிப்பள்ளத்தாக்கு நாகரிகங்கள் பலவற்றைப் பற்றிப் படித்துள்ளோம். எகிப்திய பபிலோனிய, இந்து நதிப்பள்ளத்தாக்குகளின் நாகரிகம் தழைத்தோங்கும் காலத்திலேயே வேறு ஒரு பள்ளத்தாக்கிலும் ஒரு நாகரிகம் நிலவியது. இந்த நாகரிகம் சீனதேசத்திலே உள்ள இருபெரு நதிகளாகிய யாங்சிக்கியாங், ஹொயாங்கோ என்னும் நதிகளின் பள்ளத்தாக்கில் தோன்றி வளர்ந்தது. இதுதான் சினதேசத்திலே தோன்றிய ஆதி நாகரிகம்.


இந்நாகரிகத்தின் ஆதி வரலாற்றைப்பற்றி நாம் அதிகம் அறியோம். சீனர் தங்களுடைய நாகரிகம் 100,000 வருடங்களுக் குமுன் ஆரம்பமானது எனக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இதற்கு அத்தாட்சிகள் இல்லை. கண்டெடுக்கப்பட்ட அழிவுகளிலிருந்து, பழைய கற்காலம், புதிய கற்காலம் ஆகியன சீனாவிலும் இருந்தன வென்றும் அக்கற்காலங்களுக்குப்பின் செம்புக்காலம், வெண்கலகாலம் என்பன முறையே நிலவின வென்றும் அறிகிறோம். கி. மு. 3,000 வருட அளவில் ஆதிச் சீனர் யாங்சிக்கியாங், ஹொயாங்கோ நதிக்கரைகளில் குடியேறி நாகரிக வாழ்வில் விருத்தியடைந்து வந்தனர். இவர் களி மண்ணாலாகிய சுவரும், இலை குழைகளினாலாகிய கூரையுமுடைய குடிசைகளில் வசித்தும், வயல்களிலே பயிர்த் தொழில் செய்தும், வெண்கலத்திலிருந்து செய்யப்பட்ட கருவிகளும், வெண்கலம், வெள்ளி, பொன் முதலியனவற்றிலிருந்து ஆக்கப்பட்ட ஆபரணங்களும் உபயோகித்தும் வந்தனரென அறிவோம். அவர்கள் எழுதும் முறையையும் அறிவர்.

அவர்களின் எழுத்துக்கள்

எகிப்தியரின் எழுத்து முறை குறிக்கப்புகும் பொருட்களின் உருவங்களைச் சித்திரிப்பதுடன் ஆரம்பமாயிற்று என்று படித்தோம். இச்சித்திரங்கள் நாளடைவிலே சுருக்கப்பட்டு அவற்றைக் குறிக்கும் சில் குறிகளாயின. சீன எழுத்துக்கள் இதற்குமேல் விருத்திய

டையவில்லை. பிற்கால எகிப்தியரும், பபிலோனியரும், இக்குறிகளிலிருந்து இலிபிகள் விருத்தி செய்தது போல சினர் விருத்தி செய்யவில்லை. இதன் பயனாக தற்காலத்திலேதன்னும் எழுத விரும்பும் சினர் சித்திரங்களைக் குறிக்கும் ஆயிரக்கணக்கான குறிகளை மனனஞ் செய்ய வேண்டியவராய் இருக்கின்றனர். இது அநேக வருட வேலையாகின்றது. ஆனதால் பணமுள்ளவர்களே எழுதப் படிக்கக் கூடியவராயிருக்கின்றனர். வறியவர்களுக்கு நேரமின்றி இருப்பதால் தற்காலத்திலேயும் பெரும்பாலான சினர் படிப்பில்லாத வராயிருக்கின்றனர்.

ஆதியில் சினரின் நகரங்களும், பட்டணங்களும் சுமேரியரின் நகரங்கள் போல பிரிது பிரிதானவையாயும் சுயாதினமுடையனவாயும் இருந்தன. ஆனால் மத்திய ஆசிய பாலவனங்களிலிருந்த சாதியினர் அடிக்கடி சினர்மேல் படையெடுத்து வந்ததினால் அந்த நகரங்கள் யாவும் ஒன்று சேர்ந்து தம்மைப் பாதுகாக்கக்கூடிய ஒரு தலைவரை நாடின. ஒவ்வொரு நகரமும் தனது சுயாதினத்தை விட்டுக்கொடுக்க விரும்பாததனால், இவ்வொற்றுமை, தொடக்கத்தில் சிறப்புற்று விளங்கவில்லை. அதன்பயனாக அந்நகரங்களின் தலைவராகிய பேரரசன் பலங்குன்றியவராயிருந்தார். இதுமல்லாமல், பல பிரிவுகளின் தலைவர் ஒருவரோடொருவர் பொருமை கொண்டதனால் சினதேசம் மேலும் பலம் குன்றியது. ஆனால் கி. மு. 146இல் இப்பிரதேசத்தின் பல பகுதிகளும் சின்ஷி என்ற சினப்



சினு தேசத்தின் பெரிய மதில்

பேரரசனின் கீழ் மெச்சுதற்குரிய முறையில் ஒன்று சேர்ந்தனர். நாட்டின்மேல் படை யெடுத்து வந்தவரை இவர் துரத்திக்கலைத்தது மன்றி, அவர்களிடமிருந்து நாட்டைக்காத்துக் கொள்வதற்காக ஓர் பிரமாண்டமான மதிலையும் கட்டி எழுப்பினர்.

சினுவின் நாகரிகம்

சினுவின் நாகரிகம் வளர்ந்து கொண்டே வந்தது. சினர் புதுப் பொருள்களைக் கண்டு பிடிப்பதில் கீர்த்தி வாய்ந்தவர். ஐரோப்பியர் புதிதாகச் சில பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்புதானே சினர் அவற்றைப்பற்றி அறிந்திருந்தனர். வெடி மருந்தை முதல் முதல் கண்டு பிடித்தவர் அவரே. இன்றைய 'திசையறி கருவி' யில் எப்போதும் வடக்கே காட்டும் ஊசி ஒன்றுண்டு. எத்திசையாய்ப் பிரயாணஞ் செய்யவேண்டுமென்று இக்கருவியின் உதவியால் இக்கால மாலுமிகள் அறிந்து கொள்வார். ஆனால், கி. மு. 1,100 இல் சினர் எப்பொழுதும் தெற்கையே சுட்டிக்காட்டும் சிலையமைந்த ஒரு தேரைக் கண்டு பிடித்தனர். உலகின் ஏனைய பகுதிகளில் உள்ளவரிலும் பார்க்கச் சினர் சில சில விஷயங்களில் கூடிய அறிவுடையவராய் விளங்கினரேனும் சமய அறிவில் பின்னிலையிலே இருந்தனரென்பது வெள்ளிடை மலையாம்.



கொன்பியூசியஸ்

சமயம்

புத்த சமயம் சினதேசத்துள் கொண்டுசெல்லப்பட்டதின் பின்புதான் சினர் மத்தியில் சமயம் என்பது தோன்றியது. அதன்முன்பு அவர்கள் கொன்பியூசியஸ் என்பவரின் போதனையைப் பின்பற்றினர். இன்று சினாவிற் பெரும் பான்மையோர் புத்த மதத்தவராயினும் கொன்பியூசியஸின் சில போதனைகளையும் பின்பற்றுகிறார்கள்.

இறீஸ்து அல்லது புத்தர் அல்லது மகம்மதுபோல் கொன்பியூசியஸ் ஒரு சமயத்தை ஆரம்பித்துவைக்கவில்லை. ஒரு தெய்வத்தில் அல்லது பலதெய்வங்களில் நம்பிக்கைவைக்க வேண்டுமென்று அவர் போதிக்கவில்லை. மரணத்தின் பின்பு

ஒருவனுக்கு என்ன நடக்குமென்பது பற்றியும் அவர் கவலைகொள்ள வில்லை. மனிதனின் உலக சீவியத்தைப்பற்றியே அவர் போதித்தார். மனிதன் உலகில் எப்படிச் சீவிக்கவேண்டுமென்று கொன்பியூசியஸ் எடுத்துக் காட்டினார்.

வயதில் மூத்தோரையும், பெற்றோரையும் கனம்பண்ணவேண்டுமென்றும் அரசருக்குக் கீழ்ப்படிந்து ஒழுக்கமான சீவியம் நடாத்தவேண்டுமென்றும் அவர் கூறினார். நேர்மையாய், அன்புடன் சாதுக்கள் போன்று, புத்திசாலிகளாய் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். இம்மையில் அடையும் நன்மைக்காகவோ, மறுமையில் அடையக்கூடிய பேரின்பத்துக்காகவோ வாழ்க்கையை நடத்தாது, ஒழுக்கமான சீவியம் நடாத்துவதே மனிதனின் கடமையென உணர்ந்து நல்வழியில் நடக்குமாறு அவர் போதித்தார்.

சீவியம் நடாத்தும் முறையை கொன்பியூசியஸ் எடுத்துக்காட்டினர். போதனைகளை சனமக்கள் இன்றும் படித்து அவற்றை அனுசரித்தும் வருகின்றனர்.

பயிற்சி

(1) சீன நாகரிகம் எந்த நதியோரங்களில் பரவியது?

(2) எக்காலத்தில் சீனர் இந்த நதியோரங்களில் குடியேறினர்?

(3) சீனர் கல்வி பயில்வதற்கு அதிக காலம் எடுப்பது ஏன்?

(4) சீனர் ஏன் ஒற்றுமைப்பட்டனர்? எப்பேரரசனின் கீழ் இவ் வொற்றுமை சிறப்புடன் விளங்கியது?

(5) அப்பேரரசன் சீனுவைப் பாதுகாக்க வேறென்ன செய்தார்?

(6) ஐரோப்பியருக்கு முன் சீனர் எக்கலைகளைப்பற்றி அறிந்திருந்தனர்?

(7) வேறு எந்த விஷயங்களைச் சீனர் அறிந்திருந்தனர்?

(8) புத்த சமயம் சீனாவிலே பரவுமுன் எவருடைய போதனைகளைச் சீனர் அனுசரித்தனர்?

(9) கொன்பியூசியஸ், மனிதனின் இவ்வுலக சீவியத்திலா, அல்லது மறுஉலக சீவியத்திலா தன் கவனத்தைச் செலுத்தினர்?

(10) கொன்பியூசியஸின் சில போதனைகளைக் கூறுக.

மூன்றாம் அத்தியாயத்தில் வினாக்கள்

(1) ஒரு தேசபடத்தில், நதிப்பள்ளத்தாக்கு நாகரிகங்களைக் காட்டி, அந்நாகரிகங்கள் அங்கு தொடங்கியதற்கு உள்ள காரணங்களையுந் தருக.

(2) எகிப்தியருடையவும், பபிலோனியருடையவும் எழுதும் முறைகளை ஒப்பிடுக.

(3) கீழே வரும் தலையங்கங்களின் கீழ் ஆதி எகிப்தியரின் வரலாற்றைத் தருக:

(அ) அரசாங்க முறை (ஆ) சமயம் (இ) கட்டிடமும் சிலைகளும் (ஈ) தொழில்.

(4) அசிரியர் (அ) ஹித்தைற்ஸ் (ஆ) பபிலோனியரிடமிருந்து கற்றன எவை?

(5) யூதசாதியினர் அராபியாவைவிட்டதிலிருந்து அவர் வரலாற்றைத் தந்து, அவருக்கு முன்னிருந்தவருடைய சமயக் கொள்கைகளுடன், யூதரின் யுத்தக்கொள்கைகளையும் ஒப்பிடுக.

(6) பார்சிய மன்னர், சைறஸ், தன் பேரரசை எவ்வாறு செழிப்புறச் செய்தார்?

(7) பண்ட மாற்று வியாபாரத்திலும், நாணயத்தைக் கொண்டு செய்யும் வியாபாரம், எவ்வாறு சிறந்ததென எடுத்துக்காட்டுக.

(8) பின்வரும் தலையங்கங்களின் கீழ் இந்து நதி நாகரிகத்தையும், ஆரியரின் நாகரிகத்தையும் ஒப்பிடுக:

(அ) வீடு (ஆ) தொழில் (இ) சமயம் (ஈ) அரசாங்க முறை.

(9) ஐரோப்பியருக்குமுன் சீனர் கண்டுபிடித்த சிலவற்றை எடுத்துக் காட்டுக.

(10) பின் வருவன வற்றைப் பற்றிச் சில குறிப்புகள் தருக:

(அ) ஹமுராபி (ஆ) நபுகதனெசார் (இ) சொறவாஸ்ரர் (ஈ) மோசேஸ் (உ) சின்ஷி (ஊ) கொன்பியூசியஸ்.

4–ம் அத்தியாயம்

புகழ்மிக்க புராதன கிரீஸ்

1. ஈசியன் நாகரிகம் 2. கிரேக்கர் 3. அவர்கள் ஆட்சிமுறை 4. பாரசிக யுத்தம் 5. கிரீஸின் புகழ் 6. அலெக்சாந்தர்.

கடந்த அத்தியாயத்தில் ஆசியா, ஆபிரிக்கா தேசங்களின் நாகரிகத்தைப்பற்றிப்படித்தோம். இனிமேல் ஐரோப்பாவின் நாகரிகத்தைப்பற்றி ஆராய்வோம். பன்னெடுங்காலமாக ஐரோப்பாவில் முதன்முதல் நாகரிகம் பெற்றவர்கள் கிரேக்கர்களே எனக் கருதப்பட்டு வந்தது. ஆனால் அண்மையில் கிரீற் தேயத்திலுள்ள நொசோஸிலும், கிரீஸிலுள்ள மைசீனேயிலும் சின்ன ஆசியாவிலுள்ள துரோயிலும் அழிந்த நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.




ஈசியன் நாகரிகம் பரம்பிய இடங்களைக் காட்டும் படம்.

கிரீஸ் நாகரிகத்தில் சிறந்திருந்த கி. மு. 3,000 கி. மு. 1,000 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வழிந்த நகரங்களில் நாகரிகம் விளங்கி இருக்கிறது. இங்கு விளங்கிய நாகரிகம் ஈசியன் நாகரிகம் எனப்படும்.

இந்நாடுகளில் பெரிய ஆறுகள் இல்லை: எனவே இங்கு வாழ்ந்தோர் மீன்பிடித்து அல்லது வியாபாரம் செய்து தங்கள் வாழ்க்கையை

நடத்தினர். ஆகையால் ஈசியன் நாகரிகம் ஆற்றுத்தல மக்களின் நாகரிகமல்ல; வியாபாரமும் கடலோட்டமும் செய்த மக்களின் நாகரிகமாகும். இவ்வியாபாரிகள் மொசப்பத்தேமியா, எகிப்து முதலான நாடுகளுக்குப் போயிருக்கிறார்கள். எகிப்து, மொசப்பத்தேமியா நாடுகளில் தாம் கண்டு கேட்டவைகள் தம் நாடுகளிலும் புகுத்தினர். ஈசியன் நாகரிகத்தின் எச்சமாக உள்ளவற்றை உற்று நோக்கும்போது அவர்கள் எகிப்திய பபிலோனிய நாகரிகங்களைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றவில்லை என்று தெரிகிறது. அவர்கள் தாம் அறிந்து கொண்டவைகளைச் செப்பம் செய்திருக்கிறார்கள். அழிந்த ஈசிய நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை செம்மையாகக்கட்டப்பட்டு வியாபாரவளம் மிக்கிருந்தவையாய்த் தோன்றுகின்றன. கிரீற்தேயத்தில் இவ்வாறு அழிந்த நகரங்களில் முக்கியமானது நொசஸ் ஆகும். இது தலைநகராய் அரசவின் இருப்பிடமாய் விளங்கி இருக்க வேண்டுமென ஊகிக்கப்படுகிறது.

நொசஸ்: பெரியவோர் அரண்மனையின் சிதைந்தபகுதி இங்கே காணப்படுகிறது.



நொசஸில் உள்ள ஓர் அரண்மனை.

புராதன எகிப்தில் அல்லது மொசப்பத்தேமியாவிலிருந்தவை போன்ற பெரிய அரண்மனையாக இது தோன்றுகின்றது. அனேக அறைகளையும் பெரியமண்டபத்தையும் வளைந்து வளைந்து செல்லும்

மாடிப்படிகளையும் உடையது. மஞ்சனசாலை நன்கு அமைக்கப்பட்ட வடிகால்களையும் கொண்டது. இவ்விடங்களின் பருவநிலை தட்பமுடையதாயிருந்ததால் அரசன் அரண்மனையில் வெப்பமுண்டாக்க சூட்டு அடுப்புகளை உபயோகித்திருக்கிறன். அழிந்த இவ்வரண்மனையும் அங்கு காணப்பட்ட ஏனைய சித்திரப் பொருட்களும் புராதன கிரீற் வாசி, மொசப்பத்தேமியா எகிப்து போன்ற நதிக்கரை நாகரிக நாடுகளில் தான் தெரிந்து கொண்டவைகளை திருத்தி அமைத்திருக்கிறன் என்று காட்டுகின்றன கிரீற்றிய குடியேற்ற நாடுகள்: வியாபாரங் காரணமாகக் கிரீற் மக்கள் பலநாடுகளுக்குச் செல்லலாயினர். சில கிரீற் மக்கள் தாம் சென்ற இடங்களில் குடியேறி கிரீற் நாகரிகத்தை ஆங்காங் குபரப்பினர். இவ்வாறு இக்குடியேற்ற நாடுகள் கிரீற் நாகரிகத்தின் மையமாகத் திகழ்ந்தன.

மைசினேயும் துரோயும்: இவை கிரீற்றிய குடியேற்ற நாடுகளில் முதன்மையானவை. மைசினே கிரீலிலும் துரோய் சின்ன ஆசியாவிலும் இருக்கின்றன. துரோய் வர்த்தகத்துக்கு ஒரு முக்கிய தானமாக விளங்கினமையால் ஈசியன் நகரங்களில் செல்வ வளமுடையதாகத் திகழ்ந்தது. கிரீற் மக்களே, மைசினே துரோய் ஆகிய நகரங்கட்கு தங்கள் நாகரிகத்தைக்கொண்டு சென்றமையால் இந்நகரங்களின் நாகரிகம் நொசஸ் நாகரிகத்துக்கு ஒத்ததாக இருக்கிறது..

கிரீற்றிய கலை: எகிப்தியர், மொசப்பத்தேமியரிடம் தாம் பயின்று கொண்டவர்களை கிரீற் நாட்டவர்கள் திருத்தி அமைத்தார்கள் என நாம் முன்னர் கூறினேம். சித்திரம் முதலான கலைகளில் இத்திருத்தப்பாடு நன்கு தெரிகின்றது. அரண்மனைகளின் சுவர்ச் சித்திரங்கள் ஈசிய மக்களின் வாழ்க்கையைப்பற்றி நாம் அறிய உதவி செய்கின்றன. நதிக்கரை நாகரிக வாழ்வை நடாத்திய புராதனமக்களைப்போல கிரீற்றர்களும் வெண்கலக் காலத்தவர்களாம். வெண்கலத்தினால் நல்ல வாளும் ஈட்டியும் செய்தார்கள். வெள்ளியாலும் தங்கத்தாலும் சிறந்த பாத்திரங்களை வனைந்தார்கள். இப்பாத்திரங்களின் மீது அழகிய பறவைகள் மிருகங்களின் சித்திரங்களைச் செதுக்கினர்கள். இவை போன்ற அழகிய சித்திரங்களை அழகிய வருணங்களால் அழகிய போச்சிகளிலும் கழிமண் பாத்திரங்களிலும் தீட்டினர்கள். சலவைக் கல்லாலும், தந்தத்தானும் அழகிய வடிவங்கள் ஈசிய சிற்பிகளால் சமைக்கப்பட்டன. ஈசிய நகரங்களில் காணப்படும் சித்திரப் பொருட்கள், ஈசிய சிற்பிகளும் ஓவியரும் பபிலோனிய எகிப்திய சிற்பியர் ஓவியரிலும் பார்க்க மேலானவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

ஈசிய நகரங்களின் அழிவு:

3ம் அத்தியாயத்தில் ஆரியர் தங்கள் இருப்பிடங்களைவிட்டு ஆசிய ஐரோப்பிய நாடுகளில் குடியேறினர்களென்று படித்தோம். ஏறக்

குறைய கி. மு. 2,000 ஆண்டளவில் இவ்வாரியரில் ஒரு பாலார் கிரீசுக்கு வந்தார்கள் கிரீசுக்கு அன்னர் வந்தபோது அவர்கள் மந்தை மேய்ப்பவர்களாய் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு இருந்தனர். கிரீசுக்கு வந்தபின் கடலோடுதலை மேற்கொண்டனர். கி. மு. 1,000ம் ஆண்டளவில் இவர்களும் கிரீற் வாசிகளும் ஒருவரோடொருவர் மோதிக்கொண்டனர். இக்காலத்தில் கிரீற்றர்கள் பலம் இழந்து இருந்தார்கள். வியாபாரத்தினால் பணம்படைத்த செல்வர்களாயினர்; இதன்காரணமாக சோம்பல் உண்டானது; தங்கள் படைகளை பாதுகாவாது ஒழிந்தனர். எனவே கிரேக்கர்கள் அவர்களை வெற்றிகொண்டு அவர்கள் நகரங்களை அழித்தார்கள். இந்த கிரேக்க கிரீற்றியப்போர்கள் நடந்த காலத்தில் கிரேக்கர் ஈசிய வாழ்க்கை முறைகளை அறிந்து கொண்டார்கள். ஈசிய நகரங்கள் அழிந்த போதினும் அவர்களது நாகரிகம் தொடர்ந்து நிலவியது.

நைல், தைகிறிஸ், யூப்பிறற்றிஸ் நதிக்கரை நாகரிகம் ஈசியநகரங்கட்கும் அவற்றிலிருந்து கிரேக்க நாடுகளும் பரவலாயிற்று. ஈசியர்களைப் போலவே கிரேக்கரும் தாம் அறிந்த நாகரிகத்தை திருத்தினவகையினையும் அவர்கள் மூலமாக இந்நாகரிகம் பரவின வகையினையும் கீழ் தெரிந்து கொள்வோம்.

I பின் வரும் வினாக்கட்கு விடைதருக:

1. பிரதான மூன்று ஈசிய நகரங்களையும் ஒரு படத்தில் குறிப்பிடுக.
2. இந்நகரங்களின் நாகரிகத்தை ஈசிய நாகரிகமென்று கூறுவதேன்.

II இடைவெளிகளை நிரப்புக:

1. எகிப்திய பபிலோனிய நாகரிகம் நதிக்கரை மக்களின் நாகரிகமாகும். ஆனால் ஈசிய நாகரிகம்—— —— —— —— ஆகியவற்றை மேற்கொண்ட மக்களின் நாகரிகம் ஆகும்.
2. —— காரணமாக எகிப்து மொசப்பத்தேமியா முதலிய நாடுகளுக்குச் சென்றனர்.
3. எகிப்து பபிலோனியாவில் அறிந்து கொண்டவைகளை —— —— அமைத்தனர்.

III நொசஸில் காணப்பட்ட அழிந்த அரண்மனையைப் பற்றி விவரிக்குக:

IV பின் வருந் தலைப்புகளில் கிரீற்றிய சித்திரக்கலையைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக:

(a) சுவர்ச் சித்திரங்கள்
(b) ஆயுதங்கள்
(c) உலோக, கழிமண் பாத்திரங்கள்
(d) பிரதிமை வடிவங்கள்

V சுருக்கமான விடைதருக:
(a) ஈசிய நகரங்களை அழித்தவர் யார்?
(b) கிரேக்கர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?
(c) ஈசியர் ஏன் எளிதில் தோற்கடிக்கப்பட்டனர்?
(d) ஈசிய நாகரிகம் அழிந்து பட்டதா அல்லது தொடர்ந்து நிலவியதா?

2 கிரேக்கர்கள்.

கிரேக்கர்கள் மனித இனங்களில் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பூர்வ வாழ்க்கை உலகின் மற்றைய பகுதிகளில் வாழ்ந்த ஆரியருடையதைப் போன்றே இருந்தது; நாடோடி வாழ்க்கையை நடத்தும் மந்தை மேய்ப்பவர்களாக இருந்தார்கள். அலைந்து திரியும் காலத்தில் கிறீஸின் கிழக்குத் திசையை அடைந்தார்கள். இங்கு இவர்கள் ஈசிய நாகரிக மக்களை எதிர்த்து வாகை சூடினார்கள். ஈசிய நகரங்களை இவர்கள் அழித்தாராயினும் ஈசியரிடமிருந்து அநேக விஷயங்களை அறிந்து கொண்டனர்.

பண்டைய உலகம் எப்பொழுதுமே கண்டறியாத உயர்ந்த நாகரிகம் கிரேக்கரால் தோற்றுவிக்கப்பட்டது. அவர்களின் அரசியலாண்மை குன்றிய இடத்தும் அவர்கள் நாகரிகம் அகில உலகத்திலும் பரந்து தனது செல்வாக்கைக் காட்டி இன்றுவரையும் நிலைத்துநிற்கின்றது.

இந்தியாவுக்கு வந்த ஆரியர்களைப்போல் கிறீசுக்குப் போன ஆரியர்களும் இசையின்பத்தைப் பெரிதும் விழைந்தனர். தங்கள் வீரர்களில் சிறந்தவர்களைப்பற்றி பாக்கள் புனைந்து பாடினர் அவர்கள் பாட்டுகள் வழிமுறை வழிமுறையாக காப்பாற்றப்பட்டு வந்தன. இவற்றுள் முக்கியமானவை ஒடிசி, இலியட் எனப்படும் இரு காவியங்களாம். இரண்டும் கிரேக்க வீரர்களின் வீரச்செயல்களைப் புனைந்துரைக்கும் தொடர்நிலைச் செய்யுள்களாம்.

இலியட்டு என்றநூல் துரோய் நகர மரக்குதிரையின் கதையைக் கூறுநிற்கின்றது. மெனலாஸ் ஸ்பார்த்த நாட்டின் மன்னனாயிருந்தபோது துரோய் நகர அரசிளங்குமரன் பரிஸ் மேற்படி ஸ்பார்த்த மன்னனைப்பார்க்கப் போய் இருந்தான். மெனலாஸின் அதி அழகிய மனைவி எலன் மீது பரீசுக்கு தாங்கொணாக் காதல் எழவே, அவளைத்

தன்னோடு இரகசியமாக துரோய்க்கு வருமாறு தூண்டி அவளைக் கவர்ந்து சென்றான். துரோய் மன்னனில் பழிவாங்கி ஸ்பார்த்த மன்னனுக்கு உண்டான வடுவைத் துடைப்பதற்காக மன்னன் மெனலாசும் அவனுடைய சகோதரன்—மைசினே மன்னன்—அகமெனோனும் ஏனைய கிரேக்க அரசர்களும் ஒரு வன்மைமிக்க படையைத் திரட்டினார்கள். இவ்வாறு திரட்டியபடை பத்தாண்டுகளாக துரோயை முற்றுகையிட்ட போதிலும், துரோய் நகரம் வன்மையாக அரண் செய்யப்பட்டிருந்த மையான் உள் நுழையமுடியவில்லை. கடைசியில் கிரேக்கர் ஒரு தந்திரம் செய்தார்கள் ஒரு பெரிய மரக்குதிரையை செய்தார்கள். குதிரையின் உட்பகுதியில் ஆட்கள் இருக்கக் கூடிய வசதிகள் இருந்தன; உட்பக்கம் ஒரு தொகைக் கிரேக்க வீரர்களை மறைத்து வைத்து அதனைத் துரோய் நகருக்கு வெளியேவிட்டு தாம் தம் தேயத்துக்குத் திரும்புவது போல் பாசாங்கு செய்து கொண்டு தங்கள் கப்பல்களிற் புறப்பட்டார்கள். இதனைக்கண்ட துரோய் மக்கள் ஆனந்த வெள்ளத்தராகி நகரவாயில்களைத் திறந்து எஞ்சிய நாளை களியாட்டத்தில் கழித்தனர். கிரேக்கர் பின்வாங்கிப் போய்விட்டார்களென்ற பேருவகையால் உந்தப்பெற்று அவர்கள் விட்டுச் சென்ற மரக்குதிரையை நகரத்துக்குள் ஈர்த்துச் சென்றனர்.

அன்றிரவு துரோய்மக்கள் களியாட்டக் களிப்பால் அயர்ந்து தூங்கினர்கள்; நகரமெங்கும் நிசப்தம் நிலவியது. அவ்வேளை போவதாகப் பாசாங்கு செய்த கிரேக்கர் மீண்டும் வந்தனர். குதிரையின் அகட்டில் தங்கியிருந்த கிரேக்கர் வெளிப்போந்து நகரவாயில்களைத் திறந்து விட்டனர். சிறிது வேளையில் கிரேக்கர்கள் உறங்கிக் கொண்டிருந்த துரோய் மக்களின் மீது வீழ்ந்து அவர்களிலனேகரைக் கொன்றதுமன்றி துரோய் நகரை அழித்தும் விட்டார்கள். இது சிறப்பும் பெருமையும் வரய்ந்த துரோய் நகரின் கடைசி முடிவாகும்.

ஒடிசி: இக்காவியம் கிரேக்க தளபதி உலிசஸ் அல்லது ஒடிசஸ் என்பவன் துரோய் நகரத்தில் இருந்து திரும்பும்போது அனுபவித்த இன்பதுன்பங்களை விரித்துரைக்கின்றது.

கிரேக்கர் எழுத்துமுறையைக் கற்றறிந்தபின் இக்காவியங்களை எழுதி வைத்தனர். இச்செய்யுட்களை மகாகவி ஹோமர் யாத்தனர்.

கிரேக்க அரசியல்முறை

நகர அரசியல் நாடுகள்: கிறீஸ் மலைத்தொடர்களால் பல சிறு அரசியல் நாடுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் குடியேறிய ஆரியர்கள் மலைகளால் பிரிக்கப்பட்ட தனித்தனிப்பிரிவுகளை தத்தம் வாசஸ்தலம் ஆக்கிக் கொண்டனர். இக்குடியேற்றங்கள் சுதந்திரமாக வளர்ச்சி அடைந்து, தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க இயல்பாகவே

விரும்பின இச்சுதந்திரப் பிரிவுகள் ஒன்று சேர்ந்து ஐக்கியமான ஓர் அரசாங்கத்தை நிறுவுவதை விடுத்து தனித்தனி அரசியற்பிரிவுகளாக விளங்கின இவைகள் நகர அரசியல் நாடுகள் எனப்பட்டன.

பல விஷயங்களில் பொதுத்தன்மை உடையதாக இவ்வரசியற் பிரிவுகள் இருந்தபோதிலும் இவை தம்முள் ஐக்கியப்படாது தனித் தனி நாடுகளாகவே இருக்க விரும்பின. அவர்கள் பேசியதும் ஒரேமொழி; வணங்கியதும் ஒரே தெய்வங்கள்; பழக்க வழக்கங்களும் ஒன்றே. இவைமட்டுமா? நான்காண்டுக்கு ஒருமுறை ஒலிம்பிக்கு எனப்படும் தேசிய விளையாட்டுகளைப் பொதுவாக ஆடி மகிழ்ந்தனர். ஒலிம்பியா என்ற இடத்தில் இவ்விளையாட்டுகள் விளையாடப்பட்ட மையால் இவை ஒலிம்பிக்கு விளையாட்டு எனப்பட்டது.


ஒவ்வொரு நகர அரசியல் நாடுகளும் சுயமான அரசியல் முறையை உடையனவாய் இருந்தன. கிரேக்க அரசியல்முறைக்கு எடுத்துக்காட்டாக அக்காலத்தில் பிரசித்திபெற்று விளங்கிய ஸ்பார்த்தா, அதென்சு ஆகிய இரு அரசியல் நாடுகளின் அரசியல் முறைகளை ஆராய்வோம்.

(அ) அதென்சு: அதெனியர்கள் சுதந்திரத்தை விரும்பிய மக்களாவர். அவர்கள் தாம் எல்லாரும் பங்குஎடுக்கக்கூடிய ஓர் அரசியல் முறையை வேண்டினர். இவ்வகை அரசியல் முறையை மக்களாட்சி அல்லது சனநாயகம் என்றனர்; சனநாயகம் ஆங்கிலத்தில் ''டெமக் கிரசி'' எனப்படும்; இதன் பொருள் மக்கள் ஆட்சி ஆகும். அதென்சு தான் மக்களால் ஆளப்பட்ட முதல் அரசியல் நாடாகும்; எனவே அதென்சு மக்களாட்சிக்குத் தாயகமாயிற்று.

மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் அரசியல் முறையை நமக்கு அளித்தது அதென்சு ஆகும். இக்காலம் பல நாடுகளிலும் நடைபெறும் அரசியல் முறை சனநாயக முறையாகும்.

இக்காலத்தில் அனேக நாடுகள் பரந்தனவாயும் இலட்சக்கணக்கான மக்களை உடையனவாயும் இருக்கின்றன. அதனால் ஒரு நாட்டின் அரசியலில் மக்கள் யாவரும் பங்கெடுத்துக்கொள்வது சாத்தியமல்ல. மேலும் பல முயற்சியும் உள்ள பல மனிதர்க்கு அரசியலில் கலந்து கொள்ளப் போதிய நேரமும் வாய்க்காது. அதனால் சன நாயக ஆட்சியை விரும்பும் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுக்கிறார்கள். இப்பிரதிநிதிகள் ஒன்றுகூடி கலந்து பேசி நாட்டுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வதுடன் சட்டங்களையும் வகுக்கிறார்கள். இலங்கையிலும் இவ்வகை அரசியல் முறையே நடைபெறுகிறது. ஐயாண்டுகட்கொருமுறை வாக்குரிமை உள்ளவர்கள் இலங்கைப் பாளிமேந்து அங்கத்தினர்களைத் தெரிகிறார்கள். இவர்கள் எங்கள் நாட்டுக்கு வேண்டிய சட்டங்களை வகுக்கிறார்கள்.

அதென்சு எங்களுடைய நகரம் போன்ற ஒரு சிறியநாடு; அன்றியும் மக்கள் எல்லாரும் பிரசைகளாகக் கருதப்படவில்லை. பிரசைகள், அடிமைகள் அயல்நாட்டினர் என மூப்பிரிவினராக மக்கள் வகுக்கப்பட்டிருந்தனர். அடிமைகட்கும் அயல் நாட்டவருக்கும் அரசாட்சியில் பங்குகிடையாது. சகல வேலைகளையும் அடிமைகள் செய்ததினால் பிரசைகட்கு போதியநேரவசதி இருந்தது; எனவே பிரசைகள் யாவரும் ஓர் இடத்தில் கூடி நாட்டுக்கு வேண்டிய சட்டதிட்டங்களை வகுக்க முடிந்தது.



அதென்சிலுள்ள அக்கிரேபோலிஸ்.

மலைஉச்சியிலுள்ள கட்டடம் பார்த்தனன் என்னும் ஆலயம் ஆகும்.

அதென்சு மக்கள் சுதந்திரப்பிரியர் மாத்திரமல்ல, கல்வியிலும் கலையிலும் அவருக்கு நிறைந்த ஆர்வமுண்டு. அவர்கள் அக்காலத்தில் விளங்கிய தங்கள் கலையில் அதி சிரத்தை காட்டினார்கள்; கல்வி அறிவைப்பெற ஆசைப்பட்டார்கள். இவைமட்டுமா? இவற்றை மற்றவர்களிடையே பரப்பவும் முயன்றனர். அதென்சு விரைவில் கிரேக்க நாட்டில் கல்வி, கலை ஆகியவற்றின் மையமாக மிளிர்ந்தது. கட்டடக்கலைஞர், சிற்பிகள், விஞ்ஞானிகள், உண்மைநூல் அறிஞர் பலர்தோன்றி தங்கள் புகழுடம்பை நிறுவினர். கலைவிஞ்ஞானம் ஆகியவற்றின் மூலம் அதென்சு உலக நாகரிகத்துக்கு பெரிதும் துணை செய்திருக்கிறது.

(ஆ) ஸ்பார்த்தா: ஸ்பார்த்த நகர ஆட்சி அதென்சு ஆட்சியிலும் வேறுபட்டு இருந்தது. ஸ்பார்த்த ஆட்சியில் மக்கள் எல்லாரும் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை. மக்களிற் சிறந்த சிலரே ஆட்சியை நடத்தினர்கள். சிறு தொகையினர் மற்றவர்களை ஆளும் இவ்வாட்சியை பெருமக்களாட்சி எனலாம்.

அதெனியருக்கும், ஸ்பார்த்தருக்கும் இன்னொரு வேற்றுமை உண்டு. ஸ்பார்த்தருக்கு அதெனியரைப்போல் கல்வி, கலையில் ஆர்வம் செல்லவில்லை. ஆனல் அவர்கள் மனம் போர்முறைகளிலும் படைவகுப்புகளிலும் சென்றது. ஒவ்வொரு மனிதனும் சிறந்த போர் வீரனாக விளங்கவேண்டுமென விரும்பி சிறந்த படையமைப்பதில் காலங்கழித்தனர். குழந்தைப் பருவத்திலேயே ஒரு குழந்தை சிறந்த போர் வீரனுய் வருதற்குரிய தேகபலம், மனத்திடம் முதலியன அமையாததாகக் காணப்பட்டால், அக்குழந்தையை ஒரு மலை உச்சியிலேற்றி அங்கேயே சாக விட்டு விடுவார்கள். சிறுவர்களை பெற்றருடன் வசிக்க விடமாட்டார்கள் அவர்களைப் போர்ப்பயிற்சிக் களங்கட்குக் கொண்டு சென்று போர்ப்பயிற்சிகள் தருவார்கள். சிறுமியர் தானும் கடினமான தேகப்பயிற்சிகள் செய்ய வற்புறுத்தப்பட்டனர்; இதனல் அப்பெண்கள் உறுதியும் சுகமும் வாய்ந்த தேகக்கட்டுடன் வாழ்ந்தார்கள். இதன் பயனக ஸ்பார்த்தா பலமும் வல்லமையும் உடையதாகச் சில காலம் விளங்கிற்று. ஆனல் பெருமக்களின் வெறுப்பான குரூர ஆட்சியின் பயனக ஸ்பார்த்தா கலகங்கட்கும், குழப்பங்கட்கும் உள்ளாகி கடைசியில் வீழ்ச்சி அடைந்தது. ஸ்பார்த்தா போர்ப்பயிற்சியிலும், படை வகுப்பிலும் காலத்தைப் போக்கினமையால் கலைக்கும் கல்விக்கும் செலவுசெய்ய நேரங்கிடைக்கவில்லை. எனவே உலக நாகரிகத்துக்கு அது அளித்த உதவி மிகஅற்பமாகும்.

பயிற்சி II

1. கிரேக்கர்.....நகரங்களை அழித்தார்கள், ஆனல் அவர்களது.....பயின்றார்கள்.
2. .....ஆகிய இரண்டும் கிரேக்க மகாகாவியங்களாகும்.
3. ஐக்கியமாகி ஓர் இராச்சியத்தை நிறுவுவதைவிடுத்து ஒவ்வொரு நகரப்பிரிவுகளும் தனித்த.....அரசியற்பிரிவை நிறுவின.
4. ஒவ்வொரு அரசியற் பிரிவின் அரசியல்முறையும்..... ஆக இருந்தது.
5. கிரேக்க இராச்சியங்கள்.

(a) ஒரு.....பேசினபோதும்.

(b) வணங்கிய.....ஒன்றுபிருந்த போதிலும்

(c) அவர்கள்.....ஒருவகையாய் இருந்தபோதிலும்.

(d) .....என்று சொல்லப்படும் பொதுவான விளையாட்டுகளை விளையாடிய போதிலும், ஐக்கியப்படமுடிய வில்லை.


6. அதெனியர்.....விரும்பிய மக்களாவர்.
7. அவர்கள் அரசியல் முறை.....எனப்பட்டது.
8. அவர்கள் அரசியல் முறையில் ஒவ்வொரு———பங்குண்டு.
9. அதெனியர்.....(உம்).....(உம்) ஆர்வம் காட்டினர்.
10. ஸ்பார்த்தாவில்.....சிலர் சேர்ந்த கூட்டம் ஆட்சி செய்தது.
11. இவ்வகையான அரசியல் முறை.....எனப்பட்டது.
12. ஸ்பார்த்தர் அதெனியரைப்போல் அல்லாது..... ஆகியவற்றில் கவனம் செலுத்தினர்.

3 பாரசீகர் யுத்தங்கள்

கிரேக்க இராட்சியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி சுதந்திரம் உடையனவாக இருக்க விரும்பினவேயன்றி ஐக்கியப்பட விரும்பவில்லை என்று முன்னர் கண்டோம். கடந்த அத்தியாயத்தில் பாரசீகப்பேரரசு எத்துணை வலிமையும் பெருமையும் உடையதாய் இருந்ததென்பதைப் படித்தோம். பாரசீகப்படைகள் மேற்குப்பக்கமாக முன்னேறி சின்ன ஆசியாவை அடைந்தன. இவண் கிரேக்க குடியேற்றங்கள் பல இருந்தன. பாரசீகர் அவற்றைத் தாக்கினர்கள். இக்குடியேற்றங்களில் வாழ்ந்த தம் இனத்தவர்கட்கு உதவியாக கிரேக்க நகர அரசியற்பிரிவுகள் முன்வந்தன. இவ்வகைத் துணையைப் பெற்ற போதிலும் கிரேக்க குடியேற்றங்கள் பாரசீகப் பெருஞ்சேனைகட்கு எதிர் நிற்க இயலாது தோற்றுப்போகவே அவை பாரசீகப் பேரரசின் பகுதிகளாயின.

பாரசீகப் பேரரசனகிய தேரியஸ் கிரீஸ் தேசத்தையே கைப்பற்றத் துணிந்தான். கி. மு. 490 இல் ஒரு பெரும்படையை கடல்வழியாகக் கிரீசுக்கு அனுப்பினன். பாரசீகப்படை நன்குபயிற்சி பெற்ற 100,000 போர்வீரர்களை உடையதாக ஈசியன் கடலைக்கடந்து அதென் சுக்கு அண்மையிலுள்ள மரத்தன் என்ற இடத்தை எய்தியது. அதெனியர் தங்கள் வேகமான ஓட்டக்காரன் பெதிப்பிதசை துணை வேண்டி ஸ்பார்த்தாவுக்கு அனுப்பினர்கள். பெதிப்பிதசு போகவும் வரவுமுள்ள 150 கல் தூரத்தை நாற்பத்தெட்டு மணித்தியாலங்களில்

ஓடி முடித்தான்; (இதனின்றுந்தான் நெடுந்தூர ஓட்டங்கள் மரத்தன் ஓட்டமென்று வழங்குகிறார்கள்) ஸ்பார்த்தர் அதெனியருக்கு உதவி செய்ய விரும்பவில்லை; அதெனியர் 10,000 போர்வீரர்களோடு பாரசிகப் பெருஞ் சேனையை எதிர்த்து பாரசிகரைப்புறங்கண்டனர். இவ்வாறு சுதந்திரப்பிரியர்களான அதெனியர் தம் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டனர்.



கிரேக்கருக்கும் பாரசிகருக்கும் மிடையில் உண்டான போர்கள் நடந்த இடங்கள்.

தோல்வி அடைந்த போதினும் பாரசிகர் கிரீஸைக் கைப்பற்றும் எண்ணத்தை விட்டுவிடவில்லை. கி. மு. 480 இல் பாரசிக மன்னன் ஃகேர்க்ஸ் கிரீஸ்நாட்டை கடல் தரை இரண்டினின்றும் தாக்கினன். இம்முறை கிரேக்க அரசியற் பிரிவுகள் ஒருங்கு சேர்ந்து தம்தேசத்தைப் பாதுகாக்க முயன்றன. பாரசிகர் கிரீஸ் நாட்டுக்குள் நுழைவதாயின் கடலுக்கும் மலைக்கும் இடையில் இருந்த தேர்மோபிலே என்ற கணவாய் வழியாகவே போகவேண்டும். ஸ்பார்த்த மன்னன் இலயோனிதாசும் பத்தாயிரம் போர்வீரரும் இக்கணவாயில் நின்று தங்களிலும் பத்துமடங்கு அதிகமான பாரசிகரை எதிர்த்தனர். ஆனால் ஒரு கிரேக்க துரோகி பாரசிகரை மலையைச் சுற்றிச் செல்லும் இன்னேர் வழியால் கூட்டிச் சென்றான். பாரசிகச் சேனையின் ஒரு பிரிவு இவ்வழியே சென்று ஸ்பார்த்தரை முன்னும் பின்னும் நின்று தாக்கின. இலயோனிதாஸ் தனது சேனையில் 300 வீரரை வைத்துக்கொண்டு ஏனையவர்களை பின் நின்று சண்டைபோடும் பாரசிகரோடு பொருத அனுப்பிவிட்டான். இலயோனிதாசும் அவன் வீரருடம் கடினமான சண்டை செய்து தெமோபிலே கணவாயைக் காப்பாற்ற முயன்றார்கள். ஸ்பார்த்தரில் கடைசியானவன் விழும் வரை பாரசிகர்கள் பொருதி முன்னேறினர்கள்.

பாரசிகர் அதென்சுக்கு அணிவகுத்துச் சென்றார்கள். அதென்சு நகரத்தவர்கள் சலாமிஸ் தீவுக்கு ஓடி ஒழித்தார்கள். சலாமிசுக்கும் கண்டபாகத்துக்கும் இடைப்பட்ட கடலில் அதெனிய கடற்படை பாரசிக சேனைக்கப்பல்களுக்கு அளபரிய சேதமாக்கி அரைவாசிக்கு மேற்பட்

டவற்றை அழித்தும் விட்டன. சிறிய அதென்சு நகர அரசியல்பகுதி பெரிய பாரசிகப்பேரரசை மீண்டும் தோற்கடித்தது. அடுத்த ஆண்டு பிளாற்றேயா என்ற இடத்தில் ஒரு சிறிய கிரேக்கப்படை பாரசிகப் படையைப்புறங்கண்டது.

பாரசிகர் தரையினும், கடலினும் படுதோல்வி அடைந்தாலும் கிரேக்கரை சிலகாலம் அவர்கள் பாட்டிலே விட்டுவிட்டார்கள். கிரேக்கர் அன்னியர் தாக்குதலினின்று தப்பியிருந்த அக்காலத்தில் தம்முள் ஒருவர் ஒருவருடன் கலகம் விளைத்தார்கள் அதென்சு, ஸ்பார்த்தா கடைசியாக தீப்ஸ் மற்ற அரசியற்பிரிவுகளை முறையே மேற்கொள்ள முயன்றன. ஒவ்வொன்று சில பொழுது வெற்றி கண்டனவாயினும் மற்றவைகளின் தாக்குதலையும் எதிர் நோக்க வேண்டியிருந்தது; ஒன்றினாலும் கிரீஸை ஒன்றுபடுத்த முடியவில்லை. கிரீஸின் வெவ் வேறு அரசியற் பிரிவுகள் தங்களுள் போட்டியிட்டதின் பயனாக, முன்னொருபோது பெரிய பாரசிகத்தைத் தொற்கடித்துப்புகழ் நிறுவிய கிரீஸ் தேசம், கிரீசுக்கு வடக்கேயுள்ள மசிடோன் நாட்டால் வெற்றி கொள்ளப்பட்டது.

பயிற்சி III

1. இடைவெளிகளைத் தகுந்த சொற்களைப் பெய்து நிரப்புக:
   (a) பாரசிகர்.....உள்ள கிரேக்க குடியேற்றங்களைத் தாக்கினர்கள்.
   (b) கிரீஸிலுள்ள கிரேக்க நகர அரசியற்பிரிவுகள் தங்கள் .....உதவி செய்தார்கள்.
   (c) .....தனியே பாரசிகருடன் பொருதவேண்டியிருந்தது.
   (d) .....பேர் கொண்ட அதெனிய சேனை..... பேர்கொண்ட பராக்கிரமம் மிக்க பாரசிகப் பெருஞ் சேனையைத் தோற்கடித்தது.
   (e) இரண்டாம் முறை பாரசிகர் கிரீஸைத் தாக்கியபோது அவர்கள் சேனை.....வழியாகப்போக வேண்டி இருந்தது.
   (f) ..... அவனுடைய சேனையுடன் இக்கணவாயைக் காவல் செய்தான்.
   (g) ஒரு கிரேக்கத் துரோகி.....ச் சுற்றிச்செல்லும் இன்னெரு பாதையை விரோதிகட்குக்காட்டிக் கொடுத்தான்.
   (h) .....ஸ்பார்த்த வீரன் வீழ்ந்த பிறகே பாரசிகர் முன்னேற முடிந்தது.

(i) அதெனியர்.....என்ற இடத்துக்கு ஓடி ஒழித் தார்கள்.

(j) பாரசிக கடற்படை.....என்ற இடத்திலும் தரைப்படை.....என்ற இடத்திலும் தோற் கடிக்கப்பட்டன.

2. சுருக்கமான விடைதருக:

(a) பாரசிகர் கிறீஸை ஏன் தாக்கினர்கள்?

(b) தேரியஸ் கிறீஸை எப்பொழுது முற்றுகையிட்டான்?

(c) அதெனியர் ஸ்பார்த்தாவுக்கு எப்படிச் செய்தி அனுப் பினர்கள்?

(d) பாரசிகர் கிறீஸை முற்றுகை இட்டதால் உண்டான பலாபலன்கள் எவை?

(e) கிறீஸைத் தாக்கிய இரண்டாவது பாரசிகவேந்தன் யார்? எப்பொழுது தாக்கினன்?

(f) இச்சண்டையில் ஸ்பார்த்தர் புரிந்த வீரச்செயல்கள் யாவை?

(g) கிரேக்க கடல் தரைப்படைகள் எதிரிகளை எங்கெங்கே தோற்கடித்தனர்?

(h) கிரேக்க நாடு முழுவதையும் வெற்றி கொள்ளத் துணிந்த மூன்று நகர அரசியல் பிரிவுகளெவை?

(i) அவர்கள் முயற்சியின் முடிவு என்ன?

(j) வல்லமைபடைத்த பாரசிகத்தைத் தோற்கடித்த கிறீஸ் மசிடோனியாவுக்கு ஏன் அடிபணிந்தது?

4 கிறீஸின் மகிமை

கிறீஸின் மகிமை அதெனியரும் ஸ்பார்த்தரும் பாரசிகருக்கு எதிராகப்புரிந்த வீரச்செயல்களில் அல்ல அவர்களின் கலை, கல்வி ஆகியவற்றிலேயே விளங்குகின்றது. அதன் மகிமையை கட்டடக் கலையிலும் சிற்பத்திலும் காணலாம்; அதன் இலக்கியம், வரலாறு, நாடகம் என்பவற்றிலும் காணலாம்; எல்லா வற்றுக்கும் மேலான சிறப்பு விஞ்ஞானத்திலும் தத்துவஞானத்திலும் அதற்குண்டு. இவை களினூற்றுன் கிறீஸ் நாகரிகத்துக்குப் பெரிதும் உதவியிருக்கிறது.

கிறீஸின் மகிமை பெரும்பாலும் அதென்சின் மகிமையே: அதென்சு கிறீஸில் கல்விக்கு நடுநாயகமாக விளங்கியது. கிறீஸின் சிறந்த கலைகளையும் கல்வியையும் ஆண்டுக் காணலாம். பெரிக்கிளிஸ் எனப் பெயரிய ஒரு தேசத்தலைவர் அதென்சுக்கு இச்சிறப்புகளை

அளித்தார் என்பது மிகவும் பொருத்தமானது. இவன் அதெனியப் படைகளைப் பலப்படுத்தி அதென்சை ஒரு பலம் பொருந்திய அரசியற் பிரிவு ஆக்கினன் இவன் வர்த்தகத்தை வளர்த்தான்; அழகிய கட்டடங்களாலும் உருவச்சிலைகளாலும் நகரத்தை அலங்கரித்தான்; சனநாயகத்தை அதென்சில் வளர்த்தான்.



கிரேக்க ஆலயம்
கட்டடக்கலை சிற்பம் ஆகியவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

இதற்குமுன் நாம் படித்த எவர்களிலும் பார்க்க கிரேக்கரே நிறைந்த சிற்பியராகவும் கட்டடக் கலைஞராகவும் விளங்கியிருக்கிறார்கள். அழகிய பல கட்டடங்களும் உருவச் சிலைகளும் கிறீஸ் எங்கணும் நிறைந்து கிடக்கின்றன. இவைகளுள் சிறந்தவை அதென்ஸிலேயே உண்டு. அதென்சு நகர்ப்புற எல்லைக்குள் சலவைக் கல்லினுல் சமைக் கப்பட்டதும் அதெனு என்ற தெய்வப்பெண்ணுக்குப் பிரதிட்டை செய் யப்பட்டதுமான ஓர் அழகிய பார்தனேன் ஆலயம் உண்டு (69-ம் பக்கம் பார்க்கவும்).

இவ்வாலயம் அழகிய உருவங்களைத் தாங்கிய வரிசையான தூண்களைக் கொண்டது. முழுவேலைகளும் சிறந்த சிற்பியும் கட்டட மேத்திரியுமான பிடியசின் மேற்பார்வையில் நடைபெற்றன. கிரேக்க சிற்பிகளால் செதுக்கிச் சமைக்கப்பட்ட உருவங்கள் அத்துணை வேலைப்பாடமையாத பரும்படியானவையேயாயினும் உயிர் உடையனபோல் இருந்தன. அதெனு என்ற அணங்கின் உருவம் கிரேக்க சிற்பத்துக்கு தகுந்த ஒரு எடுத்துக் காட்டாகும்.



அதெனு அணங்கு.

இலக்கியம்


கிரேக்கர் உலகிற் சிறந்த சில இலக்கிய நூல்களை அளித்திருக்கிறார்கள். இலக்கியநூல்கள் மாத்திரமா? அவர்கள் அளித்தநாடக நூல்கள் பல. அவர்கள் தங்கள் விழாக்களில் எல்லாம் நாடகம் நடித்துக் காண்பிப்பர் ஏசிலஸ், சொபோகிலஸ், யூரிப்பிடஸ் என்போர் சோக நாடகங்களைச் சமைத்தனர்; அரிஸ்தோபானஸ் கிரேக்கரில் நகைச்சுவை நல்கும் நாடக நூலாசிரியனுவன். கிரேக்கரில் தம்மிசை

பரப்பிய வரலாற்று நூலாசிரியருமுளர். உலகப்புகழ்பெற்ற கெரோதோத்தஸ், தூசிதிதெஸ் கிரேக்க சரித்திர ஆசிரியரே. வரலாற்றின் தந்தை என அறியப்படும் கெரோதோத்தஸ் பாரசிகருக்கும் கிரேக்கருக்கும் நடந்த போர் விவரங்களைப் பொறித்துள்ளார். அதெனிய ரான தூசிதிதெஸ் அதென்சுக்கும் ஸ்பார்த்தாவுக்கும் நடந்த போர்ச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்க மெய்யறிஞர்

கிரேக்கர் நுண்மாணுழைபுல அறிஞராவர். அதெனியரின் அற்புத சாதனைகளைப்பற்றி பெரிக்கிளிசு சொற்பொழிவொன்றில் "நாங்கள் ஒரு வினையை ஆற்றுமுன் நன்கு சிந்திப்போம்; எங்கள் சிந்தனையோ ஒரு தனிப்பண்பு வாய்ந்தது" என்று கூறுகிறார். கிரேக்கர் வாழ்க்கையின் சிக்கலான வினுக்கட்கெல்லாம் விடைகாண முயன்றனர். ஒரு நாட்டின் சிறந்த அரசியல்முறை, வாழ்க்கையின் நோக்கம், நீதி என்பன யாவை? இவ்வகையான சில வினுக்களுக்கு கிரேக்கர் விடைபகர முனைந்தனர். இவ்வகையான வினுக்களை ஆராய்வார் மெய்யறிஞர் எனப்பட்டனர்.


கிரேக்கர் சிறந்த சிந்தனையாளராகத் திகழ்ந்தனர். அவர்கள் எழுதிய நூல்கள் இக்காலத்தும் பலரால் போற்றப்படுவதுடன் அவை



ஒரு கிரேக்க நாடக அரங்கு

மனிதரின் மனங்களைப் பண்படுத்தும் சிறந்த சாதனங்களாகவும் திகழ்கின்றன. சொக்கிறத்தீஸ், பிளாற்றே, அரிஸ்தோத்தில் ஆகியோர் தம்புகழுடம்பை நிறுவிய சில மெய்யறிஞராவர்.

அதெனியரிடையே அறிவில் ஆர்வம் மிகுந்திருந்த காலத்தில் சொக்கிறத்தீஸ் வாழ்ந்தார். மெய்யறிஞரில் பலர் அதெனிய மக்கட்கு உண்மை, நடுநீதி, நன்மை ஆகிய பல பொருட்களைப்பற்றி சொற்பெருக்கு ஆற்றுவதுண்டு. இவ்வாசிரியர்களின் முறையைச் சொக்கிறத்தீஸ் பின்பற்றவில்லை. அவர் சொற் பொழிவினுலல்ல வினுக்களின் மூலம் மக்கட்குப் போதித்தார். வினுக்களின் மூலம் மக்களின் கொள்கைகள் பிழை என்பதை உணர்ந்த இடத்து அவர்களிடம் வேறும் பல வினுக்களைக் கேட்டு அவர்கள் உண்மையை அறியச்செய்வார். இவ்வாறு உண்மையை உணர்த்தி மக்களைத் தவருன வழிகளினின்றும் நீங்கச்செய்து மெய் நெறியைப் பின்பற்றும் படி தூண்டுவார். இது முதியவர்கட்குப் பிடிக்கவில்லை. அவர்கள் தூய்மையாகக் கொண்ட கொள்கைகளை சொக்கிறத்தீஸ் மக்களிடையே மாற்றத்துணிந்தது, சொக்கிறத்தீஸின் மீது அவர்கள் தீராப்பகை கொள்ளக் காரணமாயிற்று. எனவே அவர்கள் சொக்கிறத்தீஸ் இளைஞரிடையே பொய்யான கொள்கைகளைப் பரப்புகிறார் என்ற குற்றம் சாட்டி அவரை நீதிமன்றத்துக்கு இழுத்துச் சென்றார்கள். சொக்கிறத்தீஸ் விளங்கப்பட்டபின், நஞ்சருந்தி கொலசெய்யப்பவேண்டுமென்று தீர்ப்பிடப்பட்டார். அவர் அதென்சிலிருந்து வேறு நாட்டுக்கோடி தம்முயிரைக் காப்பாற்றி இருக்கலாம். அப்படிச் செய்தால் அவர் அநுதாபிகள் அவர் போதனை பொய்யெனச்சந்தேகிப்பார்கள் எனச் சொக்கிறத்தீஸ் எண்ணினர். ஆகவே அதென்சிலேயே தங்கி உண்மையின் பொருட்டு தம் உயிரை இழந்தார்.



சொக்கிறத்தீஸ்

பிளாற்றே: சொக்கிறத்தீஸின் விரோதிகள் அவரைக் கொன்ற போதிலும் அவர் போதனைகளை ஒழிக்க அவர்களால் முடியவில்லை.



பிளாற்றே.

அவர் மாணவர் அவர் கொள்கைகளைப் பரப்பத் தலைப்பட்டார்கள். அவர் தம்மாணவருள் தலைசிறந்தவர் பிளாற்றே ஆவர். பிளாற்றே பல நூல்களை எழுதினர்; அவற்றுளெல்லாம் 'குடியரசு' என்ற நூல்தலையாயது. அஃது ஒவ்வொருவரின் நன்மையின் பொருட்டும் பணியாற்றும் அரசியல் முறையைப்பற்றிய ஒரு கற்பனைச் சித்திரமாகும். பிளேற்றேவை பல மாணவர் பின்பற்றினர்; தம் மாணவர்க்காக 'அக்கடமி' எனப்படும் கல்விக் கழகத்தைநிறுவினர்.

அரிஸ்தோத்தில்: பிளாற்றேவின் கல்விக்கழகத்தில் முதன் மாணவனுய் விளங்கிய அரிஸ்தோத்தில் 'இலிசேயும்' எனப்படும் உயர்நிலைப்பள்ளியை நிறுவி பல்வகை விஞ்ஞானங்களிலும் பல்வகை நூல்களை யாத்தனர். தருக்கம் என்ற அறிவியற் துறையில் இவர் எழுதிய நூல் போல் பிறிதொன்றை இவ்வுலகம் இன்றளவும் கண்டிலது.

விஞ்ஞானிகள்

கிரேக்கருள் சிறந்த விஞ்ஞானிகளும் விளங்கினர்கள். அளவை நூல் எனப்படும் கேத்திரகணிதத்தில் பல உண்மைகள் பித்தாகோறஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டன. வரலாற்று நூல்களின் தந்தை கிரேக்கனெபிருப்பது போல மருத்துவ நூலின்தந்தையும் ஒரு கிரேக்கனே. அன்னன் கிப்போகிறற்றஸ் எனப்படுவன். அவன் மக்கள் எப்படிச் சுகவாழ்வுள்ளவர்களாக வாழவேண்டுமென்று போதித்தான். அவன் பல மருந்துகளைக் கண்டதுமன்றி நோய்க்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றை நீக்கவும் முயன்றன்.

உடல்வளர்ச்சி

கிரேக்கர் மக்கள் சுகபலம் உள்ளவர்களாய் வாழவேண்டுமென்று விரும்பினர்கள். உளவளர்ச்சிக்கு எவ்வளவு கவனம் செலுத்தினர்களோ அவ்வளவு கவனம் உடல்வளர்ச்சிக்கும் செலுத்தினர்கள். இதனல் உடற்பயிற்சி விளையாட்டுப்போட்டிகளில் மிகவும் கவனம் செலுத்தினர் ஒவ்வொரு நகர் இராட்சியங்களும் உடற்பயிற்சிப் போட்

டிகள் நடத்தினர். நான்கு வருடங்கட் கொருமுறை ,எல்லா நகர இராட்சியங்களும் கலந்து கொள்ளும் விளையாட்டுப்போட்டி நடைபெறும். இவ் விளையாட்டுப் போட்டி ஒலிம்பியா என்ற இடத்தில் நடத்தப்பட்டதால் இவை ஒலிம்பிக்கு விளையாட்டுகள் எனப்பட்டன. ஒலிம்பிக்கு விளையாட்டில் வெற்றி பெறுவோர்க்கு ஒலிவந் தழைகளாலான முடி அணியப்படும். இவ்வகையான ஒரு புகழைப்பெறுவதைக் கிரேக்கர் பெரிதும் மதித்தனர்.

கிரேக்கருக்கு உலகத்தின் கடப்பாடு

அசிரியரை அல்லது பாரசிகரைப்போல் கிரேக்கர் ஒரு பேரரசை நாட்டவில்லை. அவர்கள் தங்கள் அதிகாரத்தை ஏனைய நாடுகளின் மேல் செலுத்தவில்லை. ஆனல் தங்கள் ஆச்சரியமான நாகரிகத்தை ஏனைய நாடுகட்குப் பரப்பியிருக்கிறார்கள். இன்று உலகம் கிரேக்கருக்கு பல வகையிலும் கடப்பாடு உடையதாய் இருக்கிறது. மேற்கத்திய நாடுகளில் வழங்கும் நெடுங்கணக்கு கிரேக்க நெடுங்கணக்கினின்றே பிறந்தனவாம். ஓவியர்களும் நூலாசிரியர்களும் கிரேக்கரிடம் இருந்து பல பொருட்களை எடுத்து தாங்கள் கையாண்டனர். கட்டடக் கலைஞரும் சிற்பிகளும் கிரேக்க கட்டடங்களையும் வடிவங்களையும் எப்பொழுதும் மாதிரிகளாகக் கொண்டு வருகிறார்கள். நவீன மெய்ஞான நூல் கிரேக்க சிந்தனையாளருக்குக் கடமைப்பட்டது. இன்று பள்ளிகளில் எல்லாம் மாணவர் பயிலும் கேத்திரகணிதம் கிரேக்க கணித விற்பன்னர்களால் நமக்கு அளிக்கப்பட்ட ஒரு கொடையாகும். பல நாடுகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப்போட்டிகள் கிரேக்க நாடுகளிலேயே ஆரம்பமாயின.

பயிற்சி IV

1. இடைவெளிகளை நிரப்புக:
   (a) .....ஆகியவற்றில் கிரீஸ் புகழ் பெற்றது.
   (b) .....கிரேக்க நாகரிகத்தின் மையமாக விளங்கியது.
   (c) அதெனிய சனத்தலைவர்களில்.....புகழ் மிக்கவர்
   (d) கிரேக்க.....ஏனைய பண்டைய நாகரிக மக்களிலும் சிறந்து விளங்கினர்.
   (e) கிரேக்க உருவச் சிலைகள்.....,....ஆகிய பண்புகள் வாய்ந்தவை.

2. சுருக்கமான விடைதருக:
   (a) கிரேக்க மகா காவியங்கள் இரண்டு தருக.
   (b) கிரேக்க துன்பியல் நாடக ஆசிரியர் மூவர்பெயர் தருக.
   (c) கிரேக்க நகைச்சுவை ஆசிரியரில் சிறந்தவர் யார்?

   (d) ஹெரதோதஸ், தூசிதிதெஸ் என்போர் எழுதிய வரலாற்று நூல்கள் எவை?
   (e) வரலாற்று நூல்களின் தந்தை எனப்படுபவர் யார் ?

3. பின் வருவன சரியா பிழையா?
   (a) சொக்கிறத்தீஸ் சொற்பொழிவுகளினூல் அல்ல வினவிடைகள் மூலம் சனங்களுக்குப் படிப்பித்தார்.
   (b) வயது முதிர்ந்தோர் சொக்கிறத்தீசுடன் இணங்கினர்.
   (c) சொக்கிறத்தீஸ் பிழையான கொள்கைகளை வாலிபரிடையே பரப்புகிறார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டார்.
   (d) அவர் கொலைக்குத் தீர்ப்பிடப்பட்டார்.
   (e) அவருடைய படிப்பினைகள் அவர் மாணவரான பிளாற்றோ, அரிஸ்தோத்தில் ஆகியோரால் பரப்பப்பட்டன.

4. சுருக்கமான விடைகள் தருக:
   (a) கேத்திர கணிதத்தில் பல உண்மைகளை ஆராய்ந்து கண்ட கிக்கேரின் பெயர் என்ன?
   (b) மருத்துவ நூலின் தந்தை யாவர்?
   (c) அவர் சனங்களுக்கு படிப்பித்தவைகள் யாவை?
   (d) கிரேக்க அரசியற்பிரிவுகளுக்கிடையே விளையாட்டுப் போட்டி எங்கே நடந்தது?
   (e) வெற்றி பெற்றவருக்கு அளிக்கப்பட்ட பரிசு யாது.

5 அலெக்சாந்தர்

பாரசிக கிரேக்கப் போர்களின் பின் அதென்சு ஸ்பார்த்தா, தீபெஸ் ஆகிய நாடுகள் தலைமையின் பொருட்டு தங்களுக்கிடையே போராடின என்றுமுன்னேர் அத்தியாயத்தில் கண்டோம். கிரேக்கர் தங்களுக்குள் சண்டை செய்து பலமிழந்து போக கிறீசுக்கு வடபாலிருந்த மசிடோனியா படிப்படியாக பலமடைந்து கொண்டு வந்தது. மசிடோனியரும் கிரேக்கரைப்போலவே ஆரிய இனத்தினராயினும் அவர்களைப்போல் நாகரிகமடையவில்லை. மசிடோனிய விளையாட்டு வீரர் ஒலிம்பிக்கு விளையாட்டுகளில் அடிக்கடி பங்குபற்றியதால் கிரேக்க நாகரிகத்தை ஒரு சிறிதளவு அறியக் கூடியதாயிருந்தது. அவர்கள் கிரேக்கரைப் போல் நாகரிகம் அடையாவிட்டாலும், தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு ஓர் அரசன் ஆணையில் அடங்கியிருந்த தன்மையில் கிரேக்கரிலும் பார்க்க மேலானவர்களாய் இருந்தார்கள்.

மசிடோனியன் ஆகிய பிலிப்பு

கி. மு. 399இல் பெருமையையும் உயர்ச்சியையும் விரும்பிய பிலிப்பு என்ற மசிடோனியன் அரசகட்டில் ஏறினன். அவன் இளை

ஞயிருந்தபோது கிரீசில் ஒரு கைதியாக இருந்தான். இதன் காரண மாக கிரேக்க கல்வியை இவன் பயின்றான். மசிடோனியனாயிருந்த போதிலும் கிரேக்க கல்வி, கலை இவனைப்பெரிதும் கவர்ந்தன. கிரேக்க வாழ்க்கை முறையில் இவன் உள்ளம் பதிந்தது. கிரீசில் இவன் படித்தகாலை, ஓர் ஒற்றுமைப்பட்ட கிரீஸ் ஏனைய நாடுகளை வெற்றி கொண்டு ஒரு கிரேக்கப்பேரரசை நிறுவலாம், என்ற கொள் கையை ஹெரதோதஸ் முதலிய அறிஞர்களின் கட்டுரைகளில் இருந்து தெரிந்து கொண்டான்.


இந்த இலட்சியத்துடன் ஒரு படையைத்திரட்டிப் போர்முறைகளைப் பயிற்றினான் இதற்குமுன் காலாள், குதிரை, தேர்ப்படைகள் இருந்தன வாயினும் ஒழுங்கான போர் முறைகளைப்பின்பற்றவில்லை ஒவ்வொரு போர் வீரரும் தாங்கள் விரும்பியவாறு சண்டை செய்தார் கள். சண்டை செய்யும்போது ஒருவர்க்கொருவர் துணையாகக்கூடி நின்று சண்டை செய்யப் பிலிப்பு பயிற்சி அளித்தான். காலாட் படைகள் ஒருமித்து நின்று சண்டை செய்யும் முறை மசிடோனியன் பலங்கு முறைப்போர் எனப்பட்டது. இவ்வகையான ஒரு தொகுதி யை முறியடித்து முன்னேறுவது எதிரிக்கு எளிதல்ல. குதிரைப்படை வீரருக்கும் இம்முறையில் பயிற்சி தரப்பட்டது. அவர்கள் அணித்தாக நின்று கட்டளை தரப்பட்டதும் எதிரிபடையை வன்மையாகத் தாக்கி அவர்களின் அணிவகுப்பைக் குலைக்கக் கூடியதாக இருந்தது. புதியமுறையாகப் பயிற்றப்பட்ட இப்படைகளைக் கொண்டுதான் பிலிப் பும் பின்னர் அவன் மகன் அலெக்சாந்தரும் தங்கள் படையிலும் பெரியபடைகளை மேற்கொள்ள முடிந்தது.

கிரீசை வெற்றிகொள்ளல்

பிலிப்பு தனது புதியபடையுடன் கிரீசை முற்றுகையிட்டான். ஒற்றுமையற்றதும் பலவீனதுமான கிரீஸ் கி. மு. 338இல் சேரோ னியா என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு பிலிப்புவை தனது மகாதலைவனாக ஏற்றுக்கொள்ளவேண்டியதா யிற்று. பிலிப்பு மசிடோனியரும் கிரேக்கருமடங்கிய வன்மைமிக்க ஒரு படையை நிறுவினான்.


பிலிப்புவின் மரணம்

பாரசீகர் கிரேக்கரின் சென்ம விரோதிகளாயிருந்தார்கள். பாரசீகர் கிரீசை வெல்லப் பன்முறை முயன்றும் அவர்கள் முயற்சி பயன் அளிக்கவில்லை. பிலிப்பு பாரசீகத்தைத் தாக்கத் தீர்மானித் தான். பாரசீகப்பேரரசுடன் மசிடோனியாவையும் கிரீசையும் ஒப் பிட்டால் மலைக்கும் மடுவுக்குமுள்ள அத்துணைவேற்றுமை இருந்தது



அலெக்சாந்தரின் பேரரசு.

(83-ம் பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்) மேலும் பாரசிகர் சிறந்த போர் வீரருமாவர். ஆனல் பிலிப்புவின் படை ஒருவகையில் பாரசிகப் படையிலும் சிறப்புற்று விளங்கியது. அது ஒரு கட்டாக நின்று போர்



அலெக்சாந்தர்.

புரியவும், ஒரு தலைவனிடமிருந்து கட்டளைகளைப் பெறவும் பயிற்சி பெற்றிருந்தது. எனினும் பிலிப்பு பாரசிகப் போரைத்தொடக்கு முன் கி. மு. 336இல் கொல்லப்பட்டான்.

மசிடோனிய அலெக்சாந்தர்

பிலிப்புவைத் தொடர்ந்து அவன் மகன் அலெக்சாந்தர் அர ஞனன். அலெக்சாந்தர் அரிஸ்தோத்தில் எனப்படும் மகாஞானியிடம் கல்வி பயின்றான்; இவனுக்கு கிரேக்க நாகரிகத்திலும் கலைஞானத்திலும் அளப்பரிய பற்று ஏற்பட்டது. மசிடோனிய கிரேக்கபடைகளைக் கொண்டு ஒரு பேரரசை நிறுவலாம் என்ற தந்தையின் எண்ணம் தனயனிடத்திலும் இருந்தது. எனவே அலெக்சாந்தர் அரசனைபோது கிரேக்க நாகரிகத்தில் தந்தைக்கு இருந்த பற்று இவனுக்கு இருந்தது மாத்திரமல்ல ஒரு பேரரசை நிறுவ வேண்டுமென்ற எண்ணமும் அலெக்சாந்தரிடம் வேரூன்றியது. அவனுடைய தந்தையால் பயிற்றப்பட்ட வல்லமைமிக்க படையும் இருந்தது.

கிறீசில் குழப்பம்

அலெக்சாந்தர் அரசகட்டிலேறியபோது அவன் இருபதாண்டு நிரம்பிய வாலிபனுயிருந்தான். கிரேக்க நாடுகளின் தலைவர் இத்

தூண இளைஞன் அரசனுயிருப்பதைக் கண்டு தாங்கள் இழந்துபோன சுதந்திரத்தை மீண்டும் பெற இதுதான் தருணம் என எண்ணினர். தீபெஸ் என்ற நகர இராட்சியத்தின் தலைமையில் அலெக்சாந்தருக்கு மாருகக் கிரேக்கர் கிளம்பினர். அலெக்சாந்தர் அவர்களை எளிதில் தோற்கடித்ததுமன்றி மீண்டும் அவர்கள் தலைகாட்டா வண்ணம் தீபெஸ் நகரை அடியோடு அழித்தும் விட்டான்.

அலெக்சாந்தர் ஈண்டும் கிரேக்க நாகரிகத்தில் தனக்குள்ள மதிப்பைக் காட்டினுன். நகரத்திலுள்ள பிரதான கோயிலையும், பிந்தார் என்ற மகாகவிஞனின் இல்லத்தையும் இவன் அழிக்கவில்லை.

பாரசீகப் பேரரசை வெற்றிகொள்ளல்

கிரேக்க அரசியற் பிரிவுகளில் அலெக்சாந்தர் தனது அதிகாரத்தை நிறுவியபின் தனது தந்தை தொடக்கிய முற்றுகைகளை தான் மீண்டு ஆரம்பித்தான். பாரசிகத்தைத் தாக்குவான் ஈசியன் கடலிக்கடந்து சீரியாவை அடைந்தான். இங்கே III-வது தேரியசின் தலைமையில் பாரசிகர் அலெக்சாந்தரை எதிர்த்தார்கள். பாரசிகப்படை அலெக்சாந்தரின் படையைப்போல் பன்மடங்கினதாயினும் அத்துணை பயிற்சி பெற்றதல்ல. இதன் காரணமாகப் பாரசிகப்படை இசுஸ் என்ற இடத்தில் கி. மு. 333இல் நடந்த யுத்தத்தில் தோற்கடிக்கப்படவே தேரியஸ் அஞ்சி ஓட்டம் எடுத்தான். அலெக்சாந்தர் பின்னர் முறையே சீரியா, பலஸ்தினம், எகிப்து ஆகிய நாடுகளைத் தன் கிழ்ப்படுத்தினன்; பின்னர் மொசப்பத்தேமியாவுள் நுழைந்தான். தைகிறிஸ் ஆற்றுக்கண்மையிலுள்ள அரபெல்லாவில் பாரசிகர் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர். தேரியஸ் அலெக்சாந்தரின் கைக்கு தப்பி ஓடிய போதிலும் தனது சொந்த அதிகாரி ஒருவனுல் கொல்லப்பட்டான். அலெக்சாந்தர் படிப்படியாக பாரசிகப் பேரரசு முழுவதையும் தன் ஆணைக்குட்படுத்தினன்.

இந்தியாவை முற்றுகையிடல்

பாரசிகப் பேரரசு முழுவதையும் வெற்றிகொண்டபின் கிழக்கு முகமாக முன்னேறி துருக்கிஸ்தானம், பலுக்கிஸ்தானம் ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டான். கி. மு. 326இல் கைபர் கணவாய் வழியாக இந்தியாவுட் பிரவேசித்தான். இந்திய மன்னருள் ஒருவனுகிய போறஸ் முறையே 300, 200, 4,000, 10,000 கொண்ட தேர், யானை, குதிரை, காலாட்படைகளுடன் அலெக்சாந்தரை எதிர்த்தான். அலெக்சாந்தர் முதன்முறையாக ஆனைப்படையுடன் கூடிய ஒரு சேனையை எதிர்க்கவேண்டியிருந்த போதிலும் சத்துருவை தோற்கடிக்கத்தவறவில்லை. இந்தியாவின் ஏனைய பாகங்களையும்

வெற்றி கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துக்கு அவனது போர்வீரர் வாயில் மண்ணைப் போட்டுவிட்டனர். ஏழாண்டுகளாகப் போர்செய்த அலெக்சாந்தரின் வீரர்களுக்கு களைப்பும் போரில் வெறுப்புமுண்டாகவே அவர்கள் மேலும் முன்னேற மறுத்துவிட்டார்கள். அதனல் அலெக்சாந்தர் தன் நாட்டுக்குத் திரும்பவேண்டியதாயிற்று.

அலெக்சாந்தர், மசிடோனியா கிரீஸ் தொட்டு இந்து நதிவரையும் பரந்துள்ள பெருநிலப்பரப்பின் பேரரசனுக விளங்கினன். அலெக்சாந்தர் தனது பேரரசின் அரசியல் முறையை வகுக்கவும் அதனை உறுதிப்படுத்த வேண்டுவனவற்றை ஆராயவும் துணிந்தான். இதனை அவன் நிறைவேற்றுமுன் கி. மு. 323இல் மரணம் அடைந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையாலும் அவனது தலைவர் அவனுக்குப்பின் அரசுரிமை யாருக்கென தீர்மானிப்பதில் ஒரு முடிவுக்கு வராமையாலும் குழப்பம் உண்டானது. இதனுலேற்பட்ட சண்டைகளின்பயனுக அலெக்சாந்தரின் பேரரசு சின்னுபின்னப்பட்டது. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொருபிரிவைச் சுவீகரித்துக் கொண்டனர். அலெக்சாந்தரின் இந்திய மாகாணம் செலுக்கஸ் நிக்கதோர் என்ற தலைவனுக்கானது.

அலெக்சாந்தரின் சாதனை

அலெக்சாந்தர் கிழக்கையும் மேற்கையும் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எண்ணியிருந்தான். அவன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல நாடுகளை வெற்றி கொண்டான். நாடுகளைப் பிடிப்பதால் மாத்திரம் கிழக்கையும் மேற்கையும் ஒற்றுமை உடையனவாக்க முடியாதென்பதை அலெக்சாந்தர் உணர்ந்தான். எனவே இவர்களை வேறுவழிகளால் ஒற்றுமைப்படுத்த முயன்றான். அவன் கீழ் நாட்டு மன்னரின் குமாரிகளை மணந்தான்; அவனது தலைவர்களும் போர்வீரர்களும் தங்கள் அரசனைப்பின்பற்றி தாங்களும் கிழ் நாட்டுப் பெண்களை மணந்தனர். இவ்வகைச் சம்மந்தங்களினுல் கிழக்கில் உள்ளார்க்கும் மேற்கில் உள்ளார்க்கும் அன்னியோன்னிய உறவு உண்டானது. அலெக்சாந்தர் கிரேக்க நாகரிகத்தை தன் நாடுகளில் எல்லாம் பரப்ப முயன்றான். கிரேக்க நாகரிகத்தில் அவனுக்கு இருந்த மதிப்பு மாத்திரமல்ல ஒரு வகை நாகரிகத்தை எல்லாரும் பின்பற்றுவதால் ஒற்றுமை வளருமென்றும் அவன் உணர்ந்தான். அவன் பல நகரங்களை நிறுவினன். அலெக்சாந்திரியா, அலெக்சாந்திறெற்ரு, கந்தார் முதலான நகரங்கள் அலெக்சாந்தரை இன்றும் நினைவுறுத்துகின்றன. இந்நகரங்களில் கட்டப்பட்டு கிரேக்க இரீதியில் அமைந்ததேவர்களதும் வீரர்களதும் உருவச் சிலைகள் வைக்கப்பட்டன. கிரேக்க கலை, கல்வி இந்நகரங்களில் இடம்

பெற்று தேயமெங்கணும் பரம்பின. அலெக்சாந்தரின் மரணத்தின் பின் அவனுடைய இராட்சியம் சிதறுண்ட போதிலும் அவன் தலைவர்கள் கிரேக்க நாகரிகத்தை வளர்த்துக்கொண்டே வந்தார்கள்.

அலெக்சாந்திரியாவில் கிரேக்க ஆதிக்கம்

கிரேக்க ஆதிக்கத்துக்கு சிறந்த் எடுத்துக்காட்டாய் விளங்கும் நகரம் அலெக்சாந்திரியா ஆகும். தொலமி -அலெக்சாந்திரியாவில் 'அற்புதசாலை' எனப்படும் ஒரு கல்லூரியை நிறுவிப் பலகலையும் போதித்தான். கணிதநூல் அறிஞனுகிய இயூக்கிளித்து இக்கல்லூரியில் திகழ்ந்த ஒரு அறிவுச் சுடராவன். முதல் நீராவிப்பொறியை அமைத்த கிரோ இக்கல்லூரியில் விளங்கிய இன்னெரு அறிஞனவன். பெரிய விஞ்ஞானியாகிய ஆர்க்கிமீடஸ் இக்கல்லூரியின் இன்னெரு முத்தாவன். தொலமி அலெக்சாந்திரியாவில் பெரியவொரு நூல் நிலையத்தை நிறுவினன். இக்கல்லூரியின் மூலம் கிரேக்க கலை, கல்வி எகிப்தில் பரவியது. இவ்வகையாகவே கிரேக்க ஆதிக்கம் அலெக்சாந்தர் ஆட்சி கண்ட நாடுகளில் எல்லாம் பரவியது. அலெக்சாந்தரின் சாதனைகளில் கிழக்கிலுள்ளாரையும் மேற்கிலுள்ளாரையும் கிட்டக்கொண்டு வந்தும் கிரேக்க நாகரிகத்தைப் பரப்பினதும் முக்கியமானவையாம்.

பயிற்சி

I. இடைவெளிகளை நிரப்புக:

(a) மசிடோனியன் ஆன.....கிரேக்க நாடுகளை வெற்றி கொண்டான்.

(b) அவன் போர்வீரர்கள் சண்டை செய்யும்போது..... நிற்கப் பயிற்றினன்.

(c) அண்மையாகக் கூடி நின்று கட்டாக யுத்தம் புரியும் தொகுதிப்படை மசிடோனிய.....எனப்பட்டது.

(d) கிரீசை வெற்றி கொண்டபின் பிலிப்பு.....பேரரசை வெற்றி கொள்ள முயன்றான்.

(e) அவன் தனது போரைத் தொடக்குமுன் கி.மு. 336இல்.....

(f) அவன் மகன்.....அவனுக்குப்பின் சிம்மாசனம் ஏறினன்.

(g) அலெக்சாந்தர்.....கல்விபயின்றான்.

(h) அவனுடைய கிரேக்க கல்வியின்பயனுக கிரேக்க..... ஆகியவற்றை பெரிதும் மதித்தான்.

(i) தகப்பனைப்போல் ஒரு.....நிறுவ விரும்பினன்.

(j) .....என்ற நகர இராட்சியத்தின் தலைமையில் கிரேக்கர் அலெக்சாந்தருக்கு மாருகக் கிளம்பினர்கள்.

(k) கிரேக்கரின் கலகத்தை அடக்கியபின் அலெக்சாந்தர் .....பேரரசை முற்றுகையிட்டான்.

(l) பாரசீகச் சேனை அலெக்சாந்தரின் சேனையைவிடப்..... பெரிதாயிருந்தது; ஆனல் அலெக்சாந்தரின் சேனை.....

(m) .....பேரரசு படிப்படியாக வீழ்ச்சி அடைந்தது.

(n) கி. மு. 336 இல் அலெக்சாந்தர்..... பி ர வே சித்தார்.

(o) இந்திய அரசனுகிய.....அவர் தோற்கடித்தார்.

II. சுருக்கமான விடைதருக:

1. யாருடைய கட்டுரைகளை வாசித்து மசிடோனியன் ஆகிய பிலிப்பு ஒரு பேரரசை அமைக்க முயன்றார்.

2. போர் முறைகளில் பிலிப்பு செய்த சீர் திருத்தங்கள் யாவை?

3. அலெக்சாந்தர் (a) கிரேக்க கல்விமுறையால் (b) தந்தையாரின் மனேரதத்தால் பெற்றுக்கொண்டவைகள் யாவை?

4. அலெக்சாந்தர் பாரசிகப்படையை எளிதில் எவ்வாறு தோற் கடித்தார்.

5. இந்து நதி வரையும் வந்த அலெக்சாந்தர் ஏன் திரும்பிப் போனர்.

IV ம் அத்தியாயத்தில் வினுக்கள்:

1. ஈசிய நகரமக்கள் எகிப்திய பபிலோனிய நாகரிங்களை எவ்வாறு அறிய வந்தார்களென்றும் தாங்கள் அறிந்து கொண்டதை எவ்வாறு வளர்த்தார்களென்றும் ஆராய்க.

2. நொசில் அழிந்துபோன அரண்மனைகளைப்பற்றி விவரிக்குக.

3. கிழக்கு மத்தியதரைக்கடல் நாடுகளின் படம் ஒன்றுகீறி பின் வரும் இடங்களை குறிப்பிடுக, நொசஸ், துரேய், மைசினே; அம்புக்குறிகள்மூலம் எகிப்திய பபிலோனிய நாகரிகம் இவ் விடங்களில் இருந்து கிறீசுக்குப் பரம்பினதையும் காட்டுக.

4. கிரேக்கர்கள் யாவர்? எவர்களிடமிருந்து இவர்கள் அதிகம் கற்றுக்கொண்டனர்.

5. கிரேக்க இராட்சியங்கள் நகர இராட்சியங்கள் எனப்பட்டதேன்? இவ் இராட்சியங்களில் பொதுவாகக் காணப்பட்ட தன்மைகள் யாவை? அவைகள் ஏன் ஒரு நிரந்தரமான கூட்டுக்குழுவை அமைக்க முடியவில்லை.

6. அதெனிய ஸ்பார்த்த நாகரிகங்களைப் பின்வருந் தலைப்புகளில் ஒப்பு நோக்குக.

(a) அரசியல்முறை (b) கலையும் கல்வியும் (c) போர்ப் படைகள்.

7. பாரசிக கிரேக்கப் போர்களை கிழ்வருந்தலைப்புகளில் சுருக்கமாக விளக்குக.

I. முதல் முற்றுகை (a) பாரசிகர் கிறீசை ஏன் முற்றுகையிட் டனர் (b) மரத்தன்.

II. இரண்டாம் முற்றுகை (a) தேர்மோபிலே (b) சலமிஸ் (c) பிளாற்றயா.

8. பாரசிகப் போர்களின் பின் கிரேக்கரின் பலம் எவ்வாறு குன் றியது.

9. கீழ் வருந் தலைப்புகளில் நாகரிக வரலாற்றில் கிரேக்கர்கள் ஏன் முக்கியமானவர்கள் என்பதை ஆராய்க.

(a) கட்டடக்கலை, சிற்பம் (b) இலக்கியம் (c) மெய்அறிவுநூல் (d) விஞ்ஞானம் (e) உடற்பயிற்சி.

10. பின் வரும் கிரேக்கர் எவ்வெத்துறையில் பேர்போனவர்? பெரிக்கிளஸ், கெரோதோதஸ், பீடியாஸ், சொக்கிறத்திஸ், தூசிதிதெஸ், பிளாற்றே, அரிஸ்ரோபானஸ், சொபோகிளஸ், பீடிப்பிடெஸ், இப்பொகிறட்டஸ், பித்தாகோறஸ், ஆர்க்கிமீடஸ்.

11. எவ் வகையாக உலகம் கிரேக்கருக்குக் கடப்பாடுடையது.

12. கீழ் வருந் தலைப்புகளில் அலெக்சாந்தரைப்பற்றி ஒரு சுருக் கமான கட்டுரை வரைக.

(a) அவனது கல்வியும் அதனுலானபயனும்.

(b) அவனது தகப்பனிடமிருந்து அவன் பெற்றுக்கொண்ட வைகள்.

(c) கிரேக்கர் முதலில் எவ்வாறு அலெக்சாந்தரை நடத்தினர். ஏன்?

(d) பாரசிகப் பேரரசை வெற்றி கொள்ளல்.

(e) இந்தியாவினுள் பிரவேசித்தல்,

(f) சுயநாடு திரும்புதலும் இறப்பும்.

(g) அவனுடைய மரணத்தின்பின் அவனுடைய பேரரசு.

13. அலெக்சாந்தர் வெற்றிகொண்டநாடுகளைக் காட்டும் பேரரசுப் படம் ஒன்று வரைக.

14. கிரேக்க நாகரிகத்தை அலெக்சாந்தர் எவ்வாறு தனது தேய மெங்கும் பரப்பினன்.

15. அலெக்சாந்திரியா நகரத்தில் கிரேக்க ஆதிக்கம் எவ்வாறு விளங்குகிற தென்பதைப்பற்றி ஒரு சிறுகுறிப்பு வரைக.

5–ம் அத்தியாயம்

பண்டைய உரோமை

1. ஆரம்பங்கள் 2. உரோமையை பெருப்பித்தல் 3. விருத்திப் பின்பலாபலன்கள் 4. இயூலியஸ் சீசர் 5. அகுஸ்தஸ் சீசர் 6. உரோமை உலகத்துக்கு அளித்தவைகள் 7. கிறிஸ்துவம றைப்பிறப்பு 8. நித்தியநகராகிய உரோமை.

3ம், 4ம் அத்தியாயங்களில் உலக நாகரிகத்துக்கு உதவிய எபிரேயர் கிரேக்கர் ஆகிய இரு தேச மக்களை பற்றிப்படித்தோம். இவ்வத்தியாயத்தில் இன்னெரு இனத்தினராகிய உரோமையரைப்பற்றிப் படிப்போம் இவர்களும் மனித நாகரிகத்துக்கு சிறந்தபணி செய்துள்ளார்கள்.

1. ஆரம்பங்கள்

(a) ஒரு கதை

உரோமை நகரின் தொடக்கம்பற்றி ஒரு நாடோடிக்கதை வழங்கி வருகிறது. இந்நகரத்தை உரமியூலஸ், இரேமஸ் என்ற இரு சகோதரர் அடியிட்டனர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் யுத்தபகவான் புதன் உடைய மக்களாவர். அவர்கள் பாட்டனை (அன்னையின் தந்தையை) அவனுடைய சகோதரன், சிம்மாசனத்தை அவன் பெறவொட்டாமல் தடுத்துக் கலைத்துவிட்டான்.

உரமியூலஸ், இரேமஸ் ஆகியவர்கட்கு அரசுரிமை இருந்ததினால் அவர்கள் அன்னையின் சிற்றப்பன் அவர்களை அழிக்க முயன்றான். எனவே குழந்தைகளை ஒரு படகிலேற்றி தைபர்யாற்றிலே அலைய விட்டான். படகு ஆற்றோட்ட வழியே மிதந்து சென்று கபித்தலின் குன்றுக்கண்மையில் தங்கியது. ஒரு பெண் ஓநாய் குழந்தைகளை எடுத்துச்சென்று வளர்த்து வந்தது. அவர்கள் வளர்ந்தபின் ஓர் இடையன் அவர்களைக்கண்டு கூட்டிக்கொண்டுபோய் வளர்த்து வந்தான்.

அவர்கள் சுகபலம் நிறைந்தவர்களாக வளர்ந்து வந்தார்கள் ஒரு நாள் அவர்கட்கு தாங்கள் யாவர் என்பதும் தங்கள் தாயின் சிறியதந்தை தங்கட்கு செய்த துரோகம் இன்ன என்பதும் தெரிய வந்தது. அவர்கள் அவனைக் கொல்லத் துணிந்தார்கள். இதனைச் செய்ததும் தைபர் ஆற்றங்கரையில் ஒரு புதிய நகரத்தை அமைக்கவும் எண்ணினர்கள். ஆனல் சகோதரரிடையே ஏற்பட்ட சண்டை காரணமாக இரேமஸ் உயிரை இழந்தான் புதிய நகரம் கட்டப்பட்டதும்


உரமியூலஸ் உடைய பெயரால் அதற்கு உரோமை என்ற பெயர் சூட்டப்பட்டது. கி. மு. 753 இல் உரோமை நகரம் அமைக்கப்பட்ட தெனக் கூறுகின்றனர்.

(b) இத்தாலியின் பண்டைய மக்கள்.

ஆரியர்

2ம் அத்தியாயத்தில் ஆரியரின் இடம்விட்டு பெயர்தலைப்பற்றி அறிந்து கொண்டோம் ஆரிய இனத்தின் பல கிளைகள் ஐரோப்பா ஆசியாவின் பற்பல பகுதிகட்கும் சென்றதைப்பற்றிப் படித்தோம். சிலர் பாரசீகத்துக்கும் வேறுசிலர் சேய்மைக்கணுள்ள இந்தியாவுக் கும் போனர்கள்.

ஆரியக்குடிகள் கிரீசை அடைந்து, நாங்கள் சென்ற அத்தியாயத் தில் படித்த கிரேக்க நாகரிகத்தை நிறுவினர்கள். இன்னொருபுறம் கி. மு. 1,000ம் ஆண்டளவில் இத்தாலியை அடைந்து அப்பினயின் மலைகளுக்கு தென்மேற்கேயுள்ள செழிப்பான வெளிகளில் குடியே றியது. இங்கே இவர்கள் கோதுமை செய்கை பண்ணி மந்தை மேய்த்து எழியவாழ்க்கை நடத்தினர். முதலில் அவர்கள் வெண் கலத்தாலான ஆயுதங்களையும் கருவிகளையும் செய்தார்கள். அவர்கள் அங்கு சென்ற காலத்தில் எழுத வாசிக்கவும் கற்களால் வீடுகட்டவும் அவர்களுக்குத் தெரியாது. கி. மு. 900ம் ஆண்டளவில் எத்திறஸ் கன் எனப்படும் ஓர் இனத்தார் கடல்வழியாக இத்தாலிக்குள் நுழைந் தார்கள். எத்திறஸ்கன் அனேக விஷயங்களை பபிலோனியர் இடம் அறிந்து கொண்டார்கள். இவர்கள் சின்ன ஆசியாவில் இருந்து இத்தாலிக்கு வந்து, கி. மு. 1,000ம் ஆண்டளவில் இத்தாலிக்கு வந்து குடியேறிய ஆரியக்குடியேற்றங்களுக்கு வடபால் குடியேறினர். இவர்கள் பபிலோனியரிடமும் கிரேக்கரிடமும் தாம் கற்று அறிந்து கொண்டவைகளை இத்தாலியிலும் புகுத்தினர்கள். அவர்களால் தான் கிரேக்க நெடுங்கணக்கு இத்தாலியில் உபயோகப்படுத்தப்பட்டது. இதுமட்டுமல்ல கிரேக்கக்கலை, பண்பாடு, கிரேக்க ஆயுதங்கள் கிரேக்கர் போர் முறைகள், பபிலோனியக்கட்டடமுறை ஆகியனவும் இத்தாலியுள் இவர்கள் வழியாக இடங்கோலிக் கொண்டன. கிரேக்க குடியேற்றங்கள்: எத்திறஸ்கர்கள் இத்தாலியின் வடபகுதியில் குடியேற இன்னொரு பிரிவினர் தென் இத்தாலியிலும் சிசிலியிலும் குடியேறினர். இவர்கள் கிரேக்க குடியேற்றக் காரர் ஆவர்; இவர்களாலும் கிரேக்க நாகரிகம் இத்தாலிக்குள் புகுந்து கொண்டது. வடக்கே எத்திறஸ்கன் ஆதிக்கமும் தெற்கே குடியேற் றக்காரர் ஆதிக்கமும் ஆரிய குடியேற்றத்தினரைப் பாதித்தன. இவ் வகையாகக் கிரேக்க பபிலோனிய நாகரிகம் இவர்களிடையேயும் பரவியது.



(தைபர் யாற்றங்கரையில் குடியேறிய ஆரியக்குடிகள் வடக்கே எத்தி றஸ்கரும் தெற்கே கிரேக்கரும் எவ்வாறு தத்தம் நாகரிகங்களால் மேற் கொண்டனர் என்பதை இப்படத்தின்மூலம் தெரிந்துகொள்ளலாம்.)

(பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்)

உரோமை

இத்தாலியின் நடுப்பகுதியில் குடியேறிய ஆரியருள் ஒரு பிரிவினர் இலத்தினியர் எனப்படுவர். இவர்கள் தைபர் யாற்றங்கரையில் அதன் முகத்துவாரத்தில் இருந்து பன்னிருகல் தொலைவில் தங்கள் இல்லங்களைக்கட்டினர்கள். இங்கு இவர்கள் அமைத்த நகரம் உரோமை எனப்பட்டது; இஃது ஏழ் குன்றுகள் சூழ்ந்த நகரமாதலால் எழுகுன்று நகரம் என்றும் அறியப்படும். இந்தச் சிறிய நகரம் படிப்படியாக காலகதியில் பிரித்தானியாமுதல் இஸ்பானியாவரை மேற்கேயும், சின்ன ஆசியாவை கிழக்கேயும் கொண்ட நாடுகளை எல்லாமடங்கிய பேரரசாகக் கொண்டு விளங்கியது. இந்நகரத்தில் இருந்தே இலத்தினிய மொழி, அவர்கள் சட்டம், பண்பாடு என்பன அகில் உலகமும் பரவலாயின.

(c) உரோமையை உயர் நிலைக்குக் கொண்டுவந்த உத்தமர்.

உரோமானியர் வடக்கே திருவும் நுகர்வும்மிக்க எத்திறஸ்கரிடமும், தெற்கே பண்பாட்டில் முதிர்ந்த கிரேக்கரிடமும் பலவற்றையும் அறிந்து கொண்டார்களென முன்னர் கண்டோம். அவர்களுடைய புகழுக்கு அவர்கள் சில நற்குணங்களைப் பண்படுத்திய நீர்மையும் காரணமாகும். அவர்கள் ஆண்மை, பக்தி, பெருமை என்ற மூன்று பண்புகளையும் வளர்க்க முயன்றார்கள். ஆண்மை என்பது மரணத்துக்கு அஞ்சா நெஞ்சம்படைத்த வீரபுருடர்களின் குணமாகும். அன்னவர்க்குத்தோல்வி என்பதே இல்லை; ஏனெனில் அவர்கள் ஒருபொழுதும் அடிபணியமாட்டார். பக்தி என்பது வன்மையான விசுவாசமும் அர்ப்பணிப்பும் பொருந்திய குணமாகும். இப்பண்பு ஹொறசியஸ் நகரத்தை எத்திறஸ்கரிடமிருந்து காப்பாற்றியபோது கூறிய மொழிகளில் நன்கு தோன்றுகின்றது. ''மனிதன் சாவது நிசம்; தம் முன்னோர்களின் சமாதியின் காரணமாயும் தேவர்களின் கோயில் காரணமாயும் பயங்கரமான எதிர்ப்புகளை எதிர்த்து இறப்பதிலும் உயர்ந்த இறப்பு பிறிதில்லை.'' என்பதே அவ்வாசகமாகும்.

பெருமை என்பது கௌரவமும் இறும்பூதும் கலந்த ஒரு நற்பண்பு ஆகும். உரோமர் இப்பண்புகளை நன்கு மதித்தார்கள் என்பதற்கு பின் வரும் கதை தகுந்த ஓர் உதாரணமாகும். கார்த்தசீனியருடன் செய்த போர்களில் இரகுலஸ் கைதி ஆக்கப்பட்டான். சிறைப்படுத்தியவர்கள், அவன் உரோமைக்குப்போய் உரோமர்களை சமாதானத்துக்கு இணக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் அவனை விடுதலை செய்தார்கள். இரகுலஸ் உரோமர்

சமாதானத்துக்கு உடன்படாவிட்டால்தான் கார்தேச்சுக்கு மீள்வதாக வாக்களித்துப் புறப்பட்டான். இரகுலஸ் உரோமைக்கு வந்து சமாதானமுயற்சி எதுவும் செய்யவில்லை; ஆனால் போரைவிடாமல் தொடர்ந்து நடத்தும்படி முதியர் அவையினரை ஏவினன். பின்பு தனது மனைவி மக்களைத் தானும் பாராமல் கார்தேச்சுக்குப்புறப்பட்டான்; தன்னைக் குரூரமாக வதைத்துக் கொல்லுவார்களென்று அறிந்திருந்தும் தனது வாக்கை நிறைவேற்றும் பொருட்டு அவன் பயணமானான்.

இப்பண்புகளுடன் உரோமர் நிரம்பிய பொது அறிவுடையவர்களாக விளங்கினர்கள். இப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டுதான் உரோமப் பேரரசு கட்டி எழுப்பப்பட்டது. இப்பண்புகள்தான் அப்பேரரசை உறுதி பெறச் செய்தன. இப்பண்புகள் அழியவும் பேரரசும் நிலை குலைந்தது.

பயிற்சி I.

1. உரோமை என்ற பெயர் வரக் காரணமான நாடோடிக் கதை யாது?
2. அப்பினயின் குன்றுகளின் தென்மேற்குப்பாகத்தில் குடியேறிய சாதியார் யாவர்?
3. அப்பினயின் குன்றுகளுக்கு வடக்கே குடியேறிய சாதியார் யார்?
4. இத்தாலியின் தென்பகுதியிலுள்ள குடியேற்றங்களில் யார் குடியேறினர்?
5. பபிலோனிய எகிப்திய நாகரிகங்கள் எச்சாதியினர் வழியாக இலத்தினியரிடம் பரவியது.
6. உரோமர் வளர்த்துக்கொண்டசிறந்த பண்புகள் யாவை?
7. இப்பண்புகளை விளக்குக.
8. இரகுலஸ்உடைய கதையை எழுதி அது நமக்கு என்ன போதிக்கிற தென்று குறிப்பிடுக.

2 உரோமையைப் பெருப்பித்தல்

உரோமர் கட்டி எழுப்பிய பேரரசைப்பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தோம். இப்பொழுது, உரோமை ஒரு சிறிய நகரமாயிருந்து படிப்படி ஒரு பேரரசாக வளர்ந்த விதத்தை ஆராய்வோம். உரோதுரின் வெற்றிக்கு காரணம் அவர்கள் கிரேக்க குடியேற்றக்காரர் எத்திறஸ்கரிடம் இருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டதும், அப்பண்புகளை வளர்த்துக் கொண்டதுமாகும்.



உரோமானியப் போர்வீரன்

உரோமானியப் படைவகுப்பு: கிரேக்கரிடம் பல விஷயங்களையும் கற்றுக் கொண்ட எத்திறஸ்கர் தங்கள் படைகளை மசிடோனிய பலங்கு முறையில் வகுத்துக் கொண்டனர் பலங்கு என்பது பெருந்தொகை வீரர்கள் குழுமி நின்று ஒரு குழுவெனச் சண்டை செய்யும் போர்முறையாகும். இது பெரு வெளிகளில் சண்டை செய்வதற்கு ஏற்றது. ஆனால் உரோமர் வெளிகளில் மாத்திர மல்ல மலைகளிலும் காடுகளிலும் தாம் போர்புரிய வேண்டுமென் பதை உணர்ந்தார்கள். ஆகை யால் அவர்கள் ஒரு புதிய அமைப்பைக் கையாண்டார்கள். ஒரு சேனை பல இலீசன் படைக ளைக் கொண்டது. ஒவ்வொரு இலீசன்களும் பல குழும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மலைகளில் சண்டை செய்யும்போது ஓர் இலீசனின் குழும்புகள் பிரிந்து தனித்தனியே சண்டை செய்ய முடியும். வெளிகளில் சண்டை செய்யும்போது குழும்புகள் சேர்ந்து இலீசனாக நின்று போர்புரியக் கூடியதாயிருந்தது.

உரோமானிய இலீசன்கள் நன்கு பயிற்றப்பட்டு கட்டுப்பாடு உடை யனவாயிருந்தன.

ஒவ்வொரு போர்வீரனும் கவசம் அணிந்து ஈட்டியும்வாளும் தாங்கி நின்றனன். இலீசன் இவ்வுலகம் எக்காலமும் காணாத அதி அற்புத வகையில் போர்புரிந்தது.

(a) இத்தாலியை வெற்றிகொள்ளல்

உரோமை தனது வல்லமையுள்ள இலீசன் சேனையுதவியுடன் பல நாடுகளை வெற்றிகொண்டது. கி. மு. 396 இல் எல்லா எத்திறஸ்கன் நாடுகளையும் பிடித்துக்கொண்டது. வட இத்தாலியில் வசித்த பிரான் சியர் இவர்களைத்தாக்கி முறியடித்தனர். பிரான்சியர் உரோமை வரைக்கும் சென்றிருக்களாயினும் உரோமையை அவர்களால் பிடிக்க முடியவில்லை. கடைசியில் அவர்கள் வட இத்தாலிக்கு மீண்டார்கள்.

உரோமை தனது தோல்வியினின்றும் எழுந்தபின் மீண்டும் சுற்றவர உள்ள நாடுகளை வெற்றி கொள்ளத் துவங்கியது கி. மு. 230

இல் எத்திறஸ்கரையும் அப்பினயின் மலைச்சாரல்களில் வசித்த சம் நயிற்று சாதியார்களையும் வெற்றி கொண்டனர்.

தெற்குப்பக்கத்தில் வாழ்ந்த கிரேக்க குடியேற்றக்காரர் தங்களுக் குள் கலகம் செய்து கொண்டிருந்தனர். இவர் உரோமரையும் மற்றவர்கள் எபிரஸ் நாட்டு பீரசையும் துணைக்கு அழைத்தனர். பீரஸ் உடைய வன்மைமிக்க சேனை நன்கு பயிற்றப்பட்ட யானைப்படை யையும் உடையதாய் இருந்தது. யானைப்படையுடன் இதற்குமுன் போர்புரியாத உரோமர் தோற்கடிக்கப்பட்டனராயினும் சமாதானம் செய்து கொள்ளவில்லை. கடைசியில் கார்த்தசினியரின் உதவியோடு பிரசைப்புறங்கண்டனர். அக்கினியத்திரங்களை உபயோகிப்பதைக் கொண்டு யானைப் படையை மேற்கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டனர். அக்கினியம்புகளைக் கண்ட யானைகள் பயத்தினால் தங் கள் வீரர்களையே சாடி மோதி மிதித்துக்கொன்றுவிடும். பீரவின் தோல்வியின் பின் ஆர்னசுக்குத் தெற்கேயுள்ள இத்தாலி முழுவதும் உரோமையின் ஆதிக்கத்துள் வரலாயின.

(b) இத்தாலிக்கு அப்பாலும் உரோமையிலுட்சி

பியூனிக்கு யுத்தங்கள்

பினீசியர் ஆபிரிக்காவின் வடக்கு, சிசிலியின் கிழக்குக்கரை, கோர்சிக்கா, சாடினியா, ஸ்பானியாவின் தெற்கு ஆகிய இடங்களில் குடியேறி இருந்தனர். இக்குடியேற்றங்களில் ஆபிரிக்காவின் வடக்கே, சிசிலிக்கு நேர் எதிரேயிருந்த கார்தேச்சு கடற்பலம் வியா பாரவளர்ச்சி உடைய வல்லமை மிக்க நாடாகத்திகழ்ந்தது. அதன் கப்பல்கள் மத்தியதரைக்கடலில் நடமாடின. அதனால் அது அக் கடல்மீது தனது அதிகாரத்தை நிலைநாட்டியது.

இத்தாலி முழுவதையும் உரோமை தனதாணைக்குட்படுத் தியிருந்த போதினும் கார்தேச்சுக் குடியேற்றங்களின் வளம் கண்டு அது பொறுமை கொண்டது; கார்தேச்சின் வல்லமை கண்டு பயமும் கொண்டது. அதனால் உரோமர் கார்தேச்சைத் தாக்கி வெற்றிகொள்ள எண்ணினர். இதுகாரணமாக நடந்த யுத்தங்கள் பியூனிக்கு யுத்தங் கள் எனப்படும். பினீசியன் என்றசொல் இலத்தீனிய மொழியில்

பியூனிக்குஸ் எனப்படும், இதினின்றே பியூனிக்கு என்ற சொல் பிறந்தது. கி. மு. 264 இல் ஆரம்பித்த இவ்யுத்தங்கள் இடைக்கிடை நடவாமல் விட்டாலும் கி. மு. 146 இல்தான் ஒரு முற்றுக்கு வந்தது. 118 ஆண்டுகள் இவ்யுத்தங்கள் நடைபெற்றன.



கி. மு. 264 இல் உரோம கார்த்தசீ நாடுகள்.

முதலாவது பியூனிக்கு யுத்தம் வளமும் செழிப்பும் மிக்க சிசிலியின் பொருட்டு நடைபெற்றது. உரோமர் தரைப்பலம் உடையவர்களாயும் கார்த்தசீனியர் கடற்பலம் உடையவர்களாயும் விளங்கினர். ஆனல் மிகக் குறுகிய காலத்தில் உரோமர் கப்பல்களைக்கட்டி கடற் படைப்பயிற்சி பெற்று கி. மு. 260 இல் மைலேயில் நிகழ்ந்த யுத்தத்தில் கார்த்தசீனியரைத் தோல்வியுறச் செய்தனர். கி. மு. 241 இல் கார்த்தசீனியர் சமாதானம் கோரியது மன்றி சிராக்குஸ் தவிர முழுச் சிசிலியையும் உரோமருக்கு கொடுத்தும் விட்டனர்.

அடுத்து இருபத்திரண்டு ஆண்டுகள் உரோமரும் கார்த்தசீனியரும் போரில் ஈடுபடவில்லை. உரோமை அல்பஸ் வரை தனது ஆட்சி எல்லையைக் கூட்டிக்கொண்டது. கோர்சிக்கா, சாடீனியா ஆகிய கார்தேச்சு நாடுகளில் உள்நாட்டுக் கலகங்கள் உண்டாக உரோமை இவ்விரு தீவுகளையும் தனதாக்கிக்கொண்டது. உரோமரின் இச்செயல் இரண்டாவது பியூனிக்கு யுத்தங்கட்கு காரணமாயிற்று.

இரண்டாம் பியூனிக்கு யுத்தம்: பியூனிக்கு யுத்தங்களில் இது முதன்மையானதாகும். கனிபல் என்ற கார்த்தசீனிய சேனைத்தலைவன் இவ்யுத்தத்தில் பல அரும்பெரும் செயல்கள் செய்து தன் புகழை நிறுவலாயினன். முதலாம் பியூனிக்கு யுத்தத்தில் சேனைத் தலைவனுயிருந்த கமில்கார் பார்க்காவின் மகன் கனிபலாவன். கனிபல் ஒன்பானுண்டைப் பராயம் உடைய சிறுவனுயிருந்த போது இவன் தகப்பன் இவனை ஒரு கோயிலுக்கு இட்டுச் சென்று அங்குள்ள பலிபீடத்தின் முன் உரோமரை எப்பொழுதும் விரோதிப்பதாக வாக்குறுதி தரும்படி கேட்டுக்கொண்டானும். கனிபலும் தனது தகப்பனுக்கு அளித்த வாக்கை கடைசிமட்டும் பிரமாணிக்கமாக நிறைவேற்றினன். தான் சாகும் வரையும் உரோமர்களுடன் இடைவிடாது சண்டை செய்தான்.



கனிபல்

அல்பசைக் கடத்தல்: உரோமர் கார்தேச்சைத்தாக்குமுன் இத்தாலிக்குள் படையெடுக்கக் கனிபல் திட்டம் இட்டான். அவன் தனது படைகளை ஸ்பானியா, தெற்குப்பிரான்சு, அல்பசில் ஒரு கணவாய் ஆகியவற்றினூடாக இத்தாலிக்குள் கொண்டு சென்றான். அவன் அல்பஸ்மலை வழியாக தனது பெருஞ்சேனையுடனும், ஐம்பத்தெட்டு யானைகளுடனும் இத்தாலிக்குள் நுழைந்தது பிரமிக்கத்தக்க ஓர் அரும் பெரும் செயலாகும். ஆனல் கனிபல் அல்பசில் தனது சேனையின் பெரும்பகுதியையும் யானைகளையும் இழந்து போனன்.

இத்தாலியில் கனிபல்: கனிபல் இத்தாலியின் வடக்குமுதல் தெற்குவரை நடமாடி உரோமரை மீண்டும் மீண்டும் தோற்கடித்தான். வடக்கே திருசிமீன் ஏரியில் தனது எதிரிகளை நன்கு முரியடித்தான். கி. மு. 216 இல் கன்னே என்ற இடத்தில் உரோமர் படையைச்சிதைத்தான். இத்துணை மோசமாய் உரோமர்படை எப்பொழுதாவது தோற்கடிக்கப்படவில்லை. ஆனல் அவர்கள் சமாதானம் கோரவும் இல்லை. பாபியஸ் குந்ததோர் என்றவொரு சர்வாதிகாரியை நியமித்து தங்கள் படைகளின் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தனர். பாபியஸ் கனிபலை எதிர்ப்பதற்கு தனது சொந்த

முறை ஒன்றைக் கையாண்டான். அவனது திட்டப்படி கனிபலை எதிர்க்காது காலத்தைக் கடத்தினன். காலம் கடத்துவதால் கார்தேச்சில் இருந்து உதவியை எதிர்ப்பார்க்கும் கனிபல் சேனையின் பலம் குன்றி விடுமென அவன் எண்ணினன்.


உரோமர் கார்தேச்சு மீது படையெடுத்தல். உரோமை நன்கு அரண் செய்யப்பட்டிருக்கிறதென்பதை கனிபல் அறிந்திருந்தான்; அன்றியும் பாபியுசின் தந்திரத்தால் கனிபலின்பலம் குறைந்து கொண்டு வந்தது. மேலும் கார்தேச்சில் உள்ள அதிகாரிகள் அவனுக்கு அதிகம் உதவிகள் அனுப்பவில்லை. உரோமர் கார்தேச்சை முற்றுகையிடத் துணிந்து கொர்னேலியஸ் சிப்பியோ என்றவனின் தலைமையில் ஒரு சேனையைக் கார்தேச்சுக்கு அனுப்பினர். கனிபல் தனது நாட்டைப் பாதுகாக்கும்பொருட்டு அழைக்கப்பட்டான். கி. மு. 202 இல் சாமா என்ற இடத்தில் கனிபல் தனது முதற் தோல்வியைச் சுவைத்தான். கார்தேச்சு சமாதானம் கோரியது. ஆபிரிக்க வெற்றியின் அறிகுறியாக சிப்பியோவுக்கு ஆபிரிக்கானுஸ் என்ற புகழ் நாமம் கிடைத்தது. சில வருடங்களின் பின் கனிபல் தேசாந்திரம் போய் தற்கொலைசெய்து இறந்தான்.



பியூனிக் யுத்தங்கள் நடந்த இடங்கள்.

மூன்றுவது பியூனிக்கு யுத்தம் உரோமை நாடு இன்னும் கார்தேச்சின் வளம் கண்டு உளம்காய்ந்தது. கார்தேச்சு விரைவில் பலம் பெற்ற ஒரு நாடாகுமென அது அஞ்சியது. எனவே கார்தேச்சை வேரோடு அழித்துவிட உரோமர் கங்கணம் கட்டினர். உரோமர் கார்தேச்சை வெறுத்தார்கள் என்பது காதோ என்ற உரோம செனேற்றுச் சபையினன் "கார்தேச்சு அழிக்கப்படவேண்டும்" என்று ஒவ்வொரு முறையும் தனது சொற்பொழிவினிறுதியில் முழங்கிய முழக்கத்திலிருந்து நன்கு பிரதிபலிக்கின்றது.

கார்தேச்சு மறுபடி தாக்கப்பட்டது. தலைநகரம் அழிக்கப்பட்டு மறுபடியும் அது கட்டப்படக்கூடாது என்பதைக் காட்டுவதற்காக கலப்



இரண்டாவது பியூனிக்கு யுத்த முடிவில் உரோமைப் பேரரசு.

பை கொண்டு அழிந்த நகரத்தை உழுதார்கள் இது நிகழ்ந்தது கி. மு. 146 இல்.

(c) கிழக்குமுகமாக உரோமராட்சியை வளர்த்தல்

உரோமை தனது அரசை கிழக்குமுகமாக வளர்க்க உறுதி கொண்டது. மசிடோனிய போர்களின் பயனாக எகிப்து, மசிடோனிய, ஏனைய கிரேக்க நாடுகள் ஆதியன உரோமராணைக்குட்பட்டன. மித்திரிததேசுவை வென்றபின் சிரியா, சின்ன ஆசியா ஆகியனவும் உரோமப் பேரரசுக்குட்பட்டன.

உரோமை மத்திய தரைக்கடல் நாடுகள் உட்பட பல நாடுகளை தன்னகத்தடக்கிய பேரரசாக விளங்கியது. மத்தியதரைக் கடல் ஓர் உரோம ஏரியாகத் திழ்ந்தது. யூலியஸ் சீசர் முதலானோர் தமது ஆட்சி எல்லையை ஐரோப்பாவின் வடக்கு முகமாக எப்படிப் பெருப்பித்தார்கள் என்பதை பின்னர் படிப்போம்.

பயிற்சி II

I இடைவெளிகளை நிரப்புக:

(a) மலைகளில் சண்டைசெய்யப் பலாங்குப்படை தகுதியற்ற தானபடியால் உரோமர்.....படையை அமைத்தனர்.

(b) இலீசன் படைகள்.....பிரிந்து போய்ச்சண்டை செய்யவும் எளிதாக.....சண்டைசெய்யவும் கூடியன.

(c) இலீசன் அற்புதமாக போர்புரியக்கூடிய ஒரு..... ஆகும்.

II இத்தாலியை வெற்றிகொளல்:

(a) கி. மு. 230 இல் உரோமர்.....ஆகியவர்களை வெற்றி கொண்டனர்.

(b) சில கிரேக்க குடியேற்றக்காரர் உரோமரிடம்..... கேட்டனர்.

(c) ஏனைய கிரேக்க குடியேற்றக்காரர்.....ஆகிய .....இடமிருந்து உதவிவேண்டினர்.

(d) முதலில் உரோமர் பிரசினுல்.....

(e) கடைசியாக.....உதவியுடன் உரோமர் பிரசைத் தோற்கடித்தனர்.

(f) .....ஆறுக்கு கிழ்ப்பட்ட நாடுகட் கெல்லாம் உரோமை தலைமைதாங்கியது.

III பியூனிக்கு யுத்தங்கள்:

(1) உரோமை கார்தேச்சின்.....கண்டுபொருமை கொண்டது.....கண்டுபிடிங்கொண்டது.

(2) முதலாவது பியூனிக்கு யுத்தம்.....தீவின்பொருட்டு நடைபெற்றது.

(3) .....சண்டையில் உரோமர் கடற்படை கார்த்தசினியர் படைக்கப்பல்களை தோற்கடித்தது.

(4) கி. மு.....இல் கார்த்தசினியர் சமாதானம் கோரினர்.

(5) கார்த்தசினியருக்குரிய தீவுகள்.....ஆகியவற்றை உரோமர் கைப்பற்றியதால் இரண்டாவது பியூனிக் யுத்தம் ஆரம்பமானது.

(6) கார்த்தசினிய படைத்தலைவன்.....இத்தாலியை முற்றுகையிட்டான்.

(7) .....ஏரி.....ஆகிய இடங்களில் கனிபல் உரோமரைத் தோற்கடித்தான்.

(8) உரோமர்.....என்பவனை சர்வாதிகாரியாக நியமித்த னர்.

(9) காலம் கடத்தும் தந்திரம்மூலம் கனிபலை..... அவன் எண்ணினான்.

(10) .....தலைமையில் உரோமர் படையொன்று கார்தேச்சத்துக்கு அனுப்பப்பட்டது.

(11) .....என்ற இடத்தில் நடந்த சண்டையில் கனிபல் தோற்கடிக்கப்பட்டான்.

(12) உரோமர் இன்றும் திருத்திப்படாமல் கார்தேச்சை மூன்றும் முறையுந் தாக்கி நகரத்தை முற்றும்.....

(13) உரோமை தனது பேரரசை.....வளர்க்க ஆரம்பித்தது.

(14) கிரேக்க.....உரோமையின் ஆணைக்குட்பட்டன.

(15) .....தோற்கடிக்கப்பட்டபின் சிரியாவும் சின்ன ஆசியாவும் உரோமை மாகாணங்களாயின.

III உரோமர் வெற்றியின் பலாபலன்கள்

உரோமரின் வெற்றிகள் உரோமை அக்காலத்துச் சிறந்த படை ஆதிக்கம், கடல்வல்லமை ஆதியன உடைய நாடாகச் செய்தன. இதன் பயனை உரோம நாகரிகம் வெற்றிபெற்ற நாடுகளில் பரம்பியது. அது கிரேக்க இராச்சியங்களை வெற்றி கொண்டதினால் கிரேக்க நாகரிகம் பண்பாடு என்பனவற்றைதான் கைக்கொண்டது.

சுயாதீனப்பிரசைகளான உழவர்களின் மறைவு இவ்வெற்றிகள் பொதுமக்களின் வாழ்க்கையில் அவர்களின் நன்மைக்குப் பாதகமாகப் பல மாறுதல்களைப் புகுத்திவிட்டன. உரோமையில் தங்கள் சொந்த நிலங்களைச் செய்கைபண்ணிய சுயாதீன உழவர்கள் வாழ்ந்து வந்தார்கள். இப்பிரசைகளிடம் விளங்கிய ஆண்மை, பக்தி, பெருமை ஆகிய சிறந்த பண்புகள் உரோமையை அக்காலத்தில் உன்னதநிலைக்குக் கொணர்ந்தன. இவர்களில் பலர் போர்களில் மாண்டுபோக, மீண்டவர்கள் தங்கள் நிலங்களைச் செய்கை பண்ணுவதற்குவேண்டிய முயற்சி செய்யவில்லை இந்நிலங்களை செல்வமிக்க பிரபுக்கள் வாங்கி அவற்றை ஒன்று சேர்த்து பெரிய சமீன்களாக மாற்றிக் கொண்டனர். அவர்கள் அடிமைகளைக்கொண்டு தங்கள் சமீன்களை செய்கை பண்ணினர். நிலமும் வேலையுமில்லாத மக்கள் உரோமையில் குழுமி அரசாங்கத்துக்கு ஒரு புதிய பிரச்சினையை ஏற்படுத்தினர். அரசாங்கம் எவ்வாறு அவர்களுடன் நடந்து கொள்வதென்று அறியாது திகைத்தது.

அரசியல் முறையில் மாற்றம்

முதன் முதல் உரோமை அரசர்கள் ஆண்டார்கள். இவ்வரசர்கள் மன்னுயிர் ஓம்பத் தெரியாதவராயும் கொடியவர்களாயுமிருந்ததால் கி. மு. 510 இல் மன்னராட்சி மறைந்தது; குடியரசாட்சியில் ஆள்வோர் மக்களாலேயே தெரிந்து கொள்ளப்பட்டனர்.

குடியரசு: அரசனுக்குப்பதிலாக மக்கள் ஆண்டுதோறும் இரு கொன்சல்களைத் தேர்ந்தனர். முதன் முதல் கொன்சல்கள், பிரபுக்கள் அல்லது தந்தைகள் எனப்படும் குடும்பங்களில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இம்முறை குடிகள் ஆன பொதுமக்கட்கு திருப்தி அளிக்கவில்லை எனவே அரசாங்கத்தில் தங்கட்கும் பங்கு வேண்டினர். அவர்கள் தங்களுக்குள் இருந்து திரிபியூன் என்ற பிரிதிநிதிகளைத் தெரிந்து கொள்ள அநுமதிக்கப்பட்டனர். குடிகள் இம் முறையினாலும் திருப்தி அடையாமல் இடைவிடாது கிளர்ச்சி செய்ததின் பயனாக அவர்கள் படிப்படியாக உயர்ந்த உத்தியோகத்தரைத் தெரிந்து கடைசியில், கி. மு. நாலாவது நூற்றாண்டு இறுதியில் குடிகள் கொன்சலையும் தெரியக் கூடியவர்களானார்கள்.

குடியரசின் உயர்ந்த அவையம் முதுமக்கள் குழு எனப்படும் செனேற்று ஆகும். இச் சபையிலும் முதன் முதல் பிரபுக்களே உறுப்புரிமை பெற்றிருந்தனர். எல்லாச்சட்டங்கட்கும் செனேற்றின் அங்கீகாரம் அவசியமாயிருந்தது. கீழ்ச்சபையொன்று மக்கள் மன்றம் எனப்பட்டது; இதில் குடிகளே உறுப்புப் பெற்றனர். இது செனேற்றைப்போல் அத்தனை வலிமை யுடையதாக இருக்கவில்லை. ஆனால் கி. மு. மூன்றும் நூற்றாண்டளவில் சட்டங்களை ஆக்க மக்கள் மன்றத்துக்கும் உரிமை தரப்பட்டது. படிப்படியாக செல்வரான குடிமக்கள் செனேற்றுச் சபையில் நுழைந்து கொண்டனர். இவ்வாறு காலஞ் செல்லச்செல்ல பிரபுக்களுக்கும் குடிகளுக்கும் இடையே இருந்த வேற்றுமை இல்லா தொழிந்தது.

இவ்வரசியல்முறை சிறிய குடியரசு நாடான உரோமைக்கு ஏற்றதே. ஆனால் உரோமை வன்மைமிக்க பேரரசானதும் அத்தனை பேராச்சியத்தை ஆள இம்முறை ஏற்றதாக இருக்கவில்லை.

வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் விசேடமாக இத்தாலியர் உரோமர் ஆட்சியை வெறுத்தனர். அவர்கள் நன்கு நடத்தப்பட்டார்களாயினும் ஆட்சியில் அவர்கட்கு பங்கு கொடுக்கப்படாததால் அவர்கள் திருப்தி அடையவில்லை.

சுயாதீனப் பிரசைகளான உழவர்கள் போர்களின் பயனாக இல்லாதொழிந்து போனார்களென முன்னர் கண்டோம். உரோமர் வெற்றிகளின் பயனாக பெரும் செல்வம் பெற்றனர்; அவர்களிடம் இது வரை காணப்பட்ட நற்பண்புகளான ஆண்மை, பக்தி பெருமை ஆகியன அழிந்து போயின. அதிகாரத்தை பெறவும் செல்வத்தை ஈட்டவும் சண்டை செய்யும் தன்னலமிக்க பேராசைப் பிரியர் பலர் செனேற்றில் இருந்தனர். நிலமில்லாப் பிரசைகள் விடுகாலிகள்போல் தெருவெங்கும் அலைந்து திரிந்தனர், இவற்றின் பயனாக உரோமையில் உள்நாட்டுப்போர்கள், கலகங்கள், குழப்பங்கள் ஏற்பட்டன. இவ்வகை நிலைவரங்கள் ஒரு நூற்றாண்டளவாக (கி. மு. 153–கி. மு. 31) நிலவின.

சீர்திருத்த முயற்சிகள்

திபேரியஸ், காயுஸ்கிருக்குஸ் என்பவர்கள் இவ்வகை நிலைவரங்களைச் சீர்திருத்த முயன்றனர். அவர் இருவரும் சுயாதீனப் பிரசைகட்கு அவர்கள் நிலங்களைத் திருப்பிக்கொடுக்க முயன்றனர். பெரிய சமீன்களுக்கு சொந்தமான செனேற்றுச் சபையினர் இவரிருவரையும் எதிர்த்தார்கள்; கடைசியில் திபேரியஸ் கொல்லவும் பட்டான். காயுஸ் இத்தாலிய நகரங்களில் உள்ளார்க்கு வாக்குரிமை அளித்து அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறமுயன்றான்; அவனும் கொல்லப்பட்டான்.

இவ்வகையான குழப்பங்கள் நடந்தபோது, மாரியஸ், சல்லா, பொம்பே முதலான இராணுவத் தலைவர்களின் கைக்கு அதிகாரம் மாறியது. உரோமை, மக்கள்பங்கு பெற்ற குடியரசு முறையிலிருந்து ஒருவன் தனி ஆட்சிக்கு மாறியது.

பயிற்சி III

இடைவெளிகளை நிரப்புக:

(1) சுயாதீனப் பிரசைகளான.....உரோமை கொண்டிருந்தது.

(2) போர்களில் இப்பிரசைகளிலனேகர்.....

(3) போர்களிலிருந்து மீண்டவர்கள் தரையை..... விரும்பவில்லை.

(4) செல்வர்கள் நிலங்களை வாங்கி பெரிய.....மாற்றி .....வேலை செய்வித்தார்கள்.

(5) .....மக்களுக்கு என்ன செய்யலாமென்று அரசாங்கத்துக்கு தெரியவில்லை.

(6) உரோமர் தங்கள்.....துரத்திவிட்டு இரண்டு..... .....தங்களை ஆளத்தெரிந்து கொண்டனர்.

(7) நாட்டின்.....அவையம் சென்றேற்று சபை ஆகும்.

(8) முதலில் இதன் உறுப்பினர்.....வமிசத்தவரா வர்.

(9) பொதுமக்கள்.....தங்கள் உரிமையின் பொருட்டு வாதாடினர்.

(10) .....படிப்படியாக சென்றேற்றுச் சபையுள் நுழைந்ததுமன்றி உயர்ந்த உத்தியோகங்களையும் பெற்றுக் கொண்டனர்.

(11) உரோமராட்சிமுறை ஒரு பேரிராச்சியத்துக்கு..... அல்ல.

(12) இத்தாலிய நகரங்கள் அரசாங்கத்தில்..... பெருததால் அதிருப்தியடைந்தன.

(13) சென்றேற்றுச் சபையினர் தங்கள் சிறந்த பண்புகளை இழந்ததுமன்றி அவர்கள்.....உடையவர் களாய்..... பெறவும்;.....பேராசை யில் மயங்கியும் இருந்தார்கள்.

(14) (a) நிலமில்லாத.....கலகத்துக்கும் அரசியல் குழப்பத்துக்கும் காரணமாயினர்.

(b) அரசியலில் அதிருப்தியடைந்த .....கலகத் துக்கும் அரசியல் குழப்பத்துக்கும் காரணமா யினர்.

(c) தகுதியற்ற.....கலகத்துக்கும் அரசியல் குழப்பத்துக்கும் காரணமானது.

(d) சுயநலமும் பேராசையும் உள்ள..... கலகத்துக்கும் அரசியல் குழப்பத்துக்கும் காரணமாயினர்.

(15) படிப்படியாக அதிகாரம் இராணுவத்.....கைக் குமாறியது.

(16) குடியரசாக விளங்கிய உரோமை ஒரு.....ஆட்சிக்கு மாறியது.

IV யூலியஸ் சீசர்

உலகத்தில் தம்புகழ் நிறுவியவர்களில் யூலியஸ் சீசருமொருவர். அவர் ஒரு படைத்தலைவர், அரசியல்வாதி, வரலாற்றுசிரியன், கவிஞன், நாவலன், சட்டஞானி; இவை யாவற்றிற்குமான ஆற்றல் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தது.

கி. மு. 102இல், பிரபுக்கள் குலமொன்றில் இவர் பிறந்தார். வாலிபனாயிருந்தபோது உரோமர் படைவீரனாக கிழக்குப் போர்களில் சண்டைசெய்து குடிமகற்குரிய முடியையும் பெற்றுக்கொண்டான் அவன் உரோமைக்குத் திரும்பியபோது, உயர்ந்த உத்தியோகங்களை வகிப்பதற்கு சட்டஞானமும் வாக்கு வன்மையும் அவசியம் என்பதை உணர்ந்தான். எனவே கிரீசுக்குச் சென்று அங்குள்ள அறிஞரிடம் கல்வி கற்றான். மீண்டும் உரோமைக்கு வந்து ஒன்றன் பின் ஒன்றாகப் பல உயர்ந்த உத்தியோகங்களை வகித்தான் அவன் நாற்பத்து நான்கு அகவையுடையானாயிருந்த காலத்தில் பொம்பே, கிராசுஸ் என்பவருடன் சேர்ந்து மூவராட்சியில் ஒருவனாக விளங்கினான். கி. மு. 59இல் கொன்சலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். மூவராட்சி உறுப்பினர் பேரரசை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். சீசர் மேற்பாகத்துக்கும், பொம்பே நடுப்பாகத்துக்கும், கிராசுஸ் கீழ்ப்பாகத்துக்கும் உரிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர். சீசர் கோல் எனப்பட்ட பிரான்சை வெற்றி கொண்டு, ஜேர்மானியை அடக்கி, பிரித்தானியாவை முறையே கி. மு. 55, 54ம் ஆண்டுகளில் முற்றுகையிட்டான். (110-ம் பக்கத்திலுள்ள பட்டம் பார்க்கவும்). இவ்வாறு நிகழ்ந

போது கிருசுஸ் இறக்கவே, பொம்பே ஓரளவுக்கு உரோமையின் தனி



யூலியஸ் சீசர்

ஆட்சியாளன் ஆனான். சீசரின் வெற்றிகளைக்கண்ட செனேற்றர்கள் சீசரைக் காய்ந்தார்கள். பொம்பேயும் தன்னுடன் போட்டியிடும் ஒரு விரோதி என அஞ்சினான். சீசரை உரோமைக்குத் திரும்பி வரும்படி செனேற்று நிருபம் போக்கியது. சீசர், தான் தனது படையுடன் போகாவிட்டால் தனது உயிருக்கு இடுக்கண் விளைவுமென்பதை அறிந்திருந்தான். தனது படையுடன் இத்தாலிக்குள் அணிவகுந்துச் செல்வது உரோமையைச் சண்டைக்கு அறைகூவி அழைப்பதை ஒக்குமெனவுந் தோன்றியது. அவன் தெற்கு முகமாகச் சென்று உரோம இராட்சியப் பிரிவுகளின் வடஎல்லையாகிய உருபிக்கனில் தங்கினான். சிறிது காலம் யோசனை செய்துவிட்டு உருபிக்கனைக் கடப்பதற்கு தீர்மானித்தான். அவனுடைய படைகள் உரோமையை நோக்கிச்சென்று கொண்டிருந்தன. பொம்பே, தெசாலிக்கு ஓடி ஒழிக்கவே சீசர் உரோமைக்கு அதிபதியானான். அவன் பொம்பேயைத் துரத்து பார்சாலியா என்ற இடத்தில் நடந்த போரில் தோற்கடித்தான். பொம்பே தப்பி எகிப்துக்கு ஓடி அங்கே கொலையுண்டான்.

சீசரின் ஆட்சி

சீசர் கி. மு. 47இல் உரோமைக்கு மீண்டபின் பத்து ஆண்டுகட்கு சர்வாதிகாரி ஆக்கப்பட்டான். பின்னர் ஆயுள்பரியந்தம் சர்வாதிகாரியானான் அவன் செம்மையான ஆட்சி செலுத்தி பல சீர்திருத்தங்கள் செய்தான். முந்திய அத்தியாயத்தில் உரோமையின் குழப்பமான நிலைமையைப் பற்றிப் படித்தோம் சீசர் சட்டங்களை வகுத்து ஒழுங்கை நிலைநாட்டி உரோமையை வன்மையும் வல்லமையுமுள்ள நாடாக்கினான். அவன் செனேற்று இருக்கவும் கொன்சல்களைத் தேரவும் இடங்கொடுத்தானாயினும் அதிகாரம் முழுவதும் அவனிடமே இருந்தது. அவனே உரோமையின் உண்மையான அதிபதியாக இருந்தான். படைகள் அவனுக்குட்பட்டிருந்தன; பெயர் தவிர எல்லாவற்றிலும் அரசன் என விளங்கினான்.

பட்டினங்கள், நகரங்களின் ஆட்சியைத்திருத்தி அமைக்க தனது அதிகாரவல்லமையைப் பயன்படுத்தினான். எல்லாரும் ஒரே சட்டங்களுக்கு பணிய வேண்டுமென்று வற்புறுத்தினான். அவன் நீதியான வரிகளை வகுத்து மக்கள் துன்புறுவகையில் அவற்றை வசூலித்தான். அவன் செய்த அரும் பெரும் வேலைகளில் பஞ்சாங்கத்தைத்திருத்தி அமைத்தது ஒன்றாகும். இவன் அமைத்த யூலியன் பஞ்சாங்கம், 19ம் நூற்றாண்டுவரை, பாப்பரசர் கிறகோரியார் அமைத்த பஞ்சாங்கம் வழக்கத்துக்கு வரும் வரை, வழங்கியது.


சீசர் உரோமைக்கு பல நன்மைகள் புரிந்த போதினும் அவரின் விரோதிகள் பலர் உரோமையில் இருந்தார்கள். அவர் அதிகாரத்துக்கு உயர்ந்ததைக்கண்ட பலர் அவரைக் காய்ந்தார்கள். சிலர் குடியரசு இலட்சியங்களை கொண்டமையால் ஒரு மனிதனின் ஆட்சி என்ற சொல் தானும் அவர்கட்கு வெறுப்பை உண்டாக்கியது. சிலர் சூழ்ச்சி செய்து மார்ச்சு ஈடஸ் நாளன்று (மார்ச்சு மாதம் 15-ந் திகதி) கி. மு. 44 இல் அவரை செனேற்று மண்டபத்தில் வதைத்துக் கொன்றார்கள். பண்டைய உலகத்தின் சிறந்த புருடர்களில் ஒருவன் இவ்வாறு உயிர் நீத்தான்.

அவனைக் கொன்றவர்கள் அதனால் ஒரு மனிதனின் ஆட்சியை அழிப்பதாக எண்ணியிருந்தால் அவர்கள் தவறிப் போனார்கள். பேரரசை ஆள வன்மையும் வல்லமையுமுள்ள ஒரு அதிகாரி வேண்டியிருந்தது. சீசரின் மரணத்தின் பின் நடந்தபோர்களில் அவனுடைய குடும்பத்தில் இரண்டாந் தலைமுறையைச் சேர்ந்த ஒக்ருவியன் வெற்றி வீரனாகி அரசைக் கைப்பற்றினான்.

V அகுஸ்தஸ் சீசர்

ஒக்ருவியன் பின்னர் அகுஸ்தஸ் சீசர் என்ற பெயர்பூண்டு கொண்டான். சீசரின் மரணத்தின் பின் இவனும் மார்க்கு அந்தோனியும் அரசைக் கைப்பற்றிக் கொண்டனர். ஆனால் விரைவில் இவ்விருவருக்கும் பகை மூண்டது. மார்க்கு அந்தோனி எகிப்தில் சுகபோகத்தில் மூழ்கி இருக்கையில் ஒக்ருவியன் உரோமையில் தனது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டான். அவர்கள் கி. மு. 31 இல் அக்சியம் என்ற இடத்தில் போர் செய்தனர்; இதில் மார்க்கு அந்தோனி தோற்கடிக்கப்பட்டான். இவ்வாறு ஒக்ருவியன் உரோமைப் பேரரசின் ஏகாதிபதியானான்.

அவன் அகுஸ்தஸ் சீசர் என்ற பட்டப் பெயருடன் அதிபதியாகி உரோமைப் பேரரசை உன்னதமான நிலைக்கு கொண்டு வந்தான். சீசரைப் போலவே குடிஅரசுக்குரிய வெளி அடையாளங்களை இருக்கவிட்டானாயினும் அதிகாரம் முழுவதையும் தன்னிடமே வைத்துக்



கி. பி. 14 இல் அகுஸ்தீசின் இறப்பின்போது உரோமைப் பேரரசு.

கொண்டான். இவன் உரோமைப் பேரரசை அமைதி உடையதாக் கியுமன்றி அதன் எல்லையை இறைன், தான்யூப்பு யாறுகள் வரை கூட்டிக் கொண்டான் (110-ம் பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்) தம்மிசை பரப்பிய உரோமப்புலவர்களான வேர்சில், ஹொறஸ், ஓவித்து, இலிவி இக்காலத்திலேயே வாழ்ந்தார்கள். நகரத்தில் அழகிய கட்டடங்களை கட்டுவித்தான். இவன் அதிபதியானபோது செங்கற் கட்டடங்கள் உடையதாக இருந்த உரோமை, இவன் இறந்தபோது சலவைக்கற் கட்டடங்களாக மாறி இருந்ததாகக் கூறப்படுகிறது.

இவனுடைய ஆட்சிக் காலத்திலே தான் பலஸ்தீனத்தில் உலகம் முழுவதையும் கவருதற்கு காரணமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கிறீஸ்து பெருமான் திருஅவதாரம் செய்ததே அந்நிகழ்ச்சியாம். அவரைப்பற்றி பின்னர் படிப்போம்.

பயிற்சி IV

இடைவெளிகளை நிரப்புக:

(a) சீசர் ஒரு பெரிய.....

(b) 44 வயதில் பொம்பி, கிருசிஸ் என்பவருடன்..... ஒரு அங்கத்தினனுயிருந்தான்.

(c) கிறீஸ்துவுக்கும் முன் 59இல்.....ஆக நியமிக்கப்பட்டான்.

(d) உரோமைப் பேரரசின்.....பகுதிக்கு சீசர் பொறுப்பு வகுத்தான்.

(e) அவன்.....ஐரோப்பாவை வெற்றிகொண்டு..... இருமுறை முற்றுகையிட்டான்.

(f) அவனுடைய விரோதிகள் சீசரை உரோமைக்கு திரும்பி வரும்படி அறிவித்தார்கள்.

(g) அவன் தனியே போகவில்லை. தனது படையுன்..... கடந்து சென்றான்.

(h) .....தெசாலிக்கு ஓடி ஒழித்தான்.

(i) சீசர் உரோமைக்கு.....பொம்பியை..... என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் தோற்கடித்தான்.

(j) சீசர் உரோமைக்குத் திரும்பி பத்து வருடங்கட்கு..... நியமிக்கப்பட்டான்.

(k) கி. மு. 44 இல், ஆயுள் பரியந்தம்.....ஆனன்.

(l) அவன் விரோதிகளாலும்.....ஆட்சிக்கு எதிரானவர் களாலும் குரூரமாகக் கொல்லப்பட்டான்.

(m) இவனுடைய மரணத்திற்குப்பின் ஏற்பட்டபோர்களின் பயனாக உரோமைப் பேரரசின் ஆட்சி.....ஆகிய இருவருக்கும் கிடைத்தது.

(n) .....உரோமையின் ஏகாதிபதியானான்.

(o) இவனுடைய ஆட்சியில் உரோமை.....அடைந்தது.

VI உரோமை உலகத்திற்குப் புரிந்த நன்மைகள்

எபிரேயர்கள் கடவுள், மதம் ஆகியவற்றைப்பற்றிய புதிய கொள்கைகளை உலகத்திற்கு அளித்தார்கள். கிரேக்கர்கள் பெரும் அறிவு, இலக்கியம், கலை ஆகியவற்றைத் தந்தார்கள். உரோமை உலக நாகரிகத்திற்கு எவ்வாறு உதவிய தென்பதை ஈண்டு ஆராய்வோம். உரோமர்கள் அனுபவ அறிவு படைத்த ஒரு சாதியாராவர். மற்றவர்களிடம் தாம் கற்றுக்கொண்டவைகளை திருத்தியமைப்பதில் வல்லவர்களாய் விளங்கினர். உண்மையில் அநேக விஷயங்களை கிரேக்கரிடமிருந்தே தெரிந்து கொண்டனர். இவர்கள் கிரேக்கர்களை படை வலியால் மேற்கொண்ட போதினும் கிரேக்கர்கள் இவர்களை தங்கள் நாகரிகத்தால் வெற்றி கொண்டார்களென்பது மிகையாகாது. வேறுவகையாகச் சொன்னால் உரோமைப் படைகள் கிரேக்கரை வெற்றி கொண்டன எனினும் கிரேக்க நாகரிகம் பண்பாடு ஆகியன உரோமர்களை வெற்றி கொண்டன.

உரோமர் நாகரிக விருத்தி

அலெக்சாந்தர் கிழக்குக்கு என்ன செய்தாரோ அதனை உரோமர் மேற்குக்குச் செய்தார்கள். அலெக்சாந்தர் தமது வெற்றிகளினால் கிரேக்க நாகரிகத்தை கிழக்கே பரப்பினர். உரோமர்கள் தங்கள் வெற்றிகளால் கிரேக்க கலையையும், பண்பாட்டையும் மேற்கு நாடுகள் அறியச் செய்தார்கள்.

உரோமானியப் புலவர், வரலாற்று நூல் ஆசிரியர், சட்டநூல் அறிஞர், நாடகநூல் அறிஞர் ஆகியவர்களின் எழுத்துக்களை நாம் இன்றும் வாசிக்கக்கூடிய தாயிருக்கிறது. இந்நூல்களிலிருந்து நாங்கள் எத்தனையோ அரிய பெரிய விஷயங்களை அறியக்கூடியதாயிருக்கிறது.

பேரரசுபற்றிய கொள்கைகள்

மேற்கில் முதன் முதல் ஒரு பேரரசை நிறுவினவர் உரோமரேயாவர். ஒரு பேரரசை அமைக்கும் இக்கொள்கை ஐரோப்பாவில்

இன்னும் அழிந்து போகவில்லை. உரோமைப்பேரரசின் வீழ்ச்சி ஏற்பட்டு பன்னெடுங்காலம் கடந்த பின்னும் பார்த்திபரும் படைத்தலைவரும் ஒரு பேரரசையாக்க முயன்று வந்திருக்கிறார்கள். மேற்கு ஐரோப்பாவில் பற்பல நாடுகளும் ஒரு காலத்தில் அல்லது இன்னொரு காலத்தில் தம் பேரரசையாக்க முனைந்து வந்திருக்கின்றன. பிரான்சு, இங்கிலாந்து போன்ற சில நாடுகள் இன்னும் பேரரசு உடையனவாய் விளங்குகின்றன.

அரசியல்பற்றிய கொள்கைகள்

உரோமையிலிருந்தே குடியரசுக் கொள்கைகள் ஐரோப்பாவில் பரந்தன. மக்கள் அல்லது மக்களால் தெரியப்பட்ட பிரதிநிதிகள் நாட்டை ஆள்வதே குடியரசுக் கொள்கையாகும் அதென்சில் மக்கள் திருவுளச் சீட்டுமூலம் தங்கள் பிரதிநிதிகளை தெரிந்தார்கள். உரோமர்கள் தங்கள் அரசர்களை கலைத்து விட்டபின் தங்களை ஆள இரு கொன்சல்களை தெரிந்து எடுத்தார்கள். இவ்வாறு உரோமர்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவதற்கு தேர்வு முறையைக்கையாண்டார்கள். இம்முறை தற்போது ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் வழக்கத்திலிருக்கிறது.

குடியரசுக் கொள்கைக்கு மாறான அரசியல் முறை ஏகாதிபத்திய முறை எனப்படும். இக்கொள்கையும் உரோமையிலிருந்தே உதித்தெழுந்தது. உரோமையில் பாபியஸ்குந்ததோர், யூலியஸ் சீசர் முதலான சர்வாதிகள் தோன்றியதை நாம் முன்னர் கண்டோம். சமீப காலத்திலும்கூட ஹிற்லர், முசலோனி முதலிய சர்வாதிகாரிகள் ஐரோப்பாவில் சில நாடுகளை அரசாண்டார்கள்; இன்றும் ஐரோப்பாவில் சில நாடுகளை சர்வாதிகாரிகள் ஆள்கிறார்கள்.

சட்டம்

பண்டைய உலகத்தில் உரோமர்கள் சட்டம் வகுப்பதில் திறமை உள்ளவர்களாய் விளங்கினர்கள். கி. மு. 506 இல் அவர்கள் சட்டங்களை வெண்கலத்தகடுகளில் பொறித்து வைத்தார்கள். அவர்கள் தாங்கள் வெற்றிகொண்ட நாடுகளில் தங்கள் சட்டங்களைப் புகுத்தினார்கள். இவ்வாறு உரோமானியச் சட்டம் உலகமெங்கும் பரந்தது. கி. பி. 165 இல் ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது இலங்

கையிலும் உரோமன் டச்சுச் சட்டம் என்ற சட்டமுறையை புகுத்தினர் கள். இதில் உரோமானியச் சட்டங்கள் ஒல்லாந்த வழக்கங்களும் கலந்து உள்ளன. உரோமன் டச்சுச்சட்டம் இன்றும் இலங்கைச் சட்ட முறையில் இடம் பெற்றிருக்கிறது.

கட்டட பொறியியல் திறனர்


உரோமர்கள் சிறந்த வெற்றி வீரர்கள், ஆட்சியாளர், சட்ட வரைஞர், மாத்திரமல்ல சிறந்த கட்டடக்கலை நிபுணர்களாயும், பொறி இயல் வல்லுனராயும் திகழ்ந்தார்கள்.

கட்டடக்கலையில் உரோமர் கிரேக்கரிடமிருந்து தாம் கற்றுக் கொண் டவைகளை செம்மை செய்து கொண்டார்கள். எத்திறல்களிடமிருந்து வில் மாடங்களை அமைக்கும் முறையை தெரிந்து கொண்டார்கள். கொங்கிறீற்றுக்கலவை செய்யும் முறையும் இவர்கட்கு தெரிந்திருந் தது. கட்டடக் கலையிலும், பொறியியலிலும் அவர்களின் பெருமை வில்மாடம் அமைப்பதில் முதலிடம் பெற்றிருந்தது. அவர்கள் தாங் கள் கட்டிய கட்டடங்களிலும், பாலங்களிலும் நீர்க்குழாய்களிலும் வில்மாடங்களை அமைத்தார்கள். கொலிசியம் போன்ற பெரிய நாடக அரங்குகளையும் வில்மாடங்கள் பல அமைய கட்டினர்கள். வில்மா டங்களை திருத்தி அமைத்து "பான்தயன்" போன்ற வில்மாடக் கூரை களுடைய கட்டடங்களையும் கட்டினர்கள்.


உலகின் கட்டடக்கலை உரோமருடைய வில்மாடம், வில்மாடக் கூரை ஆகியவற்றால் பெரிதும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நூத னசாலை, கொழும்பு நகர மண்டபம், பாவிமேந்துக் கட்டடம், அர்ச். லூசியம்மாள் மாதேவாலயம் ஆகியன உரோமானியக் கட்டட முறை யைப்பின்பற்றிக் கட்டடப்பட்ட கட்டடங்களாய் இலங்கையில் விளங்கு கின்றன. பண்டைக்காலத்தில் உரோமர்கள் தெருக்கள் அமைப்பதிலும் சிறந்து விளங்கினர்கள். தூரத்தேயுள்ள நாகரங்களை உரோமை யுடன் இணைக்கும் அகலமும் நீளமுமான பல தெருக்களை அமைத் தார்கள். இத்தெருக்கள் பல கற்கள் தூரமுடையனவாயும் மேடுகள் பள்ளங்களின் ஊடே செல்வதாலும் அமைக்கப்பட்டன. உரோமா னியப் படைகள் தெருக்களிலே அணிவகுத்துச் சென்று அமைதி யையும் ஒழுங்கையும் நிலைநாட்டின. உள்நாட்டுக் கலகங்களை அடக் கின; பிறநாட்டு முற்றுகைகளைத்தடுத்தன. தெருக்களின் மூலமே உரோமைப் பேரரசின் வர்த்தகம் நடைபெற்றது. இத்தெருக்களில் அழிந்துபோன சில பகுதிகளை இன்றும் காணலாம். உரோமருக்கு தெரு அமைக்கத்தெரிந்திருந்த காலத்திலிருந்து 1,500-ம் ஆண் டுகளுக்குப் பின்னர்தான் மற்ற ஐரோப்பியர்கள் உரோமர் அமைத் தது போன்ற சிறந்த தெருக்களை அமைக்கத் தெரிந்து கொண்டார்கள்.




பாக்தாத்திலுள்ள ஓர் உரோமானிய வில்மாடம்



இஸ்பானியாவிலுள்ள ஓர் உரோமானியப் பாலம் (இன்றும் போக்குவரவுக்கு உபயோகப்படுகிறது) பால அமைப்பில் வில்மாடம் அமைந்திருக்கு மாதிரியை நோக்குக.



கொலிசியம் (வெளித்தோற்றம்)
(தூண்களும் வில்மாடங்களும் அமைந்திருக்கும் விதத்தை நோக்குக)



கொலிசியம் (உட்தோற்றம்)
இங்கே திருவிழா நாட்களில் மற்போர் காண உரோமர் கூடுவார்கள். பிற்காலத்தில் கிறிஸ்துவர்கள் இங்கேதான் கெத்துக்கு இரையாக வீசப்பட்டார்கள்.

பண்டைய உலகிலே நாகரிக வளர்ச்சியை நாம் பின்நோக்கி ஆராய்ந்தால் உயர்ந்த நாகரிகங்கள் நைல், ரைகிரிஸ், யூப்பிறற்றிஸ் ஆற்றோரங்களில் வளர்ந்தது எங்கள் நினைவுக்குவரும். இந் நாகரிகங்கள் ஈசியன் நகரங்கட்கு எவ்வாறு பரம்பினது என்பதையும் படித்தோம். ஈசிய மக்கள் தாம் அறிந்து கொண்டவற்றை எவ்வாறு வளர்த்தார்கள் என்றும் அவை கிரேக்கர்களிடமிருந்து எவ்வகையில் பரம்பினதென்றும் அறிந்தோம். கிரேக்கர் தாம் அறிந்து கொண்டவைகளை வளர்த்த விதத்தையும் அவை எத்ரஸ்கர் கிரேக்க குடியேற்றக்காரர்கள் ஆகியவர்களால் இத்தாலிக்கு கொண்டுவரப்பட்டதையும் தெரிந்து கொண்டோம். உரோமர்கள் இவர்களிடமிருந்தும் தாம் வெற்றிகொண்ட கிரேக்க இராச்சியங்களிலிருந்தும் கற்றுக் கொண்டவைகளை அபிவிருத்தி செய்து உரோம நாகரிகத்தை ஐரோப்பிய நாடுகளிலும் உலகின்ஏனைய நாடுகளிலும் பரப்பினர்கள்.

பயிற்சி

1. யாரிடமிருந்து உரோமர் அநேக விஷயங்களைக் கற்றுக்கொண்டார்கள்?
2. உரோமானிய நாகரிகம் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு எவ்வாறு பரம்பியது?
3. எவ்வரசியற் கொள்கைகள் உரோமையிலிருந்து பிறநாடுகட்குப் பரம்பின?
4. உரோமன் டச்சுச் சட்டம் இலங்கையில் வழக்கத்திற்கு வந்தது எப்படி?
5. கிரேக்க கட்டடக் கலையில் உரோமர் என்ன அம்சங்களைப் புகுத்தினர்கள்?
6. உரோமர் தெருக்களை ஏன் அமைத்தார்கள்?
7. உரோமைப் பேரரசின் வீழ்ச்சி நிகழ்ந்து எவ்வளவு ஆண்டுகட்குப்பின் மற்றவர்கள் உரோமானியர் அமைத்தது போன்ற தெருக்களை அமைத்தார்கள்?

VII கிறிஸ்துவமத எழுச்சி

2 ஆவது அத்தியாயத்தில் யூதர்களின் வரலாற்றைப்பற்றிப் படித்தோம். அவர்கள் பல தேசங்களிலும் அலைந்து கடையில் பலஸ்தினத்தில் நிலபதிகளாய் குடியேறியதையும் கண்டோம். அன்னர் எகிப்தியர், பபிலோனியர் பாரசிகர் போன்ற பல சாதியாருக்குக் கிழ்ப்படிந்து இருந்தார்கள். பொம்பி கி. மு. 72 இல் மித்திரிதத தசைத் தோற்கடித்தபோது பலஸ்தினம் உரோமைப் பேரரசுக் குட்பட்டது. யூதர்களும் உரோமராட்சிக்கு உட்பட்டனர். உரோமர்

இவர்களுடைய அரசர்களே ஆட்சிசெய்யவிட்டாலும் இவ்வரசர்களே மேற்பார்க்கவும் கட்டுப்படுத்தவும் உரோமைத் தேசாதிபதிகளே நியமித்தனர்.

அகுஸ்துஸ் சீசர் எவ்வாறு உரோமைப் பேரரசின் ஏகாதிபதியானான் என்று முன்னர் கண்டோம். இவனது ஆட்சியின் 10–ஆவது ஆண்டில் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த ஊர்களுக்குப் போய் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்ய வேண்டுமென்று, இவனொரு சட்டம் பிறப்பித்தான். யேசுநாதரின் தாய், தந்தையர்களான யோசேப்பும், மரியம்மாளும் நசரேத்து என்னும் ஊரிலிருந்து தங்கள் சொந்த ஊராகிய பெத்தலேகேமுக்கு தங்கள் பெயர்களை பதிவு செய்யப்போனார்கள். அங்குள்ள சத்திரங்களில் தங்குவதற்கு அவர்களுக்கு இடம் கிடைக்காததினால் ஒரு மாட்டுக்கொட்டிலில் தங்கினார்கள். அந்த ஏழ்மையான குடிலிலே கிறீஸ்துவ மறையின் தாபகரான இயேசுக் கிறீஸ்துநாதர் பிறந்தார். உலக வரலாற்றின் நிகழ்ச்சிகள் இத்திகதியிலிருந்து கணக்கிடப்படுகின்றன. இவரின் பிறப்புக்கு முன் நிகழ்ந்தவைகளை கி. மு. (கிறீஸ்துவுக்குமுன்) என்ற எழுத்துக்களாலும், பின் நிகழ்ந்தவைகளை கி. பி. (கிறீஸ்துவுக்குப் பின்) என்ற எழுத்துக்களாலும் குறிப்பிடுவது வழக்கமாயிருக்கிறது.

கிறீஸ்துவின் வாழ்க்கையும் போதனைகளும்

இயேசுக் கிறீஸ்துநாதர் 30 வயதுவரையும் தமது பெற்றோருக்கு கீழ்ப்படிந்து இருந்தார். என்பதைத்தவிர அவருடைய பாலியப் பராயத்தைப்பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது. 30 வயதில் அவர் தம் திருப்பணியைத் துவக்கினர். அப்போஸ்தலர் எனப்படும் பன்னிரு மாணவர்களைத் தெரிந்து ஊரெங்கும் சுற்றி பிரசங்கங்கள் செய்ததுமின்றி மக்களுக்கு நன்மைகளும் செய்தார். அவர் துன்புற்றவருக்கு சுகமளித்தும் குருடருக்கு பார்வை தந்தும், இறந்தவர்களை எழுப்பியும் பல அற்புதச் செயல்களைச் செய்தார் என்றும் கூறப்படுகிறது. அவர் தாம் தேவகுமாரன் என்றும், மக்களை இரட்சிக்கவே இவ்வுலகத்திற்கு வந்தார் என்றும் சொன்னர்.

அவருடைய போதனைகள்: அவர் அன்பும், அமைதியும் உடைய ஒரு மறையைப் போதித்தார். தேவசினேகமும் பிறசினேகமுமே அவருடைய போதனையின் மூலாதாரக் கொள்கைகளாம். யூதர்கள் இவ்வளவு காலமும் கடவுள் நீதியும் கடுமையுமுடையவரென எண்ணினர்கள். ஆனால் இயேசுக்கிறீஸ்து நாதர் கடவுள் மக்களில் அன்பான ஒரு தகப்பனென்றும் மக்களெல்லாரும் உடன்பிறவிகளென்றும் போதித்தார். ''நீ பிறர் உனக்குச் செய்ய விரும்புவதை மற்றவர்களுக்கும் செய்'' என்ற பொன்மொழிகளை அவர் வற்புறுத்திக் கூறினர். அவருடைய போதனைகள் அவர் மலை மேற்செய்த


சொற்பொழிவில் இரத்தினச் சுருக்கமாக மிளிர்கின்றன. அச்சொற் பொழிவில் நன்மை, தூய்மை, தாழ்மை, நடுநிலைமை, அன்பு ஆகிய பண்புகளைப்பற்றி இடித்துரைத்தார். பிறரை நேசிக்கவேண்டுமென்ற பொன்மொழிகளிலும உயர்ந்ததோர் உபதேசத்தை அவர் அருளினர். நீங்கள் உங்கள் மித்துருக்களை நேசித்து சத்துருக்களைப் பகைக்க வேண்டுமென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்கள் பகைவர்களையும் நேசிக்கும்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களை நிந்திக்கிறவர்களை வாழத்துங்கள். உங்களைப்பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை வெறுக்கிறவர்களுக்காகவும் துன்புறுத்துகிறவருக்காகவும் பிரார்த்தியுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வீர்களாயின் நீங்கள் மோட்ச வீட்டிலுள்ள உங்கள் தந்தையின் உண்மையான பிள்ளைகளாவீர்கள். என்பனவே அவர் அமுத வாக்குகளாம்.

அவர் சிலுவையிலறையப்படல்

இயேசுக் கிறீஸ்துநாதரின் போதனைகள் பொதுமக்கட்கு இனிமையாக இருந்தன. ஆனல் யூதத் தலைவர்கள் அவற்றை வேம்பென வெறுத்தனர். காத்திருந்தவரெனப் பொருள்படும் மேசியா தங்களை உரோமர் ஆதிக்கத்தினின்றும் விடுதலை செய்வாரென்று அவர்கள் காத்திருந்தார்கள். கிறிஸ்துநாதரின் போதனைகள் அவர்கட்கு ஏமாற்றத்தை அளித்தது. கிறீஸ்துநாதர் தாம்தாமே மேசியா என்றும், ஆனல் தனது இராச்சியம் இவ்வுலகத்திற்கு உரியது அல்ல மறு உலகத்திற்கு உரியதென்றும் கூறினர்; அன்றியும் யூதர்களில் சிலரை பாசாங்குக்காரர், உருத்திராட்சப் பூனைகள் என்றும் கண்டித்தார் ஒரு முறை செருசலேம் தேவாலயத்தில் வட்டிக்கடை நடத்திய யூதர்களை ''தேவாலயம் செபத்தின் வீடு'' எனவும் ''நீங்கள் இதைக் கள்ளர் குகைகள் ஆக்கினீர்கள்'' என்றும் சொல்லி அடித்துத் துரத்தினர். இக்கண்டனைகளுக்கு ஆளான யூதர்கள் கிறீஸ்துநாதரைப் பகைத்தார்கள் அவர்கள் தங்களுள் சூழ்ச்சி செய்து போஞ்சியூ பிலாத்து என்ற உரோமத் தேசாதிபதியைக் கொண்டு அவரை கொலைசெய்யும்படி தீர்ப்பிடச் செய்தார்கள். அவர் ஒரு தீவினைஞனைப்போல் மரச்சிலுவையிலறையப்பட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னர் சிலுவை கிறீஸ்துவர்களின் அடையாளமாகவும், இரட்சணியத்தின் அறிகுறியாகவும் விளங்கிவருகிறது.

இயேசுக் கிறீஸ்துநாதர் கொல்லப்பட்டபோது அவர் மாணவர்களும் சிடர்களும் பயப்பிராந்தி கொண்டு ஓடி ஒழித்தார்கள் இடையன் இல்லா ஆட்டு மந்தை போலானர்கள். பயந்து நின்ற இம்மனிதர்களுக்கு ஆறுதலாக ஓர் அற்புத சம்பவம் நிகழ்ந்தது. கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையுண்டு மரணித்த மூன்றும் நாள் உயிர்த்து

எழுந்து மோட்சத்திற்கு உத்தானம் ஆகும்வரை 40 நாட்கள் தம் மாணவர்களுடன் இருந்தார் என்று சுவிசேடங்கள் உரைக்கின்றன. அஞ்சி ஒடுங்கிய அவர் மாணக்கர்கள் தைரியம், நம்பிக்கை, உற்சாகம் உடையவர்களாகி திடசித்தத்துடன் கிறீஸ்துநாதரின் போதனைகளை பல இடங்கட்கும் சென்று போதிக்கத் தலைப்பட்டார்கள்; கிறீஸ்து வழியைப் பின்பற்றுமாறு சனங்களைத் தூண்டினர்கள்.



இயேசுக் கிறீஸ்துநாதர் சிலுவையிலறையப்படல்
(ஓர் ஓவியம்)

கிறீஸ்துவ மதம் பரம்புதல்

கிறீஸ்துவின் மாணக்கர்கள் கிறீஸ்துவ மறையைப் போதித்து வரும் காலத்தில் அவர்கட்குப் பலர் இடும்பைகள் புரிந்தார்கள். இவ்வாறு இடும்பை விளைத்தவருள் சவுஸ் என்று ஒருவன் இருந்தான் கிறீஸ்தவர்களைத் துன்புறுத்த இவன் போய்க்கொண் டிருக்கையில் தமாஸ்குஸ் என்ற இடத்தில் இவனிடம் ஒரு அற்புத மாற்றம் ஏற்பட்டது. இவன் கிறீஸ்துவனகி கிறீஸ்துவ மறையைப் பரப்ப பல அரும் பெரும் காரியங்கள் செய்தான். ''உலகம் எங்கும் போய் போதனை செய்யுங்கள்'' என்று இயேசுக் கிறீஸ்துநாதர் தம் மாணவர்களுக்கு கற்பித்தார். இத்துணை காலமும் யூதருக்கே போ தனை செய்த அவர் மாணவர் அகில உலகத்திற்கும் போதனை செய்யப்

புறப்பட்டார்கள் அவர் தம் திருப்பணியைச் செய்வதற்காக சின்ன ஆசியா, கிறீஸ், உரோமை முதலான நாடுகளுக்குச் செலவு செய்தார் கள். தொம்மை அப்பர் என்ற அவர் மாணவர் இந்தியாவரை வந்து இந்தியாவின் தென் மேற்குப் பகுதிகளில் கிறீஸ்துவ மறையைப் போதித்தார். கிறீஸ்துநாதரின் மாணவர் பல துன்பங்களை அனுபவித் தார்கள். சிறையில் அடைக்கப்பட்டனர் சிலர். சித்திர வதை செய்யப் பட்டனர் பலர்; கொல்லவும்பட்டனர் அனேகர், ஆனல் கிறீஸ்துமத மோ நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தது.

கிறீஸ்து மதத்தை உரோமைப் பேரரசர் பகைத்தல்

மேற்கத்திய நாகரிகத்திற்கு உரோமை மையமாக விளங்குவதை பேதுரு பாவுலு என்ற கிறீஸ்துவின் சீடர் உணர்ந்தார்கள். எனவே கிறீஸ்துவ மதத்தைப் பரப்புவதற்கு உரோமையை நாடிச்சென்றனர். உரோமையில் கிறீஸ்தவ மதம் வேருன்றிவிட்டால் உரோமைப் பேரரசு முழுவதும் கிறீஸ்தவ மதத்தைப் பரப்பலாமென்று அவர் எண்ணினர். அங்கும், வேதகலாபனையும் பேதுரு, பாவுலுவின் வேத சாட்சி மரணங்களும் நிகழ்ந்தபோதிலும் கிறீஸ்துவ மதம் நாள் தோறும் வளர்வதாயிற்று. அங்கிருந்தும் மேற்கு ஐரோப்பிய நாடுக ளுக்கு பரம்பினது. இப்பொழுது கிறீஸ்துவ மதத்திற்கும் உரோமை பேரரசுக்கும் முரண் ஏற்பட்டது. மக்கள் உரோமைப் பேரரசுகளை கடவுளரென மதித்து பலியும்கூட கொடுத்தார்கள்; கிறீஸ்துவர்கள் இதனை மறுத்து ஒரே கடவுளைத்தான் வணங்குவோமென துணிந் துகூறினர். கிறிஸ்துவமறை பரம்பினுல் மக்கள் தங்களைக் கடவுளாக மதிக்கமாட்டாரெனவும் அதனுல் தங்கள் வல்லமை அழிந்து போகும் என்றும் உரோமைப் பேரரசர் அஞ்சினர்கள். உரோமையின் உயர் குடிகளின் சீர்கெட்ட நடத்தைகளை கிறீஸ்துவ மதம் கண்டித்ததின் பயனக உரோமை உயர்குடிகளும் கிறீஸ்துவ மதத்தை அருவருத் தனர். இவற்றின் பயனக கிறீஸ்தவர்கள் 300 ஆண்டுகள்வரை பயங்கரமான துன்பங்கட்கும் இடும்பைகட்கும் இலக்காய் இருந்தார் கள் நீரோ தியக்கிளேசியன் என்ற பெருமன்னர்கள் ஆண்ட காலத்தில் கிறீஸ்தவர்களின் இரத்தம் உரோமையில் ஆருக ஓடியதென்று கூறுவது பொருத்தமானதே. கிறீஸ்தவர்களை எலிகளைப்போல் வேட்டை யாடினர்கள்; அடிமைகளாக விற்கப்பட்டோர் அனேகர்; பலரை தீயிலிட்டுப் பொசுக்கினர்; விழாக்களில் உரோமானியச் சனக்கூட்டங் கள் கண்டுகளிக்க கிறீஸ்துவர்களை அரங்குகளில் சிங்கங்கட்கு இரையாக எறிந்தார்கள். இவ்வகையான இம்சைகளை கிறீஸ்தவர்கள். அனுப விக்கதபோதிலும் கிறீஸ்துவ மதம் வளர்ச்சி அடைந்து கொன்ஸ்தந் தீன் என்ற பேரரசன் கி. பி. 313 இல் கிறீஸ்தவ மறையைத் தழுவிய

போது, உரோமைப் பேரரசை வெற்றி கொண்டது. இவ்வாறு கிறீஸ்துவ மதம் உரோமைப் பேரரசின் முக்கிய மதமாக கைக்கொள்ளப் பட்டது.

கிறீஸ்துவமத வளர்ச்சிக்கான காரணங்கள்

கிறீஸ்தவ மதவளர்ச்சிக்கான காரணங்கள் பின்வருமாறு (a) கிறீஸ்தவமத தாபகரின் பெருமையும் அவர் போதனைகளின் சிறப்பும் (b) கிறீஸ்துவ மத அனுசாரிகளின் உற்சாகமும் எடுத்துக்காட்டான வாழ்க்கையும் (c) எல்லாருடைய உள்ளங்களையும் கவரக்கூடிய ஒரு மதம் உரோம இராச்சியத்தில் அக்காலத்துக்கு அவசிய மாயிருந்தது. (d) உரோமைப் பேரரசின் அமைதியும் ஒழுங்கும், அது அமைத்த தெருக்களும் கிறீஸ்தவ ஊழியர்களின் வேலையை எளிதாக்கியது (e) வேத அபிமானிகள் வேதத்திற்காக உயிர்விடுவதைக்கண்ட மக்கள் அதில் ஏதோ ஒரு அற்புத சக்தி இருக்கிறதென்று உணர்ந்தார்கள் (f) அவசிய காலங்களில் கிறீஸ்தவ ஊழியர்களின் ஒப்பற்ற பணிகள்.

பல மதங்களில் ஒன்றுக கிறீஸ்துவ மதம் ஆரம்பித்து படிப்படியாக அது உரோமைப் பேரரசின் மதமாகவும் நிலைத்தது.

பயிற்சி V

1. கிறீஸ்து பிறந்தபோது உரோமைப் பேரரசனுயிருந்தவன் யார்?
2. யோசேப்புவும் மரியம்மாளும் ஏன் பெத்தலேகேமுக்குப் போனர்கள்?
3. கிறீஸ்துநாதர் எவ்வகையான வீட்டில் பிறந்தார்?
4. (a) கி. மு. (b) கி. பி. என்றல் பொருள் என்ன?
5. கிறீஸ்துநாதர் தம் திருப்பணியை எந்த வயதில் துவக்கினர்?
6. அப்போஸ்தலர்கள் என்றல் யாவர்?
7. கிறீஸ்துநாதர் தாம் யார் என்று கூறினர்?
8. அவருடைய போதனைகளின் மூலாதாரமான கொள்கைகளெவை?
9. மலைமேற் சொற்பொழிவில் என்ன விஷயங்களைப்பற்றி வற்புறுத்திக் கூறினர்?
10. யூதர்கள் அவரை ஏன் சிலுவையில் அறைந்தார்கள்?
11. அவர் உயிர்த்து எழுந்தபின் அவருடைய மாணவர்களிடையே காணப்பட்ட அற்புத மாற்றங்களெவை?
12. உரோமைக்குப்போன அவர் சிடர்கள் யாவர்?

13. அவர்கள் அங்கே ஏன் போனர்கள்?
14. உரோமையில் கிறீஸ்தவர்கள் ஏன் துன்புறுத்தப்பட்டார்கள்?
15. கிறீஸ்துவ்மறை உரோமைப் பேரரசை வெற்றிக்கொண்டது இதை விளக்குக.

VIII நித்திய நகரமான உரோமை

தைபர் ஆற்றங்கரையில் இருந்த ஒரு சிற்றூர் படிப்படியாக ஒரு வன்மையுடைய பேரரசின் பெருநகரமாக வளர்ந்ததை இதுகாறும் கண்டோம். உரோமையின் பாட்டாளி மக்களான விவசாயிகள் முதல் முதல் முழு இத்தாலியையும் வெற்றி கொண்டார்கள். பின் அவர்கள் கார்தேச்சின்மீது கொண்ட வெற்றிகளினல் அவர்கள் அதிகாரம் மேற்கு மத்தியதரையைச் சூழ்ந்த நாடுகளில் பரவியது. அடுத்து அவர்கள் கிழக்கும், மேற்கும், வடக்கும் பல நாடுகளை வெற்றி கொண்டார்கள். உரோமைப் பேரரசின் எல்லைகள் கிழக்கே யூப்பிறற்றிஸ் நதியும், மேற்கே ஸ்பானியா, பிரான்ஸ், பிரித்தானியாவும், வடக்கே றைன் தான்யூப் நதிகளும், தெற்கே அராபிய வனுதரங்களாகவும் இருந்தன. அவர்கள் தாங்கள் வெற்றிகொண்ட மக்களின் நாகரிகத்தை விசேடமாக கிரேக்க நாகரிகத்தை கைக்கொண்டு அதனை திருத்தி அமைத்தார்கள். அவர்கள் நாகரிகம் ஐரோப்பா எங்கணும் பரவியது. உரோமை மேற்கத்திய நாகரிகத்தின் மையமாகப் பிரகாசித்தது.

எல்லாத் தெருக்களும் உரோமையை நோக்கிச் சென்றதென்று முன்னர் கூறப்பட்டது. எல்லாத் தெருக்களும் உரோமையிலிருந்து தொடங்கி ஐரோப்பாவின் ஏனைய பாகங்களுக்குச் சென்றதென்பதே பொருத்தமுடையது. இத்தெருக்களின் ஊடாகவே உரோமைத் தேசாதிபதிகள் உரோமை மாகாணங்களை ஆளச்சென்றார்கள். உரோமைச் சேனைகள் இத்தெருக்களில் சென்றுதான் உரோமை எல்லைகளில் அமைதியை உண்டாக்கினர்கள். நீதிபதிகள் இத்தெருக்களிலே சென்றுதான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினர். இத்தெருக்களின் வழியாகத்தான் வர்த்தகர்களும் ஏனைய தொழிலாளிகளும் உலகத்தில் அங்கங்கு காணப்படும் பொருட்களை, உரோமைக்கு கொண்டுவந்தார்கள் உரோமையிலிருந்து மக்கள் ஆங்காங்கு சென்று குடியேறினர்கள்; அவர்கள் குடியேற்றங்கள் சின்ன உரோமைகளாக மாறின. ஆங்கு அவர்கள் உரோமானிய வாழ்க்கைமுறையைக் கைக்கொண்டார்கள்; பட்டணங்களைக் கட்டினர்கள். வீடுகளையும் நாடக அரங்குகளையும் பாலங்களையும் நீர்க்குழாய்களையும் உரோமானிய முறையில் கட்டினர்.

உரோமை வனப்புமிகுந்த ஒரு நகரமாக இருந்தது. பேரரசர்கள் இந்நகரத்தை அழகிய கட்டடங்களாலும் சிற்பக்கலைகளாலும் அழகு படுத்தினர்கள். அக்காலத்தில் இருந்த மக்கள் சிறப்புள்ள உரோமை என்றும் நிலைநிற்குமென எண்ணி அதற்கு நித்திய நகரமெனப் பெயரிட்டனர். ஒருவகையில் அவர்கள் செய்தது சரியே; உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னும் உரோமையின் பெருமை அழியாமல் நிலைத்திருக்கிறது. கிறீஸ்துவபறை உரோமைப் பேரரசை வெற்றி கொண்டது. உரோமை கிறீஸ்துவ மறையின் தாயகமானது. உரோமையிலிருந்தே கிறீஸ்துவ மதம் ஐரோப்பாவிலுள்ள நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் பரம்பியது. பாப்பரசர்கள் உரோமையிலிருந்தே தம் ஞான ஆட்சியை நடத்தி வருகிறார்கள். கிறீஸ்துவ மறையில் பல பிரிவுகள் ஏற்பட்டாலும் பெரும் பிரிவினதாகிய கத்தோலிக்க மதத்தின் தலைவராக பாப்பரசர் இன்றும் உரோமையில் இருக்கின்றார். இன்று அகில உலகிலுமிருக்கும் கத்தோலிக்கர்கள் மதவிஷயங்களில் பாப்பரசருக்கு கீழ்ப்படிந்து வருகிறார்கள். கத்தோலிக்கர் அல்லாதவர்கள் ஏனைய விஷயங்களிலும் பாப்பரசர் சொல்லுவதை அவதானிப்பதுமன்றி அதற்கு ஒரு தனிமதிப்பும் கொடுக்கின்றார்கள். உரோமையில் பாப்பரசர் இன்றும் இருப்பதால் அதனை நித்திய நகரமென்பது பொருத்தமுடையதேயாகும்.

Vம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. கொருசியஸ், சின்சினத்து, இரகுலுஸ் ஆகியவர்களின் சரிதைகளைக் கூறி ஒவ்வொருவரின் சரித்திரங்களும் உரோமர்களின் எவ்வெவ் உயர்ந்த பண்புகளை சித்திரிக்கின்றன என்றும் கூறுக.
2. உரோமை கார்தேச்சை அழிக்க ஏன் ஆத்திரப்பட்டது?
3. கீழ்வரும் தலைப்புகளில் 2 ஆவது பியூனிக்கு யுத்தங்களைப்பற்றி சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
   (a) காரணங்கள்.
   (b) இத்தாலியில் கனிபலுடைய செயல்கள்.
   (c) கார்தேச்சை முற்றுகையிடல்.
   இறுதிப் போர்.
4. உரோமர் வெற்றிகளால் ஏற்பட்ட பலாபலன்களை பின்வரும் அம்சங்களில் ஆராய்க.
   (a) உரோமையின் சுயாதீனப் பிரசைகள்.
   (b) உரோமரால் வெற்றி கொள்ளப்பட்டவர்கள்.

   (c) உரோமரின் உயர்ந்த பண்புகள்.
   (d) குடியரசுமுறை ஆட்சி.
5. யூலியஸ் சீசரின் வாழ்க்கை வரலாற்றை கீழ்வரும் தலைப்புகளைக் கொண்டு சுருக்கி எழுதுக.
   (a) அவரின் பாலிய வாழ்க்கை.
   (b) மூவராட்சிக் குழு.
   (c) பிரான்சிலும் பிரித்தானியாவிலும் சீசர்.
   (d) உரோமைக்குத் திரும்பி வருதல்.
   (e) சீசரும் பொம்பியும்.
   (f) உன்னத ஆட்சியாளன்.
   (g) அவரின் ஆட்சி.
   (h) இறப்பு.
6. உரோமை உலகத்திற்குத் தந்தவைகளை உமது சொந்த வாக்கியங்களில் எழுதுக.
7. கிறீஸ்துநாதரின் வரலாற்றையும் போதனையையும்பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு எழுதுக; கிறீஸ்துவ மதம் என்ன காரணங்களினால் பரம்பியது?
8. உரோமானிய அரசர்கள் கிறீஸ்துவர்களை ஏன் துன்புறுத்தினார்கள்? கிறீஸ்துவ மறையின் வெற்றிக்கு அடிப்படையான நிகழ்ச்சி யாது?
9. உரோமை ஏன் நித்திய நகரம் என்று பெயர் பெற்றிருக்கிறது?
10. அகுஸ்துஸ் சீசருடைய மரணத்தின் போது இருந்த உரோமைப் படங்கீறி கீழ்வருவனவற்றையும் குறிப்பிடுக.
    (a) இத்தாலி, சிசிலி, இஸ்பானியா, கிறீஸ், எகிப்து, கோல் (பிரான்சு), சிரியா ஆகிய தேசங்கள்.
    (b) தைபர், றைன், தான்யூப்பு நதிகள்.
    (c) உரோமை, கார்தேச்சு, கனனு, சாமா ஆகிய நகரங்கள்.

6–ம் அத்தியாயம்

பௌத்தம் அதன் தோற்றமும் வளர்ச்சியும்

1. பூர்வ ஆரியர்களின் மதம் 2. பிராமணியம் 3. பிராமணியத்தில் அதிருப்தி 4. கௌதம புத்தர் 5. பௌத்தமும் பிராமணியமும் 6. மௌரியப் பேரரசு 7. மௌரியக் கலைகள்.

I பூர்வ ஆரியர்களின் மதம்

3–ம் அத்தியாயத்தில் இந்தியாவின் பூர்வ ஆரிய குடிபதிகளைப் பற்றி படித்தோம். இவர்கள் அனுசரித்த மதம் மிகவும் சாதாரணமானது. இந்தச் சதாரண மதத்தினின்றே உலகம் பெரு மதங்களிலொன்றான இந்துமதம் படிப்படியாக உண்டானது. பௌத்தம், கிறீஸ்தவம் ஆகியன அவற்றின் தாபகர்களின் பெயர்களைக் கொண்டு அறியப்படுவதைப்போல் இம்மதம் பெயர் பெறவில்லை. இது முதல் உண்டான இடமான இந்து நதியின் பெயரைப் பெற்றது.

கடவுளர்கள்

பூர்வ ஆரியர், சூரியன், அக்கினி, இடி முதலானவற்றை தெய்வங்களென நினைத்து அவற்றை வணங்கினர்கள். ஞாயிற்றை சூரியன் எனவும், தீயை அக்கினி எனவும், இடியை இந்திரன் எனவும் ஆகாயத்தை வருணன் எனவும் வழங்கினர்கள்.

வணக்கம்

நல்ல அறுவடை, போர்களில் வெற்றி, ஆண் மகப் பேறு முதலான இவ்வாழ்க்கைக்குரிய அருள்கள் வேண்டி இத்தெய்வங்களை வணங்கினர்கள். இத்தெய்வங்களின் அருள்களைப் பெறும்பொருட்டு பழங்கள், சமைக்கப்பட்ட உணவுகள், பூக்கள், சோம பானம் ஆகியவற்றை தெய்வங்களுக்கு காணிக்கையாக ஒப்புக்கொடுத்தார்கள். இக்காணிக்கைகள் ஆரிய சமுகத்திலே பூசாரிகளாய் விளங்கிய பிராமணர்களுக்கு சாதராணமாக கொடுக்கப்பட்டன. பிராமணர்கள் அவற்றை தெய்வங்கட்கு ஒப்புக்கொடுத்தனர்.

சமயக் கொள்கைகள் சில


பூர்வ ஆரியர் இன்பம் நிறைந்த கவலையற்ற மக்களாயிருந்தார்கள். மரணத்தின் பின் மனிதர் எம இராச்சியத்திற்கு போனார்கள் என்று நம்பினர்கள். ஆனல் மரணத்தின் பின் உள்ள

வாழ்வைப்பற்றி அவர்கள் அவ்வளவு கவலை கொள்ளவில்லை; வாழ்க்கையிலே எவ்வளவு இன்பத்தை நுகரலாமோ அதனைப் பெறுவதிலேயே கண்ணுயிருந்தனர்.

II பிராமணியம்

தெய்வங்கள்

கி. மு. 6–ஆம் நூற்றாண்டில் ஆரியரின் சாதாரண மதத்தில் பல மாறுதல்கள உண்டாயின; பழமையை தெய்வங்களின் மதிப்புக் குன்றிப்போக புதிய தெய்வங்கள் மனிதருடைய உள்ளங்களைக்



நடராசர் ஆண சிவன்

கவர்ந்தன. சிருட்டிகர்த்தாவாகிய பிரமன், அழித்தற் கடவுளாகிய சிவன், காத்தற் கடவுளாகிய விஷ்ணு இந்துக்களின் மும்மூர்த்திகளாயினர்.

இத்தெய்வங்கள் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு பெயர்களுடன் தோன்றினர்களெனவும் மக்கள் நம்பினர்கள். இவ்வாறு இந்து மதத்தில் பல தேவர்கள் இருந்தார்கள். ஆனால் எல்லாத் தேவர்களும் மும்மூர்த்திகளுக்குக் கீழ்ப்பட்டவர்களென மக்கள் நம்பினர்கள்.

மதத்தில் புதிய கொள்கைகள்

கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் ஆரியரின் பூர்வ மதக் கொள்கைகளிலும் பல மாறுதல்கள் உண்டாயின. பூர்வ ஆரியக்குடிகளிடம் காணப்பட்ட இன்பமும் மன அமைதியும் இல்லாது ஒழிந்தன. வாழ்க்கை துன்பம், நோ, துக்கம் ஆகியன நிறைந்ததாகக் கருதத் தொடங்கினர்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆன்மா என்று ஒன்று இருக்கிறதென்றும் அவர்கள் ஆத்ம உலோகத்திலிருந்து இங்கு வந்தார்களென்றும் நம்பினர்கள், மரணத்தின்பின் ஆன்மா மறுபடியும் பிறக்கிறதெனவும் இப்பிறப்புகள் ஆத்தும உலகத்தில் பிரவேசிக்கக்கூடிய பக்குவம் அடையும் வரையும் நிகழுமெனவும் நம்பினர்கள். கணக்கு இல்லாமல் பிறந்து இறப்பதை சம்சாரம் என்றனர். ஒருவனின் பிறப்பு, இறப்புகள் கரும விதிக்கு உட்பட்டன. ஒருவன் இப்பிறப்பில் நல்வினைகள் உடையவனுயிருப்பின் அவனுடைய மறு பிறப்பு உயர்ந்த பதவியில் இருக்கும்; அல்லாவிட்டால் தாழ்ந்த பதவியிலிருக்கும்.

வழிபாட்டு முறைகள்

பூர்வ ஆரியரின் வழிபாட்டு முறைகள் சாதாரணமாக இருந்தன. ஆனால் இவை கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் பல சடங்குகள் பொருந்தினவையாயின. இச்சடங்குகளில் கீதங்கள் பாடப்பட்டன; மந்திரங்கள் ஓதப்பட்டன; பல இருத்தியங்கள் கையாளப்பட்டன. மிருகங்களைக் கொன்று தெய்வங்கட்குப் பலியும் கொடுக்கப்பட்டது.

ஒரு மனிதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு படிகளிலும் சில சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. மக்கள் இச்சடங்குகளை மதத்தின் முக்கிய அம்சமாகக் கருதினர்கள். பலிகளை சரியாக நிறைவேற்றுவதாலும், ஏனைய சடங்குகள் ஆசாரங்களாலும், தாங்கள் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளலாமென எண்ணினர்கள். எனவே நல்வாழ்க்கையைத் நடத்தத்தானும் அவர்கள் கவலைகொள்ளவில்லை.

பிராமணர்கள்தான் இச்சடங்குகளை நிறைவேற்றக்கூடும். சடங்குகள் முதன்மை பெறவே பிராமணர்களும் இந்து சமயத்தில்

முக்கியமானவர்களாய் கருதப்பட்டார்கள். வேள்விகளையும், சடங்குகளையும் பிராமணர்களின்றி நிறைவேற்ற முடியாமலிருந்தது.

சாதிக் கட்டுப்பாட்டு முறைகள்

3 ஆம் அத்தியாயத்தில் நாங்கள் கண்ட ஆரிய சமூக வகுப்புகள் சாதிகளாக வளர்ந்தன. தொடக்கத்தில் ஆரிய சமூகத்தில் பிராமணர், சத்திரியர், வைசியர் என்ற மூன்று வகுப்புகளே இருந்தன. ஆரியர் இந்தியாவிற்கு வந்தபோது சூத்திரர் எனப்பட்ட இன்னெரு வகுப்பையும் கூட்டிக்கொண்டனர். இந்தியாவில் அவர்கள் கண்ட கறுப்புநிற இனத்தினர் சூத்திர வகுப்பின் உறுப்பினராயினர். காலம் செல்லச் செல்ல இந்து சமூகத்தில் பல வகுப்புகள் உண்டாயின. கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் இவ்வகையாக எழுந்த வகுப்புகள் பல ஆயின. பெரும்பாலும் ஒரு வகுப்புக்குரிய மக்கள் ஒரு தொழிலையே செய்தார்கள் அவர்கள் வெகு அரிதாகவே தங்கள் வகுப்பைத் தவிர்ந்த ஏனைய வகுப்புகளில் மணம் செய்து கொண்டார்கள். சில வகுப்புகள் உயர்ந்தனவாகவும் சில தாழ்ந்தனவாகவும் கருதப்பட்டன. உயர்ந்த வகுப்பார் தாழ்ந்த வகுப்பாரை குறைவாகவே மதித்தனர். பிராமணர் சாதிகளில் உயர்ந்த இடத்தைப்பெற்றனர்.

கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் பூர்வ ஆரியர் அடைந்த பல மாறுதல்களையும் இந்து மதம் பிராமண ஆதிக்கத்திற்கு உட்பட்ட வகையையும் இதுவரை கண்டோம். பிராமணர்களுக்குத்தான். வேதநூல் அறிவு இருந்தது. அவர்கள்தான் வேள்விகளையும், சடங்குகளையும். நிறைவேற்றலாழ். சாதியிலும் உயர்ந்த இடம் அவர்களுக்கே கிட்டியது. அக்காலத்து மக்கள் பிராமணர்களை தெய்வத்திற்கு அடுத்தபடியாக மதித்தார்கள். மதம் முழுவதும் பிராமணரால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதால் அது பிராமணியம் எனப்பட்டது.

III பிராமணியத்தில் அதிருப்தி

கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் சத்திரிய வகுப்பில் பலரும் பிராமணரில் சிலரும் பிராமணியத்தில் வெறுப்புக் கொண்டனர். இவர்கள், கிரேக்கரான சொக்கிறத்தீஸ், பிளாற்றோ, அரிஸ்தோத்தில் (78-ம் பக்கம் பார்க்கவும்) ஆகியவர்களைப்போல், பிராமணியக் கொள்கைகளையும், பழக்கங்களையும் கண்டித்துப் பேசினர்கள். இவர்களுள் பௌத்தமதத்தை அடியிட்டவரான சித்தார்த்த கௌதமர் முக்கியமானவர் ஆவர்.

பயிற்சி I

1. பூர்வ ஆரியரின் சில தெய்வங்களின் பெயர்களைக்கூறுக.
2. கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் முதன்மை அடைந்த மூன்று தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. பூர்வ ஆரியர் எவ்வகை வழிபாடுகள் செய்தனர்.
4. பூர்வ ஆரியரின் சாதாரண மதம் கி. மு. 6 ம் நூற்றாண்டில் அடைந்த மாற்றங்களை விளக்குக.
5. பூர்வ ஆரியர் வாழ்க்கையைப்பற்றிக் கொண்ட கொள்கைகள் யாவை?
6. கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்க்கையைப்பற்றி ஏற்பட்ட கொள்கைகள் யாவை?
7. ஆத்மா என்பது யாது?
8. மக்கள் எங்கிருந்து வந்தார்கள்? எங்கு போகிறார்கள்? இவைகளைப்பற்றி மக்கள்கொண்ட கருத்துகள் யாவை?
9. "சம்சாரம்" என்பதின் பொருள் யாது?
10. கரும விதியைப்பற்றி விளக்குக.

IV கௌதம புத்தர்

புத்தரினால் போதிக்கப்பட்ட மதம் கி. மு. 274 இல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது; இதினின்றே எங்கள் புராதன நாகரிகம் தோன்றியது. அதனால் கௌதம புத்தரின் வாழ்க்கை எங்கட்கு முக்கியமானது.

அவரின் பிறப்பு

நேப்பாள எல்லையில் உள்ள கபிலவஸ்து என்ற குறுநிலத்தின் மன்னரான சுத்தோதனரின் புத்திரனாகக் கௌதமர் தோன்றினார். அவர் அன்னையாரின் பெயர் மாயாதேவி. அவர் மேத்திங்களில் நிறைமதி நாளில் பிறந்தார். அவருடைய பிறப்பைப் பௌத்தர் கொண்டாடுகின்றனர்; அவ்விழா வெசாக்கு எனப்படும் அவரின் பிறப்பு கி. மு. 563 இல் நிகழ்ந்ததென சில வரலாற்று நூலாசிரியர் குறிப்பிடுவர்.

அவரின் துறவு

30 வயதுவரை அரசகுமாரர் நுகரக்கூடிய இன்பங்களைத் துய்த்து காலம் கழித்தார். அவர் யசோதரை என்னும் அரசிளங்குமரியை மணந்து இராகுலன் என்ற புத்திரனைப் பெற்றார். இராகுலன் பிறந்தபோது தந்தையின் வயது 29 ஆகும். மைந்தன் பிறந்த அற்றை நாள் வெளியிற் சென்ற கௌதமர் நான்கு காட்சிகளைக் கண்டார்; அவை இவ்வுலகம் இடுக்கண் நிறைந்தது என்ற உண்மையை அவருள்ளத்தில் ஊன்றிவிட்டன. அவர் முறையே முதிய வன் ஒருவனையும், நோயாளி ஒருவனையும், இறந்த சவ மொன்றையும், தபசி ஒருவனையும் கண்டார். இவற்றைக் கண்டபின் வாழ்க்கை துன்பங்களின் புகலிடம் என்பதை உணர்ந்தார்; துன்பங்களி

னின்றும் விடுவிக்கும் மார்க்கம் உண்டோ என ஆராயத் துணிந்தார். தனது இளம் மனைவியையும், பச்சைக் குழந்தையையும் அவர்கள் நித்திரை செய்து கொண்டிருக்கும்போதே பிரிந்து, கந்தக என்ற தனது குதிரையில் இவர்ந்து, தனது விசுவாசமுள்ள வேலையாள் சன்ன உடன் அன்றிரவே காட்டுக்குப்போனார். வைகறையில் ஓர் ஆற்றங்கரையை அடைந்து, தனது அழகிய குஞ்சியை வெட்டி, தனது அரசவுடைகளையும் அணிகளையும் களைந்து, துறவிகளின் ஆடையை அணிந்துகொண்டார். பின்னர் தன்னோடுவந்த வேலையாளிடம் குதிரை, வாள், அரசவுடை முதலானவைகளைக் கொடுத்தனுப்பிவிட்டார். இவ்வகையாக தனது வீடு, இனசனம் அரசபோகம் ஆதியவற்றைத் துறத்தல் துறவு எனப்படும்.

உண்மையை அறிவதில் முயற்சி

முதல் கௌதமர் இந்து முனிவர்களின் படிப்பினைகளைப் பின்பற்றினார். உபவாசம், செபதபம் ஆகியவற்றில் உடலை மிகவும் ஒறுத்தார். அவரின் புனிதத் தன்மை நாற்றிசையும் பரக்கவே பலர் அவரின் மாணாக்கராயினர். உபவாச ஒறுத்தல்களினால் துன்பத்தினின்றும் விடுபட முடியாதென்பதை உணர்ந்தார். எனவே வேறு வழிகளைப் பரீட்சிக்க முனைந்தார்.

ஞான ஒளி பெறல்

காயாவிலுள்ள நீராஞ்சன நதியோரம் அலைந்து திரிந்து கடைசியில் வெள்ளரச மரத்தின் கீழ் இருந்து தியானம் செய்தார். தியான பரவசராகி நாள் முழுவதும் அம்மரத்தின் கீழ் அமர்ந்து இருந்தார். சடுதியாக அவர் ஞான ஒளி பெற்றார். அவர் அமைதியை அடையும் வழியைக் கண்டு கொண்டார். பௌத்தர் என்றால் ஞான ஒளி பெற்றவர் என்ற அர்த்தமாகும்.

பௌத்த சங்கம்

புத்தபெருமான் தாம் பெற்ற ஞான அறிவை மக்களுக்குப் போதிக்க விருப்பங்கொண்டார். மனிதர்கள் மேல் உள்ள அன்பும் இரக்கமுமே இவ்வாறு அவரைச் செய்யத் தூண்டின. தாம் அறிந்தவைகளை மக்கள் அறிவதால் அவர்கள் விடுதலை அடைவாரென அவர் அறிந்தார். அவர் தமது முதற் பிரசங்கத்தை சார்ஞத் திலுள்ள மான் நந்தவனம் ஒன்றில் செய்தார். அவர் துக்கம், துக்கத்திற்கான காரணங்கள், துக்கத்தைக் களையும் வகை ஆகியவற்றைப்பற்றி அருட்பொழிவு பொழிந்தார். தொடக்கத்தில் ஐந்து மாணவர்கள் அவருடன் சேர்ந்தார்கள். இவ்வாறு பௌத்த சந்நியாசிகளின் கூட்டமான பௌத்த சங்கம் ஆரம்பமானது.



கௌதம புத்தர்

பௌத்த சங்க வாழ்க்கை

பௌத்த சங்கப் பிரமாணங்கள் அதி கடினமானவை. பௌத்த சங்கத்தில் சேருபவர் தங்கள் உலக செல்வங்கள் யாவற்றையும் நிராகரிக்க வேண்டும். அவர்களுக்கு அதி அவசியமான எட்டுப் பொருட்களையன்றி வேறு ஒன்றையும் அவர்கள் சொந்தமாக வைத் திருத்தல் கூடாது. (1) மூன்று மஞ்சள்நிற அங்கிகள். (2) பிச்சா பாத்திரம் (3) தீ உண்டாக்கும் கருவிகள் (4) சவரக்கத்தி (5) இதாள், ஊசி, நூல் ஆகியன (6) கத்தரிக்கோல் (7) நகம் வெட்டி (8) புத்தரையும் அவருடைய தர்மங்களையும் பற்றிக்கூறும் கைநூல். இவற்றையே புத்த சந்நியாசிகள் வைத்திருக்கலாம். அவர்கள் மஞ் சள்நிற அங்கிகளை வறுமையின் அறிகுறியாக அணிய வேண்டும்; அவர்கள் ஏழைகளின் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்; அவர்கள் தங்கள் நாளாந்த உணவைத்தானும் இரந்து ஏற்று உண்ண வேண்டும்; அவர்கள் மணஞ் செய்யாது தூய வாழ்க்கையை நடத்த வேண்டும்; அவர்கள் தங்கள் நேரத்தை தியானத்திலும், புத்த தர்மங்களை அனுசரிப்பதிலும் புத்தர் காட்டிய நெறியைப்பற்றி மற்றவருக்கு போதிப்பதிலும் செலவு செய்யவேண்டும்.

அவரின் மரணம்

45 வருடங்களாக புத்தர் தமது திருமறையைப் போதித்தார். பெருந்தொகையான மக்கள் அவரைப் பின்பற்றினர்கள். பலர் அவரின் சீடர்களாயினர். 80 ஆம் வயதில், வைசாகப் பூரணத் திங்கள் கூடின நன்னாளில், குசிநகர் ஏற்ற இடத்தில், புத்தர் பெருமான் காலமாயினர்.

அவர் போதனைகள்

அவருடைய போதனைகளின் பிரதான அம்சங்கள் நான்கு உண் மைகளில் அடங்கியிருக்கின்றன.

(I) வாழ்க்கை துக்கமுடையது.

(II) துக்கத்தின் காரணம் பற்று. பற்றின் வழியது பிறப்பு, பிறப்பு துன்பங்களின் இருப்பிடம்.

(III) பற்றை அழிப்பதால் துக்கத்தை மேற் கொள்ளலாம்.

(IV) இதனை அட்ட சீலங்களினூல் அடையலாம். அட்ட சீலங்கள் சரியான விளக்கம், சரியான தீர்மானம், நேரிய வாக்கு, நேரிய வினை, நேரிய வாழ்க்கை, நன் முயற்சி, நற்கவனம், நற்றியானம் ஆகியனவாம். எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்தல் அல்லது மைத்திரியம், துன்பம் செய்யாமை அல்லது அகிம்சை ஆகியவற்றைப் பற்றியும் புத்த பெருமான் வற்புறுத்திக் கூறினர். வாய்மை, நேர் மை, நடுநிலைமை, தூய்மை முதலான நற்பண்புகளைப் பற்றியும் இவர் வலியுறுத்திக்கூறினர். பலவகைப் பிறப்புக்கு உள்ளாதல் சம் சாரம் எனவும் பிறப்பை நிர்ணயிப்பது கர்மவிதி என்றும் போதிக் கப்பட்டது. இறுதியில் மனிதன் துக்கத்தினின்று விடுதலை பெறும் நிர்வாண அல்லது சூனிய நிலையை அடைகின்றன்.

இதை மனிதன் தன் சுய முயற்சியாலேயே அடையமுடியும் பிதரார்த்தனைகள், வழிபாடுகள், வேள்விகள், தேவர்களின் உதவி ஆகியன பயனளிக்கமாட்டா.

பயிற்சி II

1. புத்தரின் பெற்றோர் பெயர் என்ன?
2. புத்தர் எப்போது பிறந்தார்?
3. 30 வயதுவரையும் அவர் எவ்வகையான வாழ்க்கையை நடத்தினர்?
4. வாழ்க்கை துக்கம் நிறைந்ததென்று அவரை எண்ண வைத்த நான்கு காரியங்கள் யாவை?

பிராமணியமும் பௌத்தமும் உற்பத்தியும்

கி. மு. 6-ம் நூற்றாண்டில் பிராமணியம்

தெய்வங்கள்	வழிபாடு	சாதி	மதக் கொள்கைகள்			
			வாழ்க்கை துக்கம் உடையது	ஆத்மா பரமாத்மா	சம்சாரம்	கருமம்
அனேக தெய்வங்கள்	பிரார்த்தனை வேள்விகள் சடங்குகள்	சாதிக் கட்டுப்பாட்டில் பிராமணர் உயர்ந்த இடம் பெறல்				
X	X	X	X	X	X	X
அதிருப்தி						
			V		V	V
பௌத்தம்						
தெய்வம் உண்டென்பதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை	பிரார்த்தனை முதலிய அவசியமற்றன வாழ்க்கை அனுட்டானமே முக்கியமானது	மனிதர் எல்லாரும் சமமானவர்	வாழ்க்கை துக்கமானது	ஆன்மா என்ற கொள்கையைத் தள்ளினார்	சம்சாரம்	கருமம்

X — பிராமணியத்திலிருந்த இக்கொள்கைகட்கு மாறுகப் புத்தர் போதித்தார்.
V — பிராமணியத்திலிருந்த இக்கொள்கைளைப் புத்தர் ஏற்றுக் கொண்டார்.

5. அவருடைய வாழ்க்கையில் துறவுநிலை என்பது எதனை?
6. புத்தர் என்ற சொல்லின் பொருள் என்ன?
7. கௌதமர் எங்கே எவ்விடத்தில் ஞான ஒளி பெற்றார்?
8. அவர் தன் முதற் பிரசங்கத்தை எங்கே நிகழ்த்தினர்?
9. பௌத்த சந்நியாசிகள் எவ்வெப்பொருட்களை வைத்திருக்கலாம்?
10. அவர்கள் தம் உணவை எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும்?
11. அவர்கள் மணம் செய்து கொள்ளலாமா?
12. புத்தர் எங்கே இறந்தார்?
13. புத்தர் போதித்த நான்கு உண்மைகளையும், அட்ட சீலங்களையும் குறிப்பிடுக.
14. நிருவாணம் என்பதின் பொருள் என்ன?

V பௌத்தமும் பிராமணியமும்

கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் பின்பற்றப்பட்ட பிராமணியத்திலும் பௌத்தம் பலவகைகளிலும் மாறுபட்டு இருத்தலை இங்கு கண்டோம். பௌத்தம் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை மறுத்ததினால் பிரார்த்தனைகள், வழிபாடுகள், காணிக்கைகள் வேள்விகள், சடங்காசாரங்கள் ஆகியவற்றிக்கு அதில் இடம் இருக்கவில்லை. புத்தர் சகல மனிதர்களும் சமமானவர்கள் என்று போதித்தமையால் சாதிக்கட்டுப்பாட்டுக்கும் அது இடம் அளிக்கவில்லை. வழிபாடுகள், சடங்காசாரங்களுக்குப் பதிலாக சீரிய வாழ்க்கை, அறம், ஒழுக்கம் ஆகியவற்றையே புத்தர் வலியுறுத்தினர்.

பிராமணியத்தில் காணப்பட்ட பல பொருட்களை புத்தர் ஒதுக்கித் தள்ளினாலும் அதில் பண்டு நிலவிய சில கொள்கைகளை அவர் ஏற்றுக்கொண்டார். வாழ்க்கை துக்கமானது என்ற மூலாதார உண்மையை பண்டைய பிராமணியக் கொள்கைளினின்றே அவர் எடுத்துக் கொண்டார். கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் பிராமணர்களும் இக்கொள்கைகள் உடையவராகவே விளங்கினர்கள் கருமம், சம்சாரம் என்ற போதனைகளையும் அவர் ஏற்றுக்கொண்டார். ஆத்துமா என்ற கொள்கையை அவர் தள்ளிவிட்டனர் எனவே, பிராமணியம் ஆத்துமா பரம ஆத்துமாவின் பகுதியாதலை இலட்சியமாகக் கொள்ள பௌத்தம் நிர்வாணம் அல்லது சூனிய நிலையை இலட்சியமாகக் கொண்டது.

பௌத்த பிக்குகள் புத்தரின் ஞானப் போதனைகளை அகில இந்தியா, இலங்கை, பர்மா, திபேத்து முதலான இடங்களில் பரப்பினர்கள். மூடக் கொள்கைகளிலும், பழக்க வழக்கங்களிலும் ழ்ழ்கிக் கிடந்த மக்களுக்கு பௌத்தம் தர்க்க ரீதியானதும் நம்பிக்கை

நிறைவானதும் அச்சத்தினின்றும் விடுதலையானதுமான ஒரு மறை யாகத் தோன்றி அவர்களைக் கவர்ந்தது. புத்தரின் போதனைகளுடன் பௌத்த நாகரிகமும் இந்நாடுகளில் பரம்பின. பௌத்த நாகரிகம் ஆசிய நாடுகளில் இணையற்ற ஒரு சக்தியாக திகழ்ந்தது. இக்கார ணங்களால் புத்தரை ஆசியாவின் சோதி யெனக் குறிப்பிடும் வழக்கம் உண்டானது.

பயிற்சி III

இடைவெளிகளை நிரப்புக:

1. பிராமணியத்தில் பல தெய்வங்கள் இருந்தன. பௌத்தம் தெய்வக் கொள்கையை.....
2. பிராமணியத்தில் மனிதன் பிரார்த்தனைகள் சடங்குகளினால் தெய்வத்தின் உதவியை நாடலாம். ஆனால் பௌத்தத் தில் மனிதன் தன்.....நிர்வாண நிலையை அடைய வேண்டும்.
3. சாதிக்கட்டுப்பாட்டு முறைமையின்படி.....சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்திருந்தான்; பௌத்தத்தில் சாதிக்கட்டுப்பாட்டுக்கு.....இல்லை.
4. பிராமணர் ஆத்மா இருக்கிறதென்பதை நம்பினார்கள், புத்தர் ஆத்மா என்ற கொள்கையை.....
5. பௌத்த போதனைகள் வாழ்க்கை.....என்ற கொள் கையை அடிப்படையாக உள்ளன. கி. மு. 6 ஆம் நூற் றாண்டில்..... இக்கொள்கையுடையவராயிருந் தனர்.
6. சம்சாரம், கருமவிதி ஆகியன.....ஆகிய இரண் டிலும் காணப்படுகின்றன.
7. பௌத்த.....புத்தரின் போதனைகளைப் பரப்பினார்கள்.
8. பௌத்த போதனை மாத்திரமல்ல.....இவர்களால் பல நாடுகளில் பரப்பப்பட்டது.
9. இலங்கையின் பண்டைய நாகரிகம்.....உண்டானது.
10. ஆசிய நாடுகளில் பௌத்தம் பண்டைய நாகரிகத்தின், ஒரு சக்தியாக விளங்கினமையால் புத்தரை..... என்கின்றனர்.

VI மௌரியப் பேரரசு

புத்தரின் போதனைகள் இந்தியாவில் கி. மு. 260 வரை படிப் படியாகப் பரந்து வந்தன. அசோகப் பேரரசன் ஆட்சிக்காலத்தில் அது இந்தியாவின் இணையற்ற மதமாக இலங்கியது. சில வேளை

களில் அசோகனைபௌத்த மதத்தைப் பரப்பிய திருப்பணியாளனென கூறுகின்றோம். அவன்தான் பௌத்தத்தை ஓர் உலக மதமாக்க அடிகோலினான். அசோகனுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் பொழுது அவன் எவ்வாறு பௌத்த மதத்தை இந்தியாவிலும் இந்தியாவுக்கு அப்பாலுள்ள ஏனைய நாடுகளிலும் பரப்பினான் என் பதை விளக்குவோம்.

1 மௌரியப் பேரரசின் ஆரம்பம்

இந்தியாவில் முதன் முதல் ஒரு பேரரசை நிறுவினவர் மௌ ரியர் என்ற கூட்டத்தினராவர். அவர்களால் அமைக்கப்பட்ட அரசு மௌரியப் பேரரசு எனப்பட்டது. சந்திரகுப்த மௌரியனே மௌரியப் பேரரசை அடிகோலினான். மௌரிய என்ற சொல்லின் பொருள் மயில்; எனவே அவன் அக்காலத்தில் பிபலிவனம் என்ற இடத்தில் வாழ்ந்த மயிற் கூட்டத்தினனாய் இருக்கலாம்.

2 அலெக்சாந்தரின் படையெழுச்சியின் பலாபலன்கள்

3 ஆம் அத்தியாயத்தில் கி. மு. 326 இல் அலெக்சாந்தர் இந்தி யாமீது படையெடுத்தான் என்று படித்தோம். அவன் இந்து நதிக்கு அப்பாற் செல்லவில்லை (முன்பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்) ஆனால் அவன் வெற்றிபெற்ற நாடுகளில் கிரேக்க நாகரிகம் புகுந்துகொண் டது. இந்நாகரிகம், படிப்படியாக இந்துநதிக்கு அப்பாலுள்ள நாடுக ளிலும் பரவி வடஇந்தியா முழுதும் பரந்தது. இவ்வாறு கிரேக்க நாகரிகம் இந்திய நாகரிகத்துடன் கலந்து கொண்டது.

சந்திரகுப்த மௌரியன்

அலெக்சாந்தரின் படையெழுச்சியின் போது வடஇந்தியா பதினைறு குறுநில இராச்சியங்களாகப் பிரிந்திருந்தது. இவற்றுள் எல்லாம் பிரதானமானது மகததேசம். இதனைத் தானஆனந்த என்ற ஒரு கெட்ட அரசன் ஆண்டான். குடிகள் இவனை வெறுத்தார்கள். மௌரியப் பேரரசை நிறுவியவனாகிய சந்திரகுப்தன் மகத தேயத் திலிருந்த ஒரு சத்திரியனாய் இருக்கலாம். இவன் சாணக்கியன் அல்லது கௌதாலியன் என்ற ஒரு கெட்டிக்காரப் பிராமணனின் உதவியோடு அரசைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்தான்; இம்முயற்சி பயன்தராமல் போகவே இந்துநதிக்கு அப்பால் ஓடி ஒழிந்து தனது சேவைகளை அலெக்சாந்தருக்கு அளிக்க வாக்குப்பண்ணினான். அலெக் சாந்தருக்கும் இவனுக்குமுள்ள உறவு நீடிக்கவில்லை. இருவருக்கும் வெறுப்புணர்ச்சி உண்டாகவே விந்திய மலைச்சாரல்களுக்கு ஓடி ஒழித் தான். அங்கு பலம் பொருந்திய ஒரு படையைத் திரட்டி படைப் பயிற்சி அளித்து போர் செய்து கி. மு. 331 இல் மகத அரசைக்


கைப்பற்றிக் கொண்டான். பின்பு சந்திரகுப்தன் மகதத்தின் மேற்கு எல்லையிலுள்ள அயல் நாடுகளை வெற்றி கொள்ளத் தொடங்கினன். இங்கு இவ்வாறு நிகழ, அலெக்சாந்தர் மரணம் அடையவே அலெக் சாந்தரின் படைத் தலைவர்கள் அலெக்சாந்தரின் இராச்சியத்தை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். அலெக்சாந்தருடைய பேரரசின் இந்திய மாகாணம் செலுக்கஸ் நிக்கதோர் என்ற தளபதிக்குக் கிடைத்தது. இதற்கு இடையில் சந்திரகுப்தன் கங்கை முதல் இந்து நதிவரை வடஇந்தியா முழுவதையும் வெற்றி கொண்டான். கி. மு. 305 இல் சந்திரகுப்தனுக்கும் செலுக்கஸ் நிக்கதோருக்கு இடையில் நடந்த போரில் செலுக்கஸ் தோல்வியடைந்து தனது அரசிருக் கைய இந்துக்கூஸ் மலைப்பகுதியில் அமைக்கவேண்டியதாயிற்று. சந்திரகுப்தன் வடஇந்தியா முழுவதற்கும் ஒருதனி அரசனனான். அவனுடைய பேரரசு வங்காளம் முதல் இந்துக்கூஸ் மலைகள்வரை பரந்திருந்தது. (139 படம் பார்க்கவும்)

அசோகன்

சந்திரகுப்தனைப் பின்தொடர்ந்து அவனுடைய மகன் பிம்பிசா ரன் அரசனனான். இவன் தனது நாட்டை விஸ்தரித்தான் என்றதைத் தவிர இவனைப்பற்றி அதிகம் தெரியாது. இவனுக்குப்பின் கி. மு. 274 இல் உலக அரசர்களுள் உயர்ந்தவனாக எண்ணப்படும் அசோகன் அரச கட்டில் ஏறினன். இவன் தன் தந்தையையும் பாட்டனையும் போலவே பல நாடுகளை வெற்றிகொண்டு தனது இராச்சியத்தைப் பேரரசாக்கினான். இவனது ஆட்சியின் 13 ஆவது ஆண்டில் இவன் கலிங்கத்தின்மீது படையெடுத்து கலிங்கப் போரில் வெற்றி வீரனாக சூடினன். கலிங்கப் போரில் வெற்றி கொண்டபோதிலும் அப்போரில் மக்கள் அடைந்த இன்னல்களும் இடுக்கண்களும் அசோ கனின் உள்ளத்தை உருக்கின. இதன் பயனாக அசோகன் ஒரு புது மனிதனனான்.

பௌத்த மதம் இந்தியாவில் வளர்மதி எனவளர்ந்து கொண்டு வந்தது. பௌத்த மதபோதனைகளான அகிம்சை, மைத்திரியம் அசோகனின் உள்ளத்தைக் கவர்ந்தன. கலிங்கப்போரில் உளம் தடுமாறிய அசோகனுக்கு பௌத்தம் உறுதுணையானது. நாடுகள் பிடிக்கும் எண்ணத்தைத் துறந்தான் அவனை மேற்கொள்ளும் வழியைப் பின்பற்றினன். "எனது இராச்சியத்தில் புத்த முரசொலி இனி கேட்காது தர்மமுரசு ஒலியே எங்கும் முழங்கும்." என்று செப்பினன்.

பௌத்த மத போதனைகளை அசோகன் அனுசரிக்க ஆரம்பித்தான். இப்போதனைகளின் பயனகளை தான்தானே நுகர்ந்து இருக்க அசோ




அசோகப் பேரரசு

கன் விரும்பவில்லை புத்தமத தர்மத்தை தனது குடிகளும் பிறநாட்டு மக்களும் நுகரவேண்டுமென ஆவலுற்றான். எனவே சகல மனிதர் களும் பௌத்த தருமத்தைப் பின்பற்றி அகிம்சை, மைத்திரியம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும்படி கட்டளைபிறப்பித்தான்.

அசோகனின் முன்மாதிரிகை

அசோகன் தானும் பௌத்த மத போதனைகளைப் பின்பற்றி குடிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினன். மைத்திரியக்கொள் கைகளை மதிக்கும் முகமாக மக்களுக்கும், மாக்களுக்கும் வைத்திய

சாலைகளை அமைத்தான். மருந்து கட்டு உபயோகம் ஆகும்பொருட்டு பல்வேறு மூலிகைகளை செய்கை பண்ணினான்; வழிச்செலவு செய்வோர் தங்கி இளைப்பாறும் பொருட்டு தெரு ஓரங்களில் நிழல் மரங்களை நாட்டினது மன்றி, தங்கு மடங்களைக் கட்டியும், நீர்க்கிணறுகளைத் தோண்டியும் பல நற்செயல்களையும் செய்தார். அகிம்சைக் கொள்கையை மதிக்கும்முகமாக வேட்டைக்கு போதலைவிட்டு ஒழித்தான். அரண்மனை மடைப்பள்ளியில் உணவுக்காக கொல்லப்படும் மிருகங்கள், பறவைகளின் தொகையை குறைத்தான்; குற்றவாளிகளுக்கு கொடுக்கப்படும் கொடிய தண்டனைகளை நீக்கிவிட்டான்; புத்தரில் தனக்குள்ள வணக்கத்தைக் காட்டும் பொருட்டு லும்பினி வனம், (புத்தரின்பிறந்த இடம்), காயா, (புத்தர் ஞான ஒளி



சாஞ்சி தாது கோபுரம்

பெற்ற இடம்), முதலான புனிதசேத்திரங்களுக்கு திருச்செலவு செய்து இவ்விடங்களில் தூண்களையும், தாது கோபங்களையும் கட்டினான்; பெருந்தொகையான பௌத்த சந்நியாசிகளுக்கு நாள் தோறும் அரண்மனையில் அன்னம் அளித்து அவர்களுக்கு விகாரைகளைக் கட்டு பௌத்த மத சந்நியாசிகளைக் கனம் பண்ணினான். இவ்வாறு பௌத்தர் பௌத்தத்திற்குச் செய்யவேண்டிய சில பணிகளைச் செய்து அசோகன் குடிகளுக்கு முன்மாதிரியாக விளங்கினான்.

அசோகனின் மதப்பிரசாரத் திருப்பணிகள்

அசோகன் பௌத்த மதத்தை எத்துணை பின்பற்ற விரும்பினானே அத்துணை குடிகளும் பௌத்த தருமத்தை அனுசரிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டான். அரசாங்க அலுவலாளர் மக்கள் நாட்டின் சட்டங்களுக்கு அமைந்து நடக்கிறார்களோ என்று பார்ப்பதோடு, பௌத்த தருமத்தையும் அனுசரிக்கிறார்களோ என்று பார்க்கவும் வேண்டும். இவ்வேலையை செவ்வனே செய்வதற்காக தரும மகா மத்திரர் என்ற உத்தியோகத்தரை நியமித்தான்.

பேரரசின் பல இடங்களில் கற்பாறைகளிலும் தான் நாட்டிய கற்றூண்களிலும் தனது அரிய வேலைகளை எழுத்தாளர்களைக்கொண்டு பொறிப்பித்தான். இக்கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் நீதி உபதேசங்களை சுருக்கமாக எழுதுவித்தான். கிழக்காணப்படும் கற்சாசனம் மைசூர் மாகாணத்தில் கண்டு எடுக்கப்பட்டது. இது அசோக சாசனங்களை விளக்க ஏற்ற ஓர் எடுத்துக்காட்டாகும்.

"தந்தை தாயாருக்கு கீழ்ப்படியவேண்டும், உயிருள்ள பிராணிகளை மதிக்கவேண்டும், உண்மை உரைக்கவேண்டும்.....இது போலவே ஆசிரியரைக் கனம்பண்ணி மூத்தோருக்கு மரியாதை காட்டவேண்டும். மகாவம்சம் என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ளபடி அசோகன் மூன்றுவது பௌத்த மகாநாட்டின் தலைவனாக இருந்தான். பௌத்த சங்கத்தாருக்கு புத்தர் விதித்திருந்த பிரமாணங்களைப்பற்றியும் அவருடைய போதனைகளைப்பற்றியும் எழுந்த சில ஐயப்பாடுகளை நீக்கும்பொருட்டு பௌத்த சந்நியாசிகள் இம்மகாநாட்டைக் கூட்டினர். இம்மகாநாட்டின் பயனாக பௌத்த சந்நியாசிகள் இந்தியாவில் பல இடங்களுக்கும் ஏனைய தேசங்கட்கும் அனுப்பப்பட்டார்கள். பௌத்த மத பிரசாரத் திருப்பணியாளரான இத்துறவிகள் புத்தரின் உபதேசங்களையும் மௌரியப் பேரரசின் நாகரிகத்தையும் தாங்கள் சென்ற நாடுகளுக்கு எல்லாம் கொண்டு சென்றார்கள். இப்பிரசாரத் திருப்பணியாளரில் அசோகனின் மைந்தனாகிய மகிந்தனும் ஒருவனாவன். மகிந்தன் தனது திருப்பணியைச் செய்ய இலங்கைக்கு வந்தான். சிறிது காலத்தின் பின் அவன் தங்கை சங்கமித்தையும் புத்தர் ஞான ஒளி பெற்ற வெள்ளரச மரக்கிளை ஒன்றுடன் இலங்கைக்கு வந்தாள். இவ்வாறு அசோகன் தன் முன்மாதிரியாலும், தனது ஆதரவினாலும், பௌத்த மத மூன்றுவது மகாநாட்டிலிருந்து பிரசாரத் திருப்பணியாளரை அனுப்பியதாலும் பௌத்த மதத்தை ஓர் உலக மதமாக்க அடிகோலினான் என்பது நனி தெளிவாகின்றது.

அசோகனின் சகிப்புத்தன்மை

அசோகன் ஒரு சிறந்த பௌத்த மத பக்தனாக இருந்தபோதிலும் மற்ற மதங்களை அவன் வெறுக்காமல் அவற்றிற்கும் நல் ஆத

ரவு நல்கினன். பௌத்த மத சந்நியாசிகட்கு உண்டி உதவியது போல் அந்தணர்கட்கும் அன்னம் வழங்கினன். பௌத்த சந்நியாசிகட்கு விகாரைகள் அமைத்துத் தந்ததுபோல சமணத் துறவிகளான ஆசிவகர்கட்கும் ஏற்ற மலைக்குகைகள் அமைத்துக் கொடுத்தான். சில பல காரணங்களுக்காக எல்லா மதங்களையும் கனம் பண்ணவேண்டுமென அவன் ஒரு சாசனத்தில் பொறித்திருக்கின்றான். இதனால் அவன் தனது கட்சியைப் பெருமைப்படுத்தினது மன்றி மற்ற கட்சிகளின் குடிகளுக்குப் பணி செய்தவனுமாகின்றான்.

அசோகனின் பெருங் குணம்

இவ்வுலகத்தை ஆண்ட பல பார்த்திபர்களில் அசோகனும் சிறந்த அரசர்களின் வரிசையில் வைத்து எண்ணப்படக் கூடியவனே. அவன் ஒரு போர் வீரனுகவும் ஆட்சியாளனுகவும் சமயத்திருப்பணி யாளனுகவும் விளங்கினன். அவன் ஒரு மாமன்னன் மாத்திரமல்ல, நல்ல அரசனும் ஆவன். இவ்விரு சிறந்த பண்புகளும் அரச கட்டில் ஏறிய மன்னர்களிடம் அரிதாகவே காணப்படுகின்றன.

பயிற்சி IV

(1) மௌரியப் பேரரசை அடியிட்ட மன்னன் யாவன்?

(2) கிரேக்க நாகரிகம் இந்தியாவில் யாரால் புகுத்தப்பட்டது?

(3) சந்திரகுப்தனிடம் தோல்வியடைந்த கிரேக்க தளபதி யார்?

(4) இந்தியாவில் புற உருவப்படம் ஒன்றில் அசோகனின் பேரரசைக் குறிப்பிடுக.

(5) அசோகன் கடையாக வெற்றிகொண்ட தேசம் எது?

(6) அசோகனை மிகவும் கவர்ந்த பௌத்த போதனைகள் யாவை?

(7) (a) மைத்திரியம் (b) அகிம்சை ஆகிய கொள்கைகளை மதிக்கும் முகமாக அசோகன் ஆற்றிய செயல்கள் யாவை?

(8) பௌத்தர்மீதும் பௌத்த சங்கத்தின்மீதும் அசோகன் மதிப்பு வைத்திருந்தான் என்பதை அவன் எப்படிக்காட்டினன்?

(9) (a) இந்தியாவில் (b) ஏனைய நாடுகளில் அசோகன் பௌத்த தருமத்தைப் பரப்ப என்ன செய்தான்?

(10) அசோகன் எல்லா மதங்களின் மீதும் சகிப்புத்தன்மை உடையவனிருந்தானென்பதை எப்படிக் காட்டினன்?

இடை வெளிகளை நிரப்புக:

(a) பௌத்தம் ஓர்.....மதமாக அசோகன் வழிகோலினன்.

(b) அசோகன் நாடுகளை வெற்றிகொள்வதை விட்டு..... வெற்றிகொள்ள ஆரம்பித்தான்.

(c) அவன் தனது குடிகளுக்கு ஓர்.....இருந்தான்.

(d) அவனது உத்தியோகத்தர் சனங்கள் நாட்டின் சட்டங்களுக்கு அமைகிறார்களோ என்பதைப் பார்ப்பது மல்லாமல்..... பின்பற்றுகிறேரோ என்றும் பார்க்கவும் வேண்டும்.

(e) மகுந்தன் அசோகனின்.....ஆவன்.


(f) அசோகன் பௌத்த சந்நியாசிகளை ஆதரித்தது மாத்திரமல்ல.....ஆதரித்தான்.

(g) .....மலைக் குகைகளை அமைத்துக் கொடுத்தான்.

(h) அசோகன் ஒரு மா மன்னன் மாத்திரமல்ல ஒரு..... அரசனுமாவன்.

மௌரியக் கலைகள்

4–ம் அத்தியாயத்தில் மகெஞ்சதாரோ, கரப்பா என்ற இடங்களில் வாழ்ந்த மக்களின் நாகரிகத்தைப்பற்றிப் படித்தோம். அவர்கள் அழகிய கட்டடங்களைக் கட்டி அழகிய உருவங்களையும், ஆபரணங்களை



சாஞ்சியில் உள்ள தாது கோபங்கள்

யும், பாத்திரங்களையும் சமைத்தார்கள் என்று கண்டோம். இம்மக்களின் எச்சப் பொருட்கள் கலைகளில் இவர்களின் உயர்ந்த நிலையை எடுத்துக் காட்டுகின்றன.

மகேஞ்சதாரோ நாகரிக அழிவின்பின் அசோகன் ஆட்சிவரை இந்தியாவில் கற்கட்டடங்கள் செங்கற் கட்டடங்கள் ஆகியவற்றிற்கான அறிகுறிகள் யாதும் இல்லை.



சார்னத்தில் காணப்படும் தூணின் மேலுள்ள சிங்க உருவங்கள்

உலகச் செலவினரான சீனர்கள் இந்தியாவைத் தரிசித்து பாடலிபுரத்தில் நிலைநின்ற அந்த அற்புத அரண்மனையைப்பற்றி அழகாக வருணித்து இருக்கிறார்கள். இன்று இக்கட்டடங்களில் சில தூண்களே எஞ்சி நிற்கின்றன. அசோகன் பல தாது கோபங்களைக் கட்டுவித்தான். இத்தாது கோபங்களில் புத்தரின் அல்லது அவர் மாணவரின் புனித பண்டங்கள் அடக்கப்பட்டிருக்கின்றன. அசோகனுடைய காலத்தில் அவன் நாட்டிய பிரமாண்டமான கற்றூண்கள் கலைச் சிகரங்களாக விளங்குகின்றன. இக்கற்றூண்களில் அசோகனின் அருஞ் செயல்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பௌத்த தருமத்தை மக்கள் அநுசரிக்கும் பொருட்டு சில உபதேசங்களையும் இத் தூண்களில்

அசோகன் தன் எழுத்தாளரைக்கொண்டு எழுதுவித்தான் இத்தூண்கள் 40 அடி முதல் 50 அடி வரை உயரமுடையன. இவை அடிப் பாகத்தில் 3 அடியும் உச்சியில் 2½ அடி அகலமும் உடையன. இத்தூண்களின் உச்சியில் மணி வடிவமான பிரசு உண்டு அதன்மேல் சிங்க உருவம் சாதாரணமாகக் காணப்படுகிறது. சார்னத்தில் காணப்படும் தூணின்மேல் நான்கு சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதன் வேலைப்பாடு அத்துணை சிறப்புடையதாயிருப்பதால் "பண்டைய உலகத்தில் இதுபோலும் சிறந்த ஒன்றை கலைச்செல்வத்தில் காண்பது அரிது" என கலைஞர் கருதுகின்றனர் இத்தூண்கள் நுண்மையாக பளிங்குபோல் பிரகாசிக்கின்றன.

பரபார் குன்றுகளில் அசோகனும் அவனைப் பின் தொடர்ந்த மன்னர்களும் ஆசிவகருக்காக குகைகளை அமைத்தார்கள். உலோம முனிவரின் குகை வாயில்கள் குதிரைலாட்ன் வடிவாவவை. இக்காலத்து ஆபரணங்களும் கலிமண் பாத்திரங்களும் சிறந்த வேலைப்பாடு உடையனவாகக் காணப்படுகின்றன.



உலோம முனிவரின் குகை வாயில்

பயிற்சி V.

இடை வெளிகளை நிரப்புக:

(1) மோகேஞ்சதாரோ நாகரிகத்தின் பின் கல், செங்கற் கட்டடங்கள்.....உடைய காலத்திலேயே காணப்படுகின்றன. (2).....இருந்த அரண்மனையைப்பற்றி சீன யாத்திரிகர் வருணித்து இருக்கிறார்கள். (3) அசோகனும் அவனைத் தொடர்ந்து வந்த அரசர்களும் புத்தரின் புனித பண்டங்களை அடக்கி..... கட்டினார்கள். (4) அசோக காலத்தில்.....கலைச் செல்வங்களாக விளங்கின. (5) சார்னத்திலுள்ள தூணில் இருக்கும் நான்கு.....கலை சிகரங்களாகத் திகழ்கின்றன.

VI ம் அத்தியாயத்தில் வினாக்கள்

(1) பின்வரும் தலைப்புகளில் பண்டைய ஆரிய மறையைப் பற்றி சுருக்கமாக எழுதுக; தெய்வங்கள், மதக்கொள்கைகள், வழிபாடு.

(2) பின்வரும் தலைப்புகளில் பிராமணியத்தைப்பற்றி எழுதுக; தெய்வங்கள், மதக்கொள்கைகள், வழிபாடு, சாதிக் கட்டுப்பாடு.

(3) புத்தரையும், அவரின் போதனைகளைப்பற்றியும் சுருக்கமாக வரைக.

(4) புத்தர் பிராமணியத்தில் ஒதுக்கித்தள்ளிய பொருள்கள் யாவை? பிராமணியத்தில் அவர் ஏற்றுக்கொண்டவைகள் யாவை?

(5) அசோகனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறி அவன் பௌத்தத்திற்கு ஆற்றிய தொண்டுகளையும் குறிப்பிடுக.

(6) மௌரியப் பேரரசில் காணப்பட்ட கலைச் செல்வங்களைப் பற்றி விரிவாகக் கூறுக.

7–ம் அத்தியாயம்

இலங்கையின் பூர்வ நாகரிகம்


1. ஆரியரின் வருகை (a) குடியேற்றங்கள் (b) ஆரியருக்கும் வேடருக்குமுள்ள வேற்றுமைகள் (c) ஆரியரின் செல்வாக்கு.
2. மிருகங்கள் பறவைகளை விருதுஆகக்கொண்ட பழங்குடி மக்கள் (விருதுக் கம்பக் கூட்டத்தினர்)
3. பௌத்த மத வருகை (a) மகிந்தன் வருகைக்குமுன் இலங்கையில் வழங்கிய மதம் (b) மகிந்தன் வருகை (c) பௌத்தமதமுக்கிய பண்டைய நிலையங்கள்.
4. பௌத்த மதம் ஏன் விரைவாக வளர்ச்சி அடைந்தது?
5. இலங்கையில் பௌத்த மத செல்வாக்கு.
   (a) ஞானத்தூது (b) கலைச் செல்வாக்கு.

2–ம் அத்தியாயத்தில் இலங்கையின் பூர்வ குடிகளான வேடரைப்பற்றிப் படித்தோம். அவர்கள் கற்காலத்தில் வாழ்ந்தாரென்றும், அநாகரிகரென்றும் கண்டோம். 3–ம் அத்தியாயத்தில் கி. மு. 1500 இல் நாகரிகமடைந்த ஆரியர் இந்தியாவுள் நுழைந்து இந்துநதிக் கரையோரங்களில் குடியேறினர்கள் என்று கூறப்பட்டது. பின்பு அவர்கள் படிப்படியாகக் கிழக்குமுகமாகப் பரந்து குடியேறினர்களென்றும் கண்டோம். கி· மு. 500 இல் அவர்கள் வடஇந்தியா முழுதும் குடியேறியிருந்தார்கள்.

ஆரியரின் வருகை (a) குடியேற்றங்கள்

கி. மு. 500 இல் வேடர் இன்னும் கற்கால வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கையில், ஆரியர் கூட்டம் கூட்டமாக இலங்கையுட் புகுந்து அதன் வடமேல், தென் கீழ்ப்பாகங்களில் இலங்கையில் குடியேறினர். அவர்கள் வேளாண்மை செய்தவர்களானதால் வடமேற்கில் மல்வத்து ஓயா நதி தீரங்களிலும், தென்கிழக்கில் வளவை கங்கை, கிருண்டிஓயா, மாணிக்க கங்கை, கும்புகன்ஓயா ஆகிய ஆற்றோரங்களிலும் குடியேறினர்கள். களனி கங்கை ஓரங்களிலும் சிறு குடியேற்றங்கள் இருந்தன.


பின்பக்கங்களில் உள்ள மூன்று படங்களும் சுட்டிக் காண்பிக்கிறபடி அவர் ஈரலிப்பு வலயங்களில், அஃதாவது அதிக மழைவீழ்ச்சி உள்ள பிரதேசங்களில் அவர்கள் குடியேறவில்லை. ஈரலிப்பு வலயங்களில் அடர்த்தியான காடுகளும் உயர்ந்த மலைகளும் இருந்தன. இக்குடியேற்றக்காரர் இப்பகுதிகளில் குடியேறுவதாயின் காட்டை அழிக்க வேண்டிய இன்னல் ஏற்பட்டிருக்குமன்றே. மல்வத்துஓயாக் கரைகளிலும் மற்றைய நான்கு ஆற்றோரங்களிலும் இயற்கை வெளிகள் அமைந்து




இலங்கையின் மழைவீழ்ச்சி படம்

அதிக மழை வீழ்ச்சியுள்ள இடங்களை நோக்குக. இப்பகுதிகளில் அடர்ந்த காடுகள் இருந்ததால் பண்டைய சிங்களவர் ஈண்டு குடியேறவில்லை. வடமேல் தென்கீழ்ப் பகுதிகளில் உள்ள வெளிகளில் குடியேறினர்.

(மறுபக்கத்திலுள்ள படங்களையும் நோக்கி அறிக)



பண்டைய சிங்களவர் உழவு வரானதால் அவர்கள் நெற்செய்கை செய்வதற்கு உவப்பான ஆற்றோரங்களில் குடியேறினர்.



பூர்வ சிங்களக் குடியேற்றங்கள்.

இருந்ததால் அவை அவர்கட்கு குடியேற வாய்ப்புடையனவாகக் காணப் பட்டன. காட்டை அழிக்கவேண்டிய பிரயாசையும் ஏற்படவில்லை.

(b) ஆரியருக்கும் வேடருக்குமுள்ள வேற்றுமைகள்

ஆரியர் இலங்கைக்கு வந்தபோது இங்கு வாழ்ந்த வேடர் அநாகரிகராயிருந்தனர்; ஆனால் ஆரியரோ நாகரிகம் படைத்தவர்களாயிருந்தனர். வேடர்கள் மலைக்குகைகளில் வசித்த வேட்டையாடுதலையே தொழிலாகக் கொண்டு, கல்லாயுதங்களை உபயோகித்து, மிருகங்களின் தோலை ஆடையாக உடுத்து, சமைக்கத் தெரியாமல் பச்சை இறைச்சியையே உண்டு காலம் கழித்தனர். ஆனால் ஆரியரோ கட்டடங்களைக் கட்டி, பஞ்சாடைகள் நெய்து, இரும்பாயுதங்களை உபயோகித்து, உணவைச் சமைத்து நல்வாழ்க்கை நடத்தினர். இலங்கை வேடர்கள் சைகை மூலம் பேசினர்; ஆரியரோ ஒரு மொழியைப் பேசினர். வேடரிடம் தகுந்த ஆட்சிமுறை ஒன்றும் இருக்கவில்லை; ஆரியர் தங்கள் கிராமங்களில் ஏற்ற ஓர் ஆட்சி முறையைக் கையாண்டனர். ஒவ்வொரு கிராமமும் காமினி எனப்பட்ட கிராமத் தலைவனால் ஆளப்பட்டது; அவனுக்கு உதவியாகக் கன்சபா எனப்பட்ட கிராமச்சபை இருந்தது (10–ம் அத்தியாயம் பார்க்கவும்).


ஆரிய குடியேற்றக்காரருக்கும் வேடருக்கும் பூசல் உண்டானது. ஆரியர் நாகரிகம் அடைந்தவர்களானபடியால் இரும்பு ஆயுதங்களை உபயோகித்து வேடர்களை எளிதாக மலைகளுக்கும் காடுகளுக்கும் துரத்திவிட்டனர் (149–ம் பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்) பின்பு ஆரியர் வடமேல், தென்கிழ் வெளிகளில் குடியேறினர்.

(c) ஆரியரின் செல்வாக்கு


ஆரியரின் இலங்கை வரவு பிரதானமானது; அவர்கள் நாகரிகம் உடையவர்களாயிருந்தபடியால் அவர்கள் மூலமாகவே இலங்கையும் நாகரிகம் அடைந்தது. இலங்கையில் முதன்முதல் வீடு அமைத்தவர் ஆரியரே, எனவே அவர்கள் கட்டட முறையை இலங்கையிற் புகுத்தினர். ஆரியர்தான் இலங்கையில் முதல் முதல் நெற் செய்கை செய்தார்கள் எனவே நெற் செய்கை முறையை இலங்கை ஆரியரிடமிருந்தே அறிந்து கொண்டது. இவைகளன்றி ஆரியர்கள் கிராம ஆட்சிமுறை தங்கள் மொழி, உடை ஆகியவற்றையும் இலங்கையுட் புகுத்தினர்கள்.

இரண்டாம் அத்தியாயத்தில் மனிதன் கற்காலத்திலிருந்து செம்புக்காலத்திற்கும், செம்புக்காலத்திலிருந்து இரும்புக்காலத்திற்கும் செல்ல பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன என்று கூறினோம். இலங்கை மக்கள் கற்காலத்தில் இருந்தபோது ஆரியர் இரும்பின் உபயோகத்தை இலங்கையில் புகுத்தினர். எனவே இலங்கை கற்காலத்திலிருந்து, இரும்புக்கால நிலைக்கு வந்தது. அது செம்பு வெண்கலக்காலங்களைத் தாண்டவில்லை. 2-ம் அத்தியாயத்திற்றானே பண்டைய மனிதனின் தொழில் வேட்டையாடுதல் எனக் கண்டோம். மிருகங்களைப் பழக்கி உபயோகத்திற்குக் கொண்டுவர ஆயிரம் ஆண்டுகள் சென்றன. தனக்கும் தான் வளர்க்கும் மிருகங்கட்கும் வேண்டிய உணவுப் பொருட்களைச் செய்கை பண்ண மேலும் ஆயிர வருடங்கள் கழிந்தன. தொழில் முறைகளிலும்கூட ஆரியர் சாதாரணமாக கழியக்கூடிய பல்லாயிரம் ஆண்டுகளை இலங்கையில் சுருக்கிவிட்டனர். வேட்டுவத் தொழில் நிலையில் இருந்த இலங்கை மக்கள் ஆரியர் மூலம் விவசாயத்தைப்பற்றி அறிந்து கொண்டனர். கீழ்வரும் விளக்கக் குறிப்பு மேற்கூறிய இரு விஷயங்களிலும் இலங்கையின் வரலாறு ஏனைய நாடுகளிலும் வேறுபட்டிருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.


I பல்வேறு (யுகங்கள்) காலங்கள்



II தொழில் முறை வரலாறு



ஆரியரின் வருகை இன்னெரு காரணத்தினலும் முக்கியமானது. ஆரியர் இலங்கையில் புகுத்திய பல பொருட்கள் இன்றும் இலங்கையில் உபயோகத்திலிருக்கிறது. இரும்பு இன்றும் இலங்கையில் பிரதான உலோகமாக இருக்கின்றது. நெல் அரிசிச் சோறே இலங்கை மக்களின் பிரதான உணவாகும். இலங்கையின் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியாகிய சிங்களம் ஆரிய வழி மொழிகளில் ஒன்றாகும் இறுதியாக கன்சபா என்ற கிராமம் ஆட்சிமுறை வெகு அண்



மையில்கூட இலங்கையில் நடைமுறையில் இருந்தது. இங்கு கூறப்பட்டவைகளைக் கொண்டு இலங்கையில் ஆரியர்களின் வருகை ஒரு முக்கியமான சரித்திர நிகழ்ச்சி என்பதைத் தெரிந்து கொள்ளலாம் நாகரிக மற்ற மக்கள் வாழ்ந்த ஒரு நாட்டில் ஆரியர் நாகரிகத்தை நாட்டினர். சிங்கள சாதியையும், சிங்கள நாகரிகத்தையும் அடிகோலியவர்கள் ஆரியர் என்று சொல்லப்படுகிறது.

II விருதுக் கம்பக் கூட்டத்தினர்

(மிருகங்கள் பறவைகளை விருதாகக் கொண்ட பழங்குடி மக்கள்)

இலங்கையின் பழங்குடி மக்கள் பறவைகள், அல்லது மிருகங்களை விருதாகக் கொண்ட குடிகளும் இருந்தன. ஒவ்வொரு கூட்டத்தாரும் ஒரு பறவையையோ மிருகத்தையோ அடையாளமாகக் கொண்டிருந்தனர். அவ்வடையாளம் விருது எனப்படும். இவ்விருதை சாதாரணமாக நீண்ட கம்புகளில் பொருத்தி இருப்பர். அக்கம்பு விருதுக்கம்பு எனப்படும் விருதுக்கம்பு உடைய மக்கள் விருதுக் கம்பக் கூட்டத்தினர் எனப்படுவர்.

கீழ்வரும் விருதுக்கம்பக் கூட்டத்தினர் பூர்வ இலங்கையில் வாழ்ந்தார் என்பதற்கு சான்றுகள் உண்டு. சிங்கள (சிங்கம்) பலிபோஷக (காகம்) இலம்பகர்ண (வள்ளாடு அல்லது முயல்) தராச்ச (கோநாய்) மோரிய (மயில்) குலிங்க (பருந்து) எனும் பல விருதுக் கூட்டத்தினர் இருந்தனர். சிங்களக் கூட்டத்தினர் ஏனைய கூட்டத்தினரிலும் பார்க்க அதிகம் பலம் பொருந்தியவராய் இருந்தபடியால் இத்தீவுக்கு சிங்கள துவீபம் என்ற பெயர் வந்தது போலும்; இங்கு வாழ்ந்த மக்கள் சிங்களவர் எனவும் பட்டனர்.

பயிற்சி I

(1) வேடர்களின் இல்லங்கள் எத்தகையனவாய் இருந்தன?
(2) ஆரியர் எவ்வகையான கட்டடங்களை இத்தீவில் புகுத்தினர்?
(3) வேடர்களின் முக்கியமான தொழில் என்ன?
(4) இலங்கைக்கு வந்த ஆரியரின் முக்கியமான தொழில் என்ன?
(5) வேடர்களும் ஆரியர்களும் உபயோகித்த ஆயுதங்களை ஒப்பு நோக்கி ஆராய்க.
(6) வேடர்கள் எப்படிப்பட்ட மொழியைப் பேசினர்கள்?
(7) தற்போதைய சிங்கள மொழி எம்மொழியிலிருந்து வளர்ச்சி அடைந்தது?
(8) வேடர் ஏதாவதொரு அரசியல் முறையைப் பின்பற்றினர்களா?
(9) ஆரியரால் இலங்கையில் பின்பற்றப்பட்ட அரசியல் முறை யாது?
(10) ஆரியர் இலங்கைக்கு கொண்டு வந்த முறைகள் எவை? அவை தானமானது ஏன்?
(11) இலங்கை மக்கள் ஏன் சிங்களவர் எனப்படுகின்றனர்? விளக்குக:

III பௌத்தமத வரலாறு

இலங்கை வரலாற்றின் மற்றைய பிரதான நிகழ்ச்சி பௌத்தமத வரவாகும். ஆரியர் இலங்கையிற் புகுத்திய நாகரிகத்தை நுணுகி ஆராய்ந்தால் அதிற் சில முக்கிய அமிசங்கள் இல்லாதிருத்தலைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஆரியர் வரையறையான எம்மறையையும் இலங்கையுட் புகுத்தவில்லை என்பதைக் கூறலாம்; அவர்கள் கல், செங்கல் ஆகியவற்றுல் வீடுகட்டும் முறையை இலங்கையிலிருந்தவர்கட்குக் காட்டிக் கொடுக்கவில்லை; அன்றியும் ஓவியம், வருணந்தீட்டுதல், சிற்பம் ஆகியவற்றையு மவர்கள் இலங்கையுட் புகுத்தவில்லை. இவைமட்டுமன்று கல்வி, இலக்கியம் ஆகியனவும் ஆரியரால் கொண்டுவரப்படவில்லை. இவைகள் யாவும் கி. மு. 247 இல் மகிந்தனும் அவனுடைய மாணவர்களும் பௌத்த மதத்தை இலங்கையிற் பரப்ப வந்தபோது உடன் கொண்டு வரப்பட்டன.


(a) மகிந்தன் வருகைக்குமுன் இலங்கையில் மதம்

மகிந்தனின் வருகைக்குமுன் விருட்சங்கள், ஆவிகள், பேய்கள் ஆகியவற்றை இலங்கையிலுள்ளார் தெய்வங்களாக வணங்கினர். பாரிய விருட்சங்களை தேவர்களின் உறைவிடங்கள் என நம்பிய மக்கள் அவற்றை வணங்கினர்கள். ஆல மரத்தை வயிரவக் கடவுளின் உறைவிடம் எனவும், பனைமரத்தை வியததேவனின் உறைவிடம் எனவும் அவர்கள் எண்ணினர்கள். மகாவமிசத்திலும் சித்தராசர் எனப்படும் பேய்களும், கலவெல விபீஷணன் எனப்படும் ஆவிகளும் வழிபடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. மக்கள் இத்தெய்வங்களுக்குக் காணிக்கை செலுத்தி அவற்றின் அருளை வேண்டினர்கள்.

(b) மகிந்தன் வருகை

புத்தர் பகவான் தமது போதனைகளையும் தாம் நிறுவிய சங்கத்தையும் விட்டு கி. மு. 483 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார். பேரரசன் அசோகன் ஆண்டகாலத்தில் இந்தியாவில் பௌத்த மதத்தில் பதினெண் பிரிவுகளிருந்தன. ஒவ்வொன்றும் தாம் தாம் போதிப்பனதான் பௌத்தரின் போதனைகள் என உரிமை பாராட்டின. கி. மு. 247 இல் அசோகனின் மகனை மகிந்தன் வேறு நான்கு பிக்குகளுடன் இலங்கைக்கு வந்தான். இவர்கள் பௌத்த சமயத்தில் தேரவாத கிளையைச் சேர்ந்தவர்களாவர். இக்காலத்துப் பௌத்த சந்நியாசிகள் மலைக்குகைகளில் வாசம் செய்யும் வழக்கமுடையவராயிருந்தனர். மகிந்தனும் அவன் துணைவரும் அநுராதபுரத்துக்கு கிழக்கிலுள்ள மலைக்குகைகளில் தங்கினர்கள். இம்மலைகளுள்ள இடம் மகிந்தனின் பெயரைப்பெற்று மிகுந்தலை எனப்படுகின்றது.

மகிந்தன் மிகுந்தலையை அடைந்த சில காலத்தின்பின் தேவனன்பிய தீச அரசன் வேட்டையாடச் சென்றிருந்தான். அவன் ஒரு மானைத் துரத்திச் சென்றபோது மகிந்தனைச் சந்திக்க மகிந்தன் அவனைப் பெயர் சொல்லி அழைத்தான். மகிந்தன் அரசனுக்கு பௌத்த மதத்தின் சில உண்மைகளைப் போதித்தான். அரசனுக்கு அப்போதனைகள் நன்கு பிடித்துக்கொண்டதால் அவன் பௌத்த சமயத்தைத் தழுவினன்; அரசனைப் பின்தொடர்ந்து அவன் பரிவாரங்களும் பௌத்த சமயிகள் ஆயினர்.



புனித போதி விருட்சம்
(அநுராதபுரி)

மறுதினம் மகிந்தன் அநுராதபுரிக்குச் சென்று பெருந்தொகை மக்களை பௌத்த சமயிகள் ஆக்கினன். மிகுந்தலை அநுராதபுரிக்குப் பண்ணிரு கல் தொலையில் இருந்தாலும், மக்கள் பௌத்த உபதேசங்களைக் கேட்க வாஞ்சித்ததாலும் அரசன் மகிந்தனுக்கும், அவன் துணைவர்கட்கும் மகாமேகவன்ன தோட்டத்தை அளித்தான். இத்தோட்டத்திலேதான் பண்டை இலங்கையில் பிரசித்தி அடைந்த மகாவிகாரை கட்டி எழுப்பப்பட்டது. அரசனின் மணமைத்துனி ஆகிய அனுலாவும் அரண்மனையிலுள்ள அனேகம் பெண்களும் பௌத்த பிக்குணிகளாக விரும்பினர். மகிந்தனுடன் ஒரு பிக்குணிகளும் வரவில்லை. ஒரு பெண் பௌத்த பிக்குணி ஆகுவதாயின் பௌத்த பிக்குணி ஒருத்தியே அதற்கான சடங்குகளை நிறைவேற்றவேண்டும். எனவே மகிந்தன் தனது சகோதரி சங்கமித்தைக்கு தூது அனுப்பினன். அவள்



மகிந்தன் குகை


(அம்புக்குறி குகைக்குச் செல்லும் வழியைக் காட்டுகின்றது.)

முன்னரே பௌத்த பிக்குனி ஆகியிருந்தாள். அவள் தன் சகோதரன் விருப்பத்திற்கு இயைந்து வெள்ளரச மரக்கிளை யொன்றுடன் இலங்கையை அடைந்தாள். இவ்வெள்ளரசங் கிளையை விழாச் சிறப்புகளுடன் மகாவிகாரை நிலத்தில் நாட்டினர்கள். இலங்கைப் புத்தருக்கு இவ் வெள்ளரசு மிகவும் புனிதமான ஒரு பொருளாக விளங்குகின்றது.


(c) இலங்கையில் பௌத்தமத பண்டைய மைய தலங்கள்.

பௌத்த மதம் இலங்கையில் வளர்பிறையென வளர்ந்து, இலங்கையின் பிரதான மதமாகியது. மிகுந்தலை, அநுராதபுரி, களனியா, உறுகுணை ஆகிய இடங்கள் பௌத்த மத மையங்களாய்த் திகழ்ந்தன.

மிகுந்தலை தற்போது பிரதானமான ஒரு யாத்திரைத்தலமாக விளங்குகின்றது. ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் ஆண்டுதோறும், விசேடமாக போசன் விழாக் காலத்தில், மிகுந்தலைக்குச் செல்லுகின்றனர். இலங்கையின் பௌத்தமத திருப்பிரசாரகரான மகிந்தனை மகிமைப்படுத்த அங்கு செல்லுகின்றனர். மிகுந்தலையில், மகிந்தன் குகை, மகிந்தனும் தேவனன்பியதிசனும் சந்தித்த இடமாகிய அம்பத்தலை தாதுகோபமும், மகிந்தனின் புனித பொருட்கள் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் தாதுகோபமும் மூன்று முக்கிய பௌத்த சேத்திரங்களாக விளங்குகின்றன. தேவனன்பியதிசன் காலம் முதல் இலங்கையை ஆண்ட பௌத்த மத பக்தர்களான அரசர்கள் மிகுந்தலையில் பௌத்த சந்நியாசிகட்கு தகுதியான ஆச்சிரமம் ஒன்றை அமைக்க ஆவன செய்து வந்திருக்கிறார்கள். 1840 படிகள்மூலம் மலை உச்சியை அடைய படிகள் அமைக்கப்பட்டுள்ளன. அம்பத்தலை தாதுகோபம் மகாசயா,



இருமுனைய விகாரை



இடதுபக்கம்—ரூவான்வலிசயா (தூட்டகைமுனு)

வலதுபக்கம்—அபயகிரி தாதுகோபம் (வாலகம்பா)

கந்தகசேட்டிய ஆகிய தாது கோபங்களும் கட்டப்பட்டுள்ளன. பௌத்த சந்நியாசிகட்கு ஆச்சிரம அறைகள் அமைக்கப்பட்டன. குகைகளை நன்கு வெட்டி திருத்தி அமைத்தனர். பொக்கணைகள் அல்லது குளங்கள்—நாக பொக்கணை, கலுதிய பொக்கணை முதலியன—மிகுந்த தலையில் வாழ்ந்த பிக்குகள் நீர் பெறும் பொருட்டுத் தோண்டப்பட்டன. உண்டிச் சாலைகள், கூட்ட மண்டபங்கள் வைத்திய சாலைகள் ஆகியன அடங்கிய ஒரு பெரு ஆச்சிரமமாக மிகுந்தலை திகழ்ந்தது. அநுராதபுரி பண்டைய இலங்கையில் பௌத்த மதத்தின் புனித நகரமாக இருந்தது. சில வேலைகளி 'இது அட்டமஸ்தின' அல்லது எட்டுச் சேத்திரங்கள் உள்ள ஊர் எனக் குறிப்பிடப்படுகிறது. விகாரைகள், தாது கோபங்கள், போதி மரம் ஆகியன அனுராதபுரியை அணிசெய்கின்றன.

ஆச்சிரமங்களில் முதன்மையானது மகாவிகாரை ஆகும். இதற்குரிய தாதுகோபம் ரூவான்வலிசாயா ஆகவும் கூட்ட மண்டபம் செப்பு மாழிகையாகவும் இருந்தன. அதிபண்டைய தாது கோபங்களுள் புத்தரின் தோட்பட்டை என்பு அடங்கியிருப்பதாகச் சொல்லப்படும் தூபரம ஒன்றுகும். மிகுந்தனுற் போதிக்கப்பட்ட தேரவாதக் கொள்கையை உடையனவாக மிருஸ்வட்டி இசுருமுனிய, இலங்காராம முதலாம் விகாரைகள் அனுராதபுரியில் இருந்தன.

மகிந்தன் போதித்தற்கு மாறுன கொள்கைகளைஉடைய புத்த மதம் மூன்று விகாரைகளில் அநுசரிக்கப்பட்டது. அவைகளீ தக்கின விகாரை, அபயகிரி விகாரை, சேதவன்றுமவிகாரை ஆகியனவாம். கடைசி இரண்டு இடங்களிலும் மகாயானக் கொள்கைகள் போதிக்கப் பட்டன.

களனியா, உறுகுணை:- களனியா, உறுகுணை ஆகிய இடங்களிலும் பௌத்தம் வளர்மதியென வளரலாயிற்று. களனி விகாரை திசமகாராம விகாரை, சித்தல பாபத்தை ஆகியன கட்டியெழுப்பப்பட்டன.

பயிற்சி II

1. ஆரியர் வருகைக்குப்பின் இலங்கைச் சரித்திரத்தில் முக்கிய நிகழ்ச்சி யாது?
2. கி. மு. 500 இல் ஆரியர் கொண்டுவந்த நாகரிகத்தில் காணப்படாத சில அமிசங்களைக் கூறுக.
3. பௌத்தம் இலங்கைக்கு வருமுன் இலங்கைக் குடிகளின் வழிபாடு எத்தகையது.
4. பேரரசன் அசோகன் காலத்தில் இந்தியாவில் எத்தனை பௌத்த மதப் பிரிவுகள் இருந்தன.
5. மகிந்தன் எப்பிரிவைச் சேர்ந்தவன்?

6. எவ்வாண்டு எம்மன்னன் காலத்தில் மகிந்தன் இலங்கைக்கு வந்தானீ?
7. மகிந்தனும் அவன் துணைவர்களும் எங்கே தங்கள் ஆச்சிரமங்களை நிறுவினர்?
8. மகிந்தனுக்கும் துணைவர்கட்கும் அரசன் அளித்த உபவனம் யாது?
9. மகிந்தனின் தங்கை சங்கமித்தைக்கு இலங்கைக்கு வருமாறு ஏன் செய்தி அனுப்பப்பட்டது?
10. அவள் இலங்கைக்கு வந்தபோது புத்தரின் புனிதப் பொருள் எதனைக் கொண்டு வந்தாள்?
11. மிகுந்தலையிலுள்ள மூன்று முக்கிய புனித சேத்திரங்கள் யாவை?
12. மகிந்தனின் கொள்கைகளைப் போதித்த அநுராதபுரவிகாரைகளில் சில கூறுக;
13. பௌத்தத்தில் வேறுவித கொள்கையைப் போதித்த மூன்று அநுராதபுரி விகாரைகளின் பெயர்களைக் கூறுக;
14. மிகுந்தலையையும் அனுராதபுரியையுந் தவிர வேறு எங்கு எங்கே பிரதான பௌத்த சேத்திரங்கள் எழுந்தன.

IV பௌத்தமதம் விரைவில் பரம்பியதற்கான காரணங்கள்

தேவனன்பியதீசன் பௌத்த முறையைத் தழுவிய சின்னுட்களில் குடிகளிற் பலர் பௌத்த சமயிகளாயினர். மகாவம்சத்தின் கூற்றுப் படி 40,000 பேர் முதல் நாளிலேயே பௌத்த சமயத்தைக் கைக் கொண்டனர். குறுகிய காலத்தில் இலங்கை மக்கள் அனைவரும் பௌத்தர்களானார்கள். இவ்வாறு பௌத்தம் விரைவாக இலங்கையில் பரவியதற்குப் பல காரணங்கள் உண்டு.

மகிந்தன் இலங்கைக்கு வருமுன் இலங்கையில் செம்மையான எம்மதமும் இருக்கவில்லை. ஒரு மதத்தை அநுசரிக்கும் ஒருவன் எளிதில் அதனைவிட்டு இன்னொன்றுக்கு மாறமாட்டான். இலங்கையில் பண்டு புத்த சமயத்தைத் தழுவியவர்கள், தாங்கள் முன்னர் பின்பற்றிய மதத்தை விடுவதில் அத்துணை இன்னல் அடைய காரணம் இருக்கவில்லை. மேலும் பௌத்தம் அவர்களின் பூர்வ வழிபாடுகளான தெய்வ வணக்கம், பிதிர் வழிபாடு, பேய்கள் வழிபாடு ஆகியவற்றை விட்டுவிடும்படி அவர்களை கட்டாயப்படுத்தவுமில்லை. அவர்கள் பௌத்தத்தை தழுவியதுமன்றி தங்கள் பூர்வ சமய வழக்கத்தைக் கைவிடவுமில்லை.

மகிந்தன் இலங்கைக்கு வருமுன் மக்கள் வாழ்க்கையைப்பற்றியும் இறப்பின் பின் உள்ள சீவியத்தைப்பற்றியும் கருகலான கொள்கை

கள் உடையவர்களாய் இருந்தார்கள். பௌத்தம் இவைபற்றி வரையறவான கொள்கைகள் உடையதாயிருந்தது, அன்றியுமீ மக்கள் நடந்து கொள்ளவேண்டிய அறமுறைகள் ஒழுக்க விதிகளையும் அவர்கட்கு அளித்தது. இக்காரணங்களால் இம்மதம் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தது.

இலங்கைக்கு வந்த பௌத்த சந்நியாசிகள் ஆரியர் இலங்கையில் புகுத்தியதுபோன்ற ஒரு மொழியைப் பேசினர்கள். எனவே மக்களுக்குப் போதிக்குமுன் வேறெரு மொழியைக் கற்க வேண்டிய துன்பம் அவர்கட்கு ஏற்படவில்லை.

இறுதியாக அக்காலமக்கள் அரசர்களை கனம்பண்ணி பல கருமங்களில் அவர்களைப் பின்பற்றினர். தேவனன்பியதீசன் பௌத்த முறையைத் தழுவி, பௌத்த துறவிகளைக் கனம்பண்ணி, பௌத்த மதத்தை ஆதரிக்கக்கண்ட மக்களும் தம் அரசனைப் பின்பற்றினர். அரசர்களின் ஆதரவிலும் விசேட பாதுகாப்பிலும் பௌத்தம் வளர்ந்தோங்கி இறுதியில் அரசாங்க மதம் ஆகியது.

பயிற்சி III

இடைவெளிகளை நிரப்புக:

(a) முன்னர் மக்கள் அநுசரித்த மதம் வேறென்று இருக்கவில்லை எனவே அவர்கள்.....ஆகு முன் வெறெரு மதத்தை கைவிட வேண்டியிருக்கவில்லை.

(b) அவர்கள் தங்கள் பழைய சமய.....விட்டுவிடவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படவில்லை.

(c) பௌத்தம் அவர்கட்கு இக்கால.....மரணத்தின் பின் .....ஆகியவற்றைப்பற்றி வரையறைவான கொள்கைகள் உடையதாயிருந்தது.

(d) பௌத்தம்.....மக்களுக்கு அளித்தது.

(e) .....குடிகள் பேசியது போன்ற ஒரு மொழியை பௌத்த துறவிகள் பேசியதால், புது மொழியைப் படிக்க வேண்டிய இடுக்கண் அவர்கட்கு ஏற்படவில்லை.

(f) அரசன், பௌத்த மதத்தை தழுவினன்; ஜனங்களும் அவனுடைய.....பின்பற்றும் தன்மை உடையவர்களாய் இருந்தார்கள்.


(g) அரசர்களின்.....பௌத்தம் விரைவில் இலங்கையின் அரசாங்க மதமானது.

V பௌத்தத்தின் செல்வாக்கு ஆன்மீக செல்வாக்கு

கி. மு. 217 இல் மகிந்தனைத் தலைமையாகக் கொண்டு இலங்கைக்கு வந்த பௌத்த பிரசாரக் குழு இத்தீவின் நாகரிகத்தை வளர்த்த சக்திகளுள் பிரதானமானது ஒன்றுகும். செம்மையான மதானுசாரம் அற்ற பண்டைய இலங்கை மட்கு மகிந்தனும் அவர் துணைவரும் புத்தரின் படிப்பினைகளை உபதேசித்தார்கள். மக்கள் முதன்முதலாக வாழ்க்கையின் இலட்சியங்களையும், நன்மை, தீமை, மரணத்தின்பின் உள்ள வாழ்வு, ஆகியவற்றைப்பற்றிய தெளிவான கொள்கைகளை அறிந்து கொண்டனர். நிர்வாணம் என்ற இலக்கை நோக்கிச் செல்வதே அவர்களின் நோக்கமாகும். புத்தரினதும் அவரது உற்ற மாணவர்களினதும் வாழ்க்கை அவர்கள் பின்பற்றக்கூடிய சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்கின. மக்கள் விகாரைகளுக்கு வந்து 'பானை' என்ற உபதேசங்களைக் கேட்டார்கள். பௌத்த சந்நியாசிகள், மக்களை உண்மை, நேர்மை, வாய்மை தூய்மை உயிர்களுக்கு இரங்கல் ஆகிய நற்செயல்கள் உள்ளவர்களாய் இருக்கும்படி தூண்டினர்கள். அப்போதனைகள மக்களின் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தியதன்றி, அகிம்சை மைத்திரியம் ஆகிய இரண்டு மூலாதாரக் கொள்கைகளும் மக்கள் மத்தியில் சண்டை சச்சரவுகளையும் பாதகச் செயல்களையும் எவ்வளவோ குறைக்க உதவின. பௌத்தம், மனிதன் சரிசமனனவன் என்பதை வற்புறுத்துவதால், சாதிக்கட்டுப்பாடு இந்தியாவைப்போல் இலங்கையில் வன்மையுடையதாய் இருக்கவில்லை.

இலக்கியமும் கல்வியும்

பௌத்தம் மக்களின் மதவாழ்வில் என்ன செய்தது என்பதைப் பற்றி இதுவரை ஆராய்ந்தோம். சமயக் கொள்கைகளை மாத்திரமில்லை வேறும் அநேக விஷயங்களை பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவந்தது. பௌத்த சந்நியாசிகள் பௌத்தரின் போதனைகளையும், சாதகக் கதைகள் கதாவத்து என்ற நூல்களையும் இலங்கைக்கு கொண்டுவந்தார்கள். இந்நூல்கள் பாளி மொழியில் எழுதப்பட்டன. இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட முதல் நூல்கள் இவைகளேயாம். இச்சந்நியாசிகள் கொண்டுவந்த பாளி மொழி சிங்கள மொழியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. இன்று நாங்கள் பேசும்பொழுது இடையிடையே ஆங்கிலச் சொற்கள் சிலவற்றையும் கலந்து கொள்வதுபோல் அக்காலத்திலும் மக்கள் சிங்களத்தைப் பேசும்பொழுது பாளிச் சொற்களையும் சொற்றொடர்களையும் உபயோகித்தார்கள். இப்பாளிச் சொற்கள் காலகதியில் சிங்கள மொழியில் கலந்து கொண்டன. சந்நியாசிகள் நன்கு கற்ற அறிஞர்களாய் இருந்தபடியால் எழுத்துமுறைக் கலையையும் இலங்கைக்குக் கொண்டுவந்தார்கள். இலங்கையில் கண்டு காணப்



இலங்கையில் பௌத்தத்தின் செல்வாக்கு

பட்ட எழுத்துக்கள் அசோகனுடைய சாசன எழுத்துக்களை போன்றன. விகாரைகள் கல்விக்கு மையங்களாக விளங்கின. பல இளைஞர்களும் பல இளம் பெண்களும் கல்விகற்று பிக்குகளாகவும் பிக்குணிகளாகவும் வாழ்க்கை நடத்தினர். அரசர்களினதும் பிரபுக்களினதும் குழந்தைகட்கு பௌத்த சந்நியாசிகள் கல்வி கற்பித்தார்கள். இவ்வாறு கல்வியும் பௌத்த துறவிகளால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது.

கட்டடக்கலை, சிற்பம், சித்திரம்

பௌத்த மதம் இலங்கைக்கு வருமுன் இலங்கையிலுள்ள எல்லா வீடுகளும் ஓலைகளால் மரத்தினால் அல்லது மண்ணால் கட்டப்பட்டன. அசோகப் பேரரசில் செங்கல், கற் கட்டடங்கள் கட்டி எழுப்பப்பட்டன (143-ம் பக்கம்பார்க்கவும்). பௌத்தம் இலங்கைக்கு வந்தபின் விகாரைகளும் தாது கோபங்களும் இலங்கையில் கட்டப்படலாயின. இவைகள் இந்தியாவில் கட்டப்பட்ட விகாரைகள் தாது கோபங்களை பெரிதும் ஒத்திருந்தன (பின்வரும் ஓர் பக்கத்திலுள்ள இலங்கைத் தாதுகோபப் படங்களை (140-ம் பக்கங்களிலுள்ள தாது கோபங்களோடு ஒப்பிட்டு நோக்கவும்) இவ்வாறு பௌத்தமத வருகையுடன் இலங்கையில் செங்கல் கற் கட்டடக் கலையும் புகுந்தது.

விகாரைகளில் பௌத்தருடைய உருவங்களை வைத்திருத்தலும் விகாரைகளின் சுவர்களில் புத்தரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் படங்களைத் தீட்டுதலும் வழக்கமாய் இருந்தது. இவ்வாறு சிற்பம், சித்திரம் இலங்கையில் இடம் பெற்றன.

இத்துணை கூறிய யாவற்றையும் பண்பாடு என்ற ஒரு சொல்லில் சுருக்கமாகக் கூறலாம், அதனால் பௌத்தம் இலங்கைக்கு ஆன்மீகத் தூதை மாத்திரமல்ல பண்பாட்டையும் கொண்டு வந்தது. இலங்கையின் பண்பாட்டு வரலாறு பௌத்த மத வருகையுடன் ஆரம்பிக்கின்றது.

பயிற்சி IV

I இடைவெளிகளை நிரப்புக:

1. பௌத்தம் மக்களுக்கு.....நன்மை.....என்ற கொள்கைகளையும்,.....பின் உள்ள வாழ்வையும் பற்றிப் போதித்தது.
2. பௌத்தம் மக்கள் அடையவேண்டிய ஒரு.....அதாவது.....பற்றிப் படிப்பித்தது.
3. பௌத்த துறவிகளின்.....மக்களினிடம் செல்வாக்குப் பெற்றது.

4. அகிம்சை, மைத்திரேயம் ஆகியன.....ஆகியவற்றை மக்களிடையே குறையச் செய்தது.
5. இந்தியாவிற்போலச் சாதிக்கட்டுப்பாடு இலங்கையில் வலுப்பெறவில்லை; ஏனெனில் பௌத்தம் எல்லாரும்.....என்பதை வற்புறுத்தியது.

II சுருக்கமான விடை தருக:

(a) பௌத்த துறவிகள் முதலில் புகுத்திய நூல்களின் பெயர்களைக் கூறுக.

(b) பாளி மொழி சிங்களமொழி வளர்ச்சிக்கு எவ்வாறுதவியது?

(c) எழுத்து முறையை இலங்கையிற் புகுத்தியவர் யார்?

(d) விகாரைகளில் யார் கல்வி பயின்றார்கள்?

(e) பௌத்தம் இலங்கைக்கு வந்தபின் செங்கல், கற் கட்டடக்கலை, சிற்பம் ஓவியம், ஆகியன எவ்வாறு இலங்கையில் இடம் பெற்றன?

III, பின்வரும் வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

.....இலங்கைக்கு வந்த காலம் முதல் இலங்கையின் பண்பாட்டு வரலாறு தொடங்குகின்றது.

VII-ம் அத்தியாயத்தில் வினாக்கள்.

1. ஆரியர் வருகைக்குமுன் இலங்கை மக்களின் வாழ்க்கை முறையைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுக.
2. ஆரியரின் வருகை இலங்கைச் சரித்திரத்தில் முக்கியமானது ஏன்?
3. பௌத்தம் இலங்கைக்கு வருமுன் இலங்கையின் சமயவழிபாடுகள் யாவை?
4. எவ்வாண்டில், எவ்வரசனுட்சியின் பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது? அஃது எவ்வாறு அதி தீவிரமாகப் பரவியது?
5. பௌத்தமத வருகை இலங்கையில் ஏன் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது?

8-ம் அத்தியாயம்

மத்திய காலத்தில் மேற்கு நாடுகளின் நிலை.

1. உரோமைப் பேரரசின் தளர்ச்சி (a) மிலேச்சர்களின் முற்றுகை (b) தளர்ச்சிக்கான காரணங்கள்.
2. இயஸ்தீனியன் (a) மேற்கில் பேரரசுக்குப் புத்துயிரளிக்க முயற்சி (b) சட்டத் தொகுப்பு.
3. (a) திருச்சபையினதும் பாப்பரசரதும் ஆட்சியின் எழுச்சி (b) அர்ச். ஆசீர்வாதப்பரும் அவர் துறவிகளின் பணியும்.
4. தீர்க்கதரிசி முகம்மது (a) அவரது போதனைகள் (b) அவரது பேரரசு.
5. பரிசுத்த உரோமைப் பேரரசு (a) பிராங்கியர் (b) கி. பி. 800 இல் மாமன்னன் சார்ளசும் உரோமைப் பேரரசுக்கு அடிகோலுதலும்.
6. சிலுவைப் போர்கள்—சிலுவையும் பிறையும் (a) ஏன் கிறீஸ்தவர்களும் முஸ்லீம்களும் புனித பூமியில் சண்டைசெய்தார்கள் (b) சிலுவைப் போர்களின் முடிவுகள்.

உரோமைப் பேரரசின் தளர்ச்சி


5-ம் அத்தியாயத்தில் உரோம் பேரரசான வகையையும் கி. மு. 31 இல் அது குடியரசிலிருந்து பேரரசன் ஆட்சிக்குட்பட்ட வரலாற்றையுங் கண்டோம்.

ஒக்ருவியஸ் சீசர் அல்லது அகுஸ்துஸ் என அறியப்பட்ட பேரரசன் தான் அரச கட்டிலேறியபோது செங்கல் நகரமாயிருந்த உரோமையைத் தான் இறந்தபோது கலவைக்கல் உரோமை நகராக மாற்றி அமைத்திருந்தான் என்று சொல்லப்படுகிறது. இவனைப் பின் தொடர்ந்து திராசன், அதிரியான், அந்தோனினஸ், பயஸ், மார்க்கஸ், அவுரேலியஸ் முதலாம் வலிமையுறு வேந்தர்கள் உரோமை ஆண்டார்கள். அன்னர் உரோமைப் பேரரசைப் பெருப்பித்ததுமன்றி, நகரையும் அழகுபடுத்தினர்கள். இவர்களைப் பின்தொடர்ந்து அரசர்கள் நன்கு ஆட்சி செய்யாததினால் பேரரசு சின்னபின்னம் அடைந்தது. எவ்வாறு ஒரு பேரரசனைத் தெரிவதென்ற சிக்கல் இப்பேரரசில் முதன் முதல் எழுந்தது. படிப்படியாக அரசனைத் தேர்வதில் பட்டாளம் அதிக செல்வாக்கு அடைந்தது. பட்டாளத்தை ஆதரித்த எவரும் பேரரசனாக முடிந்தது. கி. பி. 284 இல் உரோமைப் பேரரசு தியோக்கிளேசியன் என்ற திறமைமிக்க அரசனால் காப்பாற்றப்பட்டது

இம்மன்னன் பயன்றரு சீர்திருத்தங்கள் பலபுரிந்தான். உரோமைப் பேரரசு ஓரிடத்தில் இருந்து பாதுகாப்பதற்கரிய பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்ததால் இவ்வரசன் உரோமைப் பேரரசை மேல்கீழ் என இரு பிரிவுகளாய் வகுத்தான். (படம் பார்க்கவும்) இவ்விரு பிரிவுகளை இருபேரரசர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து ஆட்சிசெய்ய வழிகோலினன். கி. பி. 364 இல் கொன்ஸ்தந்தீன் மாமன்னன் பேரரசை நன்கு பாதுகாக்கும் பொருட்டு தலைநகரை தாடினல்ஸ் கால்வாய்க்கு அண்மையிலுள்ள பைசாந்தியத்துக்கு மாற்றினன். இங்கே அவன் எழில்மிக்க நகரைக் கட்டித் தன் பெயரை அடிப்படையாகக்கொண்ட கொன்ஸ்தாந்தி நோப்பிள் என்னும் பெயரை அதற்கிட்டான். இது பேரரசை உறுதிப்படுத்துவதற்கு செய்யப்பட்ட முயற்சியாயினும் மேற்கில் பேரரசை வலிகுன்றச் செய்தது; வலி குன்றியதற்குரிய காரணங்களில் பேரரசனை உரோமையிலிருந்து அகற்றியதும் ஒன்றாகும். கிழக்கு உரோமைப் பேரரசு கி. பி. 1453 இல் துருக்கர் அதனைக் கைப்பற்றும் வரையும் கிறீஸ்துவ இராச்சியத்தின் வன்மைமிக்க அரணாக விளங்கியது.

(a) மிலேச்சர்களின் முற்றுகைகள்

மேற்கு உரோமைப் பேரரசு பலம் குன்றிய ஒரு மன்னன் ஆட்சியில் பல இன்னல்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உரோமைப் பேரரசின் எல்லை 2000 மைல்கள் பரந்திருந்தது. வடகடல் தொட்டு



மிலேச்சரும் உரோமைப் பேரரசும்

தான்யூப் றைன் நதிகளை அடக்கிக் கருங்கடல்வரை பரந்திருந்தது. இந்நதிகளின் வடக்குக் கரையோரமாக வெவ்வேறு மிலேச்சச் சாதி

யார் வசித்தார்கள். இவர்கள் நிலவளமும் பொருள்வளமும் மிகுந்த பேரரசின் செழிப்பான பாகங்களில் சென்று வாழ அவாவினர். சாக்சனியரும், இயூத்தரும் (Jutes) தற்போதைய டென்மார்க்கிலும் பிராங்கர், லொம்பாடியர் வண்டலர் ஜேர்மனியிலும் கொத் சாதியார் கருங்கடலுக்கு வடக்கிலும் வாழ்ந்தனர்.

இவர்கள் தங்கள் பகுதிகளில் அமைதியாக இருந்திருப்பர் ஆனல் கொடுமையான அகுணர் கூட்டம் கூட்டமாக இந்நாடுகளில் நுழைந் தமையால் மேற் கூறப்பட்ட சாதியாரின் அமைதிக்குப் பங்கம் உண் டாயது. இவ்வகுணர் மத்திய ஆசியாவினின்றும் புறப்பட்டு மேற் கும் கிழக்கும் பரந்து சென்று சொல்லொணு இடுக்கண்களை சென்ற இடமெல்லாம் விளைத்தனர். இவர்களைத் தடுப்பதற்காகவே சீனர்கள் சீன தேசப் பெருமதிலைக் கட்டி எழுப்பினர்கள். இந்திய நாட்டுப் பேரரசர்கள் இவர்கள் வருகைக்கு அஞ்சி விழிப்பாயிருந்தார்கள். கி. பி. 375 அளவில் அகுணர் (Huns) மேற்குப்பாகமாக ஐரோப்பாவுக் குள் நுழையத் தொடங்கினர்; கி. பி. 433 இல் அற்றிலாவின் தலைமை யில் இவர்கள் ஐரோப்பிய நாடுகளைக் கொள்ளையடித்து மிகுந்த இன் னலை விளைத்தார்கள். அச்சத்தை விளைக்கும் இவ்வகுணர்க்குப் பயந்த மிலேச்ச சாதியினர் எல்லைப்புறங்களைத் தாண்டி உரோமைப் பேரரசின் வெவ்வேறு பகுதிகளில் குடியேறினர். கி. பி. 412 இல் மேற்குக் கொத் சாதியினரான விசிக் கொத்தர்கள் அல்ப்ஸ் மலைகளைக் கடந்து கிரீஸ் துவ தேவாலயங்களையும் கட்டடங்களையும் சூறையாடி வடக்கு இஸ்பா னியாவில் தங்கள் அரசு ஒன்றை நிறுவினர். கி. பி. 439 இல் வண் டலர் எனப்படுபவர் உரோமையைச் சூறையாடி கார்தேச்சைக் கைப்பற்றி ஆபிரிக்காவில் வண்டலர் அரசு ஒன்றை நிறுவினர். இயூட்சரும் சாக் சனியரும் கடல் கடந்து பிரித்தனை அடைந்தனர்; பிராங்கியர் கல்லியா (பிரான்சு) வை அடைந்தனர். உரோமையை ஆண்ட பேரரசர்கள் பலம் குன்றியவர்களாயும் ஆதிக்கம் அற்றவர்களாயும் இருந்தனர். கி. பி. 476 இல் பட்டாளத் தலைவன் உரோமைப் பேரரசை அகற்றி விட்டுத் தானே அரசனுனன். மேற்கத்திய உரோமைப் பேரரசின் இறுதி நாளாக இந்நாள் வழங்கப்படுகின்றது. கி. பி. 493 இல் கிழக்கத்திய கொத்சாதியினர் தியோடறிக்கு என்பவனின் தலைமையில் கிழக்கத் திய உரோமைப் பேரரசனின் சம்மதத்துடன், இத்தாலிக்குள் நுழைந்து கொதிக்கு அரசை நிறுவினன். இவ்வாறு மிலேச்சர்கள் உரோமரின் கழுகுக் கொடி பறந்த இடங்களில் எல்லாம் தங்கள் அரசுகளை நிறு வினர்கள்.

(b) உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

உரோமையின் வீழ்ச்சிக்கான காரணங்களை எளிதாய் உணரும் பொருட்டு வெவ்வேறு தலைப்புகளில் ஆராய்வோம்.

அரசியற் காரணங்கள்

(1) உரோமைப் பேரரசு மிகப் பரந்த நிலப்பரப்பில் தன் ஆணை யைச் செலுத்தி வந்ததால் உரோமையிலிருந்த மன்னனுக்கு இத் துணை பெரும்பரப்பை ஆள்தல் அரிதாயிற்று. நவீன போக்குவரத் துச் சாதனங்கள், செய்தி அறிவிக்கும் வாய்ப்புகள் இல்லாத அக்கா லத்தில் ஆட்சியைத் திறம்பட நடத்துவது அரிதினும் அரிதேயாம். நகர, தல ஆட்சி பலம் குன்றத் தொடங்கியது; அன்றியும் ஊழல்கள் மலிந்தன.

(2) பேரரசினைக் கீழ் மேலாக வகுத்தமை பயனற்ற உள்நாட்டுப் போர்கட்குக் காரணமாயிற்று. கொன்ஸ்தாந்திநோப்பிளை தலைநக ராக மாற்றி அமைத்தமை பேரரசின் மேற்பாகத்தை இன்னும் வலி குன்றச் செய்தது.

(3) மிலேச்ச சாதியினர் உரோமானிய சேனைகளில் சேர்க்கப்பட்ட தினல், படிப்படியாக உரோமச் சேனைகள் மிலேச்சச் சேனைகளாக மாறக் காரணமாயிற்று. பிற்காலச் சேனுதிபதிகள் மிலேச்சராயிருந்த னர்; அன்னர் கையிலேயே அதிகாரம் இருந்தது; இவர்கள்தான் உரோமையை ஆண்டார்களென்றல் பொய்யாகாது; அரசர்களை ஆக்க வும் அழிக்கவும் கூடியவர்களாயிருந்தார்கள்; இவர்களில் ஒருவன் தான் உரோமைப் பேரரசனிய உரொமியூலஸ் அகுஸ்தஸ் என்பவனை சிம்மாசனத்தினின்றும் அகற்றி மேற்கு உரோமைப் பேரரசுக்கு முடிவு கண்டான்.

சமூக, ஒழுக்க காரணங்கள்

(1) உரோமர்களை இதுவரை தலைசிறந்தவர்களாக்கிய நற்பண்பு கள் செல்வ சுகபோக வாழ்வு காரணமாக அவர்களிடமிருந்து மறைந் தன. உரோமர் சோம்பர் ஆயினர். உழைப்பையும் போரையும் மறந் தனர். தங்கள் வயல்களில் வேலைசெய்ய அடிமைகளையும் போர் செய்ய அந்நிய போர் வீரர்களையும் அமர்த்தினர். உழவர்கள் தங்கள் வயல்களைத் துறந்து நகரங்கட்கு உணவும் வேடிக்கையும் நாடிச் சென் றனர். இவர்கள் வேலையில்லாதோர் ஆக நாட்டுக்குப் பொறுப்பு உண் டானது. அடிமைத்தொழில் நேர்மையான உழைப்பின் மதிப்பைக் குறைத்து சுதந்திரத் தொழிலாளியின் நற்பண்புகளை அழித்துவிட்டது.

(2) உரோமானியக் குடிசனத் தொகையும் அருகியது. வயல்க ளில் வேலைசெய்யவும் போர்புரியவும் போதிய உரோமானியர் அகப்பட வில்லை, குடிசனக் குறைவான இடங்களில் குடியேறுமாறு மிலேச்சர் அழைக்கப்பட்டனர்: இவர்கள் தங்கள் உறவினரான மிலேச்சர் முற்று கையிட்டபோது அவர்கட்குத் துணைபுரியலாயினர்.

(3) ஒரு நாட்டின் முதுகெலும்பு போன்றவர்களான நடுத்தர வகுப்பினர் நடுநிலைமையற்ற வரிகளால் நசுக்குண்டு அழிந்தனர்.

பொருளாதாரக் காரணங்கள்

(1) உழவர்கள் தங்கள் காணிகளை விற்றுவிட்டு நகரங்களுக்குச் சென்றார்கள். உழவர்களால் தொழில் செய்யப்பட்ட பண்ணைகள் அடிமைகள் கைப்பற்றியதால் இது பல சமூக, பொருளாதாரத் தீமைகளை விளைவித்தது.

(2) வரி அறவிடும்முறை செம்மையற்றதாய் இருந்தது. இது நடுத்தர வகுப்பினர்களை மிக நசுக்கியது; இதன் பயனுகச் செல்வர் செல்வத்தை மிகுதியும் திரட்ட ஏழைகள் அதிக ஏழைகளானார்கள்.

(3) உரோமர் சுகபோகத்தைத்தரும் பொருட்களை அதிகம் விரும்பியதால், கிழக்கு நாடுகளுடன் செய்த வர்த்தகம் சாதகமற்ற நிலையை உண்டாக்கியது. இதன் பயனுகப் பேரரசின் செல்வம் கரைந்து போனது.

இவ்வாறுக உரோமைப் பேரரசு படிப்படியாக பலம் குன்றியது; மிலேச்சர் உரோமையை முற்றுகையிட்டபோது உரோமை அதனை எதிர்க்கும் சக்தியை இழந்துவிட்டது.

பயிற்சி I

1. உரோமைப் பேரரசர்களைத் தெரிவதில் தீர்மானவாக்கு எவர் கையில் இறுதிக் காலங்களில் இருந்தது?
2. பேரரசன் தியோக்கிளேசியான் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் யாவை?
3. உரோமையின் தலைநகர் கொன்ஸ்தாந்திநோப்பிளாக மாற்றப்பட்டது யாரால்? கிழக்கு உரோமை இராச்சியத்தின் மறு பெயர் என்ன?
4. உரோமப் பேரரசின் வடக்குப்பக்கமாக உரோமைப் படைகள் பாதுகாக்கவேண்டியிருந்த எல்லையின் நீளமென்ன?
5. இவ்வெல்லைப் புறங்களில் குடியேறிய சில செருமானியச் சாதிகள் யாவை?
6. செருமானியச் சாதிகள் உரோமை மாகாணங்களுள் என்ன காரணங்களால் நுழைந்தார்கள்?
7. மேற்கு உரோமைப் பேரரசு எவ்வாண்டில் வீழ்ச்சி அடைந்தது?
8. எக்காரணங்களால் உரோமரின் நற்பண்புகள் அருக்கமுற்றன?
9. உரோமைக் குடியரசின் தொடக்க காலத்தில் பண்ணைகளில் வேலைசெய்தோர் யாவர்? இறுதிக்காலத்தில் அப்பண்ணைகளில் யார் வேலை செய்தனர்?
10. இக்காலத்தில் நடுத்தர வகுப்பினருக்கு நிகழ்ந்தது என்ன?


11. உரோமைப் பேரரசின் இறுதிக்காலத்தில் தலபரிபாலனம் என்ன மாற்றங்களை அடைந்தது?
12. உரோமையின் செல்வம் கிழக்கு நாடுகளில் எவ்வாறு கரைந்தது?

இயசுத்தீனியன் (கி. பி. 483–565)

கொன்ஸ்தந்தீன் மாமன்னன் உரோமையை நீக்கித் தலைநகரை பைசாந்தியத்தில் அமைத்ததையும், மேற்குப் பேரரசு மறைந்ததையும் அஃது பல செருமானிய அல்லது மிலேச்ச இராச்சியங்களுக்கு உறைவிடமானதையும் முன்னர் கண்டோம். கிழக்கு உரோமை இராச்சியம் பைசாந்தியப் பேரரசு என்ற பெயரில் நீண்டகாலம் சீர் சிறப்பாக விளங்கியது. மேற்கு ஐரோப்பா இருண்ட யுகத்தில் இருந்தபோது கிழக்கு உரோமைப் பேரரசு கிரேக்க கலைஞானம் பண்பாட்டின் இருக்கையாகத் திகழ்ந்தது. பிற நாட்டவர்கள் மேற்கு ஐரோப்பாவுக்குள் நுழையாவண்ணம் நீண்டகாலம் காவல் செய்தது. இதனுல் மேற்கில் வளர்ந்துகொண்டிருந்த இராச்சியங்கள் உறுதி அடையவும், தேசிய இனங்களாகவும் போதியகாலம் கிடைத்தது. கலைஞான விளக்கை மேற்கில் ஏற்றிவைத்த பெருமையும் இவ் உரோமைப் பேரரசுக்கே உரியது. நாங்கள் இப் பேரரசை யாண்ட ஒரு மாமன்னனின் சரிதையையே இப்பொழுது ஆராய்வோம். இயசுத்தீனியன் ஒப்புயர்வற்ற ஒரு மாமன்னனுவன். இவன் கிழக்கையும் மேற்கையும் ஒரு குறித்த காலம் இணைப்பதில் வெற்றிபெற்றான்; அன்றியும் உரோமானியச் சட்டத்தைத் தொகுத்து நாகரிக உலகத்தில் வழங்கும் சட்டத்தின் ஒரு பகுதியை உதவினன்.

இயசுத்தீனியன் கி. பி. 483 இல் பிறந்தான்; இவனை இவன் பெரிய தந்தையாராகிய இயசுத்தின் பெற்றபிள்ளைபோல் வளர்த்து ஒரு மாமன்னன் ஆகுபவனுக்கு வேண்டிய பயிற்சிகள் எல்லாம் அளித்தான். கி. பி. 527 இல் ஒரு கூட்டு மன்னனுக அரச கட்டிலேறிப் பெரிய தந்தையாரின் மரணத்தின்பின் ஒரு தனி மாமன்னன் ஆனன். ஓர் அரை நூற்றுண்டுகளாகத் தனது நாட்டின் தலைவிதியை இம்மன்னவனே நிச்சயித்தான். சிறு வயதுமுதலே உரோமை மாநகரின் அதியற்புத காட்சிகள் இவன் உள்ளத்தைக் கவர்ந்தன. இதுபற்றியே அவன் எப்போதும் சிந்திப்பான்; உரோமப் பேரரசை மேற்கில் புனருத்தாரணம் செய்யவும், பைசாந்தியத்தை உரோமையின் வாரிசு ஆக்கவும் அவாவினன். அவன் ஆடம்பரத்தையும் மகிமையையும் விரும்பி தனது அரண்மனையை கவர்ச்சியை அளிக்கும் பொருட்களால் அலங்கரித்து அதனை ஒரு நடுநாயகமென விளங்கச் செய்தான். அவன் கொன்ஸ்தாந்திநோபிளை மீண்டும் கட்டி தெருக்கள் பாலங்கள் மஞ்சனசாலைகள், நாடக அரங்குகள் கோயில்கள் முதலியவற்றுல் அணிபெறச்

செய்தான். அர்ச். சோபியா மேற்றிராசன ஆலயம் இவனை என்றும் நினைக்கக் கூடிய அரும்பெரும் சின்னமாகும். அவன் நீதியும் நடு நிலைமையுமுள்ள ஓர் ஆட்சிமுறையைக் கையாண்டதுமன்றித் திறமை மிக்க அரசாங்க சேவை ஒன்றையும் நிறுவினான். எல்லாரும் பிரமிக்



அர்ச். சோபியா மேற்றிராசன ஆலயத்தின் முகடுகள்

1453 இல் கொன்ஸ்தாந்திநோப்பிள் வீழ்ச்சி அடைந்தபோது இவ்வாலயத்தைத் துருக்கர் கைப்பற்றி அதனை ஒரு மசூதியாக மாற்றி அமைத்தனர்.

கத்தக்கதாகத் தியோதரா என்ற நாடகக் கணிகையை மணந்து அவளைப் பட்டத்தரசியுமாக்கினான். இவள் உலக வரலாற்றில் முக்கிய இடத்தை வகிப்பதோடு, இம்மன்னனின் வாழ்க்கை செயல்கள் ஆகியவற்றையும் பாதிக்கக்காலாயிருந்தாள்.

(a) இயசுத்தீனியன் பேரரசுக்கு மறுமலர்ச்சி அளித்தல்

நிறைவான அரசாங்க கருவூலத்தையும், பெலிசாரியஸ், நார்செஸ் என்ற வீரத் தளபதிகளால் நடத்தப்பட்ட உத்தம சேனையையும் கொண்டு இயசுத்தீனியன் தனது இலட்சிய ஆசையை நிறைவேற்றத் துணிந்தான். முதன் முதல் பாரசீகருடன் போர் தொடுத்து சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். இதனால் தனது கவனத்தை மேற்குப் பக்கம் செலுத்தக்கூடியதா யிருந்தது.

கி. பி. 533 இல் தன் இசை நிறுவிய அவன் தளபதி பெலிசாரியஸ் வட ஆபிரிக்காவிலுள்ள வண்டலர் இராச்சியத்தை அடிப்படுத்தி

அதனை உரோமைப் பேரரசின் ஒரு மாகாணமாக சேர்த்துக்கொண்டான். கி. பி. 537 இல் உரோமையுடன் ஒரு கடினமான போர் தொடுத்து வெற்றிமாலை சூடியதன்றி கிழக்கையும் மேற்கையும் மீண்டும் இணைத்துக் கொண்டான். பெலிசாரியசைத் தொடர்ந்து நார்செஸ் தளபதியானான். இவன் கொத் சாதியினரை இத்தாலியினின்றும் அகற்றியதுமன்றி இஸ்பானியாவிலுள்ள விசிக்கொத் சாதியினரையும் கீழ்ப்படுத்தினான். மத்தியதரைக் கட்லில் மீண்டும் ஒரு முறை உரோமானியாரின் ஆதிக்கம் உண்டானது; மேற்கிலுள்ள உரோமைப் பேரரசின் அநேக பகுதிகள் உரோமைப் பேரரசின் ஆணைக்குள் கொண்டுவரப்பட்டன.

(b) சட்டத் தொகுப்பு

இயசுத்தீனியன் தனது கொள்கைகளையும் விருப்பங்களையும் பூர்த்தியாக்கினன்போல காணப்பட்டது. அவன் உரோமச் சட்டங்களைத் தொகுக்கத் தொடங்கினன். பழைய உரோமச் சட்டங்களை சிவில் சட்டம் அல்லது இயசுத்தீனியன் சட்டத் தொகுப்பு என்ற ஒரு அங்கமாக தொகுத்துக் கொண்டான். இவன் செய்த வேலைகளுள் இது முதன்மையானது.

காலவெள்ளத்தில் இவன் ஆற்றிய பணிகள் ஆழ்ந்துபோகாது, இவனுடைய சட்டத் தொகுப்பு நாகரிக ஐரோப்பாவின் அம்சமாக இன்றும் விளங்குகின்றது. இச்சட்டங்கள் செருமனி, பிரான்சு, ஒல்லாந்து முதலிய தேசங்களில் கைக்கொள்ளப்பட்டன. ஒல்லாந்தர் இலங்கையைக் கைக்கொண்டபோது, இச்சட்டங்கள் உரோமானிய, டச்சு சட்டங்கள் என்ற பெயருடன் இலங்கையிலும் நுழைந்து கொண்டன.

உரோமைப் பேரரசின் பெருவளத்தை இயசுத்தீனியன் மேற்கில் செய்த பெரும் போர்களால் வீணே தொலைத்துவிட்டான். கிழக்குப் பேரரசின் உண்மையான ஆபத்து, சின்ன ஆசியாவாக இருந்தமையால் ஆங்கு அவன் தன் கவனத்தைச் செலுத்தி யிருக்கவேண்டும். பல காரணங்களால் கிழக்கு மேற்கு ஒற்றுமை நீடித்து நிலைக்கவில்லை. இவனது மரணத்தின்பின் இவன் செய்த வேலைகள் பல அழிந்து போயின. லொம்பாடியர்கள் பெருந்தொகையாக இத்தாலிக்குள் புகுந்து மேற்கில், கிழக்குப் பேரரசின் ஆட்சிக்கு ஒரு முடிவு கண்டார்கள்.

பயிற்சி II

இட வெளிகளை நிரப்புக:

1. கிழக்கு உரோமைப் பேரரசுகளில்.....மா பெரும் சிறப்பு வாய்ந்தவர் ஆவர்.
2. இவர் பெரிய தந்தையரான பேரரசர்.....இவரை வளர்த்து வந்தார்.

3. இவர் மேற்கிலுள்ள பழைய பேரரசை.....அடையச் செய்ய விரும்பினதுமல்லாமல் பைசாந்தியத்தை..... ஆக்கவும் விரும்பினர்.

4. கொன்ஸ்தாந்தி நோப்பிள் நகரத்தை.....இவர் கட்டிய கட்டடங்களில்.....தேவாலயம் மிகச் சிறந்தது.

5. இவர்.....முதல் போர் தொடுத்து தனது கவனத்தை மேற்கில் செலுத்தும் பொருட்டு அவர்களுடன் சமாதானம் செய்துகொண்டார்.

6. கி. பி. 533 இல் பெலிசாரியஸ் வட ஆபிரிக்காவில்..... வெற்றிகொண்டான். உரோமை கி. பி.....கைக்கொள் ளப்பட்டது.

7. பெலிசாரியசைத் தொடர்ந்து.....தளபதியானன். இவன்.....இத்தாலியிலிருந்தும் துரத்திவிட்டான்.

8. மத்தியதரைக் கடல்.....ஆதிக்கத்துக்குட்பட்டது.

9. இயசுத்தீனியன் செய்த வேலைகளுள் இன்றும் நிலைத்திருப்பது அவன்.....ஆகும். இது.....என்றும் பெயர் பெறும்.

10. இச்சட்டங்கள்.....,.....,.....முதலான தேசங்களில் அனுசரிக்கப்பட்டன.

11. அவைகள்.....என்ற பெயருடன் இலங்கையிலும் வழங்கப்படுகின்றன.

12. இயசுத்தீனியனின் வெற்றி மேற்கில் நீடித்து நிற்கவில்லை..... .....மேற்குப் பேரரசுக்கு ஒரு முடிவு கண்டார்கள்.

பாப்பரசர்களின் அதிகார எழுச்சி


உரோமைப் பேரரசு மேற்குப் பகுதிகளில் அழிந்துபோனபோதி லும் அதன் பண்பாடு நாகரிகம் என்பன அழிந்துபோகவில்லை. உரோமைப் பேரரசின் இடமாக கத்தோலிக்க திருச்சபை எழுந்தது. திருச்சபை உரோமைப் பேரரசின் மரபு முறைகள், பண்பாடு, கலை ஆகியவற்றின் வழித்தோன்றல் ஆகியது. கிறிஸ்து பெருமானின் நற்செய்தியையன்றி ஐரோப்பாவிலும் உலகின் ஏனைய இடங்களிலும் நாகரிக செல்வாக்குக்கு காரணமான உரோமைச் சட்டம் பண்பாடு ஆகியவற்றையும் கொண்டு சென்று பரப்பியது. படிப்படியாக மேற்குப் பேரரசு முழுவதையும் மனந்திருப்பியதுமன்றி மேற்கில் மிக முக்கிய தாபனமாகவும் விளங்கியது, திருச்சபை மிலேச்சர்களை

மனந்திருப்பி பூரண நாகரிகமான வாழ்க்கைக்கு ஆயத்தஞ் செய்து மேற்கில் திருச்சபை வளர்ச்சியடைந்து பரவ உரோமை மேற்றிராணி யார் முக்கிய பணிபுரிந்தார். ஏனைய அப்போஸ்தலர்களால் நிறுவப் பட்ட திருச்சபைகள் தாமும் இவரை திருச்சபையின் மாபெரும் தலை வராக ஏற்றுக்கொண்டன. பஞ்சம், பட்டினி, மிலேச்சர்களால் உண் டாகும் ஆபத்து ஆகிய காலங்களில் உரோமை மேற்றிராணிமாரே மக் களுக்கு உதவிபுரிந்தார்கள். உரோமை மேற்றிராணியாரை மக்கள் தந்தையாகக்கொண்டு அப்பா என்று பொருள்படும் பப்பா என அழைத்தனர். இதிலிருந்துதான் உரோமை மேற்றிராணியாரை பாப்பரசர் என அழைக்கும் வழக்கம் உண்டானது. உரோமையிலி ருந்து திருமறைப் போதகர்கள் வேறுநாடுகள் சென்று அந்நாட்டு மிலேச்சர்களை மனந்திருப்பினர்கள். அர்ச். பொனிபார்ஸ் என்பவர் செருமானியையும் அர்ச். அகுஸ்தீன் என்பவர் இங்கிலாந்தையும் மனந்திருப்பினர்கள். மேற்கிலுள்ள திருச்சபைகள் விசுவாசம், ஒழுக்கம், திருச்சபை நடைமுறை ஒழுங்குகள் ஆகியவற்றில் ஐயம் அல்லது கஷ்டம் அனுபவித்தபோது பாப்பரசருக்கு மனுச்செய்து கொண்டனர். அவர் தமது தீர்ப்பைக் கூறுவார். இவ் வகையாக பாப்பானவர் மேற்கத்திய கிறிஸ்தவர்களின் மாபெரும் சமயத் தலைவராகவும் ஞானத்தலைவராகவும் ஆனர். கிழக்கத்திய திருச்சபைக்கும் உரோமைத் திருச்சபைக்கும் சில வேற்றுமைகள் இருந்தன. எனவே 12-ம் நூற்றாண்டு முதல் கிழக்கத்திய திருச்சபை கிரேக்க வைதீக திருச் சபை என்ற பெயருடன் ஒரு தனிச் சபையாக பிரிந்துகொண்டது.



அர்ச். அகுஸ்தினர்

பாப்பரசர் மாபெரும் ஞானத்தலைவராக மாத்திரமல்ல, நிலச் சொந்தக்காரராகவும் அரசியல் பிரபலஸ்தராகவும் மாறினர். கொன்ஸ் தாந்தின் மா மன்னன் தலைநகரை கொன்ஸ்தாந்தி நோப்பிளுக்கு மாற்றியபோது உரோமையை சூழவரவுள்ள நிலங்களை பாப்பரசருக்கு



Papal Insignia

பாப்பரசரின் மகிமை விருதுகள்

நன்கொடையாக வழங்கினரென்று சொல்லப்படுகிறது. இந்நன்கொடையைப் பற்றி போதிய அத்தாட்சி இல்லை. ஆனால் பிற்காலங்களில் பிராங்கியர்களின் மன்னரான பெப்பின் போன்ற பக்தியுள்ள அரசர்கள் திருச்சபைக்கு நிலம் வழங்கினர்கள். இவைகள் காலகதியில் பாப்பரசர்களின் ஆதீன நாடுகளாக அல்லது பாப்பரசரின் இராச்சியமாக மாறின. இவ்வகையாக மத்திய காலங்களில் பாப்பரசரின் ஞான ஆதிக்கம் அரசியல் ஆதிக்கம் வாழ்க்கை ஆகியவற்றிற்கு மையமாக பாப்பரசரின் பீடம் ஐரோப்பாவில் விளங்கியது.

அர்ச். ஆசீர்வாதப்பரும் துறவிகளின் தொண்டுகளும்

கிறீஸ்து சகாப்தம் 3 ஆம், 4 ஆம் நூற்றுண்டுகளில் கிறிஸ்துவ மறை உரோமைப் பேரரசை வெற்றிகொண்டபின் திருச்சபையில் ஒரு புதுவகையான வணக்க வழிபாடு உதயமாயிற்று. இவ்வுலக சுக போக பாக்கியங்களை வெறுத்த மாந்தர்கள் அநேகர் வனங்கள் வனந்திரங்கள் குகைகளுக்குச்சென்று தப வாழ்க்கையை மேற்கொண்டனர். அவர்கள் தம் நேரத்தை செபத்திலும் தியானத்திலும் செலவிட்டனர். சிலர் தன்னந்தனிமையாகவும் சிலர் கூட்டமாகவும் வாழ்ந்தனர். 4 ஆம் நூற்றுண்டளவில் ஆச்சிரமங்கள் வகுக்கப்பட்டதுமன்றி, துறவிகளில் புகழ்பெற்றவர்களும் ஆச்சிரமங்களை அடிகோலியவர்களுமாகியவர்களின் சில ஒழுக்க விதிகளைப் பின்பற்றினர்கள். கிழக்கில் அர்ச். பசில் என்பவரின் ஒழுக்க வழக்கங்களும், மேற்கில் அர்ச். ஆசீர்வாதப்பர் என்பவரின் ஒழுக்க விதிகளும் சகல ஆச்சிரமங்களுக்கும் மாதிரி விதிகளாயின.

அர்ச். ஆசீர்வாதப்பர் (கி. பி. 480—537) உம்பிறியாவிலுள்ள உயர்ந்த செல்வமுள்ள குடும்பத்தில் கி. பி. 480 இல் பிறந்தார். உரோமையிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு கல்வி கற்கச் சென்ற இவர் நகரத்திலுள்ளவரின் தீய வாழ்க்கையைக் கண்டு அஞ்சி உலகத்தைத் துறந்து சபைன்ஸ் குன்றுகளிலுள்ள குகை ஒன்றில் சரண்புகுந்தார். ஏகாந்தமான செபவாழ்க்கையை மேற்கொண்டார். தூய்மையான இவரின் வாழ்க்கை புகழ்ச்சிபெறவே ஏனைய சுசீல மக்கள் இவரைச் சேர்ந்துகொண்டனர். கி. பி. 530 இல் அர்ச். ஆசீர்வாதப்பரும் அவருடைய துணைவர்களும் காசினே குன்றுகளில் தங்கள் ஆச்சிரமத்தை அமைத்தார்கள். அக்காலமுதல் இது ஆசீர்வாதப்பர் துறவிகளின்

தலைமைத்தானமாகத் திகழ்ந்து வருகின்றது. இவர் சில பிரமாணங்களையும் விதிகளையும் வகுத்து அவற்றிற்கு திருச்சபையின் அங்கீகாரத்தையும் பெற்றார். இப்பிரமாணங்கள் அர்ச். ஆசீர்வாதப்பரின் பிரமாணம் எனப்படும். இப்பிரமாணங்கள் மிகவும் கடினமானவை. துறவிகளில் எவரும் மணஞ் செய்யவோ, நிலபுலங்களை, சொத்துக்களை வைத்திருக்கவோ முடியாது; துறவிகள் உலகத்தை மறந்து மௌனம், செபம், தபம், விரதம் ஆகியவற்றையே ஆபரணமாகக் கொண்ட வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும்; ஒரு நாளில் குறிக்கப்பட்ட சில மணித்தியாலங்களில் உடலை வருத்தக்கூடிய சில கைவேலைகளைச் செய்யவேண்டும்; முயற்சியே வழிபாடு என்பது அவர்களின் மணிமந்திரமாகும்; அவர்களுடைய வாழ்க்கை முழுவதும், காலை எழுந்ததுமுதல் மாலை நித்திரைக்குப் போகும்வரை, நடைமுறை ஒழுங்கை அநுசரித்து திட்டமிடப்பட்டிருந்தது. சில மணித்தியாலங்களில் இறைவனைப் பிரார்த்திப்பார்கள்; சில மணித்தியாலம் வேலை செய்வார்கள்; சில மணித்தியாலம் நூல்கள் வாசிப்பார்கள் அல்லது படிப்பார்கள்; சோம்பல் ஆத்மாவின் முக்கிய விரோதி என அர்ச். ஆசீர்வாதப்பர் எழுதினர்; ஆகையால் துறவிகள் வேலை செய்தல், செபம் செய்தல், நல்நூல்களை வாசித்தல் ஆகியவற்றில் தம் நேரத்தை செலவிடவேண்டியவர்கள் ஆனார்கள்.

விரைவில் ஐரோப்பாவில் அநேக ஆச்சிரமங்கள் பலுகிப் பெருகின. உரோமைப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்த இருண்ட காலத்தில் துறவிகளே தங்கள் ஆச்சிரமங்களில் கல்வி ஒளியை அணையாது காத்து வந்தார்கள். அவர்கள் நூல்களைச் சேகரித்து கையெழுத்துச் சுவடிகளைப் பிரதி பண்ணினர்கள். ஆச்சிரமப் பாடசாலைகளில் கல்வியின் பிரதான அம்சங்களை மக்களுக்குப் போதித்தார்கள். வேற்று நாடுகளுக்கு சென்று திருமறையைப் போதித்து ஐரோப்பாவிலுள்ள மக்களை மனந்திருப்பினர்கள். தொழில் செய்து விவசாயத்தை வளர்த்தார்கள். சதுப்புநிலங்களை வற்றவைத்தார்கள். ஏழைகள், நோயாளிகள், பலவீனர்களை ஆதரித்து உதவி செய்தார்கள். இவ்வாறு திருச்சபையின் வாழ்க்கையை வளம்பெறச் செய்தரர்கள்.

பயிற்சி III

1. மேற்கு உரோமைப் பேரரசின் உண்மையான வாரிசு எத்தாபனமாகும்?
2. கத்தோலிக்க திருச்சபைக்கு யார் தலைவர் ஆனர்?
3. உரோமை மேற்றிராணியார் ஏன் பாப்பானவர் எனப்படுகிறார்?
4. (a) செருமனி (b) இங்கிலாந்து இத்தேசங்களை கிறீஸ்தவ மறைக்கு மனந்திருப்பியோர் யார் யார்?

5. எந்நூற்றாண்டில் கிழக்குத் திருச்சபை மேற்குத் திருச்சபையி னின்றும் பிரிந்து கொண்டது? அதன்பின்பு அதன் பெயர் என்ன?
6. பாப்பரசருக்கு எப்பிரதேசங்களை மன்னன் நிலங் கொடுத்தான்?
7. பாப்பரசருக்கு உரிய நாடுகளின் பெயர் என்ன?
8. ஆச்சிரமங்களை அடியிட்ட புகழ்பெற்ற இரு துறவிகளின் பெயர் தருக.
9. அர்ச். ஆசீர்வாதப்பர் தம் துறவிகள் தலைமை ஆச்சிரமத்தை கடைசியில் எங்கே நிறுவினர்?
10. அவர் தம் துறவிகளின் பொருட்டு எழுதிய பிரமாணங்களின் பெயர் என்ன?
11. ஆசீர்வாதப்பர் சபைத் துறவிகளின் மணிமந்திரம் யாது?
12. ஐரோப்பாவின் நாகரிக வளர்ச்சிக்கு எவ்வாறு இவர்கள் துணைபுரிந்தார்கள்?

முகம்மது

இஸ்லாத்தின் எழுச்சி

ஐரோப்பிய நிகழ்ச்சிகளை சற்றுநேரம் நிறுத்திவிட்டு, உலக சமய அரசியல் வரலாற்றில் முக்கிய மாறுதல்களைக் கொண்டுவரக் காரண மான அரேபிய வனந்தரங்கட்கு செல்வோமாக.


அராபியாவின் பெரும்பகுதி வனந்தரங்கள் செறிந்தது; இங்கு போர்ப் பிரியரும் முரட்டுச் சுபாவம் உடையவருமான நாடோடி வாழ்க்கை நடத்தும் மக்கள் வாழ்ந்து பல விக்கிரகங்களையும் உரு வங்களையும் வணங்கிவந்தார்கள். எப்படி என்றாலும் அவர்கள் ஒரு பொது மொழியைப் பேசினர்கள். அவர்களுடைய மதம் மெக்காவி லுள்ள காபா என்ற யாத்திரை ஸ்தலத்தை மையமாகக் கொண்டு விளங்கியது. மெக்கா அராபியாவின் பிரதான நகரமாகும். கி. பி. 571 இல் இங்கே வறிய ஆனால் ஓர் உயர்ந்த குடும்பத்தில், இஸ்லாத் தின் தீர்க்கத்தரிசியும் அராபியர்களின் வழிகாட்டியுமாகிய முகம்மது பிறந்தார். சிறிது காலம் இவர் மந்தைகளை மேய்த்துக்கொண்டு வந்தார். 25 வயதில் விதவையான கதீஜா என்ற பெயருடைய ஓர் செல்வச் சீமாட்டியிடம் வேலைக்கு அமர்ந்தார். இவருடைய வேலை நிமித்தமாக சின்னசியாவின் பல பகுதிகளுக்கும் போயிருந்தார்;



வனந்தரங்களில் அராபியர்

அங்கே கிறீஸ்தவ யூத போதனைகளைக் கேட்க இவர்க்கு வாய்ப்பும் உண்டா னது. முகம்மதுவின் சேவையை விரும்பிய கதீஜா இவரை மணந்து கொண்டாள். அவர் தாம் விரும்பி யதைச் செய்வதற்குரிய சுதந்திரத்தை அடைந்தார். மெக்காவுக்கு வெளியே யுள்ள கேரு குன்றிலுள்ள சிறிய குகையில் அடிக்கடி இவர் தியானம் செய்வார். 40 வயதாக இருக்கும் பொழுது கபிரியேல் என்ற தேவ தூதன் இவர்முன் தோன்றி தமது முதலாவது காட்சியை அளித்தா ரெனச் சொல்லப்படுகிறது. முகம்மது தான் ஒரு தீர்க்கத்தரிசி என்பதை நம்பினர். எனவே இறைவன் தமக் குத் தெரிவித்தவைகளை மக்களுக்குப் போதிக்க துணிந்தார். எஞ்சி இருந்த 23 வருடங்களும் சமாதானம் அல்லது தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிதல் என்ற பொருளுடைய இஸ்லாத்தை போதிப்பதில் ஈடுபட்டார். இக்காலத்தில் மேலும் மேலும் உண்மை கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டன. இவைகள் பிற்காலத்தில் குரான் என்ற புத்தகவடிவமாகத் தொடுக்கப்பட்டன. முஸ்லீம்கள் குரானை தேவனுடைய வசனமான புனித நூலாகக் கொள்வர். கடவுள் ஒருவரேயென்றும் மக்கள் யாவரும் சகோதர்களே என்றும் முகம் மது வற்புறுத்திக் கூறினர். கடவுள் ஒருவர் அவர் தீர்க்கத்தரிசி முகம்மது என்பதும் இஸ்லாத்தின் போதனையாகும். விக்கிரக ஆரா தனையை அவர் முற்றும் தடுத்தார். ஒரு நாளில் 5 பொழுது செபம் செய்தல், பன்றி இறைச்சியை விலக்கல், மதுபானங்களை பரு காமை, ஏழைகளுக்கு தானம் செய்தல், றம்ழான் மாதத்தில் சூரி யோதயம் முதல் சூரிய அஸ்தமனம்வரை உண்ணுவிரதம் அனுட் டித்தல் இயல்பு உள்ளவர்கள் மெக்காவுக்கு திருயாத்திரை போதல் என்பவை இஸ்லாத்தினுல் விதிக்கப்பட்டுள்ளன.

முதன் முதல் முகம்மதுவின் குடும்பத்தாரும் வேறு சிலரும் முகம்மதுவைப் பின்பற்றினர்கள். முகம்மது தமது பிரசங்கங்களில் விக்கிரக ஆராதனையையும் மெக்காவிலுள்ள மக்களிடையே காணப் பட்ட தீவினைகள் அநீதிகளையும் பலமாகக் கண்டித்துப் பேசினர். இதன்பயனாக அங்கு வசித்த செல்வர்கள் இவரை முற்றும் வெறுத்




மெக்காவிலுள்ள காபாவில் யாத்திரிகர்கள்.

தார்கள். இவரின் போதனைகளான சகோதரத்துவம் ஒழுங்கான நடை ஆகியவற்றுல் தங்கள் அந்தஸ்துக்கு ஆபத்து உண்டாகும் என்று உணர்ந்தார்கள். கி. பி. 622 இல் இவர் மெக்காவிலிருந்து தமது தூணவர்கள் சிலருடன் மெதினைவுக்கு ஓடவேண்டியதாயிற்று. இது ஹெக்கிரு எனப்படும்; இதிலிருந்தே முஸ்லீம்கள் தங்கள் ஆண்டைக் கணிப்பார்கள். இவர் விரோதிகள் பலமுறை இவரைத் தாக்க முயன்றார்கள்; அவர்கள் முயற்சி பயன் அளிக்கவில்லை; கடைசியில் முகம்மது ஒரு சேனையை சேர்த்துக்கொண்டு தனது விரோதிகளைத் தோற்கடித்து அவரின் போதனையின் மையமாக விளங்கிய மெக்காவினுள் வாகை மாலையுடன் நுழைந்தார். இவரது மதம் விரைவாகப்பரந்தது. கி பி. 632 இல் இவர் இறந்தபொழுது எல்லா அராபியர்களும் இவரின் போதனையை ஏற்றுக்கொண்டார்கள். அராபியா ஐக்கியமும், வல்லமையுமுள்ள ஒரு நாடானது.


இஸ்லாம் பரவுதல்

முகம்மதுவின் மரணத்தின்பின் அவர் செய்த வேலையை காலிப்புக்கள் செய்தார்கள்; பெசாந்தியம் பாரசிகம் ஆகிய பேரரசுகள் தாம் செய்த போரின் பயனுக பலம்குன்றி இருந்தமையால் இஸ்லாத்தின் முன்னேற்றத்தை தடுக்க முடியாமலிருந்தன. இஸ்லாமிய வெற்றிகள் கிழக்கும் மேற்கும் ஏற்பட்டன. கிழக்கே அது மகா அலெக்சாந்தர் சென்ற இடங்களான, ஈராக்கு, பாரசிகம், துருக்கிஸ்தானம், இந்து நதி ஆகிய இடங்களில் பரந்தது. மேற்கே சிரியா, எகிப்து, வட ஆபிரிக்க உரோமானிய் மாகாணங்கள், இஸ்பானியா, போர்த்துக்கால் ஆகிய இடங்களை வெற்றிகொண்டது.



கி. பி. 750 இல் முஸ்லிம் பேரரசு

பிரினிஸ்மலைகளின் வழியாக இஸ்பானியாவிலிருந்து பிரான்சுக்கு செல்வதை பிராங்கியர்களின் தலைவராகிய சார்ஸ் மாட்டர் என்பவர் தடுத்துவிட்டார். கி. பி. 732 இல் டூர்ஸ் என்ற இடத்தில் நடந்த சண்டையில் இஸ்லாமியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் அராபியர்களை இஸ்பானியாவிலிருந்து அடியோடு அகற்ற மேலும் 800 ஆண்டுகள் சென்றன. இக்காலத்தில் இஸ்பானியா அராபிய நாகரிகத்தின் மையமாக விளங்கியது. இஸ்லாமிய சிற்பக்கலையின் எடுத்துக்காட்டாக இஸ்பானிய அல்கம்பிரு சிங்க மண்டபம் திகழ்கின்றது.



இஸ்பானியா, அல்கம்பிரு சிங்க மண்டபம்

மேற்கே இஸ்பானியா துவங்கி கிழக்கே இந்தியா, சீனவரையும் முஸ்லீம் பேரரசு பரந்து இருந்தது. பாக்தாத்தின் காலிப்புக்களின் ஆட்சியில் முஸ்லீம் பேரரசு அதன் உச்சநிலையை அடைந்திருந்தது. இக்காலிப்புக்களில் ஹறுன்-அல்-ருஷித் மிகக் கீர்த்திவாய்ந்தவர் ஆவர். பெருந்தன்மையும் நடுநிலைமையும் வாய்ந்த இவர் கல்வியை வளர்த்தார். கிரேக்க மொழியிலுள்ள நூல்கள் அரபு மொழியில் மொழி பெயர்ப்பித்தது இவர் ஆற்றிய அரும்பணிகளுள் ஒன்றுகும். அராபியன் இரவுகள் என்ற கதைத் தொகுப்பில் பல இவரைப் பற்றியனவாகும்.

அராபிய நாகரிகம்

முஸ்லீம்கள் ஒரு பெருமதப் பேரரசை அமைத்த வெற்றி வீரர்கள் மாத்திரமல்ல உலக செல்வாக்குப்பெற்ற ஒரு நாகரிகத்தை ஆக்கியவர்களும் ஆவர். வெற்றி கொண்டவர்களிடமிருந்து அநேக விஷயங்களை இவர்கள் விரைவில் கற்றார்கள். சிறந்த புலவர்களையும் அறிஞர்களையும் படைத்தார்கள். பாரசீகத்தில் தமாஸ்கஸும் அராபியாவில் மெக்காவும் இஸ்பானியாவில் கோர்டோவாவும் கல்வியின் நடுநாயகங்களாய் திகழ்ந்தன. மேற்கு ஐரோப்பா, கிரேக்க பண்பாட்டின் பெரும்பகுதியை அராபிய வாயிலாகவே அறிந்து கொண்டது.



கயிரேவியிலுள்ள ஒரு மசூதி
(வட்டமான கூரைகளையும் உயர்ந்த கோபுரங்களையும் அவதானிக்கவும்.)

மருத்துவம், கணிதம் ஆகிய துறைகளிலும் மிகமுன்னேற்றம் பெற்றிருந்தனர். சத்திர சிகிச்சையும் செய்ய அறிந்திருந்ததுமன்றி இவர்கள்தான் அம்மைநோய்க்கு தகுந்த சிகிச்சையை முதல் முதல் கண்டவரும் ஆவர். நோய்களைத் தீர்க்க வேதிப்பொருட்களைப் பயன்படுத்தினர்கள். அல்ஜிப்ரா எனப்படும் அட்சர கணிதத்தை முதல் முதல் பயின்றவர்களும் இவர்களே. இன்றும் அரபு எண்களை நாம் வழங்குகின்றோம். கட்டடக்கலையிலும், வட்டவடிவமான கூரைகளை

யும், உயர்ந்த கோபுரங்களையும் கொண்ட ஒரு புதிய இரீதியை வளர்த்தார்கள். இது பிற்காலக் கட்டடக்கலையில் மிகுந்த செல்வாக்குப்பெற்றது.

பயிற்சி IV

1. முகம்மது எவ்வாண்டு பிறந்தார்? அவர் எங்கே பிறந்தார்?
2. அவர் மணஞ்செய்துகொண்ட பணக்கார விதவையின் பெயர் என்ன?
3. அவர் தியானம் செய்துகொண்டுவந்த குகையின் பெயர் என்ன?
4. அவர் எந்த வயதில் பிரசங்கம் செய்யத் துவங்கினர்?
5. இஸ்லாம் என்றால் பொருள் என்ன?
6. முஸ்லீம்களின் புனித நூலின் பெயர் என்ன?
7. அவருடைய போதனையின் முக்கிய அம்சங்கள் யாவை?

அவர் மெக்காவிலிருந்து மெடினுவுக்கு ஓடிப்போனதை என்ன என்று கூறுகிறார்கள்? இது எவ்வாண்டு நிகழ்ந்தது?

முகம்மதுவைத் தொடர்ந்து வந்தவர்களை யார் என அழைக்கிறார்கள்? இவர்களுள் மிகப் புகழ்பெற்றவர் யார்?

முஸ்லீம் பேரரசின் எல்லையைக் கூறு.

மருத்துவம், கணிதம் ஆகியவற்றில் அவர்கள் அடைந்த முன்னேற்றம் யாது?

12. முஸ்லீம் கட்டடங்களிலுள்ள பிரதான அம்சங்கள் யாவை?

பரிசுத்த உரோமைப் பேரரசு

பிராங்கியர்:–முதலாம்பிரிவில் செருமானியக் குடிகள் உரோமைப் பேரரசில் வெவ்வேறுபாகங்களில் குடியேறி வெவ்வேறு இராச்சியங்களை நிறுவியதைப் படித்தோம். இக்குடிகளுள் பிராங்கியர்கள் ஐரோப்பிய வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றார்கள். பிராங்கியர்கள் பலம்பெற்றவராய் இருந்ததற்கு அவர்கள் ஏனைய மிலேச்ச சாதியினரைப்போல தம் சொந்த நாடுகளைவிட்டு வேறு நாடுகளுக்கு சென்று ஏனையமக்களுடன் கலந்துகொள்ளாமை ஒரு காரணமாகும். அவர்கள் உரோமானியரைப்போல கிறீஸ்தவ மறையைப் பின்பற்றியதால் திருச்சபை உதவியைப்பெற்றதுமன்றி திருச்சபையினுல் கிறீஸ்தவர்கள் அல்லாதவரைப்போல அஞ்ஞானிகளாகக் கணிக்கப்படாமை இன்னெரு காரணமாகும்.


குளோவிஸ் என்பவன் அவர்களில் பிரதானமானவன். குரூரமான, இரக்கமற்ற சிந்தையினனை இவன் திறமைவாய்ந்த ஒரு தலைவனுக விளங்கினன். இவன்தான் பிராங்கிய தேசிய இனத்தை

சிருட்டிப்பதற்கு அடிகோலினன். இவன் தனது ஆணையா சக்கரத்தை விஸ்தரித்ததுமல்லாமல் கல்லியா நாட்டில் உரோம ஆட்சிக்கு முற்றுப்புள்ளியும் இட்டான். கி. பி. 496 இல் இவன் ஞானஸ்நானம் பெற்று கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்ததால் எத்துணை தீர்க்க திருஷ்டி உள்ளவன் என்பது புலனுகின்றது. குளோவிஸின் ஞானஸ்நானத்துடன் தோன்றுகின்ற ஒரு நாடகக் காட்சியானது கி. பி. 800 ஆண்டில் பிராங்கிய வேந்தன் ஒருவனை பரிசுத்த உரோமைப் பேரரசனுக முடிசூட்டுவதுடன் முடிவடைகிறது. பாப்பரசர்கள் பிராங்கியர்களை உற்ற நண்பர்களாகக் கண்டனர்.

குளோவிசைப் பின்தொடர்ந்த மன்னர்கள் பலவீனர்களாய் இருந்தமையால் அவனுடைய வேலையை அரசனுடைய பிரதான மந்திர ஆலோசகர்களான மூப்பர்கள் செய்துவந்தார்கள். இம்மூப்பர்களுள் ஒருவனன சார்ல்ஸ் மாட்டல் அல்லது சம்மட்டி எனப்படும் சார்ல்ஸ், மூர்ஸ் யுத்தத்தில் முஸ்லீம்களை இஸ்பானியாவிலிருந்து புறங்கொடுத்து ஓடச்செய்தான். இந்த மா வெற்றியினுல் பிராங்கியரின் புகழ் அதிகரித்தது. இவனுடைய மகன் பெப்பின் பாப்பரசருடன் போர்செய்த லொம்பாடியரை எதிர்க்கும் பொருட்டு அழைக்கப்பட்டான். பெப்பின் லொம்பாடியரை மேற்கொண்டதுமன்றி உரோமையை சூழ உள்ள பிரதேசங்களை பாப்பரசருக்கு நன்கொடையாகவும் வழங்கினன். இதற்கு நன்றி அறிதலாக பாப்பரசர் குளோவிஸின் வழித்தோன்றல்களை அகற்றுவித்து பெப்பினை பிராங்கிய மன்னர் ஆக்கினர். இவ்வாறு பிராங்கிய மன்னர்களின் புதிய வரிசை ஒன்று உண்டானது.

சார்லிமேன்

பிராங்கிய மன்னர்களுள் சார்லிமேன் அல்லது மகா சார்ல்ஸ் கீர்த்திபெற்று விளங்கினன். பிராங்கிய மன்னர்களுள் சிறந்வனுயிருந்தது மாத்திரமல்ல அக்காலத்து பிரசித்திபெற்ற ஒருவனும் விளங்கினன். பிறநாடுகளை வெற்றிகொள்ளும் கொள்கையைக் கடைப்பிடித்து அநேக போர்களைச்செய்தான். கல்லியா நாட்டு முழுப் பகுதியையும் பிடித்ததுமல்லாமல் பவேரியா, சக்சனி ஆகிய நாடுகளையும் தன் ஆணைக்குள் கொண்டுவந்தான். கி. பி. 772 இல் லொம்பாடியர்களால் துன்புறுத்தப்பட்ட பாப்பரசர் சார்ளைத் துணைக்கு அழைத்தார். சார்ல்ஸ் இத்தாலிக்குச் சென்று போர்கள் ஆடி லொம்பாடியர்களைத் தோற்கடித்து அவர்களின் இரும்புமுடியைச் சூடி அன்னரின் அரசனுனன், இஸ்பானியாவை முஸ்லீம்களிடமிருந்து வெற்றிகொள்ள முயன்றும் பயன் அடையவில்லை. இக்காலத்தில் நல் முடிவுக்கான சகுனங்கள் பல காணப்பட்டன. கி. பி. 800 ஆம் ஆண்டளவில் சார்ல்ஸ் மேற்கே பிரினிஸ் முதல் கிழக்கே எல்ப்வரையும் வடக்கே வடகடல் முதல் தெற்கே உரோமைவரையும் உள்ள




சாலிமேனின் உருவச் சிலை

நாடுகளுக்கெல்லாம் அரசனாக விளங்கினான். ஆபிரிக்கா, இஸ்பானியா, பிரித்தானியா தவிர்த்த ஏனைய உரோமைப் பேரரசு நாடுகளெல்லாம் இதில் அடங்கி இருந்தன. இவ்வாறு சார்ல்ஸ் வல்லமை படைத்த சீசர்களுக்கு இணையாக விளங்கினான். சாம்ராஜ்ய ஆசைகளும் மனதில் குடிகொண்டன. அன்றியும் இழக்குப் பேரரசை ஒரு பெண் அரசி முறையற்றவிதமாகக் கவர்ந்து கொண்டாள். ஒரு பெண் பேரரசியாக இருத்தல் தகுதியற்றதாகக் கொள்ளப்பட்டது. உரோமைப் பேரரசு என்ற கொள்கை மேற்கில் அழிந்துபோகவில்லை. இப்பேரரசு மக்கள் உள்ளங்களை அதிகம் கவர்ந்ததால் அவர்கள் அதை நித்திய மானதென நினைத்தார்கள். திருச்சபையும் வல்லமையுடையதாய் வளர்ந்துவந்தது. பாப்பரசர் திருச்சபையின் தலைவராக அதன் வைதிக கருமங்களை கண்காணித்தார். லௌகிக கருமங்களைக் கண் காணிக்கும் பேரரசன் ஒருவனும் இருத்தல் வேண்டுமென உணரப்பட்டது. இவ்வகையான ஒரு புதிய சீசரின் இடத்தை வகிப்பதற்கு பிராங்கிய மன்னரும் திருச்சபையின் நண்பருமான சார்ல்ஸ் தகுதியும் பொருத்தமும் உடையவனுக்கக் காணப்பட்டான்.

பரிசுத்த உரோமைப் பேரரசு

சார்ல்ஸ் சில தகராறுகளைத் தீர்க்கும் பொருட்டு உரோமைக்கு வந்திருந்தான். கிறீஸ்து பிறந்த திருநாளன்று பலிபூசையில் சுவிசேஷ வாசிப்பின் பின் பாப்பரசர் பலிபீடப் படிகளினின்றும் இறங்கி அரசனை



கி. பி. 814 இல் சாலிமேனின் பேரரசு

அண்மி மாமன்னர் சிசர்களின் மாமுடியை அவன் தலையிற் சூட்டினர். வெளியேநின்ற மக்கள் புகழும், சாந்தமும் உடையவனும் கடவுளால் முடிசூடப்பட்டவனுமான சார்ஸ் மன்னன் வெற்றியுடன் நீடு வாழ்க என்று ஆர்ப்பரித்தார்கள். இந்நாள் முதல் தற்கால சரித்திரம் ஆரம்பம் ஆகின்றதென்று ஒரு நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

செருமானிய மக்கள், இலத்தீனிய கிறீஸ்தவ திருச்சபை, உரோமானியப் பண்பாடு ஆகியவற்றை ஒன்றுபடுத்தும் கால எல்லையின் முதல் நாளாக இந்நாள் விளங்கியது. இவற்றின் வழியாகவே கிறீஸ்தவ நாகரிகம் ஐரோப்பாவுக்குள் பரந்தது. அக்காலத்திலிருந்த மக்களுக்கு இது உரோமைப் பேரரசுக்கு புத்துயிர் அளிப்பதுபோலத் தோன்றிற்று. உண்மையில் அப்படி அல்ல. சாளிமேன் பாப்பரசரால் முடிசூடப்பட்டதால் அது கிறீஸ்தவ லட்சியமான திருச்சபையும் நாடும் என்ற கொள்கையை பிரதிபலிக்கின்றது. அவ்வாறு பரிசுத்த உரோமைப் பேரரசு என்ற பெயரை அது பெற்றது.

இப்பொழுது ஐரோப்பாவில் இரண்டு பேரரசுகள் இருந்தன. செருமானியர்களையும் மானிய முறையையும் கொண்ட பரிசுத்த உரோமைப் பேரரசு மேற்கில் இருந்தது. மற்றது கிரேக்கரைப் பெரும் பான்மையினராகக் கொண்ட கிழக்கத்திய பேரரசு ஆகும்.

சாளிமேன் ஒரு மாபெரும் வீரனுகமாத்திரமல்ல, சிறந்த ஆட்சியாளனுகவும், சட்ட அமைப்பாளனுகவும் விளங்கினன். அவன் கல்வியை ஊக்கப்படுத்தினன். தமது அவையை அறிஞர்களால் அலங்கரித்தான். கல்விக் கழகங்களையும் ஆச்சிரமங்களையும் நிறுவி கல்வியின் பொருட்டு உழைத்தான். இவனுடைய மரண்த்தின்பின் இப்பேரரசு சிதைவுண்டாலும் பரிசுத்த உரோமைப் பேரரசு என்ற எண்ணம் நிலைத்து இருந்தது. அது பல முறைகளில் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஈற்றில் கி. பி. 1806 இல் நெப்போலியனுடன் அழிந்துபோனது.

பயிற்சி V

இடைவெளிகளை நிரப்புக:

1. பிராங்கியர்களின் பலம் சொந்தநாட்டைவிட்டு வேற்று நாடுகளில் .....இலும் அவர்கள்.....தழுவியதிலும் இருந்தது.
2. பிராங்கியர்களின் முதலாவது சிறந்த அரசன்.....
3. இவனுக்குப்பின் இவனுடைய வேலைகளை அரண்மனை.....கவனித்தார்கள்.
4. கி. பி. 732 இல் ரூர்ஸ் யுத்தத்தில்.....முஸ்லீம்களைத் தோற்கடித்தான்.

5. பிராங்கிய மன்னர்களுள்.....மாமன்னனும் விளங்கினன்.
6. அவன் பேரரசு.....முதல்.....வரை பரந்து இருந்தது.
7. பாப்பரசன் திருச்சபையின் தலைவராய் இருப்பதுபோல தேசத்திற்கும் ஒரு.....தலைவராயிருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தது.
8. .....ஆண்டு.....பாப்பரசர் சாளிமேனை பரிசுத்த உரோமைப் பேரரசின் மாமன்னராக முடி சூட்டினர்.
9. பரிசுத்த உரோமைப் பேரரசு.....அதிகமாகவும்..... அதன் பிரதானமான அம்சமாகும்.
10. சாளிமேன்.....ஊக்கப்படுத்தி.....தன் அவையை அலங்கரித்தான்.

சிலுவை யுத்தங்கள் — சிலுவையும் பிறையும்

கிறீஸ்துவர்கள் பலஸ்தீனத்தை புனித பூமியாகக் கொள்வர். ஏனெனில் கிறீஸ்துவ மறையை நிறுவியவரான கிறீஸ்து பெருமான் அங்கேயே பிறந்து வளர்ந்து இறந்தார். கிறீஸ்துவர்கள் இப்புண்ணிய பூமிக்கு திருயாத்திரை போவது வழக்கமாக இருந்தது. 7 ஆம் நூற்றுண்டில் அரபுக்கள் பலஸ்தீனத்தைக் கைப்பற்றி கிறீஸ்துவர்கள் புனித பூமிக்குச் செல்வதை தடைசெய்யவில்லை. 11ஆம் நூற்றுண்டின் துருக்கர்கள் அராபியர்களைத் துரத்திவிட்டு பலஸ்தீனத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவர்கள் கிறீஸ்துவ யாத்திரிகர்களை அன்போடு நடத்தாமல் கொடுமையாக நடத்தினர்கள். யாத்திரிகர்கள் தாங்கள் அனுபவித்த சொல்லொணு இன்னல்களை ஐரோப்பாவுக்கு எடுத்துரைத்தார்கள். இதன் பயனுக மேற்கிலுள்ள கிறீஸ்துவர்கள் கடும் கோபாவேசம் கொண்டனர். புனித பூமி கிறீஸ்துவர் கையில் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் உண்டானது. துருக்கர்கள் கிரேக்க படைகளைத் தோற்கடித்ததால் கிழக்கு உரோமைப் பேரரசும் அஞ்சியது. கி. பி. 1093 இல் கிழக்கு உரோமைப் பேரரசர் குரூரமான துருக்கருக்கு மாறுக, தனக்கு உதவி அளிக்கும்படி மேற்கை வேண்டினர். பாப்பரசருக்கும் பரிசுத்த உரோமைப் பேரரசருக்கும் உதவி அளிக்குமாறு இரந்து திருமுகங்கள் விடுத்தார். ஐரோப்பா வலிமை அடைந்து இருந்ததால் பைசாந்தியப் பேரரசுக்கு உதவி அளிப்பதுடன் தனது வீரத்தைக் காட்டவும் விழைந்தது. வாணிபத்தினுல் வளமடைந்த இத்தாலிய நகரங்கள் துருக்கர் தங்கள் வர்த்தகப் பாதையை தடைசெய்தலை விரும்பவில்லை. பாப்பரசர் ஆதிக்கம் வளர்ந்து ஒரு மாமறை இயக்கத்தை நடத்த விரும்பியது. கி. பி. 1092 இல் 2 ஆம் ஊர்பன் என்ற பாப்பரசர் கிறீஸ்தவர்கள் தங்களுக்குள் சண்டை செய்தலை விடுத்து பரிசுத்த பூமியைச் காப்பாற்றுமாறு ஒரு வேண்டுகோள்

விடுத்தார். இவ்வேண்டுகோளுக்கு அநேகர் செவி சாய்த்தனர். கிறீஸ்துவ இராணுவ வீரர்கள் தங்கள் மார்புப் பக்கத்தில் செந்நிறச் சிலுவை ஒன்றை அணிந்து கொண்டனர். முஸ்லீம்கள் தங்கள் துவசங்களில் இளம்பிறைகளைப் பதித்தனர். இவ்வாறு சிலுவை யுத்தங்கள் அல்லது சிலுவை—பிறை யுத்தங்கள் ஆரம்பமாயின.

அநேக சிலுவை யுத்தங்கள் நடைபெற்றன. ஆனால் 1ஆம், 3ஆம் யுத்தங்களே வெற்றிகரமானவை. நாங்கள் முன்கண்டதுபோல சிலுவை யுத்தங்கள் சமய அரசியல் காரணமாக ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் சிலுவை யுத்தங்களுக்கான உயர்ந்த இலட்சியங்களை அநேகர் படிப்படியாகக் காலகதியில் மறந்துவிட்டனர். முதலாவது சிலுவை யுத்தத்தில் புனிதபூமி கைப்பற்றப்பட்டு செருசலேமில் ஒரு இலத்தீனிய இராச்சியம் நிறுவப்பட்டது. ஆனால் அது சரசன்னியரின் மாபெரும் தலைவராகிய சலடின் என்பவனால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. 2-ஆம் சிலுவை யுத்தம் சிங்கக்குருளை அன்ன இருதயம் படைத்த இங்கிலாந்து மன்னன் றிச்சாட்டினால் நடத்தப்பட்டது. இவன் ஜெருசலேமை பிடிக்க முடியாத போதிலும் யாத்திரிகர்களை நன்கு நடத்துமாறு சலடினோடு ஒழுங்கு செய்துகொண்டான். 13-ஆம் சிலுவை யுத்தம் புனிதபூமியைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக கொன்ஸ்தாந்தினோப்பிளைத் தாக்கி, குறுகிய காலம் நிலைத்து இருந்த ஒரு இலத்தினியப் பேரரசை கிழக்கில் நிறுவியது. இவ்வாறு உரோமைப் பேரரசு கிழக்கில் பலம் குன்றியது.

சிலுவை யுத்தத்தின் பலாபலன்கள்

சிலுவை யுத்தங்கள் புனித பூமிமை கிறீஸ்துவர்களுக்காக மீட்க முடியாதபோதிலும் இவைகள் ஐரோப்பிய சரித்திரத்தில் முக்கிய மாறுதலை உண்டாக்கின. இவைகள் கிழக்கையும் மேற்கையும் கிட்டக் கொண்டுவந்தன; பூமிசாஸ்திர அறிவை விருத்தித்தன; வர்த்தகம் வளர்ச்சி அடைந்தது. பருத்தி, மஸ்லின், கண்ணாடி முதலிய பொருட்களை அறியாமலிருந்த மேற்கு அவற்றை அறிந்து உபயோகிக்கத் தொடங்கியது. உடை அலங்காரத்தில் புதிய வகைகள் கைக்கொள்ளப்பட்டன. புதிய தாபரங்களும், அப்பிரிக்கொடி, எலிமிச்சை போன்ற கனிகளும் ஐரோப்பாவுக்குக் கொண்டுவரப்பட்டன. போர் முறையும் மாற்றம் அடைந்தது. வெடிமருந்து திசையறி கருவி உபயோகத்திற்கு வந்தது. ஏற்கனவே நடந்துகொண்டிருந்த சில மாறுதல்களை சிலுவை யுத்தங்கள் துரிதப்படுத்தின. மானிய முறையை தளரச் செய்தன; நகரங்கள் வளர உதவின. நடுத்தர வகுப்பினரின் உயர்ச்சிக்கு துணையாயின; தேசிய நாடுகளை நிறுவ உதவியன; வெனிசும் ஜெனோவாவும் வர்த்தகம் வளம்பெற்ற மையங்களாய் விளங்கின.

பயிற்சி VI

1. பலஸ்தீனம் புனிதபூமி எனப்படுவது ஏன்?
2. 11-ஆம் நூற்றாண்டில் அராபியரிடமிருந்து புனிதபூமியைக் கைப்பற்றியவர் யார்?
3. அவர்கள் புனிதபூமிக்கு வந்தவர்களை எப்படி நடத்தினார்கள்?
4. கிழக்கு உரோமைப் பேரரசு மேற்கினிடம் உதவியை ஏன் இரந்தது?
5. 1095 இல் சிலுவை யுத்தத்தை போதித்த பாப்பரசர் யார்?
6. சிலுவை யுத்தங்கள் சிலுவையினதும் பிறையினதும் யுத்தங்கள் எனப்படுவது ஏன்?
7. வெற்றிகரமாய் முடிந்த இரு சிலுவை யுத்தங்கள் யாவை?
8. சிலுவை யுத்தங்களின்பின் ஐரோப்பாவுக்குள் கொண்டுவரப்பட்ட சில பொருட்களின் பெயர் கூறுக.
9. (a) மானியம் (b) நடுத்தர வகுப்பினர் (c) வர்த்தகம் சிலுவை யுத்தங்களினால் இவைகளுக்கு ஏற்பட்ட பலாபலன்கள் யாவை?
10. சிலுவை யுத்தங்களினால் நன்மை அடைந்த இரு இத்தாலிய் நகரங்கள் எவை?

VIII-ம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. பரிசுத்த உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் கூறுக.
2. இயசுத்தீனியனின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக குறிப்பிட்டு அவன் சரித்திரத்தின் முக்கியமானவன் என்பதற்கு காரணங்களைக் காட்டுக.
3. உரோமை மேற்றிராணியார் திருச்சபையின் தலைவராக எப்படி ஆனார்?
4. முகம்மதுவின் வரலாற்றையும் அவருடைய போதனையையும் சுருக்கமாகக்குறிப்பிடுக.
5. பரிசுத்த உரோமைப் பேரரசின் எழுச்சியைப்பற்றி சுருக்கமாய் குறிப்பிடுக.
6. சிலுவை யுத்தங்களைப்பற்றி பின்வரும் தலைப்புகளில். சிறு குறிப்பு வரைக.

   (a) காரணங்கள் (b) பலாபலன்கள்.

9-ம் அத்தியாயம்

இலங்கை அநுராதபுரக் காலம் 1
கி. பி. 247—கி. பி. 1017

(1) பழைய குடியேற்றங்கள் (2) அரசியல் சரித்திரம் (3) அரசாங்கமுறை (4) நீர்ப்பாசனமும் விவசாயமும்.


மிகவும் பழய காலந்தொட்டு இலங்கையின் பிரதான அரசியல் பகுதிக்கு அநுராதபுரம் தலைநகரமாய் இருந்தது. கி. பி. 1017 இல் சோழர் இலங்கையை வெற்றிகொண்டபோது தலைநகரம் பொல்லநறுவைக்கு மாற்றப்பட்டது. பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்குமேல் அநுராதபுரம் பண்டைய இலங்கையின் அரசியல், மத, பொருளாதார, கலாச்சார இயக்கங்களுக்கு நடுநாயகமாகநின்று நிலவியது. அதனால் இத்தீவின் வரலாற்றை மேற்படி கால எல்லையுடன் ஒட்டிப் பேசும்பொழுது அநுராதபுரக் காலம் என்கிறோம்.

1. பழைய குடியேற்றங்கள்

கி. மு. 500 இல் இலங்கைக்கு வந்த ஆரியர் விவசாயம் செய்ய அறிந்திருந்தனர். அவர்களின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறே. நெற்செய்கையே அவர்களின் பிரதான தொழில். நெற் செய்கைக்கு அதிக நீர் வேண்டும். எனவே இலங்கையின் பழைய ஆரியக்குடிகள் நீர்வளமுள்ள இடங்களைத் தெரிந்து கொண்டது இயல்பே எனினும் அவர்கள் அதிக மழைவீழ்ச்சி உள்ள இடங்களை விலக்கிக் கொண்டனர்.

இவ்விடங்கள் அடர்ந்த காடுகளாய் இருந்தன. (148, 149 பக்கங்களில் உள்ள படம் பார்க்கவும்) வடமேற்கு தென்கிழக்கிலுள்ள ஆற்றுரை வெளிகளில் அவர்கள் குடியேறினர்கள். வடமேற்கில் மல்வத்துஓயாக் கரையோரமாகவும், தென்கிழக்கில் வளவைகங்கை கிருண்டியோயா, மாணிக்க கங்கை கும்புக்கன்ஓயா ஆகிய ஆற்றுரைங்களிலும் அவர்கள் குடியேறினர்கள். களனிநதி விழுகின்ற இடத்திற்கு கிட்டசிறு தொகையினரான ஆரியர் குடியேற்றம் இருந்தது. இக்குடியேற்றத்தைப்பற்றி அதிகம் அறியோம். இலங்கைக்குவந்த பண்டைய ஆரியர் குடும்பங்கள் சேர்ந்த சிறு கூட்டங்களாயிருந்தன. ஒவ்வொரு கூட்டத்தாரும் ஆற்றுரைங்களில் தமக்கு வாய்ப்பான இடங்களில் குடியேறினர். ஒவ்வொரு குடியேற்றமும் கமம் (கிராமம்) எனப்பட்டது. கமத்தை ஆண்ட தலைவன் காமினி எனப்பட்டான். கிராமச்சபை கன்சபா எனப்பட்டது. வெகு விரைவில் வெவ்வேறு கமங்களுக்கு இடையே போர்மூண்டு கொண்டது. அநுரத கமத்தின் தலைவன் சூழவுள்ள கிராமங்களை வெற்றிகொண்டு அவற்றை தனது ஆட்சிக்குள் கொண்டுவந்தான். பல கமங்களை ஆண்ட காரணத்தால் அவன் அரசன் எனப்பட்டான். அவன் ஆண்ட பகுதி இரட்டை எனப்பட்டது அவனது கமம் புரம் எனப்பட்டது. இவ்வாறு அநுராதபுரம் இலங்கையின் வடமேற்குப் பாகத்தில் இருந்த இராச்சியத்தின் தலைநகரமாயிற்று. ஒவ்வொரு கமமும் முன்போலவே காமினியினாலும் அவனது கன்சபாவாலும் ஆளப்புட்டது. இவைகட்கு எல்லாம் மேலாக அரசன் அநுராதபுரத்தை தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தான்.

தென்கிழக்கில் குடியேறிய ஆரிய கூட்டத்தாரிடையேயும் இதையொத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கிருண்டியோயா தீரத்திலுள்ள கிராமம் ஒன்றின் காமினி அப்பகுதியிலுள்ள குடியேற்றங்களுக்கெல்லாம் தானே அதிபதியாகி தென்கிழக்கு குடியேற்றங்களின் அரசனானான். அவனுடைய கமம், மகாகமம் என்ற பெயருடன் அவ்விராச்சியத்தின் தலைநகரம் ஆயிற்று. அநுராதபுரத்தை தலைநகரமாகக் கொண்ட வடமேற்கு இராச்சியம் தீவின் பிரதானமான இராச்சியமாக கொள்ளப்பட அதன் அரசன் பிரதான புரவலனுகவும் கொள்ளப்பட்டான். எனவே அவ் இராச்சியம் இராசரட்டை எனப்பட்டது. மகாகமத்தை தலைநகரமாகக்கொண்ட தென்கிழக்கு இராச்சியம் உறுகுணை எனப்பட்டது. இவ்விரண்டு இராச்சியங்களும் மலைகள் செறிந்த மலாய இரட்டையாலும், மகாவலிகங்கையாலும் பிரிக்கப்பட்டிருந்தன. பண்டைய குடியேற்றக்காரருக்கு அகலமான ஆறுகள்மீது பாலம் போடவோ உயர்ந்த மலைகளின்மீது தெருக்களைப் போடவோ தெரிந்திலது. இதன் காரணமாக இவ்விரு இரு இராச்சியங்களும் பெரும்பாலும் தனித் தனி சுதந்திர நாடுகளாக இருந்தன. எனினும் மகாகமத்துக்கும் அநுராதபுரத்துக்கும் இடையே ஒரு பிரசித்த பாதை இருந்தது. பாதைகள் இல்லாததால் ஒரு இராச்சியத்திலிருந்து மறு இராச்சியத்திற்கு செல்பவர்கள் நதியோரங்களின் அண்மையில் வாழ்ந்தார்கள். மகாகமத்தில் துவங்குகின்ற பாதையானது கிருண்டியோயாவின் கிழக்குக் கரை ஓரமாகச் செல்கின்றது. அது புத்தளைக்கு ஊடாகச் சென்று மகாவலிகங்கையின் கிழக்கு ஓரமாகச் செல்கின்றது. மாகந்தோட்டையில் ஒரு கோட்டை இருந்தது, இக்கோட்டைக்கு ஊடாக இப்பாதை இராசரட்டைக்குள் செல்கிறது. பின்பு றிதிகலை காலிக்கு ஊடாகச் செல்லும் இப்பாதை மல்வத்துஓயாவின் மேற்கு கரையாக அநுராதபுரத்தை அடைகின்றது. துட்டகாமினி எல்லாளனுடன் போர் செய்தபொழுது தன் சேனையுடன் இவ்வழியேதான் சென்றான் (பின் பக்கம் பார்க்கவும்)



உறுகுணையிலிருந்து இராசஇரட்டைக்குச் செல்லும் பாதையைக் கொண்ட பண்டைய இலங்கைப் படம்.

(பாதை செல்கின்ற இடங்கள் அவதானிக்கவும்)

பயிற்சி

1. எவ்வாண்டு முதல் அநுராதபுரம் இராசஇரட்டையின் தலைநகர மாயிருந்தது?
2. கி. பி. 247 முதல் 1017 வரை உள்ள காலம் அநுராதபுரக்காலம் எனப்படுவதேன்?
3. ஈரலிப்பு மண்டலத்தை ஆரியர் ஏன் தவிர்த்தார்கள்?
4. ஆரியர் குடியேற்றம் வளர்ச்சி அடைந்த ஆறுகள் யாவை? (a) இராசஇரட்டையில் (b) உறுகுணையில்.
5. அநுராதபுரத்தின் காமினி இராசஇரட்டையின் அரசனுகவந்த வரலாற்றை விளக்குக.
6. தென்கிழக்கு குடியேற்றங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை?
7. இராசஇரட்டையை உறுகுணையிலிருந்து பிரித்தவை யாவை?
8. இலங்கையின் புற உருவப்படம் வரைந்து இராசஇரட்டையிலிருந்து உறுகுணைக்கு செல்லும் பாதையை குறிப்பிடுக.

2 அரசியல் வரலாறு

இலங்கையின் அரசியல் வரலாறு அநுராதபுரக் காலத்தில் அமைதியானது ஒன்று அல்ல. இலங்கை தென்இந்தியாவுக்கு அண்மையில் இருப்பதால் தென்இந்தியர் பண்டுதொட்டு இலங்கையை முற்றுகையிட்டு அதனைச் சில காலம் ஆண்டனர்; அல்லாமலும் இக்காலத்தில் மோறியர் என்ற கூட்டத்தாருக்கும் இலம்பகர்ணர் என்ற கூட்டத்தாருக்கும் சண்டைகள் நிகழ்ந்தன. பின்னர் நாட்டில் உள்நாட்டுக் கலகங்களும் நிலவின. இறுதியில் தென்இந்தியப் பேரரசர்கள் இலங்கையை முற்றுகையிட்டு அதனைத் தம் ஆணைக்குள் கொண்டுவர முயன்றனர். 1017 இல் சோழப் பேரரசர்களால் இதைச் செய்ய முடிந்தது. சிறிது காலம் இலங்கை தன் சுதந்திரத்தை இழந்து இருந்தது.


(a) பண்டைய தென்இந்தியப் படையெழுச்சிகள்

இலங்கை தென்இந்தியாவுக்கு வெகு அண்மையில் இருப்பதை ஒரு படத்தைப் பார்த்தால் தெளிவாகும். தென்இந்தியா இலங்கையில் வெகு அண்மையில் இருப்பது இலங்கைச் சரித்திரத்தை பாதிக்கும் ஒரு முக்கிய ஏதுவாகும். புராதான காலந்தொட்டே தென்இந்திய வீரர்கள் இலங்கையைக் கைப்பற்றி அதனை ஆள முயன்றார்கள். பின்னர் தென்இந்தியாவில் பேரரசுகள் நிறுவப்பட்டபோது சில பேரரசர்கள் இலங்கையை வெற்றிகொள்ள முயன்றார்கள்.

மகிந்தனும் அவனுடைய சீஷர்களும் இலங்கைக்கு வந்தபொழுது இலங்கையை ஆண்ட தேவனன்பியதீசன் 40 ஆண்டுகள் அரசாட்சி செய்தான். (இ. மு. 247—கி. மு. 207) இவனைப் பின்தொடர்ந்து இவனு

டைய 4 சகோதரர்கள் ஆண்டார்கள். இவர்கள் அத்துணை முக்கிய மான கருமங்கள் ஒன்றையும் செய்யவில்லை. இவனுடைய மூன்றும் சகோதரன் சூரத்தீசன் என்பவன் இலங்கையை ஆண்டபோது சேனன், கூத்திகன் என்ற இரு தமிழர்கள் இலங்கையை முற்றுகையிட்டு அரசனை சிம்மாசனத்தினின்றும் துரத்தி 20 வருடம் இலங்கையை ஆண்டார்கள். இறுதியில் தேவனன்பியதீசனின் நான்காம் சகோதரன் அசேலன் நாட்டை மீண்டும் கைப்பற்றி அரசகட்டில் ஏறினான். அசேலன் ஆட்சியின் பத்தாம் வருடம் தமிளர்கள் இலங்கையை மீண்டும் முற்றுகையிட்டனர். இம்முறை எல்லாளன் என்ற ஒரு தமிழன் படை எழுச்சிக்கு தலைமை தாங்கி, சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் இராசஇரட்டையை 40 ஆண்டுகள் ஆண்டான்.

தென்இந்தியாவும் இலங்கையும்



(a) சேரசோழ பாண்டிய இராச்சியங்களையும்,
(b) தென்இந்தியாவுக்கு இலங்கை அண்மையிலிருப்பதையும் அவதானிக்கவும்.

துட்டகாமினி:- அநுராதபுரத்தில் எல்லாளன் அரசனையிருந்த பொழுது உறுகுணையை கவந்தீசன் என்ற சிங்கள மன்னன் ஆண்டு

வந்தான். இவனுடைய மூத்த குமாரன் துட்டகாமினி தமிளர்களை முற்றும் வெறுத்தான். அவன் இலங்கை சிங்களவருடையதென்றும் அதனல் அதனைத் தமிழர்கள் ஆளக்கூடாது என்றும் உணர்ந்தான். இவன் வாலிபனனபொழுது இவன் தந்தை இவனை உறுகுணையின் சேனதிபதியாக நியமித்தான். துட்டகாமினி தமிழர்களை இலங்கையினின்றும் துரத்தி தானே இலங்கையின் தனி அரசனகவேண்டுமென்று வாஞ்சை கொண்டான். எனவே அவன் ஒரு பலம்மிக்க படையைச் சேர்த்து போர் வீரருக்கு போர்ப் பயிற்சி அளித்தான். துட்டகாமினியின் தந்தை தனயனின் இச்செயலை அங்கீகரிக்கவில்லை.

தமிழர்களுடன் போர்தொடுக்க தகப்பனின் சம்மதத்தை துட்டகாமினி நாடியபோது தகப்பன் சம்மதம் அளிக்க மறுத்துவிட்டான். இதனல் கடுஞ் சினங்கொண்ட காமினி தன் தந்தை வீரம் நிறைந்த ஒரு ஆண்மகன் அல்ல, ஒரு பெண்ணே என்று காட்டும் அறிகுறியாக பெண்கள் அணியும் ஆபரணங்கள் சிலவற்றை அவனுக்கு அனுப்பி வைத்தான். இவ்வாபரணங்களைக் கண்ட தந்தை கோபாவேசமுற்று தன் மகனை சிறைசெய்து தண்டிக்க முயன்றான். தந்தையின் கோபத்துக்கு அஞ்சிய துட்டகாமினி மலாய இரட்டைக்கு ஓடி, தந்தை இறக்கும்வரையும் அங்கேயே கரந்து உறைந்தான். கவந்தீசனின் மரணத்தின்பின் அவன் தம்பி சதாதீசன் அரசகட்டிலை அபகரித்து கொண்டான். இதன்காரணமாக துட்டகாமினிக்கும் சதாதீசனுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது. பௌத்த சந்நியாசிகளின் தலையீட்டால் இரு சகோதரருக்கு மிடையே சமாதானம் உண்டானது. துட்டகாமினி உறுகுணைக்கு அரசனகி தமிழருடன் போர் தொடுக்க ஏற்பாடுகள் செய்தான். அவனுடைய சேனை மகாவலிகங்கையின் கிழக்கு ஓரமாக சென்று மாகந்தோட்டை வழியாக இராசஇரட்டைக்குள் புகுந்தது. (194-ம் பக்கம் பார்க்கவும்) விசித்தபுரம் என்ற வன்மை மிக்க தமிழரின் கோட்டை ஒன்றைக் கைப்பற்றி ரிதிக்கல ககல என்ற இடங்களின் ஊடேசென்று மல்வத்துஓயா கரையோரமாய் அநுராதபுரத்தை அடைந்தான். (194-ம் பக்கம் பார்க்கவும்) இங்கே இரத்தம் சிந்துதலைத் தவிர்க்கும் பொருட்டு இரு மன்னர்களும் தாம் ஒருவர் ஒருவருடன் கைகலப்பதாகத் தீர்மானித்துக்கொண்டனர். இக்கைகலப்பில் எல்லாளன் தோல்வி அடைய துட்டகாமினி இலங்கையின் ஏகாதிபதியானன். துட்டகாமினியை சிங்களவர்கள் தம் இனத்தின் வீரனகக் கருதுகின்றனர். அவன் இராசஇரட்டையில் தமிழர் ஆட்சிக்கு இறுதி கண்டதுமல்லாமல் தானே இலங்கையின் அரசனுமானன். அவன் பௌத்த மதத்தைப் பாதுகாத்தான், தேவாலயங்களை பரிபாலிப்பதற்காக நிலங்களை மானியமாக அளித்தான்; பிக்குகளுக்கு தானம் செய்தான்; ருவான்வலிசய (194ம் பக்கம் பார்க்கவும்) லோவமகாபாசம் (செப்பு மாளிகை மிரிஸ்வட்டிய தாதுகோபம்

போன்ற அநேக சமய சம்பந்தமான கட்டடங்களை நிறுவினான். வட்ட காமினி அபயன்:- கி. மு. 103 இல் வட்டகாமினி அபயன் அரசனாயிருந்தபொழுது தமிழர்கள் மீண்டும் இலங்கைமீது படையெடுத்து வந்தார்கள். இவ்வரசனின் முதலாவது வருட ஆட்சியில் தீசன் என்ற ஒரு பிராமணன் மகாகமத்தில் ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு அரசனுக்கு எதிராக எழுந்தான். இவன் சேன அனுராதபுரத்திற்கு வழக்கமான பாதைவழியே வந்தது. (194-ம்பக்கம் பார்க்கவும்) இதே தருணத்தில் பாண்டிய தமிழர் எழுவர் இலங்கையை முற்றுகையிட்டார்கள். வடக்கிலும் தெற்கிலுமாக நசுங்குண்ட அரசன் ஒன்றும் செய்ய வழி அறியாது மாலய இரட்டைக்கு ஓடி ஒழித்தான். இத்தமிழர்களுள் ஐவர் ஒருவர்பின் ஒருவராய் அரசாண்டனர். பதினைந்து வருடம் வட்டகாமினி மன்னன் மலைகளில் உள்ள காடுகளில் அலைந்து திரிந்தான். கி. மு. 89 இல் இவன் ஒரு பெருஞ் சேனையோடு வந்து ஐந்தாவது தமிழனாகிய தாட்டிகனைக் கொன்று அநுராதபுரத்தைக் கைப்பற்றி மீண்டும் அரசனானான்.

பௌத்த மதத்தின் முதற் பிரிவினை

வட்டகாமினி அபயனது ஆட்சிக்காலத்தில் இலங்கையில் இரண்டு முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. கி. மு. 247 இல் மகிந்தன் இலங்கைக்கு புத்த மதத்தைக் கொண்டுவந்தான் என அறிந்தோம். அநுராதபுரத்தில் அநேக ஆச்சிரமங்கள் நிறுவப்பட்டன. அவற்றுள் ஒன்றான மகாவிகாரை முதன்மையாகக் கருதப்பட்டது. காலகதியில் இவ் ஆச்சிரமம் ஏனையவற்றை ஓரளவு கட்டுப்படுத்தி வந்தது. வட்டகாமினி அபயன் காலத்தில் மகாவிகாரையிலிருந்த முதிய பிக்குகள் சிலர் அபயகிரி விகாரையின் தலைமைப் பிக்கு பொதுமக்களின் வீடுகளுக்குப் போவதைப்பற்றி கண்டித்தார்கள். இப்பிக்குவின் துணைவர்கள் இதனால் மனம் நொந்து தங்கள் ஆச்சிரமம் சுதந்தரமானது ஒன்று என்றும் மகாவிகாரைக்கு அதன்மீது ஒருவிதமான ஆதிக்கம் இல்லையென்றும் சொன்னார்கள். இவ்வாறு அவர்கள் மகாவிகாரையினின்றும் பிரிந்துகொண்டனர். இதுவரை இலங்கையில் தேரவாத பௌத்த மதமே போதிக்கப்பட்டது.

பௌத்த மதத்தின் வெவ்வேறு பிரிவுகள் இங்கு வரவில்லை. ஆனால் இக்காலத்தில் வஜி புத்தகம், மகாயானம் முதலிய பிரிவுகள் இலங்கைக்கு வர அவற்றை அபயகிரி விகாரையிலுள்ளார் வரவேற்றனர். ஞானநூல்களை எழுதுதல்:- இலங்கையில் நிகழ்ந்த மற்றைய முக்கிய நிகழ்ச்சி பௌத்த ஞானநூல்கள் எழுதப்பட்டதாகும். இத்துணை காலமும் புத்தரின் போதனைகள் மனனம் செய்யப்பட்டு பௌத்த பிக்குகளால் அவர்களின் சீஷர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டன. மகிந்தனும் அவன் சீஷர்களும் இலங்கைக்கு வந்தபொழுது புத்தரின் போதனையை அவர்கள் ஞாபகத்திலேயே வைத்திருந்தனர். வாலகம்பாகுவின் ஆட்சிக்காலம் வரையும் இவைகள் எழுதிவைக்கப்படவில்லை. இவனுடைய காலத்தில் ஒரு பெரும் பஞ்சம் உண்டானது; இப்பஞ்சத்தால் எத்தனையோ பௌத்த துறவிகள் இடுக்கண் அடைந்தார்கள்; அநேகர் இறந்தார்கள்; சிலர் இந்தியாவுக்கு சென்றார்கள்; சிலர் தங்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பௌத்த சங்கத்தை விட்டு வேறு தொழில்கள் செய்தார்கள்; எஞ்சியிருந்த சில பிக்குகள், தங்களுக்கும் ஏனைய பிக்குகளைப்போல சம்பவிக்குமானால், புத்தரின் போதனைகள் அழிந்துபோகும் என்று கலங்கினார்கள். எனவே மாத்தளைக்கு அருகிலுள்ள அலுவிகாரையில் பாளி பாஷையில் வேத நூல்களையும், வழிமுறைச் செய்திகளையும் கவனமாக எழுதிவைத்தார்கள்.

வட்டகாமினி அபயன் 12 ஆண்டுகள் ஆட்சி செய்தபின் கி. மு. 77 இல் இறந்தான். அவனைப் பின்தொடர்ந்து மகாசீலன் அரசனானான்.

தென் இந்தியாவிலிருந்து அரச வீரர்கள் இலங்கைமீது செய்த கடைசிப்படை எழுச்சி கி. பி. 435 இல் மித்சென் என்ற அரசனின் ஆட்சியில் நடந்தது. மித்சென் என்பவன் சிம்மாசனத்திற்கு உரிமையற்றவனாயிருந்தும் அதைக் களவாக அபகரித்துக்கொண்டான். மந்திரி ஒருவனின் உதவியோடு சிம்மாசனத்தை கைப்பற்றினானெனினும் மக்கள் அவன் அரசனாக இருப்பதை விரும்பவில்லை. அதனால் கலகங்கள் உண்டாயின. தென்இந்தியாவிலுள்ள ஆறு பாண்டியர்கள் இதுவே தருணம் எனக்கொண்டு ஒரு பெரிய படையுடன் இலங்கைக்கு வந்து சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக கி. பி. 460 வரையும் இலங்கையை ஆண்டார்கள். தாதுசேனன் கடைசித் தமிழனைக் கொன்று தானே இலங்கைக்கு அரசனானான்.

மிகப் பழைய காலந்தொட்டு கி. பி. 432 வரை தமிழரின் படை எழுச்சிகள் நான்கு நிகழ்ந்தன. இப்படை எழுச்சிகள் தமிழ் அரசர்களால் அல்ல. இலங்கை அரசர்களின் பலவீனத்தையும் இலங்கையில் நிகழ்ந்த கலகங்களையும் சந்தர்ப்பமாகக்கொண்ட பலம்படைத்த தமிழர்களால் நடத்தப்பட்டன. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் இருப்பதால் இது எளிதாயிற்று.

பயிற்சி II

1. கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ்க்கோடு இடுக:

1. ஏன் தமிழ் வீரர்கள் இலங்கையை முற்றுகையிட முடிந்தது?
   (a) இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி.
   (b) இலங்கை இந்தியாவுக்கு அண்மையிலுள்ளது.
   (c) இலங்கை இந்தியாவுக்கு தூரத்திலுள்ளது.

II. தமிழ் வீரர்கள் இலங்கையை ஏன் வெற்றிபெற முடிந்தது?
(a) இலங்கையில் கலகங்கள் நிகழ்ந்தன.
(b) சிங்களவர் தமிழருக்கு பயந்தார்கள்.
(c) இலங்கை அரசாங்கம் பலம் குறைந்ததாயிருந்தது.
(d) சிங்களவரைத் தமிழர் பிரியப்படுத்தினர்கள்.

2. சுருக்கமான விடைகள் தருக:
(a) முதல் முதல் இலங்கைக்கு படை எடுத்து வந்த தென்இந்தியர் பெயர் என்ன? அவர் எவ்வளவு காலம் இலங்கையை ஆண்டனர்?
(b) இரண்டாவது தமிழர் படையெழுச்சியின் தலைவர் யார்?
(c) அவனுடன் போர்செய்து தமிழர் ஆட்சிக்கு இலங்கையில் இறுதி கண்டவர் யார்?
(d) வாலகம்பாகுவின் ஆட்சிக் காலத்தில் நடந்த தமிழர் படையெழுச் சியை எத்தனைபேர் நடத்தி வந்தனர்?
(e) வாலகம்பாகு எத்தனை ஆண்டுகள் காடுகளில் அலைந்து திரிந் தான்?
(f) வாலகம்பாகுவின் காலத்தில் நடந்த இரு முக்கிய சம்பவங்கள் யாவை?
(g) கி. பி. 432 இல் இலங்கையில் தமிழர் படை எடுத்தபொழுது இலங்கையை ஆண்ட அரசன் யார்?
(h) கி. பி. 460 இல் தமிழர்களிடமிருந்து அரசைக் கைப்பற்றிய சிங் கள மன்னனின் பெயர் என்ன?

(b) வெவ்வேறு சிங்களக் கோத்திரத்தாரிடையே போர்கள்

தென் இந்தியர்களின் படையெழுச்சி மாத்திரமல்ல, இலங்கையில் வேறு அரசியல் தகராறுகளும் இருந்தன. ஏழாவது அத்தியாயத் தில் வெவ்வேறு பட்டிகளைச் சேர்ந்த கோத்திரத்தார் இலங்கையில் இருந்தார்களெனப்படித்தோம். கி. மு. 247 இல் மோரியர்களும் இலம் பகர்ணர்களும் ஏனையவர்களிலும் பலம் உடையவர்களாகி கி. பி. 7ஆம் நூற்றாண்டுவரையும் அரசு உரிமையைப் பெறுவதற்காக அடிக்கடி தங்களுக்குள் சண்டை செய்துகொண்டார்கள்.

(I) மோரியர்களின் வல்லமை

தேவனன்பியதிசன் மோரிய வகுப்பைச் சேர்ந்தவன். அவரைப் பின்தொடர்ந்து வந்தவர்களும் அவ்வகுப்பினரே. கி. பி. 37இல் ஈழ நாகனுடைய அரசாட்சியில் இலம்பகர்ணர் சிம்மாசனத்தைக் கைப்பற்ற முதல் முதல் முனைந்தனர். அரசன் மோரியனையிருந்த பொழுதிலும் அரசாங்கத்திலும், பட்டாளத்திலும் உயர்ந்த உத்தியோகத்தை இலம்

பகர்ணர் வகித்தார்கள் அரசன் முக்கியமான ஒரு வேலைக்கு செல்கிற பொழுது இவனைப் பின்தொடர்வது இவர்கள் கடமையாக இருந்தது.

ஒருநாள் ஈழநாகன் வழக்கமான தனது பரிவாரங்கள் புடைசூழ திசவீவாவைப் பார்க்கச் சென்றான். அவனோடு சென்றிருந்த இலம்ப கர்ணர்கள் ஏதோ காரணத்தால் வழியில் திரும்பிவிட்டார்கள். இது தனக்குச் செய்த ஓர் அவமானம் எனக்கண்ட அரசன் அவர்களைத் தண்டிக்க கருதி கீழ்சாதியினரான சண்டாளரின் மேற்பார்வையில் தெருவேலைசெய்ய கட்டளையிட்டான். கீழ்சாதியினரின் கீழ் வேலை செய்யப் பணிந்தது இலம்பகர்ணருக்கு செய்த பெரிய அவமானமா கும். இதனால் இவர்கள் அரசனுக்கு எதிராக எழுந்து அவனைச் சிறைப்படுத்தினர்கள். ஆனால் ஈழநாகன் எதுவிதமோ தப்பிக்கொண் டான். இலம்பகர்ணர்களுக்குள் யார் அரசனுயிருக்க வேண்டுமென் பதுபற்றி ஒற்றுமை ஏற்படாததால் ஈழநாகன் ஒரு படையுடன் மீண் டும் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான்.

(II) இலம்பகர்ணரின் வல்லமை

கி. பி. 60 வரை மோரியர்கள் இலங்கையை ஆண்டுவந்தார்கள் சுப்ப என்ற ஒரு வாயிற் காவலன் தந்திரமாக சிம்மாசனத்தைக் கைப் பற்றினான். அரசாங்கத்திலும் பட்டாளத்திலும் உயர்ந்த உத்தியோ கம் வகித்த இலம்பகர்ணர் ஒரு வாயிற்காவலனிடம் வேலை செய்ய மறுத்துவிட்டனர். கி. பி. 67 இல் இவர்கள் தலைவர்களுள் ஒருவனான வசபா, சுப்பவை தொலைத்துவிட்டு தானே அரசனானன். வசபன் விவ சாயம் நீர்ப்பாசனம் ஆகியவற்றை விருத்திசெய்தான். அவன் பதி னொரு குளங்களையும் பன்னிரண்டு வெட்டுவாய்க்கால்களையும் அமைப்பித்தான் எனக் கூறப்படுகிறது.

கி. பி. 611 முதல் 437 வரை இலம்பகர்ணர் அதிகாரத்திலிருந் தனர். இக்காலத்தில் புகழ் நிறுவிய அரசர்களில், சங்கதிசன் (கி. பி. 243—247) சிறீ சங்கபோ (கி. பி. 247—249) கோதகாபயன் (கி. பி. 249—263) ஆகிய மூன்று சகோதரர்களும் அடங்குவர். சிறீ சங்கபோ தூய்மையான வாழ்க்கையை நடத்திய அரசன் என்றும் அவன் மக் களின் நலத்தையே பேணினான் என்று பல கதைகள் உள. அவனு டைய தம்பி கோதகாபயன் அவனுக்கு எதிராக எழுவதற்கு சூழ்ச்சி கள் செய்கிறான் எனக் கேள்விப்பட்ட சிறீ சங்கபோ இரகசியமாக அரண்மனையினின்றும் வெளிப்போந்து துறவு வாழ்க்கையை மேற் கொண்டான். இவ்வாறு இரத்தஞ் சிந்தாமல் கோதகாபயன் அரச கட்டில் ஏறுவதற்கு வழிவகுத்தான்.

மகேசன்:- இக்காலத்து முக்கியமான அரசர்களுள் மகேசனும் ஒருவன். இவன் கோதகாபயனின் இளைய புத்திரன். மகேசன் கி.பி. 274 இல் அரசகட்டில் ஏறி 27 ஆண்டுகள் நல்லாட்சி செய்தான். இவன்

நீர்ப்பாசனத்தை விருத்திசெய்வதில் தன் முழுக்கவனத்தையும் செல விட்டான். இவன் 16 குளங்களையும் ஒரு வெட்டுவாய்க்காலையும் அமைத் தான். இந்நீர்ப்பாசன வசதிகள் மக்களின் விவசாயத்திற்கு அளப் பரிய நன்மை செய்ததால் இவன் இறந்தபின் குடிகள் இவனைத் தெய் வமாக வணங்கினர்கள்.

மகாயானம் இலங்கையில் வேரூன்றல்

இதுகாலவரை இலங்கை அரசர்கள் மகாவிகாரைப் பிக்குகளையே அதிகம் ஆதரித்து வந்தார்கள். வொகாரகதீசன் (இ. பி. 209—237) காலம் முதல் மகாயானக்கொள்கையை இலங்கையில் புகுத்த முயற் சிகள் செய்யப்பட்டு வந்தன. நாம் முன்னர் கண்டதுபோல மகாவிகா ரையினின்றும் பிரிந்துபோன அபயகிரி விகாரையிலேயே இதனைப் புகுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. இத்தகைய முயற்சிகளை அவ்வப் போது இருந்த அரசர்கள் தடுத்ததுமன்றி மகாயானக்கொள்கைகள் அடங்கிய ஏடுகளை எரித்தும் காய்ச்சிய இருப்புக் கோலால் அதனைப் போதித்த பிக்குகளைச் சுட்டுத் தண்டித்தும் வந்தார்கள். மகேசன் மகாயானக்கொள்கைகளினுல் கவரப்பட்டு, மகாவிகாரைப் பிக்குகளை தண்டித்து, அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டாமென்று ஜனங் களுக்கு கூட்டளைசெய்து, அவர்கள் கட்டடங்களை அழித்து, அவைகளில் எடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு அபயகிரி விகாரையை பெருப் பித்து, மாகாயானத்துக்கு தனது முழு ஆதரவையும் நல்கினன். பல நூற்றாண்டுகளாக மகாவிகாரைப் பிக்குகளை கனம்பண்ணி வந்த மக் கட்கு அரசனின் இச்செயல்கள் கோபத்தை உண்டாக்க காரணமாயின. மந்திரி ஒருவன் அரசனுக்கு எதிரான புரட்சி ஒன்றை நடத்தப்போவ தாக அறைகூவினன். இதனுல் அச்சங்கொண்ட மன்னன் மகாவி காரைக்கு தனது ஆதரவை அளிப்பதாக உறுதிமொழி கூறினன். அவன் மகாவிகாரை இருக்கின்ற அதே இடத்தில் இன்னெரு பௌத்த மதக் கோயின் இல்லமாக பின்பு விளங்கிய சேதவனராமி விகா ரையைக்கட்டினன்.

மகேசனைப் பின்தொடர்ந்து இ. பி. 302 இல் அவனது மகன் கித்-சிறீ-மேவன் அரசனுனன். இவனுடைய காலத்திலே புத்தரின் புனிதப் பல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. மகாநாமன் காலத் தில் (இ. பி. 409—431) இரு புகழ்பெற்ற அதிதிகள் இலங்கைக்கு வந்தார்கள். ஒருவர் பௌத்த அறிஞராகிய புத்தகோச. இவர் சிங்க ளத்தில் எழுதப்பட்டிருந்த வியாத்தியானங்களை பாளி பாஷையில் மொழிபெயர்த்தார்; பௌத்த போதனைகளின் களஞ்சியமான விசுதி மார்க்க என்ற நூலையும் இயர் யாத்தார். மற்றவர் சீன யாத்திரீக ரான பாஹியன்.

(III) மோரியர் சிம்மாசனத்தை கைப்பற்றல்


இலம்பகர்ணர் 365 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்தனர். (இ. பி. 67—இ. பி. 432). இ. பி. 432 இல் சிம்மாசனத்திற்கு எவ்வி தத்திலும் உரிமையற்ற மித்சென் என்ற ஒருவன் மந்திரி ஒருவனின் உதவியோடு அரசனுனன். ஜனங்கள் இதை வெறுத்தார்கள் என்றும் ஆறு தமிழர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கையை முற் றுகையிட்டார்கள் என்றும் முன்னர் கண்டோம். இ. பி. 460 வரையும் தமிழர் தொடர்ச்சியாக இலங்கையை ஆண்டார்கள். தாதுசேனன் கடைசித் தமிழனத்தொலத்துவிட்டு அரசனுனன். தாதுசேனன் ஓர் மோரியன். ஆதலால் மோரியர் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தார்கள்.

தாதுசேனன் (இ. பி. 460—470) குளங்கள் கட்டுவதில் பேர்போன வன். இவ்வளவு காலமும் அநுராதபுரத்தைச் சூழவரவும் மகாவலி கங்கைக்கு அண்மையிலும் குளங்கள் கட்டப்பட்டன. அநேக நீர்ப் பாசன வசதிகள் இருந்தும் மகேசன் காலத்தில் கொடும் பஞ்சங்கள் நான்குமுறை ஏற்பட்டன. தாதுசேனன் மாத்தளை குன்றுகளின் அடி வாரத்தில் காலவீவா என்ற பெருங் குளத்தைக் கட்டினன். இக்கு ளம் அதிக நீர் கொள்ளக்கூடியதாயிருந்தது. இதிலிருந்து நாற்பத் தைந்து மைலுக்கு வெட்டிய வெட்டுவாய்க்கால் அநுராதபுரத்தி லுள்ள திசவீவாவுக்கு நீர் கொண்டுவந்தது. தாதுசேனனுக்கு மூன்று குழந்தைகள் இருந்தார்கள். மூத்தவனை காசியப்பனின் தாய் இழிகுலத்தினள். ஆதலால் காசியப்பன் சிம்மாசனத்திற்கு அருகதை யற்றவன் ஆனன். முகலன் பட்டத்தரசியின் மைந்தன் ஆதலால் அவனே சிம்மாசனத்திற்கு உரியவனுகக் [illegible]ப்பட்டான். மூன்றுவது குழந்தையான புத்திரி சேனபதியை மணஞ்செய்து கொண்டாள். சேனபதியின் தாய் இப்பெண்ணைக் கொடுமையாக நடத்தியதால் தாதுசேனன் அத்தாயை உயிருடன் எரித்துவிட்டான். இதனுல் சேனு பதி அரசனுக்கு விரோதியாக எழுந்தான். சிம்மாசனத்தைக் கைப் பற்றச் சமயம் பார்த்துக்கொண்டிருந்த காசியப்பனுடன் சேர்ந்து அர சனை இருவரும் எதிர்த்தார்கள். இறுதியில் அரசனைப் பிடித்து சிறை யில் தள்ளிவிட்டார்கள். காசியப்பன் சிம்மாசனத்தைக் கைப்பற்றித் தன் தந்தையைக் கொன்றதுமன்றி முகலனையும் ஒழித்துவிட முயன் றன். முகலன் இந்தியாவுக்கு ஓடினன்.

காசியப்பன் சிகிரியாவில் வன்மையான ஒரு கோட்டையை அமைத்து தன் தலைநகரை அங்கு மாற்றிக்கொண்டான். 600 அடி உயரமான மலைமீது இவன் தனது அரண்மனையை அமைத்தான். படிக்கட்டுகள்மூலம் மலையின் நடுப்பகுதிக்குப் போகலாம். இதிலி ருந்து மலையின் வடபாலுள்ள மேடைக்குப் போகமுடியும். இம்மேடை யிலிருந்து படிக்கட்டுகள் மண்ணினுல் அமைக்கப்பட்ட ஒரு பெரிய


சிங்கத்தின் கடைவாய்க்கு ஊடே உயர்ந்து செல்கின்றன. இவ் வாறு இம்மலை சீகிரி அல்லது சிகிரியா எனப் பெயர்பெற்றது. இம் மலைச் சுவர்களில் பண்டைய இலங்கையின் அழகிய சித்திரங்கள் இன் றும் அழியாமல் இருக்கின்றன. சிகிரியா அமைக்கப்பட்டு 1,500 ஆண் டுகள் கழிந்தபோதிலும் அதன் சில பகுதிகள் இன்றும் அன்றுபோ லவே மெருகிடப்பட்ட சுவாகளும் வர்ணம் தீட்டப்பட்ட சித்திரத்தை யும் கொண்டு விளங்குகின்றன.

இக்குன்றின் கிழக்கும் மேற்கும் மதில்களாலும், அகழிகளாலும் அரண் செய்யப்பட்டிருக்கின்றன. மதிலின் சில பகுதிகள் இன்றும் அழியாமல் இருக்கின்றன. சில பகுதிகளில் இம்மதில் 30 அடி உய முடையது. அகழி 14 அடி ஆழமும் 82 அடி அகலமும் கொண்டது.



சிகிரியாக் குன்று

காசியப்பன் அநுராத புரத்திலிருந்து சிகிரியாவுக்கு ஏன் தலை நகரை மாற்றிக்கொண்டான் என்று ஒருவருக்கும் நன்கு தெரியாது. முகலன் தென்இந்தியாவிலிருந்து பெரும் படையோடு வந்து தன்னை எதிர்ப்பான் என அஞ்சி இங்கு சரண்புகுந்ததாகச் சிலர் கரு கின்றனர். முகலன் வந்தபோது காசியப்பன் அவனை வெளியரங்கமாக எதிர்த்து சண்டை செய்தான். இதனால் இக்காரணம் தகுந்ததாகத் தோன்றவில்லை. அநுராதபுர மக்களுக்கு அஞ்சி சிகிரியாவில் சரண் புகுந்து கொண்டார் என்று வேறு சிலர் கருதுகின்றனர். சிகிரியாக் கோட்டையை அமைக்க ஐந்து ஆண்டுகள் கழிந்தன மக்களுக்குப் பயந்த ஒரு அரசன் தற்காலிகமாக ஒதுக்கிடம் தேடுவானன்றி இவ்வ ளவு நீண்டகாலத்தில் அமைக்கப்படவேண்டிய ஒரு இடத்தை தேடு




சிகிரியாக் கற்கோட்டை வாயில்



சிகிரியாச் சுவர்ச் சித்திரங்கள்

சிகிரியாவின் பருமபடியான தோற்றப்படம்



(a) மத்தியிலுள்ள குன்றை அவதானிக்கவும்.
(b) கீழ்க்கிலும் மேற்கிலுமுள்ள மதில்களை அவதானிக்கவும்.

னென் என்பது பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது. காசியப்பன் அக் காலத்தில் இருந்த பல கீழ்நாட்டு மக்களைப்போல தன்னை ஒரு கடவுளாக என்னினென். அக்காலத்து தேவராசர் உயர்ந்த மலைகளில் அமைக்கப்பட்ட விசேஷ அரண்மனைகளில் வாழ்ந்தார்கள். சிகிரியாவின் உச்சியில் ஒரு அரண்மனையை மாத்திரமல்ல தேவ அரசர்களின் அரண்மனைக்குச் சொல்லப்பட்ட விதிகள் அடங்கிய அமைப்பையும் நாம் காண்கின்றோம். இக்காரணத்தால் சிகிரியாவை காசியப்பன் தலைநகராய் ஆக்கினனென்று இக்கால ஆசிரியர் சிலர் கருதுகின்றார்கள்.

(IV) கோத்திரச் சண்டைகள் முடிவு

தாதுசேனன் கி. பி. 460 இல் கடைசித் தமிழனைக் கொன்று அதிகாரத்தைப் பெற்றபோது மோரியர் அரச உரிமையையும் பெற்றார். இவர்கள் கி. பி. 524 வரையும் ஆண்டார்கள். இலம்பகர்ண கோத்திரத்தவரின் தலைவரில் ஒருவனன 2 ஆம் உபத்தீசன் கி. பி. 524 இல் சிம்மாசனத்தைக் கைப்பற்றினன். உபத்தீசன் ஒரு மோரிய அரசகுமாரியை மணம் செய்தானயினும் இவ்விரு கோத்திரத்தாருக்குமிடையே அடிக்கடி தகராறுகள் நிகழ்ந்துகொண்டே இருந்தன. 41 ஆண்டுகளின்பின் கீர்த்திசிறீ மேகனின் சேனபதியும் மோரியனுமான மகாநாகன் சிம்மாசனத்தைக் கைப்பற்றி கி. பி. 565 முதல் 568 வரை அரசாண்டான். இக்காலம்முதம் கி. பி. 611 வரை மோரியர் அதிகாரத்தில் இருந்தனர் இவ்வாண்டு தல்லமுகலன் 2 ஆவது சங்கத்தீசனை வெற்றிகொண்டு மோரியரையும் வெற்றிகொண்டான். இதன்பின் கோத்திரப் போர்கள் நடந்ததாக மகாவம்சம் குறிப்பிடவில்லை.

பயிற்சி III

சுருக்கமான விடை தருக:-

1. கி. பி. 7 ஆம் நூற்றாண்டுவரை அதிகாரத்தின் பொருட்டு சண்டைசெய்த இரு கோத்திரங்களும் எவை?
2. தேவனன்பியதீசன் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவன்?
3. எந்த அரசன் ஆட்சியில் முதலாவது தகராறு ஆரம்பமானது?
4. மோரியனை ஈழநாகன் தன் சிம்மாசனத்தை எவ்வாறு மீண்டும் பெற்றுக்கொண்டான்?
5. கி. பி. 60 இல் சிம்மாசனத்தைக் கைப்பற்றிய வாயில்காப்போனின் பெயர் என்ன?
6. இலம்பகர்ணர் வாயில்காப்போனை அரசனாக மதித்தார்களா?
7. வாயில்காப்போனிடம் சிம்மாசனத்தை கைப்பற்றிய இலம்பகர்ணன் யார்?

8. கி. பி. 67 முதல் எவ்வாண்டுவரை இலம்பகர்ணர் அதிகாரத்தில் இருந்தனர்?
9. இக்காலத்தில் ஆட்சிசெய்த முக்கிய இலம்பகர்ண அரசர்கள் சிலரின் பெயர்கள் தருக.
10. மித்சன் யாருடைய உதவியோடு சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான்?
11. மித்சனுடைய ஆட்சியில் இலங்கையை முற்றுகையிட்டவர் யார்?
12. தமிழ் ஆக்கிரமிப்பாளரில் கடைசியானவரிடமிருந்து சிம்மாசனத்தைக் கைப்பற்றிய சிங்கள அரசன் யார்? அவன் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவன்?
13. காசியப்பன் யாருடைய உதவியோடு அரசகட்டில் ஏறினான்?
14. அவன் சிகிரியாவுக்கு ஏன் தன் தலைநகரை மாற்றினான்? 3 காரணங்களையும் தருக.
15. எவ்வாண்டு கோத்திரப் போர்கள் முடிந்தன?

உள்நாட்டு யுத்தங்கள்

ஆரும் நூற்றாண்டின் பின் நாட்டில் உள்நாட்டுக் கலகங்கள் அடிக்கடி உண்டாயின. புரட்சிகளும் அரசரைக் கொல்லுதலும் சர்வசாதாரணமாக நிகழ்ந்தன. உள்நாட்டுப் போர்களில் தோல்வி அடைந்த சில அரசர்கள் தென்இந்தியாவுக்குப் போய் தமிழ்ப் போர் வீரர்களை கூலிக்கு பிடித்துக்கொண்டு வந்தார்கள். முகலன், சிம்மாசனத்தைக் கைப்பற்ற தென்இந்தியாவிலிருந்து ஒரு படையைத் திரட்டி வந்தானென முன்னர் கண்டோம். 3 ஆம் அக்போ, முதலாம் தாதோபதீசன், 2 ஆம் தாதோபதீசன், மானவர்மன் ஆகியோர் இவ்வழக்கத்தைப் பின்பற்றினர்கள்.


தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட கூலிப்படையினர் பலர் இந்தியாவுக்கு மீண்டும் போகவில்லை. அவர்கள் இலங்கையில் குடியேறி அரசனுடைய சேனையில் மிகுந்த செல்வாக்குப்பெற்றார்கள். சிலவேளைகளில் அவர்கள் சிங்கள அரசர்களுக்கு இடும்பை விளைத்தார்கள். பலதடவைகளில் அரசனுக்கு எதிராகப் புரட்சி செய்ததுமன்றி, தென் இந்தியப் பேரரசர்கள் இலங்கையை முற்றுகையிட்டபொழுது அவர்கள் வெற்றிக்குச் சாதகமாகவும் இருந்தார்கள்.

(d) தென் இந்தியப் பேரரசர்களின் படை எழுச்சிகள்

பாண்டிய படையெழுச்சி

இலங்கையில் உள்நாட்டுக் கலகங்கள் நடந்தபோது தென் இந்தியாவில் பல்லவரும் பாண்டியரும் வல்லமையடைந்து வந்தார்கள்.

தென் இந்தியா கி. பி. 600—900
பல்லவப் பேரரசு பாண்டியப் பேரரசு



இவ்விரு சாதியாரும் தென் இந்தியாவின் அரசியல் ஆதிக்கத்தின் பொருட்டு கி. பி. 600 முதல் 900 வரை போர்புரிந்து வந்தார்கள். 8 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பாண்டியர் மீண்டும் வெற்றி பெற்றார்கள். கி. பி. 835 இல் ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் என்ற அரசன் தென் இந்தியாவின் பெரும்பகுதியைக் கைப்பற்றிய பின் ஆம் சேனன் காலத்தில் (கி. பி. 831—851) இலங்கையை முற்றுகையிட்டான். இலங்கையில் அப்போது இருந்த அநேக போர் வீரர்கள் அவனுக்குத் துணைபுரிந்தார்கள். 1ஆம் சேனன் ஓடி ஒளித்தான். ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் அநுராதபுரத்தை சூறையாடி கொள்ளையடித்து இந்தியாவுக்கு மீண்டான். சிலகாலத்தின்பின் ஸ்ரீமாறனின் மகன் தந்தைக்கு எதிராகப் புரட்சி செய்தான். அநுராதபுரத்தை அழித்ததற்காக ஸ்ரீமார ஸ்ரீவல்லபன்மேல் பழிவாங்கக் கருதிய 2 ஆம் சேனன் புரட்சிக்காரருக்கு உதவியளிக்கத் துணிந்தான். ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் தோற்கடிக்கப்பட அவன் மகன் அரச கட்டில் ஏறினான். அதன் பின்பு இலங்கைக்கும் புதிய பாண்டிய அரசனுக்கும் நேச உறவு நிலவியது.

சோழப் படையெழுச்சிகளும் வெற்றிகளும்

9 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டவர், பல்லவர் ஆகியோரை இதுவரை இருந்த சோழர் தங்கள் சுதந்திரத்தின்பொருட்டு போர்புரியத் துவங்கினார்கள். (209-ம் பக்கங்களில் உள்ள படங்களைப் பார்க்கவும்) அவர்கள் பல்லவர்களைத் தாக்கி வெற்றி கொண்டபின் பாண்டியர்மீது பாய்ந்தார்கள். இலங்கை அரசர்களான 5 ஆம் காசியப்பன், 5 ஆம் தப்புளு முதலானோர் சோழருக்கு எதிராக பாண்டியருக்கு உதவி அனுப்பினார்கள். சோழர்கள் பலம்படைத்தவர்களாய் இருந்ததால் பாண்டிய இலங்கைப் போர்வீரர்கள் அடங்கிய சேனைகளை தோற்கடிக்க முடிந்தது. இறுதியில் மானவர்மன் இராச சிங்கன் என்ற பாண்டிய அரசன் இலங்கைக்கு ஓடிவந்து தனது முடியையும் அரச அணிகளையும் 3 ஆம் உதயன் (கி. பி. 945—952) என்ற அரசனிடம் அடைக்கலமாக ஒப்புக்கொடுத்தான். சோழர் அவைகளை திருப்பி கொடுத்துவிடும்படி வற்புறுத்தியும் அவன் கொடுக்க இசையவில்லை.

சோழர் இச்செயலால் மிகச் சினங்கொண்டனர். இலங்கை பாண்டியருக்கு உதவி புரிந்ததும் உதயன் பாண்டிய அரச சின்னங்களை சோழருக்கு கொடுக்க மறுத்ததும் இலங்கைமீது சோழர் பகை கொள்ள காரணமாயின. இக்காரணங்களால் சோழப் பேரரசர் இலங்கையைக் கைப்பற்றத் துணிந்தனர். கி. பி. 949 இல் 1 ஆம் பராந்தகச் சோழன் இலங்கையைத் தாக்கினான். அவனைப் பின்தொடர்ந்துவந்த அரசர்களும் இலங்கையுடன் போர் செய்துவந்தார்கள்.

1014 இல் இராச இராசன் இராச இரட்டையை வெற்றி கொண்டான். 1017 இல் அவன் மகன் 1 ஆம் இராசேந்திரன் இலங்கை முழுதையும் வெற்றி கொண்டான். இலங்கை தனது சரித்திரத்தில் முதன் முறையாக அந்நியர் ஆட்சிக்குட்பட்டது; கி. பி. 1070 வரை இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

பயிற்சி IV

1. கி. பி. 6 ஆம் நூற்றாண்டின்பின் இலங்கையில் எவ்வகையான யுத்தங்கள் நிகழ்ந்தன?
2. தோல்வி அடைந்த தமிழர்கள் என்ன செய்தார்கள்?
3. தென் இந்தியாவிலிருந்து படைகளைக் கொண்டுவந்த சில அரசர்களின் டெயர்கள் தருக.
4. தென் இந்தியப் போர் வீரர்கள் இந்தியாவுக்கு மீண்டார்களா?
5. அவர்கள் இலங்கையில் என்ன செய்தார்கள்?
6. தென் இந்தியப் பேரரசர் இலங்கையை முற்றுகையிட்ட போது இவர்கள் எக்கட்சியில் சேர்ந்தார்கள்?
7. கி. பி. 600 முதல் 900 வரை தென் இந்தியாவில் அரசியல் ஆதிக்கத்திற்காக சண்டை செய்த சாதிகள் எவை?
8. 8 ஆம் நூற்றாண்டின் இறுதியின்பின் எச்சாதியினர் வெற்றி பெற்றார்கள்?
9. கி. பி. 835 இல் இலங்கைக்கு படையெடுத்து வந்தவன் யார்? இலங்கை அரசன் என்ன செய்தான்?
10. 2 ஆம் சேனன் பாண்டியப் பேரரசின் புரட்சிக்கு ஏன் உதவி செய்தான்?
11. கி. பி. 900 ஆண்டளவில் தென் இந்தியாவில் பலம்பெற்று வந்த சாதி எது?
12. சோழர் பாண்டியரைத் தாக்கியபோது இலங்கை யாருக்கு உதவி செய்தது?
13. சோழர் இலங்கையை முற்றுகையிட்டதற்கு இரண்டு காரணங்கள் தருக.
14. இலங்கையை முதல் முற்றுகையிட்ட சோழப் பேரரசன் யார்?
15. இராச இரட்டையை வெற்றிகொண்ட சோழனின் பெயர் என்ன?
16. எப்பொழுது எச்சோழனால் இலங்கை முழுதும் வெற்றி கொள்ளப்பட்டது?

அரசியல்முறை

VII ஆம் அத்தியாயத்தில் ஆரியர் இராம ஆட்சிமுறையை இலங்கையில் புகுத்தியதையும் அதன்படி காமினி என்ற கிராமத் தலைவன் கன்சபாவின் உதவியோடு ஆட்சி செய்ததையும் படித்தோம். இவ் அத்தியாய ஆரம்பத்தில் அநுராதபுரம், மாகமம் என்ற இடங்களின் காமினிகள் முறையே அநுராதபுரம், உறுகுணை என்ற நாடுகளுக்கு அரசனை வகையையும் கண்டோம். அநுராதபுரக் காலத்தில் இராச இரட்டையின் அரசாங்க முறையை இப்பொழுது படிப்போம்.

அரசனின் அதிகாரங்கள்

அரசன் தலைநகரில் வசித்தான். அவன் ஓர் அவையினதும் அநேக உத்தியோகத்தினரும் உதவியோடு நாட்டை ஆண்டான். அரசர்கள் தாம் விரும்பியவண்ணம் செய்யமுடியாது. அரசன் சட்டத்தையும், நாட்டின் வழக்கத்தையும் அநுசரித்து நடக்கவேண்டும். அரசன் சட்டத்தை அல்லது வழக்கத்தை மீறியபொழுது மக்கள் அவனுக்கு எதிராக எழுந்தார்கள். மகேசன் காலத்தில் (கி. பி. 274—302) இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு காணப்படுகிறது. மகாவிகாரைப் பிக்குகளுக்கு அரசன் உதவி அளிப்பதே வழக்கமாயிருந்து வந்தது. மகேசன் அபயகிரி விகாரையிலுள்ளார் போதித்த மகாயானக் கொள்கையினால் கவரப்பட்டு மகாவிகாரைப் பிக்குகளை இம்சித்து அபயகிரி விகாரையிலுள்ளார்க்கு உதவி செய்தான். ஜனங்கள் இதனற் கோபங்கொண்டு அரசனுக்கு எதிராகப் புரட்சி செய்தனர். அரசன் இப்புரட்சிக்கு அஞ்சி மகாவிகாரையிலுள்ளாருக்கு உதவி அளிக்க உறுதி கூறினான். அரசன் நாட்டின் சட்டங்களையும் வழக்கங்களையும் மீறி தான் விரும்பியதுபோலச் செய்தல் அவ்வளவு எளிதல்ல என்பதைக் காட்டுவதற்கு இவ்வையான பலசான்றுகள் உண்டு.

அரசனின் கடமைகள்


மக்கள் அரசன் தங்களுக்கு சில கடமைகளைச் செய்யவேண்டுமென்று விரும்பினர்கள். அரசன் வேற்றுநாட்டு எதிரிகளிடமிருந்து மக்களைக் காத்தல் வேண்டும். பஞ்சமும், வியாதியும் மக்களைவாட்டும் உள்நாட்டு எதிரிகளாக கொள்ளப்பட்டன. இவற்றினின்றும் அரசன் மக்களைப் பாதுகாக்கவேண்டும். மக்களை பஞ்சத்தினின்றும் காக்கும் பொருட்டு அரசர் பல குளங்களையும் வெட்டு வாய்க்கால்களையும் அமைத்து விவசாயத்தை வளர்த்தார்கள். நோயினின்றும் காக்க முயற்சிகளும் செய்யப்பட்டன. புத்ததாசன் (கி. பி. 339—368) போன்ற சில அரசர்கள் வைத்தியசாலைகளை நிறுவி நோயாளருக்கு சிகிச்சையும் அளித்தார்கள். அரசர்கள் மதத்திற்கும் ஆதரவு அளிக்க வேண்டும். எனவே அவர்கள் பிக்குகளை ஆதரித்து விகாரைகளையும் தாது கோபங்களையும் கட்டி பௌத்த சங்கத்தார் தம் ஒழுக்க முறைப்படி நடக்கப் பார்த்துக் கொண்டார்கள். இவைகளை எல்லாம் செய்த அரசர்கள் மக்களால் நல்லரசர்களாக கொண்டாடப்பட்டனர்.

அரச உரித்து முறைமை

ஓர் அரசன் இறக்கும்பொழுது அரச உரிமை அவன் தம்பியைச் சாரும். இவ்வாறு அரச உரிமை அரசனிலிருந்து அவன் சகோதரனுக்கு கிடைத்தது. உதாரணமாக தேவனன்பியதிசனைத் தொடர்ந்து உத்தியனும் அவனைத் தொடர்ந்து அவன் சகோதரன் மகாசிவனும் அவனைத் தொடர்ந்து அவன் சகோதரன் சூரத்திசனும் அரசர்கள் ஆனர்கள். அரசனுக்கு தம்பி இல்லாவிட்டால் அரச உரிமை தமையனின் மூத்த மகனுக்கு அல்லது அரசனின் மூத்த மகனுக்கு உரியது. இம்முறைமை பெரும்பாலும் அநுசரிக்கப்பட்டது. ஜனங்களுக்கு இவ் வழக்கம் தெரியுமாதலால் முறைதவறி சிம்மாசனத்தைக் கைப்பற்ற விரும்புவாருக்கு எதிராக அவர்கள் எழுந்து உரித்து உரியவனுக்கே தங்கள் ஆதரவை நல்கினர்கள்.

அரசாட்சி

இராச இரட்டையில் மக்கள் தொகை அதிகரிக்கவும் இராச்சியம் தெற்கே காலுகங்கைவரையும், மத்திய மலைநாடுகளிலும், கிழக்கே மகாவலிகங்கையில் மேற்கு கரைவரையும் பரவியது. இராச்சியத்தை நாலு பெரும் பிரிவுகளாக வகுத்தார்கள். அவை:— தென் நாடு அல்லது தட்சின தேசம், மேற்கு நாடு அல்லது பச்சிம தேசம், வடக்கு நாடு அல்லது உத்தரதேசம், கிழக்கு நாடு அல்லது பாசின தேசம் என நான்காம். இவை நான்கும் தலைநகருக்கு வடக்கும், தெற்கும், கிழக்கும், மேற்கும் இருந்தன. இந்தப் பெரும் பிரிவுகளுக்கு நீதி, பொருள், போர் ஆகியவற்றில் தலைமை அதிகாரம் பெற்ற தேசாதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு பெரும் பிரிவுகளும் பல கிராமங்களையுடையதாயிருந்தன. அவை தனித் தனி காமினிகளால் கன்சபாவின் உதவியோடு ஆளப்பட்டுவந்தன. முழு இராச்சியத்தையும் அரசன் தனது அவை பிரதான உத்தியோகத்தர்கள் நல்கிய உதவியோடு அரசாண்டான். அரச பட்டத்திற்கு உரியவன் வழக்கமாக தட்சின தேசாதிபதியாய் அரனல் நியமிக்கப் பட்டான். அரச பட்டத்திற்குரியவன் மாயா அல்லது மகாயா எனப் பட்டான். அவன் ஆண்டபிரதேசம் மாய இரட்டை எனப்பட்டது.




கிராமாட்சி முறை

முழு இராச்சியமும் பல கிராமங்கள் சேர்ந்த ஒரு தொகுதியாக விளங்கிற்று. கிராமங்கள் காமினிகளால் கன்சபாக்களின் உதவியோடு ஆளப்பட்டன. கிராமத்திலுள்ள சகல முதியவர்களும் கன்சபாவில் அங்கம்வகித்து தகுதியான ஒருவனை காமினியாகத் தெரிவுசெய்தனர். அவர்கள் கிராமத்தில் சட்டங்களையும், ஒழுங்கையும் பாதுகாத்ததுமன்றி கிராமத்தில் நடைபெறும் சிறு தகராறுகளைத் தீர்த்து சிறு குற்ற வழக்குகளையும் விசாரணை செய்தனர். அவர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாய வேலைகளை ஒழுங்கு செய்தனர். அவர்கள் அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறையை சேகரித்து அரசனுடைய உத்தியோகத்தர்கள் அதைத் தண்டவரும்போது கொடுப்பதற்கு ஆயத்தமாயிருப்பார். அவர்கள் குற்றச்செயல் புரிவோரை சிறைசெய்து அரச நீதிபதிகள் விளக்கத்திற்கு வரும்போது ஒப்புவிக்கவேண்டும்; இது செய்யப்படாவிடின் முழுக்கிராமமும் தண்டனைக்குள்ளாகும். இவை யாவும் முக்கிய கருமங்கள் ஆனபடியால் கன்சபா அரசாங்கத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது.

சட்டங்கள், விசாரணைகள், தண்டனைகள்

இன்று இருப்பதுபோல சட்டங்களை வகுக்கும் பாளிமேந்து அக்காலத்தில் இருக்கவில்லை. சட்டங்களின் பெரும்பாலானவை பண்டைய வழக்கங்களாம். பல நூற்றுண்டுகளாக அனுசரிக்கப்பட்ட இவ்வழக்கங்களை மீறுதல் கடுமையான தண்டனைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. சிலவேளைகளில் அரசர் புதிய கட்டளைகளைப் பிறப்பிப்



இராச இரட்டையின் பெரும்பிரிவுகளைக் குறிக்கும் இலங்கைப் படம்

பதுமுண்டு. உதாரணமாக துட்டகாமினி றுவான் வலிசயாவை கட்ட ஆயத்தம் செய்தபோது எல்லா வேலையும் சம்பளம் கொடுத்தே செய்யப்படவேண்டுமென ஒரு கட்டளை பிறப்பித்தான். மகேசன் அரசனபோது மகாவிகாரையிலுள்ளாருக்கு உதவி செய்யக்கூடாதென்று தடை பிறப்பித்தான்.

பழைய வழக்கங்களையும் மரபு முறைகளையும் மீறுதல், மக்களுக்கு இடையே உண்டாகுஞ் சச்சரவு ஆகிய எல்லா வழக்குகளையும், கன்சபா அல்லது தேசாதிபதியின் நீதிமன்றம் விளக்கின. கொலை, அரசாங்கத்திற்கு எதிரான சதி முதலான பெருங் குற்றங்கள் அரசனுல் அல்லது அரச நீதிபதிகளால் விளங்கப்பட்டன. இவற்றிற்கு விதிக்கப்படும் தண்டனைகள் மிகவும் கடுமையானவை. கொலை, சதி, ஆடு மாடுகளைக் கொல்லல், கொள்ளை முதலிய குற்றங்களுக்குத் தண்டனை மரணமாகும். ஆடு மாடுகளைக் களவு செய்பவன் நெருப்புக் கோலால் சூடப்பட்டான். மாட்டின்மீதுள்ள குறியை மாற்ற முயல்பவன் பழுக்கக் காய்ச்சிய இரும்பு மிதிஅடிகளில் நிற்பாட்டப் பட்டான். சிலவேளைகளில் கிராமத்திலுள்ள ஒருவன் செய்த குற்றத்திற்காக முழுக்கிராமமும் தண்டிக்கப்படுவதுண்டு.

சேனை

பண்டைய சிங்கள அரசர்களின் சேனைகள் வேதனம் பெற்ற போர் வீரர்களை உடையதாயிருந்தது. போர் வீரர்களுக்கு நிலம் வேதனமாய் அளிக்கப்பட்டது. பண்டைய தமிழர் படையெழுச்சிகளுக்குப் பின்னும் உள்நாட்டுப் போர்களில் சில சிங்கள அரசர்கள் தென் இந்தியத் தமிழ் போர் வீரர்களை போர்செய்யக் கொண்டு வந்ததிலிருந்தும், தமிழ்ப் போர் வீரர்கள் சிங்கள அரசர்களின் சேனைகளில் சேர்க்கப்பட்டார்கள். அவர்கட்கும் நிலங்கள் வேதனமாய் அளிக்கப்பட்டது. திறமைமிகுந்த போர் வீரர்கள் அரசனின் மெய்க் காப்பாளராகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். மாந்தைபோன்ற துறை முகங்களிலும், பொல்லநறுவைபோன்ற எல்லைப்பகுதிகளிலும் போர் வீரர்கள் காவலாக நிறுத்தப்பட்டனர். பட்டாளத் தலைவன் சேனாதிபதி எனப்பட்டான். இவன் பெரும்பாலும் அரசனின் உறவினர்களில் ஒருவனுயிருந்தான். சேனபதிக்கு சேனையில் ஆதரவு இருந்தமையால் அவன் பிரதான உத்தியோகத்தர்களின் ஒருவனுய் விளங்கி சிலவேளைகளில் அரசனை எதிர்க்கக்கூடியதாயுமிருந்தது. காசியப்பன் தன் சேனபதியின் உதவியோடு தாதுசேனனை வீழ்த்தியதை முன்னர் கண்டோம்.

அரசாங்க வருமானம்

நிலம்முழுவதும் அரசனுக்குச் சொந்தமாயிருந்தது. அவன் தனது உத்தியோகத்தரான சேனபதி, தேசாதிபதி, நீதிபதி முதலா

னவருக்கு நிலங்களை வேதனமாக அளித்தான். இந்நிலங்களிலிருந்து கிடைக்கும் வரும்படி அவ்வவ் உத்தியோகத்தர்களுக்கே உரியது. அரசன் நிலத்தின் சொந்தக்காரனுய் இருந்தபடியால் மக்கள் ஒருவகையில் அரசனின் வாரங்களாய் இருந்தார்கள். எனவே அவர்கள் நிலத்தை உபயோகிப்பதற்காக வரி கொடுக்கவேண்டும். அவர்கள் நிலத்தில் விளையும் ஒரு பகுதியை அரசனுக்கு கொடுப்பதால் அல்லது சில நாட்கள் அரசனுக்கு வேலை செய்வதால் நில வரி கொடுத்தவர்களாவர். இதைவிட விளைபொருட்களின்மேல் தானிய வரி என்ற ஒரு வரியும் வசூலிக்கப்பட்டது. பெரிய நீர்ப் பாசனங்களில் தண்ணீர் பெறுவோர் நீர் வரி கட்டினர்கள். நாட்டின் உள்ளேவரும் பொருள்களுக்கும் வெளியேபோகும் பொருள்களுக்கும் தீர்வை இடப்பட்டது. வரிகளைக் கட்டத் தவறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

வேறு தாபனங்கள்

தல அரசாங்கமுறையான கிராம ஆட்சிமுறையைப்பற்றி நாம் முன்னர் படித்தோம். வேறு இரு முக்கிய தாபனங்களும் இருந்தன. சில நுண்ணிய வினைகளைச் செய்யும் மக்கள் ஒரு கூட்டத்தை அமைத்தனர். இவ்வகையான கூட்டங்கள் ஆங்கிலத்தில் 'கில்ட்' எனப்படும். இக்கூட்டங்கள் தங்கள் அங்கத்தவர்களைப் பாதுகாக்க வேண்டும். புறத்தியார் இவ்வினைகளைக் கைப்பற்றுவண்ணம் விழிப்பாய் இருப்பதுடன் தங்கள் அங்கத்தினர்களில் பலவீனர், வயோதிபர், நோயாளிகள் ஆகியவர்களைப் பராமரிக்கவும் வேண்டும்.

அநுராதபுரத்தில் பல விகாரைகள் இருந்தன. விகாரையிலுள்ள துறவிகள் உடன் பிறந்தார்போன்று ஒரு சபையாகி, விகாரையின் அலுவல்களை நடத்தினர்கள். துறவிகளுக்கு இடையே ஏற்படும் தகராறுகளைத் துறவிகளின் மா சபை தீர்த்து வைப்பதுமல்லாமல் துறவிகள் சங்க விதிகளுக்கு அடங்கி நடப்பதையும் கண்காணிக்கும். மா சபையின் தீர்ப்புக்கு இணங்க மறுக்கும் துறவிகளை அரசனின் உதவியோடு மா சபை கீழ்ப்படியச் செய்யும்.

இத்தாபனங்கள் அரசாங்கத்திற்கு உதவி புரிந்தன. அவைகள் தங்கள் அங்கத்தவர்கள் அரசனின் சட்டங்களுக்கு அமையும்படி செய்ததுடன் சட்டங்களை மீறியவருக்கு தண்டனையும் விதித்தனர்.

மத்திய அரசாங்கம்

அரசன் முழு தேசத்தின்மீது எத்துணை அதிகாரம் உடையவனுய் இருந்தான் என்பதை இங்கு ஆராய்வோம். அரசன் தனது சேனையின் உதவியோடு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினன். ஆனல் அக்காலத்து தகுதியான தெருக்களும், போக்குவரத்துச் சாதனங்களும் அஞ்சல் வசதிகளும் இல்லை. இன்று இலங்கையின்

தூரமான ஓர் இடத்தில் ஏதாவதொரு கலகம் நிகழுமானால் சில வினாடிகளில் கொழும்பிலுள்ள மத்திய அரசாங்கம் அதனை அறியக் கூடியதாயிருக்கிறது. உடனுக்குடனே அதைத் தடுப்பதற்கேற்ற நடவடிக்கைகளையும் எடுக்கக்கூடியதாயிருக்கிறது. பண்டைய இலங்கையில் இவ்வாறு செய்தல் அரிது. தகுதியான தெருக்களும் அஞ்சல் வசதிகளும் கிடையா. ஏனவே தூர இடங்களில் நடக்கும் ஒரு தகராறைப்பற்றிய செய்தி தலைநகரை அடைய பல நாட்கள் சென்றன. எனவே தலைநகரிலிருந்து தூரமான இடங்களில் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு அத்துணை பலமுடையதல்ல. அவைகள் நிறைந்த சுயாதீன முடையனவாய் விளங்கின. எனினும் அரசன் தனது சேனை, தேசாதிபதிகள், நீதிபதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் உதவியோடு முழுநாட்டையும் கட்டுப்படுத்தி நிருவகித்து வந்தான்.

பயிற்சி V

1. எவர் உதவியோடு அரசன் நாட்டை ஆண்டான்?
2. அரசர் தங்கள் இஷ்டம்போல் செய்ய முடியுமா?
3. அரசன் பண்டைய வழக்கங்களையும், பரபுமுறைகளையும் மீறும் போது என்ன நிகழ்ந்தது?
4. அரசன் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் யாவை?
5. (a) முற்றுகைகள் (b) பஞ்சம் (c) நோய் இவைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க அரசன் என்ன செய்தான்?
6. அரசன் மதத்தை எவ்வகையில் ஆதரித்து வந்தான்?
7. பண்டைய இலங்கையில் அரசு உரித்துமுறை எவ்வாறு இருந்தது என்பதை விளக்குக.
8. இராச இரட்டையின் பிரதான பிரிவுகளின் பெயர்களைத் தருக.
9. கன்சபாவின் அங்கத்தவர் யாவர்?
10. கன்சபா ஆற்றிய வேலைகள் யாவை?
11. பண்டைய இலங்கையில் பூர்வ வழக்கம் அரசர் ஆணை என்ற இரு சட்டங்கள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் தருக.
12. சிறு வழக்குகளை யார் தீர்த்தனர்? பெரு வழக்குகளைத் தீர்த்தவர் யார்?
13. பண்டைய இலங்கையில் கொடுக்கப்பட்ட சில தண்டனைகட்கு உதாரணங்கள் தருக.
14. ஏன் சேனுபதி அரசனை எதிர்க்கக்கூடியதாயிருந்தது?
15. உத்தியோகத்தர்களுக்கு வேதனம் எவ்வாறு அளிக்கப்பட்டது?

16. மக்கள் நிலங்களின் உபயோகத்தின்பொருட்டு அரசனுக்கு என்ன செய்தார்கள்?
17. வினைஞர் சங்கங்களின் வேலைகள் யாவை?
18. விகாரைகளின் ஆட்சி முறையை விபரி.
19. ஆச்சிரமங்களுக்கு உரிய நிலங்களை யார் உறுதிசெய்தனர்?
20. மத்திய அரசாங்கம் ஏன் பலம் குறைந்து இருந்தது?

நீர்ப்பாசனமும் விவசாயமும்
நீர்ப்பாசன வேலைகளின் அவசியம்

ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது பெரும்பாலும் ஆடு மாடு மேய்ப்போராயிருந்தனர்; அவர்கள் கி. மு. 500இல் இலங்கைக்கு வந்தபோது விவசாயத்தை நன்கு அறிந்த விவசாயிகளாய் மாறியிருந்தனர். விவசாயம் அவர்களுடைய முக்கிய வேலையாய் இருந்தது. அவர்கள் இலங்கைக்கு வந்தபோது காடுகள் அடர்ந்த மலைச் செறிவான மழையதிகம் உள்ள ஈரலிப்புப் பிரதேசங்களைவிடுத்து, தட்டையான உஷ்ணப் பிரதேசங்களில் குடியேறினர்கள். (148-149-ம் பக்கங்களில் உள்ள படங்கள் பார்க்கவும்). அவர்கள் ஆற்றோரங்களில் குடியேறி முக்கிய உணவுப்பொருளாகிய நெல்லைச் செய்கை செய்தார்கள்.

ஆரியர் தாம் குடியேறிய பிரதான பகுதியில் நான்கு மாத மழைதான் உண்டென்பதை விரைவில் உணர்ந்தார்கள். மழை செப்டம்பர் மாதம் தொடங்கி ஜனவரியில் முடியும். பெபிரவரி, மார்ச்சு மாதங்கள் வரட்சியானவை. ஏப்பிரலில் இடியுடன் பெரும் காற்று வீசியது. மே முதல் ஆகஸ்டு ஈறுக பெருவரட்சி நிலவியது. ஈரலிப்பான பருவத்தில் நிலம் பண்படுத்தப்பட்டு விதைக்கப்படும். பெபிரவரி மாதம் அறுவடை செய்யப்படும். மழையில்லாததால் எஞ்சிய காலத்தில் நெல் செய்கைபண்ண முடியவில்லை. ஆரம்பத்தில் மக்களின் தொகை குறைவாயிருந்ததால் ஒரு விளைவு வருடம் முழுவதுக்கும் போதியதாயிருந்தது. சில காலங்களில் ஈரலிப்புப் பருவத்திலும் மழையின்மை காரணமாக நெற்செய்கை பழுதடைந்து பஞ்சம் உண்டானது. குடிசனம் அதிகரித்தமையாலும் மழை உரிய காலத்தில் அடிக்கடி பொய்த்தாலும் இன்னுமொரு செய்கை வேண்டியதாயிற்று. இரண்டாம் செய்கைக்கு வேண்டிய நீரை எங்கிருந்து பெறுவது?

பண்டைய குடிகள், செப்டம்பர்—ஜனவரியில் பெய்கின்ற மழை நீர் முழுவதையும் தாங்கள் தகுந்தவாறு பயன்படுத்தவில்லை என்பதை உணர்ந்தார்கள். மேலதிகமான நீரைச் சேகரித்து இரண்டாம்


முறையும் நெற் செய்கை செய்யத் தீர்மானித்தார்கள். நிலத்தின் இயற்கை நிலை இவ்வாறு நீரைச் சேகரிக்க உவப்பாய் இருந்தது. நிலம் பெரும்பாலும் தட்டையாக இருந்தது; ஆனால் அண்மையில் உயர்ந்த நிலம் மலைக்குன்றுகட்கு இடையில் அமைந்து இருந்ததால், இரு குன்றுகளை வரம்பால் ஒரு குள வடிவாய் அமைத்துவிடுவர். ஆறுகள் மலைகளின் வழியே பள்ளத்தில்விழும்; இவ்வாறு குளங்கள் அமைக்கப்பட்டன. வரம்பின் வழியாக நீர் வெளியேற கல்லினால் அல்லது செங்கல்லினால் ஒரு வாய்க்கால் அமைக்கப்படும். இவ்வாறு சேமிக்கப்பட்ட நீர், மே—ஆகஸ்ட் மாதங்களில் இன்னெரு நெற் செய்கைக்கு பயன்படுத்தப்பட்டது. ஆவணி மாதம் அறுவடை செய்யப்பட்டது. இவ்வாறு பண்டைய சிங்களவர் இருபோக விளைவைப் பெற்றார்கள். மழையினால் செய்யப்படும் நெற் செய்கை மகாபோகம் அல்லது கால போகம் என்றும், குளத்து நீரால் செய்யப்படும் நெற்செய்கை யாலபோகம் அல்லது சிறு போகம் என்றும் வழங்கப்பட்டன. உறுகுணையில் குடியேறியவர்களின் நிலைமை அத்துணை கஷ்டமானதல்ல. அவர்களும் உஷ்ண வலயத்திலேயே குடியேறினர்கள். ஆனால் 194ஆம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்தால் இப்பகுதிகளிலுள்ள ஆறுகள் மத்தியிலுள்ள மலைகளிலும் மழைப்பிரதேசத்திலும் உற்பத்தியாவதைக் காணலாம். இது இயல்பாகவே போதிய தண்ணீரை அளிக்கக்கூடியதாய் இருந்தது.

அரசர்களின் ஆதரவு:- அநுராதபுரக் காலத்தில் சகல பெரிய நீர்ப்பாசன வேலைகளும் அரசர்களாலேயே செய்யப்பட்டன. மக்களை பஞ்சத்தினின்றும் காப்பது அரசர்களின் கடமை. மேலும் அரசர் குளங்களை அமைத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு தானிய வரி, நீர்வரி என இரு வரிகள் இருந்தன. வயலில் விளையும் நெல்லில் ஒரு பகுதியை அரசனுக்கு செலுத்தவேண்டும் குளத்து நீரை உபயோகிப்பவர் நீர்வரியும் இறுக்கவேண்டும். எனவே அரசர் எவ்வளவுக்கு அதிகமாக குளங்களைக் கட்டுகிறார்களோ அவ்வளவுக்கு அரசாங்க வருமானமும் அதிகரிக்கக்கூடியதாயிருந்தது.

குளங்களும் குளங்களைக் கட்டியோரும்

(a) மல்வத்துஓயாவில்

மல்வத்துஓயாவில் கட்டிய புராதன குளங்கள் அநுராதபுரத்தைச் சூழஉள்ளன. அபயவீவாவை பந்துகாபயன் (கி. பி. 377—307) கட்டினன். திசவீவா தேவனன்பியதீசனாலும், துவரவீவா வாலகம்பாவாலும், எருவீவா வசபனாலும் (கி. பி. 67—111) கட்டப்பட்டன. வசபா 11 குளங்களையும், 12 வெட்டுவாய்க்கால்களையும் அமைத்தானென்றும் தெத்துதீசன் 6 குளங்களைக் கட்டினன் என்றும் சொல்லப்படுகிறது.



மல்வத்துஓயா, கல்ஓயா, மகாவலிகங்கை ஆகியவற்றின் நீர்ப்பாசன வேலைகளைக் காட்டும் படம்.

(b) மகாவலிகங்கை

இராச இரட்டையில் குடிசனம் பெருகவும் ஜனங்கள் மகாவலி கங்கையை நோக்கிப் பரந்து குடியேறினர்கள். மகேசன் 2ஆம் அக் போ முதலாம் மன்னர்கள் இப்பிரதேசங்களில் குளங்களை அமைத் தார்கள். மகேசன் 16 குளங்களைக்கட்டினன் என்று மகாவம்சம் கூறுகிறது. இவற்றுள் கட்டுலுவீவா, மின்னேரியா ஆகிய மூன்றும் பிரதானமானவை, மின்னேரியாவில் நீர் நிறைந்து இருக்கும்போது 4560 ஏக்கர் விஸ்தீ ரணத்தில் நீர் உண்டு. மகாவலி கங்கையின் கிளைநதியாகிய அம்பன் கங்கையிலிருந்து வெட்டப்பட்டுள்ள ஏலாகர வாய்க்காலின் வழியாக இக்குளம் மேலும் அதிக நீரைப் பெறுகின்றது. கிரித்தலை, கந்த ளாய் ஆகிய குளங்கள் 2ஆம் அக்போவினால் (கி. பி. 601, 611)கட்டப் பட்டன.


(c) காலவீவாவும் யோத எலாவும்

அநுராதபுரத்தில் பல குளங்கள் கட்டப்பட்டபோதிலும் குறைந் தது நாலு பஞ்சமாவது ஏற்பட்டு மக்கள் அதிக இன்னல்களுக்கும் இடும்பைகளுக்கும் ஆளானார்கள். உள்நாட்டுப் போர்களின் பயனாக நீர்ப்பாசனமும் விவசாயமும் தகுந்தவாறு கவனிக்கப்படாமல் இரு பஞ்சங்கள் உண்டாயின. ஏனைய பஞ்சங்கள் கொடிய வரட்சியால் ஏற்பட்டன. மழையின்மை சில காலங்களில் அடிக்கடி உண்டாயின. அதனால் சில பகுதிகள் கால மழையைப் பெறவில்லை. தாதுசேனன் (கி. பி. 460—478) இக்குறையை நீக்க முயன்றான். மாத்தளைப் பகு தியில் நல்ல மழை உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான். மாத்தளைக் குன்றுகளின் அடிவாரத்தில் காலவீவா என்ற குளத்தைக் கட்டினன். இக்குளத்தின் அணை காலஓயா என்ற ஆற்றின் ஊடா கச் செல்வதால் இதற்கு காலவீவா எனப் பெயர் வந்தது. மாத் தளைக் குன்றுகளில் பெய்யும் மழை நீர் முழுதும் இக்குளத்தில் சேகரிக்கப்பட்டு 55 மைல் நீளமான வெட்டுவாய்க்கால் வழியாக அநு ராதபுரத்திலுள்ள திசவீவாவுக்கு கொண்டுவரப்பட்டது. இத்தணை காலமும் வெட்டப்பட்ட வெட்டுவாய்க்கால்களில் இது மிகவும் பெரிதா னபடியால் இராட்சத வெட்டுவாய்க்கால் என்ற கருத்துடைய யோத எலா எனப் பெயர் பெற்றது. தாதுசேனனுடைய இந்நீர்ப்பாசனத் திட்டத்தினால் தண்ணீர் மழைப் பிரதேசத்திலிருந்து வரட்சிப் பிர தேசத்திலுள்ள குளங்களுக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வாறு அநு ராதபுரப் பகுதியிலுள்ள குளங்களுக்கு போதிய தண்ணீர் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அநுராதபுரக் காலத்தின் பிற்பகுதியில் மல்வத்துஓயா, விழும் பகுதிக்குக்கிட்ட இரண்டு குளங்கள் கட்டப்பட்டன. அவை கட்டுக்கரைக் குளம் அல்லது இராட்சதக் குளம், அகத்தி முறிப்புக்குளம் என்ற இரண்டுமாம்.

நீர்ப்பாசன வேலைகளின் மூன்று படிகள் (223-ம் பக்கம் பார்க்கவும்)

மகாவலிகங்கை கலவீவாவும் யோதஎலாவும் மல்வத்துஓயா



(d) இவ்வேலைக்கு வேண்டிய தொழிலாளிகள்

இந்நீர்ப்பாசன வேலைகளை அமைத்தற்கு வேண்டிய தொழிலாளர்களைப் பெறுதல் அரசனுக்கு அத்துணை அரிதாய் இருக்கவில்லை. முழுநிலத்துக்குஞ் சொந்தக்காரன் அரசன் என்று முன்னர் கண்டோம். இந்நிலத்தைப் பயன்படுத்தும் மக்கள் வரி இறுக்க வேண்டும் அல்லது அரசன் பொருட்டு சில வேலைகளைச் செய்யவேண்டும். மக்கள் அரசனுக்கு செய்யவேண்டிய வேலை குளங்கள், வெட்டுவாய்க்கால்களை அமைத்தலில் துணைபுரிதலும் ஒன்றாகும். இப்பணியை அரசன் பொருட்டு செய்வது மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கவில்லை. அவர்கள் தங்கள் நிலங்களைப் பண்படுத்தி விதை விதைத்தபின், அறுவடைமட்டும் ஓய்வாக இருந்தார்கள். அறுவடைக்கும் மறு விதைப்புக்கும் இடையிலும் சில காலம் ஓய்வு இருந்தது. இவ்ஓய்வு காலங்களில் அரசனுக்குப் பணியாற்ற அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

இந்நீர்ப்பாசன வேலைகள் விவசாயத்திற்கு வேண்டிய போதிய நீரை அளித்ததால் மக்கள் தங்களுக்குப் போதுமான நெல்லை பெறக் கூடியதாயிருந்தது. விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் விருத்தி செய்த அரசர்கள் மக்களால் நன்றிஅறிதலுடன் கொண்டாடப்பட்டனர். 16 குளங்களையும் ஒரு வெட்டுவாய்க்காலையும் அமைத்த மகேசன் மகாவிகாரைப் பிக்குகளை இம்சித்தபோது அவனை எதிர்த்த ஜனங்கள் தாமே அவன் இறந்தபோது மின்னேரியாவுக்கு அருகில் ஒரு தேவாலயம் சமைத்து கடவுளாக வணங்கினர்கள். இது விவசாயத்தை விருத்திசெய்த அரசர்மேல் பக்கள் காட்டிய நன்றியை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டுகிறது.

வர்த்தகம்

பண்டுதொட்டே இரத்தினக் கற்கள், முத்து, வாசனைத் திரவியங்கள் ஆகியன இங்கிருந்து தென்இந்தியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. வணிகர்கள் மேற்கிலும் கிழக்கிலுமிருந்து இத்துறைமுகங்களுக்கு வந்து இப்பொருட்களையும் வேறுபொருட்களையும் வாங்கிச் சென்றுர்கள். கி. பி. 2 ஆம் நூற்றுண்டுக்குப்பின் இவ்வர்த்தகர்களில் சிலர் இலங்கைக்கு நேரே வந்தார்கள். அநுராதபுரத்தில் பாரசீகச் சிலுவை பொறிக்கப்பட்ட கற்பலகை ஒன்று காணப்பட்டது. இது பாரசீக வர்த்தகர்கள் அநுராதபுர நகரத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றாக இருக்கிறது. 7 ஆம். நூற்றுண்டில். அராபிய வர்த்தகர்கள் இலங்கைக்கு வரத்துவங்கினர்கள் போர்த்துக்கியர் வரும்வரையும் இவர்கள் கையிலேயே இலங்கையின் வர்த்தகம் இருந்தது.

பயிற்சி V

சுருக்கமான விடைதருக:

1. இராசஇரட்டையின் பூர்வக் குடிகள் எக்காரணத்தினல் ஒரே ஒரு முறைநாள் நெல் விளைவித்தார்கள்?

2. இருமுறை நெல் விளைவிக்க ஏற்பட்ட அவசியத்தை ஆராய்க.
3. இரண்டாம் நெல் விளைவுக்கு வேண்டிய நீரை மக்கள் எப்படிப் பெற்றார்கள்?
4. நிலங்களின் இயற்கை அமைப்பு குளங்களை அமைக்க எவ்வாறு உதவியது?
5. பூர்வ குளங்கள் எங்கே கட்டப்பட்டன? குளங்களின் பெயர்களைத் தருக.
6. பிற்கால அரசர்கள் மகாவலிகங்கைப் பிரதேசத்தில் குளங்களை ஏன் கட்டினர்கள்? குளங்களின் பெயர்களைத் தருக.
7. அநுராதபுரப் பிரதேசத்தில் உள்ள நீரை தாதுசேனன் எவ்வாறு அதிகரித்தான்?
8. மல்வத்துஓயா விழுகின்ற இடத்தில் கட்டப்பட்ட குளங்களின் பெயர்கள் என்ன?
9. குளங்களை அமைக்க தொழிலாளர்களை அரசர்கள் எவ்வாறு பெற்றார்கள்?
10. குளங்களை அமைத்த மகேசன் அரசனுக்கு மக்கள் எவ்வாறு நன்றி காட்டினர்கள்?

9-ம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. இராச இரட்டையிலும் உறுகுணையிலும் அரசர்கள் உண்டான முறையை சுருக்கமாக விளக்குக. இலங்கையில் இரண்டு தனி இராச்சியங்கள் வளர துணை செய்த பூமிசாஸ்திர அம்சங்களை ஆராய்க.
2. தென் இந்தியர்களின் இலங்கைப் பூர்வ படை எழுச்சிகளை சுருக்கமாக விபரிக்குக.
3. இலம்பகர்ணருக்கும் மோரியருக்கும் இடையில் நிலவிய தகராற்றை சுருக்கமாகக் கூறுக.
4. சோழப் பேரரசர்கள் இலங்கையை வெற்றிகொள்ள ஏன் தீர்மானித்தார்கள்? எப்பொழுது எந்த அரசன் இலங்கை முழுவதையும் வெற்றி கொண்டான்?
5. பின்வரும் தலைப்புகளில் இலங்கையின் பூர்வகால மத்திய அரசாங்க முறைகளை சுருக்கமாக ஆராய்க:- (a) இராசரிகம் —கடமைகள், அதிகாரங்கள், உரித்து முறைமை (b) தேசத்தின் பிரிவுகள் (c) சட்டங்கள், விசாரணைகள், தண்டனைகள் (d) அரசாங்க வருமானம்.

6. பின்வரும் தலைப்புகளில் இலங்கையில் பூர்வ தல ஆட்சி முறைகளைச் சுருக்கமாக ஆராய்க:- (a)கன்சபா (b) வினைஞர் சங்கங்கள் (c) பௌத்த சங்கம் (d) மத்திய அரசாங்கம் ஏன் பலமற்று இருந்தது?

7. நீர்ப்பாசன வேலைகளின் அவசியத்தை ஆராய்க:-

8. முதற் குளங்கள் எங்கே கட்டப்பட்டன? மகாவலி கங்கைப் பிரதேசத்தில் ஏன் யாரால் குளங்கள் கட்டப்பட்டன? தாது சேனன் காலவீவாவை கட்டிய காரணத்தை விளக்குக.

9. அரசர்கள் நீர்ப்பாசன வேலைகளை ஏன் செய்தார்கள்? அவற்றிற்கு வேண்டிய தொழிலாளரை எப்படிப் பெற்றார்கள்?

10. இலங்கைப் புற உருவப்படம் ஒன்றில் மல்வத்துஓயா, மகாவலி கங்கை, காலஓயா பிரதேசங்களிலுள்ள குளங்களையும் வெட்டு வாய்க்கால்களையும் குறிப்பிடுக.

10-ம் அத்தியாயம்

மகாயானக் கொள்கை; இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றுப் பரம்புதல்

1. மகாயானப் பௌத்தம் (a) கனிஷ்காவின் மாசபை (b) மகாயான, ஈனயான பௌத்தம்
2. இந்துமத மறுமலர்ச்சி (a) குப்தப் பேரரசு (b) குப்த நாகரிகம்
3. தென் இந்தியாவில் இந்துமத வளர்ச்சி (a) சங்கச் செய்யுள்கள் (b) பல்லவ பாண்டிய தகராறுகள் (c) பல்லவர்களும் இலங்கையும் (d) பாண்டியரும் இலங்கையும் (e) பல்லவ நாகரிகம்

ஆரம்பம்

VI-ம் அத்தியாயத்தில் பௌத்த மதம் இந்தியாவில் உண்டானதையும் அது இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பரம்பியதையும் படித்தோம். இந்த அத்தியாயத்தில் பௌத்தத்தின் ஒரு பிரிவான மகாயானக் கொள்கையையும் அது தேரவாதக் கொள்கையிலும் எவ்வாறு வேறுபட்டது என்பதை ஆராய்வோம். அதன்பின்பு இந்து மதம் குப்தப் பேரரசர்களால் மறுமலர்ச்சி செய்யப்பட்டதையும் பல்லவ அரசர்கள் தென் இந்தியாவில் அதைப் பரப்பியதையும் படிப்போம். மகாயானக் கொள்கையை போதிக்கும் மத நூல்களும் இந்துமத நூல்களும் சங்கத (சமஸ்கிருத) மொழியில் எழுதப்பட்டு இருந்ததால் இவ்விரு மத வளர்ச்சியும் சங்கத மொழி வளர்ச்சிக்குத் துணையாயின. கித் ஸ்ரீ மேவன் (கி. பி. 302—330) முதலான இலங்கை அரசர்கள் குப்த மன்னர்களுடன் தொடர்பு பூண்டு இருந்தனர். மானவம்மன் (கி. பி. 676—711) முதலாம் இலங்கை மன்னர் பல்லவருடன் உறவு கொண்டு இருந்தனர். இக்காரணங்களால் இலங்கை பல்லவ குப்த நாகரிகங்களின் செல்வாக்கைப் பெற்றது. நாங்கள் இந்த அத்தியாயத்தில் மகாயான பௌத்தம், இந்து மதம், சங்கதம் ஆகிய இலங்கையில் பரவியவகையையும் அவை இத்தீவின் மதம், பண்பாடு ஆகியவற்றை எவ்வாறு பாதித்தன என்பதையும் ஆராய்வோம்.

1. மகாயான பௌத்தம்

(a) கனிஷ்காவின் மாசபை

அசோகனின் மரணத்தின் பின்பு மௌரியப் பேரரசு பலம் குன்றியது. வடமேற்கு கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழையும் ஆக்கிரமிப்பாளரைத் தடுக்க வல்லதொரு இராச்சியம் இந்

தியாவில் இருக்கவில்லை. வடமேற்கு மலைகளிலுள்ள மலைகளின் வழியாக கிரேக்கர், சாகர், பார்த்தியர், குஷனியர் முதலாம் பல சாதியார் வட இந்தியாவில் கூட்டங் கூட்டமாய் புகுந்தார்கள். குஷனியர் பெஷாவாரைத் தலைநகரமாய்க்கொண்டு ஒரு பேரரசை நிறுவினர்கள். குஷனியப் பேரரசர்களில் கனிஷ்கன் மா பெருமை வாய்ந்தவன். இவன் கல்வியை ஊக்கப்படுத்தியதோடு மாமன்னன் அசோகனைப் போல பௌத்தத்தையும் வளர்க்க மிக வாஞ்சித்தான். கி. பி. 120இல் பெஷாவாரில் ஒரு மாபெரும் பௌத்த சபையை கூட்டுவித்தான். அறிஞர்களான பௌத்தர்கள் கூடிய மாசபையில் மகாயான பௌத்தக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

(b) மகாயான, ஈனயான பௌத்தம்

பிராமணியத்தில் உள்ள அநேக கொள்கைகளையும் அநுசரணைகளையும் புத்த பெருமான் கண்டித்தாரென VIஆம் அத்தியாயத்தில் படித்தோம். தேவர்களிலும் அவர்கள் வல்லமைகளிலும் நம்பிக்கை, செபங்கள், சடங்குமுறைகள், வணக்கமுறைகள், பிராமணரின் உயர்ந்த அந்தஸ்து ஆகிய யாவும் பழிக்கப்பட்டு அற ஒழுக்கத்தையே வற்புறுத்தும் ஒரு மதம் புத்தர் பெருமானால் போதிக்கப்பட்டது. கனிஷ்கன் தனது மாபெரும் சபையைக்கூட்டிய அக்கால எல்லைக்குள் இந்தியாவில் ஒரு புதுவகையான பௌத்தம் வளர்ச்சி அடைந்து வந்தது. புத்த பெருமான் கண்டித்த அநேக விஷயங்கள் இதில் அநுசரிக்கப்பட்டன. இதைப் பின்பற்றியவர்கள் தங்கள் கொள்கைகள் அக்காலத்தில் நிலைபெற்ற ஏனைய பௌத்த கொள்கைகளிலும் உயர்ந்த பௌத்தக் கொள்கை என்று வற்புறுத்திக் கூறினர்கள். எனவே இது மகாயான பௌத்தம் எனப்பட்டது. இது கி. மு. 247இல் மகிந்தனால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தேரவாத பௌத்தத்திலும் பலவகைகளில் வேற்றுமையானது.

1. புத்த பெருமான் கடவுளாகப் பாவிக்கப்படுதல்

புத்த பெருமான் தம்மை ஒரு பொழுதும் கடவுள் என்று கூறவில்லை. அவர் தம்மை ஒரு பெரிய ஞானியாகவே கருதினர். மகாயான பௌத்தர் அவரை கடவுளாக மதித்து பூ முதலிய காணிக்கைகளை ஒப்புக்கொடுப்பதமல்லாமல் சிலைகளை வைத்து வணங்கி தங்களுக்கு வேண்டிய வரங்களை அடையலாமென நம்புகிறார்கள்.

2. புத்தரின் நிலையை அடையும் இலக்கு

கௌதமர் ஒவ்வொருவரும் பரிபூரண நிர்வாண நிலையை அடைவதையே தங்கள் இலக்காகக் கொள்ள வேண்டு மென்று போதித்தார். கௌதமர் பரிபூரண நிர்வாண நிலையை எய்தும் தறுவாயிலிருந்தபொழுது மற்ற மனிதர்களுக்கும் நிர்வாண நிலையை

அடையும் வழியைப் படிப்பிப்பதற்கு விருப்பங்கொண்டு இவ்வுலகத்திலே மீண்டும் பிறக்கச் சித்தமானர். இப்பிறப்புக்கு நீண்டகாலஞ் சென்றது. இவ்இடைப்பட்ட காலத்தில் இவர் போதி சத்துவராக விளங்கினர். நீண்டகாலம் போதி சத்துவராகவிருந்து உலகிலே மீண்டும் பிறந்து புத்தர் ஆனர். நிர்வாண நிலையை கை நெகிழ்ந்து புத்தராக முயலுவதே போதி சத்துவ நிலையாகும்.

இந்தப் புதுவகையான பௌத்த மத ஆசிரியர்கள் எவரும் கௌதமர் செய்ததை தாங்களும் செய்தல் கூடுமென கூறு நிற்கின்றனர். அஃதாவது நிர்வாண நிலையை அடையும் தருவாயிலுள்ள ஒருவன் உலகில் பிறந்து போதிசத்துவன் ஆகலாம். அவர்கள் இவ்இலக்கு நிர்வாண நிலையை எய்துவதிலும் உயர்ந்தது எனக்கொள்கிறார்கள். அதனால் இப்பௌத்தத்தை மகாயானம் என்று கூறுகின்றார்கள். உயர்ந்த இலட்சியத்தை உடைய பௌத்தத்தை மகாயானம் என்றும் நிர்வாணத்தையே இலக்காகக் கொள்ளும் பௌத்தத்தை ஈனயானம் என்றும் கூறுவர். ஈனயானம் என்பது குறைந்த இலக்கை உடையது என்பது பொருள். மகாயானிகளின் கொள்கைப்படி தேரவாத பௌத்தம், ஈனயான பௌத்தத்தை சார்ந்ததாகும். தேரவாத பௌத்தர் நிர்வாணத்தையே இறுதி இலக்காகக் கொள்வர்.



போதி சத்துவரின் சிலை
சித்துல் பகுவா
(இலங்கை)

ஈனயான பௌத்தத்தில் மைத்திரேயர் எனப்பட்ட ஒரு போதிசத்துவர் மாத்திரமுண்டு. ஆனால் மகாயான பௌத்தத்தில் அநேக மைத்திரேயர்கள் உளர். அவலோகிதேஸ்வரர் என்ற போதிசத்துவரை மகாயானிகள் அதிகமாய் வணங்குகின்றார்கள்.

3. புத்தர், போதிசத்துவர் ஆகியவர்களின் உதவி

கௌதம புத்தர் மனிதன் தன் சுய முயற்சியால் நிர்வாண நிலையை அடையக்கூடுமென்றும் வேறொருவர் அவருக்கு உதவி செய்ய முடியாதென்றும் போதித்தார். மகாயான பௌத்தத்தின்படி ஒருவன் புத்தரிடம் அல்லது போதிசத்துவரிடம் உதவி வேண்ட

லாம். இவ்உதவியை அவர்கள் வணங்குதலாலும் பூக்கள் முதலிய காணிக்கைப் பொருட்களை அர்ச்சனை செய்வதாலும் பிரார்த்தனையாலும் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு செபங்கள் வழிபாடுகள் மதச்சடங்குகள் பௌத்தத்தில் சாதாரணமாகக் கலந்து கொண்டன.

பொழிப்பு

கி. பி. 120 அளவில் புதியவகையான பௌத்த மதம் வட இந்தியாவிலானதை நாங்கள் அவதானிக்கலாம். இது தேரவாதப் பௌத்த போதனைகளிலும் பலஅம்சங்களில் வேற்றுமையானது. இது புத்தர் பெருமானை பெரும்பாலும் கடவுளாகப் கொள்கின்றது.

ஈனயான, மகாயான பௌத்தங்கள்

		ஈனயானம்	மகாயானம்
(I)	புத்தர் பெருமான் எப்படிப்பட்டவர்	பெரிய ஒரு ஞானி	பெரும்பாலும் ஓர் இரட்சகர் அல்லது கடவுள்
(II)	இலக்கு	நிர்வாணம் மாத்திரம்	போதிசத்துவர் ஆகி இறுதியில் பௌத்தர் ஆதல்
(III)	வழிவகைகள்	அஷ்ட சீலங்கள் சுய முயற்சி	அஷ்டசீலங்கள் சுய முயற்சி, புத்தர் போதிசத்துவரின் உதவி
(IV)	சடங்குகள்	புத்தரின் புனித பண்டங்கள் முதலானவற்றைச் சங்கித்தல்	செபங்கள் வழிபாடுகள் காணிக்கைகள் சடங்குகள்

ஒருவன் நிர்வாண நிலையை அடைதலை அல்ல போதிசத்துவராகி இறுதியில் புத்தராகும் உயர்ந்த இலக்கையுடையது. புத்தரினதும் போதிசத்துவரதும் உதவியை செபங்கள், வழிபாடுகள், மதச்சடங்குகள் ஆகியன மூலம் பெறலாமெனக் கொள்கின்றது. இருவகைப் பௌத்தங்களும் வேற்றுமைப்படும் பிரதான அம்சங்கள் இவைகளேயாம்.

பயிற்சி I

1. மகாயானம், ஈனயானம் என்ற சொற்களின் பொருள் என்ன?
2. மகாயானிகளுமான யானிகளும் புத்தர் பெருமானை எப்படிக் கொள்கின்றனர்?
3. மகாயானம், ஈனயானம் தங்கள் இலக்குகளில் எவ்வகை வேற்றுமைகள் உடையன?
4. ஈனயான பௌத்தத்தில் எத்தனை போதிசத்துவர் உண்டு?
5. மகாயான பௌத்தத்தில் எத்தனை போதிசத்துவர் உண்டு?
6. ஈனயான பௌத்தம் மற்றவர்களின் துணையை எதிர் பார்க்கின்றதா?
7. மகாயானிகள் யாருடைய உதவியைப் பெறலாம்?
8. மகாயானிகள் உதவிகளைப்பெற என்ன வழி வகைகளைக் கையாள வேண்டும்?

இந்துமத மறுமலர்ச்சி

6ஆம் அத்தியாயத்தில் அசோகன் தனது இராச்சியத்திலும் அப்பாலும் பௌத்த மதத்தைப் பரப்பத் தன்னாலான முயற்சிகளைச் செய்தான் எனப் படித்தோம். அவன் காலம் முதல் பௌத்தமதம் வளர்ச்சி அடைய இந்து மதம் அருகியது. இந்த நிலைமை கி. பி. 320இல் சந்திர குப்த என்ற மன்னன் ஒரு புதிய இந்தியப் பேரரசை நிறுவும்வரையும் நிலைத்தது. இவனதும் இவனது வழித்தோன்றல்களதும் பெயர் குப்த என்று முடிவடைகிறது; அதனால் அவன் அடிகோலிய அரசு குப்தப் பேரரசு எனப்படுகிறது. இவர்கள் இந்துக்களாய் இருந்தபடியால் இயற்கையாக இந்து மதத்தையே ஆதரித்தனர். குப்த மன்னர்கள் காலத்தில் இந்து மதம் மறுமலர்ச்சி பெற்றது. இந்துமதத் திருநூல்களிற் பெரும்பாலான சங்கத மொழியில் எழுதப்பட்டிருந்தமையால் சங்கத இலக்கியமும் புத்துயிர் பெற்றது. இக்காலத்தில் பல புது நூல்கள் எழுதப்பட்டன. இக் காலத்தில் இந்தியா ஒருபோதும் கண்டிராத வகையில் இலக்கியம், சிற்பம், கட்டடக்கலை ஆகியன வளர்ச்சிபெற்றன. இப்பொழுது இப் பேரரசையும் அதன் நாகரிகத்தையும் பற்றி ஆராய்வோம்.

(a) குப்தப் பேரரசு

இப்பேரரசை அடிகோலியவன் சந்திர குப்தன் என்ற (கி. பி. 320—330) மாமன்னன் ஆவன். ஆரம்பத்தில் இவன் மகத நாட்டுக்கு மாத்திரம் அரசனுயிருந்தான். காலகதியில் கங்கைநதிப் பள்ளத்தாக்கிலுள்ள அநேக இராச்சியங்களை வெற்றிகொண்டு அரசர்க்கெல்லாம் அரசன் என்று பொருள்படும் மகா இராசாதி இராசன் என்ற பட்டத்தைப் பூனைந்து கொண்டான்.


கி. பி. 330இல் இவனைத் தொடர்ந்து இவன் மகன் சமுத்திர குப்தன் அரச கட்டில் ஏறினன். இவன் குப்த மன்னர்களுள் மிகவும் புகழ் பெற்றவன். அயலிலுள்ள இராச்சியங்களை வென்று சில இராச்சேடன் அல்லது அரசர்களை அழித்தோன் என்ற பெயரைப்பெற்றான். யமுனை நதிமுதல் பிரமபுத்திரா நதிவரையிலுள்ள வட இந்தியா முழுவதையும் தன் ஆணைக்குட்படுத்தினன். தென் இந்தியாவை இவன் வெற்றி எடுக்கச் செய்த முயற்சி பல்லவ வேந்தனுகிய விஷ்ணுகோபனின் தலைமையில் ஒன்றுகூடிய தென் இந்திய அரசர்களால் முறியடிக்கப்பட்டது. இவனைப் பின்தொடர்ந்து கி. பி. 380 இல் 2ஆம் சந்திர குப்தன் அரசன் ஆனன். இவன் வீரசூரியன் என்று பொருள்படும் விக்கிரம ஆதித்தியன் என்ற பெயரைச் சூடினன். இவன் மரணத்தின்பின் குப்தப் பேரரசு அகுணர்களின் படையெழுச்சியை எதிர்க்க வேண்டியதாயிற்று. 8ஆம் அத்தியாயத்தில் கண்ட வண்ணம் அகுணர்கள் மத்திய ஆசியாவினின்றும் வெளிப்போந்து கிழக்கையும் மேற்கையும் தாக்கினர்கள். எரிகிற வீட்டில் எண்ணெயை ஊற்றினுற்போல உள்நாட்டுக் கலகங்கள் பல ஏற்பட்டு பேரரசின் பலம் மிகவும் குன்றியது.


(b) குப்தப் பண்பாடும் நாகரிகமும்

குப்தப் பேரரசர்கள் மாபெரும் வீரர்கள் மாத்திரமல்ல கல்வியும் ஞானமும் படைத்தவர்கள் ஆவர். அவர்கள் இந்துமதத்தை ஆதரித்தமையால் மீண்டும் இந்துமதம் இந்தியாவில் தழைத்து ஓங்கியது. பாவலர், ஓவியர், கவிஞர், எழுத்தாளர் ஆகியோர் அரசனுல் ஆதரிக்கப்பட்டு அரண்மனையில் அரசன் அவையை அணிசெய்தார்கள். குப்த மன்னர்கள் நல்லரசாட்சி செய்ததால் நாடு வளம்பெற்றுத்திகழ்ந்தது. நாட்டின் சுபீட்ச நிலையும் அரசர்களின் ஆதரவும் காவியம், ஓவியம், கலை ஆகியவற்றை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தன. இக்காரணத்தால் குப்த மன்னர்களின் காலம் இந்துமதம் இலக்கியம், கலை, இந்தியாவில் மலர்ந்த பொற்காலம் எனப்படுகிறது.

இந்துமதம்

குப்த மன்னர் இந்துக்களாவர். அன்னர் பௌத்தமத அனுசரிப்புக்கு இடங்கொடுத்தாலும், இந்துமத வளர்ச்சிக்கு நல் ஆதரவு





இந்து ஆலயம் (குப்தர் காலம்)

நல்கினர். அநேக இந்து ஆலயங்கள் கட்டப்பட்டன. பிற்காலம் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தோர் இக்கோயில்களில் பலவற்றை அழித்துவிட்டனர்; எஞ்சியன சிலவே. எஞ்சிய சிலவில் பூமார, சாஞ்சி ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்கள் குப்த கட்டடக் கலையை உள்ளங் கை நெல்லிக்கனிபோல் எடுத்துக்காட்டுகின்றன. எழிய பருமட்டான வேலைப்பாடுடையன்வாயினும் அழகு வாய்ந்தன.

இலக்கியம்

இந்தியாவில் பண்டுதொட்டே காவியங்கள் சமைக்கப்பட்டன. ஆனல் இவைகள் வேதங்களைப்போல எழுதி வைக்கப்படவில்லை. அவைகள் மனனம் செய்யப்பட்டு சந்ததி, சந்ததியாகக் காப்பாற்றப் பட்டுவந்தன. குப்தர் காலத்தில் இவைகள் எழுதி வைக்கப்பட்டன. சமயநூலாகிய தரும சூத்திரமும், அர்சியல் நூலான அர்த்த சாத்திரமும், புராண இதிகாசங்களாகிய மகாபாரதம், இராமாயணம் ஆகிய நூல்களும் எழுதப்பட்டன. இவைகளேயன்றி பல கத்திய பத்திய நூல்களும், நாடக நூல்களும் புதிதாய் எழுதப்பட்டன. இக்காலத்தில் விளங்கிய புலவர்களுள் காளிதாச மகாகவி நுண்மான் நுழை புலச் செல்வர் ஆவர். இவர் பல வட மொழி நூல்களை யாத்துள்ளார். இவர் எழுதிய சாகுந்தலம் என்ற நாடகம் உலகிலே சிறந்த ஒரு நூலாய்க் கருதப் படுகிறது.



அசந்தாவிலுள்ள ஒரு சுவர்ச்சித்திரம் (205-ம் பக்கத்திலுள்ள சிகிரியாச்சுவர்ச் சித்திரத்தோடு ஒப்பு நோக்கவும். சிகிரியாச் சைத்திரிகர் இதனைக் கண்டு பாவித்திருக்கும் வன்மையைத் தெரிந்துகொள்க.

ஓவியங்களும் சிற்பமும்


இக்காலத்தில் சங்கீதம், ஓவியம் ஆகிய கலைகளும் வளர்ச்சியடைந்தன. இலக்கிய நயங்களையும், அழகுகளையும் அங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டும் பல சிற்பங்களும், சித்திரங் களும் இக்காலத்திற்கு உரியனவே.

அசந்தா குகைகளை அழகிய சுவர்ச் சித்திரங்கள் இன்றும் அணி செய்கின்றன. இவைகள் உலகிலேயே உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது. இக் காலத்து சிற்பக்கலையும் உயர்ந்த தரத் தை அடைந்திருந்தது. சார்நாத்தில் புத்தர் பெருமான் உபதேசிக்கும் முறையில் அமர்ந்துள்ள கற்சிலை இக்

காலத்திய கல்வேலை வனப்பை எடுத்துக்காட்டும் ஓர் உதாரணமாக விளங்குகின்றது. உருவங்கள் உலோகங்களாலும் சமைக்கப்பட்டன. சுல்தான் காஞ்சில் காணப்படும் பென்னம் பெரிய புத்த விக்கிரகம் உலோக வேலைப்பாட்டில் உயர்ந்ததாக இந்தியாவில் மதிக்கப்படுகிறது.

கல்வி

இக்காலத்தில் கல்விக் கழகங்களும் பல்கலைக் கழகங்களும் இந்தியாவை அழகு செய்தன. இவற்றில் அநேகம் சங்கத மொழியை வளர்க்கும் இடங்களாக திகழ்ந்தன. நிலையன்றி ஓவியம், சங்கீ



சார்நாத்திலுள்ள புத்தர் விக்கிரகம்

தம் ஆகியவற்றை வளர்க்கும் கழகங்களும் இருந்தன. நாலந்தா முதலான பல்கலைக் கழகங்களுக்கு இந்தியாவின் நானு திசைகளி னின்றும் மாணவர் சென்று கல்வி அழுது அருந்தினர்கள். வட இந்தியாவில் இந்துப் பேரரசை இறுதியாக நிறுவியோர் குப்தரே

ஆவர். அவர்கள் நல்லரசு செலுத்தி மக்களின் சுபீட்சத்தின் பொருட்டு அரும்பணி செய்தார்கள். புத்தமத நூல்களை சேர்க்கும் பொருட்டு இந்தியாவை இக்காலத்தில் தரிசித்த பாஹியன் என்ற சீன யாத்திரிகன் நாடு செப்பமாகப் புரக்கப்பட்டு அமைதியுடன் விளங் கிற்று என்றும் மக்கள் மன நிறைவுடன் இன்ப வாழ்க்கை நடத்தி னர்களென்றும் சான்று கூறுகின்றன். மேலும் ஏழைகளும் நோயாளிகளும் நன்கு பராமரிக்கப்பட்டனராம். இவ்வாறு குப்தர் காலம் இந்திய வரலாற்றில் மிகவும் சிறப்பானது.

பயிற்சி II

1. பௌத்த மதத்தை ஆதரித்த இரு இந்தியப் பேரரசர்களின் பெயர்கள் தருக.
2. பௌத்த மதம் அரசர்களின் ஆதரவைப் பெற்றபோது இந்து மதத்திற்கு நிகழ்ந்தது என்ன?
3. இந்துமத மறுமலர்ச்சி எவ்விந்தியப் பேரரசில் ஆரம்பமானது?
4. குப்த மன்னர்களின் மதம் யாது? அவர்கள் எம்மதத்தை ஆதரித்தனர்?
5. இந்துமத மறுமலர்ச்சியின்போது சங்கத இலக்கியம் புத்துயிர் பெற்றது ஏன்?
6. குப்தர் காலத்தில் எழுதப்பட்ட சில பண்டைய சங்கத நூல் களின் பெயர்கள் தருக.
7. எவ்வகையான புதிய இலக்கிய நூல்கள் இக்காலத்தில் சமைக் கப்பட்டன?
8. இக்காலத்தில் விளங்கிய சிறந்த புலவர் யார்? அவர் எழுதிய சிறந்த நூல் யாது?
9. குப்தர் காலத்து சிறந்த ஓவியங்கள் எங்கு காணப்படுகின்றன?
10. இக்காலத்து சிறந்த கற்சிலையையும், உலோகச் சிலையையும் விவரிக்குக. அவைகள் எங்கே காணப்படுகின்றன?
11. குப்தப் பேரரசில் திகழ்ந்த உயர்ந்த கலைக்கழகம் யாது?
12. குப்தர் காலத்தில் இந்தியாவைத் தரிசித்த சீன யாத்திரிகரின் பெயர் என்ன?


தென் இந்தியாவில் இந்துமதம் பரம்புதல்

இவ்வத்தியாயத்தில் மேலே குப்தப் பேரரசர் காலத்தில் இந்து மதமும், சங்கத இலக்கியமும் மறுமலர்ச்சி பெற்றதை அறிந்தோம். குப்தப் பேரரசு நருமதை ஆறுவரைதான் பரந்து இருந்தபோதிலும் அதன் செல்வாக்கு அதற்கு அப்பால் தெற்கிலும் பரந்தது. வாகட்டகர் (முன் ஓர் பக்கம் பார்க்க) குப்த செல்வாக்குக்குள்ளாகியதால் இந்து

மதம், சங்கத இலக்கியம், கல்வி ஆகியன மத்திய இந்தியாவிலும் பரம்பின. குப்த நாகரிகத்தின் இவ்விரு அம்சங்களும் பல்லவர் களால் தென் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டன. தென் இந்திய வரலாற்றையும் அங்கு இந்துமதம் சங்கத மொழி ஆகியன பரம் பியவகையையும் இப்பொழுது சுருக்கமாக ஆராய்வோம்.

தென் இந்தியா

தென் இந்தியாவின் பூரணவரலாறு அத்துணை விவரமாகத் தெரிந்திலது. ஆரியர் கி. மு. 1500இல் பஞ்சாப் பள்ளத்தாக்கில் குடியேறியபொழுது கறுத்த நிறத்தினரான ஒரு சாதியினரோடு சண்டை செய்யநேர்ந்தது. ஆரியர் இவர்களைத் தோற்கடித்து அவர் களை விந்திய மலைகட்குத் தெற்கே துரத்திவிட்டார்கள். ஆரியர் இவர் களை அடிமைகள் என்று பொருள்படும் தாஸ்யுஸ் என அழைத்தார் கள். ஆனல் பின்பு இக்கறுத்த நிறத்தினர் தென் இந்தியாவில் குடியேறி இருந்தபொழுது தெற்கு என்று பொருள்படும் திராவிட என்ற பெயரைச் சூட்டினர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையா ளம் ஆகிய மொழிகளைப் பேசுவார் திராவிடர் எனப்படுவர். (கீழே உள்ள படம் பார்க்கவும்.)



திராவிடமொழிகள்

(a) சங்க இலக்கியங்கள்

கிறீஸ்து சகாப்தம் முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல செய்யுட்தொகுதிகள் சங்க இலக்கியம் என்ற பெயருடன் விளங்குகின் றன. இவை தென் இந்தியாவிலுள்ளத் தமிழ்ப் புலவர்களால் யாக்கப்பட்டன. ஆனல் இவை தென் இந்தியாவின் பூர்வ வர லாற்றை தகுந்த அளவு தீர்க்கமாக தெளிவிக்கக்கூடியனவல்ல. சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவேந்தர்கள் தென்னுட்டை ஆண் டார்களென்றும் செங்குட்டுவன், கரிகாலன் முதலான சில அரசர்கள் இருந்தார்களென்றும் சங்க இலக்கியங்களின் மூலம் அறியக்கூடிய தாயிருக்கின்றது. இவற்றைத்தவிர கி. பி. 300 வரையும் தென் இந்திய வரலாற்றை அறியக்கூடிய பயனுள்ள தகவல்கள் மிக அரி தாகவே உண்டு.

(b) பல்லவப் பாண்டியப் போர்கள்

கி. பி. 300 முதல் 550 வரை களப்பிரர் தென் இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டார்கள். சோழப் பிரதேசத்தின் வடக்கே களப்பிரரால் வெற்றி கொள்ளப்படாத பல்லவர்கள் ஆட்சி செய்தார் கள். 6ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி. பி. 550 அளவில்) தெற்கே பாண்டியர்களும் வடக்கே பல்லவர்களும் களப்பிரரைத் தாக்கத் தொடங்கினர்கள். இவ்வாறு வடக்கும் தெற்கும் நெருக் குண்ட களப்பிரர் இறுதியில் தோற்கடிக்கப்பட்டனர். பல்லவர்களும் பாண்டியர்களும் சமாதானமின்றி தொடர்ந்து தங்களுக்குள் சண்டை செய்துகொண்டிருந்தனர். அடுத்த 300 ஆண்டுகளும் தென் இந்தி யாவில் இவ்விரு சாதியினரும் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டே இருந்தனர்.

பல்லவர் எழுச்சி

கி. பி. 575இல் சிங்கவிஷ்ணு பல்லவ அரச கட்டில் ஏறியதும் பல்லவர்களின் பெருமை ஆரம்பமானது. இவனும் இவனுக்குப்பின் இவன் மகன் முதலாம் மகேந்திரவர்மனும் பல்லவ இராச்சியத்தை தெற்கே விஸ்தரித்து ஒரு பல்லவப் பேரரசை நிறுவினர். பல்லவ அரசர்களுள் நரசிங்கவம்மன் அல்லது மாமல்லன் பெரும் புகழ் ஈட் டினன். இவன் பல்லவப் பேரரசை தெற்கிலே இன்னும் பெருப் பித்ததுமன்றி பல்லவர்களின் சன்ம விரோதிகளாகிய மேற்குச் சாளுக் கியர்களையும் முறியடிக்கமுடிந்தது. பல்லவர்கள் தென் இந்தியாவில் குடியேறியபோதிலும் அவர்கள் வட இந்தியரே ஆவர். அவர்கள் இந்து மதத்தைப்பின்பற்றி வட மொழியைப் வழங்கினர். அவர்கள் தென் இந்தியாவை வெற்றிகொண்டதின் பயனக தென் இந்தியாவில் இந்து மதமும் வடமொழி இலக்கியங்களும் வளர்ச்சி அடைந்தன.

(c) பல்லவர்களும் இலங்கையும்

6ஆம், 7ஆம் நூற்றுண்டுகளில் இலங்கையில் உள்நாட்டுக் கலகங்கள் உண்டாகி, தோற்கடிக்கப்பட்ட சிங்கள அரசர்கள் தென் இந்தியாவுக்கு ஓடி, தென் இந்தியப் படைகளுடன் இலங்கைக்கு மீண்டார்களென்று 9ஆம் அத்தியாயத்தில் படித்தோம். மானவர்மன் என்ற சிங்கள அரசன் தனது சிம்மாசனத்தை இழந்தபோது பல்லவ இராச்சியத்திற்கு ஓடி அங்கே நரசிங்கவர்மன் சாளுக்கியரோடு செய்த போரில் பல்லவருக்குத் துணைபுரிந்தான். நரசிங்கவர்மன் தன் சிம்மாசனத்தைப்பெற கி. பி. 676இல் மானவர்மனுக்கு உதவி செய்தான்.

(d) பாண்டியரும் இலங்கையும்

இக்காலத்தில் ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் பெரும் புகழ் நிறுவிய மன்னன் ஆவன். நரசிங்கவர்மனைப்போல இவனும் ஒரு சிறந்த வீரன் இவன் அயல்நாடுகளை வெற்றிகொள்ள முயன்றபோது தென் இந்திய மன்னர் பலர் ஒருங்கு சேர்ந்து இவனை எதிர்த்தார்கள்; இவர்கள் எல்லாரையும் இவன் கி. பி. 815இல் கும்பகோணத்தில் தோற்கடித்தான். கி. பி. 835இல் முதலாம் சேனன் இலங்கை அரசனாயிருந்தபொழுது ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் இலங்கையை முற்றுகையிட்டு முதலாம் சேனனைத் தோற்கடித்து மிகுந்த கொள்ளைப் பொருட்களுடன் தென் இந்தியாவுக்கு மீண்டான். பின்பு இவன் மகன் வரகுணவர்மன் இவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தபோது 2ஆம் சேனன் (கி. பி. 851—885) கிளர்ச்சிக்காரருக்கு உதவி அனுப்பினன். வரகுணவர்மன் சிங்களவரின் உதவியோடு தந்தையின் அரசைக் கைப்பற்றிக் கொண்டான். இதனால் சிங்கள மன்னர்களுக்கும் பாண்டிய மன்னர்களுக்குமிடையில் நேசஉறவு உண்டானது. கி. பி. 875இல் சோழர்கள் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தபோது 5ஆம் காசியப்பன் பாண்டியருக்கு உதவியாக இலங்கையிலிருந்து படைகளை அனுப்பினன்.

(e) பல்லவ நாகரிகம்

பல்லவர் ஆட்சி தென் இந்திய வரலாற்றில் முக்கியமானது ஒன்று. தென் இந்தியாவில் பெரும் பேரரசு ஒன்றை முதல் முதல் நிறுவியவர் இவரே. வட இந்தியராய் இருந்தமையால் இந்து மதமும் வடமொழியும் தங்கள் இராச்சியத்தில் வளர உதவி செய்தனர். சமய வளர்ச்சியின்பொருட்டு அநேக பிராமணர்களை தென் இந்தியாவுக்கு கொண்டுவந்தனர். இவர்கள் அடியிட்ட பல கழகங்கள் வடமொழியை வளர்க்கும் நடுநாயகங்கள் ஆயின. சிவன், விஷ்ணு முதலானவர்கள்மேல் தமிழில் பலபாமாலைகளைப் புனைந்து தென் இந்தியாவில் இந்துமதத்தை வளர்க்க உதவினர். கற்சிற்பங்களை தென் இந்தியாவில் முதற் புகுத்தியவர்கள் இவர்களே. இவர்களுடைய


ஆட்சியின் முன் தென் இந்தியாவில் இருந்த கட்டடங்கள் களிமண்ணினாலும் மரத்தாலும் ஆகியனவே; பல்லவர் ஆட்சியுடன் கற்கோயில்கள் தென் இந்தியாவில் சர்வசாதாரணமாயின. தன் புகழ் நிறுவிய பல்லவ மன்னன் நரசிங்கவர்மன் மாமல்லபுரம் என்ற ஒரு துறைமுக நகரைக் கட்டி எழுப்பினன்.



மாமல்லபுரத்திலுள்ள கற்சிற்பங்கள்

இவன் இந்நகரில் குகைக் கோயில்களாலும், கற் செதுக்கு வேலைப்பாடுகளினாலும் அலங்கரித்தான். இக்கோயில்கள் இன்று கட்டப்படுவதுபோல கல்லினால் அல்லது களிமண்ணினால் கட்டப்படவில்லை. மாமல்லபுரக் கடற்கரையில் அநேக பெரிய கற்பாளங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஏழு தேர்களை ஒத்த ஒற்றைக் கற்கோயில்களாய் விளங்குகின்றன. இவைகள் உள்ளும், புறமும் செதுக்கப்பட்டு அழகுடன் விளங்குகின்றது.





(1) மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள கோயில்
(2) மாமல்லபுரத்திலுள்ள குகைக் கோயில்

பல்லவர் வர்த்தகத்திலும் உற்சாகம் காட்டினர்; அவர்கள் கப்பல்கள் கட்டி இலங்கை, சுமாத்திரா, இந்துச்சீனா முதலிய நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்தனர்.

பல்லவர்கள் ஒருபொழுதும் இலங்கையை வெற்றி கொள்ள வில்லை; ஆனல் பல்லவ வர்த்தகரும் போர் வீரர்களும் இலங்கைக்கு வந்ததினல் பல்லவ செல்வாக்கு, இந்து சமய வளர்ச்சி, வடமொழி ஸிருத்தி ஆகியவற்றிலும் இலங்கைத் தீவில் காணப்படும் சில சிற்பங் களிலும், நாலந்தஹெடிகே என்ற ஆலயத்தின் கட்டடக் கலையிலும் பிரதிபலிக்கின்றது.

பயிற்சி III

இடைவெளிகளை நிரப்புக:

(a) கி. மு. 800 வரை தென் இத்தியாவின் சரித்திரத்தைப் பற்றி.....தெரியாது.

(b) .....இலக்கியங்கள் சில தகவல்களையே அளிக்கின்றன.

(c) தென் இந்தியாவில்.....ஆகிய இராச்சியங்கள் இருந்தன.

(d) கி. பி. 300 முதல் 600 வரை.....தென் இந்தியாவை ஆண்டனர்.

(e) 6-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடக்கே.....தெற்கே .....அவர்களைத் தாக்கினர்.

(f) அடுத்த முந்நூறு ஆண்டுகள் (கி. பி. 600—900) தென் இந்திய வரலாறு.....க்கும்.....க்கும் நடந்த போர்களையே பெரும் பகுதியாக உடையது.

(g) .....பல்லவ அரசர்களுள் மிகப் புகழ் படைத்தவர்.

(h) இலங்கை மன்னனை.....தனது சிம்மாசனத்தைப் பெற இவன் உதவி செய்தான்.

(i) பாண்டிய மன்னர்களுள்.....மிகப் புகழ் வாய்ந்தவன்.

(j) கி. பி.....இல் இவன் இலங்கையை முற்றுகையிட்டான்.

(k) .....பாண்டியப் பேரரசன் ஸ்ரீமார ஸ்ரீவல்லபன் மகன் இளர்ச்சி செய்தபோது உதவி செய்தான்.

(l) பாண்டிய அரச குமாரன் பாண்டிய சிம்மாசனத்தை..... உதவியோடு பெற்றுக்கொண்டான்.

(m) இதன் பயனக பாண்டியருக்கும் சிங்களவருக்கும்..... உண்டானது.

(n) பாண்டிய இராச்சியத்தின்மீது.....படையெடுத்தபோது சிங்களவர்.....துணை அனுப்பினர்கள்.

இந்துமதம் பரவுதல்

(a) .....மூலமாக இந்து மதமும், வடமொழியும் மத்திய இந்தியாவில் பரவின.

(b) பல்லவர்.....குடியேறி ஒரு பேரரசை நிறுவிய போதிலும் .....ஆவர்.

(c) அவர்கள்....., ...ஆகியவற்றை தென் இந்தியாவுக்கு கொண்டுவந்தார்கள்.

(d) வடமொழியையும்.....வளர்க்க பிராமணர்கள் வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்டனர்.

(e) சிவன், விஷ்ணுமீது தோத்திரப் பாமாலைகள்..... பாடப்பட்டமையால் அது தெற்கே.....வளர உதவியது.

(f) தென் இந்தியாவில் பிராமணர் நடத்திய கழகங்கள்..... கல்விக்கு நடுநாயகங்களாயின.

(g) .....சிற்பமும் கட்டடக் கலையும் பல்லவர்களால் தென் இந்தியாவில் புகுத்தப்பட்டன.

(h) நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தில்.....கோயில்களை செதுக்கி அமைத்தான்.

(i) பல்லவர் கப்பல்கட்டி அநேக நாடுகளோடு..... செய்தார்கள்.

(j) பல்லவ நாகரிகம்.....ஆதியோரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

10-ம் அத்தியாயத்தில் வினக்கள்

1. மகாயான பௌத்தத்திற்கு பேராதரவு நல்கிய இந்தியப் பேரரசன் யார்? மகாயான, ஈனயான பௌத்தங்களுக்கு இடையேயுள்ள வேற்றுமைகள் எவை?

2. குப்தர் காலத்து மதம், இலக்கியம், கலை ஆகியனபற்றி சுருக்கமாக எழுதுக.

3. கி. பி. 500 வரை தென் இந்திய வரலாற்றைப்பற்றி நமக்கு தெரிந்தது என்ன? இத்தகவல்களை நாம் எங்கிருந்து பெறுகிறோம்?

4. பல்லவர் இந்தியாவின் எப்பாகத்திலிருந்து வந்தார்கள்? அவர்கள் கொண்டுவந்த மதம், பண்பாடு என்பன யாவை?

5. (a) இலங்கை பல்லவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு (b) இலங்கை பாண்டியருடன் கொண்டிருந்த தொடர்பு இவற்றைப்பற்றி சுருக்கமாக எழுதுக. பல்லவ நாகரிகத்தை இலங்கைக்கு கொண்டுவந்தவர் யார்?

6. (a) குப்தப் பேரரசுடனும் (b) பல்லவர்களுடனும் தொடர்பு பூண்டிருந்த சிங்கள மன்னர் யார் யார்?

11-ம் அத்தியாயம்

அநுராதபுரிக் காலம் II
சமயமும் பண்பாடும்

I. புத்தசமய வரலாறு (1) தேரவாத புத்த சமயப் பிரிவு
(2) மகாயான புத்தமதக் கொள்கை இலங்கையிற் பரவுதல்
(3) மத வழிபாடும் சடங்குகளும்.

II. இலக்கியம் III. கட்டடக்கலை IV. சிற்பம் V. சித்திரம் (வர்ணஓவியம்)

ஆரம்ப உரை

9-ம் அத்தியாயத்தில், இலங்கையிலே கி. பி. 1017-ம் வருடம் வரையுமுள்ள அரசியலின் வரலாறு, ஆட்சிமுறை, விவசாயத் தொழில் விருத்தி, ஆகிய விஷயங்களைப்பற்றிப் படித்தோம். இந்த அத்தியாயத்தில் அதே காலத்திலே இத்தீவிலுள்ள சமய நிலை, மக்களின் பண்பாட்டு நிலை ஆகிய இரு விஷயங்களையும் எடுத்துக் கொள்வோம்.

இலங்கையின் சமயம் பண்பாடு ஆகிய இரண்டினது வரலாறும் இந்திய சரித்திர வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடையன. 7-ம் அத்தியாயத்தில் புத்த சமயம் இந்தியாவிலிருந்து எப்படி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதென்றும் இத்தீவு வாசிகளின் நாகரிகத்தில் அது கொண்டுள்ள பெரும் பங்கையும் கண்டுள்ளோம். மேலும் 10-ம் அத்தியாயத்தில் இந்தியாவிலே புத்த-மதத்தில் எவ்வாறு ஒரு புதிய முறை எழுந்ததென்றும், அங்கே குப்த மன்னரின் ஆட்சியின்கீழ் இந்து மதமும் சங்கத மொழியும் எவ்வாறு மறுமலர்ச்சி அமைந்தனவென்றும் கற்றுக்கொண்டோம். இந்து மதமும் சங்கத மொழியும் பிற்காலத்தில் பல்லவ மன்னரால் தென்னிந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு அப்பகுதியின் நாகரிகத்தைச் சிறப்பித்தன. இப் பாடத்தில் மகாயான புத்த முறையும் இந்து மதமும் எவ்வாறு இலங்கையுட் கொண்டுவரப்பட்டனவென்றும், மகிந்தனுல் இலங்கையுட் பரப்பப்பட்ட புத்த மதத்தை அவை எவ்வாறு பாதித்தன எனவும் கண்டுகொள்வோம். மேலும் குப்த இலக்கியமும் அந்நாட்டவரின் அறிவும் எவ்விதங்களில் இலங்கையரின் இலக்கியத்தையும் அறிவையும் சிறப்பித்தனவென்றும் இந்நாட்டின் சித்திரம் முதலிய கலைகள் எவ்வாறு சத்தவாகனர், குப்தர், பல்லவர், முதலியோரின் ஆதிக்கத்தால் பயன்பெற்றன என்றும் கூறப்படும்.

புத்தசமய வரலாறு
(I) தேரவாத புத்த சமயம்
(அ) மகிந்தன் கொண்டுவந்த புத்த சமயம்

கி. மு. 247 இல் மகிந்தன் இலங்கைக்கு வந்தபோது துறவிகள் அனுசரிக்கவேண்டிய விதிகளைப்பற்றி வெவ்வேறு அபிப்பிராயங் கொண்ட 18 புத்தமதப் பிரிவுகள் இந்தியாவில் இருந்தன. இப்பிரிவுகளுள் எது புத்தர் மனதிற் கொண்ட விதிகளை அனுசரிக்கும் பிரிவு என அறிவதற்கு அசோகன் காலத்தில் ஒரு புத்த சங்கம் கூட்டப்பட்டதென "மகாவம்சம்" எனும் நூல் கூறுகின்றது. இச்சங்கத்தால் தேரவாத புத்த சமயமே புத்தர் குறித்த விதிகளை அனுசரிக்கும் பிரிவென அங்கீகரிக்கப்பட்டது. இப்பிரிவின் போதனைகளே மகிந்தனால் இலங்கையிற் போதிக்கப்பட்டன.

(ஆ) மகாவிகாரையே பிரதம விகாரையாயிற்று

தேரவாத புத்த சமயம் இலங்கையிலே அரசரால் ஆதரிக்கப்பட்டு மிக விரைவாகத் தீவின் எத்திசையிலும் பரவி வந்தது. சிறிது காலத்தில் இத்தீவிலே அநேக விகாரைகளையும் ஆயிரக்கணக்கான துறவிகளையும் காணக்கூடியதாய் இருந்தது. அநுராதபுரியிலுள்ள விகாரைகள் அனைத்தும் மகாவிகாரையையே புத்த குருமாரின் பிரதம ஆச்சிரமமாகக் கொண்டன. மறு விகாரைகளில் தீர்க்கமுடியாத பிணக்குகள் ஏற்படுமாயின் அப்பிணக்குகளை தீர்ப்பதற்கு மகாவிகாரைக் குருக்களிடத்தே விண்ணப்பிக்கப்பட்டன. அவர்களும் தமது தீர்ப்பை அளித்தார்கள். கி. மு. 247 தொடக்கம் வாலகம்பா மன்னனின் ஆட்சி காலவரையும் அஃதாவது கி. மு. 103 வரையும், தேரவாத மதமே இலங்கையிலே பரவிற்று. ஏனைய 17 பிரிவுகளுள் வேறென்றும் இத்தீவிக்குக் கொண்டுவரப்படவில்லை.

(இ) தர்மருச்சிப் பிரிவு

மகாவிகாரையிலிருந்து அபயகிரி விகாரைக்குச் சென்ற குருமார் வச்சி புத்தகர் எனும் பிரிவினரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டார்களென ஒன்பதாம் அத்தியாயத்தில் கண்டுள்ளோம். வச்சி புத்தகரின் பிரிவின் முதல்வராகிய தர்மருச்சி என்னும் ஒருவர் இலங்கையை வந்து அடைந்ததினால் இத்தீவிலுள்ள அப்பிரிவினர் தர்மருச்சியர் என அழைக்கப்படலாயினர்.

பயிற்சி I

(1) மகிந்தன் இலங்கைக்கு வந்தபோது இந்தியாவில் எத்தனை புத்தமதப் பிரிவுகள் இருந்தன?
(2) எப்பிரிவு உண்மையான பிரிவெனக் கொள்ளப்பட்டது?

(3) மகிந்தன் எப்பிரிவின் கொள்கைகளை இலங்கையிற் பரப்பினான்?

(4) அநுராதபுரத்திலுள்ள எந்த விகாரை பிரதம விகாரையாகக் கொள்ளப்பட்டது?

(5) எம்மன்னனின் காலத்தில் அபயகிரி விகாரை கட்டப்பட்டது?

(6) அபயகிரி விகாரைக் குருமார் மகாவிகாரைக் குருமாரின் அதிகாரத்தை ஏன் புறக்கணித்தனர்?

(7) அதன்பின்பு இலங்கைக்கு வந்த புத்தமத பிரிவினர் எவர்? அவர்களின் தலைவர் யார்?

(8) அவர்களை எந்த விகாரையில் வரவேற்றனர்?

(9) அதன்பின் அபயகிரி குருமார் எப்படி அழைக்கப்பட்டனர்?

(10) அதன்பின் இலங்கையில் விளங்கிய இரு புத்த சமயப் பிரிவுகள் எவை? அப்பிரிவுகளின் பிரதம விகாரைகளின் பெயர்கள் என்ன?

(11) அபயகிரி விகாரையில் மகாயான புத்த சமயம்

முன் கூறப்பட்ட சம்பவங்கள் இலங்கையில் நடக்கும் காலங்களில் இந்தியாவில் மகாயான புத்த சமயம் தீவிர வளர்ச்சி அடைந்து வந்தது. வோகரிகதீசன் (கி. பி. 209—231) இலங்கையில் ஆட்சிபுரியுங் காலத்தில் மகாயான பிரிவினரின் வேதாகமங்கள் அபயகிரி விகாரைக்கு கொண்டுவரப்பட்டு அங்குள்ள புத்த குருக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இலங்கையிலே மகாயான புத்த மதம் தப்பானதாக எண்ணப்பட்டதனால் வோகரிகதீசன், அதன் வேதாகமங்களைக் கைப்பற்றி அவற்றைச் சுட்டெரித்து அப்பிரிவின் குருமாரையுந் தண்டித்தான். இவ்வாறுக முதன் முதல் மகாயான மதம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டபோது தடைசெய்யப்பட்டது.

(அ) சகலிகர்

கோதாபயன் காலத்தில் (கி. பி. 249—263) மகாயான மதம் இரண்டாம் முறையாகக் கொண்டுவரப்பட்டது. இம்முறை அதை ஏற்றுக்கொள்ள சில குருமார் மறுத்தனர். அவர்கள் தொகையிற் சிறுபான்மையோராய் இருந்ததினால் அபயகிரி விகாரையைவிட்டு நீங்கி பிறிதான இடத்தில் தமது சந்நியாச மடத்தை நிறுவினர். அவ்விடம் மகாவிகாரைக்குத் தெற்குத் திசையில் இருந்ததனால் தக்கணவிகாரையெனப்பட்டது. இக்குழுவினரின் தலைவனின் பெயர் சகலிகன் என்பதனால் அவர்கள் சகலிகரென அழைக்கப்பட்டனர். கோதாபயன் அபயகிரி விகாரையில் மகாயான மதம் வரவேற்கப்பட்டதென்று கேள்வியுற்று வோகரிகதீசன் செய்தது போலவே அதை அழிக்கத் தன்னால் இயன்றவற்றைச் செய்தான்.

(ஆ) மகாயான புத்தசமயம் இலங்கையில் வேரூன்றல்

கோதாபயனின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் சங்கமித்தன் என்னும் ஒரு பெயர் படைத்த மகாயானக் குரு இலங்கைக்கு வந்தார். அவர் மந்திர வித்தைகளில் மகா பாண்டித்தியம் பெற்றிருந்தவராதலினால் அரசன் தன் பிள்ளைகளுக்குக் கல்வியூட்ட அவரை நியமித்தான். அரசரின் இளைய மைந்தன் மகேசன் என்பவன் இவ்வாசிரியனால் மிகவும் வசீகரிக்கப்பட்டிருந்தான். ஆனதினால் மகேசன் கி. பி. 247 இல் அரசகட்டிலிலேறியபோது சங்கமித்தனின் தூண்டுதலின் பயனாக மகாவிகாரைக் குருமாரைத் துன்புறுத்தி, அவர்களின் விகாரைகளைச் சிதைத்து அங்குள்ள அலங்காரப் பொருள்களினாலும் பலவகைச் செல்வங்களினாலும் அபயகிரி விகாரையைச் சிறப்பித்தான்.



அநுராதபுரியிலுள்ள சேதவனராம விகாரை

பொது சனங்களுக்கு மகாவிகாரைக் குருமாரில் மிக மதிப்பிருந்ததனால், அக்குருமார் துன்புறுத்தப்பட்டதைக்கண்டு அரசனுக்கு எதிராய் அவர்படையெடுக்க எத்தனித்தனர். இதைக் கேள்விப்பட்டு மகேசன் திகிலடைந்து மகாவிகாரைக்கும் தமது ஆதரவு அளிப்பதாக வாக்களித்

தான். மகாவிகாரைக்குக் கிழக்குத் திசையாக சேத்தவனராம எனும் பிறிதோர் விகாரையைக் கட்டி எழுப்பினன். இவ்விகாரையையே சகலிகர் தமது இருப்பிடமாக்கினர்.

மகாயான புத்தசமயம் இலங்கையிற் பரவுதல்

இக்காலத்தில் அநுராதபுரியில் மூன்று விகாரைகள் இருந்தன. தேரவாதத்தின் மத்திய ஸ்தாபனமாக மகாவிகாரை விளங்கிற்று. அபயகிரி விகாரையில் மகாயான புத்தமதக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் போதிக்கப்பட்டும் வந்தன. சேதவனராம விகாரை சகலிகரின் உறைவிடமாய்த் திகழ்ந்தது. பின்பு சாலமேவன் என்னும் அரசனின் ஆட்சி (கி. பி. 617) தொடங்கியபோது இவ்விகாரையிலும் மகாயான மதக் கொள்கைகளே ஏற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாருக இத்தீவிலுள்ள பிரதான மூன்று விகாரைகளில் இரு விகாரைகள் மகாயான மதத்துக்கு முக்கிய உறைவிடமாய் விளங்கின. மகாவிகாரையின் குருமாரோ தேரவாதமதத்தின் கொள்கைகளிலே அதி பிரமாணிக்கமுள்ளவர்களாய் விளங்கியதுமன்றி புத்த சமயத்தின் பிற பிரிவுகளின் கொள்கைகள் எதற்கும் தமது விகாரையில் சிறிதேனும் இடங்கொடாதும் வந்தனர்.

பயிற்சி ||

(1) இலங்கையிலே மகாயான மதக் கொள்கைகள் உண்மையானவை யென்றே அன்றேல் பிழையானவை யென்றே கருதப்பட்டன?

(2) மகாயான வேதாகமங்கள் எம்மன்னனின் ஆட்சி காலத்தில் முதன்முதல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன?

(3) எவ்விகாரையில் மகாயானக்கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன?

(4) இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அரசன் யாது செய்தனன்?

(5) மகாயான சமயம் இரண்டாம் முறையாக அபயகிரி விகாரைக்குக் கொண்டுவரப்பட்டபோது எல்லாக் குருமாரும் அதை ஏற்றுக்கொண்டனரா?

(6) அதை ஏற்க மறுத்த சில குருமார் செய்தது யாது?

(7) அவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்? ஏன்?

(8) கோதாபயனின் மனதைக் கவர்ந்து கொண்ட மகாயான புத்த குரு யார்?

(9) மகாசேனன் அப்புத்த குருவால் வசிகரிக்கப்பட்டது எவ்வாறு?

(10) மகாசேனன் (அ) மகாவிகாரைக்கு (ஆ) அபயகிரி விகாரைக்கு, யாது செய்தனன்?

(11) மகாசேனனைப் பொதுசனங்கள் எவ்வாறு பயமுறுத்தினர்?

(12) சேதவனராம விகாரையைக் கட்டியவர் யார்? அதில் யார் சென்று வசித்தனர்?

||| வழிபாடும் சடங்குகளும்

(அ) மகாயான புத்த சமயத்தின் செல்வாக்கு


மகாயான புத்த சமயமானது பல்வகைப்பட்ட வழிபாடுகளும் சடங்குகளும் கொண்டுள்ளது என 10-ம் அத்தியாயத்தில் முன்பு படித்துள்ளோம். தேரவாத புத்த சமயத்தின்படி வழிபாடும் சடங்குகளும் அவசியமானவையல்ல. நிர்வாணமெனப்படும் நிலையை அடைவதற்கு அனுசரித்து, பகுத்தறிவை உபயோகித்து முயலுதல் தேரவாத புத்த மதத்தவர்களுக்குப் போதியதாய் இருந்தது.

அபயகிரி விகாரையும் சேதவனராம விகாரையும், மகாயான மதத்தை ஏற்றுக் கொண்டதால் புத்தருடைய உருவச் சிலைகளும் "போதிசத்துவர்" எனப்படுபவரின் உருவச்சிலைகளும், புத்தருடன் தொடர்புடைய புனித வஸ்துக்களும் அங்கே அநேகம் காண்பதற்கிருந்தன. பொதுசனங்கள் சதாரணமாக சமயச் சடங்குகளில் விருப்புள்ளவர்களென்பதை எல்லா மதக் கோவில்களிலும் அச்சமய கொண்டாட்டங்களுக்குக் கூடும் ஆயிரக்கணக்கான தொகையினரினுல் அறிந்துகொள்ளலாம். மகாயான மதவிகாரைகளுக்குச் சென்ற பொதுசனங்கள் அங்கே நடைபெற்ற வழிபாடுகளையும் சடங்குகளையும் நன்கு அறிந்து பழகியிருந்தனர். பின்பு இவர் மகாவிகாரைக்குச் சென்றபோதெல்லாம் அங்கேயுள்ள வெள்ளரசு மரத்தையும், புத்தரின் பிச்சைப் பாத்திரம் முதலியவற்றையும் வணங்கிவரலாயினர். இவ்வாறு மகாவிகாரையிலேயும் வழிபாடுகளும் சடங்குகளும் சாதாரண விஷயங்களாகிவிட்டன. எனினும் மகாவிகாரைப் புத்த குருமார் தேரவாத கொள்கைகளையே போதித்து வந்தபொழுதிலும் மகாயான மத வழிபாடுகளுக்கும் சடங்குகளுக்கும் தமது விகாரையிலும் இடங் கொடுக்கலாயினர்.

புத்தரின் புனித வஸ்துக்களின் வழிபாடு விரைவில் எல்லா விகாரைகளிலும் நடைபெற்று வந்தது. புத்தரின் உடலின் அங்கங்களாகிய திவ்விய பல்லு, கழுத்தெலும்பு, தலைமயிர் முதலிய அங்கங்கள் இலங்கைத் தீவில் சில சில இடங்களில் இருந்தன. இவைகளை புனித 'சரீர' வஸ்துக்களென்பர். வெள்ளரசு மரம், பிச்சைப் பாத்திரம் முதலிய தொடர்புடைய சில வஸ்துக்களும் இருந்தன. இவைகளைப் 'பரிபோக' வஸ்துக்களென்பர். அநுராதபுரத்திலும் மிகிந்தலையிலும் அநேக தாது கோபங்கள் இருந்தன. மிகிந்தலையிலுள்ள தாது கோபங்களுள் மகிந்தனின் புனித வஸ்துக்களும், மறு, தாது கோபங்

களுள் புத்தரின் புனித வஸ்துக்களும் இருந்தன என்பர். தாது கோபங்களுள் இவ்வகைப் புனித வஸ்துக்கள் இருந்ததால் ஒவ்வோர் விகாரையிலும் ஒரு தாது கோபத்தைக் கட்டி எழுப்பி அதை வணங்கி வருதலும் ஒரு வழக்கமாயிற்று. புத்தர் வெள்ளரசு மரத்தினது நிழலிலே உண்மையை உணர்ந்தவரானதால் அம்மரத்துக்குப் பெரும் மரியாதை செலுத்தப்பட்டது.

இவ்வாறு மகாவிகாரையில் தேரவாத மதபோதனைகள் செய்யப் பட்டு வந்தபோதிலும் அவ்விடத்திலுள்ள சமய ஆசாரங்களிலும் மகாயான மதத்தின் செல்வாக்குப் பரவலாயிற்று மகாயான புத்தமதமானது இலங்கையில் அழிந்துபட்டபோதிலும் அதன் சமய ஆசாரங்கள் வேரூன்றி இன்றும் விளங்கி வருகின்றன. இப்படியாக, இலங்கையிலே இன்று எவ்விகாரையிலும் தேரவாத போதனைகளே நடாத்தப் பட்டு வரினும் தாதுகோபங்கள் முதலியன வழிபட்டு வருதல் பொதுவான கருமமாயிற்று.



விஷ்ணுவின் உருவச்சிலை
(கந்தளாய்)

இந்து சமயத்தின் செல்வாக்கு

இதற்கு முந்திய அத்தியாயத்தில், குப்த மன்னர் இந்தியாவை ஆண்டு வருங்காலத்தில் இந்துசமயம் மறுபடியும் இந்தியாவில் பிரதான சமயமாய் விளங்கிற்று என்று கண்டுள்ளோம். இலங்கையானது இந்தியாவுக்குக் கிட்ட இருப்பதினால் இந்து மதம் இக்காலத்தில் இலங்கையிலும் பரவலாயிற்று. புத்த சமயத்திலும் பார்க்க இந்து சமயத்தில் வழிபாடுகளும் சடங்குகளும் மலிந்து தோன்றுகின்றன. புத்தசமயத்தவர் இவைகளைக்கண்டு பின்பற்றினதினால் புத்த மதத்திலே மேலும் சடங்குகளும் வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்து சமயத்தில் பல தெய்வ வழிபாடுகள் உண்டு, இத்தெய்வங்களுட் சிலவற்றைப் புத்த மதத்தினரும் வழிபடத் தொடங்கினர். இவ்வாறே விஷ்ணுவும் புத்த மதத்தோருக்கு ஒரு பிரதான தெய்வமானார்.

சுருக்கம்

தேரவாத புத்த சமயம் மகிந்தனால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. மகாசேனன் ஆட்சிபுரிந்த காலத்தில் மகாயான சமயம் அபயகிரி விகாரையில் உறுதியாய் நிலைகொண்டு, படிப்படியாக சேத வனராம விகாரத்திலும் பரவிற்று—இலங்கையிலிருந்து இறுதியில் மகாயானம் மறைந்து விட்டதெனினும், அதன் சமயக் கிரிகைகள் மகாவிகாரையிலேயும், இத்தீவிலுள்ள சகல விகாரைகளிலேயும் அனுசரிக்கப்பட்டே வந்தன. இந்தியாவில் குப்த மன்னரின் ஆட்சி காலத்தில் இந்து சமயம் தழைத்தோங்கி வந்ததால், அது அக்காலத்தில் இலங்கையிலும் பரவி இங்குள்ள புத்தசமய ஆசாரத்தில் இரு விதமாகத் தன் செல்வாக்கைச் செலுத்திற்று. வேறு புதிய வழிபாடுகளும் சமயச்சடங்குகளும் புத்த மதத்தில் வந்தேறியது மன்றி விஷ்ணு முதலிய இந்து சமயத் தெய்வங்களையும் புத்த சமயத்தவர் ஏற்றுக்கொண்டனர். ஆகவே, புத்த சமயம் இலங்கையிலே பரவிவரும் காலத்திலே மகாயானக் கொள்கைகளும் இந்து சமய ஆசாரமும், தம்தம் செல்வாக்கைப் புத்த மதத்திலே சுமத்திவிட்டன.

பயிற்சி III

(1) தேரவாத புத்த சமயத்தில் வழிபாடும் சடங்குகளும் இன்றியமையாதனவா?

(2) எந்தெந்த விகாரைகளில் வழிபாடுகளும் சடங்குகளும் பொது வழக்கில் இருந்தன?

(3) இவைகள் எவ்வாறு மகாவிகாரையிலும் அனுசரிக்கப்பட்டு வரலாயினவென்று விளக்குக?

(4) இலங்கையில் இருந்த சில புத்தரின் 'சரீர' புனித வஸ்துக்கள் எவையெனக் கூறுக.

(5) இத்தீவிலிருந்த சில 'பரிபோக' புனித வஸ்துக்கள் எவை?

(6) தாதுகோபங்கள் ஏன் வணங்கப்பட்டன?

(7) புத்த மதத்தவர் அரச மரங்களை ஏன் தெய்வியமயமானவையெனக் கொள்வர்?


(8) இன்று இலங்கையிலே போதிக்கப்பட்டுவருவன மகாயான புத்தமதமா அன்றேல் ஹீனயான புத்தமதமா?

(9) இந்தியாவில் இந்து சமயம் எவ்வரசரின் காலத்தில் புத்துயிர் அடைந்தது?

(10) புத்த சமயத்தில் இந்துமதம் எவ்விரண்டு முறைகளில் தனது செல்வாக்கைப் புகுத்தியது?

II இலக்கியம்

8-ம் அத்தியாயத்தில் ஆரியர் இலங்கைக்குத் தமது பாஷையையும் கொண்டுவந்தார் என்பதைக் கண்டுள்ளோம். இந்தப் பாஷையிலிருந்துதான் நமது சிங்களப் பாஷை படிப்படியாக வளர்ந்து வந்தது. புத்த குருமார் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பாளி பாஷையையும் எழுதும் முறையையும் மாத்திரமல்ல, புத்தமத ஆகமங்களையும், ஜாதக கதைகளையும் நிதாகதாவையும் கொண்டு வந்தனர். இந்த இலக்கியங்கள் நூற் பிரதிகளாகவோ, ஓலைப் பிரதிகளாகவோ இருக்கவில்லை. அவைகளை அதி பரிசுத்தமானவையென புத்த குருமார் எண்ணியதால் அவற்றை எழுதாது மனனஞ் செய்தே வந்திருந்தனர். அவர் இலங்கைக்கு வந்தபோது அவற்றையும் தமது மனதிலேயே பதித்து வந்தனர். புத்த குருமார் இலங்கைக்குக் கொண்டு வந்த இலிபிகள் அசோகன் கற்றூண்கள் பலவற்றில் எழுதப்பட்ட 'பிராமி' இலிபிகளேயாம். இப்புத்த குருமார் ஆதியில் வசித்துவந்த குகைகளின் வாசல்களுக்கு மேல் இவ்வெழுத்துக்களைக் காணலாம்.



ஆதிகால இலிபியின் சாயல்கள்

புத்தாகமங்கள் ஆதியிலே எழுதப்படவில்லையென நாம் கூறியிருக்கின்றோம். அவைகளைக் குருக்களிடங் கேட்டு மாணவர் மனனஞ் செய்து கொண்டனர். வாலகம்பா ஆட்சி புரியுங் காலத்திலேயே (இ.பி. 103-77) முதன்முதல் வேதாகமங்கள் எழுதப்பட்டன. அவைகள் பாளி மொழியிலேயே முதலில் எழுதப்பட்டன. இவ்வேதாகம விளக்கங்களைச் சிங்கள மொழியில் வரைந்தனர்.

இவ்வத்தியாயத்தின் முன் பிரிவொன்றில் காயான புத்த மதம் எவ்வாறு அபயகிரி விகாரையில் நிலைநாட்டப்பெற்று படிப்படியாக சேதவனராம விகாரைக்கும் பரவிற்றெனக் கண்டுள்ளோம். மகாயான புத்தசமய ஆகமங்கள் தேரவாத சமய ஆகமங்களைப்போல பாளி மொழியில் எழுதப்படவில்லை. அவை சங்கத மொழியிலேயே எழுதப்பட்டன. ஆனதினால் இலங்கையிலுள்ள புத்த குருமார் சங்கத மொழியையும் கற்கவேண்டியவராயினர்.

முன்போந்த அத்தியாயத்தில், குப்த மன்னரின் ஆதரவின் பயனாக, அநேக சங்கத நூல்கள் தோன்றினவெனப் படித்துள்ளோம். இலங்கைப் புத்தக் குருமார் சங்கத மொழியையும் அக்காலத்திற் படித்திருந்தாராதலின் இந் நூல்களையும் அவர்கள் கற்றுத் தாமும் இலக்கிய நூல்கள் இயற்ற விரும்பினர். இலங்கையில் மகாநாமன் என்னும் அரசன் ஆட்சி புரிந்த காலத்தில் (இ. பி. 409—431) புத்த கோசன் எனும் பெயருள்ள ஒரு புத்த கலைஞர் இலங்கைக்கு வந்து 'விசுத்திமக' எனும் கீர்த்திவாய்ந்த நூலை இயற்றினர். இதன் பின்புதான் இத்தீவிலுள்ள குருமாரிடையே இலக்கிய நூல்கள் இயற்ற விருப்பம் எழுந்தது. அவர்கள் பாளி மொழியிலே அவ்விலக்கிய நூல்களை இயற்றினர். பொதுசனங்களில் பெரும்பாலோருக்கு வாசிக்கும் ஆற்றல் இல்லாததன் காரணத்தால் அந்நூல்கள் அவற்றை இயற்றியோருக்கும் அவரைப்போன்ற புத்த குருமாருக்குமே உபயோகப்படக் கூடியனவாயிருந்தன. புத்தாகமங்கள் அநேகம் எழுதப்பட்டதிலும், குருமார் நன்கறிந்ததுமாகிய பாளிமொழியிலே அவைஎழுதப்பட்டதிலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை. மகாசேனன் காலம் வரையும் உள்ள இலங்கையின் புத்த சமய வரலாற்றைக் கூறும் நூலாகிய 'தீபவம்சம்' இக்காலத்தின் ஆரம்பத்திலேயே எழுதப்பட்டது. மகாவம்சம் எனும் நூல் இ. பி. 6-ம் நூற்றுண்டில் எழுதப்பட்டது. இந்த நூல் கௌதம புத்தர் இலங்கையைப் பன்முறை தரிசித்ததையும், விஜயன் இலங்கையை அடைந்ததையும், அசோகன் காலம் வரையும் இந்தியாவிலே பரந்த புத்த சமயத்தின் வரலாற்றையும், அச்சமயம் இலங்கைக்கு வந்த சம்பவத்தையும், அக்காலந்தொட்டு மகாசேனன் காலம் வரையும் இலங்கையிற் பரந்த புத்த சமயத்தின் வரலாற்றையும் அடக்கியுள்ளது. மகாவம்சம் எனும் இந்நூலிருந்தே இ. பி. 302-ம் ஆண்டுவரையுமுள்ள இலங்கைச் சரித்திரத்தை அறிய ஆதாரமாகவுள்ள சான்றுகளை நாம் பெற்றுக்கொள்கிறோம். மகாபோதி வம்சம் எனும் நூல் மகா வெள்ளரசின் வரலாற்றைக் கூறும் நூலாகும்

இக்காலத்திலே எழுதப்பட்ட சிங்கள நூல்கள் மிகச் சிலவே. அச்சில நூல்கள்தானும் பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்களின் மொழிபெயர்ப்பாகவோ அன்றேல் சங்கத நூல்களின் சார்பு நூல்களாகவோ விளங்குகின்றன. சியபாஸ்லேகர எனும் சிங்கள நூல் தண்டி என்பவர் எழுதிய சங்கத நூலாகிய காறவியதாச எனும் கவியின் சார்பு நூற்களாகவோ விளங்கின.

இக்காலத்திலே எழுதப்பட்ட ஒரு சங்கதநூல் ஜானக கர்ணம் என் பதாம். இந்நூல் சீதையை இராவணனுகிய இலங்கை அரக்க மன் னன் கவர்ந்த வரலாற்றைத் தருகின்றது.

சுருக்கம்

இலங்கையில் முதன்முதலிருந்து இலக்கிய நூல்கள் புத்த குரு மாரால் கொண்டுவரப்பட்ட நூல்களாம். இவை முதன்முதல் வால கம்பா என்னும் மன்னனின் காலத்தில் எழுதப்பட்டன. பாளி மொழி யிலுள்ள சமய சட்டங்களும், ஜாதகக் கதைகளும் சிங்களத்தில் எழு தப்பட்ட ஆகமக் குறிப்புகளும் தவிர சில காலமாக வேறு இலக்கிய நூல்கள் இலங்கையிற் இல்லை. மகாயான புத்தசமயம் இலங்கையிற் பரவிவருங்காலத்திலே சங்கத மொழியும் குருமாரிடையில் உடன் பர வலாயிற்று.

இக்காலத்திலே குப்த மன்னரின் ஆட்சியின்கீழ் அநேக சங் கத நூல்கள் இந்தியாவில் இயற்றப்பட்டன. இவற்றை வாசித்த சிங் கள குருமாரும் இலக்கிய நூல்கள் எழுத உந்தப்பட்டனர். இவர்கள் எழுதிய நூற்களில் பெரும்பாலானவை பாளி மொழியிலேயே சிங் களத்தில் எழுதப்பட்ட சில நூல்களும் உண்டு. சங்கதத்தில் எழுதப் பட்டது ஒன்றேயொன்றுகும்.

பயிற்சி IV

1. இடைவெளிகளை நிரப்புக:

(1) .....கொண்டுவரப்பட்ட பாஷையிலிருந்தே தற்காலத் துச் சிங்கள பாஷை வளரலாயிற்று.

(2) எழுதும் முறையை இலங்கைக்குக் கொண்டுவந்தவர்.....குரு மாரே.

(3) இலக்கிய நூல்கள் முதன்முதல் இலங்கைக்குப் புத்த குருமா ராலே கொண்டுவரப்பட்ட அந்நூற்களுள் சில:- (அ)..... .....(ஆ).....(இ).....

(4) இந்நூல்கள் புத்த குருமாரின்.....இருந்து வந்தன அவை எழுதப்படுவதற்கு மிகவும்.....எனக் கரு தப்பட்டன.

(5) புத்த வேதாகமங்கள் முதன் முதல்.....காலத்திலேயே இலங்கையில் எழுதப்பட்டன.

(6) மகாயான புத்த மதம் இலங்கையிலே பரவவே.....இங் குள்ள குருமார்.....கற்றுக்கொண்டனர்.

(7) இந்தியாவில்.....ஆட்சியின்கீழ் அநேக இலக்கிய நூல் கள் இயற்றப்பட்டனவென்று கேள்விப்பட்டு இலங்கையிலுள்ள புத்த குருமாரிற் சிலரும் இலக்கிய நூற்களை இயற்ற முன்வந் தனர்.

(8) இலங்கைக்கு.....வந்து பல இலக்கிய நூல்கள் எழுதிய தால் இலங்கையிலுள்ள அநேக புத்த குருமார் இலக்கிய நூல்கள் இயற்ற விரும்பினர்.

(9) இலங்கையிற் பெரும்பாலான இலக்கிய நூற்கள்.....மொழி யிலும்.....சிங்களத்திலும் .....சங்கதத்திலும் எழுதப்பட்டன.

II. 1. பாளிமொழியில் எழுதப்பட்ட 3 இலக்கிய நூல்களின் பெயர்களையும், சிங்கள இலக்கிய நூல்களில் ஒன்றன் பெயரையும், சங்கத்தில் எழுதப்பட்ட தனி ஒன்றின் பெயரையும் தருக.

III. சரியென நீர் கருதுவதின் கீழே கீறிடுக:-

அநேக நூல்கள் பாளி மொழியிலே எழுதப்பட்டன ஏனெனில் (அ) புத்த குருமாருக்கு பாளியைத் தவிர வேறு பாஷை தெரியாது. (ஆ) நூல் எழுதிய குருமார் தாம் எழுதியவற்றைப் பாளி மொழி அறிவுடைய மறு குருமாரின் உபயோகத்திற்கே எழுதினர். (இ) புத் தாகமங்கள் பாளி மொழியிலேயே இருந்தன.


III கட்டடக் கலை

இலங்கையின் ஆதி மனிதராகிய வேடர் குகைகளில் வசித்தனர். கி. மு. 500 ஆண்டு அளவிலே ஆரியர் இலங்கைக்கு வந்தனர். இந் தியாவில் மரங்களாலும் களிமண்ணாலும் கட்டப்பட்ட குடிசைகளில் அவர்கள் வசித்துவந்ததால் இத்தீவிலும் தாங்கள் வசிப்பதற்கு அத் தகைய வாசஸ்தலங்களே கட்டியிருக்க வேண்டும். இத்தகைய இல் லங்கள் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு நிலையாக இருக்க முடியா ததனால் இவர்கள் கட்டிய வீடுகள் ஒன்றும் இன்று காண்பதற்கில்லை.

செங்கட்டிகளினாற் கட்டப்பட்ட வீடுகள் இந்தியாவில் கி. மு. 2500 வருடங்களுக்குமுன் மகேஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் இருந்தன. மகேஞ்சதாரோ நாகரிகம் அழிந்தபின், செங்கட்டிகளி னாலும் கற்களினாலும் கட்டப்பட்ட வீடுகள் அசோகன் காலத்திலேயே மீளவும் காணப்பட்டன. அவ்வரசன் காலத்திலே செங்கட்டிகளும் கற்களும் தாது கோபங்களும், விகாரைகளும், மாளிகைகளும் கட்டு வதற்கு உபயோகிக்கப்பட்டன. புத்த சமய போதகர்கள் இலங்கைக்கு வந்தபோது மயூரப் பேரரசில் இருந்தன போன்ற தாது கோபங்களும் விகாரைகளும் இத்தீவிலும் கட்டி யெழுப்பப்பட்டன. புத்த சமயம் இலங்கைக்கு வருதலினாலேயே கற்களாலும் செங்கட்டிகளினாலும் கட்டும் வழக்கமும் இலங்கைத் தீவில் எழலாயிற்று.

விகாரைகள்

விகாரைகள் என்பன உண்மையில் சன்னியாசிகள் வசிக்கும் மடங்களே. ஒவ்வொரு விகாரையிலும் புத்தமத சந்நியாசிகள்



லோக மகாசய பென்னும் ஆயிரங்கால் மண்டபத்தின் தூண்கள்


வதிப்பதற்கென குறிக்கப்பட்ட சில தனி அறைகள் உள. உணவு அருந்துவதற்கு ஒரு பொது அறையையும் சமய உபதேசம் முதலிய வற்றுக்கு உபோசதமனையையும் காணலாம். ஒவ்வொரு விகாரைக்கும் ஒவ்வோர் தாது கோபம் உண்டு. உதாரணமாக மகாவிகாரை அழிந்து கிடக்கும் இடத்தைச் சுற்றி பல கட்டடங்களின் அழிவுகளைக் காணலாம். இவற்றுள் புத்த குமார் வசித்த அறைகள் போசனசாலையைக் குறித்துக்கொள்ள முடியாதிருக்கிறது. ஆனால் (உபதேசங்களுக்கு உபயோகிக்கப்பட்ட உபோசதசாலையாகிய) ஆயிரங்கால் மண்டபத்தின் தூண்கள் இன்னும் நிற்கின்றன. இப் பெரிய விகாரையின் தாது கோபமே 'றுவன் வலிசாய' என்பது.

தாது கோபங்கள்

புத்தருடைய காலத்துக்கு முன்புதானே இந்தியாவில் தாது கோபங்கள் கட்டி எழுப்பப்பட்டன. ஆனால் புத்தரின் காலத்தில் அவருடைய சிஷ்யர்களுடைய மேனிச் சாம்பலை அடக்கி தாது கோபங்கள் கட்டி எழுப்பும் வழக்கம் உண்டானது புத்தரின் மரணத்தின் பின்பு அவருடைய பரிசுத்த பொருட்களை அடக்கிக்கொள்ள தாது கோபங்கள் எழுந்தன. புத்த சமயம் இலங்கைக்குக் கொண்டுவரப் பட்டபோது இவ்வழக்கமும் இத்தீவில் புகுத்தப்பட்டு புத்தருடைய பரிசுத்த பண்டங்களை அடக்கியோ அல்லது மகிந்தன் போன்ற சிறந்த மத போதகரின் பரிசுத்த பண்டங்களை அடக்கியோ தாது கோபங்கள் எழுந்தன. இலங்கையில் முதன் முதல் கட்டி எழுப்பப்பட்ட தாது கோபம் தூபாரம என்பதே. இது புத்த பெருமானின் கழுத்தின் வலது எலும்பை அடக்கியுள்ளது. அதன்பின்புதான் துட்டகமுனுவினால் எழுப்பப்பட்ட றுவன வலிசாய, மிரிஸ்வத்திய என்னும் பெயர்கள் கொண்ட தாது கோபங்கள் தோன்றின. அபயகிரி தாது கோபம் வாலகம்பா அரசனாலே கட்டி எழுப்பப்பட்டது. இத் தாது கோபம் மகா சேனனால் விஸ்தரித்துக் கட்டப்பட்டது. மகா சேனனே சேதவனாரம என்னும் தாது கோபத்தையும் கட்டி எழுப்பினான். களனிபாவில் பேர்பெற்ற கோவில் வளவிலேயே தாது கோபமொன்று கட்டி எழுப்பப்பட்டது. உறுகுணை எனும் பிரிவிலே நிசமகருமய என்னும் தாது கோபத்தை கி. பி. 36-43 போல ஈழநாகன் என்பவன் கட்டி எழுப்பினான்.

இலங்கையிலே முதன் முதல் கட்டி எழுப்பப்பட்ட தாது கோபங்களானவை சாஞ்சியில் இருந்தனவற்றின் சாயலுடையன. இத் தாது கோபங்களிற் சில பிற்காலத்தில் பெருபித்துக் கட்டப்பட்டனவு மன்றிப் பிற்கால அரசர்களால் உருவமும் மாற்றி அமைக்கப்புட்டன. நீர்க்குமிழி போன்ற உருவமுடைய தாது கோபங்களே சர்வ சகஜமாயின. உருவன் வலிசாய என்பது இதற்கு உதாரணமாயிருக்கின்றது. களனியில் உள்ள தாது கோபம் நெற்குவியலின் உருவத்தை

உடையது. தூபரும தாது கோபமோ ஆதியில் நெற் குவியலின் உருவமுடையதாய் இருந்தபோதிலும் தற்காலத்தில் ஒரு மணியின் உருவமுடையதாகத் தோன்றுகிறது.



கேத்திர படம்

இலங்கைத் தாது கோபங்கள் ஒரு சதுரமான அல்லது வட்டமான அடிப்படைக் கட்டிடத்திலே கட்டி எழுப்பப்பட்டன. தாது கோபத்தின் முக்கிய பகுதி "டோம்" என்னப்படுகிற அரைவட்ட வடிவமான மூடு கூரையே. இம்மூடு கூரை மூன்று அடுக்குள்ள படிக் கட்டுகளிலிருந்து எழும். கூரையின் உச்சிப் பாகத்தில் ஹற்றரஸ் கொட்டுவ எனும் சதுர அமைப்பு ஒன்று இருக்கும். இவ்வமைப்பின் நடுப்பாகத்திலிருந்து வட்டமயமான ஒரு குறுகிய தூண் மேலே எழும். இதன் உச்சியிலேயே தாது கோபுரத்தின் "ஸ்பயர்" எனப்படுகின்ற நுண்ணிய நுனிப்புரி விளங்கும்.

பயிற்சி V

I. இடைவெளிகளை நிரப்புக:-

(அ) இலங்கையிலே இருந்த முதல் வாசஸ்தலங்கள்.....

(ஆ) ஆரியர் இலங்கையில் முதன் முதல் கட்டிய குடிசைகள்..... .....அல்லது மரத்தினுல் ஆகியன.

(இ) மகேஞ்சதாரோ காலத்துக்குப் பின்பு இந்தியாவில் கற்களாலும் செங்கட்டிகளாலும் ஆக்கிய வீடுகள்.....காலத்தன.

(ஈ) புத்த சமயம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பின்புதான் .....லும்.....லும் கட்டும் முறை இங்கே வழக்கமாயிற்று.

II. சுருக்கமாக விடை தருக:-

(அ) ஒரு விகாரையில் காணப்படும் வெவ்வேறு கட்டிடப் பகுதிகள் எவை?

(ஆ) இலங்கையிலுள்ள தாது கோபங்கள் பொதுவாக எந்த உருவங்களைப்போன்றன?

(இ) ஒரு படம் வரைந்து ஒரு தாது கோபத்தின் முக்கிய அம்சங்களை விளக்குக.

IV சிற்பம்

மரத்திலோ, கல்லிலோ, களிமண்ணிலோ உருவங்களைத் தயாரிக்கும் வேலையைச் சிற்பம் என்கிறோம். வீடு கட்டும் தொழில் போலவே இக்கலையும் இந்தியாவிலிருந்தே இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆகையினுல் இலங்கையிற் காணப்படும் செதுக்கு வேலைகளில் இந்திய வேலைகளின் குணக்குறிகளைக் காண்கின்றோம்.

(அ) சாதவாகன காலத்தின் செல்வாக்கு


இலங்கையிலே முதன் முதல் சிற்ப வேலைகள் சாதவாகனஇராச்சியத்திலிருந்து கொண்டுவரப்பட்டனவாம். இவைகளை கொழும்பு நூதன சாலையில் இன்றும் காணலாம். அவற்றின் ஒன்று மாயாவின் கனவு. வேறொன்று சரவஸ்தியின் அதிசயம் என்பது. இச்செதுக்கு வேலைகளைப்போன்ற பல இலங்கையிலேயும் தோன்றின. அபயகிரி விகாரையிலும் சேதவனரும விகாரையிலும் இவைபோன்ற சிலவற்றைக்காணலாம். ஏழு தலை நாகம் என்பதும் நாக அரசன் என்பதும் சான்றுகளாவன. (படத்தை மறுபக்கத்தில் காண்க.)




நாக அரசன் இலங்கை யிற் செதுக்கப்பட்ட சிற் பங்கள். இவை அநுரா தபுரியில் சேதவனராம விலுள்ள பிடத்தில் உள்ளன.

—

இவை சாதவாகன ஓரா ச்சியத்திலுள்ள அமரா வதியினதும் நாகருச்சு னக் கொண்டாவினதும் கலாக் குழுவின் செல் வாக்கைப் பிரதிபிம்பிக் கின்றன.







குப்தகால செல்வாக்கை பிரதிபிம்பிக்கும்
சிற்பங்கள்.

இடது பக்கம்:—இசுருமுனியாவில் உள்ள ஓர் 'தூட
வணும் மாதும்' எனும் உருவம்.

மற்றையது:—அநுராதபுரியிலுள்ள 'சந்திரகல்'
எனும் உருவம்.

பல்லவகால செல்வாக்கை பிரதிபிம்பிக்கும் செதுக்கு ஓவிய
உருவங்கள்.

மனிதனும் குதிரையினும் தல (இசுருமுனியா)

நாளந்த 'கெடிகே' (நாளந்த)

(ஆ) குப்த காலத்தின் செல்வாக்கு

குப்த காலத்தில் இந்தியாவில் தோன்றிய செதுக்கு ஓவியங்கள் மிக உயர் வகுப்பைச் சேர்ந்தனவென முன்பு படித்துள்ளோம். குப்த காலத்திலே இந்தியாவில் இருந்தன போன்ற இரு செதுக்கு ஓவியங்களை அநுராதபுரியில் காணலாம். அங்கு இராணியின் மாளிகை என்று கூறப்படும் இடத்தின் முன்றிலிலுள்ள 'சந்திரகல்' ஒன்றாகும். மற்றது இசுரு முனியா எனும் இடத்தில் உள்ள 'ஆடவனும் மாதும்' எனும் ஓர் உருவமாம் (படத்தை மறு பக்கத்திற் காண்க)

(இ) பல்லவர் காலத்தின் செல்வாக்கு

முந்திய அத்தியாயத்தில் பல்லவரின் பேரரசில் மிகவும் உயர்ந்த சிற்பங்கள் இருந்தன என்பதைக் கண்டுள்ளோம். மாமல்லபுரத்திலுள்ளன போன்ற இரு செதுக்கு ஓவியங்கள் இலங்கையிலும் உள்ளன. இவ்விரண்டையும் இசுருமுனியாவிற் காணலாம். ஒரு மனித னுடையவும் குதிரையுடையவும் தலையைக் காட்டும் உருவம் ஒன்று. மற்றையதில் ஒரு பாரிய கல்லின் பிளவிலுள்ள இரு பக்கங்களிலும் யானைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன (படத்தை மறு பக்கத் திற் காண்க.)

அநுராதபுரியிலுள்ள கட்டடங்களில் அநேகம் ஒரே வகையான வாயில்கள் உடையன (படத்தை மறுபக்கத்திற் காண்க) தனிக் கற்களால் ஆக்கப்பட்ட படிக்கட்டுகள் கட்டடங்களுள் பிரவேசிக்க உதவுகின்றன. படிக்கட்டுகளின் அடியில் ஒவ்வொரு சந்திரகல் (Moonstone) உண்டு. படிக்கட்டுகளின் இரு அந்தங்களிலும் பக்கக் குறு மதில்கள் உண்டு. இக்குறுமதில்களின் முன்புறத்தில் துவாரபாலகக் கற்கள் (Guard Stone) எனப்படுவனவற்றைக் காணலாம். ஒவ்வோர் படியடியிலும் மூன்று குள்ளரின் சிறு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவைகளைப் பார்த்தால் அப்படிகளைத் தம் தோளிலே தாங்கும் தன்மையனவாகத் தோன்றும். சந்திர கல்லின் மத்தியில் ஒரு தாமரைப் பூவின் வடிவத்தை காணலாம். இதைச் சுற்றிலும் இலை அடுக்கு உருவங்கள் உண்டு. அதற்குமேலே வாத்து அடுக்கு உருவங்களும் அதைச் சூழ மேலும் ஒரு இலை அடுக்கு உருவங்களும் அதற்குமேல் முறையே யானை, குதிரை, சிங்கம், எருது அடுக்கு உருவங்களும் இருக்கும். பக்கக் குறு மதில்கள் 'மகர' எனப்படும் உருவ வடிவமாக உண்டு. துவார பாலகக் கற்கள் பலவற்றில், ஒவ்வொன்றிலும் ஒரு நாக அரசனின் உருவம் அமைக்கப்பட்டிருக்கும்.

(V) வர்ண ஓவியங்கள்

வர்ண ஓவியங்களை அநேக குகைகளிலும் தேவாலயங்களின் சுவர்களிலும் இலங்கையிற் காணலாம். ஆனல் சிகிரியாவில் காணப்படும் சித்திரங்களோ தெளிவிலும் அழகிலும் ஒப்புயர்வற்றன. ஒரு

நீண்ட குகையின் நடுப்பாகத்தில் உள்ள பக்கக் கற்சுவர்களில் 21 பெண்மணிகளின் உருவங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அவ்வுருவங்களின் மேற்பகுதிகள் மாத்திரம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு உருவமும் முகில்களுக்கு மேல் தோன்றும் பான்மையானது. இவைகள் இராணிமாரினதும் அவர்களின் ஏவற் பெண்களினதும் உருவங்கள் என்பர் சிலர். வேறு சிலர் இவைகளை சங்கீதக் கூட்டத் தேவகன்னிகைகள் என்பர். நமது புதைபொருள் ஆராய்ச்சி யதிபராகிய கலாநிதி பர்ணவிதானை என்பவர் இவ்வுருவங்கள் மேகக்கன்னிகைகளினதும் மின்னற் கன்னிகைகளினதும் உருவங்களென அபிப்பிராயங் கொண்டுள்ளனர்.

இச்சித்திரங்கள் இந்தியாவில் குப்தமன்னரின் காலத்தில் அஜந்தாக் குகைகளில் காணப்பட்ட சித்திரங்களைப் போன்றன. ஆகையால் இலங்கையின் புராதன வர்ண ஓவியங்களிலும் இந்திய வர்ண ஓவியச் செல்வாக்கு காணப்படுகின்றது: ஆகையால், கட்டடக்கலை, சிற்பம், வர்ண ஓவியக்கலை, முதலியன புத்தமதத்துடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன என்பது வெளிப்படை. ஆகவே இந்திய நாகரிகத்தின் செல்வாக்கு இலங்கையிலேயும் அநுராதபுர காலத்திலே அதிகம் காணப்படுகிறது.

பயிற்சி VI

சுருக்கமான விடைதருக:-

(அ) இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழைய சிற்பங்கள் எந்த இராச்சியத்திலிருந்து இங்கே கொண்டுவரப்பட்டன?

(ஆ) இலங்கையிலேயே செதுக்கப்பட்ட இதுபோன்ற இரு சிற்பங்கள் எவை?

(இ) குப்தகால சிற்பங்களின் சாயலாக இலங்கையிலிருக்கும் இரு சிற்பங்களின் பெயர் என்ன?


(ஈ) பல்லவ இராச்சியத்தில் இருக்கும் சிற்பங்களின் சாயலாக இலங்கையிலிருக்கும் சிற்பங்கள் எவை?

(உ) அநேக புராதன கட்டிடங்களுக்கு உட்புகும் வழியில் இருக்கும் வாயில்களை வர்ணிக்குக.

(ஊ) ஒரு சந்திர கல்லில் உள்ள அடுக்கு உருவங்களை வர்ணிக்குக.

11–ம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. தேரவாத, மகாயான புத்த சமயங்களுக்கு உள்ள வித்தியாசத்தை விவரிக்குக.
2. கீழே காணப்படும் தலைப்புகளில் மகாயான புத்த சமயம் எவ்வாறு நிலைநாட்டப்பட்டது என்று கூறுக.



அநுராதபுரியிலுள்ள ஓர் கட்டடம்

(அ) மகாவிகாரையிலிருந்து அபயகிரி விகாரை எவ்வாறு பிரிந்தது?

(ஆ) மகாயான புத்த சமயத்தின் வருகை.

(இ) மகாயானத்திற்கு அரசர் யாது செய்தனர்?

(ஈ) ஏன் மகாசேனன் மகாயான புத்த சமயத்தை ஆதரித்தான்.

(உ) சேதவனவிகாரை மகாயானத்தை எப்போது ஏற்றுக்கொண்டது?

3. புத்த சமயத்தில் (அ) மகாயான மதத்தினுல் (ஆ) இந்து மதத்தினுல், எவ்வகை மாற்றங்கள் உண்டாயின?

4. இலங்கைப் புத்த குருமார் இலக்கிய நூல்கள் இயற்ற எவ்வாறு தூண்டப்பட்டனர்? இலங்கையில் எவ்வகையான நூல்கள் இயற்றப்பட்டன என்பதற்கு உதாரணங்கள் தருக.

5. ஒரு தாது கோபத்தின் படத்தை வரைந்து அவற்றின் உறுப்புகளை விளக்குக.

6. அநுராதபுரிக் காலத்துள்ள ஒரு கட்டிடத்துச் சாதாரண வாயிலை விவரித விளக்கி எழுதுக.

7. சாதவாகன, குப்த, பல்லவ, சிற்பக்கலையில் இருந்து இலங்கையில் சிற்பம் அடைந்துள்ள பேறுகள் யாவை?

8. சிகிரிய சித்திர நிரைகளைப்பற்றிய வெவ்வேறு அபிப்பிராயங்கள் எவை? இந்தியாவில் எங்குள்ள சித்திரங்களை இவை ஒத்தன?


12-ம் அத்தியாயம்

பிற்கால தென் இந்தியப் பேரரசுகள்

I சோழர் II பாண்டியர் III விஜயநகரம்

பத்தாம் அத்தியாயத்தில் பல்லவர் எவ்வாறு தென் இந்தியாவில் ஒரு பேரரசை நிலைநாட்டினரென்றும், இந்து மதத்தையும் சங்கத மொழியையும் பரவச் செய்தனரென்றும் படித்திருக்கிறோம். பல்லவருடைய நாட்டுக்கும் பாண்டியருடைய நாட்டுக்கும் இடையிலேயே சோழருடைய பழைய இராச்சியம் இருக்கின்றது. கி. பி. 900 வருட

தென் இந்தியாவும் இலங்கையும்




(குறிப்பு:- தென் இத்திய இராச்சியங்களாகிய சோழ, பாண்டிய, சேரதேசங்கள்)

மளவில் பல்லவ சைன்னியங்களும் பாண்டிய சைன்னியங்களும் இரு நூறு வருடமளவாகத் தங்களிடையே நடந்துவந்த போரினால் களைத்து அலுத்துப்போயின. சோழநாட்டு விஜயாலயன் என்னும் தலைவன் இவர்கள் களைத்துப் பலம்குன்றி இருப்பதை அறிந்து தஞ்சூரைக் கைப்பற்றி அதைத் தன் தலைநகரமாக்கினன். அவன் மகன் ஆதித்

தன் பல்லவரை வென்று அவரது நாட்டை சோழரின் ஆட்சிக்குள் ளாக்கினன். அடுத்த சோழ அரசன் முதலாம் பராந்தகன் என்பவன். இவன் கி. பி. 907 தொடக்கம் 932 வரையும் நாட்டை ஆண்டு வந்தான். இவன் பாண்டியருடன் போர் தொடங்கினன். பாண்டியரைப் பராந்தகன் வென்றுவிடுவானுயின் தங்கள்மேல் படையெடுப்

தென் இந்தியா



(குறிப்பு:- இந்தத் தேசப்படத்தைச் சோழ 2-ம் பாண்டிய பேரரசுகளைப் படிக்கும்போது உபயோகிக்கவும்.)

பான் என இலங்கை மன்னர் பயந்து தயங்கிப் பாண்டியருக்குப் போரில் உதவிசெய்ய முன்வந்தனர். இவர்களுடைய உதவியைப் பாண்டியர் பெற்றிருந்தும் சோழனுலே தோற்கடிக்கப்பட்டனர். பாண்

டிய மன்னன் இராசசிங்கன் தனது அரசமுடியையும் வேறு விலையு யர்ந்த அரச ஆபரணங்களையும் கொண்டு இலங்கையிற் சரண்புகுந்து அப்பொருட்களைப் பாதுகாத்துக் கொடுக்கும்படி சிங்கள மன்னன் 5-ம் தப்புளு என்பவனிடம் ஒப்படைத்தான். இதை அறிந்த பராந்தகன் தப்புளுவை அப்பொருட்களை தன்னிடம் கொடுத்துவிடும்படி பயமுறுத் தியும் பயனில்லாததால் இலங்கைமேற் படையெடுத்து அநுராதபுரி யைக் கைப்பற்றினான். ஆனால் அவன் தனது நாட்டில் இல்லாததை அறிந்த இராஷ்டிரகூடர் என்னும் சாதியினர் அவனது நாட்டைத் தாக்க பராந்தகன் அநுராதபுரியிலிருந்து விரைந்து தனது நாடு சென்று இராஷ்டிரகூடருடன் போராடவேண்டியவனானான்.


சோழ மன்னரில் மகா இராசராசனும் (கி. பி. 985—1015) அவன் மகன் 1-ம் இராசேந்திரன் (கி. பி. 1016—1044) ஆகியவர் அதிகீர்த்திபெற்றவர். 1-ம் பராந்தகன் காலத்தின் பின்பு சோழரின் ஆதிக்கம் குறைந்துவிட்டது. ஆனால் மகா இராசராசன் சோழ தேசத்தை ஒரு மகா பேரரசாக்கி சிறப்பான ஆட்சியும் மகா வலிமை யும் அதற்கு அளித்தனன். பாண்டியரையும் சேரரையும் வென்று சாளுக்கியரின் பலத்தை அடக்கி கலிங்க தேசத்தையும் அடிப்படுத்தி னான். அதனால் அவன் பேரரசு வடக்கே மகாநதி தொடக்கம் தெற்கே குடாநாட்டின் தெற்கெல்லை வரை நிலவியது. அதன் பின்பு இலங் கையின்மேல் அவன் படையெடுத்தனன். அநுராதபுரம் அவனால் நிர் மூலமாக்கப்பட்டு இராச இரட்டை எனும் பிரிவு அடிப்படுத்தப்பட்டது. தலைநகரத்தையும் அநுராதபுரத்திலிருந்து பொலனறுவைக்கு மாற்றி அந்நகரத்திற்கு சனநாதபுரம் எனும் புது நாமத்தையும் இட்டனன். இவ்வாறாக இராச இரட்டை எனும் பிரிவு ஒரு சோழ மாகாணமாக மாறிற்று. இவ்வரசன் நிறுவிய கடற்படையின் உதவியினால் இலங் கைத்தீவு; மாலதீவு எனும் தேசங்களும் சோழனின் ஏகாதிபத்தியின் பிரிவுகளாயின. இராசராசன் ஒரு சிறந்த யுத்த வீரன் மாத்திரமல்ல அவன் ஒரு சிறந்த அதிகாரியுமாய் விளங்கினான். நாடு சிறப்பாக ஆளப்பட்டது. சமயம், கல்வி, வர்த்தகம் முதலியன தழைத் தோங்கின. அநேகாநேக கோவில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் மகா கீர்த்தி பெற்றது தஞ்சூரில் உள்ள இராசராசேஸ்வர கோவி லென்பதே.

இவ்வரசனின் மகனாகிய 1-ம் இராசேந்திரன் தன் தந்தையாரின் வேலையைத் தொடர்ந்து நடத்திச் சோழப் பேரரசை உன்னதநிலை அடையச் செய்தான். தந்தையாரின் கடற்படையின் உதவியினால் மலையாள தேசம் முழுவதையும், இலங்கைத்தீவு முழுவதையும் தன் னடிப்படுத்தினான். அந்தமான், நிகோபார் தீவுகளும் பேரரசுடன் சேர்க்கப்பட்டன. இவன் கங்கைநதி தீரமளவும் தன் சைனியங்களுடன் சென்றனன் என்றும் கூறுவர். இச்செயலை விழாக் கொண்டாடி

'கங்கை கொண்ட சோழன்' எனும் நாமமும் பூண்டு 'கங்கை கொண்ட சோழபுரம்' எனும் ஒரு தலைநகரமும் நிறுவினான். அவன் மரணத் தின் பின்பு சோழரின் ஆதிக்கம் குன்றிவந்து கி. பி. 12-ம் நூற் றாண்டில் தென் இந்தியாவில் பாண்டியரின் ஆதிக்கம் உண்டானது.

சோழரின் பண்பாடு

சோழருடைய காலமே தென் இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு பொற்காலம் என வழங்கப்படுகிறது. தென் இந்தியா முழுவதும் ஓர் ஆட்சியின் கீழ் நிலவியது. சோழர் இந்நிலப்பரப்பு முழுவதற் கும் சிறந்த ஸ்தல ஸ்தாபன அரசாட்சியும், மத்திய அரசாட்சியும் அளித்தனர். சோழரைப் பல்லவரின் உரிமைக்காரர் என்பர். அதற்குக் காரணம், அவர்கள் பல்லவரைப்போலவே ஆட்சி முறையை



தஞ்சூர் — இராஜராஜேஸ்வரி கோவில்

(குறிப்பு:- இக்கொடுமுடி 14 அடுக்குகள் உள்ளதும் 190 அடி உயரமுமுடையது.)

நடாத்தியதும், இந்து சமயமும், கல்வியும் பல்லவர் காலத்திற் போலவே வளர்ந்து செழிப்படைந்ததுமேயாம். அவர்கள் அரண் மனைகளை இராமாயணம் பாடிய கவியரசர் கம்பரும், நள வெண்பா பாடிய புகழேந்திப் புலவர் முதலியோரும் சிறப்பித்தனர். சிவ பெருமானையும், விஷ்ணுவையும் வணங்கிய இந்து மதக் கலைஞர்

தமிழில் பக்திப் பாடல்களைப் பாடி சிவ பக்தியையும் விஷ்ணு பக்தியையும் மக்கள் மனதில் சுவாலித்தெரியச் செய்தனர். இராசராசனும், இராசேந்திரனுலும் கட்டப்பட்ட கோவில்கள் தமிழ் நாட்டில் காணப்பெற்ற சிறந்த சிற்பக் கட்டிடங்களுள் பெருமைவாய்ந்தன. சோழரால் சமைக்கப்பட்ட வெண்கலச் சிலைகள் உலகத்திலேயே திறமையான சிற்பச் சிலைகளென பெயர் பெற்றுள்ளன. இவைகளுள் மகா பிரசித்திபெற்றனவாக (சிவபெருமானின்) 'நடராஜ நடனம்' எனும் சிலையும், ஒரு சோழ இராணியின் சிலையும் விளங்குகின்றன. சோழரின் ஆட்சிக்காலத்தில் வியாபாரமும் வர்த்தகமும் வளர்ந்து வந்ததனுல் செல்வாக்குள்ள நாடாய் அவர்களின் இராச்சியம் விளங்கிற்று. துறைமுகங்கள் பிறநாட்டுக் கப்பல்களால் நிறைந்திருந்தன. பிற நாட்டு வியாபாரிகளுக்கென விசேஷ வாசஸ்தலங்கள் கட்டப்பட்ட இடங்கள் இருந்தன. யானைகளும், யானைத் தந்தங்களும், இரத்தினக் கற்களும், முத்துக்களும், வாசனைச் சரக்குகளுமே பிரதான ஏற்றுமதிப் பொருட்களாயிருந்தன.

பயிற்சி I

1. எந்த அரசனின் ஆட்சிக்காலத்தில் சோழர்களின் செல்வாக்கு ஆரம்பித்தது?
2. பாண்டியரைத் தாக்கிய சோழ அரசன் எவன்?
3. பாண்டியருக்கு உதவிசெய்ய முயன்ற அரசர் எவர்?
4. சோழரால் தோற்கடிக்கப்பட்டதன் பின்பு, உதவி தேடி இலங்கைக்கு வந்த பாண்டிய அரசன் யார்?
5. சிங்கள அரசனிடம் பாதுகாப்புக்குப் பாண்டிய அரசன் கொடுத்தது எது?
6. மிகப் பிரசித்திபெற்ற் இரு சோழ அரசர் எவர்?
7. இராசராச சோழன் அடிப்படுத்திய தேசங்கள் எவை?
8. இராசராசன் தஞ்சூரில் கட்டி எழுப்பிய கோவிலின் பெயர் என்ன?
9. இலங்கையின் எப்பாகத்தை இராசேந்திர சோழன் தனது ஆட்சிக்குட்படுத்தினன்?
10. இராமாயணத்தைத் தமிழில் எழுதிய தமிழ்ப் புலவர் யார்?
11. சோழர் காலத்தில் தென்னிந்தியாவில் எவ்வழிபாடு பரவிற்று?
12. பிறநாடுகளில் வியாபாரம் செய்யப்பட்ட இந்நாட்டுப் பொருள்கள் எவை?

2–ம் பாண்டியப் பேரரசு


10-ம் அத்தியாயத்தில் கி. பி. சுமார் 300 தொடக்கம் 600 வருட மளவும் பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையில் தொடர்பாக யுத்தம் நடந்துவந்ததெனக் கண்டுள்ளோம். இக்காலத்தில் பாண்டியர் ஒரு பேரரசை நிறுவியிருந்தனர். ஸ்ரீமார ஸ்ரீவல்லபன், அக்காலப் பாண்டியப் பேரரசர்களுட் பெரும் கீர்த்தியுடையவன். சோழரின் ஆட்சிக்காலம் கி. பி. 900 வருடம் அளவில் தொடங்கவும் பாண்டியர் சோழரால் அடிப்படுத்தப்பட்டு அடுத்த 300 ஆண்டுகளாகச் சோழரால் ஆளப்பட்டுவந்தனர். ஆனுல் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதிக்காலத்தில் சோழரின் பலம் குன்றவே, பாண்டியர் சோழரைச் சிதற அடித்துத் தமது இரண்டாம் பேரரசை நிறுவிக்கொண்டனர். இப்பேரரசில் மிகப் பிரசித்திபெற்ற பாண்டிய மன்னன் சடாவர்மன் சுந்தர பாண்டியனேயாம். (1253—1270) இரண்டாம் பாண்டியப் பேரரசு இம்மன்னனின் காலத்திலேயே அதி உச்சநிலையடைந்து விளங்கியது. படிப்படியாக தென்னிந்தியாவில் வடக்கிலுள்ள நெல்லூர் தொடக்கம் தெற்கிலுள்ள இலங்கைவரையும் உள்ள சகல நாடுகளும் இப்பேரரசில் அடக்கப்பட்டன. இவனுக்குப்பின் ஆட்சிபுரிந்த குமாரவர்மன் குலசேகரன் (கி. பி. 1268—1310) இலங்கையையும் அடிப்படுத்தினன். கி. பி. 1284-ம் ஆண்டு தொடக்கமாக இருபது வருட காலமாய் இலங்கை பாண்டியப் பேரரசில் அடங்கியிருந்தது.

குலசேகரனின் ஆட்சிக் காலத்தின் பின்பு பாண்டியரின் செல்வாக்குக் குன்றத் தொடங்கியது. அவனுடைய இரு புத்திரருக்கு மிடையில் தொடங்கிய உள்நாட்டுக் கலகம் பாண்டியப் பேரரசின் பலத்தைக் குறைத்துவிட்டது. அக்காலத்தில் வட இந்தியாவில் ஆட்சி புரிந்து வந்தவரான மகமதியர் 1330-ம் ஆண்டில் பாண்டிய இராச்சியத்தின்மீது படையெடுத்தனர். முஸ்லிம் பேரரசனுகிய மகமது இபுன் ரக்லக் என்பவன் தென்னிந்தியாவை அடிப்படுத்த தன் சேனுதிபதியாகிய சலேளடின் என்பவனை அனுப்பி மதுரையைக் கைப்பற்றினன். இவ்வாறு இரண்டாம் பாண்டியப் பேரரசு முடிவடைந்து ஒரு சிறு நிலமாக 17-ம் நூற்றுண்டில் பிரித்தானியர் இந்தியாவுக்கு வரும் காலமளவும் இருந்தது.

பாண்டியப் பண்பாடு

பாண்டியப் பேரரசிலுள்ள நிலைமைகள் சோழப் பேரரசின் நிலைமைகளைப் பெரும்பாலும் ஒத்திருந்தன. பாண்டிய அரசர்களும் நாட்டைச் சிறப்பாக ஆண்டுவந்தனர். விவசாயமும் வர்த்தகமும் பெரிதும் கவனிக்கப்பட்டு வந்தன. நீர்ப்பாசன வேலைகள் அமைக்கப் பெற்றன. கிழக்குத் தேசங்களிலிருந்தும் மேற்குத் திக்குகளிலிருந்தும் வந்த கப்பல்கள் தென்னிந்திய துறைமுகங்களில் நிறைந்திருந்

தன. இந்துமதம் செழித்து ஓங்கி வந்தது. அநேக கோவில்கள் கட்டப்பட்டன. அக்காலத்திலிருந்த சிறு கற்கோவில்களைச் சுற்றிப் பாரிய கட்டடங்கள் கட்டப்பட்டு அக்கோவில்கள் திருத்தம் அடைந்தன. சோழர் பிரமாண்டமான கொடுமுடிகளுடன் கோவில்கள் கட்டினர். பாண்டியர் கட்டிய கோவில்களில் கோபுரங்கள் என அழைக்கப்படும் பாரிய



கோபுரங்கள்
(கோவில்களின் பிரமாண்டமான வாயில்கள்)

வாயில்களைக் காணலாம். இக்கோவில்கள் கலைகளுக்கும் பண்பாட்டுக்கும் நடுநாயகங்களாக விளங்கின. சங்கீதம், சித்திரக்கலை, நாடகம் முதலியனபாண்டிய அரசரின் ஆதரவு பெற்றுத் தழைத்தோங்கலாயின. இக்காலத்திலே இந்தியாவுக்கு வந்தவரான மாக்கோ போலோ என்பவர் பாண்டிய இராச்சியத்தைப்பற்றிச் சிறப்பாக எழுதியிருக்கின்றார்.

பயிற்சி II

இடைவெளிகளை நிரப்புக:


1. இரண்டாம் பாண்டியப் பேரரசில் மிகப் பிரசித்திபெற்ற அரசன் .....
2. இவனது ஆட்சியில் வடக்கில்.....தொடக்கம் தெற்கில் .....மட்டும் உள்ள தென்னிந்திய நாடுகள் யாவும் இணைக்கப்பட்டுள்ளன.
3. இவனுக்குப்பின் ஆண்ட.....அரசன் இலங்கையை அடிப்படுத்தினன்.
4. கி. பி. 1284-ம் ஆண்டு தொடக்கம்.....வருடமளவும் இலங்கை பாண்டியப்பேரரசில் அடங்கியிருந்தது.
5. .....மன்னனின் மரணத்துக்குப்பின் 2-ம் பாண்டியப் பேரரசு பலங்குன்றத் தொடங்கியது.
6. 1330-ம் ஆண்டில் முஸ்லிம் பேரரசன் தென்னிந்தியாவை அடிப்படுத்த.....என்பவனை அனுப்பிவைத்தான்.
7. .....வெல்லப்பட்டதன்பின் 2-ம் பாண்டியப் பேரரசு இறுதியடைந்தது.
8. 2-ம் பாண்டியப் பேரரசின் பண்பாடும்.....பேரரசின் பண்பாடும் பல வித்தியாசங்கள் உடையனவல்ல.
9. .....எனப்படும் பாரிய வாயில்கள் உள்ள கோவில்களைப் பாண்டியர் கட்டி எழுப்பினர்.
10. .....என்பவர் இக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார்.

விசயநகரப் பேரரசு

எட்டாம் அத்தியாயத்தில் இஸ்லாமியம் ஆசிய துருக்கியிலிருந்து இந்திய எல்லையளவாக எவ்வாறு பரவிற்று என்று படித்திருக்கிறோம். பிரதம இஸ்லாமிய அதிபதியை காலிப் என்று அழைத்தனர். இவருக்கு துருக்கிய வீரர் மெய்க்காப்பாளர் குழுவினராகத் தொண்டாற்றினர்.

இத்துருக்கியர் பலத்தில் மிகுந்து, வீரத்தலைவரின் தலைமையில் பார்சியா, ஆபுகானிஸ்தான் ஆகிய நாடுகளை அடிப்படுத்தி இந்தியாவையுந் தாக்கினர். இந்திய தேசமானது இக்காலத்தில் பல்வேறு பிரிவுகளாகப் பிரிபட்டுப் பிரிவுகள் பலவும் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டதனால் தேசம் பலங்குன்றி இஸ்லாமியரின் ஆக்கிரமிப்பை எதிர்க்கமுடியாத நிலையில் இருந்தது. அதனால் விரைவில் துருக்கியர் வட இந்தியாவின் பெரும்பாகத்தைத் தம்மடிப்படுத்தினர். கி. பி.

1206-ம் ஆண்டில் குதுப் உதின் என்பவன் டெல்கி நகரத்தில் தனது அரசிருக்கையை (சுலுத்தானித்துவத்தை) நிறுவினன். அவனைப் பின்தொடர்ந்துவந்த சுலுத்தான் அரசர்கள் வட இந்தியா முழுவதையும் துருக்கியருக்கு அடிப்படுத்தினர்: சுலுத்தான் அரசர்களில் மிகப் பிரசித்திபெற்றவன் அலா உதின் என்பவனே (கி. பி. 1290—1315).



விசயநகரப் பேர்ரசு

வட இந்தியா முழுவதையும் ஆண்டுவந்த இவ்வரசன் இந்தியாவின் மறு பாகங்களையும் தனதடிப்படுத்த எத்தனித்து தக்காணப் பிரதே

சத்தைத் தனதாட்சிக்கு உட்படுத்த மலிக்கபூர் என்னும் ஓர் சேனுதி பதியின் தலைமையில் ஒரு சேனையை அங்கு அனுப்பிவைத்தான். அங்கே மலிக் கபூர் அடைந்த மகத்தான வெற்றியின் காரணமாக மத்திய இந்தியாவும் சுலுத்தானின் ஆட்சிக்குட்பட்டது.

ஆனல் தென்னிந்தியா மாத்திரம் இன்னும் அடிப்படுத்தப்பட வில்லை. அலா உதின் தென்னிந்தியாவையும் அடக்கிக்கொள்ள மிக வும் முயன்றான். அவனுக்குப்பின் ஆண்டுவந்தவர்களில் மகமது இபின் ரக்லக் என்பவனும் அவ்வேலையில் ஈடுபட்டான். இவர்கள் தென்னிந்தியாவுக்கு அனுப்பிய சேனைகள் மகத்தான வெற்றி அடைந்தபொழுதிலும் இஸ்லாமியப் பேரரசில் உண்டான குழப்பங்க ளால், இப்பிரதேசத்தை அவர்கள் தங்கள் ஆட்சிக்குள் அடக்கிக் கொள்ளமுடியவில்லை. எனினும் சுலுத்தான் பேரரசர்கள் இவ் வெண்ணத்தைக் கைவிடவில்லை. ஆதலால் தென்னிந்திய பிரதேச மானது சுலுத்தானியரிலிருந்து ஆபத்தை எதிர்பார்க்க வேண்டியதா யிருந்தது.

நிலைமை இவ்வாறுயிருக்கும்போது, அரிகரன் பக்கன் எனும் இரு வீரச் சகோதரர்கள் துங்கபத்திரா எனும் நதியோரத்தில் ஒரு நக ரத்தை நிறுவி அதற்கு விசயநகரம் (வெற்றிநகரம்) எனும் பெயரு மிட்டு, அரண்செய்து பலமான சைனியங்களை உள்ளடக்கி, அங்கிருந்து முஸ்லிம் ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தலைப்பட்டனர். நாளடைவில் தென் னிந்தியாவின் பல பாகங்களில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டி விசய நகரப் பேரரசை நிறுவினர். கி. பி. 1379-ம் ஆண்டில் பக்கன் இறந்தபோது இப்பேரரசு தெற்கு எல்லை காவேரிவரை விளங்கிற்று. அவனுடைய பின்னோர் இவ்விராச்சியத்தை பெருப்பித்து, பலப்படுத்தி வைத்தனர். விசயநகர மன்னரில் மிகப்பிரசித்திபெற்றவன் கிருஷ்ண தேவராயன் என்பவனே (கி. பி. 1509—1530). இவனது சேனைகள் இலங்கையையும் ஆக்கிரமித்தனவெனவும் கூறுவர். இவன் ஆண்டு வருங்காலத்தில் போர்த்துக்கேயர் இந்தியாவில் மேற்குக் கரையோரங் களுக்கு வந்தனர். போர்த்துக்கேயர் இஸ்லாமியரைத் தமது பகைவர் எனக் கணித்து வந்ததினல் கிருஷ்ணதேவராயருடன் உறவு பாராட் டினர். இவ்வரசனின் மரணத்தின் பின்பு விசயநகரப் பேரரசு பலங் குன்றி அழியத் தொடங்கியது. கி. பி. 1565-ம் ஆண்டு இஸ்லாமிய மாகாணங்கள் ஒன்று சேர்ந்து கலிக்கோட்ட எனும் போர்க்களத்தில் இப்பேரரசை முறியடித்தனர். பலம்வாய்ந்த இப்பேரரசு இப்போர் நடந்து சிறிது காலத்துக்குப்பின் முற்றுக அழிவுற்றது.

விசயநகரப் பண்பாடு

எங்கெங்கே இஸ்லாமியர் ஆட்சிபுரிந்தனரோ அங்கெல்லாம் தமது சமயத்தையும் பண்பாட்டையும் அவர் பரப்பிவந்தனர். இவர்

கள் ஆண்டுவந்த காலத்தில் வட இந்தியாவில் இந்துமதமும் இந்துப் பண்பாடும் சிதைவுற அவற்றின் இடத்தை இஸ்லாமிய மதமும் பண்பாடும் பற்றிக்கொண்டன. முந்நூறு வருட காலமாக விசயநகரப் பேரரசு இஸ்லாமிய ஆக்கிரமிப்பைத் தடுத்து நின்று, தென்னிந்தியாவில் இந்துமதத்தையும் அவர்களின் பண்பாட்டையும் காத்துவரலாயிற்று. இந்தியாவின் ஏனைய பாகங்கள் இஸ்லாமியரின் ஆட்சிக்குட்பட்டிருக்குங்காலத்தில், தென்னிந்தியாவில் இவ்வாறு இந்து சமயமும், இந்து இலக்கியங்களும், இந்து சிற்பக்கலைகளும் ஒருவகையில் தழைத்து ஓங்கலாயின.

விசயநகரப் பேரரசுகள் இந்து சமயத்தையும் இந்து சித்திரக் கலைகளையும் பெரிதும் ஆதரித்தன. சங்கதத்திலும், தெலுங்கிலும், தமிழிலும் இலக்கிய நூல்கள் அநேகம் வெளிவந்தன. சகல சமயப் போதனைகளுக்கும் இடமளித்தபோதிலும் சிவ, விஷ்ணு வழிபாடுகளை இவ்வரசர் விசேஷமுறையில் கவனித்துவந்தனர். வர்த்தகம் செழித்து விளங்கிற்று. பிறநாட்டுப் பிரயாணிகள் இப்பேரரசின் செல்வத்தையும், செழிப்பையும் பலத்தையும்பற்றிப் பெரிதும் பாராட்டி எழுதி இருக்கின்றனர்.

பயிற்சி III

1. வட இந்தியாவை அடிப்படுத்துதல் இஸ்லாமியருக்கு இலகுவாயிருந்தது ஏன்?
2. தெல்கியில் சுலுத்தானிய அரசிருக்கை எவ்வரசனால் நிறுவப்பட்டது?
3. இக்காலத்தில் சுலுத்தான் அரசர்களில் மிகப் பிரசித்தி பெற்றவன் எவன்?
4. விசயநகரப் பேரரசுக்கு அடிகோலியவர் யார்?
5. இப்பேரரசின் மன்னருள் மிகப் பிரசித்திபெற்றவன் எவன்?
6. இஸ்லாமியர் விசயநகர மன்னரைத் தோற்கடித்த போர்க்களம் யாது? தேதி எது?
7. இந்தியாவின் சரித்திரத்தில் விசயநகர அரசாங்கம் எடுத்துக் கொண்ட பங்கில் மிகச்சிறந்த அம்சம் யாது?
8. இக்காலத்தில், இச்சக்கராதிபத்தியத்தில் எந்தெந்தப் பாஷைகளில் இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன?
9. விசேஷ கவனம் இம்மன்னர்களால் எச்சமயத்துக்குக் கொடுக்கப்பட்டது?

12-ம் அத்தியாயத்தில் விளக்கள்

1. கீழேவரும் தலைப்புகளில் சோழ சக்கராதிபத்தியத்தைப்பற்றி எழுதுக:
   (அ) அடிகோலியவர்
   (ஆ) முதலாம் பராந்தகனின் கீழே வளர்ச்சி
   (இ) (i) மகா இராசராசன்
   (ii) முதலாம் இராசேந்திரன் — இவர்களின் கீழ் விசாலிப்படைதல்
   (ஈ) சிதைவடைதல்
2. முதலாம் விளவில் குறிக்கப்பட்ட வெவ்வேறுபடிகளை ஒரு புற உருவப்படத்தில் குறிப்பிடுக.
3. சோழ நாகரிகத்தைப்பற்றி சுருக்கமாக எழுதுக.
4. இரண்டாம் பாண்டியப் பேரரசிலே மிகப் பிரசித்திபெற்ற அரசன் யார்? இலங்கையும் அவன் ஆண்டுவந்த நாடுகளில் ஒன்று? இப்பேரரசு முடிவடைய வழிகோலிய காரணங்கள் எவை?
5. விசயநகர சக்கராதிபத்தியத்தின் எழுச்சியை விபரிக்குக:
   (அ) அடிகோலியவரின் இடம் எது?
   (ஆ) பக்கனின் மரணத்தின்போது இவ்விராச்சியத்தின் நிலை என்ன?
   (இ) கிருஷ்ண தேவராயனின் மரணத்தின்போது அது இருந்த நிலை என்ன?
6. இந்திய சரித்திரத்தில் விசயநகரப் பேரரசு எடுத்துக்கொள்ளும் பங்கு யாது?

13-ம் அத்தியாயம்

இலங்கை—பொலநறுவைக் காலம் 1 (கி. பி. 1017—1235)

அரசியல்

முகவுரை (அ) சோழர் ஆட்சிக்கு சிங்கள எதிர்ப்பு (ஆ) விசயவாகு (இ) உள்நாட்டுக் கலகம் (ஈ) பெரிய பராக்கிரமவாகு (உ) மீளவும் உள்நாட்டுக் கலகம் (ஊ) நிசங்க மல்லன் (எ) ஆட்சி அதிகாரம் சேனையின் கைக்கு மாறல் (ஏ) காலிங்க நாட்டு மாகன்.

முகவுரை

9-ம், 11-ம் அத்தியாயங்களில் இலங்கைச் சரித்திரத்தின் ஒரு பகுதியான அநுராதபுர காலத்தைப் பற்றியும், மேலும், கி.பி. 1017-ம் ஆண்டு வரையும் இலங்கைச் சரித்திரம் எவ்வாறு வடஇந்தியாவில் உள்ள சில நாடுகளின் செல்வாக்கினாலே பயன்பெற்றதென்பதைப் பற்றியும் படித்துள்ளோம். இப்போது கி. பி. 1017 தொடக்கம் 1235 வரையும் உள்ள கால இலங்கைச் சரித்திரத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இந்த 218 வருட காலமாக பொலநறுவையே இலங்கையின் தலைநகரமாய் விளங்கிற்று. ஆகையினால் இக்காலத்தைப் பொலநறுவைக் காலமெனக் கூறி வருகின்றனர். கி. பி. 600-ம் வருடத்துக்குப் பின்பு தென்னிந்தியாவில் பெரும் பேரரசுகள் உண்டாகி அழிந்ததை நாம் அறிவோம். இலங்கைச் சரித்திரமும் இந்த நாட்டு நாகரிகங்களால் தாக்குண்டது. இவ்வத்தியாயத்துக்கு முன்பு போந்ததில் இந்நாடுகள் சிலவற்றின் நாகரிகங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.


புதுத் தலைநகரம்

இலங்கையின் தலைநகரமாக அநுராதபுரம் சுமார் 1500 வருட காலத்துக்கு விளங்கியது. அந்நகரம் வல்வத்து ஓயாவின் நீரத்தில் கட்டியெழுப்பப்பட்டு, தென்னிந்தியாவிலிருந்து இராசதிரட்டையின் மேல் எழுந்த படை எழுச்சிகளைத் தடுக்க பழைய கால சிங்கள மன்னருக்கு மிக உபயோகமாய் இருந்தது. தென்னிந்தியாவில் இருந்து வந்த இராசதிரட்டையுட் புகும் எந்தச் சேனைக்கும் மல்வத்து ஓயாவின் கரையோரமாகப் புகுவது சுலபமாய் இருந்ததனால் அவ்வகைச் சேனைகளை அநுராதபுரியில் தடுக்கக் கூடியதாயிருந்தது.

இலங்கையைச் சோழர் கைப்பற்றிய கி. பி. 1017-ம் ஆண்டில் சிங்களவரிற் பெரும்பாலார் உறுகுணைப் பிரிவுக்குச் சென்று வசித்தனர். சோழர் தென்னிந்தியாவையும் ஆண்டு வந்ததினால் அப்பகுதியிலி

ருந்து அவர்கள் இலங்கைக்கு ஓர் ஆபத்தையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் உறுகுணையில் உள்ள சிங்களவர்களே தமக்குத் தொல்லையுண்டாக்கக் கூடுமென எண்ணினார்கள். இராசதிரட்டையுட் புகவிரும்பும் எந்தச் சிங்கள சேனையும், மகாவலிகங்கையின் ஓரமாக நடந்து மாகன் தோட்ட எனும் இடத்திலேயே அதனுட் செல்லலாம். மாகன் தோட்ட எனும் இடத்துக்கு எதிர்புறமாகவே பொலநறுவை எனும் இடமுண்டு. ஆனதினால் உறுகுணையில் இருந்து வரக்கூடிய சிங்கள சேனைகளைத் தடுப்பதற்காகச் சோழர், பொலநறுவையில் தமது தலைநகரத்தை நிறுவினர். (194-ம் பக்கம் பார்க்க) சோழரை கி. பி.

சோழரின் கீழ் இலங்கை (கி. பி. 1017—1070)



1070-ம் ஆண்டில் சிங்களவர் துரத்திவிட்டதன் பின்பு தலைநகரத்தைத் திரும்பவும் அநுராதபுரிக்கு மாற்ற விரும்பவில்லை. இக்காலத்தில் அநுராதபுரம் அதிகம் சிதைவுண்டு போனது இதற்கு ஒரு காரணமாகும், மேலும், பொலநறுவையிலிருந்து இராசதிரட்டை, உறு


குணை ஆகிய இரு பிரிவுகளிலும் திறமையாக அதிகாரம் செலுத்தக் கூடியதாயிருந்தது மறுகாரணமாகும். இவ்வாறு திறமையாக அநுராதபுரத்திலிருந்து ஆட்சிபுரிவது சுலபமாகத் தோன்றவில்லை.

குறிப்பு:- (அ) சோழர் தலைநகரை பொலநறுவையில் நிறுவி அதை சனநாதபுரம் என அழைத்தனர். (ஆ) விசயவாகு அதை விசயராசபுரம் என பெயரிட்டார். (இ) பொலநறுவையிலிருந்து எவ்வாறு இராசஇரட்டையையும் உறுகுணையையும் ஆளக்கூடியதாயிருந்தது என்பதை அவதானிக்குக.

இக்காலத்தின் அரசியல் சரித்திரத்தைப் படிப்பதற்கு சிறு பகுதிகளாகப் பிரிப்பது மிகவும் உபயோகமாகும்.

(அ) சோழ ஆட்சிக்கு சிங்களவரின் எதிர்ப்பு (கி. பி. 1017—1070)

தென்னிந்தியாவில் உள்ள தமிழர்கள் இலங்கைமீது மிகப்பழைய காலத்திலிருந்தே படையெழுச்சி செய்து வந்தனர். (முன் பக்கங்களிற் காண்க) ஒவ்வொரு முறையும் சிங்களவர் ஒருவிதமாக அவர்களின் ஆட்சியைத் தொலைத்துவிட்டனர். கி. பி. 1017-ம் ஆண்டில் சோழர் படைகளுடன் இலங்கைமீது பாய்ந்து அதை ஒரு சோழ மாகாணமாக்கி விட்டனர். இலங்கையை ஆட்சிபுரிய ஓர் தேசாதிபதியை நியமித்திருந்தனர். 1022-ம் ஆண்டு தொடக்கமாகவே சோழரைத் துரத்திவிடச் சிங்களவர் பெருமுயற்சி செய்தும் உடனே சித்தியடையவில்லை. அதற்கு இரு காரணங்கள் உள. முதலாவது சிங்களவர்களிடையில் ஒற்றுமை நிலவாததேயாம். சோழருக் கெதிராக யாவரும் ஒருமித்துப் போராடுவதை விட்டு அவர்கள் தங்களுக்குள்ளே போரிட்டு வந்தனர். கேசதத்து காசியப்பன் என்னும் சிங்கள தளபதி சோழர்களை எதிர்த்து வென்றபோது அவன்மீது வேறு ஒரு சிங்கள வீரனான கீர்த்தி என்பவன் படை எடுத்தது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இரண்டாங் காரணம் சோழ பேரரசின் பிரமாண்டமான பலமாகும். சோழ இராச்சியமே இதுகாலவரை தென்னிந்தியாவில் தோன்றிய இராச்சியங்களுள் மிகப் பெரியது. கி. பி. 1069-ம் ஆண்டில் உள்நாட்டுக் கலகத்தின் பயனாக சோழ இராச்சியம் பலங்குன்றத் தொடங்கியது. கீர்த்தி என்பவன் சகல எதிர்ப்புக்களையுஞ் சிதற அடித்து சிங்களவர்களின் ஏகதலைவனாக இக்காலத்தில் விளங்கினன். கி. பி. 1070-ம் ஆண்டில் சோழர்களுடன் இலங்கையிற் போர்செய்து அவன் சோழர்களை இத்தீவிலிருந்து துரத்திவிட்டான். இவ்வாறு தமிழர்கள் பிறிதுமோர்முறை சிங்களவர்களாலே துரத்தப்பட்டனர். சிங்கள ஆட்சி மீளவும் நிலவிற்று.



சோழருக்கு எதிராக விஜயபாகு செய்த இறுதிப் போராட்டத்தில் அவன் சேனைகள் சென்ற வழிகள்.

A ஒரு சேனை அநுராதபுரத்தைக் கைப்பற்ற அனுப்பப்பட்டது.
A1 சோழ சேனைக்கு உதவியாய் வரக்கூடிய படைகளைத் தடுக்க அனுப்பப்பட்ட சேனை.
A2 பொலநறுவைமீது பாய ஏவப்பட்ட சேனை.
B கடலோரமாக பொலநறுவையை நோக்கி ஏகுமாறு பணிக்கப்பட்ட சேனை.
C விஜயபாகு தலைமை தாங்கி மகாவலிகங்கை ஓரமாக உள்ள வழக்கமான வழியே ஏவிச் சென்ற சேனை.

(ஆ) 1–ம் விசயபாகு கி. பி. 1070—1114

கீர்த்தி என்னும் சிங்கள வீரனே விஜயவாகு என்னும் பெயரை எடுத்துக் கொண்டான். அவன் முன்னிருந்த சிங்கள அரசர்களுடைய உறவினன். கி. பி. 1055-ம் ஆண்டு அளவில் சிங்களவரில் ஒரு பகுதினருக்குத் தலைவனாக விளங்கினான்.


சோழரை இலங்கையிலிருந்துத் துரத்தி இந்நாட்டின் ஏக அரசனாய் விளங்க விரும்பினன். இதைச் செய்வதற்கு இலங்கையின் தலைமைப் பதவிக்குச் சிங்கள வீரர்களிடமிருந்த போட்டியை அழிக்க வேண்டியிருந்தது. கி. பி. 1055-ம் ஆண்டில் சிங்கள பிரதம தலைவர்களில் ஒருவனாகிய லோகேஸ்வரன் இறந்தான். இவன் இடத்தை எடுத்த கேசுதத்த காசியப்பனைக் கீர்த்தி எதிர்த்து வென்று இலங்கையின் ஏக சிங்கள தலைவனானான். பின்பு விஜயவாகு எனும் பெயரையும் சூடி, சோழருக்கு எதிராக போர் செய்ய ஆரம்பித்தான்.

விஜயவாகு போருக்கு ஆயத்தமாகு முன்பே அவனைச் சிதற அடிக்க வேண்டுமென்று சோழர் தீர்மானித்தனர். ஆனால் விஜயவாகு அவர்களை எதிர்த்து நின்று போர் செய்வதைத் தவிர்த்தான். ஒருமுறை அவன் மலைப்பிரதேசமாகிய மலாயஇரட்டையிலே ஒதுங்கி நின்றான். வேறொருமுறை புனத்த கிரியில் பதுங்கி இருந்தான். ஒருமுறை சோழர்களைத் தோற்கடித்த பொழுதிலும், சோழர் தென்னிந்தியாவிலிருந்து ஒரு பெரிய சேனையை அழைப்பித்து விஜயபாகுவை பின்காட்டி ஓடச் செய்தனர்.

கி. பி. 1069-ம் ஆண்டில் சோழ பேரரசியத்தில் உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்தது. தென்னிந்தியாவிலிருந்து சோழர்கள் சேனையை உதவிக்கு அழைப்பிக்க முடியாதவராயிருத்தலை அவனறிந்து பொலநறுவைமீது தனது மூன்று சைனியங்களைப் பாய ஏவினன். சோழர் தோல்வியுற்று தமது நாடு திரும்பவேண்டியவராயினர் (283-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க)

இவ்வாறு கி. பி. 1070-ம் ஆண்டில் விஜயவாகு இலங்கையின் ஏக அதிபதியாயினன். அவனது ஆட்சியின் ஆரம்ப காலத்திலே நாட்டில் மூன்று குழப்பங்கள் நடக்கலாயின. இவற்றுள் இரண்டு இலகுவாக அடக்கப்பட்டன. ஆனால் மூன்றுவதான குழப்பம் அரசனுக்கு அதிக தொல்லை கொடுத்தது. விஜயவாகு சமுக்கிய மன்னருக்கு அனுப்பி வைத்த சிங்கள நாட்டு ஸ்தானிகர்களை இந்தியாவில் சோழர் கைப்பற்றி அல்லற்படுத்தினர். (285-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்க) விஜயவாகு சோழநாட்டின்மீது படையெடுக்கத் தீர்மானித்தான். ஆனால் விஜயபாகுவின் சேனையில் அமர்ந்திருந்த தமிழ் வீரர் தமது உறவினராகிய சோழர்மீது படையெடுக்க மறுத்துக் கல

கத்தை உண்டாக்கினர். குழப்பம் மிக மோசமாயிருந்ததால் விஜயவாகு பொலநறுவையை விட்டு வக்கிரிகல எனுங் கோட்டைக்குச் சென்று அங்கே சிறிது காலம் வசித்து வந்தான். அங்கிருந்து தனது சேனைகளைப் பலப்படுத்திக்கொண்டு திரும்பவும் பொலநறுவைக்கு



சோழரின் எதிர்ப்பைத் தகர்க்க விஜயவாகு பிறநாடுகளுடன் செய்த உடன்படிக்கைகள்

வந்து, குழப்பக்காரரைச் சிதற அடித்து வெற்றிக் கொடி நாட்டினன். தமிழ் போர்வீரர்களுக்கு நல்ல பாடம் படிப்பிப்பதற்

காக குழப்பஞ் செய்த தமிழ்த் தளபதிகளை சிங்கள வீரர்களின் தேகத் தைத் தகனஞ் செய்த அக்கினியில் இடுவித்தான்.

இலங்கை மீது எத்தனையோ முறைகளில் படையெடுத்த சோழர் களைத் தண்டிக்கத் தகுந்த முறைகளைக் கையாளவேண்டுமென விஜய பாகு தீர்மானித்து, சோழர்களின் சத்துராதிகளாகிய காலிங்கர், சாழுக் கியர், பார்மியர், பாண்டியருடன் சோழருக்கெதிரான உடன்படிக்கை ஒன்றை நிறுவினன். (கீழேவரும் தேசபடத்தை அவதானிக்க) மேற்கூறப்பட்ட இரு தேசத்தவருடன் செய்துகொண்ட உடன்படிக்கை கள் அரச குடும்பத்தவரின் விவாகங்களினூலே பலப்படுத்தப்பட்டன. விஜயவாகு தானே காலிங்கதேச அரசகுமாரியாகிய திலக சுந்தரியை மணஞ்செய்து கொண்டான். அவனது சகோதரி ஒரு பாண்டிய அர சகுமாரனை விவாகஞ்செய்து கொண்டாள். இலங்கைமீது படையெடுத் தால் தங்களைப் பிறநாடுகளும் எதிர்த்து நிற்குமென்பதைச் சோழர் உணர்ந்துகொண்டனர். ஆனதினூல் சோழர் இலங்கையைச் சுரண் டாது சிறிது காலம் விடுத்தனர்.

சோழரில் இருந்து வரக்கூடிய ஆபத்தைத் தடுக்க இவ்வாறு பிரயத்தனங்கள் செய்தபின், விஜயபாகு இத்தீவிலே செய்யப்படவேண் டியிருந்த விஷயங்களில் கவனத்தைச் செலுத்தினன். சோழர் கி.- பி. 950-ம் ஆண்டு தொடக்கமாக அநேக முறைகளில் இலங்கையின்மேல் படையெடுத்தனர். அவர்கள் இலங்கையை 1017-ம் ஆண்டில் வென்று, 1070-ம் ஆண்டுவரையும் ஆட்சிபுரிந்துவந்தனர். ஒன்றின் பின் பிறிதொன்றுக நடந்தேறிய இப்படை எழுச்சிகளால், சிங்கள அரசர் விவசாய, நீர்ப்பாசன விஷயங்களிலும், சமய விஷயங்களிலும் கவனஞ்செலுத்த முடியாதவராயினர். கி. பி. 950-ம் வருடத்துக்கும் 1070-ம் வருடத்துக்குமிடையில் அநேக போர்கள் நடந்ததினூல் நீர்ப் பாசன தேக்கங்கள், வாய்க்கால்கள் முதலியன கைவிடப்பட்டும் சில தகர்க்கப்பட்டும் விட்டன. விஜயவாகு இவைகளைத் திருத்தி அமைக்கும் வேலையைத் துரிதமாகச் செய்துவந்ததால் மீளவும் விவசாயம் நல்ல முறையில் செழித்து விளங்கிற்று.

சோழர் இந்து சமயத்தவரானதால் புத்த சமய வளர்ச்சியில் கவனஞ் செலுத்தவில்லை. நாட்டில் நடந்த அநேக போர்களினூலும் புத்த சமயம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. புத்த சமயத்தை, அநுராதபுரிக் காலத்தில் அது இருந்த உச்ச நிலைக்குக் கொண்டுவர விஜயபாகு பெரிதும் முயன்றன். புத்த குருமாருக்கு இருக்கவேண் டிய தகுந்த முறையான அபிஷேகத்தைச் செய்துவைக்க இங்கே பார் மிய புத்த குருமாரை அழைத்துவரும்படி ஓர் தூது கோஷ்டியை அங்கு அனுப்பினன். புத்தரின் பரிசுத்த பல்லைப் பேணிவைக்க ஒரு அழகிய கோவிலையும் பொலநறுவையில் கட்டி எழுப்பினன். இக்

கோவிலின் சிதைவுகளை இன்றும் காணலாம். சிவனொளிபாத மலை யின் உச்சிக்குச் செல்லும் வழியில் அநேக தங்கு மடங்களை நிறுவி னன். அம்மலையின் உச்சியை அண்டி, "தீண்டா மக்கள்" என்னும் பிரிவினர் புத்தரின் பாதச் சுவட்டை வணங்க ஒரு விசேஷ படிக்கட்டை செய்வித்தான்.

விஜயபாகு இலங்கையின் பிரசித்திபெற்ற அரசர்களுள் ஒருவனு வன். அவன் சிங்களவர்களுக்கிடையில் உள்ள பல பேதங்களைக் களைந்து சனங்களை ஒற்றுமைப் படுத்தினன். பின்பு பலம்படைத்த சோழர்களை இலங்கையைவிட்டு அகற்றி நாட்டில் சமாதானத்தை நிறுவி, விவசாயத்தையும் நீர்ப்பாசன வசதிகளையும் பெருக்கி, புத்த சமயத்துக்குப் புத்துயிர் கொடுத்து அழியாப் புகழ் எய்தினன்.

பயிற்சி I


1. கி. பி. 1017-ம் ஆண்டு தொடக்கம் 1235 வரைக்கும் உள்ள இலங்கைச் சரித்திரக் காலத்தை பொலநறுவைக் காலமென்ப தேன்?
2. சோழர் யாது காரணத்துகாகத் தலைநகரைப் பொலநறு வைக்கு மாற்றினர்கள்?
3. சிங்களவர்களால் சோழர்களை இலங்கையிலிருந்து துரத்துவது கடினமாயிருந்ததற்கு இரு காரணங்கள் தருக.
4. தலைமைக்கு கீர்த்தி என்பவனுடன் போட்டியிட்ட சிங்கள வீரர்கள் யார்?
5. தனது சிங்கள எதிரிகளை ஒழித்ததன்பின் கீர்த்தி செய்த செயல் யாது?
6. விஜயவாகு தங்களுடன் போர்புரிய எத்தனித்திருக்கிறன் என்பதைக் கேள்விப்பட்ட சோழர் என்ன செய்தனர்?
7. எவ்விடமிருந்து சோழர் விஜயவாகுவுக்கு எதிராகப் போர் செய்ய துணைப்படைகள் கொண்டுவந்தனர்?
8. சோழருக்கு எதிராகச் செய்த இறுதிப் போரில் விஜயவாகு எத்தனை சேனைகளை உபயோகித்தான்?
9. கி. பி. 1069-ம் ஆண்டில் தென்னிந்தியாவிலிருந்து துணைப் படைகளை இலங்கைக்கு அழைக்கமுடியாது இருந்தது ஏன்?
10. சோழரை இலங்கையிலிருந்து துரத்தியதன்பின் விஜயவாகு அநுராதபுரத்தை மீளவும் தலைநகராக்காதது ஏன்?
11. அரசனானதன்பின் விஜயவாகு எத்தனை குழப்பங்களைச் சமா ளிக்க வேண்டியவனாயிருந்தான்?
12. இறுதியான குழப்பம் மிக மோசமானதாயிருந்ததென்பதை விளக்குக.


13. சோழர் மீளவும் இலங்கைமீது படை எடுக்காமற்பண்ண விஜயவாகு யாது செய்தான்?
14. சோழரின் படையெழுச்சி காலத்திலும், சோழரின் ஆட்சிக் காலத்திலும், இலங்கை எவ்விஷயங்களில் பெரும் சிதைவு களுக்குள்ளானது?
15. (i) சமயத்தையும் (ii) நீர்ப்பாசன வசதிகளையும் இலங்கை யில் மீளவும் செழிப்புறச்செய்ய விஜயவாகு என்ன செய்தான்?
16. இலங்கையின் சிறந்த மன்னர்களுள் ஒருவனாக விஜயவாகு மதிக்கப்படுவது ஏன்?

(இ) உள்நாட்டுக்கலகம் (கி. பி. 1114—1153)


விஜயவாகு கி. பி.1114-ம் ஆண்டு மரணமடைந்தான். அவனுக்குப்பின்பு அவன் சகோதரன் ஜயவாகு அரசுகட்டில் ஏறினான். விஜயவாகுவின் சகோதரியாகிய மித்தா என்பவள் ஒரு பாண்டிய அரசகுமாரனை விவாகஞ் செய்தனளெனப் படித்திருக்கிறோம். கீழே தரப்பட்டிருக்கிற குடும்ப அட்டவணையை அவதானித்தால் ஜயவாகு அரசனாயிருந்த காலத்தில் அவன்பின் அரசுரிமைக்குரியவன் விஜயவாகுவின் மகன் விக்கிரமவாகுவே என்பது விளங்கும். அக்கால சிங்கள அரசு கட்டிலேறும் மரபின்படி ஒரு அரசனின்பின் அவன் தம்பியும், அதன்பின் அவ்வரசனுக்கு வேறு ஆண் சகோதரரில்லாவிடில், அவன் மூத்த மகனுமே முறையாக அரசுரிமைக்குரியவர். ஆனால் ஜயவாகு ஏது காரணத்துக்காகவோ உரிமையுடையவனாகிய விக்கிரமவாகுவைத் தவிர்த்து, தனது தங்கை மித்தாவின் மூத்த குமாரனாகிய மானாபரணனையே தனக்குப்பின் அரசுரிமைக்குரியவனாக்கினான். விக்கிரமவாகு இதையறிந்து அரசனுக்கெதிராகப் படையெடுத்தனன். பொதுசனங்களுக்கும் ஜயவாகுவின் முறையற்றசெயல் மனவெறுப்பை உண்டாக்கியதனால் விக்கிரமவாகுவுக்கு பெரும் ஆதரவு உண்டாயிற்று. அநேகர் அவனுக்காகப் போராட முன்வந்தனர்.

விஜயவாகுவின் குடும்பமும் அவன் வழிச்சந்ததியும்





2-ம் விக்கிரமவாகு அரசனாபோது இலங்கையில் இருந்த பிரிவுகள்.



பராக்கிரமவாகு தக்கின தேசத்துக்கு அரசனனபோது இருந்த அரசியற் பிரிவுகள்.


இவ்வாறு விக்கிரமவாகுவுக்கும் மித்தாவின் புத்திரருக்குமிடையில் உள்நாட்டுக் கலகம் உண்டாயிற்று. கி. பி. 1137-ம் ஆண்டு விக்கிரமவாகு இறந்தான். அவன் பின் ஆண்ட கஜவாகு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினன். இவ்வாறு உள்நாட்டுக் கலகம் நடந்துகொண்டே போயிற்று. இறுதியாக மித்தாவின் பேரப்பிள்ளைகளில் ஒருவனுகிய பராக்கிரமவாகு என்பவன் இவ்வு முழுவதற்கும் ஏக தலைவனனன்.

(ஈ) மகா பராக்கிரமவாகு

விக்கிரமவாகு என்பவன் ஜயவாகுவைத் தோற்கடித்து இராச இரட்டையின் மன்னனனபோது, மித்தாவின் பிள்ளைகள் இலங்கையின் மறுபாகங்களை ஆண்டு வந்தனர். மானுபர்ணன் என்பவன் மாயஇரட்டையை ஆண்டு வந்தான். உருகுணை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மித்தாவின் மறு இருமக்களால் ஆளப்பட்டது. கீர்த்தி ஸ்ரீமேகன் அத்தகஸ்இரட்டை எனும் உருகுணைப் பிரிவின் கிழக்குப் பாகத்தையும், ஸ்ரீ வல்லபன் தொலஸ்தகஸ்இரட்டை எனும் மேற்குப் பாகத்தையும் ஆண்டு வந்தனர்.

மானுபர்ணன் இந்தக் காலத்தில் இறந்துவிட, கீர்த்தி ஸ்ரீமேகன் மாயஇரட்டையின் அரசனனன். உறுகுணை முழுவதையும் ஸ்ரீவல்லபன் ஆண்டு வரலாயினன். கி. பி. 1137-ம் ஆண்டில், 2-ம் விக்கிரமவாகு இறந்தான். அவனுக்குப்பின் அவன் மகன் 2-ம் கஜவாகு அரியணை அமர்ந்து ஆட்சி செலுத்தி வரலாயினன்.

முன்னே கொடுக்கப்பட்ட குடும்ப அட்டவணையை அவதானித்தால், மானுபரணனுக்கு பராக்கிரமவாகு எனும் ஒரு மகன் இருந்தான் என்பது புலப்படும். மானுபரணனின் மரணத்தின் பின்பு அவன் மகன் பராக்கிரமவாகு, அவனுடைய சிற்றப்பராகிய கீர்த்தி ஸ்ரீமேகன் என்பவனுடனும், ஸ்ரீவல்லபன் என்பவனுடனும் வளர்ந்து வந்தான். பராக்கிரமவாகு அதிகாரப் பிரியன். தான் இலங்கை முழுவதற்கும் விரைவில் அதிபதியாக வேண்டுமென்ற ஆசை அவனைத் தூண்டியது. அதனல் தன் மாமன் கீர்த்தி ஸ்ரீமேகனுக் கெதிராகச் சதிகாரத் தொழிலில் ஈடுபட்டான். ஒரு சேனையைத் திரட்டினன். தன் மாமனுருடைய பிரதம தளபதியைக் கொன்றன். பின்பு இராசஇரட்டைக்குச் சென்று, கஜவாகுவுடன் சேர்ந்து சதிசெய்ய முயலும் தருணத்தில் கீர்த்தி ஸ்ரீமேகன் இப்பேராசைபிடித்த மருமகனை அகப்படுத்திக்கொள்ளுவதற்காக ஒரு சேனையை அனுப்ப, இரு சேனைகளும் அம்பானை எனும் இடத்தில் கைகலந்தன. பராக்கிரமவாகு தோல்வியுற்று இராசஇரட்டையுட் புகுந்து கஜவாகுவின் சலுகையைப் பெற்று அங்கு தங்கி இருந்தான். ஆனல் அங்கிருக்கும்பொழுது அவன் கஜவாகுவுக்குத் துரோகஞ் செய்ததனல் அவனுலே துரத்தப்



குறிப்பு:- மானபர்ணனுக் கெதிராகவும், கஜவாகுவுக்கு எதிராகவும் பராக்கிரமவாகு நடாத்திய யுத்தத்தைப் படிக்கும்போது இப் படத்தை உபயோகிக்க.

பட இருந்தான். ஆனால் அதற்கு முன்பு அவ்விடமிருந்து மாயஇரட்டையுள், மீண்டும் சென்றான். ஆனால் கீர்த்தி ஸ்ரீமேகனுக்கோவெனில் நன்றியென்பது சிறிது மில்லாத தன் மருமகனுக்கு உதவுவது பிடிக்கவில்லை. எனினும் பராக்கிரமவாகுவின் தாயாரின் மன்றாட்டத்துக்கிரங்கி மீளவும் அவனை மாயாஇரட்டையில் இருக்க அனுமதித்தான். இதற்கிடையில் உறுகுணையின் அரசனாகிய ஸ்ரீவல்லபன் இறந்துவிட்டான். இவன் மகன் மானபரணன் அங்கு ஆண்டுவந்தான். ஆனதால் சிறிது காலத்தில் கீர்த்தி ஸ்ரீமேகன் இறந்தபோது அவனிடமாக அரசாள அவனுக்கு ஆண் சகோதரரில்லாமையால் பராக்கிரமவாகுவே மாயஇரட்டைப் பகுதிக்கு முறையாக அரசனானன்.

நாட்டை ஒன்றுபடுத்த நடத்திய யுத்தம்

(I) கஜவாகுவுக்கு எதிராக நடந்த போர்

பராக்கிரமவாகு தனது ஆட்சியின் கீழே பல பிரிவுகளையும் அடக்கும் பெரு முயற்சியில் துரிதமாய் ஈடுபட்டான். இம்முயற்சி சித்தி பெறுவதாயின் இராசஇரட்டையையும், உறுகுணையையும் முறையே ஆண்டுவந்த தன் மைத்துனராகிய கஜவாகுவையும் மானபரணனையும் போரில் வெற்றிகொள்ளவேண்டும். இந்த நோக்கத்துடன் தனது சேனைகளைப் பலப்படுத்திக்கொண்டு கஜவாகுவின் இராச்சியத்தை மேற்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் பெருஞ் சேனைகளுடன் தாக்கினான். ஒரு சேனையை (a) மலைநாட்டை அடிப்படுத்தி அதன்பின் பொலநறுவைமீது பாயுமாறு பணித்து மலாயஇரட்டையுள் அனுப்பி வைத்தான். அச்சேனை மலாயஇரட்டையை இலகுவாக அடிப்படுத்தியது. ஆனால் அது பொலநறுவைக்குச் செல்லுமுன் பராக்கிரமவாகுவின் கட்டளையொன்றை எதிர்பார்த்துத் தாமதித்து நின்றது. அரசன் மலாயஇரட்டையின் மேற்குக் கரையோரத்திலிருந்து பொலநறுவை மீது பாயுமாறு பிறிதோர் சேனைக்கு (b) கட்டளை செய்திருந்தான். அது கல்ஓயாவைத் தாண்டி இராசஇரட்டையுட் புகுந்து பொலநறுவையை நோக்கிச் செல்லும்போது கஜவாகுவின் சேனைகள் அதைப் பலமாக தம்புளைக்கு அப்பால் எதிர்த்து புறங்காட்டி ஓடச்செய்தன. ஆனால் பராக்கிரமவாகு திரும்பவும் அச்சேனையை முன்னே செலுத்திப் பொலநறுவைக்கு இட்டுச் சென்றான். மலைப்பிரதேசத்தில் தாமதித்து நின்ற சேனைக்கும் (a) முன்னேறும்படி கட்டளை பிறந்தது. இப்படியாக இரு சேனைகளும் ஒன்று தெற்கிலிருந்தும் மற்றது மேற்கிலிருந்தும் பொலநறுவைமீது பாய்ந்து தாக்கின. கஜவாகு இலகுவாகத் தோற்கடிக்கப்பட்டான்.

கஜவாகு அரசன் பராக்கிரமவாகுவினால் தோற்கடிக்கப்பட்டு கைதியாக்கப்பட்டபோது அவனுடைய நண்பர் பலர் உறுகுணை தேசத்தின் மானபரணனை கஜவாகுவுக்கு உதவிபுரியுமாறு வேண்டிக்கொண்டனர்.

மாஞபரணன் ஒரு பலம்பொருந்திய சேஞையுடன் விரைந்து வந்து பொலநறுவையைக் கைப்பற்றினான். ஆனால் அவன் கஜவாகுவை சிறையிலடைத்து விட்டுத் தன்னையே இராசஇரட்டையின் அரசனுக்கிக் கொண்டான். ஆனதினால் பொலநறுவையை இரண்டாம் முறை பராக்கிரமவாகு தாக்கவேண்டியதாயிருந்தது. அப்படியே செய்து மாஞபரணனை உறுகுணைக்குள் கலைத்துவிட்டான். பின்பு சில புத்த குருமார் கஜவாகுக்கும் பராக்கிரமவாகுக்கு மிடையில் சமாதானம் உண்டாக்கி இருவரையும் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப் பண்ணினர். அதன் பயனாக இவ்விருவரில் ஒருவர் மரணிக்குங் காலத்தில் உயிருடன் இருப்பவர் மாயஇரட்டை, இராசஇரட்டை ஆகிய இரு பிரிவுகளையும் ஆளவேண்டுமென்றும், பிறர் இவர்களில் ஒருவரைத் தாக்குங்கால், இருவரும் ஒருமித்து அவரை எதிர்க்க வேண்டுமென்றும் சம்மதித்துக் கொண்டனர்.

2-ம் கஜவாவுக்கு எதிராக மகா பராக்கிரமு நடத்திய யுத்தத்தின் சுருக்கம்.

(இப்பாடத்தில் முன்தரப்பட்ட படத்தைப் பார்க்க)

A மலாயஇரட்டையை அடிப்படுத்தி அதன்பின் பொலநறுவையை நோக்கிச் செல்லுமாறு அனுப்பப்பட்ட சேஞை.

B அநுராதபுரத்தைக் கைப்பற்றி அதன்பின் பொலநறுவையைத் தாக்குமாறு அனுப்பப்பட்ட சேஞை.

(II) மாஞபரணனுக்கு எதிராக நடந்த போர்

குறிப்பு:—*இந்த யுத்தத்தைப்பற்றிப் படிக்கும்போது பொலநறுவை நகரம் மகாவலிகங்கையின் தீரத்தில் கட்டப்பட்ட மாகன் தோட்டை எனும் கோட்டைக்கு எதிர்ப்புறமாக இராசஇரட்டையில் உள்ளதென்பதையும், உறுகுணையிலிருந்து இராச இரட்டைக்குப் போகும் எவரும் இந்நகரின் ஊடாகவே போக வேண்டும் என்பதையும் கவனித்துக் கொள்ளுக.*

கஜவாகு இறந்தவுடன், முன்கூறப்பட்ட உடன்படிக்கையின்படி பராக்கிரமவாகு இராசஇரட்டையின் அரசனானான். ஆகையினால் அவன் இப்போது இராசஇரட்டை, மாயஇரட்டை, மலாயஇரட்டை ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் அரசனாய் விளங்கினான். உறுகுணை மாத்திரம் அவன் ஆட்சிக்குள் உட்படவில்லை. மாஞபரணனும் இராசஇரட்டையை ஆள விருப்புடையவனாகி மகாபராக்கிரமுவுக்கெதிராக ஒரு சேஞையை அனுப்பினான். (படத்தில் **D** எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது) மகாவலிகங்கா தீரத்தில் அதைக் கடந்து மறுபக்கம் செல்ல அநேக கடப்பிடங்கள் இருக்கின்றன. கெம்பருவ, விறகன் தோட்டை முதலியன இவற்றுட் சில. இந்த இடங்களில் அநேக கடும் போர்கள் நடந்தன. அதனால் பராக்கிரமவாகுவின் சேஞைகள் உறுகுணைக்குட் புகவோ, அன்றேல் மாஞபரணனின் சேஞைகள் இராசஇரட்டை, அல்லது மாயஇரட்டையுட் புகவோ முடியாமல் இருந்தது. ஆனதால் வேறு ஒரு சேஞையை (c) மாயஇரட்டையின் மேற்குப் பக்கத்திலிருந்து உறுகுணைக்குள் அனுப்பி மாஞபர்ணனைத் தாக்க முயன்றான். ஆனால் அநுராதபுரத்திலிருந்த அவன் தளபதி நாராயணன் என்பவன் குழப்பஞ் செய்ததன் காரணத்தினால் அரசனின் முயற்சிகள் சீர்குலைந்தன. மகாவலி கங்கையின் ஓரத்தில் மாஞபர்ணனின் சேஞைகளுடன் கைகலந்து நின்ற தனது சைனியங்களில் அதிக கவனஞ் செலுத்த முடியாது நாராயணனால் விளைந்த கலகத்தை அடக்குவதிலே ஈடுபட்டிருந்தனர். ஆனதினால் மாஞபர்ணன் மாகன் தோட்டையில் ஆற்றைக் கடந்து இராசஇரட்டையுட் புகுந்து பராக்கிரமவாகுவின் சேஞைகளைப் பலமாகத் தாக்கி மாயஇரட்டையுள் கலைத்து விட்டான் (e). தோல்விக்குத் தலைசாய்த்து நிற்பவன் பராக்கிரமவாகு அல்ல. நிக்கா வரட்டியாவில் தனது சேஞைகளைத் திரட்டிக்கொண்டு வீரத்துடன் மறுபடியும் மாஞபர்ணனின் சைனியங்களைத் தாக்கி அவனை உறுகுணைக்குள் பின்காட்டி ஓடச் செய்தான். இவ்வாறாக மீளவும் பராக்கிரமவாகு உறுகுணைப் பிரிவைத் தவிர்ந்த ஏனைய சகல பாகங்களுக்கும் அரசனாய் விளங்கினான்.

மாஞபர்ணனுக்கு எதிராக மகா பராக்கிரமவாகு நடத்திய யுத்தத்தின் சுருக்கம்

(இப்பாடத்தில் முன் தரப்பட்ட படத்தைப் பார்க்க. பக்கம் 292)

D மகாவலிகங்கையின் ஓரமாக செலுத்தப்பட்ட மாஞபர்ணனின் சேஞைகள். விறகன் தோட்டை, கெம்பருவை, மாகன் தோட்டை எனும் ஆறு கடக்கும் இடங்களில் தடைசெய்யப்பட்டன.

C இந்தச் சேஞை உறுகுணையின் வடமேற்குப் பாகத்தினூடாகச் சென்று மாஞபரணனின் பின்னணியைத்தாக்க பராக்கிரமவாகுவினால் அனுப்பப்பட்டது.


E நாராயணனால் உண்டாக்கப்பட்ட கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு பராக்கிரமவாகுவின் சேஞைகளைத் தாக்கி அவனை மாயஇரட்டையுள் மாஞபர்ணன் கலைத்துவிட்டான்.

(III) உறுகுணையை அடிப்படுத்தல்

(பின்வரும் பக்கத்தில் போர்நடத்தப்பட்ட முறையைப் படத்திலே காண்க)

மாஞபர்ணன் இதற்குப்பின் சில காலத்தில் இறந்துவிட்டான். அதன்பின் அவன் தாயாராகிய சுகல என்பவள் நாட்டின் இராணியானாள். புத்த பெருமானின் பரிசுத்த பல்லும், அவருடைய பிச்சைப்

பராக்கிரமவாகுவின் சேனைகள் சென்ற வழிகள் (சுகல என்பவனுக் கெதிராக)



A. உறுகுணையின்மேல் பராக்கிரமவாகுவின் சேனைகளின் பாய்ச்சல் புத்தளையில் தடைபடுதல்.

B & C உறுகுணையை வடமேற்குப் பாகத்திலிருந்து அக்கிரமிக்க இரு சேனைகளை பராக்கிரமவாகு அனுப்புதல்.

D இரு சேனைகளும் மகானுக குளத்தண்மையில் சந்தித்து புத்தளைக்குத் தடைபட்டு நின்ற சேனைக்கு உதவி சுகலயை வெல்லுதல்.

பாத்திரமும் அவள்வசமிருந்தன. எவர்வசம் இப்பரிசுத்த பண்டங்கள் இருந்தனவோ அவரே நாட்டின் அரசராவர் எனும் அபிப்பிராயம் பொதுமக்களிடம் இந்தக் காலங்களில் நிலவியது. இப்பொருட்கள் சுகலயின் வசமிருந்ததால் அவளுக்குப் பெரும் மதிப்பு இருந்தது. அதனல் உறுகுணையை வெல்லுவது பெரிய பராக்கிரமவாகுவுக்குச் சுலபமாயிருக்கவில்லை.

பராக்கிரமவாகு பலம்பொருந்திய ஒரு சேனையை (A) மாகன் தோட்டையின் ஊடாக உறுகுணைக்குள் அனுப்பினன். இந்தச் சேனை சுகலயின் படைவீரர்களை உடுந்துறை எனுமிடத்தில் வென்று தெற்கே வத்தள எனும் இடத்துக்கு முன்னேறிச் சென்றது. இவ்விடத்தில் பராக்கிரமவாகுவின் சேனைகள் தடுக்கப்பட்டு இரு பக்கத்தாருக்குமிடையில் கடும் போர் நடந்து, இரு புக்கத்தாரும் விட்டுக்கொடுக்க வில்லை. அப்போது பராக்கிரமவாகு தான் முன்னெரு முறை செய்ததுபோல உறுகுணையை மேற்குத்திக்கிலிருந்து தாக்கும் முறையைக் கடைப்பிடித்து இரு சேனைகளை (B, C) மாயிரட்டையினூடாக உறுகுணைக்குள் அனுப்பினன். இவ்விரு சேனைகளும் மாகனைகுளமென்னும் இடத்திற் சந்தித்து பராக்கிரமவாகுவின் பிரதான படைகள் சுகலயின் படைகளுடன் உக்கிரமமாக யுத்தஞ் செய்து நின்ற வத்தள எனுமிடத்துக்கு வந்து சேர்ந்தன. இவ்வாறு சுகலயின் சேனைகள் எல்லாத் திசைகளிலும் பகைவராலே சூழப்பட்டுப் படுதோல்வி அடைந்தன. இதனல் பராக்கிரமவாகு இலங்கையின் ஏக அரசனும் விளங்கினன். இவ்வாறு அவன் ஏக அரசனன காலம் கி. பி. 1153-ம் வருடம் என்று கூறப்படுகிறது.

பயிற்சி II

சுருக்கமாக விடைதருக:

(1) 1-ம் விஜயவாகுவின் மரணத்தின் பின்பு எவ்வாறு உள்நாட்டுக் கலகம் இலங்கையில் உண்டாயிற்று என்று விளக்குக.


(2) 1-ம் விஜயவாகுவின் மகனகிய விக்கிரமவாகு இராசிரட்டையின் அரசனனபோது (I) மாயிரட்டையை (II) உறுகுணையை ஆண்டது யார்?

(3) மானபரணன் இறந்தபோது (I) மாயிரட்டை (II) உறுகுணை ஆகிய இரு பிரிவுகளுக்கும் அரசனனவர் எவர்?

(4) விக்கிரமவாகுவுக்குப் பின் இராசிரட்டைக்கு அரசனனவர் எவர்?

(5) பராக்கிரமவாகுவின் தகப்பன் யார்? பாட்டன் யார்?

(6) அவன் தகப்பனரின் மரணத்தின் பின்பு பராக்கிரமவாகுவை வளர்த்து வந்தவரின் பெயர் யாது?



இப்பாரிய நீர்ப்பாசன வேலையால் விவசாயம் செழித்து இத்தீவுக்குப் பெரும் செல்வாக்கு உண்டாக்கிற்று.

(7) அவனை வளர்த்து வந்தவராகிய மாமனுடன் பராக்கிரமவாகு எவ்வாறு நடந்துகொண்டான்?

(8) அவன் மாமன் பராக்கிரமவாகுவை வெறுக்கவேண்டி ஏன் வந்தது? அப்போது யாருடைய உதவியை நாடினான்?

(9) இராசஇரட்டைக்குப் பயந்து ஓடியது ஏன்?

(10) கீர்த்தி சிரீமேகனுக்குப் பின் மலாயஇரட்டையின் அரசன் யார்?

(11) பராக்கிரமவாகுவுக்கு உள்ள பெரும் ஆசை யாது?

(12) இவ்வாசையைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கையின் எந்தத் தேசங்களை அவன் வெல்ல வேண்டி இருந்தது?

(13) முதன்முதல் அவன் தாக்கி வென்ற தேசங்கள் எவை?

(14) இராசஇரட்டையைத் தாக்க அவனிட்டிருந்த திட்டம் யாது?

(15) இந்த யுத்தத்தைச் சுருக்கமாக விபரிக்க.

(16) கஜவாகுவின் மரணத்தின் பின்பு இராசஇரட்டை அரசனைத் தன்னை ஆக்கிக்கொள்வதற்குப் பராக்கிரமவாகு யாருடன் போர்செய்ய வேண்டியதாய் இருந்தது?

(17) மானபர்ணனுடன் பராக்கிரமவாகு செய்த போரைச் சுருக்கமாக விபரிக்க.

(18) உறுகுணை இறுதியாக அடிப்படுத்தப்படுவதற்கு முன் யாரை வெல்லவேண்டியதாய் இவ்வரசனுக்கு இருந்தது?


(19) சுகலையின் சேனை முதன்முதல் எவ்விடத்தில் தோற்கடிக்கப் பட்டது? அதன்பின் பராக்கிரமவாகுவின் சேனைகள் தடை செய்யப்பட்ட இடமெது?

(20) மறு சேனைகளை எவ்வழியால் அனுப்பி சுகலையின் சேனைகளைப் பராக்கிரமவாகு சூழ்ந்து கொண்டான்?


பராக்கிரமவாகுவின் ஆட்சி (கி. பி. 1153—1186)

இலங்கைத் தீவின் ஏக அரசனானதன் பின் பராக்கிரமவாகு இத் தீவை பலமும், ஒற்றுமையும், செழிப்பும், மனரம்மியமுடையதுமாகச் செய்யத் தீர்மானித்தான். பொலநறுவையை ஓர் அழகிய நகரமாகச் செய்வதும், புத்த சமயத்தை அது அநுராதபுர காலத்திலிருந்த உன்னத நிலைமைக்குக் கொண்டுவருவதும் அவனைத் தூண்டி நின்ற ஆசைகளாம்.

முழுத் தீவிலும் தனது பூரண ஆதிக்கத்தைச் செலுத்தத்தக்கதாக அரசாட்சி முறையை ஆரம்பித்து மாயஇரட்டை, மலாயஇரட்டை, உறுகுணை ஆகிய பிரிவுகளை தனது கட்டுப்பாட்டுக்குக்கீழுள்ள மாகாண அதிகாரிகளின் கீழ் அமைத்தான். போர், சட்டம், வருமானம் முதலியவற்றைக் கவனிக்கப் பிறிது பிறிதான இலாகாக்கள் நிறுவப்பட்



பராக்கிரமபாகுவின் மாளிகை



இலங்கைதிலக விகாரை

டன. வரிகளே வசூல் செய்ய ஒரு திருத்தமான முறையையும் கையாண்டான்:

நீர்ப்பாசன முறைகளும், விவசாயமும் திறமையாகக் கவனிக் கப்பட்டன. மாயிரட்டையில் ரபோவெவ, மகலவெவ என்னுங் குளங்களைக் கட்டி, அவைகளிலிருந்து தூரத்திலுள்ள வயல்களுக்கு நீரைக்கொண்டு செல்லத்தக்க வாய்க்கால்களும் கட்டப்பட்டன. இப் பகுதியில் பாரிய விவசாய வேலைகள் நடைபெற்றன. ஜயவாகு வேந் தன் விக்கிரமவாகுவைத் தவிர்த்து மானுபரணனை அரசுகட்டிலிலேற்ற முயன்றதாலுண்டான உள்நாட்டுக் கலகத்தால் சிதைவுண்ட மல்வத்து ஓயா, கல ஓயாப் பிரதேசங்களிலுள்ள குளங்கள் திருத்தி அமைக்கப் பெற்றன. இதன் பயனுக இப்பகுதியில் நடைபெற்ற விவசாயத் தொழில் மிகச் செழிப்புற்று விளங்கினது. மகாவலிகங்கைப் பிரதே சத்தில் அநேக குளங்களும் வாய்க்கால்களும் இருந்தன. இவைக ளெல்லாம் பழுது பார்க்கப்பட்டன. பராக்கிரம சமுத்திரமெனப்படும் பாரிய குளமும் கட்டப்பட்டது. அங்கமடில எலா, மினிப்பை எலா முதலிய வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. மேலும் மின்னேரியா, கிரித்தல, கடுலுவெவ, கந்தளாய் முதலிய குளங்கள் ஒன்றுட னென்று வாய்க்கால்களால் தொடுக்கப்பட்டன.

பராக்கிரமவாகு பொலநறுவையை ஓர் அழகிய நகரமாக்கினன். ஓர் அழகிய மாளிகையும், சிறந்த பல கோவில்களும், அநேக குளிப்பிடங்களும் கட்டப்பட்டன. தற்காலத்தில் இக்கட்டடங்களின் சிதைவுகளையே நாம் காண்கின்றோம். அவைகளிலிருந்து பராக்கிரம வாகுவின் பொலநறுவையின் அலங்காரத்தை அறிந்துகொள்ள லாம். (அடுத்துவரும் அத்தியாயத்தில் பொலநறுவை நகரமும் அதன் கட்டடங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.)

தன் முன்னேரிற் பல அரசர்களைப் போலவே பராக்கிரமவாகு வும் புத்த சமயத்துக்குப் பெரும் ஆதரவு அளித்து வந்தான். இலங் கைதிலக விகாரை, கல்விகாரை, தூபரும, பொத்குள் விகாரை முத லிய திவ்விய ஆலயங்களை கட்டி எழுப்பினன். இலங்கை முழுவதி லுமே உள்ள தாது கோபங்களுட் பெரிதாகிய தெமிழமகாசய இவன் ஆட்சிக் காலத்திலேயே கட்டப்பட்டது. பதினெராம் அத்தியாயத்தில் புத்த சமயத்தில் அக்காலத்திலுள்ள மூன்று பிரிவுகளாகிய தேரவா தம், தர்ம ரூச்சியம், சகாலிகம் ஆகியனவற்றைச் சேர்ந்த புத்த குருக்கள் பிறிது பிறிதான விகாரைகளில் அனுராதபுரியில் வசித்து வந்தனரென்பதைப்பற்றிப் படித்துள்ளோம். இப்பிரிவுகளுக்கிடையி லுள்ள சமயபேதம் வளர்ந்துகொண்டே வந்தது. பராக்கிரமவாகு தன் புத்திசாதுரியத்தால் இம்மூன்று பிரிவுகளுக்கிடையில் ஒருவகைச் சமாதானத்தை நிறுவி புத்த குருக்களை ஒற்றுமைப் படுத்தினன்.

கல்விக்கும், இலக்கியத் தொழில்களுக்கும் அவன் கொடுத்துள்ள ஆதரவு மிகப் பெரிது.

பராக்கிரமவாகுவின் வெளிநாட்டுப் போர்.


(அ) பர்மா

இலங்கையைக் கீர்த்திவாய்ந்த ஒரு நாடாகச் செய்யத் துணிந்த பராக்கிரமவாகு அதன் அரசனுக்கு அபகீர்த்தி வரக்கூடிய எதையும் எவர்தான் செய்யினும் அவருடன் போர்புரிந்து தகுந்த பாடம் படிப் பித்தே தீருவான். ஒருமுறை பர்மிய அரசன் ஒருவன், இலங்கை தனது நாட்டுடன் செய்துவந்த யானை வியாபாரத்தைத் தடுத்து, இலங்கை அரசனின் தூதுவருக்கு அவமரியாதை செய்து, இலங்கையி லிருந்து கம்போடியா தேசத்துக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு சிங் களப் பெண்மணியையும் கைதுசெய்துவிட்டான். பராக்கிரமவாகு கோபித்து, ஒரு பாரிய சேனையை அவ்விடம் அனுப்பி, அம்மன்னனை வென்று தனது கட்டளையின்படி அவனை ஒழுகவைத்தான்.

(ஆ) தென்னிந்தியா

சோழ பேரரசு இவன் காலத்தில் வலிமைகுன்றி இருந்தது. எனினும் இக்காலத்திலும் பாண்டியர், சோழரின் இராச்சியத்திலே அடங்கியிருந்தனர். பாண்டிய நாட்டை அவர்கள் மதுரைப் பிரிவு, தின்னை வேலைப்பிரிவென இரு பிரிவுகளாக வகுத்து ஆட்சிபுரிந்து வந்தனர். இவ்விரு பிரிவுகளையும் ஆண்டுவந்த இரு தலைவர்களுக் குமிடையில் போர் உண்டாயிற்று. மதுரைத் தலைவன் பராக்கிரமவா குவின் உதவியைக் கேட்டு நின்றான். இலங்கை மன்னனும் அவ னுக்கு உதவிசெய்ய வாக்களித்து ஒரு சேனையை இந்தியாவுக்கு அனுப்பினன். அங்கு நடந்த யுத்தங்களின் முதற் கூற்றில் மது ரைத் தலைவனும் இலங்கை வேந்தனும் வெற்றியடைந்தனரெனினும், பிந்திய பகுதிகளில் சோழமன்னன் திருநெல்வேலி அதிபனுக்கு உதவ முன்வந்ததினால் இவர்கள் இருவருந் தோல்வியுற்று, பராக்கிர மவாகுவின் தளபதியாகிய இலங்காபுரன் என்பவனுடைய சிரத்தைப் பகைவர் கொய்து மதுரை நகர வாயலில் அறைந்தும் விட்டனர்.

பராக்கிரமவாகு முப்பத்துமூன்று வருடமாக இலங்கையை ஆண்டுவந்தான். இக்காலத்தில் இவனால் இலங்கை அடைந்த பயன் கள் பல. இவன் இந்நாட்டின் கீர்த்திபெற்ற மன்னருள் ஒருவனு வன். நாட்டை ஒன்று படுத்தி, ஆட்சி முறையைத் திருத்தி அமைத்து, நீர்ப்பாசன முறைகளையும், விவசாயத்தையும் அபிவிருத்தி செய்து, புத்த சமயத்தை அதன் பழைய நிலைக்கு கொண்டுவந்து, கல்விக்கும் இலக்கியத்துக்கும் பேராதரவளித்து, பொலநறுவை நகரை அழகுற அமைத்து அழியாப்புகழ் எய்தினன். இவைகள் யாவும் 33 வருடங்



வட்டதூகே (நிசாங்கமல்லன்)

களுள் செய்து ஒழிப்பது சுலபமன்று. இவன் செய்த பிறநாட்டுப் போர்களினால் இலங்கை ஒரு பயனும் அடையவில்லை என்பர் ஓர் சிலர். மேலும், இப்போர்களினால் இலங்கையின் செல்வம் குறைந்து போக, பராக்கிரமவாகுவின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இலங்கை பயன் குன்றிய நாடாய் விளங்கிற்று என்றும் இவர் கூறுவர்.

பயிற்சி 111

1. கீழே காணும் தலையங்கங்களின் கீழ் எவ்வாறு பராக்கிரமவாகு ஆட்சிமுறையைத் திருத்தி அமைத்தான் என்று காட்டுக:

   (அ) பலமான மத்திய கட்டுப்பாடு (ஆ) போர், நீதி, வருமான விஷயங்கள் (இ) வரிகளை வசூலிக்கும் முறை.

2. விவசாயத்துக்கும் நீர்ப்பாசனத்துக்கும் பின்வரும் பிரிவுகளில் பராக்கிரமவாகு யாது செய்தான்? (அ) மாயிரட்டை (ஆ) மல்வத்துஓயா, கல்ஓயாப் பிரதேசங்கள் (இ) மகாவலி கங்கைப் பிரதேசம்.
3. பொலநறுவையை அழகுறச்செய்ய அரசன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாவை?
4. எவ்வாறு புத்த சமயத்துக்கு அவன் ஆதரவளித்தான்?
5. பர்மாவுடன் போர் செய்யவேண்டி வந்ததேன்? அதன் பயன் யாது?
6. தென்விந்தியாவில் சண்டை செய்யவேண்டி வந்ததேன்? அதன் பயன் யாது?
7. பராக்கிரமவாகு நாட்டுக்குச் செய்த நன்மைகள் பாவை?
8. பராக்கிரமவாகுவின் ஆட்சியின் அந்திக்காலத்தில் இலங்கை பயன் குன்றியதேன்?

(உ) மீளவும் உள்நாட்டுக் கலகம் (கி. பி. 1186—1235)

பராக்கிரமவாகு இலங்கையை முப்பத்து மூன்று வருடகாலமாகச் சிறப்பாக ஆண்டுவந்த காலத்தில் இலங்கையில் சமாதானம் நிலவிற்று. ஆனால் அவனுடைய மரணத்துக்குப்பின், நிசாங்க மல்லன் ஆண்ட காலத்தைத் (கி. பி. 1187—1196) தவிர்த்து கி. பி. 1235-ம் ஆண்டுவரையும் உள்நாட்டுக் கலகம் நடந்துவந்தது. கலிங்க தேசத்து மாகன் என்பவன் கி. பி. 1235-ம் ஆண்டில் இலங்கையின்மேல் படையெடுத்துச் சிங்களவர்களை இராசதிரட்டையிலிருந்து கலைத்து விட்டான். அதுவரையும் கலகம் நிலைத்திருந்தது.

பராக்கிரமவாகுவுக்கு, ஆண் சகோதரரோ, ஆண் குழந்தையோ இல்லாததால் அவனுக்குப்பின் அரசுரிமைக்குரியவர் ஒருவருமில்லை. ஆனதால் மிக நெருங்கிய உறவுடைய ஓர் ஆண்மகன் பராக்கிரமவாகு

வுக்குப்பின் அரசுகட்டிலேறினான். அவன் பெயர் 2-ம் விஜயவாகு. இவன், காலிங்க அரசகுமாரனொருவனே மணம்புரிந்த பாரக்கிரமவாகுவின் சகோதரி ஒருத்தியின் மகன். ஆனதால் அவன் அந்நிய நாட்டியவனே. சிங்களவர் அந்நியருடைய ஆட்சியை எப்போதும் வெறுத்தவரானதால் விஜயவாகு அரசனுவதை வெறுத்தனர். ஆனதினுல் அவன் அரசனுன அன்றைய நாளே அவனை அகற்றிவிடக் கலகஞ் செய்தனர். கலகத்தை அடக்கியதன்பின், விஜயவாகு கலகஞ் செய்தவரையும், பிறரையும் அன்புகாட்டி வென்றுவிட முயன்றபோதிலும் ஒரு வருடகாலத்துக்குப் பின்பு மகிந்தன் என்னும் ஒருவனுல் கொல்லப்பட்டான். மகிந்தன் ஒரு வாரமே அரசனுயிருந்தான். ஏனெனில் அவன் நிசாங்க மல்லன் என்பவனுல் கொல்லப்பட்டான். நிசாங்க மல்லனும் காலிங்க தேசத்தவன்.

(ஊ) நிசாங்க மல்லன் (கி. பி. 1187—1196)

சிங்களத்தலைவர்களும், தளபதிகளும் காலிங்க நாட்டுத் தலைவர்களை வெறுத்ததை நிசாங்க மல்லன் உணர்ந்து அவர்களைத் தனது பக்கமாக வசிகரித்துக்கொள்ள முயன்றன். அக்காலத்திலிருந்தவர்களைப் பொதுவாகப் பிரபுக்கள், குருமார், குடியானவர் என மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம். நிசாங்க மல்லன் கற்றூண் சாசனங்களில் சிங்கள பிரபுக்களுக்கு இலங்கையில் ஆட்சிபுரிந்த காலிங்கரை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளான். புத்த குருமாரை அடக்கியுள்ள புத்த சங்கத்தை அதிக அன்புடன் கவனித்து வந்ததால் அவர்களின் மதிப்பையும், ஆதரவையும் பெற்றுக் கொண்டான். புத்த குருமாருக்கு வேண்டிய முறைகளில் உதவிவந்தான். அவர்களின் உபயோகத்துக்காகவே வட்டதாகே, ஹட்டதாகே, இரங்கோட் விகாரை முதலிய அழகிய இடங்கள் கட்டி எழுப்பப்பட்டன. இறுதியாகக் குடியானவர்களை தனது பக்கத்துக்குச் சேர்த்துக் கொள்ளுவதற்காக அவர்களுக்கு உதவியான விவசாய, நீர்ப்பாசன வேலைகளைச் செய்துவைத்ததுமன்றி, ஐந்து வருடகாலத்துக்கு வரிகள் கட்டும் கடமையிலிருந்து சகலரையும் நீக்கி வைத்தான். இப்படியாக சகல வர்க்கத்தினரையும் பிரியப் படுத்தினதால் ஒன்பது வருடகாலமாக ஆட்சிபுரிந்து வந்தான்.

(எ) சேன வீரர்கையில் அதிகாரம் சேர்தல் தளபதிகள் அதிகாரத்தைக் கைக்கொள்ளுதல்

நிசாங்க மல்லனின் மரணத்தின் பின்பு உள்நாட்டுக்கலகம் மீளவும் தலைகாட்டியது. அவனுடைய மகன் வீரவாகு ஒரு நாள் மாத்திரம் அரசனுய் இருந்தான். அந்த வருடமாகிய 1196 கழிறதற்குமுன், நிசாங்க மல்லனின் சகோதரனுகிய 3-ம் விக்கிரவாகுவும், அவன் மருமகனுகிய கோட்டநாகனும் இலங்கை அரசராகிக்

கொலைவாய்ப்பட்டனர். பராக்கிரமவாகுவின் தளபதிகள் நாட்டை ஆள முயன்றனர். கீர்த்தி எனும் தளபதி அதிகாரத்தைத் தன் கைக்கொண்டு மகா பராக்கிரமவாகுவின் பாரியாராகிய லீலாவதியை அரசு கட்டிலேற்றினுன் (இ. பி. 1197—1200). அதன்பின்பு ஆயஸ்மந்த எனும் ஒரு தளபதி நிசாங்க மல்லனின் பாரியாராகிய கலயாணவதியை இராணியாக்கினுன் (இ. பி. 1202—1209). இவ்விரு பெண்மணிகளும் பெயரில் இராணிகளென அரியாசனத்தில் இருந்தனரெனினும், உண்மையில் நாட்டை ஆண்டவர் மேலே குறிக்கப்பட்ட தளபதிகளே.

கலிங்கநாட்டு மாகன்

நிசாங்க மல்லனின் மரணத்தின் பின்புள்ள பதினேழு வருடங்களும் இந்நாட்டின் சரித்திரத்தில் உள்ள கேடுகெட்ட காலங்களில் ஒன்றுகும். இந்தக் குறுகியகால எல்லையுள் பன்னிரு அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய் நாட்டை ஆண்டனர். தளபதிகளும் காலிங்க நாட்டு அரசகுமாரரும் இலங்கையின் அரச பட்டத்துக்குத் தம்முட் போட்டியிட்டுக் கொண்டனர். ஆனுல் ஒருவராயினும் நீடித்து நாட்டை ஆளவில்லை. இறுதியாக இ. பி. 1214-ம் ஆண்டில் இலங்கைக்கு இன்னுமோர் காலிங்க இளவரசன் வந்தான். தனக்கு முன் வந்த காலிங்க இளவரசர், சனங்களுக்கு அன்புகாட்டி அவரின் ஆதரவைப்பெற முயன்றது பிழையெனக் கருதி, தான் நாட்டைக் கைப் பற்றிய பின்பு சிங்களவர்களின்மீது இரக்கங் காண்பியாது நாட்டைக் கொடூரமாய் ஆண்டுவந்தான். பொது சனங்களிடமிருந்து அநீதியாக அவர்களின் நிலங்களைப் பறித்து, சிங்களப் பெரியார்களைக் கொலை செய்து, குருமாரை நிந்தித்துத் தேவாலயங்களைத் தகர்த்து, தன்னை எதிர்த்தவர்களைக் கொன்று ஒரு பயங்கரமான ஆட்சியை நடத்தினுன். "மாகனின் ஆட்சியின் காலத்தில் நாடு முழுவதும் ஒரு சாவீடு" என அக்காலத்திலிருந்த ஒரு சிங்கள எழுத்தாளர் குறிப்பிட்டிருக்கிறார். அக்காலத்தில் வசித்த சிங்களவர் மிகப் பலங்குன்றி யிருந்தனர். உள்நாட்டுக் கலகங்கள் அவர்களின் பலத்தைக் குறைத்திருந்ததனுல் அவர்களால் மாகனை எதிர்க்க முடியவில்லை. அதனுல் அவர்கள் இராசதிரட்டையைக் கைவிட்டு இலங்கையின் தென்மேற்குப் பாகங்களில் குடியேறினர்கள். இவ்வாறு மாகன் ஒரு புது தமிழ் இராச்சியத்தைத் தொடக்கிவிட்டான். யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்பம் இதுவேயாகும்.

பயிற்சி IV

1. மகா பராக்கிரமவாகுவுக்குப்பின் இலங்கையை அரசாண்டவன் யார்?
2. 2-ம் விஜயவாகுவின் தகப்பன் எத்தேசத்தவன்?
3. சிங்கள பெரியார்களும் தளபதிகளும் விஜயவாகுவை வெறுத்தது ஏன்?

4. அவன் ஆட்சியின் கால அளவு என்ன?
5. அவன் பின் நாட்டை ஆண்டவன் யார்? எவ்வளவு காலம் ஆண்டான்?
6. நிசாங்க மல்லன் ஒரு சிங்களவனு அல்லது காலிங்கனு?
7. எவ்வாறு பின்வரும் பிரிவினரை நிசாங்க மல்லன் வசீகரப் படுத்தினான்? (i) சிங்களத் தலைவர் (ii) புத்த குருக்கள் (iii) குடிமக்கள்
8. அவன் எவ்வளவு காலம் ஆண்டான்?
9. நிசாங்க மல்லன் இறந்த வருடத்திலே எத்தனைபேர் ஒருவர் பின் ஒருவராய் இலங்கையின் அரசராயினர்?
10. அவர்கள் ஆட்சிக் காலங்கள் மிகக் குறுகியனவாய் ஏன் இருந்தன?
11. இவன் பின்பு அதிகாரத்தைக் கைப்பற்றிய சில சிங்கள தள பதிகளின் பெயர்களைத் தருக.
12. அத்தளபதிகள் யாரை அரசுகட்டிலேற்றினர்?
13. இந்த இராணிமார் சிங்காசனத்தில் இருந்தபோது உண்மையில் நாடு யாரால் ஆளப்பட்டது?
14. நிசாங்க மல்லன் இறந்தபின் 17 வருடகால எல்லையில் இலங் கையில் எத்தனை அரசர்கள் இருந்தனர்?
15. கி. பி. 1214-ம் ஆண்டில் இலங்கைமீது படையெடுத்த காலிங்க வீரன் யார்?
16. நிசாங்க மல்லன் சனங்களை வசிகரிக்க எடுத்த முயற்சிபோல இவனும் எடுத்துக்கொண்டானு?
17. (i) சனங்களையும் (ii) குருமாரையும் (iii) பெரியாரையும் எவ்வாறு நடத்தினான்?
18. தன்னை எதிர்த்த சிங்களவர்களை எவ்வாறு நடத்தினான்?
19. சிங்களவர்கள் இந்நிலையில் என்ன செய்தார்கள்?
20. எப்படியான இராச்சியத்தை மாகன் என்பவன் வடபாகத்தில் நிறுவினான்?

13-ம் அத்தியாயத்தில் பரீட்சை

1. பொலநறுவையைத் தலைநகராக்கிய சனங்கள் யார்? ஏன் அதைத் தலைநகராக்கினர்? சிங்கள அரசரும் அதைத் தலை நகரமாகத் தொடர்ந்து வைத்திருந்ததேன்?
2. சோழரை இலங்கையிலிருந்து கலைத்துவிடச் சிங்களவருக்கு முடியாமல் இருந்ததற்கு இரு காரணங்கள் தருக.
3. கீழேதரப்பட்ட தலையங்கங்களின் கீழ் 1-ம் விஜயவாகுவைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக:-

(அ) சிங்களவர்களுக்கிடையில் இருந்த பிரிவுகளை எவ்வாறு அழித்தான்

(ஆ) சோழரை இலங்கையிலிருந்து எவ்வாறு துரத்தினான்?

(இ) சோழரைத் துரத்திவிட்டு, அவரிலிருந்து ஆபத்து நேரா திருக்க யாறு செய்தான்?

(ஈ) அவன் எவ்வாறு நாட்டை ஆண்டான்? (i) எவ்வாறு நாட்டில் எழுந்த கலகங்களை அடக்கினான் (ii) விவசாய நீர்ப்பாசன வேலைகள் (iii) சமயம்.

4. 1-ம் விஜயவாகுவுக்குப்பின் எவ்வாறு உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்ததென்று விளக்குக.

5. கீழேவரும் தலையங்கங்களின் கீழ் பராக்கிரமவாகு இலங்கை யின் ஏக அரசனாய் வருமட்டும் உள்ள சரித்திரத்தைச் சுருக்க மாகத் தருக.

(அ) அவன் தகப்பன் யார்? பாட்டன் யார்?

(ஆ) இளமையில் அவன் (i) கீர்த்தி ஸ்ரீமேகனுடனும் (ii) கஜவாகுவினுடனும் எவ்வாறு நடந்துகொண்டான்?

(இ) (i) கஜவாகு (ii) மானுபர்ணன் (iii) சுகல என்பவர் களுடன் அவன் நடத்திய போர்.

6. பராக்கிரமவாகு ஏக அரசனபின் செய்தனவற்றைப் பற்றிப் பின் வரும் தலையங்கங்களின்கீழ் எழுதுக. (i) அரசாட்சி முறை (ii) விவசாயமும் நீர்ப்பாசனமும் (iii) பொலநறுவை நகரம் (iv) சமயம் (v) பிறநாட்டு யுத்தம்

7. 1-ம் பராக்கிரமவாகு இலங்கையின் கீர்த்திவாய்ந்த அரசர்களுள் ஒருவனும் மதிக்கப்படுவது ஏன் என்பதை விளக்குக.

8. 1-ம் பராக்கிரமவாகுவின் மரணத்துக்குப்பின்பு உள்நாட்டுக் கலகம் உண்டானதற்குக் காரணங்கள் என்ன?

9. நிசாங்க மல்லனைப்பற்றிச் சுருங்கிய விடைகள் தருக.
(அ) அவன் யார் (ஆ) நாட்டிலுள்ள பலவகையான சனங் களினுடைய அன்பைப்பெற அவன் யாது செய்துகொண்டான் (இ) எவ்வளவு காலம் ஆண்டான்.

10. மாகன் இலங்கைமீது எப்போது படையெடுத்தான்? அவன் எவ்விடமிருந்து வந்தான்? இத்தீவிலுள்ளவர்களை எவ்வாறு நடத்தினான்?

14-ம் அத்தியாயம்

இலங்கை—பொலநறுவை காலம் II
(கி. பி. 1017—1235)

சமயமும் பண்பாடும்


சமயம்

இலங்கையில் எவ்வாறு புத்த சமயம் அநுராதபுரி காலத்தில் தழைத்தோங்கியது என்று 11-ம் அத்தியாயத்தில் படித்திருக்கிறோம். அக்காலத்து அரசருள் ஏறக்குறைய சகலரும் புத்த சமயத்துக்குத் தமது பேராதரவை அளித்து வந்தனர். அவர் விகாரைகளையும், தாது கோபங்களையுங் கட்டினர். புத்த குருமாரைத் தாபரித்து வந்தனர். சங்கக் கட்டுப்பாடு அனுசரணைகளைக் கண்காணித்தனர். கல்வியும் இலக்கியமும் இவர்கள் காலத்திலே தழைத்தோங்கி வளர்ந்தன,

கி. பி. 10-ம் நூற்றாண்டு தொடக்கம் சோழரின் படையெடுப்புடன் இந்நாட்டில் குழப்பம் மலிந்திருந்தது. அவர்களின் முயற்சி 11-ம் நூற்றாண்டிலும் தொடர்ச்சியாக நடைபெற்றது. இலங்கை கி. பி. 1017-ம் ஆண்டு சோழரால் அடிப்படுத்தப்பட்டு ஒரு சோழப் பேரரசின் ஒரு பிரிவாக விளங்கியது. இக்காலத்து அரசர்கள் தமது நாட்டின்மேல் படை எடுத்து வந்தவர்களை எதிர்ப்பதில் தமது முழுக் கவனத்தையும் செலுத்திவந்ததால் தமக்கு முன்னிருந்த அரசர்கள் போல் சமயத்தை ஆதரிக்க முடியாதிருந்தனர். ஆகையால் சில காலமாக புத்த சமயம் அரசருதவியின்றி நிலையில் குன்றிவரலாயிற்று. தாட்டை (கி. பி. 1017—1070) ஆண்டுவந்த சோழர் இந்துக்கள். ஆனதினால் அவர்கள் இந்நாட்டில் இந்து சமயத்தையே பெரிதும் ஆதரித்தனர். இதனாலும் புத்த மதம் மேலும் நிலைதளர்ந்தது.

சோழரை நாட்டிலிருந்து கலைத்ததன்பின் 1-ம் விஜயவாகு புத்த சமயத்தை அதன் பழையநிலைக்குக் கொண்டுவரத் தன்னால் ஆனதெல்லாம் செய்தான்.

பொலநறுவையில் புத்தரின் பரிசுத்த பல்லை வைத்திருப்பதற்காக ஓர் கோவிலைக்கட்டினான். புத்த குருமாருக்கு தம்மாலியன்றளவு உதவி செய்தான். 'உபசம்பத' என்னும் உண்மைக் குருத்துவத்தை இலங்கையில் நிலைநாட்ட பர்மாதேசக் குருக்களை வரவழைத்தான். சிவனொளி பாதமலை உச்சியில் உள்ள புத்த சுவட்டு ஆலயத்தைத் தாபரிக்க நிலங்களை ஒதுக்கி வைத்தான். ஆனால் அவன் மரணத்தின் பின்பு உள்நாட்டுக் கலகம் திரும்பவும் உண்டாயிற்று.



தாலத மாலுவா பொலநறுவை

பொலநறுவை நகரில் தாலத மாலுவா இருந்தது. அது ஒரு பாரிய உயர்ந்த மேடை. அதில் விஜயவாகு, பராக்கிரமவாகு, நிசாங்கமல்லன் ஆகியோரால் சமய வழிபாட்டுக்காகப் பல கட்டடங்கள் எழுப்பப்பட்டன. தூபரும என்பதும் சத்மல் பிரசாதய என்பதும் பராக்கிரமவாகுவினால் கட்டப்பட்டன. இப்படத்தில் குறிக்கப்பட்ட கட்டடங்களைப்பற்றிய விபரத்தை 316-ம் பக்கத்தில் காண்க.

இந்தக்காலங்களில் புத்த சமயம் மீளவும் நிலைகுலைந்தது. விகாரை கள் தன்னும் தாக்கப்பட்டு அங்குள்ள திரவியங்கள் போர் வீரரால் கொள்ளையடிக்கப்பட்டன.

1-ம் விஜயவாகுவின் பின்பு புத்த சமயத்துக்கு ஊக்கம் அளித் தவன் 1-ம் பராக்கிரமவாகுவே. அவனுடைய காலத்தில் புத்த சம யம் உண்மையாகவே அநுராதபுர காலத்தில் அது பெற்றிருந்த உன்னத நிலையை மீளவும் அடைந்தது. ஆனல் அவனுடைய காலத் துக்குப் பின்பு, நிசாங்கமல்லன் ஆண்டுவந்த ஒன்பது வருடங்களைத் தவிர்த்த காலத்தில் உள்நாட்டுக் கலகம் மீளவும் தாண்டவம் ஆடவே சமயமும் தளர்ச்சியுற்றது. மாகனின் படையெழுச்சியுடன் புத்த சம யம் துன்புறுத்தப்படுவதும், குருமார் நிந்திக்கப்படுவதும், விகாரை கள் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்படுவதும், நாட்டில் எங்கும் நிகழலாயின.


வழிபாடும் சமயங்களும்

மகாயான புத்த சமயம் இலங்கையில் போதனை செய்யப்பட்டு வந்தகாலம் ஒழிந்ததாயினும், பரிசுத்த பண்டங்களையும், உருவச்சில களையும் வழிபாடு செய்யும் வழக்கம் தொடர்ந்துவந்தது. புத்தரின் பரிசுத்த பல்லுக்கு அதிக மரியாதை செலுத்தப்பட்டது. இக்காலத் துப் பிரதான மூன்று அரசர்கள் இத்திவ்விய பொருளுக்கு ஒவ்வொ ருவரும் ஒவ்வோர் ஆலயம் கட்டுவித்து பெருங்கவனத்துடன் காப் பாற்றி வந்தனர். மகா பராக்கிரமனின் ஆட்சிகாலத்தில் 'வேலைக் காரர்கள்' என்று கூறப்பட்ட தமிழ்ப் போர் வீரரின் பகுதியில் ஒரு விசேஷ குழுவினரால் இதன் பாதுகாப்புவேலை ஆற்றப்பட்டு வந்தது. அரசரின் விசேஷ கவனத்தை இத்திவ்விய பல்லு அநேக வருடங்க ளாகப் பெற்றுவந்ததால் நாட்டில் எத்தலைவனின் கவனத்தில் இப் பொருள் இருந்ததோ அத்தலைவனே நாட்டு அரசனுல் எனச் சனங்களால் மதிக்கப்பட்டான். சுகல என்பவள் புத்தரின் திவ்விய பல்லையும், பிச்சைப் பாத்திரத்தையும் வைத்திருந்ததால் சனங்களின் அதிக ஆதரவைப் பெற்றுளென்று முந்திய அத்தியாயத்தில் படித் திருக்கிறோம்.

சிவனெளி பாதமலை யென்றும், பதிபாத என்றும் அழைக்கப் பட்டு வந்த புண்ணிய ஷேத்திரம் பாத்திரை ஸ்தலமாக பிரசித்தி பெற்றுவந்தது. விஜயவாகு, மலை உச்சிக்குச் செல்லும் பாதையில் அநேக தங்குமடங்களைக் கட்டுவித்தான்.

இந்து சமயத்தின் ஆதிக்கம்

இந்தக் காலத்தில் இந்து சமயம் இலங்கையில் தழைத்தோங்கி யது. இந்நாட்டில் குடியேறிய தென்னிந்தியர் இந்து மதத்தினரான தாலும், இக்காலத்தில் இவர்கள் இலங்கையில் பெருந் தொகையின




தென்னாசியா

ராய்க் குடியேறினதாலும் இந்து மதத்தினரின் தொகை அதிகரித்தது. தமது தெய்வங்களை தமது முறையில் இவர்கள் வழிபட்டு வந்தனர். புத்த சமயத்தவர் இம்முறைகளிற் சிலவற்றையும் தமது ஆலய வழிபாட்டு முறைகளில் வரவேற்றுக் கொண்டனர். மேலும் இந்நாட்டில் இக்காலத்தில் அரசாட்சி செய்த அரசர் பலர் தென்னிந்திய அரச குடும்பங்களில் விவாகஞ் செய்துகொண்டதால் இவ்வரசரின் மாளிகைகளில் இந்து சமய சடங்குகள் நடைபெற்றுவந்தன. உதாரணமாக வளர்ந்துவரும் ஒரு சிறுவனின் சீவியத்தில் காலந்தோறும் சில சடங்குகள் நடந்தேறுவதை எடுத்துக் கொள்வோம். பராக்கிரமவாகுவின் குழந்தைக்காலத்தில் அவனுக்கும் இப்படியே நடந்தது. இக்காலத்தில் தென்னிந்திய சாதி முறைகள் இலங்கையில் ஆலயங்களிலும் அனுசரிக்கப்பட்டு வந்தது. விஜயவாகு சிவனொளி பாதமலையில் ஒரு கீழ்ப்படிக்கட்டை தாழ்ந்த சாதியாரின் பிரத்தியேகமான உபயோகத்துக்காகக் கட்டினான் என்பது இதற்கு ஓர் உதாரணமாக விளங்குகின்றது.

பயிற்சி

சுருக்கமாக விடை தருக:

1. புத்த சமயத்தில் விசேஷ கவனமெடுத்த இக்காலத்து மூன்று பிரதான அரசர் எவர்?
2. மறு அரசர் புத்த சமய வளர்ச்சியை ஆதரியாது விட்டது ஏன்?
3. சோழரின் ஆட்சிக் காலத்தில் புத்த சமயம் தளர்ந்தது ஏன்?
4. புத்த சமயத்தை முற்காலத்திய நிலைக்குக் கொண்டுவர விஜயவாகு செய்த முயற்சிகள் யாவை?
5. விஜயவாகுவின் மரணத்தின் பின்பு புத்த சமயம் மீளவும் தளர்ச்சியுற்றது ஏன்?
6. புத்த சமயத்துக்கு புத்துயிர் கொடுக்க பராக்கிரமவாகு எடுத்த பிரயத்தனங்கள் எவை?
7. அவனுடைய மரணத்தின் பின்பு புத்த சமயம் மீளவும் தளர்ச்சியுற்றது ஏன்?
8. நிசாங்கமல்லன் புத்த சமயத்துக்கு மீளவும் எவ்வாறு புத்துயிர் அளித்தான்?
9. மாகனின் ஆட்சியின் கீழ் புத்த சமயத்துக்கு நடந்தது யாது?
10. இக்காலத்தில் மகாவணக்கத்துக்குரிய புத்தரின் திவ்விய பொருள் எது?



பொலநறுவையின் பிரதான கட்டடங்களைக் காட்டும் படம்
அம்புக்குறி (↑) கட்டட விபரங்கள் தரப்பட்ட வரிசையைக் குறிக்கும் இப்ப
டத்தை பொலநறுவையின் வர்ணனையைப் படிக்கும்போது உபயோகிக்க

11. பராக்கிரமவாகுவின் காலத்தில் இப்பொருள் எவ்வாறு பாது காக்கப்பட்டுவந்தது?

12. இவ்விய பல்லிப்பற்றி சனங்கள் யாது அபிப்பிராயங் கொண் டிருந்தனர்.

13. பெருந் தொகையினராய் அக்காலத்திலே சனங்கள் யாத் திரை சென்ற இடம் ஒன்று எது?

14. இந்த யாத்திரையை இலகுவாக்க விஜயவாகு செய்தது யாது?

15. தென்னிந்தியா சாதிமுறை புத்த வழிபாட்டு ஸ்தலங்களிலும் புகுத்தப்பட்டது என்பதற்கு அத்தாட்சிகள் எவை?

கட்டடக்கலை

இந்தக் காலத்தினது கட்டடக் கலையைப்பற்றி செம்மையாகத் தெரிந்து கொள்வதற்கு பொலநறுவை இக்காலத்திலே எப்படியா யிருந்தது என்று அறிவது உதவும். பொலநறுவையின் படத்தை அவதானிப்போமானால் பின்வரும் அம்சங்கள் தெளிவாகும்.

நகரத்துக்கு மேற்கே தொபவெவா எனும் குளமுண்டு. நகரத் தின் பிரதான பகுதி உள்மதில், வெளிமதில் ஆகிய வரிசைகளினுல் அடக்கப்பட்டிருக்கும். (படத்தில் 'உள்மதில்' 'வெளிமதில்' கஸ்க் காண்க). உள்மதிலானது அரச மாளிகையையும் அழகிய ஒரு மண் டபத்தையும் சூழ உள்ளது. மாளிகை செங்கற்களினுல் கட்டப்பட்டது. மூன்றடுக்கு உள்ளதாயும், கீழ் அடுக்கில் ஐம்பது அறைகள் அடக்கிய தாயும் அது விளங்கும். மண்டபமானது முழுவதும் அழிந்து போயிற்று. சித்திர வேலைப்பாடமைந்த அதன் தலப்பகுதியும் கற் றூண்களுமே அவ்விடத்தில் நாம் இன்று காண்போம். இந்த மதிலுக்கு சற்றுவெளியே குமார பொக்குனம் என்னும் அரச குளிப் பறை உண்டு. அது முழுவதும் பாரிய கற்களினுல் அமைக்கப்பட்டது (பக்கம் 313 காண்க)

உள் நகரத்திலிருந்து வடக்கே உள்ள வாயலால் வெளியேறு வோமாயின், முதலாவது நிவ தேவாலயத்தைக் காண்போம். இது, தென்னிந்தியாவில் பாண்டிய பேரரசர் காலத்தில் கட்டப்பட்ட தேவா லயங்கள்போல் முழுவதும் கல்லால் ஆக்கப்பட்ட இந்து மதக் கோயில் இதற்கு அப்பால் ஓர் உயர்ந்த பீடத்தில் தூபத மாளுவ என்னும் கட்டடம் உண்டு (தூபத மாளுவவின் விரிவான படத்தை 311-ம் பக்கத்தில் காண்க). இவ்விடத்திலுள்ள பிரதானமான கட்டடங்களுள் 1-ம் விஜயவாகுவினுலும், நிசாங்கமல்லனினுலும் கட்டப்பட்ட பரிகத்த பல்லுத் தேவாலயங்கள் இரண்டுள. முந்தியதை 'தூபதகே' என் றும், பிந்தியதை 'ஹட்டதகே' என்றும் அழைப்பர். ஹட்டதகே

பொலநறுவையில் உள்ள தாதுகோபங்கள்



கிரிவிகாரை (பராக்கிரமபாகுவின் மனைவிமாருள் ஒருத்தி)




நன்கட்விகாரை (நிசாங்க மல்லன்)

கல் விகாரை

கல் விகாரையானது ஒரு கற் பாறையிலிருந்து செதுக்கி எடுக்கப்பட்ட ஒரு கோவில். எல்லாமாக கல்லிலிருந்து செதுக்கப்பட்ட புத்தரின் உருவச்சிலைகள் நாலு உண்டு. இப்பக்கத்தில் அவற்றுள் இரண்டு தரப்பட்டுள்ளன.



புத்தர் நித்திரை செய்யும் பான்மையான நிலை.



புத்தர் எழுந்து நிற்கும் பான்மையான நிலை

அறுபது நாட்களில் கட்டி எழுப்பப்பட்டது என்றும் கூறுவர். 'தூபரும' என்பதும் 'சதமல் பிரசாதயம்' என்பதும் மகா பராக்கிரமவாகுவினுல் கட்டப்பட்டன. தாலதமாலுவாவில் உள்ள மற்ற எல்லாவற்றிலும் அழகிய கட்டடம் நிசாங்கமல்லனினுல் கட்டப்பட்ட 'ஹற்ற தகே' என்பதேயாம் (பக்கம் 304). இங்குள்ள கட்டடங்கள் யாவும் சமய சம்பந்தமாகவே கட்டி எழுப்பப்பட்டன ஆனுல் இவற்றுள் பிரதானமானது புத்தரின் பரிசுத்த பல்லினது ஆலயமே. இதிலிருந்தே இவ்விடம் முழுவதற்கும் தாலதமாலுவா என்று பெயர் வந்தது.

இவ்விடத்தைவிட்டு அப்பாற் சென்றுல், பராக்கிரமவாகுவின் மனைவியருள் ஒருத்தி கட்டி எழுப்பிய பபுலு விகாரையைக் காண்போம். மேலும் வடக்கே சென்றுல் வெளிமதிலின் வாயில அடையலாம். இவ்விடத்திலிருந்து வடக்குத்திசையாகச் செல்வோமானுல் ஒன்றன் பின் ஒன்றுக சமய சம்பந்தமான கட்டடங்களைக் காணலாம். இவற்றுள் பிரசித்திபெற்றன நிசாங்கமல்லனினுல் கட்டப்பட்ட ரங்கட் விகாரையும் பராக்கிரமவாகுவினுல் கட்டப்பட்ட கிரி விகாரையுமேயாம். இலங்காதிலக விகாரையானது (301-ம் பக்கம் பார்க்க), செங்கல்லினுற் கட்டப்பட்ட ஒரு பிரமாண்டமான கட்டடம். அதன் வாசலில் செங்கற்களினுல் செய்யப்பட்ட ஒரு பாரிய புத்தரின் சிலையைக் காண்போம். இதற்கப்பால் மேலும் வடக்கில் கல் விகாரையுண்டு. இங்கே ஒரு பாரிய கல்லில் புத்தருடைய உருவங்கள் நான்கு செதுக்கப்பட்டிருக்கின்றன (பக்கம் 318 காண்க). மேலும் வடக்கே தமிழ மகாசாய என அழைக்கப்படும் தாது கோபமுண்டு. அக்காலத்தில் உள்ள சகல தாது கோபங்கள் யாவற்றிலும் இது பெரியது. அண்மையில் ஒரு தாமரைக் குளமும் சேதவனரும எனும் தேவாலயமும் உண்டு. இத்தேவாலயத்திலும் புத்தர் நிற்கும் பான்மையாகச் செய்யப்பட்ட ஓர் அழகிய உருவச்சிலை உண்டு.


சேதவனரும விகாரையின் சுவர்களில், புத்தரின் ஜாதகக் கதைகள் குறிக்கும் வரிச்சித்திரங்கள் உண்டு. இக்கட்டடங்கள் யாவும் மகா பராக்கிரமவாகுவினுலே கட்டப்பட்டன என்பர். நகரத்தின் அதி தெற்குப் பாகத்தில் பொத்குள் விகாரையைக் காணலாம். இவ்விகாரைக்குச் சற்றுத் தூரத்தில் ஓர் அழகிய உருவம் கல்லில் செதுக்கப்பட்டுக் கம்பீரமான தோற்றத்துடன் விளங்குகிறது. சிலர் இச்சிலை மகா பராக்கிரமவாகுவைக் குறிக்கிறதென்பர். வேறு சிலர், இது இந்து சமய மாமுனிவராகிய அகஸ்தியரையே குறிக்கும் என்றும் வாது செய்வர்.

உள்மதிலுக்கும் தொபவெவாவின் அணைக்கட்டுக்குமிடையில் பாரிய மஞ்சண சாலையும்வேறு அநேக கட்டடங்களும் உண்டு. இவைகளுட் பல நிசாங்கமல்லனுலே கட்டப்பட்டன. மிகப் பிரசித்தி பெற்றது சபா

மண்டபமே. இது தீர்க்க சதுர வடிவமானது. இங்கே சபைக் கூட்டங் களில் அரசன் வீற்றிருந்த அரி ஆசனம் இருக்கும். கட்டடத்தின் உள் ளோரமாகக்கல்லாசனங்கள் சபை அங்கத்தினர்களுக்கென அமைக்கப்பட் டிருந்தன. மேற்கூறப்பட்டனவற்றிலிருந்து பொலநறுவை நகரமா னது பராக்கிரமவாகுவினதும் நிசாங்கமல்லவினதும் நகரமெனவே கூறிவிடலாம். அதைத் தலைநகரமாக்கிய சோழர் ஒரு சிறந்த தலை நகரை அங்கே கட்டிக்கொள்ள நேரமற்றவர்களாய் இருந்தார்கள். எக்காலமும் சிங்களவரின் எதிர்ப்பை அவர்கள் அடக்கவேண்டி இருந்ததாலும் கி. பி. 1017-ம் ஆண்டில் இந்நாட்டிலிருந்து அவர் கள் துரத்தப்பட்டுவிட்டதாலும் பொலநறுவையில் அநேக கட்டடங்களை அவர்கள் எழுப்பவில்லை. விஜயவாகு கட்டினவற்றில் புத்தரின் பரி சுத்த பல்லினது ஆலயத்தின் சிதைவுமாத்திரம் நாம் காண்கிறோம். ஏனைய கட்டடங்கள் யாவும் 1-ம் பராக்கிரமவாகுவினாலும் நிசாங்கமல் லனினாலும் எழுப்பப்பட்டன.

அநுராதபுரத்தினதும் பொலநறுவையினதும் கட்டடங்களி லுள்ள சில வேற்றுமைகள் குறிப்பிடத்தக்கன. அநுராதபுரியி லுள்ள கட்டடங்களில் பெரும்பாலானவை கல்லால் அடியிடப்பட்டு கற்றூண்கள் உடையன. பொலநறுவையிலும் சில இப்பான்மையன வாயினும் பெரும்பான்மையானவை முற்றும் செங்கற்களினால் கட் டப்பட்டன. பராக்கிரமவாகுவின் மாளிகை, இலங்காதிலக விகாரை, சேதவனாராம விகாரை, பொத்துள் விகாரை முதலியன யாவும் செங்கற்களாயின. ஆகையினால் பொலநறுவைக் கட்டடங்களைக் கட்டி எழுப்பக் கற்கள் பெரும்பான்மையாக உபயோகிக்கப்படவில்லை என்பது வெளிப்படை. பொலநறுவையின் அண்மையில் அநுராதபுரத்தி லிருப்பதுபோல கட்டடத்துக்கு உபயோகிக்கக்கூடிய கற்கள் இன்மை யும், களிமண் அதிகமாய் இருப்பதும் இதன் காரணங்களில் ஒன்றாகும்.

மேலும் பொலநறுவையிலுள்ள கட்டடங்கள் அநுராதபுரக் கட் டடங்களிலும் பெரியனவை. இது மட்டுமன்று, பொலநறுவையின் கட்டடங்களிற் பல செங்கற்களால் கட்டப்பட்ட விஸ்வடிவமாக வளைந்த கூரைகளை உடையன. தூபாராம விகாரையின் கூரை மாத்திரம் அழியாது ஒரு வகையில் இருக்கின்றது. இலங்காதிலக விகாரை, சேதவனாராம விகாரை, பொத்துள் விகாரை முதலியனவற்றின் வளை கூரைகள் அழிந்துவிட்டன. இதே காலத்தில் தென்னிந்தியாவி லுள்ள கோயில்கள் செங்கற்களாற் கட்டப்பட்ட வளைந்த கூரைகளை உடையனவாய் விளங்கின. ஆதலால் சிங்கள கட்டட வேலைக்காரரும் தென்னிந்தியர் முறைப்படியே பின்பற்றினர் போலும். தென் னிந்திய முறைகளையே பின்பற்றினர் என்பதற்கு வேறு ஒரு தான்றும் உண்டு. சுவர்களை மூடும் சாந்தில் அழகான சிற்பவேலை களை தென்னிந்திய இந்து மதக் கோவில்களிலே காணலாம். இலங்



பொத்துள் விகாரைக்கு எதிர்ப்புறமாபுள்ள சில


கையிலும் இவைபோன்ற இந்து சமய வழிபாட்டைக் குறிக்கும் சிற்பங்கள் புத்தமத கோவிற் சுவர்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. மேலும், பொலநறுவையில் தமிழமகாசய தாதுகோபத்தைத் தவிர்ந்த ஏனைய தாதுகோபங்கள் அநுராதபுரத்திலுள்ள வற்றிலும் சிறியனவாகவே இருந்தன.

பயிற்சி II

1. பொலநறுவை நகரில் எத்தனை புரிசைகள் இருந்தன?
2. உள்மதில் அடக்கியுள்ள கட்டடங்கள் எவை?
3. உள்மதிலுக்குச் சற்றுப் புறத்தேயுள்ள உயர்ந்த பீடம் ஏன் தாலத மாளுவ எனும் பெயர்பெற்றது?
4. தாலத மாளுவவில் உள்ள பிரதான கட்டடங்கள் எவை?
5. நாலாம் வினுவின் விடையிலே குறிக்கப்பட்ட கட்டடங்கள் எவ் வரசர்களாலே கட்டப்பட்டன?
6. பின்வருவனவற்றை யார் கட்டினர்?
(அ) இறன்கட் விகாரை (ஆ) இலங்காதிலக விகாரை (இ) கிரி விகாரை (ஈ) கல் விகாரை (உ) தமிழமகாசய (ஊ) சேதவன ருமை விகாரை (எ) பொத்கல் விகாரை.
7. இடைவெளிகளை நிரப்பி எழுதுக:
(அ) அநுராதபுரத்திலுள்ள கட்டடங்கள் கல்லாலாக்கப் பெற்றன; ஆனால் பொலநறுவையிலுள்ள கட்டடங்கள்.....ஆக்கப்பெற்றன.
(ஆ) அநுராதபுரத்திலுள்ள கட்டடங்கள் போலல்லாது பொலநறுவையின் கட்டடங்களுக்கு செங்கற்களால் ஆக்கப் பெற்ற.....கூரைகள் இருந்தன.
(இ) பொலநறுவையிலுள்ள கட்டடங்களின் வெளிப்புறச் சுவர்களில் உள்ள சிற்பங்கள்போல தென்னிந்தியாவின்.....ஆலயங்களின் சுவர்களின் வெளிப்புறத்திலும் இக்காலங்களில் சிற்பங்கள் இருந்தன.
(ஈ) தமிழ் மகாசாயவைத் தவிர பொலநறுவையிலுள்ள ஏனைய தாதுகோபங்கள் அநுராதபுரத்திலுள்ளவற்றிலும் பார்க்க.....
(உ) அநுராதபுரத்திலுள்ள கட்டடங்களிலும் பார்க்கப் பொலநறுவையிலுள்ள கட்டடங்கள்.....


சிற்பம்

பொலநறுவையில் அநேக சிற்பங்களும் வேறு செதுக்கு ஓவியங்களும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை செங்கல்லால் அல்லது கல்லால் ஆக்கப்பட்ட கட்டடங்களிலுள்ள புத்தரின் உருவச் சாயல்களாம். இவைகளைத் தவிர பொத்கல் விகாரையின் எதிர்ப்புற



பொலநறுவையில் வட்டதாகேயின் வாசல்

மாக ஓர் பாரிய கல்லில் குறிக்கப்படாத யாரோ ஒருவருடைய உருவச் சிலை ஒன்றுண்டு. சிற்பங்களைச் சந்திர கற்களிலும் துவாரபாலக தூண களிலும் கட்டடச் சுவர்களிலும் அங்கே காணலாம்.



'வட்டதாகே' யின் கிழக்குவாசலிலுள்ள சந்திரகல்

பொலநறுவையில் கண்டெடுக்கப்பட்ட உருவச் சிலைகள் அநுராத புரத்தில் உள்ளன போலல்லாது பாரியனவாயும், முழுமையாகவே கற்பாரைகளிலிருந்து செதுக்கப்பட்டனவாயும், உள்ளன. இலங்கத் திலக விகாரையிலும், சேதவனராம விகாரையிலும், தூபரும, ஹற்ற தாகே என்னும் கட்டடங்களிலும், செங்கற்களால் செய்யப்பட்ட புத்த ரின் உருவச் சிலைகள் உண்டு. கல்விகாரையில் கல்லில் செதுக்கப் பட்ட புத்த பெருமானின் நாலு உருவச் சிலைகளைக் காணலாம். வட் தாகே என்னும் கட்டடத்தின் நாலுதிசை வாசல்கள் ஒவ்வொன்றி லும் புத்தரின் உருவச் சிலை ஒவ்வொன்றுண்டு. இவ்வுருவங்கள் அநுராதபுரத்தில் உள்ள உருவங்களைப்போல உயிர்ப்பான்மை உடை யனவல்ல. ஆனதினால் பொலநறுவைக்கால சிற்பமானது அநு ராதபுரக்காலச் சிற்பத்தினில் திறமையிற் குன்றியதாகக் கருதப்படுகி றது. எனினும் பொலநறுவையிலுள்ள ஓர் உருவமானது மிகத் திறமையான அமைப்புடையது. அதுதான் பொத்குல் விகாரையின் எதிர்ப்புறமாக இருக்கும் சிலை. அது பார்வைக்குக் கெம்பீரமாகவும் அரச தோற்றமுடையதாகவும் இருப்பதால், பலர் மகா பெரிய பராக் கிரமுவைக் குறிக்கும் சிலை எனக் கருதுவர். ஆனால் சிலர் அது இந்து சமய மாமுனிவராகிய அகஸ்தியருடைய சிலையெனவுங் கொள்வர்.

பொலநறுவையிலுள்ள கட்டடங்களிலும் அநுராதபுரக் கட்டடங் களில் உள்ளனபோன்ற வாசல்களே உண்டு. எனினும் முக்கியமான சில வேற்றுமைகள் குறிப்பிடத்தகும். அநுராதபுரத்திலுள்ள சந் திர கற்களிலும் படிகளிலும் காணப்படும் சிற்பங்கள் அளவுக்கு மிகு நியாயிராது அழகுள்ளனவாயிருந்தன. ஆனால் பொலநறுவையி லுள்ள படிகளோ, சந்திரகற்களோ அளவுக்குமிக்க சிற்ப வேலைப்பா டுகள் உள்ளனவானதால் அழகில் குன்றந்த நிலையினவாம். அநுரா தபுரத்திலுள்ள படிக்கட்டுகளில் ஒரு படியில் மூன்று குள்ளரின் சிற்ப உருவங்கள் உள. ஆனால் பொலநறுவையில் பத்து, பன்னி ரண்டு காணலாம். ஆனதினாலேயே பொலநறுவையில் உள்ள சந்திர கற்கள் அவ்வளவு அழகுடையனவல்ல. தென்னிந்திய சித்திர வல் லுனர் தங்கள் சித்திரங்களில் அதிகமான வேலைப்பாடுகளைத் திணித்து விடுவதற்குப் பெயர் போனவர்கள். இவர்களை அக்காலத்திலிருந்த இலங்கைச் சிற்பிகளும் பின்பற்றினர். ஆனதினால் பொலநறுவை யின் சிற்பங்கள் அநுராதபுரக் காலத்திலுள்ள சிற்பங்களின் திறமை யுடையனவல்ல.

பயிற்சி III

I. இடைவெளிகளை நிரப்புக:-

(அ) பொலநறுவையில் உள்ள உருவச் சிலைகள்..... அல்லது.....ஆக்கப்பட்டன.....

(ஆ) அவற்றுள் பெரும்பாலனவை.....உருவங்களே.

(இ) குறிப்பிடப்படாத ஒருவரின் உருவச்சிலை.....விகா ரைக்கு எதிர்ப்பக்கமாக இருக்கின்றது.

(ஈ) அநுராதபுரக்கால உருவச் சிலைகளைப் போலல்லாது பொலந றுவைக்காலச் சிலைகள் மிக.....

(உ) அவை அநுராதபுரக்கால சிற்பங்களைப்போல்..... .....உடையனவல்ல.

(ஊ) கல்லிற் செதுக்கப்பட்ட புத்தரின் உருவங்களை.....யும் .....யும் காணலாம்.

(எ) செங்கல்லால் செய்யப்பட்ட புத்தரின் உருவங்கள் பின்வரும் கட்டடங்களிற் காணலாம்:- (1)..... (2).....(3).....(4).....

(ஏ) பொத்குல் விகாரைக்கு எதிர்ப்புறமாக உள்ள கற்சிலையை சிலர்.....உருவச் சிலை என்றும் வேறுசிலர்..... .....முனிவரின் உருவச்சிலை என்றும் கொள்வர்.

II. சுருக்கமாக விடை தருக:-

(அ) பொலநறுவைக் கட்டட வாயல்கள், அநுராதபுரக் கட்டட வாயல்களைப் போன்றனவா?

(ஆ) பொலநறுவையின் கட்டட வாயற்படிகளில் உள்ள சிற்பங்களை அநுராதபுரத்தின் கட்டடப்படிகளில் உள்ள சிற்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க.

(இ) அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் உள்ள சந்திரகற்களில் உள்ள சிற்பங்களில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் எவை?

(ஈ) பொலநறுவைச் சிற்பங்களில் தென்னிந்திய சிற்பமுறை எவ்வாறு பிரதிபிம்பிக்கிறது?

இலக்கியம்

முந்திய அத்தியாயத்தில் எவ்வாறு இக்காலத்துக்குரிய பிரதான மூன்று அரசர்களும் புத்த சமய வளர்ச்சியில் கவனமெடுத்து வந்தனரெனப் படித்துள்ளோம். குருமாரின் இருப்பிடங்கள் கல்வி பரவும் நடு இடங்களாயிருந்ததினால், இலக்கியம் இக்காலத்தில் தழைத்தோங்கியது. இலக்கிய நூல்களை ஆக்கியோர், சிங்களம், சங்கதம், பாளி மொழிகள் அறிந்த குருமார்களே. அவர்கள் சிங்களத்திலும் பாளியிலும் மாத்திரம் நூல்கள் இயற்றினராயினும், அவர்களறிந்திருந்த சங்கத நூல்களைப் பின்பற்றியே, அந்நூல்களை எழுதினர். பாளியில் எழுதப்பட்டன, பெரும்பான்மையாக சமய நூல்களே. இந்நூல்களில் பிரதானமானவை தத்துவம்சம் எனும் நூலும் சூழவம்சம் எனும் நூலுமாம். தத்துவம்சம் புத்தரின் பல்லின் வரலாற்றைக் கூறும். சூழவம்சம் ஆகிய நூல் மகாவம்சத்தின் தொடர்ச்சியெனவே கூறலாம். இவ்விரண்டும் தர்மகீர்த்தி என்னும் ஒரு புத்த குருவினால் எழுதப்பட்டன.

சிங்கள நூல்களிற் பெரும்பாலானவை பாளி மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டன. குருலுகோமி என்பவன் ஒரு குருவல்ல. இவன் சிங்களத்தில் உரை நடை இலக்கியநூல் இரண்டு இயற்றினன். ஒன்று 'அமவத்துற' என்பது. அது, புத்தர் எவ்வாறு தனது புத்தி கருணை, ஓர்மம் முதலிய குணங்களால் மனிதரின் மனதை மாற்றி நல்வழிப்படுத்தினர் என்பதைக் காட்டும் கதைகளின் தொகுதியாம். மற்றது புத்தமதக் கொள்கையை விளக்கும் 'தர்மபிரதிபிக்கவ' என்னும் நூலாம்.

இரு சிங்கள காவியங்களும் இக்காலத்தில் வெளிவந்தன. அவை 'சாசதவத்த', 'முவதேவதவத்த' என்பனவாம்.

வர்ண சித்திரம்

இக்காலத்து வர்ணப்பாட்டு வேலைகளில் அழிவு பெறுதிருப்பது சேதவனரும விகாரையின் சுவரிலுள்ள வர்ணப்பாட்டு வேலைகளும் கல்விகாரையிலுள்ள சித்திரங்களுமாம். இவை ஜாதகக் கதைகளிலிருக்கும் சிலவற்றைக் குறிப்பனவாம்.

பயிற்சி IV

1. இக்காலத்து எழுத்தாளர் யாவர்?
2. இக்காலத்துக்குச் சேர்ந்த எழுத்தாளரில் குருவல்லாத ஒரு சாதாரண மனிதனின் பெயர் யாது?
3. எம்மொழிகளில் பெரும்பாலன நூல்கள் எழுதப்பட்டன?
4. இக்காலத்தைய முக்கிய பாளி நூல்கள் இரண்டு எவை? அவைகளை எழுதியவர் யார்?
5. குருலுகமியினால் எழுதப்பட்ட நூல்கள் எவை? அவற்றைப் பற்றி யாது அறிவீர்?
6. இக்காலத்துக்குச் சேர்ந்த இரு சிங்கள காவியங்கள் எவை?

12-ம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. இக்காலத்திலிருந்த மூன்று பெரிய அரசர்கள் புத்த சமய வளர்ச்சிக்கு யாது செய்தார்கள்?
2. கொடுக்கப்பட்ட படங்களை உபயோகித்து பொலநறுவை நகரத்தைப்பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.
3. அநுராதபுரத்திலுள்ள கட்டடங்களுக்கும் பொலநறுவையிலுள்ள கட்டடங்களுக்கும் உள்ள பிரதான வித்தியாசங்கள் எவை?
4. எம்முறைகளில் அநுராதபுரத்திலுள்ள சிற்பங்களுக்கும் பொலநறுவையிலுள்ள சிற்பங்களுக்கும் வித்தியாசம் உண்டு?
5. இக்காலத்து எழுத்தாளரின் பிரதான மாணவர்கள் சிலரின் பெயரைத் தருக. அவர்கள் எழுதிய நூல்கள் எவை? அந்நூல் ஒவ்வொன்றைப்பற்றியும் சுருங்கக் கூறுக.

15-ம் அத்தியாயம்

மத்திய காலத்தில் கிழக்கு நாடுகள்

I மத்திய கால சீன தேசம்
II பெரிய கான் அரசர்களின் பேரிராச்சியம்
III இரு பெரும் பிரயாணிகள். மார்க்கோ போலோ இபின் பட்டூற்ரு

6-ம், 10-ம், 12-ம் அத்தியாயங்களில் மௌரிய, குப்த தென்னிந்தியப் பேரரசுகள் இந்தியாவில் எவ்வாறு எழுந்து அழிந்தன என்று படித்துள்ளோம்.

இந்த அத்தியாயத்தில் மத்திய காலத்தில் சீனப் பேரிராச்சியத்தைப்பற்றியும், உலகம் முழுவதையுமே நம்மடிப்படுத்தும் பான்மையிலிருந்த பெரிய கான் அரசர்களைப்பற்றியும், கிழக்கு நாடுகளைப்பற்றியும், கிழக்கு நாடுகளை மேல் நாட்டவருக்கு விளக்கிவைத்த பெரும் பிரயாணிகளாகிய மார்க்கோ போலோ, இபின் பட்டூற்ரு என்னும் இரு பெரியாரைப்பற்றியும் அறிந்து கொள்ளுவோம்.

I மத்தியகாலச் சீன தேசம்


3-ம் பாடத்தில் ஆதியில் சீன தேசம் பிரமிப்புக்குரிய ஒரு நாகரிகத்துக்கு இருப்பிடமாயிருந்தது என்று கண்டுள்ளோம். பல நூற்ருண்டுகளாகச் சீனர் பிற நாட்டவருடன் யாதொரு தொடர்பும் அற்றவர்களாய் இருந்தார்கள். உள்நாட்டுக்குள் கலகங்களும் படையெழுச்சிகளும் இருந்தபோதிலும் சீனர் கொன்ஃபியூசியஸ் போதித்து வந்ததற்கு ஒப்பவே சீவித்து வந்தனர். சீன தேசத்தின்மேல் படையெடுத்து அவரை எவர் அடிப்படுத்தினரோ அவரெல்லாம் சீனரைப் போலவே வாழ்ந்தனர். சீனர் பிறநாட்டவரை ஒருபோதும் பின்பற்றினவரல்லர்.

உள்நாட்டுக் கலகங்களும் படை எழுச்சிகளும் இருந்தபோதிலும் சீனர் மேல்நாட்டவரைப் பார்க்கிலும் திருத்தமுடையவராய் விளங்கினர். இவர்களிடமிருந்தே வெடிமருந்து, மாலுமியின் திசையறி கருவி, அச்சு வித்தை ஆகிய இம்மூன்று புது விஷயங்களைப்பற்றியும் மேல்நாட்டவர் கற்றுக் கொண்டனர். இப்புது விஷயங்களைப்பற்றிய அறிவானது ஐரோப்பா தேசத்திலும் உலகம் முழுவதிலும் பெரும் மாற்றங்களைக் கொண்டுவரலாயிற்று. சித்திர வேலைகளிலும், அழகிய வேலைப்பாடமைந்த பீங்கான் போன்ற பாத்திரங்கள் செய்வதிலும் சீனர் வல்லுனராய் விளங்கினர்.

கொடூர குணமுடைய இராட்டர் சாதியினர் வசித்த கோபி வனந்திரத்தினலும், திபெத் பீடபூமியினலும் சீன தேசமானது

மேல்நாடுகளிலிருந்து பிரிக்கப்பட்டு அந்நாடுகளுடன் அதிக தொடர்பற்றதாய் விளங்கிற்று. எனினும் அக்காலத்தில் உரோமரின் பெண்மணிகள் சீன தேசத்து பட்டின்மேல் பிரீதி உடையவர்களாய் இருந்ததினல் இப்பட்டுக்களை கொண்டுசெல்ல "பட்டுப்பாதை" என்றழைக்கப்பட்ட கால்நடைத் தரைவழியொன்று பிரசித்திபெற்று விளங்கிற்று. அதன்பின்பு புத்த வேதமும் இஸ்லாமியரின் சமயமும் சீனவுட் புகுந்தன. புத்த சமயம் அந்நாட்டில் வேருன்றி விளங்கிற்று என்பது அக்காலத்தில் நிறுவப்பட்ட அநேக புத்தமத சந்நியாச ஆச்சிரமங்களினலும் "பகோடா"க்கள் எனப்படும் அழகிய புத்த கோயில்களினலும் இன்று அறியக்கிடக்கின்றது. புத்த சமய தொடர்புள்ள உருவச்சிலைகள் பல மிக அழகு வாய்ந்தன.

கி. பி. 220-ம் ஆண்டில் "ஹான்" அரச வம்சம் அழிவுற்றதன்பின் நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் உண்டாகி நாடு சீர்கெட்டுவிட்டது. பின்பு 7-ம் நூற்ருண்டில் (618—907) "ராய்ங்" அரச வம்சத்தின் பரிபாலனத்தில் இந்நாடு புத்துயிர்பெற்று விளங்கியதால் சீர்திருத்தமும் வர்த்தகமும் தழைத்தோங்கலாயின. அச்சடிக்கும் முறை திருத்தம் பெற்றதால் அநேக நூல்கள் வெளிவந்தன. காவியங்களும், சிற்பங்களும், சித்திரங்களும் மீளவும் பழைய உயர்ந்த நிலையை அடைந்தன. "ராய்ங்" அரச சந்ததியின் வீழ்ச்சியின்பின் "சாங்" சந்ததியார் அரசகட்டிலேறினர். இவர்கள் காலத்திலேதான் "இராட்டர்" என்னும் மங்கோலிய கூட்டத்தினர் சைபீரிய புற்றரைப் பிரதேசத்திலிருந்து சீன நாட்டின்மேல் பாய்ந்தனர்.



2. கான் அரசரின் பேரரசு

கெஞ்சிஸ் கான்

கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் அளவில்லாத துன்பங்கள் விளைத்த அகுண (ஹன்ஸ்) சாதியாரின் ஒரு பகுதியினரே மங்கோலிய கூட்டத்தினராம். சீனர் ஆதிகாலத்திலேயே தமது நாட்டைச்சுற்றி பாரிய ஒரு மதிலைக்கட்டி எழுப்பினர் என முன்னெரு இடத்திற் படித்துள்ளோம். அது அகுண (ஹன்ஸ்) சாதியினரை நாட்டினுள்ளே பாயாது தடுக்கவே கட்டப்பட்டது. ஆனல் கி. பி. 13-ம் நூற்றாண்டில், இச்சாதியினராகிய மங்கோலியரின் ஆக்கிரமிப்பைத் தடுக்க அப்பாது காப்பு போதியதாயிருக்கவில்லை. இவர்கள் ஒரு சூறாவளிபோல் ஐரோப்பிய தேசங்களையும் ஆசிய தேசங்களையும் புரட்டி தம்மடிப்படுத்துவதை ஒருவகையாலும் தடுக்க முடியவில்லை. இவர்களின் தலைவனை கெஞ்சிஸ் கான் என்பவன் கொடூர குணமுடைய போர் விருப்புற்ற ஓர் தளபதி. பெய்க்கல் ஏரிக்கு மேற்குப்புறமாயுள்ள சைபீரிய தேசத்தில் ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு மங்கோலிய நாடுகளை அடிப்படுத்தியபின், இவன் சீனு தேசத்துள்ளே பாய்ந்தான். பாரிய சீன மதிலும் இவனைத் தடுக்கமுடியவில்லை. சீனு முழுவதையும் விரைவில் தன் கைவசப்படுத்தினன். அதன்பின்பு மேற்கு நோக்கி ஓடி ஆசிய பிரதேசங்களை கடந்து சென்றான். 8-ம் அத்தியாயத்தில் மகம்மதியர், பார்சியா, துருக்கி, ஆபுகானிஸ்தான் அடக்கிய ஒரு பேரிராச்சியத்தை நிறுவினரெனப் படித்துள்ளோம். கெஞ்சிஸ் கானின் முன்பு இப்பேரிராச்சியம் துரும்புபோலாயிற்று. அவன் சீனரிடத்தில் வெடிமருந்தின் உபயோகத்தைக் கற்று அதைப் போரில் பயன்படுத்திக் கொண்டதனல் அவனைத் தடுக்க எவராலும் முடியவில்லை. ஐரோப்பிய ருஷியா தேசத் தென்பாகங்களையும் அடிப்படுத்திய பின்பு மீளவும் ஆசியாவில் புகுந்து இந்தியாவுட் பஞ்சாப் பிரதேசத்தைக் கொள்ளையடித்தான். யாது காரணத்துக்காகவோ இந்தியாவில் தன் தலைநகரை நிறுவ அவன் விரும்பவில்லை. இந்நாட்டைக் கொள்ளையடித்ததன் பின்பு திரும்பவும் ருஷியா தேசத்தின்மீது தன் சைனியங்களைத்தூண்டி அதன் பெரும்பிரிவுகளை தன்னடிப்படுத்தினன். கி. பி. 1227-ம் ஆண்டு அவன் இறந்தபோது அவனுடைய இராச்சியம் மேற்கு எல்லையாக விஸ்துலா, டான்யூப் நதிகளையும் கிழக்கெல்லையாக பசிபிக் சமுத்திரத்தையுங் கொண்டு விளங்கிற்று. இவன் கொடூரமான போர் வீரனும் பயங்கரமான கொள்ளைக்காரனுமென்றே கூற வேண்டும். நாட்டைச் சிறப்பாக ஆளுந்திறமை இவனுக்கிருக்கவில்லை. எனினும் தனது பேரிராச்சியத்தை பரிபாலிக்கக் கூடியவனுகிய ஜெவியு சட்சாய் என்றும் ஒருவனை தேர்ந்தெடுக்கும் திறமை இவனுக்கிருந்தது ஒரு பேரதிர்ஷ்டமே. இவன் சட்டங்களமைத்து இப்பேரிராச்சியத்தின் ஆட்சியைச் சிறப்பாக நடத்திவந்தான்.

குப்ளாய் கான் (கி. பி. 1260—1290)

கெஞ்சிஸ் கானுக்குப்பின் நாட்டை ஆண்டு வந்தவர் அவனுடைய வேலையைத் தொடர்ந்து செய்து இராச்சியத்தை மேலும் பெருப்பித்தனர். இவர்களுள் கடைசியானவனும் மிகவும் கீர்த்திபெற்றவனுமானவன் குப்ளாய் கான் என்பவன். இவன் 1260-ம் ஆண்டு தொடக்கம் 1290-ம் ஆண்டுவரையும் ஆட்சிபுரிந்தான். அவன் அரசு கட்டிலேறுமுன் 'கான்' பேரிராச்சியத்தின் ஒரு மாகாணமாகிய சீன தேசப்பிரிவின் தேசாதிபதியாக தொண்டாற்றிவந்தான். அக்காலத்தில் சீன நாகரிகத்திலும் பண்பாட்டிலும் வாஞ்சையுடையவனுக இருந்ததால் அரசனுனதன் பின்பு சீனு தேசத்தில் விசேஷ கவனஞ் செலுத்தி வரலாயினன். அவன் பெயிக்கல் ஏரிக்கு அண்மையில் உள்ள நகராகிய காரக்கோரத்திலிருந்த தலைநகரை பிக்கின் நகரத்திற்கு மாற்றி அமைத்தான். இதன் பயனுக ருஷியா, மெசப்பத்தேமியா, துருக்கி முதலிய நாடுகள் கான் பேரிராச்சியத்திலிருந்து நழுவிக்கொண்டன. சீனு தேசம் மாத்திரம் குப்ளாய் கானின் ஆட்சியின் கீழ் உச்ச நிலையை அடைந்தது. பீக்கிங் நகரம் புதிதாக அமைக்கப்பட்டது. பிறநாடுகளுக்குச் செல்லும் வழிகள் முன்போல பிரசித்தி பெற்றன. உள்நாட்டிலிருந்தும் பிறநாட்டிலிருந்தும் அறிஞர் பலர் அவன் மாளிகைக்கு அழைக்கப்பட்டனர். இவர்களிடமிருந்து பிற நாடுகளைப்பற்றிய விபரங்களை அறிந்தான். அவனுடைய பிறநாட்டு தூதுவரின் வேண்டுகோளுக்கு இணங்கி பெயர்பெற்ற போலோ சகோதரர்கள் சீனு தேசத்திற்கு வந்தார்கள். சில காலத்திற்கு பின்பு இவர்களை இவன் இத்தாலி தேசத்திற்கு அனுப்பி பாப்பரசரை சீனு தேசத்தவருக்கு மேல்நாட்டு அறிவு புகட்டவும், கிறிஸ்துமதத்தை போதிக்கவும் நூறு மேனாட்டு அறிஞர்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். மார்க்கோபோலோ எழுதியவற்றிலிருந்து 'கதே' என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட சீன தேசத்தின் பிரமாண்டமான செல்வத்தைப்பற்றி அறிந்து கொள்ளலாம். சீனு தேசத்திலுள்ள பெரிய நகரங்கள், கடைகள், களஞ்சியங்கள் முதலியனவற்றைப்பற்றி மார்க்கோ போலோ கூறுகிறார். மேலும் ஆசிய தேசத்திலுள்ள சகல பிரதான பாகங்களிலுமிருந்து சீனு தேசத்திற்கு வர்த்தகர் வந்து குவிந்தனரென்றும், அந்நாட்டு துறைமுகங்களில் பல கப்பல்கள் பல தேசங்களிலிருந்து வந்து தங்கினவென்றும் குறித்திருக்கிறார். குப்ளாய் கானைப்பற்றி எழுதும்போது "அரசு கட்டிலில் ஏறிய கோமக்களுள் சிறந்த ஒருவர்" என்கிறார்.

பயிற்சி I

இடைவெளிகளை நிரப்புக:

1. சீன தேசத்தார் பிறநாட்டவரை ஒருபோதும் பின்பற்றவில்லை ஆனல் பிறநாட்டவர்.....பின்பற்றினர்.

2. சீனரிடமிருந்து ஐரோப்பியர் மூன்று புது விஷயங்களை அறிந்தனர் அவை (i).....(ii).....(iii).....,
3. உரோமரின் பேரரசு விளங்கிய காலத்தில் அவர்கள் சீனரிடமிருந்து.....வாங்கிவந்தனர்.
4. புத்த கோயில்கள், உருவச்சிலைகள், சந்நியாச மடங்கள் அக்காலத்தில் சீனு தேசத்திலிருந்ததால் அங்கு..... தழைத்தோங்கியது என்று கருதலாம்.
5. மங்கோலிய சாதியினர்.....என்பவரின் பிரிவைச் சேர்ந்தவர்.
6. மங்கோலியரின் பெருந்தலைவனின் பெயர்.....
7. சீன பெருமதிலானது.....படையின் முன்னேற்றத்தைத் தடுக்கமுடியவில்லை.
8. கெஞ்சிஸ் கானுக்குப்பின் அரசாட்சி செய்தவருள் பெயர் பெற்றவன்.....
9. அவர் தலைநகரைக் காரக்கோரத்திலிருந்து..... நகரத்திற்கு மாற்றினர்.
10. அறிஞரைத் தனது மாளிகைக்கு வரவழைத்து அவர்களிடமிருந்து.....பற்றி அறிந்து கொள்ளுவார்.
11. பாப்பரசரிடம் தூதுவரை அனுப்பித் தனக்கும் தனது பிரஜைகளுக்கும்.....கற்பிக்க அறிஞரை அனுப்பும்படி வேண்டிக்கொண்டார்.
12. .....என்பவர் குப்ளாய் கான் அரசனுடைய பேரிராச்சியத்தின் பெருஞ் செல்வத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்.

இரு பெரும் பிரயாணிகள்


மார்க்கோ போலோ (கி. பி. 1254—1324)

மத்தியகால சரித்திரத்தில் மார்க்கோ போலோ மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவருடைய பிரயாணங்களின் வரலாறுகள் ஒரு கட்டுக் கதையின் பான்மையுடையன. அவர் எழுதியவற்றுக்கு அவருடைய காலத்திலே மதிப்பின்றி யிருந்தபோதிலும் பிற்காலத்து மனிதரின் மனதிலே அவற்றின் சிறப்பு ஊன்றிப் பதிந்துவிட்டது. கீழ்நாடுகளுக்குச் செல்ல ஒரு புது வழியைக் கண்டுபிடித்த கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் என்பவர் மார்க்கோ போலோ எழுதியவற்றின் ஓர் பிரதியை வைத்திருந்தாரென்றும், அதை ஊன்றிப் படித்ததன் பயனுகவே அவ்வழியைக் கண்டுபிடித்தாரென்றும் கூறுவர்.

அவர் கி. பி. 1254-ம் ஆண்டு பெயர்பெற்ற வெனிஸ் நகரத்தில் பிறந்தார். அந்நகரம் அக்காலத்தில் மிகச் செல்வாக்கு உடையது.

கிழக்கு மத்தியதரைத் துறைமுகங்களிலிருந்து கீழ்தேச வாசனைச் சரக்குகளை மறு ஐரோப்பிய துறைமுகங்களுக்குக் கொண்டுசெல்லும் கப்பல்கள் இத்துறைமுகத்திற்கும் வருவதால் இச்செல்வாக்கு உண்டாயிற்று. சிறு பிள்ளையாயிருக்கும்போதே மார்க்கோ போலோவின் மனம் முத்துக்கள், பட்டு வஸ்திரங்கள், வாசனைத் திரவியங்கள் முதலியன உள்ள கீழ்நாடுகளைப்பற்றிய கதைகளால் வசிகரிக்கப்பட்டு விட்டது. அவனுடைய தகப்பனாராகிய நிக்கலோ போலோ தனது சகோதரனாகிய மிவ்வய போலோவுடன் குப்ளாய் கானுடைய அரண்மனைக்குச் சென்றிருந்தார். நூறு அறிஞரை தனக்கு அனுப்ப வேண்டும் என்று குப்ளாய் கான் செய்த வேண்டுகோளை தாங்கி இவ்விரு சகோதரரும் 1269-ம் ஆண்டு பாப்பரசரிடம் வந்தனர். நூறு அறிஞரை அனுப்பமுடியாதிருந்த போதிலும், பாப்பரசர் டொமினிக்கன் எனப்படும் ஓர் சந்நியாச சபையைச் சேர்ந்த இரு குருமாரை மாத்திரம் அனுப்பக்கூடியவராய் இருந்தார். 1271-ம் ஆண்டு முன் கூறப்பட்ட இரு போலோ சகோதரரும் இவ்விரு குருமாருடனும் பதினறு வயதுடைய சிறுவனாகிய மார்க்கோவுடனும் சீனாவுக்குக் கடல் மார்க்கமாக புறப்பட்டனர். பார்சிய குடாவுக்கு வந்து, அப்பால் கடல் மார்க்கமாய் செல்ல முடியாதிருந்ததால், பமீர் பீடபூமியையும், கோபிய வனந்தரத்தையும் தாண்டிச் சீனாவுக்குள் 1275-ம் ஆண்டு கால்வைத்தனர். குப்ளாய் கான் மார்கோவில் மிக அன்புடையவனானன். மார்க்கோ சீன மொழியைக் கற்று, சீன மாகாணங்களுள் ஒன்றின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். பிறநாடுகளுக்கு அரசனின் விசேஷ தூதுவனுகவும் பலமுறைகளிற் சென்றான். அவன் சென்ற நாடுகளுள் யுனான், திபேத், வடபர்மா, கொச்சி, இந்தியா, சீன நாடு முதலியன சிலவாம். இப்படியாக அரசனால் நன்கு மதிக்கப்பட்டதால் மார்க்கோ விரைவில் ஒரு செல்வந்தனானன். சிறிது பின் இம்மூவரும் தமது சொந்த நாட்டுக்கு திரும்ப விரும்பினர். அரசனுக்கு அது துக்கத்தைக் கொடுத்தபோதிலும் அவன் அவர்களை மறிக்க விரும்பவில்லை. அந்தக்காலத்தில் பார்சிய அரசனொருவன் ஒரு சீன அரச குமாரியை மணக்க விரும்பி இருந்தான். இந்தச் சீனப் பெண்மணியை பார்சிக நாட்டுக்குக் கூட்டிச்செல்லும்படியாக போலோ துரைமக்களினால் பணிக்கப்பட்டனன். தரைவழியானது ஓர் பெண்மணிக்கு கஷ்டமை இலகுவிலே தரக்கூடியதனால் இவர்கள் கப்பலால் பிரயாணஞ் செய்தனர். அமோய் என்னுந் துறைமுகத்திலிருந்து வெளிப்பட்டு சுமாத்திரா, இலங்கை, பார்சிய நாட்டுத் துறைமுகங்களைத்தாண்டி இருவருடங்களுக்குப் பின்பு பார்சியாவை அடைந்தனர். அரசன் இட்ட கட்டளையை நிறைவேற்றியதன் பின்பு, கொன்ஸ்தாந்திநோப்பிள் ஊடாகச்சென்று கி. பி. 1294-ம் ஆண்டில் வெனிஸ் நகரை அடைந்தனர். ஜெனேவா நகருக்கும் வெனிஸ்

மார்க்கோ போலோவின் பிரயாணம்



நகருக்குமிடையில் நடந்த யுத்தத்தில் மார்க்கோ போலோ கைதியாக்கப்பட்டான். சிறையிலிருக்கும்போது தனது வரலாற்றை உடன் கைதியாகிய றஸ்ரிக்கானே என்பவனுக்குச் சொல்ல அவன் அவ்வரலாற்றை எழுதிவைத்தான். மார்க்கோ போலோவின் கதைகள்தான் கிழக்கு நாடுகளைப்பற்றி ஐரோப்பியருக்கு முதன் முதலாக கிடைத்த நேரிற்கண்ட விஷயங்களின் வரலாறுகள். மார்க்கோ போலோ சீனர்களைப்பற்றிக் கூறும்போது பல கோடிக்கணக்கானவர்களென்று குறிப்பிடுகிறார். இதற்காக அவருடைய இனபந்துக்கள் அவரை கேலி செய்து "திருவாளர் கோடியனர்" என்று கேலி நாமமும் அவருக்கு இட்டனர். ஆனல் அவர் கூறியனவற்றை சீன தேசத்திற்கு வர்த்தகத்துக்காக பிரயாணஞ்செய்ய விரும்பினவர்களும் வெடிமருந்தின் உபயோகத்தில் கவனஞ் செலுத்தினவர்களும், இதுகாலவரையும் மேல்நாட்டார் அறிந்திராத திசையறி கருவி அச்சு இயந்திரம் முதலியனவற்றில் விருப்புள்ளவர்களும் கூர்மையாய் ஆராய்ந்து தெளிந்தனர். மேல்நாட்டாரின் பூகோள அறிவை விருத்திசெய்ய மார்க்கோ போலோ செய்த தொண்டே பெரிது.

பயிற்சி II

1. மார்க்கோ போலோ பிறந்த வருடம் எது?
2. அவர் தந்தையார் யார்?
3. அவர் சீன தேசத்திற்கு எப்பொழுது வெளிப்பட்டார்? யாருடன் வெளியேறினர்?
4. குப்ளாய் கான் என்னும் அரசன் மார்க்கோ போலோவுக்கு ஒரு சீன மாகாணத்தில் எப்பதவியை அளித்தார்?
5. குப்ளாய் கானின் தூதனுக மார்க்கோ போலோ அனுப்பப்பட்ட தேசங்கள் எவை?
6. போலோ பெருமக்களை தமது ஊருக்குப்போக அரசன் அனுமதித்தது ஏன்?
7. பார்சியா தேசத்திற்கு யாரை கூட்டி அவர் சென்றனர்?
8. கடற்பாதையாகவோ அன்றேல் தரைப்பாதையாகவோ அவர் சென்றார்?
9. போகும் வழியில் எத்தேசங்களை கண்டு சென்றனர்?
10. வெனிஸ் நகரத்தை எந்த வருடத்தில் அடைந்தனர்?
11. மார்க்கோ போலோ எப்போரில் கைதியானர்?
12. சிறைச்சாலையில் அவர் செய்த குறிப்பிடத்தக்க வேலை எது?
13. அவரை 'திருவாளர் கோடியனர்' என்று கேலி செய்ததேன்?
14. அவர் எழுதியவை மறு ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு அளித்த பலன் யாது?

இபின் பட்டுற்ரு (கி. பி. 1304—1378)

கி. பி. 13-ம்—14-ம் நூற்ருண்டுகளில் சீனுக்கடல், ஏடின் குடா செங்கடல் முதலிய நீர்ப் பரப்புகள் மார்க்கமாய் நடந்த வர்த்தகம் அராபிய வர்த்தகரின் கையில் இருந்தது. இவர்கள் கிழக்கு நாடுகளுக்கும் தூரகிழக்கு நாடுகளுக்கும் வியாபார நோக்கமாகப் பிரயாணஞ் செய்தனர். இந்த முஸ்லிம் பிரயாணிகளுட் மிக பிரசித்திபெற்றவர் இபின் பட்டுற்ரு என்பவர். இவர் கி. பி. 1304-ம் ஆண்டில் ராஞ்சியர் எனும் இடத்தில் பிறந்து 21-ம் வயதில் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு ஆசிய நாடுகளிற் பல இடங்களிலும் பிரயாணம் செய்தபின் மீளவும் 1353-ம் ஆண்டு தாய்நாடு திரும்பினர். இவர் ஓர் உத்தம இஸ்லாமியராவதால் மெக்கா நகருக்கு பலமுறையும் சென்றிருக்கிரர். பிரயாணஞ் செய்துகொண்டு, கொன்ஸ்தாந்திநோப்பிள், அலக்சாந்திரியா, பொக்காரு, கபூல், மொம்பாசா முதலிய நகரங்களைத் தாண்டி 1333-ம் ஆண்டு தெல்கி நகருக்கு வந்தார். வடஇந்தியா இந்தக் காலத்தில் இஸ்லாமியரின் ஆட்சியில் இருந்தது. சுலுத்தான் தெல்கியில் இராசதானியமைத்து ஆட்சிசெய்தான். இபின் பட்டுற்ருவின்மேல் சுலுத்தானுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டதினுல் அவரைத் தலைநகரத்தின் "குவாசி" என்னும் அதிகாரியாய் நியமித்தான். எட்டு வருடகாலமாக சுலுத்தானுக்கு பலவகைகளில் தொண்டுசெய்து வந்தார். இக்காலத்தில் இவர் சீனு, இலங்கை, சுமாத்திரா. மாலைத்தீவு முதலிய இடங்களைத் தரிசிக்க நேர்ந்தது. 1349-ம் ஆண்டில் தனது தாய்நாட்டுக்குத் திரும்பிய போதிலும், உலாவித்திரியும் வாஞ்சையினுல் உந்தப்பட்டு மத்திய ஆபிரிக்க பிரதேசங்களை நேரிற்போய்ப் பார்ப்பதற்காகப் புறப்பட்டு அங்கு சென்ற மீளவும் 1354-ம் ஆண்டு தாயகஞ் சேர்ந்தார். "சாவர்நமா" எனும் ஒரு பெயர்பெற்ற நூலில் தனது பிரயாண வரலாறுகளைக் குறித்த தன் பின்பு 1378-ம் ஆண்டில் மரணம் அடைந்தார்.

இபின் பட்டுற்ரு தனது காலத்திலிருந்த இஸ்லாமிய பிரயாணிகளில் மிகவும் சிறந்தவர். அவர் பல நாடுகளையும் நேரிற்போய் கண்டும் அந்நாடுகளைப்பற்றி தமது நூலில் குறிப்பிட்டுமிருப்பதனுல் அவைகளில் வேறு பிற சான்றுகளில்லாத நாடுகளின் சரித்திரத்தைக் குறிப்பதற்கு உதவுகின்றன. இலங்கையைப்பற்றி அவர் சில விஷயங்களை விபரமாய்க் கூறியிருக்கிரர். சிவனொளி பாதமலை என்றும், ஸ்ரீபாத என்றும், ஆதாமின் மலை உச்சியென்றும் பல மதத்தினருக்கும் யாத்திரை ஸ்தலமாக இலங்கையில் விளங்கும் திவ்விய ஷேத்திரத்துக்கு இஸ்லாமிய யாத்திரிகராக இபின் பட்டுற்ரு இங்கு வந்தார். ஆதிமனிதன் எனத்தாம் கருதும் ஆதாம் என்பவர் இம்மலையிலே தங்கினரென்பது இஸ்லாமியரின் கருத்து. இலங்கையில் முதன் முதல் வடபாகத்தையே அவர் தரிசித்தார். அக்காலத்தில் ஆரியச்

சக்கரவர்த்தி எனப்பட்ட தமிழரசனுல் இலங்கையின் வடபாகம் ஆளப்பட்டுவந்தது. இவ்வரசன் ஒரு பெருங் கல்விமான் எனவும் பல மொழிகளில் வல்லுனன் எனவும் கடற்படையிற் பலம் பொருந்தியவன் எனவும் இவர் கூறுவர். இவ்வரசனுக்கு பார்சிக மொழி தெரிந்திருந்ததனுல் இபின் பட்டுற்ருவுடன் நன்ருக சம்பாஷிக்கக் கூடியவனுயிருந்தான். இவ்வரசன் ஸ்ரீபாத மலையுச்சிக்கு இப்பெரியாரைக் கொண்டுசெல்ல ஒரு பல்லக்கு அளித்தான். உச்சிக்குச் செல்லும்வழி விபரமாக இவரால் வர்ணிக்கப்பட்டுள்ளது. அங்கு செல்ல ஒரு படிக்கட்டு உள்ளதென்றும் ஏறுவதற்கு உதவியாக சங்கிலிக்கோவை இருந்ததென்றும் இவரால் அறிகின்ரோம். மேலும் இலங்கையின் மேற்குத்திசையில் கறுவா வளர்த்து அதில் பெரும் வியாபாரம் நடத்தினதும், முஸ்லிம் வியாபாரிகள் கறுவா வாங்குவதற்குக் கொழும்புக்கு வந்ததும், இத்துறைமுகம் ஜூலாஸ்தி என்னும் வர்த்தகன் கையில் இருந்ததும் இவரால் தமது நூலில் குறிப்பிட்டுள்ளன. இப்படியாக எங்களுடைய நாட்டின் சரித்திரத்தை அறிந்து கொள்வதற்கும் இப்பெரியார் உதவி புரிந்துள்ளார்.

பயிற்சி III

சுருக்கமாக விடை எழுதுக:-

1. 13-ம்—14-ம் நூற்ருண்டுகளில் சீனுக் கடலிலிருந்து ஏடன் குடாமட்டும் உள்ள நீர்ப்பரப்பில் நடைபெற்ற வர்த்தகம்.....வியாபாரிகள் கையில் இருந்தது.
2. இபின் பட்டுற்ரு.....தேசத்தில்.....ம் வருடத்தில் பிறந்தார்.
3. 21-ம் வயதில்.....உள்ள பல தேசங்களுக்கு ஊடாக பிரயாணஞ் செய்தார்.
4. 1333-ம் ஆண்டில் அவர்.....நகரை அடைந்தார்.
5. அங்குள்ள சுலுத்தான் அவரைத் தனது தலைநகரின்.....ஆக நியமித்தார்.
6. அவர் இலங்கை உட்பட வேறு பல.....தரிசித்தார்.
7. அவருடைய பிரயாணங்கள்.....எனப்படும் ஒரு நூலில் எழுதப்பட்டிருக்கின்றன.
8. அவர் இலங்கையில்.....தரிசிக்க வந்தார்.
9. இலங்கை வடபாகத்தை அக்காலத்தில்..... ஆண்டுவந்தான்.
10. இபின் பட்டுற்ரு ஸ்ரீபாத மலை உச்சிக்கு ஓர்.....கில் கொண்டு போகப்பட்டார்.

11. இஸ்லாமிய வியாபாரிகள் இலங்கைக்கு..... வாங்கி வியாபாரஞ் செய்யவந்தார்கள்.

12. கொழும்பு அக்காலத்தில்.....எனும் பெயர் கொண்ட இஸ்லாமிய வீரனின் அதிகாரத்தில் இருந்தது.

13. .....இன் விபரங்களைத் தன்னும் அறிவதற்கு இபின் பட்டூற்றுவின் நூல் உதவியாய் இருந்தது.

15-ம் அத்தியாயத்தில் விளக்கள்

1. சீனு தேசத்திலிருந்து ஐரோப்பிய நாடுகள் என்ன கற்றுக் கொண்டன?

2. மங்கோலியர் யார்? கெஞ்சிஸ் கான், குப்ளாய் கான் ஆகிய இருவரைப்பற்றியும் அறிந்தவற்றை எழுதுக.

3. குப்ளாய் கானின் அரச சபையில் மார்க்கோ போலோ ஆற்றிய செயல்கள் எவை?

4. இபின் பட்டூற்று இலங்கையைப்பற்றி எழுதிவைத்ததை உமது வார்த்தைகளில் எழுதுக.

16-ம் அத்தியாயம்


ஐரோப்பாவின் விழிச்சி

(அ) மானியமுறை ஐரோப்பா, (ஆ) பாப்பரசரும் பேரரசரும். (இ) புது அறிவு. (ஈ) புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பொருட்கள். (உ) புதுநாடுகள் கண்டு பிடிக்க உதவிய பிரயாணங்கள்.

ஆரம்ப உரை

8-ம் அத்தியாயத்தில் உரோமப் பேரரசின் வீழ்ச்சியைப்பற்றி படித்துள்ளோம். அது அழிவதற்கு முன்னே அப்பேரரசின் எல்லாப் பகுதிகளிலேயும் உரோமரின் தேசாதிபதிகளும் சேனைகளும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிறுவி, அமைதியை நிலைநாட்டியதால் உரோமரின் நாகரிகம் அப்பேரிராச்சியத்தின் எத்திசையிலும் பரம்பினது.

உரோமரின் பேரரசு.



எங்கெங்கு உரோமர் சென்றனரோ அங்கங்கெல்லாம் உரோமரின் கல்வி, பண்பாடு, சட்டம், அரசியல் முறை ஆதியன கொண்டுசெல்லப் பெற்றன. ஆனல் கி. பி. 5-ம் நூற்றுண்டில் இப்பேரிராச்சியம் வீழ்ச்சியுறத் தொடங்கியபோது; ஐரோப்பாக் கண்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும், கடைப்பிடித்து நாட்டக்கூடிய ஒரு அரசாங்கமும் அநேக காலமாய் தோன்றவில்லை.

''உரோமரின் சமாதானம்'' எனப்படும் அமைதி நிலையுள்ள காலத்துக்குப்பின் குழப்பங்களும் இடையிடையே யுத்தங்களும் நடந்த ஒரு காலம் இருந்தது. இக்காலமானது விவசாய செய்கைக்கும், கைத்தொழில் அபிவிருத்திக்கும் இடையூருன காலம். மனிதருடைய உயிருக்கும், பொருளுக்கும் ஆபத்து நிறைந்த காலம். கல்வியும் பண்பாடும் குன்றிவந்த காலம். ஆனதினாலேயே 5-ம் நூற்றாண்டு தொடக்கம் 11-ம் நூற்றாண்டு வரையும் உள்ள காலம் சரித்திரத்தில் இருளடர்ந்த காலமெனப்படும்.

எனினும் பொதுவாகக் கருதப்படுவதுபோல் இது முற்றிலும் இருளடர்ந்த காலமென்க் கூறுதல் தகாது. 8-ம் அத்தியாயத்தில் உரோமரின் கிழக்குப் பேரிராச்சியம் கொன்ஸ்தாந்திநோப்பிளைத் தலை நகராக்கக் கொண்டுள்ளது என்று படித்துள்ளோம். மேற்கூறப்பட்ட ஆறு நூற்றாண்டுகளிலும் உரோமரின் மேற்குப் பேரிராச்சியம் நிலை யிற் குன்றிவந்தபோதிலும் கொன்ஸ்தாந்திநோப்பிளானது பழைய கால கிரேக்கரினதும் உரோமரினதும் கல்விக்கும் பண்பாட்டுக்கும், ஒரு வாசஸ்தலமாக விளங்கிற்று. மேலும் 8-ம் அத்தியாயத்தில் கிறிஸ் தவ சமயம் பரவலுற்றதையும் பாப்பரசரின் ஆதிக்கம் வளர்ச்சியுற்ற தையும் கண்டுள்ளோம். மேற்கு உரோமப் பேரரசு வீழ்ச்சியடையவே, கிறிஸ்தவ மேற்றிராணிமாரும் துறவிகளும் மேல் கீழ் உரோம இரர்ச் சியங்களில் அரசாங்கம் செய்துவந்த சீர்திருத்த வேலைகளைச் செய்து வந்தனர். சந்நியாச மடங்களில் கல்வியறிவு வளர்க்கப்பட்டது. கோவில்களுக்கு அருகாமையில் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பெற்றன. சமய போதனையிலும், வாசனை, எழுத்து முதலியவற்றிலும் இங்கே பயிற்சி அளிக்கப்பட்டன. மேற்கு ஐரோப்பாவில் அளிக்கப்பட்ட கல்வி விசேஷமாய் சமயத்தையும் மெய்ந்நூலறிவையும் (தத்துவ சாஸ்த்திரத் தையும்) அடக்கியுள்ளது. ஆனால் கொன்ஸ்தாந்திநோப்பிளில் பழைய கிரேக்கரும், உரோமரும் பெற்ற கல்வி தொடர்ந்து பயிற்றப்பட்டது.

''இருளடர்ந்த காலம்'' சுமார் 500 வருடமளவாக நீடித்தது. இக்காலத்தில் அநேக குழப்பங்களும் யுத்தங்களும் நடைபெற்றன. நாகரிகம் சிதைவுற்றது. இறுதியாக 11-ம் நூற்றாண்டில் ஐரோப்பா வின் குழம்பிய நிலை அமர, அமைதி படிப்படியாக நிறுவப்பட, கிறிஸ் தவ நாகரிகமானது இருளடர்ந்திருந்த நிலப்பாகங்களுக்கு வெளிச் சத்தைக் கொடுத்தது. இந்நிலையில் சரித்திரத்திலே ஒரு தனிப்பாக மாக விளங்கும் ''மத்தியகால'' எல்லைக்குள்ளே ஐரோப்பாக் கண்ட மானது பிரவேசிக்கலாயிற்று. 11-ம் நூற்றாண்டிலே தொடங்கிய இம் மத்தியகாலமானது ஐரோப்பா விழித்தெழுந்த காலமாகிய 15-ம் நூற் றாண்டில் முடிவடைந்தது. இவ்வாறு ஐரோப்பா விழித்தெழுந்த காலத்தை அதன் ''புதுப்பிறப்புக்'' காலமெனவும் அழைப்பர். இப்

போது நாம் ஐரோப்பாவில் மத்தியகாலத்தில் உள்ள வாழ்க்கையைச் சற்று ஆராய்வோம்.

பயிற்சி I

1. 'இருட்காலம்' என ஐரோப்பிய சரித்திரத்திலே கூறப்படும் காலமெது?
2. அதை ஏன் இருட்கால மென்பர்?
3. பழைய கிரேக்கரும் உரோமரும் கற்றுக்கொண்டனவற்றை உரோமரின் பேரிராச்சியத்தின் எப்பாகங்களில் பயிற்றிவந்தனர்?
4. இக்காலங்களில் கல்வியறிவு அழிந்து போகாது எவ்வாறு பாது காக்கப்பட்டுளது?
5. இக்காலங்களிலுள்ள கல்வியறிவுச் சமயக் கல்வி அறிவு என் போமோ அன்றேல் கல்வி என்று கூறுவோமோ?
6. மேற்கு ஐரோப்பாவிலுள்ள கல்வியறிவுக்கும் கொன்ஸ்தாந்தி நோப்பிளிலுள்ள கல்வியறிவுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

மானியமுறை ஐரோப்பா


உரோமரின் பேரிராச்சியத்தில் அடங்கி இருந்த ஐரோப்பாவின் பகுதிகளில் நிலவிய அமைதியைப் பற்றியும் ஒழுங்கைப்பற்றியும் முன்பு ஓரிடத்தில் கூறி இருக்கிறோம். இப்பேரிராச்சியத்தின் வீழ்ச்சிக்கு பின்பு ஒரு பலமான அரசாங்கம் இல்லாததனால் ஒழுங்கீனம் சிறிது காலம் எவ்வாறு தாண்டவமாடிற்று என்றும் கண்டுள்ளோம். சார் ளிமேன் என்னும் மன்னன் பலம் பொருந்திய ஒரு பேரிராச்சியத்தை நிறுவி சிறிது காலம் இந்த சீர்கேட்டைத் தடுத்தானெயினும் அவனு டைய காலத்துக்குப்பின்பு மீளவும் நிலைமை கேடுற்று வந்தது.

கொள்ளைக் கூட்டத்தினரின் அநியாயச் செயல்களாலும், ஓய்வில் லாது நடந்த யுத்தங்களினாலும் சனங்களின் உயிர்களுக்கும், பொருள் களுக்கும், பேராபத்து உண்டாயிற்று. இந்த ஆபத்துக்களிலிருந்து தப்புவதற்கு யார் பாதுகாப்பு அளிப்பாரோவென அங்கலாய்ப் புற்ற ஏழை மக்கள் பலமுள்ளவர்களை அண்டி அவர்களால் அளிக் கப்பட்ட பாதுகாப்புக்குப் பிரதியாக அவர்களின் ஏவலை செய்துவந்த னர். இவ்வாறுக பலமுள்ளவர்கள் ஏழைகளின் எசமான்களாயினர். ஏழைகளைத் தங்களுடைய நிலத்தில்வசிக்க இப்பிரபுக்கள் வாடகைக்கு நிலங் கொடுத்து பலவகையான வேலைகளையும் செய்துவித்து வந்தனர்.

பிரபுவின் வாசஸ்தலம் ஒரு கோட்டையாகும். முதன்முதல் இது மரத்தால் ஆக்கப்பட்டது. ஆனால் காலடைவில் கல்லாலே கட் டப்பட்டு, பகைவரின் தாக்குதலை எதிர்க்க உதவத்தக்க, பலம்பொ ருந்திய பாரிய மதில்கள் கோபுரங்கள் முதலியனவுடையதாகத் தயா

ரிக்கப்பட்டது. மதில்களைச் சுற்றி விசாலமான ஒரு அகழி உண்டு. இது நீர் நிறைந்திருக்கும். அகழியைத் தாண்டி வருவதற்கு கோட்டைப் பக்கத்திலிருந்து உயர்த்தப்படும் ஒரு தூக்குப் பலகை உண்டு. இப்பலகையை உயர்த்திவிட்டால் கோட்டைக்குப் போகும் வழி இல்லை. இக்கோட்டையானது நீராற் சூழப்பட்ட ஒரு தீவுபோலிருக்கும். ''விலென்ஸ்'' எனப்படும் குடிக்கூலியாளர்கள் கோட்டைக்குக் கிட்ட சிறு குடிசைகளில் வசிப்பார்கள். ஆபத்து வேளைகளில் இவர்கள் கோட்டைக்குள் ஓடிவிடுவார்கள். அப்போது தூக்குப் பலகை உயர்த்தப்படும். உள்ளே இருந்து இவர்கள் அக்கோட்டையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுவர்.

ஒரு பிரபுவின் கோட்டை.



கூலிக்கு குடியிருப்பவர்களாலே பயிர் செய்யும் விளைநிலங்கள் கோட்டைக்கு வெளிப்புறத்தில் வேலிகளினுல் பிரிக்கப்படாது வெளியாக விடப்பட்டிருந்தன. இப்பெருவெளி மூன்று பிரிவுகளாகக் குறிக்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் முறையாக ஒரு பிரிவு விவசாயம் செய்யப்படாது ஓய்வுபெறும் நிலமாயிருக்க மறு இரு பிரிவுகளும் கமச்

செய்கைக்கு உபயோகிக்கப்பட்டன. இப்படி நிலம் ஓய்வு பெறுவது அது இழந்த சாரத்தை திரும்பவும் பெற்றுக்கொள்ளவேயாம். பிரபுவானவர் தனது கூலிக் குடியானவருக்கு ஆபத்தில் உதவி அளித்து வந்தது மாத்திரமன்றி அவர்களுக்கிடையிலுள்ள வழக்குகளை விளங்கிப் பிணக்குகளைத் தீர்த்து வைத்தார். குடியானவனுக்கு பிரபுவினுடைய நிலங்களைப் பண்படுத்துவதும், பிரபுவிடம் கூலிக்குத் தான் பெற்ற நிலத்தில் விவசாயம் செய்வதும், கோட்டையைப் போரில் காப்பதும் யுத்தகாலங்களிலே அரசனுக்குச் சேனையிலே தொண்டாற்றுவதும் கடமையாகும். போரிலே பிரபு கைதியாக்கப்பட்டால் அவர் விடுதலைக்குப் பணஉதவி செய்து குடியானவர்கள் அவனை மீட்டுக் கொள்வார்கள். பிரபுவினுடைய சிரேஷ்ட குமாரன் பிரபுப் (நைற்) பட்டம் சூடும்போதோ அவருடைய குமாரி விவாகஞ் செய்யும்போதோ ஒரு குறித்த பணத் தொகையையோ அன்றேல் வெகுமதிகளையோ அவர்கள் கொடுப்பதும் வழக்கம்.

இவ்வாருக ஒரு பலமுள்ள மத்திய அரசாங்கம் இல்லாமையினுலும் ஏழைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது அவசியமானதாலும் ஒரு ஸ்தாபனம் எழலாயிற்று. இந்த ஸ்தாபனமே மானியமுறையாட்சியின் நில அம்சங்களை உடையது. இங்கே எவ்வாறு வாழ்க்கை நடத்தப்பட்டதென்று நாம் முன்னமே படித்திருக்கிறோம். சமூகமானது இல்வாருக ஒழுங்குபெற்று ஒரு முறையில் சட்டமும் அமைதியும் நிலவுற இந்த மானியமுறையாட்சி உதவலாயிற்று. ஐரோப்பா முழுவதும் இவ்வாட்சிமுறை பரவி ஒவ்வோர் இடத்திலும் அவ்விடத்தின் நிர்வாகமும் பாதுகாப்பும் கவனிக்கப்பட்டு வரலாயின.

இப்பிரபுக்களிற் சிலர் மிகவும் பலமுள்ளவர்களாகி மறு பிரபுக்களை அடிப்படுத்தி தம்மை அரசர்களாக்கிக் கொண்டனர். அடிப்படுத்தப்பட்ட பிரபுக்கள் தங்கள் தங்கள் இடங்களிலேயே இருந்து அரசனுக்கு சேவைபுரிந்து வந்தனர். இப்படியாக பல பிரிவுகளிலுள்ள நிலம் முழுவதும் அரசனுடையதாக அவர் தனக்குக் கீழே வேலை புரிந்த பிரபுக்களுக்கும், அப்பிரபுக்கள் முறையே தமக்குச் சேவைபுரிபவர்களுக்கும், நிலத்தைப் பங்கீடு செய்தனர்.

மானியமுறையாட்சியிலுள்ள நன்மைகள்

இம்முறையானது பிரபுக்களின் கையில் அதிக அதிகாரத்தை கொடுத்தபோதிலும் சட்டத்தை நிறுவவும் அமைதியை நிலைநாட்டவும் உதவிற்று. ஆனதினுல் விவசாயமும் வர்த்தகமும் வீருத்தியடைந்தன. பின்பு அரசர்கள் நாட்டிலே தோன்றிய காலங்களில் சேனைகளைத் திரட்டி நாட்டைப் பாதுகாக்க அரசருக்கு பெருந்துணையாக இவ்வாட்சிமுறை விளங்கியது.

மானிய ஆட்சிமுறைக் காலத்தினது அழிவின் தொடக்கம்

இவ்வாட்சி முறையினது ஆரம்பத்துக்குக் காரணமாயிருந்தன அற்றுப்போகவே அதுவும் நீலுகுன்றத் தொடங்கிற்று. பலமுள்ள இராசாக்கள் அநேகர் தோன்றி தங்கள் ஆதிக்கத்தின்கீழ் உள்ள நாடுகளை கட்டுப்பாட்டுடன் ஆண்டுவந்தனர். ஐரோப்பா தேசத்துக்கு வெடிமருந்தின் உபயோகம் இக்காலத்திலே தெரியவந்தது. எனினும் வெடிமருந்தை உபயோகிக்கும் அதிகாரம் அரசனுக்கு மாத்திரமே இருந்ததால் அரசன் பலத்தில் பன்மடங்கு கூடிவிடவே அவனுடைய மத்திய அரசாங்கமும் பலமுடையதாய் விளங்கிற்று. அரசனது அதிகாரம் எவ்வளவுக்கு அதிகரித்ததோ பிரபுக்களினுடைய ஆதிக்கம் அவ்வளவுக்குச் சுருங்கலாயிற்று. நாணயமும் உபயோகத்தில்வரவே குடிக்கூலியாட்கள் தமது வயிற்றைக்கழுவ பிரபுக்களின் கையை நோக்கும் நிலைமையும் அற்று வந்தது. தான் செய்த வேலைக்கு ஈடாக நாணயத்தைப்பெற்று அதைக்கொண்டு வேண்டிய வற்றை வாங்கும் காலமும் தோன்றிற்று. இவ்வாறு அரசரினது பலமும் மத்திய அரசாங்கப் பலமும் வளர்ந்து வரவே பொதுச்சனங்களுக்குப் பிரபுக்களின் பாதுகாப்பு அனுவசியமாயிற்று. முன்னே பிரபுக்களுக்கு அவர்களின் நிலத்துக்குப் பிரதியாக தமது உழைப்பைக் கொடுத்து வந்தவர்கள் அதனிடமாக இப்பொழுது ஒரு குறித்த தொகை நாணயங்களை கொடுக்கத் தலைப்பட்டனர்.

பயிற்சி ||

இடைவெளிகளை நிரப்புக:-

1. உரோமரின் பேரிராச்சியம் வீழ்ச்சியுற்றதின் பின்பு அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டக்கூடிய.....அரசாங்கம் ஒன்று இருக்கவில்லை.
2. .....என்பவன் ஓர் பேரிராச்சியத்தை நிறுவி சிறிது காலத்துக்கு அமைதியையும் ஒழுங்கையும் தரலாயினன்.
3. அநேக யுத்தங்கள் நடந்ததாலும் கொள்ளைக்காரரின் தொந்தரவுகளினாலும் சனங்கள் தங்களுடைய.....க்கும்..... களுக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்தார்கள்.
4. ஆனதினால் ஆபத்துக்களிலிருந்து தங்களை.....க் கொள்ள பலமுள்ளவர்களைத் தவிர வேறு ஒருவரையும் அண்ட முடியவில்லை.
5. குடியானவனுக்குப் பிரபு.....அளிக்க பிரபுவுக்குப் .....குடியானவன் கொடுத்தான்.
6. மானிய முறையானது நாட்டில் பலமான மத்திய..... இல்லாததாலும் சனங்களுக்குப்.....அவசியமாய் இருந்ததாலும் உண்டாயிற்று.

(ஆ) சுருக்கமாக விடைதருக:-

1. பிரபுவின் கோட்டையைக் சுருக்கமாக வர்ணித்து அது எவ்வகை பாதுகாப்புகளை உடையதாய் இருந்தது என்பதைக் காட்டுக.
2. கூலிக்குடியிருப்பாளர் ஆபத்துக்காலத்தில் என்ன செய்தனர்?
3. நிலம் எவ்வாறு பங்கீடு செய்யப்பட்டது?
4. ஒரு பிரிவில் கமஞ்செய்யாது விடப்பட்டது ஏன்?
5. பாதுகாப்பு அளிப்பதை விட்டு பிரபு குடியானவருக்குச் செய்து வந்தது என்ன?
6. யுத்த காலத்தில் குடியானவன் பிரபுவுக்கு எவ்வாறு உதவினன்?
7. சில் பிரபுக்கள் எவ்வாறு அரசர்களானார்கள்?
8. மானிய முறையில் (1) சனங்களுக்கு (2) அரசனுக்கு (3) பிரபுவுக்கு உள்ள நன்மை யாது?

மானியமுறை அழிவுற்றதற்குக் காரணங்கள் இரண்டு உள—அவை:-

(I) அரசரின் பலம் அதிகரிக்க அவர்கள் திடமான மத்திய அரசாங்கத்தை நிலைநாட்டியது.

(II) சனங்களுக்கு பிரபுக்கள் கொடுத்து வந்த ஆதரவு அனுவசியமாய் வந்து விட்டதால், பிரபுக்களின் பிடியிலிருந்து விடுதலை பெற குடிமக்கள் முயன்றனர். மேலே கூறப்பட்ட இரு இயக்கங்களும் எவ்வாறு நடந்தன என்பதை விளக்குக.

பாப்பரசரும் பேரரசனும்

8-ம் அத்தியாயத்தில் கத்தோலிக்க மதம் ஐரோப்பாவில் பரவியதையும் பாப்பரசரின் ஆதிக்கம் வளர்ந்ததையும் பற்றி படித்துள்ளோம். விரைவில் மேற்கு ஐரோப்பிய மக்கள் சகலரும் கத்தோலிக்க மதத்தைத் தழுவி ஆத்மீக காரியங்களில் பாப்பரசர் காட்டிய வழியில் ஒழுகி வந்தனர். திருச்சபை நிர்வாகத்திற்காக இப்பிரதேசமானது ஒவ்வொன்றும் அதிமேற்றிராணியாரின் ஆத்மீக ஆட்சிக்கு அடங்கியதான பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் மகாணமும் ஒரு மேற்றிராணியாரின் ஆட்சிக்குள் அடங்கியதாகப் பல மேற்றிராசனங்களைக் கொண்டு விளங்கிற்று. இத்தகைய ஒவ்வோர் பிரிவும் ஓர் பங்குவிசாரணைக் குருவின் மேற்பார்வையிலடங்கியதான, பல கோயிற் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவர்கள் சகலருக்கும் மேலதிகாரியாக பாப்பரசர் கடமையாற்றினர். தமது அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், கோயிற் பிரிவுக் குருமார் மூலமாக பாப்பரசர் கத்தோலிக்கரை ஆத்மீக விஷயங்களில் ஆட்சிபுரிந்து வந்தார்.


8-ம் அத்தியாயத்தில் பரிசுத்த உரோமப் பேரரசின் வளர்ச்சியைப் பற்றிப் படித்திருக்கிறோம். இப்பேரரசன் மத்திய மேற்கு ஐரோப்பிய பிரதேசங்களிலே, தானே பிரதான அரசரென்றும் மறு அரசர்கள் தனது அதிகாரத்துக்குள் அடங்கி யுள்ளவர்களென்றும் கொண்டுள்ளார். அவர் கோரிய இந்த அதிகாரத்துக்கு ஜேர்மன், நெதர்லாந்து, அவுஸ்திரியா தேசங்கள் அடிப்பட்டன. ஆனால், பல முள்ள அரசர்கள் ஆட்சிபுரிந்து வந்த நாடுகளான பிரான்சு, இங்கிலாந்து முதலிய தேசங்கள் இடங்கொடுக்க மறுத்து விட்டன. இவ்வாறு நிலைமை எவ்வாருயிருப்பினும் அக்காலத்தில் ஐரோப்பாவில் பாப்பரசரும் பரிசுத்த உரோமைப் பேரரசனுமே பிரதான இரு தலைவர்களாக மதிக்கப்பட்டனர்.

பாப்பரசர் (கத்தோலிக்க உலகின் ஆத்மீகத் தலைவர்)

மேற்றிராணிமார் (மாகாண ஆத்மீக தலைவர்)

மேற்றிராணிமார் (விசுப்பு இராச்சிய அல்லது மேற்றிராசன ஆத்மீகத் தலைவர்)

கோயிற் பிரிவுக் குருமார் (கோயிற் பிரிவின் ஆத்மீகத் தலைவர்)



தொடக்கத்தில் இவ்விரு தலைவர்களும் தமக்குள் இணங்கி ஆண்டுவந்தனர். பாப்பரசர் ஆத்மீக காரியங்களையும் பேரரசன் லௌகீக அரசியல் காரியங்களையும் கவனித்தனர். ஆனால் சார்ளிமேன் பேரரசரின் காலத்தின் பின்பு இத்தகைய இணக்கம் எப்பொழுதும் நிலவவில்லை. இடையிடையே அவர்கள் முரண்பட்டும் வந்தனர். பாப்பரசர் தாம் அர்ச். பேதுருவைத் தொடர்ந்து அதிகாரம் பெற்று வருவதால் கிறிஸ்துநாதரின் பிரதிநிதிகள் என்றும், அரசர்களும் தமது அதிகாரத்துக்கு அடங்கவேண்டுமென்றும் கொண்டனர். ஆனால் எதிராக சில அரசரும் பேரரசர்களும் தாம் ஆட்சிபுரிந்து வந்த பிரதேசங்களிலுள்ள குருமார், மேற்றிராணிமார் முதலிய வைதிகமதஅதிகாரிகள் சகலரும் தமது ஆணைக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஹில்டர் பிரான்ட், 3-ம் இன்னோசன்ட் முதலிய திடகாத்திரமுள்ள பாப்பரசரின் காலங்களில் பேரரசர்களும் பாப்பரசரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். ஆனால் 1-ம் பிரெடரிக், பிரெடரிக் பார்ப்பரோசா முதலிய பலம் வாய்ந்த பேரரசர் ஆட்சிபுரிந்து வந்தபோது அரசர் தாம் விரும்பியபடியே குருமாரையும் மேற்றிராணிமாரையும் நடத்தி வந்தனர்.

இப்பிணக்கின் காரணமாக இருதிறத்தாரின் நிலையும் காலடைவில் குன்றவே பாப்பரசரினதும், பரிசுத்த உரோமன் சக்கரவர்த்தியினதும் பலமானது பிரான்சு, இங்கிலாந்து முதலிய தேச அரசர்களின் பலத்திலும் குன்றலாயிற்று.

பயிற்சி III

1. தமக்கு யாது அதிகாரம் உண்டு என்று பாப்பரசர் கோரினர்?
2. பாப்பரசர் மேற்கு ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்து சமயத்தவரை யார்மூலம் ஆண்டுவந்தார்?
3. பேரரசர் எவ்வகை அதிகாரம் தனக்குரியது என்று கொள்ளலாயினர்?
4. பேரரசரது கோரிக்கையை எல்லாத் தேசங்களும் ஏற்றுக் கொண்டனவா?
5. பேரரசரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாத சில தேசங்கள் எவை?
6. தொடக்கத்தில் பாப்பரசரும் பேரரசரும் எத்தகைய தொடர்பு உடையவராயிருந்தனர்?
7. அவர்கள் தொடர்பு எப்போது முரண்பட்டுக்கொள்ளத் தொடங்கிற்று?
8. இவ்வாறு முரண்பட்டுக்கொண்டதால் பாப்பரசினதும் பேரரசரதும் அதிகாரத்துக்கும் என்ன நடந்தது?

புதுக் கல்வி

4-ம், 5-ம் அத்தியாயங்களில் பழையகால கிரேக்கரின் உரோம ரின் பண்பாடு சிர்திருத்தம் ஆதியனவற்றின் பெருமையைப்பற்றிப் படித்துள்ளோம். உரோமரின் பேரரசு அழிவுற்றதன் பின்பு குழப் பங்களும் ஒழுங்கீனங்களும் உண்டாயின. அதன்பின்பு இந்த நாகரி கம் படிப்படியாக அற்றுப்போகத் தொடங்கிற்று. ஆனல் அது முற் றிலும் ஒருபோதும் அழிந்துபோகவில்லை. மேற்கு பாகங்களில் வழங்கப்பட்டு வந்தன. அப்படியே இலத்தின் கிரேக்க இலக்கியங்க ளும் சித்திரக்கலைகளும் உபயோகிக்கப்பட்டன. இவை சமயம், தத் துவ சாஸ்திரம், சமயாசாரம், கோவிற் கட்டட வேலைகள் முதலியவற் றுடன் சம்பந்தப்பட்டிருந்தன. மத்திய காலங்களிலே கல்வி மிக வளர்ச்சிபெற்றது. நகரங்களிலே பெரிய கோயில்களுக்கருகாமையிலே யும், மறு இடங்களிலேயும் சந்நியாச மடங்கள் நிறுவப்பட்டன. பிற்கா லங்களிலே சர்வகலாசாலைகளும் தழைத்தோங்கின. இப்பள்ளிக்கூடங் களிலே கற்பிக்கப்பட்ட பிரதான பாடம் சமயமே. இப்பாடசாலைக ளிலே இளம்பராயத்திலிருந்தே குருமாராக சந்நியாசிகளாக விரும் பும் மாணவர் பயிற்றப்பட்டனர். கேஷத்திர கணிதம், சங்கீதம், வான சாஸ்திரம் முதலிய கலைகளும் பயிற்றப்பட்டன. அக்காலச் சமுகத் தின் உயர்பிரிவினரின் பிள்ளைகளுக்குக் கல்வி அளிப்பதற்கு மூலாதார பாடசாலைகளும் இருந்தன. சர்வகலாசாலைகளிலே தத்துவ சாஸ்திரம், சட்டம் ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டன. குருமாரே அக்காலத்தில் மிகப் படித்தவர்களாய் இருந்தபடியால் அவர்கள் படிப்பித்தன வெல்லாவற்றையும் பொதுசனங்கள் மிக நன்றியுடன் ஏற்றுக் கொண்டனர்.

15-ம் நூற்றுண்டில் கல்வி முறையில் ஐரோப்பாவில் ஓர் ஏமாற் றம் தோன்றியது. இது காலவரையும் சிறந்த பாஷைகளெனக்கொள் ளப்பட்ட கிரேக்க இலத்தினிய பாஷைகளே சமயக் கல்வியையும் தத்துவ ஞானத்தையும் பயின்றுகொள்ளவே மாணவர் படித்து வந்தனர். ஆனல் இதன்பின்பு இப்பாஷைகளின் இலக்கியங்களில் அடங்கிய அறி வைப் பெற்றுக்கொள்வதற்கு இவைகளைப் பயிலத் தொடங்கினர். இப்புத்துணர்ச்சி ''இலக்கிய மறுமலர்ச்சி'' எனப்பட்டது. (Classical Revival) ஐரோப்பாவின் ''புது ஜனனம்'' என்னும் ''புனர் விழிப்பு'' என்றும் இவற்றைக் கூறுவதும் உண்டு.

ஐரோப்பாக்கண்டத்தினரது அறிவிலும் எண்ணங்களிலும் இம் மறுமலர்ச்சியானது பெரும் பயன்களை அளித்தது. கிரேக்க உரோம பாஷைகளில் உள்ள பெரும்பாலான இலக்கிய நூல்கள் வாழ்க்கை யின் இன்பங்களையும் சுகங்களையும் எடுத்துக்காட்டுவன. ஆனல் குரு மாரோ இவ்வாழ்வானது இறப்பின் பின்வரும் வாழ்வுக்கு ஓர் ஆயத்த

மாகுமேயென்று கருதி மரணத்தின் பின்உள்ள வாழ்வையே சிறப் பானது எனப் போற்றிவந்தனர். ஆனதினல் இலத்தின் கிரேக்க பாஷைகளில் எழுந்த இம்மறுமலர்ச்சி மறு உலக எண்ணங்களி லிருந்து இவ்வுலக இன்பங்களில் மனிதரின் மனத்தைச் செலுத்தியது. மனிதர் அறிவைப் பெற்றுக்கொள்ள வாஞ்சையுற்றதும் சீவியத்தில் விசுவசிக்கவேண்டிய யாவற்றுக்கும் அத்தாட்சிகளும் காரணங்களும் கேட்டு நின்றதும் இம்மறுமலர்ச்சியின் பயன்களாம். 4-ம் அத்தியா யத்தில் கிரேக்கர் பொதுவாக எவற்றைப்பற்றியும் தேறவிவாதஞ் செய்யும் குணமுடையவரே என்றும், எப்பொருளும் ஏன், எப்படி அத் தன்மைபெற்றது என்றும் ஆராயும் விருப்புடையவரென்றும் கண்டுள் ளோம். இத்தகைய கிரேக்கர் எழுதிய நூற்களைக் கற்போர் நியாயங் களையும் அத்தாட்சிகளையும் கேட்டுநிற்பது இயற்கையன்றே. ஆனதி னல் இதுகாலவரையும் இவர்கள் விசுவசித்துவந்த யாவற்றையும் வேதபோதனைகளைத் தானும் தேற விசாரித்து நியாயங்களும் அத் தாட்சிகளும் கோரும் மனப்பான்மை உண்டாயிற்று. இம்மறுமலர்ச்சி இத்தாலியதேசத்தில் ஆரம்பித்தது. இதன் தலைவர்களாகிய பெற்ரக், பொக்காச்சியோ என்பவர்கள் இத்தாலி தேசத்தில் வசித்தவர்களாம். இருட்காலத்திலே கல்வியானது பாதுகாக்கப்பட்டுவந்த கொன்ஸ்தாந்தி நோப்பிள் என்னும் நகரிலிருந்து கல்வி வித்தகர் இத்தாலி தேசத் துக்கே வந்தனர். இத்தேசத்திலிருந்து கொன்ஸ்தாந்தி நோப்பி லுக்கு கிரேக்க மொழி முதலாம் பழைய பாஷைகளைக் கற்கவும் சென்றனர். கி. பி. 1453-ம் ஆண்டில் துருக்கியரால் கொன்ஸ்தாந்தி நோப்பிள் அடிப்படுத்தப்பட்டபின் கற்றேர் பெருந் தொகையினராக இத்தாலி தேசத்துக்கு ஓடிச்சென்றதும் அவ்விடத்தில் தமது கல்விக்கு மதிப்பிருந்தது என்பதை அவர்கள் அறிந்திருந்ததாலேயாம். மேலும் ஐரோப்பாவின் பல பக்கங்களிலிருந்தும் விற்பன்னர் பலர் இத்தாலி தேசத்துக்கு அங்கே தோன்றிய ''மறுமலர்ச்சியை'' அறிந்து அதைத் தமது நாட்டிலும் புகுத்திவிட ஆசைகொண்டும் சென்றனர்.

பயிற்சி IV

1. சிறந்த இலக்கியங்கள் என்று பொதுவாக எப்பாஷை நூல் களைக் கூறுகின்றேம்?
2. பழைய கிரேக்கர் உரோமரின் பாஷைகளையும், இலக்கியங்களை யும், சித்திரக்கலைகளையும், திருச்சபை எவற்றுக்கு உப யோகித்தது?
3. மத்தியகாலங்களில் உள்ள நாலுவகைக் கல்வி நிலையங்கள் எவை?
4. இப்பாடசாலைகள் எல்லாவற்றிலும் கற்பிக்கப்பட்ட முக்கிய பாடம் எது?

5. மறு பாடங்கள் கவனம் செலுத்தப்படாமல் விடப்பட்டனவா?
6. குருமார் படிப்பித்ததைப் பெரும்பாலானேர் ஏற்றுக் கொண்டது ஏன்?
7. 15-ம் நூற்றுண்டில் எந்நியாயங்களுக்காக சிறந்த இலக்கியங்களென கூறப்பட்டனவற்றை சனங்கள் வாசிக்கத் தொடங்கினர்?
8. "புது ஜனனம்" என்ற சொல்லின் கருத்தென்ன?
9. சிறந்த இலக்கிய பாஷா நூல்களில் எவ்விஷயம் அதிகமாகக் காணப்படுகின்றது?
10. இவ்வுலக இன்ப சீவியத்தைத் திருச்சபை எவ்வாறு கருதிற்று?
11. இலக்கிய மறுமலர்ச்சி எத்தேசத்தில் ஆரம்பித்தது?
12. பழையகால அறிவையும் தம்முடன் கொண்டு எத்தேசத்திலிருந்து கல்வி விற்பன்னர் இத்தாலிக்கு வந்தனர்?
13. பழைய அறிவைப்பயில எத்தேசத்துக்கு இத்தாலிய விற்பன்னர் சென்றனர்?
14. கி. பி. 1453-ம் ஆண்டில் கொன்ஸ்தாந்திநோப்பிளிலிருந்து அறிஞர் பலர் எத்தேசங்களுக்குச் சென்றனர்?
15. இப்புத்தறிவு எத்தேசத்திலிருந்து ஐரோப்பாவின் பலபாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது?


இடைவெளிகளை நிரப்புக:

1. சிறந்த இலக்கிய பாஷா நூல்கள் இவ்வுலக..... .....எடுத்துக் கூறின; திருச்சபையே..... .....இன்பங்களையே பெரிதாகக் கருதும்.
2. இந்நூல்களைப் படித்ததினால் மனிதரின் மனங்கள் மறு உலக.....இருந்து..... ...இன்பங்களை நாடின.
3. கிரேக்கர் எல்லாவற்றுக்கும்.....களும்.....களும் காண விரும்பினர்.
4. இந்தப் புது அறிவானது கற்றேரை சமயபோதனைகளிலும் .....கோரத் தூண்டியது.

புது ஜனனத்தின் சில அம்சங்கள்

'புது ஜனனம்' எனப்படும் இக்காலமே மத்தியகால ஐரோப்பாவின் பொற்காலமாகும். இந்த ஜனனமானது இழந்துபோன கிரேக்க உரோம பண்பாட்டின் புது ஜனனம் மாத்திரமல்ல; வாழ்க்கையிலேயும், இலக்கியத்திலேயும், கல்வியிலேயும் உண்டான ஒரு புது ஜனனமாகும். மறுஉலக தியானத்துடன் சீவித்த மத்தியகால மனிதனின் மனத்தில் இவ்வுலக வாழ்க்கையின் இன்பம் குடிகொண்டது. அதனால் முன்போல் அல்லாது சமயத்துக்கும் தத்துவ சாஸ்திரத்துக்கும் அப்பால் கல்வி வளரலாயிற்று. இக்காலத்திலேதான் அச்சுவித்தை மேல்நாடுகளுக்கு கொண்டுவரப்பட்டது. அச்சியந்திரத்தின் உதவியால் புஸ்தகங்கள் அநேகமாயும் மலிவாயும் அச்சிடப்பட்டு வெளிவந்தன. படிப்படையாக குருமார் சந்நியாசிகளைத் தவிர்ந்த ஏனையோரும் கற்றுக்கொண்டார்கள். அறிவு எங்கும் பரவிற்று. மனிதனுடைய மன உற்சாகம் உயரப்பறக்கவே அவன் சிற்பக் கலையிலும், இலக்கியத்திலும், கல்வியிலும் வியக்கத்தக்க பெரும் தொழில்களைச் செய்துமுடித்தான்.

ஒரு பழையகால அச்சகம்



(அ) இலக்கியம்

பல தேசங்களில் வசித்துவந்த அறிஞர் கிரேக்க உரோம பாஷா இலக்கியங்களைப்படித்து பின்பு தாமும் இலக்கிய நூல்களை எழுத ஆரம்பித்தனர். இதுகாலவரையும் அறிஞர் இலத்தீன் மொழிகளி

லேயே நூல்களை எழுதிவந்தனர். ஆனால் இக்காலந்தொடக்கமாக பிற பாஷைகளிலும் நூல்கள் தோன்றின. வாழ்க்கையிலுள்ள இன்ப துன்பங்களிலும், இயற்கையின் வனப்புகளிலும், தமது கவனத்தைச் செலுத்தினர். இத்தாலிய தேசத்திலே, பெற்ருக (Petrarch), ரசோ (Tasso), ஆதியோரும், ஸ்பானிய தேசத்திலே, மத்தியகால மானியமுறையை கேலிசெய்யும் "டொன் குயிக்கோ" என்னும் நூலை எழுதியவராகிய கேர்வாந்தெஸ் (Cerventes) என்பவரும் பிரான்சு தேசத்திலே றபெல்லே (Rebelais) ஆதியோரும் ஆங்கில நாட்டிலே செகப்பிரியர் (Shakespear) எனப்படும் பெரியாரும், இக்காலத்தின் பெயர்பெற்ற எழுத்தாளராவர்.

(ஆ) கட்டடக்கலை

பழையகால கிரேக்கரும் உரோமரும் அழகிய கட்டடங்களைக்கட்டி எழுப்பினர். அவர்களின் பேரிராச்சியங்கள் அழிந்தபின் இவ்வகையான கட்டடங்கள் முன்போலக் கட்டப்படவில்லை. மத்தியகாலத்திலே வேறு ஒரு இரீதியான கட்டடங்கள் எழுந்தன. "கொதிக்" கட்ட



அர்ச். பேதுருவானவர் தேவாலயம்

இலக்கணங்கள் ததும்பி விளங்கிய பாரிய ஆசனக் கோயில்களும் (கதீட்றல்) அக்கோயில்களிலே உள்ள வர்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்ட கண்ணுடிச் சாளரங்களும், இச்சித்திரக்கலையின் உயர்நிலையை மத்திய

காலம் அடைந்திருந்தது என்பதைக் காட்டுகின்றன. ஆனால் மத்திய காலத்திற்குப்பின் உண்டான இலக்கிய மறுமலர்ச்சியால் கிரேக்கரினதும் உரோமரினதும் கட்டடங்களின் இலக்கணங்கள் திரும்பவும் தோன்றிச் சர்வ சாதாரணமாயின. "டொறிக்", "அயோனியன்", "கொறிந்தியன்" எனும் கட்டட இரீதிகள் வழங்கலாயின. கிரேக்கரின் இரீதியான கற்றூண்களும், உரோமரின் இரீதியான கல் வில்லுகள், மூடுசாந்துக் கூரைகள் உடைய கோயில்கள் பல கட்டி எழுப்பப்பட்டன. இம்மறுமலர்ச்சி காலத்தின் சித்திரக்கலை இயக்கத்தினால் பாப் பரசர்மாரும் உந்தப்பட்டிருந்தனராதலால் தைபர் நதிக்கரையோரத்தில் அர்ச்சியசிஷ்ட பேதுருவானவரின் 'பசலிக்கா' எனப்படும் பிரதம தேவாலயம் இக்காலக் கலையின் உயர் சின்னமாகக் கட்டி எழுப்பப்பட்டது. உலகத்திலே பெயர்பெற்ற சித்திர விற்பன்னருள் இருவராகிய மைக்கல் ஆஞ்சலோவும், றபாயேலும் இக்கோயிலைக் கட்ட உதவி புரிந்தனர். அவர்கள் தீட்டிய சித்திரப்படங்களும் சிற்பங்களும் அர்ச். பேதுருவின் தேவாலயத்துக்குப் பொன்றுக் கீர்த்தி அளிக்கின்றன.

(இ) சிற்பங்களும் படங்களும்

அழகிய சிற்பச்சிலைகள் செய்வதில் கிரேக்கர் பெயர்பெற்றவர். மத்தியகாலத்திலே செய்யப்பட்ட சிற்பங்களும் படங்களும் சமயத்துடன் சம்பந்தப்பட்டன. இலக்கிய மறுமலர்ச்சிக்கால சிற்பநிபுணரும் சித்திர விற்பன்னரும் பழைய கிரேக்கருடைய அழகிய சிற்பச் சித்திர வேலைகளைப்போல சிறப்பான வேலைகளைச் செய்து முடித்தனர். மானிட உருவத்தைக் கூர்ந்து அவதானித்து அதைப்போல பளிங்குக் கற்களிலும் இரட்டுப் புடவைகளிலும் உருவங்களை அமைத்துத் தமது திறமையை விளக்கிவைத்தனர். மைக்கல் ஆஞ்சலோ ஆதியோர் இயற்றிய வேலைப்பாடுகளில் பழைய கிரேக்க சித்திரவிற்பன்னரின் பெருமை பிரதிபிம்பித்தது. லியனுடோ டா வின்சி (Leonado da Vinci) உருபென்ஸ் (Rubens) வெலஸ்குவெஸ் (Velasquez) ஆகியோர் தாம் வரைந்த படங்களில் அக்காலத்தில் நிலவிய மறுமலர்ச்சியை மிளிரச் செய்தனர். மைக்கல் ஆஞ்சலோ செய்த சிறந்த சிற்பங்களில் மிகப் பெயர்பெற்றது "பியற்ரே" என்ற பெயர் உடைய சிற்பமேயாம். (Pieto) சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட மகனை மரியம்மாள் ஏந்திநிற்கும் பாவனையாக அச்சிலை செய்யப்பட்டிருக்கின்றது. அவர் வரைந்த சிறந்த படங்களுள் "பொதுத்தீர்வை" (Last Judgement) யைக் குறிக்கும் படம் பெயர் பெற்றது.

இத்தாலி தேசத்திலிருந்து இப்புத்துணர்ச்சி அல்ப்ஸ் மலைக்கு அப்பாலுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் பரந்தது. அத்துடன் வாழ்க்

பியற்ரே—மைக்கேல் ஆஞ்சலோ



கையில் மனிதனுக்கு உண்டாகிய இன்பம், இலக்கிய கல்வி முதலிய வற்றில் எழுந்த உலக்கம் ஆகிய உணர்ச்சிகளும் அத்தேசங்களிற் பரவின.

பயிற்சி

1. உரோமரின் சிற்திருத்தம் ஐரோப்பா தேசத்திலிருந்து எப் போது மறைந்தது?
2. அறிவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி எந்த நூற்றாண்டில் ஆரம்ப மானது?
3. மத்தியகாலங்களில் யாராலே கல்வி ஊட்டப்பட்டு வந்தது?
4. உரோமரின் பண்பாடும் சிற்திருத்தமும் ஐரோப்பாவில் எப் பகுதிகளில் இக்காலங்களில் காப்பாற்றப்பட்டு வந்தன?
5. இப்பண்பாட்டைப்பற்றிய அறிவு இத்தாலிக்கு எப்படி எப் றியது?

6. 'புது ஜனனம்' என்று கூறப்படும் இயக்கத்தை இத்தாலியரி டையில் தூண்டி உந்திவிட்ட ஒரு விசேஷ சம்பவம் எது?
7. இம்மறுமலர்ச்சியின் முக்கிய இரு குணங்குறிகள் எவை?
8. அறிவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கு புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட எப்பொருள் பெருந்துணை புரியலாயிற்று?
9. அறிஞர் எப்பாஷைகளில் இலக்கியங்கள் எழுதத் தொடங் கினர்?
10. பின்வரும் ஒவ்வோர் தேசத்திலும் இக்காலத்தில் வசித்த ஓர் பெரும் எழுத்தாளரின் பெயரைக்குறிக்க: (அ) இத்தாலி (ஆ) ஸ்பானியா (இ) இங்கிலாந்து (ச) பிரான்சு.
11. இக்காலத்தில் வசித்த உலகப் பிரசித்திபெற்ற இரு சித்திர விற்பன்னரின் பெயர்களைத் தருக.
12. இம்மறுமலர்ச்சிக் காலத்தின் கட்டட சாஸ்திரத்தின் உயர் சின்னமாக விளங்கும் ஓர் கட்டடம் யாது?
13. இக்காலத்தில் நிறைவுபெற்ற (அ) ஒரு சிற்பம் (ஆ) ஒரு படம் எது எனக்குறிக்க.

டான்ரே—லெயனார்டோ டா வின்சி

டான்ரே

டான்ரே என்றும் டாவின்சி என்றும் பெயருடைய இருபெரும் கல்விமான்களின் சிலிய வரலாற்றையும் அவர்கள் எழுதிய நூல்களை யும் இப்போது சற்று ஆராய்வோம். டான்ரே மத்தியகால அறிஞர் களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவதுபோல் டாவின்சியும் "புனர் ஜனன" காலத்துக்கு அவ்வாறு விளங்குகின்றார்.

டான்ரே என்பவர் புளோறன்ஸ் நகரத்தில் கி. பி. 1265-ம் ஆண்டில் பிறந்தார். அக்காலத்தில் இத்தாலிதேசத்தில் தமது ஆட்சியை நிறுவ பாப்பரசரும், பேரரசரும் தம்மிடையே போட்டி இட்டுக் கொண்டனர். இக்காலத்தில் இத்தாலி தேசத்திலே தனித்தனி ஆட்சி நிறுவப்பட்ட அநேக நகர அரசாங்கங்கள் செழித்து ஓங்கியிருந்தன. இவைகளின் செல்வாக்குக்கு மேல்நாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்குமி டையே நடந்த வர்த்தகமே காரணமாகும். புளோறன்ஸ், ஜெனேவா, வெனிஸ் நகரங்கள், இந்நகரங்களுள் பெயர்பெற்ற மூன்று எனக. இந்நகர வணிகர்பெருமக்கள் கலைகளையும் இலக்கியங்களையும் ஆதரிக் கும் பெரும் வள்ளல்களாய் விளங்கினர். டான்ரேயின் காலத்தில் புளோறன்ஸ் நகரத்தில் பலவகைக் கலாசாலைகள் இருந்தன. இவரும் இக்கலாசாலைகள் ஒன்றில் பழைய உரோமப் புலவர்கள் இயற்றிய செய்யுள்கள் யாவற்றையும் ஆர்வத்துடன் கற்றுக்கொண்டார். வாலிப

ரும் டான்ரே இருந்த காலத்தில் பெயாத்திரிஸ் (Beatrice) என்னும் ஒரு யுவதியைக் காதலித்தானுயினும் அவளை மணஞ்செய்ய முடிய வில்லை. எனினும் அவளையே என்றென்றும் நினைத்து தன் மனக் கோயிலிலுள்ள தெய்வமென இறுதிவரையும் மதித்துவந்தார். உள் நாட்டுக் குழப்பத்தினுலே தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த காலத் தில் தனது நேரத்தை செய்யுள் எழுதுவதில் செலவழித்தார். "தெய்வீக இன்பியல் நாடகம்" என்ற (Divine Commedy) செய்யுள் பரலோக பிரதேசத்தில் தான் காதலித்த பெயாத்திரிஸ் எனும் பெண் தனக்கு வழிகாட்டிக் கூட்டிச்சென்ற பான்மையாக அழகாக எழுதப்பட்டுள்ளது.

டான்ரே அக்காலத்தின் மக்களின் ஓர் எடுத்துக்காட்டாக விளங் கினர். மத்தியகால ஐரோப்பாவுக்கும் தற்கால ஐரோப்பாவுக்குமி டையில் நின்று, அவர் மத்தியகாலத்தில் சிறப்பானவற்றை எடுத்துக் காட்டுவதுமல்லாமல் அவர் கிரேக்க உரோம் இலக்கிய நூல்களின் புத்துணர்ச்சியால் பயன்பெற்றதாகவும் தோற்றுகிறது. இச்செய்யுளை எழுதியமுறையில் அவர் வேர்ஜில் (Vergil) முதலாம் சிறந்த இலக்கிய பாஷா ஆசிரியர்களைப் பின்பற்றினரேயாயினும், அதில் அடங்கிய சமய சம்பந்தமான அபிப்பிராயங்கள் அர்ச். தொம்மையார் எழுதியவையை ஒட்டியே வரையப்பட்டனபோலத் தோன்றுகின்றன. ஆகவே இச்செய் யுள்ளானது மத்தியகால எண்ணங்களையும் போதனைகளையும் எடுத்து விளக்கிக்காட்டுவதாகக் கருதலாம். இவர் மேலும் அரசாட்சிமுறையைப் பற்றியும் எழுதியுள்ளார். அதில் ஒரு பேரரசனின் கீழ் உலகம் முழு வதும் சுயேச்சையும் அமைதியுமுடையதாய் விளங்கத் தான் காண்ப தாகக் குறிப்பிட்டுள்ளார். டான்ரே மத்தியகாலத்தில் வசித்தவர்களுள் மிகப் பெயர்பெற்ற ஒருவராயினும் தற்காலத்தவரின் உற்சாகமும் அவரிடத்தில் விளங்கியது. தங்கள் சொந்த பாஷையிலே முதன் முதல் இலக்கிய நூல்கள் வரையத் தொடங்கிய ஐரோப்பியர்களுள் இவரும் ஒருவர். இவர் எழுதியது இத்தாலிய பாஷையிலேயே. இதற்கு முதல் கற்ரோரின் பாஷை இலத்தின் பாஷையாம்.

லெயனேடா டா வின்சி

டான்ரேயின் மனப்பான்மை மத்தியகால மனப்பான்மையைப் போன்றது. ஆனல் லெயனேடா டா வின்சி என்பவரின் மனப்பான் மையோ தற்காலப்பான்மையானது. இலக்கிய புத்துணர்ச்சிக் காலத் தின் தவப்புதல்வர் இவர் எனினும் பெறும். புதுப்புதுப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலுடையவர். சங்கீதத்திலும், சிற்பத்திலும், படம்வரைதலிலும், பொறியியல் அறிவிலும், தத்துவ ஞானத்திலும் இன்னேரன்ன பற்பல ஆற்றல்களிலும் சிறந்தவர். புளோறன்ஸ் நகரத்தில் 452-ம் ஆண்டு பிறந்து, டிவின்சி கல்வியிற் சிறப்

புற்று விளங்கியதால், அந்நகர அதிகாரியாகிய லொறென்சோ டிமெ டிச்சி என்பவரிடம் முன்னும் அதன்பின்பு மிலான்டியூக் பட்டவர்த் தனரிடமும் வேலைக்கமர்ந்தார். அவர் வரைந்த படங்களுட் சிறந்தது "மோனலிச" என்னும் படமாகும். அப்படத்தில் வரையப்பட்ட மாதின் புன்னகை வசிகரத்தன்மைமிக்கது. மேலும் அவர் வரைந்த கடைசிப் போசனம் என்னும் படம் பக்தியும் வணக்கமும் ஊட்டுவது. பிற்கால போர்ச்சாதனங்களாகிய சுழல் துப்பாக்கிகளையும், ஆகாயக் கப் பல்களையும், போர்த்தாங்கிகளையும், மோட்டோர் இரதங்களையும் அவர் தமது அறிவின் வன்மையால் யூகித்து அறிந்து அவற்றைப்போன்ற உருவங்களை அக்காலத்திலேயே செய்து காட்டினர். புதியன செய்யும் ஆற்றல்படைத்த சிறந்த உலகவிற்பன்னர்களுள் இவரும் ஒருவராவர்.

பயிற்சி

இடை வெளிகளை நிரப்புக:

1. டான்ரே.....நகரிலே.....-ம் வருடத்திலே பிறந்தார்.
2. அவர் ஓர்.....சேர்ந்துகொண்டதால் தனது நகரில் இருந்து.....ப்பட்டு வாழ்ந்துவந்த காலத்தில் அவர் எழுதிய நூல்களில் பெயர்பெற்ற.....என்னும் செய்யுளை எழுதினர்.
3. இந்த செய்யுளில் நமக்கு.....காட்சியைத் தருகின்ருர்.
4. அவர் எழுதியவற்றுக்கு வேண்டிய ஊக்கத்தை..... .....முதலிய சிறந்த இலக்கிய பாஷா ஆசிரியர்களிட மிருந்தும், சமய அபிப்பிராயங்களை.....இடம் இருந்தும் பெற்ருர் எனக் கருதப்படுகிறது.
5. தனது காலத்திற் தோன்றிய.....புலவர் என டான்ரே கருதப்படுகிறர். அவர்.....ஐரோப்பாவுக் கும்.....ஐரோப்பாவுக்கும் உள்ள இடைக் காலத்திலே தோன்றினர்.
6. தமது.....பாஷையில் எழுத முதலில் தொடங்கிய ஐரோப்பிய எழுத்தாளருள் ஒருவர் டான்ரே.
7. டான்ரே எவ்வாறு.....கால பான்மையைச் சார்ந் திருந்தனரோ அவ்வாறே லெயனேடா டா வின்சியும்..... .....கால பான்மையைச் சார்ந்திருந்தார்.
8. லெயனேடா டா வின்சி.....வகை ஆற்றல் படைத்தவராயும்.....கண்டுபிடிக்கும் வல்லமை உடையவராயும் விளங்கினர்.

9. டா வின்சி வரைந்த படங்களுற் சிறந்தது.....அவர் மேலும்.....போசனம் எனப்படும் படத்தையும் வரைந்தார்.

10. அவர் தற்கால போர்ச்.....ஆகிய சுழல் துப்பாக்கி கள் ஆகாயக் கப்பல்களை ஊகித்து அறிந்து அவற்றைப்போன்ற .....செய்து காட்டினார்.

(ஈ) புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பொருட்கள்

முன்கூறப்பட்ட பகுதிகளில் எவ்வாறு ஐரோப்பாவில் ஒரு புதிய உணர்ச்சி தோன்றியதென்றும் மத்தியகால மனிதனின் மனமானது எவ்வாறு மாற்றமடைந்து புது எண்ணங்களை ஏற்றுக்கொண்டதென்றும் படித்துள்ளோம். இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பொருட்கள் எவ்வாறு ஐரோப்பிய சமூகத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தனவென்றும் அவற்றின் பயனுக எவ்வாறு இந்நாடுகள் தற்கால அரசியல் முறைகளில் புகுத்தப்பட்டனவென்றும் படித்துக்கொள்வோம்:

(1) அச்சு வேலை

முன் ஒரு அத்தியாயத்தில், சீனர் தமது சரித்திர காலத்தின் முற்கூற்றில் அச்சடிக்கும் வித்தையை அறிந்திருந்தனரெனப் படித் திருக்கிறோம். ஆனல் இந்த அச்சுவித்தை ஐரோப்பாவுக்கு 1450-ம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்பு எழுதப்பட்டன வெல்லாம் கையால்லேயே எழுதப்பட்டன. கையால் ஒரு நூலை எழுது வது நீடித்த காலமெடுப்பதுமல்லாமல் அது சுலபமான வேலையுமன்று. கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த சந்நியாசிகள் தங்கள் மடங் களில் பழைய கல்வியறிவைக் காப்பாற்றிவந்தனர். ஆனல் புத்தகங் கள் மிகக்குறைவாகவும் அவற்றின் விலை அதிகமாகவும் இருந்ததி னல் சாதாரண மனிதருக்கு அவை கிடைப்பது அரிதாயிற்று. மேலும் அவர்களுள் அநேகர் வாசிக்கவும் எழுதவும் தெரியாதவர். அநேக புத்தகங்கள் அடங்கிய புத்தகசாலையை தனவந்தர் வீடுகளிலும் சந்நி யாச மடங்களிலுமதான் காணக்கூடும். எப்போது ஐரோப்பாவில் அச்சுக்களை சொற்கள் எழுத உபயோகித்தனரெனக் கூறமுடியாது. ஆனல் 1450-ம் ஆண்டில் மெயின்ஸ் நகரவாசியாகிய ஜோன் குட்டன் பேர்க் என்பவர் மரத்தினல் செய்யப்பட்டதும், கூலத்துப் பின்பு சேர்க்கக்கூடியதுமான அச்சுகளை உபயோகித்தார் என அறிவோம். அதன்பின்பு விரைவில் அச்சுக்கூடங்கள் தொகையிற் பெருகின. புத்தகங்களும் மலிந்தன. இதுதான் இலக்கிய மறுமலர்ச்சிக் கால மானதால் அநேக கிரேக்க இலத்தின் நூல்களும் வெளிவந்தன. கடதாசியால் அச்சிடும் வழக்கமும் உண்டாயிற்று. இது பப்பிறஸ்

புல்லிதழிலோ அல்லது மிருகங்களின் தோல்களிலோ அச்சிடுவதிலும் சுலபமானதால் நூல்கள் கடதாசிகளில் அச்சிடப்பட்டு வெளியேறின.



ஜோன் குட்டன் பேர்க்

அச்சுவித்தை கண்டுபிடிக்கப்பட்டதன் முக்கியத்துவம்

அச்சுவித்தை கண்டுபிடிக்கப்பட்டதனல் விரும்பிய புத்தகங்கள் பெறக்கூடியதாய் இருந்தன. அவை மலிவாகவும் விற்கப்பட்டன. இதன் பயனுகஅறிவு எங்கும் பரவிற்று. பொதுமக்கள் புத்தகங்களை வாங்கி அதை வாசித்து, அதில் எழுதப்பட்டுள்ளனவற்றைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினர். இதற்கு முன்பு, புத்தகங்களிலே உள்ள வற்றை பிறர் சொல்லி விளக்கங்கேட்டவர்கள் இதன் பின்பு தாமே அப்புஸ்தகங்களை வாசித்து அதன் விளக்கங்களைப்பற்றி சிந்தித்து விவா திக்கவும் தொடங்கினர். மத்தியகாலங்களில் அறிஞர் எவரெனில் சந் நியாசிகளே. ஆனல்அச்சுவித்தை பரவியதன்பின்பு சந்நியாசிகளும் பிறர் பலரும் அறிவுடையவராய் விளங்கினர்—கல்வியும் பரவிற்று.

பயிற்சி

1. அச்சுவித்தை அறியப்படுமுன் புத்தகங்கள் எவ்வாறு வெளி வந்தன?
2. அச்சுகளை முதல் முதல் சொற்களை அச்சிட ஐரோப்பாவில் உபயோகித்தவர் யார்?
3. அறிவில் உண்டாகிய புத்துணர்ச்சி அச்சுவித்தையால் எவ் வாறு பயன்பெற்றது?
4. அறிவு சந்நியாசிகளின் பொருளாக இருந்த நிலைமையை அச்சுவித்தை எவ்வாறு மாற்றிற்று?
5. அச்சுவித்தை வேறு எவற்றைப் பரப்ப உதவிற்று?

(2) வெடிமருந்து

வெடிமருந்தின் உபயோகமும் சீனர் பழையகாலந்தொட்டே அறிந்திருந்தனர். வெடிமருந்தை உபயோகித்து அவர்கள் வீஸ் யாட்டு வெடிகளையும் துப்பாக்கிகள், துவக்குகளையும் உபயோகித்தனர். 13-ம் நூற்றுண்டிலேதான் ஐரோப்பாவில் வெடிமருந்து பயன்படுத் தப்பட்டது. அதன் பின்புதான் துவக்குகளும் துப்பாக்கிகளும் போர் முனையில் உபயோகிக்கப்படலாயின.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதன் முக்கியத்துவம்

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதால் ஐரோப்பாவில் சமூக முறைகளிலும் அரசியல் முறைகளிலும் மாற்றங்கள் உண்டாயின. போர் முறையை அது முற்றிலும் மாற்றி அமைத்தது. இதன் முன்பு சேனைகள் சண்டை செய்வதென்பது இரு சேனைகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிக் கைகலத்தலேயாம். ஆனல் இப்போது தூரத்திலி ருந்து துப்பாக்கிப்பிரயோகஞ் செய்ததன்பின்பே ஒன்றையொன்று தாக் குதல் நடைபெறுகின்றது. மேலும் வெடிமருந்துப் பிரயோகத்தினல் கோட்டையின் அரணையும், கேடயங்களின் பாதுகாப்பையும் நம்பியி ருந்த பிரபுக்களும் ''நைற்'' பட்டவர்த்தனர்களும் ஆபத்துக்குள்ளா னர்கள். இவ்வாறு பிரபுக்களின் ஆதிக்கத்துக்கும் ஒரு முடிவு வந் தது. இவ்வாருக, அரசர்களின் செல்வாக்குக் கூடிக்கொண்டே வந்தது. ஒரு தேசத்திலுள்ள வெடிமருந்து அத்தேச அரசரின் கட் டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்ததால் அரசர்கள் தம்முடன் முரண்பட்ட பிரபுக்களை அடக்கிவைக்க பலமுள்ளவர்களானர்கள். இப்படியாக ஓர் அரசின் ஆட்சியின்கீழ் தேசங்கள் ஒற்றுமைப்பட்டும் பலம்பெற்றும் வந்தன. அரசபதவியிலமைந்தவர்களைத் தங்கள் தங்கள் பதவிகளில் திடப்படுத்தவும் தேசிய அரசாங்கங்களை நிறுவவும் வெடிமருந்தின் உபயோகம் பெரிதும் பயன்பட்டது.

பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக:

1. வெடிமருந்து ஐரோப்பாவில்.....ம் நூற்றுண்டளவில் உபயோகிக்கப்பட்டது.
2. அது கண்டுபிடிக்கப்பட்டதால் ஐரோப்பாவி.....முறைக ளிலும்.....முறைகளிலும் மாற்றங்கள் உண்டாயின.
3. அது.....முறையை முற்றிலும் மாற்றி வைத்தது.
4. அது.....ஆதிக்கத்துக்கு முடிவு கொண்டுவந்தது.
5. .....பதவியலமைந்தவரை அப்பதவியில் திடப்படுத்த வும்.....அரசாங்கங்களை நிலைநாட்டவும் வெடிமருந்துப் பிரயோகம் உதவிபுரிந்தது.

(3) மாலுமியின் திசையறி கருவி

திசையறிகருவியைப்பற்றி கி. பி. 5-ம் நூற்றுண்டிலேயே சீனர் ஏதோ அறிந்திருந்தனர் என அறிகிறேம். ஐரோப்பாவில் 12-ம், 13-ம் நூற்றுண்டுகளிலேதான் இதைப்பற்றி அறிய வந்தனர். இந்தக் கருவியில் ஒரு காந்த ஊசி இருக்கிறது. இந்த ஊசி எப் போதும் வடக்கையே சுட்டிக் காட்டும். மாலுமிகள் இதை உபயோ கிக்கத் தொடங்குமுன் இரவில் நட்சத்திரங்களின் உதவியினலும் பக லில் சூரியனைக்கொண்டும் தாங்கள் சென்றுகொண்டிருக்கும் இட நிலையத்தை அறிவார்கள். ஆனல் அவர்கள் இவற்றின் உதவியைக் கொண்டு அதிக தூரம் நடுக்கடல்களின் ஊடாகப் பிரயாணம் செய் யத் துணியவில்லை. அப்படிப் பிரயாணம் செய்தால் திசையெதுவன அறியாது ஆபத்துக்குட்பட்டு மாண்டுபோக நேருமெனப் பயப்பட்டார் கள். ஆனல் திசையறிகருவியினுதவியால் வடக்குத் திசையைப் பார்த்து அதிலிருந்து மறு திசைகளைக்கண்டு எந்த நடுச் சமுத்திரத் திலிருந்தாலும் நிலையத்தையும் திசையையும் திடமாக அறியக்கூடி யதாயிருந்தது. மாலுமிகளின் திசையறி கருவி கடற் பிரயாணத்தின் தன்மையை முற்றிலும் மாற்றி அமைத்துவிட்டது. இக்கருவியை உப யோகிப்பதற்குமுன் பிரயாணிகள் கரை ஓரமாகவே பிரயாணம் செய்த னர். இப்போ நடுச்சமுத்திரங்களின் ஊடாக பிரயாணஞ் செய்யக்கூ டிய பாரிய கப்பல்கள் உபயோகிக்கப்படுகின்றன. உருவத்திலும், பலத் திலும் இவைகள் முன்னிருந்தவற்றிலும் சிறந்தன. இவ்வாறு புதுப் புது தேசங்களை கண்டு பிடித்தலுக்கு திசையறி கருவி மிகவும் உதவி யாயிருந்தது.

பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக:

1. திசையறிகருவியில் உள்ள ஓர் ஊசி எப்போதும்..... .....காட்டும்.
2. இதன் உதவியைக் கொண்டு மாலுமிகள் கடலின் மத்தியி லும் .....அறியக்கூடியவர்களாய் இருந்தார்கள்.
3. திசையறி கருவி.....தன்மையை முற்றிலும் மாற்றி அமைத்தது.
4. .....பிரயாணங்கள் இப்போ செய்யக்கூடியதாய் இருந்தது,
5. .....நாடுகளைக் கண்டுபிடிக்க திசையறிகருவி உதவியா யிருந்தது.


புதுநாடுகள் கண்டுபிடிப்பதற்குச் செய்த பிரயாணங்கள்

மத்தியகாலத்தில் வசித்த மனிதருக்குத் தங்கள் தேசத்திற்குப் புறத்தே உள்ள நாடுகளைப்பற்றிய அறிவு இருக்கவில்லை. விஞ்ஞானக்

கலே மத்தியகாலத்தில் முன்னேறவுமில்லே. ரொலெமி (Ptolemy) என்னும் கிரேக்க அறிஞர் பூமியைப்பற்றிக் கூறியிருந்ததையே அக்கால அறிஞரும் அறிந்திருந்தனர். பூமி தட்டையானதென்றும் அதிகதூரம் பிரயாணஞ் செய்தால் மனிதர் உலகின் விளிம்பையடைந்து கீழே விழுந்துவிடுவார்களென்றும் அவர்கள் எண்ணினர்கள். மேலும் தூரத்திலிருந்த கடல்களிலே பயங்கர மிருகங்கள் வசித்தன வென்றும் மத்தியரேகை வலயத்தில் உள்ள கடல்நீர் கொதிநீரென்றும் நம்பியிருந்தனர். ஆனதினுல் அதிக தூரத்திற்குக் கடற்பிரயாணஞ் செய்ய அஞ்சினர். ஆனுல் சிலுவைப்படை யுத்தத்தின்பின்பு கீழ்நாடுகளேப்பற்றி மேல்நாட்டார் சற்று அறிந்திருந்ததினுல் வர்த்தகம் ஓரளவுக்கு நடந்து வந்தது. மார்க்கோபோலோ எழுதியவற்றினுல் மேல்நாட்டாரின் மனதில் கீழ்நாடுகள் அதிக செல்வம்படைத்த நாடுகள் என்ற நம்பிக்கையும் வளர்ந்து வந்தது.

புதுநாடுகள் கண்டுபிடிப்பதற்குக் காரணங்கள்

மறுமலர்ச்சிக்காலத்தில் மனிதர் வீர உணர்ச்சியினுல் உந்தப்பட்டது ஒரு காரணமாயிருப்பினும் இப்பிரயாணங்கள் வர்த்தக நோக்கத்துடன் செய்யப்பட்டனவென்பது வெள்ளிடைமலே. கிழக்கு நாடுகளுடன் வர்த்தகஞ் செய்துவர ஓர் புதுவழி கண்டுபிடிப்பது அவசியமாயிற்று. மேல்நாட்டார் தமது உணவை உருசிகரமானதாக்க ஏலம், கராம்பு, கறுவா முதலிய வாசனேப் பொருட்களே எவ்விதத்திலும் பெற்றுக்கொள்ள விரும்பினர். இவ்வாசனேப் பொருட்களே இந்தியா, இலங்கை, கிழக்கிந்திய தீவுகள் ஆகிய நாடுகளிலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தது. சிலுவைப்படைப் போருக்குப்பின் மேல்நாடுகளுக்கும், கீழ்நாடுகளுக்கும் வர்த்தகம் அதிகம் நடந்து வந்திருந்ததால் மேல்நாட்டாருக்குக் கீழ்நாட்டு ஆடம்பரப் பொருட்கள் சில இன்றியமையாதனவாயின. இவ்வர்த்தகப் பொருட்கள் மூன்று பிரதான வழிகளால் கொண்டுசெல்லப்பட்டன. ஒருவழி பார்சியாக் குடாவிலிருந்து யூபிறட்டிஸ், ரைகிறிஸ் பள்ளத்தாக்கின் வழியாக மத்தியதரைக் கடலுக்கு இட்டுச்சென்றது. மற்றது செங்கடல் வழியாக எகிப்துக்குக் கொண்டு சென்றது. மூன்றும் வழி ராட்ராஸ் வசித்த மத்திய ஆசிய பிரதேசங்களின் ஊடாகக் கருங்கடலின் ஓரத்திற்கும், அதிலிருந்து கொன்ஸ்தாந்தி நோப்பிளுக்கும் சென்றது. கடல்வழிகளால் அராபியர் வர்த்தகப் பொருட்களேக் கொண்டுவந்ததால் கொன்ஸ்தாந்தி நோப்பிளும் அலெக்சாந்திரியாவும் வர்த்தகத்திற்குப் பெயர்பெற்ற மத்திய நகரங்களாயின. மத்தியதரைக் கடலில் வர்த்தக தயாரிப்புகள் அதிகம் நடைபெற்றன. வெனிஸ் நகரமும், ஜெனெவா நகரமும் வர்த்தக ஸ்தலங்களாய் ஐரோப்பாவுக்கு ஆசிய நாடுகளின் பொருட்களேப் பெற்றுக்கொடுக்கப் பெரிதும் உதவின. ஆனுல் ராட்ராரின் பேரிராச்சியம் அழிவுற்றதன் பின்பு மத்திய ஆசியாவும் மேற்காசியா



கீழ்நாடுகளுக்கும் மேல்நாடுகளுக்குமிடையில் இருந்த இரு கடல் வழிகள்


வும் துருக்கியரால் அடிப்படுத்தப்பட்டன. அதன்பின்பு இப்பிரதேசங் களினூடாக ஐரோப்பிய நாடுகள் வர்த்தகஞ் செய்வது கடினமாய் இருந்தது. அலெக்சாந்திரியாவையும், கொன்ஸ்தாந்திநோப்பிளையும் துருக்கியர் கைப்பற்றவே ஐரோப்பியர் வர்த்தகஞ் செய்துவந்த முக் கிய வழிகள் அடைபட்டன. எனினும் வர்த்தகம் ஒரு அளவில் நடை பெற்றுவந்ததெனலாம். இது இவ்வாறுக ஐரோப்பாவிலே புதிதா கச் செல்வாக்குற்று விளங்கிய போர்த்துக்காலும், ஸ்பானிய தேசமும் கீழ்த்தேச வர்த்தகத்தில் தாங்களும் பங்குபெற ஆசைகொண்டன. இக்காலத்தில் பூகோளத்தைப் பற்றிப் புதிய அறிவு எங்கும் பரவிற்று. பூமியின் புதிய படங்களும் வரையப்பட்டன. இதன்பயனுகச் சீனு, இந்தியா முதலாம் நாடுகளுக்குச் செல்லப் புதுவழிகளைக் கண்டுபிடித் தலில் இப்புதுச் செல்வாக்குப் படைத்த ஐரோப்பியர் தமது கவனத் தைச் செலுத்தினர்.

வியாபார நோக்கம் மாத்திரம் இவர்களைப் புதுவழிகளைக் கண்டு பிடிக்கத் தூண்டவில்லை, சமயசம்பந்தமான காரணங்களும் இருந் தன. புதுச் செல்வாக்குப்படைத்த போர்த்துக்கேய, ஸ்பானிய நாடு கள் கிறீஸ்தவ சமயத்தை எங்கும் பரப்பவேண்டுமென்ற ஆசையுள்ள னவாயிருந்தன. இவ்வாருகப் பொருளாதார காரணங்களும் சமய காரணங்களும் ஒன்றுசேர்ந்து ஐரோப்பிய தேசத்தவரை உலகத்தின் பல பாகங்களுக்குஞ் செல்லத் தூண்டிநின்றன.

கிழக்கு நாடுகளுக்கொரு புதுவழி கண்டுபிடிப்பதில் போர்த் துக்கால் தேசமும், ஸ்பானிய தேசமும் முன்னணியில் நின்றன.

(ஆ) போர்த்துக்கேயர் கையாண்ட முயற்சிகள்

போர்த்துக்கால் தேசமானது ஐபீரியன் தீபகற்பத்தின் மேற்குப் பக்கத்தில் இருக்குமொரு சிறிய வறியநாடு. அது அத்திலாந்திக் சமுத்திரத்திற்குப் பக்கத்தில் இருக்கின்றது. முன்னெருகாலத்தில் அது ஸ்பானிய நாட்டின் ஒரு பாகமாக இருந்து பின்பு சுய ஆட்சி அடைந்துகொண்டது. இந்தக் காலத்திலேதான் மாலுமிகளின் திசை யறிகருவி மேற்கு நாடுகளில் அறியப்பட்டதும், கப்பல் கட்டும்முறை கள் தீவிரமாகத் திருத்தமடைந்து கடற்பிரயாணத் தன்மைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டதுமாம். ''கப்பலோட்டியாகிய ஹென்றி'' என்றழைக்கப்பட்ட அத்தேச அரசகுமாரன் அரசுகட்டிலேறியதன் பின்புதான் போர்த்துக்கால் ஒரு பேரிராச்சியமாக மாறியது. கப்பல் கட்டுவதற்கும் கப்பலைப் பல கடல்களில் ஓட்டிச் செல்வதற்கும் அவன் பேராதரவு அளித்தான். அவதான நிலையம் ஒன்றைச் சாகிறஸ் என் னும் இடத்தில் நிறுவி பலதேச நிபுணர்களை அங்கே வேலைசெய்ய வதற்கு வரவழைத்தான். ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கப்பலோட்டிகள் அதிகதூரஞ் சென்றனராயினும் இம்மன்னனின் மர




வாஸ்கொடிகாமாவின் பிரயாணம்

ணத்திற்குப் பின்புதான் ஆபிரிக்காவின் தென்முனையை வளைந்து ஓடினர். 1488-ம் ஆண்டு பத்தலோமியோ டயஸ் என்பவர் ஆபிரிக்காவின் தென்முனைக்கு வந்தார். அவ்விடத்திலே கடலின் கொந்தளிப்பு அதிகமாயிருந்ததால் அம்முனையைப் ''புயற்காற்று முனை'' யென்றனர். ஆனல் போர்த்துக்கேய அரசனே அம்முனையை வளைந்து சென்றுல் ஒருகாலம் இந்தியாவுக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையினலே அதற்கு ''நல்நம்பிக்கைமுனை'' எனப் பெயரிட்டான். 1497-ம் ஆண்டில் வாஸ்கொடிகாமா என்பவர் லிஸ்பன் துறைமுகத்தைவிட்டு இம்முனையை வளைந்து சென்று ஓர் அராபிய மாலுமியின் உதவியுடன் இந்துசமுத்திரத்தைக் கடந்து கலிகட் (கள்ளிக்கோட்டை) என்னும் நகரை அடைந்தார். கீழ்நாட்டுக்கு இட்டுச் செல்லும் தனிக்கடல் வழி உண்டு எனும் கனவு நனவாயிற்று. ஐரோப்பியர் இவ்வாறு கிழக்கு நாடுகளுக்கு வரத்தொடங்கியது கீழ்நாடுகளுக்கும் ஐரோப்பிய தேசங்களுக்கும் அப்போது ஊகித்தறியமுடியாத பல விளைவுகளுக்குக் காலாகியது.

போர்த்துக்கேயரின் இம்முயற்சி உலகமானது உருண்டை வடிவமானது என்பது போன்ற பூமியைப்பற்றிய ரொலெமி (Ptolemy) யின் பல கூற்றுகள் பலவற்றின் உண்மையை நிருபித்தது. இதன் பயனுக இரண்டு, மூன்று பாய்கள் கொண்டுசெல்லுங் கப்பல்களை காற்றுவீச்சுக்கெதிராகவும் தூரப்பிரயாணம் போகத்தக்கதாகவும் கட்டத்தொடங்கினர்கள். கிழக்கு நாடுகளைப்பற்றிய புதுப்புது அறிவுகள் ஐரோப்பாவுக்குக் கொண்டுவரப்படவே மறுதேசத்தவரும் வீரச்செயல்கள் செய்ய உந்தப்பட்டனர்.

ஸ்பானியர் கையாண்ட முயற்சிகள்

மகம்மதியருக்கெதிராக நடத்தப்பட்ட பரிசுத்த யுத்தத்தின் காரணமாக ஸ்பானியர் தேசிய உணர்ச்சியுடைய சமுகத்தினராய் விளங்கினர். அரகன் பிரிவின் மன்னனுகிய பேர்டினந்துக்கும், கஸ்ரயில் பிரிவின் இராணியாகிய இசபெல்லாவுக்கும் ஏற்பட்ட விவாகபந்தனமானது இப்பிரிவுகள் இரண்டையும் பலமாக இணைத்து ஸ்பானிய தேசத்தின் உயர்ச்சியை ஆரம்பித்து வைத்தது. கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் என்பவர் ஜெனெவா நகரத்துக்குச் சேர்ந்த ஓர் இத்தாலியர். இவர் மார்க்கோபோலோ எழுதியவற்றுல் மிகவும் உற்சாகப்பட்டு கிழக்குநாடுகளுக்குச் செல்ல ஆசைகொண்டிருந்தார். பழையகால பூகோள சாஸ்திரிகள் சிலர் கொண்டதுபோல பூமி வட்டவடிவமுடையதென்று எண்ணங்கொண்டு கிழக்குத் திசையாகச் சென்றுல் இந்தியாவை அடையலாமென்ற ஆசையுடனும், நம்பிக்கையுடனும் விளங்கினர். இங்கிலாந்து, ஐஸ்லாந்து முதலிய அத்திலாந்திக் கடலில் உள்ள நாடுகள் பலவற்றுக்குப் பிரயாணஞ் செய்தார். மனதிலுள்ள ஆசையை நிறை



வேற்றிவைக்கப் பண உதவி பெறுவதற்குப் பல நாடுகளிலுள்ள செல்வந்தர் சிலரிடஞ் சென்று பொருள்திரட்ட முயன்றார். போர்த்துக்கால், ஸ்பானிய ஆங்கில மன்னர்களிடம் போய் உதவி கோரினு ரெனினும் இவரின் முயற்சி முற்றிலும் பலிக்கவில்லை.

இறுதியாக சாமிநாதர் (டொமினிக்கன்) சபையைச் சேர்ந்த சில சந்நியாசிகளின் உதவியினுல் ஸ்பானிய ஜாணியாகிய இசபெல்லாவின் உதவியைப்பெற்று 1492-ம் ஆண்டு ஆகஸ்ட் மாசம் 3-ம் திகதி சாந்த மரியா, பின்ரா, நீனு என்னும் மூன்று கப்பல்களில் 88 மாலுமிக ளுடன் பிரயாணத்தைத் தொடங்கினர். பெருங்குணம் படைத்த கான் அரசருக்குத் தன்னை அறிமுகப்படுத்திவைக்க ஒரு கடிதத்தை யுங் கொண்டுசென்றார். கனறி தீவுகளைத் தாண்டிப் பல நாட்களாக வும், வாரங்களாகவும் பிரயாணஞ் செய்தும் தரையின் குறிகளைக் கண்டிலர். மாலுமிகள் திகில்கொண்டு குழப்பஞ்செய்யப்போகும் நிலைபரத்தை அடைந்தனரேனும் கொலம்பஸ் தான் மனதிலே கொண்ட பெரும் நம்பிக்கையினுல் அவர்களைச் சமாதானஞ்செய்து கப்பலின் திசையைத் திருப்பாது தொடர்ந்து மேலும் சில நாட்களுக் குப் பிரயாணஞ்செய்யச் சம்மதிக்கச் செய்தார். ஆனுல் விரைவில் நீரில் மிதக்கும் பச்சை மரக்கிளைகளும், பறவைக் கூட்டங்களும் கண் ணுக்குத் தென்பட்டு மனதிற்கு ஆறுதலை அளித்தன. 1492-ம் ஆண்டு ஒக்டோபர் மாசம் 12-ம் திகதி கரை தென்பட்டது. கொலம்பஸ் ஓர் புது உலகைக் கண்டுபிடித்துவிட்டார். ஆனுல் அவர் அதை அப்போது உணரவில்லை. கொலம்பஸ் தரையில் இறங்கி ஸ்பானிய கொடியை அங்கே நாட்டி அது இசபெல்லா இராணிக்குரிய பிரதேசமென அறிவித் தார். இவ்வாறு ஸ்பானிய தேச சரித்திரத்தில் ஓர் புதுப்பாகம் ஆரம்பித் தது. கொலம்பஸ் இந்திய தீவுகளுக்குச் செல்லும் ஒரு புதுவழியைக் கண்டுபிடித்துவிட்டாரெனவும், அத்தீவுகள் இந்திய தீவுகளெனவும் கொலம்பஸ் எண்ணினர். ஆனுல் அத்தீவுகளை நாம் இன்று மேற் இந்திய தீவுகளெனக் கூறுகிறோம். அமெரிக்கோ வெஸ்பூச்சி என் னும் இத்தாலிய பிரயாண விற்பன்னரின் பின்புதான் அமெரிக்கா என்னும் நாமம் இத்தேசத்திற்குக் கொடுக்கப்பட்டது. அவர் இவ்வி டங்களுக்கு அநேக முறைகள் சென்று அவற்றைப்பற்றி எழுதியிருக் கிறார். கொலம்பசுக்குப்பின்பு அவரைப் போன்ற பிரயாண விற்பன் னர் பலர் அங்கே சென்றிருக்கின்றனர். 1497-ம் ஆண்டில் கபட் என் பவர் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு நியூபவுண்லாந்தை அடைந்தார். கப்ரல் என்னும் போர்த்துக்கேயர் 1500-ம் ஆண்டில் பிறேசிலைக் கண்டுபிடித்தார். 1519-ம் ஆண்டில் மகேலன் என்னும் ஸ்பானியர் தென்னமெரிக்காவின் தென்முனையைத் தாண்டிச் சென்று அங்கே மகேலன் தொடுவாயைக் கண்டுகொண்டார்.

புதுநாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதன் முக்கியத்துவம்

புதிதாக இத்தேசங்கள் கண்டுபிடிக்கப்பட்டதனுல் ஐரோப்பாவில் ஏற்பட்ட பலன்கள் பல. இதுகாலவரையும் ஐரோப்பாவில் மிகமுக்கி யம்படைத்த கடல், மத்தியதரைக் கடலே. இதன் கரையில் உள்ள நகரங்களே செல்வமும் ஆதிக்கமும் உடையனவாய் விளங்கிவந்தன. ஆனுல் இதன்பின்பு அத்திலாந்திச் சமுத்திர ஓரத்திலுள்ள தேசங் கள் முக்கியத்துவம் அடைந்தன. இத்தேசங்கள் புதுப்போக்குவரத்து வழிகளின் அருகாமையில் இருந்ததே காரணமாகும். ஜெனேவா, வெனிஸ் முதலியன செல்வாக்கில் தேய்ந்துவர, முற்காலத்தின் பூமி யின் விளிம்பில் உள்ளதென நம்பப்பட்ட இங்கிலாந்து தேசம் வர்த்த கத் துறையில் ஒரு முக்கியமான இடம் வகிக்கத் தொடங்கிற்று. ஸ்பா னிய, போர்த்துக்கேய நாடுகளிலிருந்து மத்திய அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும் குடியேறப் பலர் சென்றனர். சற்றுப் பிற்கா லத்தில் ஆங்கிலேயரும் பிராஞ்சியரும் வட அமெரிக்காவிலே குடியே றினர். புதுக்கண்டங்களிலிருந்த இப்பிரதேசங்களுக்கு ஐரோப்பிய சீர்திருத்தம் இவ்வாறு கொண்டுசெல்லப்பட்டது. ஸ்பானியரும், ஆங் கிலேயரும் குடியேறிய பகுதிகள் பிற்காலத்தில் தாய்நாடுகளுடன் உள்ள தொடர்பை அகற்றிச் சுயாதீனமுள்ள நாடுகளாக விளங்கின. உலகிலேயே அதிபலம்படைத்து இன்று விளங்குகிற ஐக்கிய அமெரிக்கா தேசம் முற்காலத்திலே ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் குடியேறிய பதின்மூன்று சிறுபிரிவுகளாம்.

வாஸ்கொடிகாமா கீழ்த்தேசங்களுக்குக் கடல்மார்க்கமாகச் செல் லும் பாதையைக் கண்டுபிடித்தது ஐயோப்பியர் கீழ்நாடுகளிற் சில வற்றை அடிப்படுத்தவும் அங்கே ஐரோப்பிய நாகரிகத்தைப் பரப்பவும் அடிகோலியது. முதல் போர்த்துக்கேயரும், பின்பு ஒல்லாந்தரும், அதன்பின்பு ஆங்கிலேயர் பிராஞ்சியர் முதலானேரும் கீழ்நாடுகளுக்கு வந்தனர். இதனுலே தேசங்களை அடிப்படுத்தும் முயற்சியால் எழுந்த குடியேற்றநாடுகளும் வர்த்தகத் தகராறுகளினுல் எழுந்த புது அகங் களும் அநேகாநேகம். இப்புதுவழியைக் கீழ்நாடுகளுக்குக் கண்டு பிடித்ததினுல் மேல்நாடுகளின் செல்வம் அதிகரித்தது. வியாபாரமும் வர்த்தகமும் தழைத்தோங்க ஐரோப்பிய நாடுகளின் வாழ்க்கைத் தரமும் மேலேறிக்கொண்டே வந்தது.

பயிற்சி

இடைவெளிகளை நிரப்புக:-

(1) மத்தியகால மனிதருக்குப் பூகோளத்தைப்பற்றி..... எழுதிவைத்தது மாத்திரம் தெரியும்.

(2) பூமி.....என்றே பெரும்பாலார் அக்காலத்தில் எண்ணி இருந்தனர்.

(3) கீழ்நாடுகளைப்பற்றிய அறிவு.....போரின் பின்பும் .....எழுதிவைத்ததன் பின்புமே வளர்ந்தது.

(4) புதுவழிகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பிரதான காரணங்களுள் ஒன்று.....வேறு ஒரு காரணம்.....

(5) 10-ம் நூற்றாண்டிலேயுள்ள வர்த்தகப் போக்குவரத்து வழி .....கையிலேயே இருந்தது. அவர்கள் அதால் பெரும்.....சம்பாதித்தனர்.

(6) போர்த்துக்கால் போன்ற ஐரோப்பிய புதுத்தேசங்கள் இவ் வியாபாரத்தில்.....பங்குபெற விரும்பினர்.

(7) .....போன்ற கீழ்நாடுகளில்.....வாசனைப் பொருட்கள் உண்டாக்கப்பட்டன.

(8) இவ்வாசனைப் பொருட்கள் உணவை.....த் தேவையாயிருந்தன.

(9) ஆனதினாலேயே கீழ்நாடுகளுக்கொரு..... கண்டுபிடிக்கப் பெரும் முயற்சி எடுத்தனர்.

(10) சிலுவையுத்தத்தின் பின்பு போர்த்துக்கால் தேசம்..... க்கு எதிராக ஒன்றுபட்டு நின்றது.

(11) போர்த்துக்கால் தேயத்தின் வளர்ச்சி.....என்று அழைக்கப்பட்ட ஹென்றி இளவரசன் அரசுகட்டில் ஏறிய பின்பே தொடங்கிற்று.

(12) அவ்வரசன்.....கட்டுவதையும்.....செய்வதை யும் உற்சாகப்படுத்தி வந்தான்.

(13) 1488-ம் ஆண்டில்.....என்பவர் நல்நம்பிக்கை முனையை வளைந்து பிரயாணஞ் செய்தார்.

(14) வாஸ்கொடிகாமா லிஸ்பன் துறைமுகத்தை 1497 ம் ஆண்டில் விட்டு இந்தியாவில் உள்ள.....துறை முகத்தை 1499-ம் ஆண்டில் அடைந்தார்.

(15) கொலம்பஸ் பூமி.....என்றும்.....நோக்கிப் பிரயாணஞ் செய்தால்.....நாடுகளுக்கு வரலாம் என் றும் நம்பிக்கையுடனிருந்தார்.

(16) அவர் ஸ்பானிய இராணியாகிய.....ஆதரவைப் பெற்று.....1492.....ம் ஆண்டில் பிரயாணத்திற்குப் புறப்பட்டார்.

(17) 1492-ம் ஆண்டில் ஒக்டோபர் மாதத்தில் கரை கண்டபோது கொலம்பஸ் தான்.....வழி கண்டுவிட்டாரென்று எண்ணி மகிழ்ந்தார்.

(18) அவர் கண்டுபிடித்த தீவுகள் இன்றும்.....என்று கூறப்படுகின்றன ஆனால் அவர்தான் இந்தியாவுக்கு ஒரு... .....கண்டுபிடித்தார் என எண்ணினார்.

(19) கொபெட்.....கண்டுபிடித்தார். கப்ரால்..... கண்டுபிடித்தார். மகேலன்.....தென்பாகத்தை வளைந்து சென்றார்.

(20) அமெரிக்காவானது அங்கே பிரயாணங்கள் செய்து அந்நாட் டைப்பற்றி எழுதிவைத்தவரான.....வின் பின் அப்படிப் பெயரிடப்பட்டது.

நாடுகளுக்குப் புதுவழிகள் கண்டுபிடிக்கப்பட்டதனால் ஆகிய பயன்கள்.

— பயிற்சி

1. புதிய நாடுகளும் பழைய நாடுகளுக்குப் புதிய வழிகளும் கண்டுபிடிக்கப்பட்டதனால் அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஓரத்தில் உள்ள எந்த ஐரோப்பிய தேசங்கள் முக்கியத்துவம் அடைந்தன?
2. ஆங்கிலேயர், பிராஞ்சியர், போர்த்துக்கேயர், ஸ்பானியர் எவ் விடங்களில் உள்ள தேசங்களில் தமது ஆட்சியை நிலைநாட் டினர்?
3. இவ்விடங்களுக்குக் குறிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகள் கொண் டுவந்தன எவை?
4. இந்த ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலுள்ள தொடர்பு புது வழிகளும், இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டதனால் எவ்வாறு பாதிக்கப்பட்டது?
5. இ.ந்து எவ்வாறான பலன்களை மேல்நாடுகளுக்கு அளித்தது.

16–ம் அத்தியாயத்தில் பரீட்சை வினாக்கள்

1. இருட்காலம், மத்தியகாலம்—இவ்விரண்டையும் விளக்குக?
2. இக்காலங்களில் யாரால் அறிவு அழியாது காக்கப்பட்டு வந்தது?
3. கீழே காணப்படும் நிலையங்கங்களின்கீழ் மானிய முறைக்கா லத்தின் வாழ்க்கையைப்பற்றி ஒரு கட்டுரை வரைக:

(அ) பாதுகாப்பின் அவசியம். (ஆ) எவரின் பாதுகாப்பை அண்டினர், பரஸ்பர உதவியாது. (இ) கோட்டையும், அர ணும். (ஈ) பிரபு குடிசனத்திற்குச் செய்தது யாது? (உ) பிரபுவுக்குக் குடிசனங்கள் செய்யவேண்டியிருந்தது என்ன? (ஊ) வயல்கள் எவ்வாறு பண்படுத்தப்பட்டன?

4. மானியமுறையினுல் உண்டான பலன்கள் எவை?
5. இம்முறை அழிந்துபோவதேன்?
6. கத்தோலிக்க திருச்சபையின் ஆட்சிமுறையைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுக?
7. பாப்பரசரும், பேரரசரும் எவ்வெவ்வுரிமைகளை உடையவர்?
8. இவர்கள் இருவருக்கிடையில் உள்ள தொடர்பின் தன்மை யாது? நிநேகபான்மையுடையதா, அன்றேல் பகைத் தன்மையுடையதா?
9. சிறந்த இலக்கிய மொழிகளாகிய இலத்தினையும், கிரேக்கையும் திருச்சபை எவ்வாறு உபயோகித்தது?
10. மத்தியகாலத்திலே உள்ள கல்விபயிற்றும் முறையைப்பற்றி எழுதுக. (அ) எவ்வகையான பள்ளிக்கூடங்கள்? (ஆ) ஆசிரியர் யார்? (இ) எப்பாடங்கள் படிப்பிக்கப்பட்டன?
11. மறுமலர்ச்சிக்காலமென்பது யாது. அதன் முக்கிய குணங்குறிகள் எவை?
12. இத்தாலியை ஐரோப்பாவின் கலாசாலை என ஏன் கூறினர்?
13. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று பிரதான நவீனப் பொருட்கள் எவை? அவற்றுல் மனிதரின் வாழ்க்கையில் ஏற்பட்ட நன்மைகள் எவை?
14. புதுவர்த்தகப் போக்குவரவு வழிகளைக் கண்டுபிடிக்க ஐரோப்பிய நாடுகள் ஏன் ஆவலுற்றன? எத்தேசங்கள் இவ்வியக்கத்தில் முன்னேடிகளாய் விளங்கின? அவைகளின் முயற்சிகளை விளக்குக?
15. புதுவழிகளும், புதுநாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டதால் ஏற்பட்ட பலன்கள் எவை?

17-ம் அத்தியாயம்

இலங்கை—தென்மேற்குத் திசையாக இடம்பெயரல் (கி. பி. 1235—1505)

1. ஆரம்பம் 2. இடப்பெயர்வுக்கான காரணங்கள் 3. முக்கிய அரசியல் அம்சங்கள் 4. அரசியல் வரலாறு I தலைநகர்களிலும் புறநாட்டுப் படையெழுச்சிகளிலும் மாற்றங்கள் 5. அரசியல் வரலாறு II—புதிய மூவிராச்சியங்கள் 6. விவசாயமும் வர்த்தகமும் 7. பௌத்தமும் இந்துமதமும் 8. இலக்கியம் 9. கலை

1. ஆரம்பம்

9-ம், 11-ம் அத்தியாயங்களில் கி. மு. 247 முதல் கி. பி. 1017 வரை நிகழ்ந்த இலங்கைச் சரித்திரத்தைப் படித்தோம். இக்காலம் அநுராதபுரக் காலம் எனப்பட்டது. ஏனென்றுல் சிலகாலந்தவிர இப்பன்னிரு நூற்றுண்டுகளிலும் அநுராதபுரியே இராசதானியின் தலைநகராயிருந்தது. கி. பி. 1017-ல் சோழர் தலைநகரை பொலந்நறுவையில் மாற்றி அமைத்தார்கள். அடுத்த 218 ஆண்டுகளும் பொலநறுவையே இராசதானியின் தலைநகரமாய்த் திகழ்ந்தது. இக்காலம் பொலநறுவைக்காலம் எனப்படும். இக்காலவரலாற்றை 13-ம், 14-ம் அத்தியாயங்களில் படித்தோம். இலங்கையின் பண்டைய வரலாற்றின் இறுதிப்பகுதியை இனி நாம் படிப்போம். இது கி. பி. 1235-ல் நிகழ்ந்த மாகனின் படையெழுச்சியுடன் துவங்கி கி. பி. 1505-ல் போர்த்துக்கீயரின் இலங்கை வருகையுடன் முடிவடைகிறது. இக்காலத்தை ஒரு தலைநகரின் பெயரைக்கொண்டு சுட்டுவது எளிதல்ல. இப்புன்னூறு ஆண்டுகளிலும் தலைநகரங்கள் இடத்துக்கு இடம் மாற்றி அமைக்கப்பட்டன. (377-ம் பக்கத்திலுள்ள படம் பார்க்க) இக்காலத்தில் சிங்கள மக்கள் அநுராதபுரம், பொலநறுவைப் பகுதிகளில் நின்று தென்மேற்குத் திசையாய்ப் படிப்படியாகப் பெயர்தல் தெளிவாகக்காணக்கூடிய ஒரு அம்சமாகும். எனவே இந்த இருநூற்றெழுபது ஆண்டுகளின் இலங்கை வரலாற்றை "தென்மேற்குத் திசையாக இடப்பெயர்வு" என்று குறுப்பிடுதல் சாலவும் பொருத்தமாகும்.

2. இடப் பெயர்வுக்கான காரணங்கள்

தென்மேற்குத் திசை இடப் பெயர்வுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவை யாவும் இந்த இடப்பெயர்வுக்குக் காரணங்களாயினும் மிகமுக்கியமான காரணங்களையே நாம் ஈண்டு எடுத்து ஆராய்வோம். அநுராதபுர, பொலநறுவைக் காலங்களில் உள்நாட்டுக்

கலகங்கள் புறநாட்டுப் படை எழுச்சிகள் ஆகியவற்றால் இலங்கை மிகவும் பீடிக்கப்பட்டிருந்தது. இவை சிங்களவரின் பலத்தைக் குன்றச் செய்தன. பராக்கிரமவாகுவின் பர்மிய, தென் இந்தியப் படை எழுச்சிகளின் பயனாக நிலைமை இன்னும் கீழ்நிலை அடைந்தது. கி. பி. 1235 அளவில் மேற்சொல்லிய காரணங்களினாலும், சிங்களத் தலைவர்கள் தங்களுக்குள்ளே சண்டைசெய்ததினால் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தலைவர் இல்லாமற் போனதினாலும், சிங்களவர்கள் அதிகம் தளர்ச்சி அடைந்தனர். கி. பி. 1235-ல் மாகனின் படை எழுச்சியின் வெற்றிக்கு இவைகளே காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மாகன் இராசஇரட்டையை வெற்றிகொண்டது மாத்திரமல்ல இலங்கையை ஆண்ட ஏனைய தென்னிந்திய மன்னர்களைப்போலல்லாது கொடுங்கோல் மன்னனாகவும் விளங்கினான். அவன் சிங்களவர்களுக்கு புரிந்த இன்னல்கள் பன்னுந்தரமன்று. அவன் தன்னை எதிர்த்தவர்களைக் கொன்றான்; விகாரைகளின் சொத்துக்களையும், நிலங்களையும் பறிமுதல் செய்தான்; பௌத்த துறவிகளைத் தானும் வதைத்தான். இக்காலத்தில் மக்கள் பட்டதுன்பங்கள் விவரிக்கமுடியாத அத்துணைக் கொடூரமானபடியால் சிங்கள ஆசிரியர் ஒருவர் மக்களின் இல்லங்கள் யாவும் அழுகையும் கூக்குரலுமாய் செத்த வீடுகள்போல் காட்சியளித்தன என்று உணர்ச்சிததும்ப எழுதி வைத்திருக்கின்றார். மாகனின் கொடுங்கோல் ஆட்சியை பொறுக்க ஆற்றுத சிங்களமக்கள் அவனை எதிர்க்கக்கூடிய பலமும் அற்றவர்களாய் இருந்தமையால் கொடுங்கோல் அரசன் வாழும் நாட்டிலும் கடும் புலி வாழும் காடு நன்றே என்று எண்ணி மலைநாடுகளுக்கும் தென்மேற்குப்பகுதி நாடுகட்கும் புலம்பெயரத் தொடங்கினர். சிங்களவர் தென்மேற்குப் பக்கமாகப் புலம்பெயர்ந்தபோது மாகனும் அவன் வழிவந்தோரும் வடக்கில் ஒரு தமிழ் அரசை நிறுவினர்.

3. அரசியல் வரலாற்றின் முக்கிய அம்சங்கள்

(a) தென் இந்தியப் படையெழுச்சிகளின் அம்சம்

13-ம் அத்தியாயத்தில் தென் இந்தியாவில் விளங்கியிருந்த பாண்டிய விஜயநகரப் பேரரசுகளைப்பற்றிப் படித்தோம். மிகவும் பண்டு தொட்டே தென்னிந்தியர்கள் இலங்கைமீது படையெடுப்பது சர்வ சாதாரணமான ஒரு வழக்கமாயிருந்தது. ஒவ்வொரு படையெடுப்பின் இறுதியிலும் சிங்களவர்கள் தென் இந்தியர்களைக் கலந்துவிட முடிந்தது. கி. பி. 1070-ல் வல்லமை படைத்த சோழரைத்தானும் 1-ம் விஜயவாகு இலங்கைவினின்றும் துரத்திவிட்டான். கி. பி. 1235-க்கு பின்பு சிங்களவர்கள் பலம் இழந்தவர்களாய் இருந்தபடியால் ஆக்கிரமிப்பாளரை எதிர்க்க சக்தி அற்றவர்களாகி தென்னிந்திய படை எழுச்சிகளைப்பற்றி எப்பொழுதுமே அச்சமும் கவலையும் கொள்

வாராயினர். எனவே பாண்டிய விஜயநகரப் பேரரசுகளின் படை எழுச்சிகளினின்றும் தங்களைப் பாதுகாக்கும்பொருட்டு இயற்கை அரணுடைய கோட்டைகளை தங்கள் தலைநகர்களாக்கினர். தென்னிந்தியப் பேரரசர்களோ, வடஇலங்கைத் தமிழ் அரசர்களோ தங்களைத் தாக்கக் கூடுமென்ற பயத்தினால் சிங்களவர்கள் பொலநறுவையையே நீடித்துத் தலைநகரமாக வைத்திருக்க முடியவில்லை. 2-ம் பராக்கிரமவாகு பலமும் திறமையுமுடைய ஒரு சிங்கள அரசனாய் விளங்கினான். அவன் சிங்களநாடு முழுவதையும் தன் அதிகாரத்துக்குள் கொண்டு வந்தான். பின்பு தமிழர்களை எதிர்த்து அவர்களை வெற்றி கொண்டான். இவ்வாறு தனது திறமையையும் வல்லமையையும் காட்டி பொலநறுவையை மீண்டும் கட்டினான். இங்கு தன் முடிசூட்டு விழாவைக் கொண்டாடினானெனினும் பாதுகாப்பின்பொருட்டு தம்பதேனியாவிலுள்ள கற்கோட்டையிலிலே வசித்துவந்தான். 3-ம் பராக்கிரமவாகு பாண்டியப் பேரரசை தனது நாயகனாக ஏற்றுக்கொண்டு பொலநறுவையிலிருந்தே அரசாள முடிந்தது. இவன் வழிவந்த 2-ம் புவனேகவாகு பாண்டியப் பேரரசனின் தலைமையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. பொலநறுவையிலிருத்தல் ஆபத்தை விளைவிக்கும் என அஞ்சியதால் பாதுகாப்பின் பொருட்டு குருநாகலிலுள்ள கற்கோட்டையில் தனது அரசிருக்கையை அமைத்துக் கொண்டான்.

(b) புதிய அரசியற் பிரிவுகள்

கி. பி. 1235 அளவில் இலங்கை நான்கு அரசியற் பிரிவுகளாய் இருந்தது என்று முன்னர் கண்டோம். அவை இராசஇரட்டை, மாயஇரட்டை, மலாயஇரட்டை என்பன. தென்மேற்குப்பக்க இடப்பெயர்வுகளினால் இப்பிரிவுகளுள்ளே மாற்றம் உண்டாகி ஒரு புதிய அரசியல் பிரிவு உண்டாயது. முதலில் இரண்டு பெரும் பிரிவுகள் இருந்தன. அவை வடஇலங்கைத் தமிழ் அரசும், தெற்கு, தென்மேற்கு, மத்திய பகுதிச் சிங்கள அரசும் என்பன. படிப்படியாக 14-ம் நூற்றாண்டில் மத்திய மலைநாடுகளில் ஒரு புதிய சிங்கள அரசு உதயமாயிற்று. இதன் பயனாக சிங்களநாடு கண்டி கோட்டை என இரு இராச்சியங்களாகப் பிரிந்தது. கி. பி. 1505-ல் போர்த்துக்கீயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் மூவிராச்சியங்கள் இருந்தன. அவை வட இலங்கைத் தமிழரசு, கண்டி இராச்சியம், தென்மேற்கு கோட்டை இராச்சியம் என்பன. இக்காலத்தில் ஒரே ஒரு அரசன் மாத்திரம் முழு இலங்கையையும் அரசாண்டான். அவன் 6-ம் பராக்கிரமவாகு என்பவன். இவன் காலம்வரைக்கும் வடஇலங்கைத் தமிழ் அரசு சுதந்திரம் உடையதாக இருந்தது. இவன் அதனைத் தனது ஆணைக்குட் கொண்டுவந்தான். இவன் மரணத்தின்பின் அது மீண்டும் சுதந்திர அரசானது.

(c) தலைநகரங்கள் மாற்றம் அடைதல்

அடுத்தபிரிவில் விளக்கப்படும் காரணங்களுக்காக தலைநகரம் இக்காலத்தில் அடிக்கடி மாற்றப்பட்டது. 270 ஆண்டுகள் அடங்கிய இக்காலத்தில் தலைநகரம் 7 முறை மாற்றப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் இயற்கைக் கோட்டை ஒன்றை அல்லது இன்னென்றினை தெரிந்துகொண்டனர்.

பயிற்சி

சுருக்கமான விடை தருக:


1. இக்காலத்தை ஒரு தலைநகரத்தைக் கொண்டு சுட்டுவது எளிதல்ல ஏன்?
2. இக்காலம் தென்மேற்குப் பக்கமான இடப்பெயர்வு காலம் எனப்படுகிறது ஏன்?
3. சிங்களவர் அநுராதபுரம், பொலநறுவைப் பிரிவுகளை ஏன் கைவிட்டுவிட்டுத் துணிந்தனர்?
4. எத்தென்னிந்திய தமிழ் இராச்சியங்களுக்கு சிங்கள அரசர் அஞ்சினர்?
5. தென் இந்தியப் பேரரசர்களின் படை எழுச்சிகளினின்றும் தங்களைப் பாதுகாக்க சிங்களவர் எவ்வகையில் முயன்றனர்?
6. இக்காலத்தில் பொலநறுவையிலிருந்து ஆண்ட ஒரே ஒரு அரசன் யார்?
7. இது எவ்வாறு முடிந்தது?
8. கி. பி. 1235-க்கு முன்னர் இலங்கையின் அரசியல் பிரிவுகள் யாவை?
9. கி. பி. 1500-ல் இலங்கையின் அரசியல் பிரிவுகள் எவை?
10. இக்காலத்தில் தலைநகரம் எத்தனைமுறை மாற்றப்பட்டது?

4. அரசியல் வரலாறு I

தலைநகரங்கள்மாறலும் புறநாட்டுப்படைஎழுச்சிகளும்

தம்பதேனியா

இக்காலத்து முதல் சிங்கள அரசன் 3-ம் விஜயவாகு (கி. பி. 1232—1236) இவன் தனது தலைநகரை கற்கோட்டையான தம்பதேனியாவில் அமைத்தான். அநேக சிங்கள மன்னர்களைப்போல பௌத்தம் கல்வி வளர்ச்சியின்பொருட்டு மிகுந்த ஊக்கம் செலுத்தினான். விதிகளை அனுசரிக்குமாறு அவர்களைத் தூண்டினான். அவர்களுக்கு அநேக விகாரைகளைக் கட்டிக்கொடுத்தான். கி. பி. 1236-ல் இவன் மூத்த மகன் அரசுகட்டில் ஏறினான்.




(கி. பி. 1233—1415) தலைநகர மாற்றங்கள்

2-ம் பராக்கிரமவாகு (கி. பி. 1236—1271) இவன் இலங்கை முழுவதையும் தனது ஆணையா சக்கரத்துள் கொண்டுவர விழைந்தான். உறுகுணை மலாயரட்டை ஆகிய பிரிவுகளை வெற்றிகொண்ட பின்னர் வன்னியைத்தாக்கி பொலநறுவையைச் சேர்த்துக்கொண்டான். பின்னர் வடக்கிலுள்ள தமிழர்களுக்கு எதிராக எழுந்து அவர்களைப் புறங்கண்டானெனினும் தீவினின்றும் அவர்களை வெளியேற்றமுடியவில்லை. இவ்வாறு வட இலங்கைத் தமிழரசு தவிர இலங்கை முழுவதையும் தனது ஆணைக்குட்படுத்தினன். பொலநறுவையிலுள்ள கட்டடங்களைப் புதுப்பித்து அங்கே தனது முடிசூட்டு விழாவைக் கொண்டாடினன். பின்னர் தம்பதேனியாவிலுள்ள கற்கோட்டைக்கு மீண்டான்.

இவன் ஆட்சியின்போது பல புறநாட்டுப் படை எழுச்சிகள் நிகழ்ந்தன. புத்தரின் புனிதப் பல்லையும் பிச்சைப் பாத்திரமான அமுத சுரபியையும் தனக்காக்கிக்கொள்ளுமாறு மலாயா மன்னனை சந்திரபானு என்னும் பௌத்தன் கி. பி. 1244 ல் இலங்கைமீது படையெடுத்து வந்தான். சந்திரபானு தோற்கடிக்கப்பட்டாலும் இரண்டாம் முறையும் படையெடுத்து வந்து யாப்பகுவமட்டும் முன்னேறிச் சென்றான். இங்கு இவன் முன்னேற்றம் தடைபடலாயிற்று.

சாதுவர்மன் வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் இலங்கைக்கு படையெடுத்துவந்து ஓர் அரசனைக் கொன்று ஏனைய அரசர்களைக் கப்பங்கட்டுமாறு பணித்தானென்று பாண்டிய வரலாறு கூறுகின்றது.

(பயிற்சி II (a) பிலுள்ள வினாக்கட்கு விடை 384-ம் பக்கம் காணவும்)




யப்பாகுக் குன்று

சந்திரபானுவின் படை எழுச்சிகள் பாண்டிய படை எழுச்சிகள், பராக்கிரமவாகுவின் யுத்தங்கள் ஆகியவற்றின் நடுவிலும் இம்மன்னன் சமயம் இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அதிகம் ஊக்கம் செலுத்தினன். இவன் பௌத்த சங்கத்தை சீர்ப்படுத்தி சிங்கள பிக்குகளுக்கு இலக்கணம், தருக்கம், விஞ்ஞானம் ஆகியவற்றைப் போதிப்பதற்கு தென்னிந்தியாவிலிருந்து பௌத்த் துறவிகளை வரவழைத்தான். 2 ஆம் பராக்கிரமவாகு சிறந்த கல்விமானுக விளங்கி சில நூல்களையும் எழுதியுள்ளான். இதன்பயனக இவனுக்கு கலிகால சாகித்திய சர்வஞான பண்டிதன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. கலிகாலத்தில் பல்கலை இலக்கிய அறிவும் படைத்த புலவன் என்பது இதன் கருத்து.

யப்பாகு

1 ஆம் புவனேகவாகு (கி. பி. 1273-1284) சிலகாலம் தம் பதேனியாவிலிருந்து அரசாண்டான், பாண்டியர் இலங்கைமீது படையெடுப்பார்களென்று எண்ணி இவன் தலைநகரை யாப்பாகுவாவிலுள்ள



யப்பாகுவிலுள்ள படிக்கட்டுகளின் அமைப்பு

கற்கோட்டைக்கு மாற்றினன் இங்கு இருந்துகொண்டு பாண்டியர்களை எளிதில் எதிர்க்கலாமென எண்ணினன். கி. பி. 1284 ல் பாண்டியப் படை ஒன்று ஆரியச் சக்கரவர்த்தி என்ற படைத் தலைவனின் தலை

மையில் இலங்கையை முற்றுகையிட்டு சிங்களவர்களைத் தோற்கடித்தது. புத்தரின் புனிதப்பல் கைப்பற்றப்பட்டு பாண்டிய நாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அரசனிடம் ஒப்புவிக்கப்பட்டது. இலங்கை பாண்டியப் பேரரசின் ஆணைக்குட்பட்டது.

பொலநறுவை

அடுத்த இருபது ஆண்டுகள் இலங்கை பாண்டியர் ஆட்சியிலிருந்தது. கி. பி. 1302-ல் 4-ம் விஜயபாகுவின் மகன் 3-ம் பராக்கிரமவாகு பாண்டிய நாட்டுக்குப்போய் மாறவர்மன் குலசேகரன் என்ற பாண்டியப் பேரரசை தனது நாயகனை ஏற்றுக்கொண்டு புத்தரின் புனிதப் பல்லுடன் இலங்கை மீண்டான். இக்காலத்தில் பொலநறுவையிலிருந்து அரசாண்ட சிங்கள மன்னன் இவன் ஒருவனே என்க.


குருநாகல்

கி. பி. 1310-ல் 1-ம் புவனேவவாகுவின் மகன் 2-ம் புவனேகவாகு 3-ம் பராக்கிரமவாகுவை எதிர்த்து வாகைமாலை சூடினன். இவன் இலங்கை பாண்டியர் ஆட்சிக்கு உட்படாத ஒரு சுதந்திர நாடு எனப் பிரகடனம் செய்து இன்னொரு கற்கோட்டையாய் விளங்கியதும், தான் அரசனுவதற்குமுன் வசித்து வந்ததுமாகிய குருநாகலை தலைநகரமாக அமைத்தான். பாண்டியர் தாக்குவார்கள் என்ற அச்சங் காரணமாக பொலநறுவையிலிருக்க அவன் விரும்பவில்லை. குருநாகல் 4-ம் புவனேகவாகுவின் ஆட்சிவரைக்கும் சிங்கள அரசர்களின் இராசதானியாக விளங்கியது. 4-ம் புவனேகவாகு (கி. பி. 1344) தலைநகரை கம்பளைக்கு மாற்றினன்.

கம்பளை

4-ம் புவனேகவாகு (கி. பி. 1344-1354) ஏன் தலைநகரை கம்பளைக்கு மாற்றினனென்று திர்க்கமாக நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. இவன் பௌத்த மதத்தை நன்கு ஆதரித்தான். தகுதியற்ற சிங்கள பிக்குகளை பௌத்த சங்கத்தினின்றும் நீக்கியதுமல்லாமல் அநேக விகாரைகளையும் கட்டுவித்தான். இலங்காதிலக, கடலதேனிய விகாரைகள் அவற்றுள் பிரதானமானவை. இக்காலத்தில் சிங்கள மன்னர்கள், தென்னிந்திய மன்னர்களைப்போல இணை அரசர் ஆட்சியை வழக்கத்திற்கு கொண்டுவரலாயினர் இணை அரச ஆட்சி என்பது ஒரு அரசன் ஆளுகின்றபோது அவன் பட்டத்திற்கு உரியவனை கூட்டு அரசனாக நியமித்து இருவருமாக நாட்டை ஆளுவதாகும். உதாரணமாக நாலாம் புவனேகவாகு கம்பளையிலிருந்து ஆண்டபோது பட்டத்திற்குரியவனை 5-ம் பராக்கிரமவாகு பிடிகமத்திலிருந்து கூட்டரசனாக ஆட்சி செய்தான். பிற்கால கம்பளை அரசர்கள் பலவீனர்களாயிருந்தமையால் பேரளவில் சிம்மாசனத்தில் இருந்தார்களாயினும்

கோட்டை



கோட்டை ஒரு சல துர்க்கமாகும். இது ஏரி, ஆறு, சதுப்பு நிலம் ஆகியவற்றால் நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது.

அதிகாரம் சேனதிபதிகளின் கையில் இருந்தது. 3-ம் விக்கிரம பாகு (கி. பி. 1356-1374) கம்பளையிலிருந்து அரசாண்டபோது உண்மையான அதிகாரம் றைகமத்திலிருந்த சேனதிபதி அழகக்கோனர் கையில் இருந்தது.

தமிழர்கள் சிங்களவர்களைத் தாக்குதல்

இக்காலத்தில் வட இலங்கைத் தமிழ் அரசனிய ஆரியச் சக்கரவர்த்தி சிங்களப்பகுதிகளிலுள்ள வளம்மிக்க கறுவாக்காணிகளை வெற்றிகொள்ள முயன்றான். இவன் சிங்களவர்களை எதிர்க்க படைகளைத் கடலாலும் தரையாலும் அனுப்பினன். கம்பளையிலிருந்த 3-ம் விக்கிரமபாகு இவர்களை எதிர்க்க சக்தியற்றவனாயிருந்ததனால் அவன் எல்லாவற்றையும் தனது சேனதிபதி அழகக்கோனர் கையில் ஒப்புவித்துவிட்டான்.

அழகக்கோனர், நன்கு பாதுகாப்பு உள்ளதும் நீரால் சூழப்பட்டதும் ஓர் ஏரியின் நடுவண் உள்ளதுமான தகுந்த ஓர் இடத்தை தெரிந்து அங்கே வன்மைமிக்க ஒரு கோட்டையைக் கட்டினர். ஆரிய சக்கரவர்த்தியின் இறை தண்டுவார் இவண்போந்து இறை கட்டுமாறு பணித்தனர். அழகக்கோனர் அவர்களைச் சிறைசெய்து கோட்டைச் சுவர்களில் தூக்கிவிடும்படி கட்டளைசெய்தார். பின்னர் அவன் தனது படைகளை ஆரிய சக்கரவர்த்தியின் படைகளுக்கு எதிராகச் செலுத்தி அவர்களை வடக்கே துரத்திவிட்டான். இவன் தமிழர்களை துரத்திவிட உதவியாகக் கட்டிய கோட்டை ஜயவார்தனபுரக்கோட்டை எனப்பட்டது. அரண் செய்யப்பட்ட வெற்றி நகரம் என்பது இதன்பொருள்.

முடிவு

இதன்பின் அழகக் கோனரும் அவர் வழிவந்தாரும் றைகமந் திலிருந்து ஆட்சி செய்தார்கள். இவர்களில் ஒருவனான வீர அழகேஸ்வரனும் (கி. பி. 1397—1410) ஆட்சி செய்தபோது சீனாவிலிருந்து அரச தூது கோஷ்டியினர் இலங்கைக்கு வந்து புத்தரின் புனிதப் பல்லையும் பிச்சா பாத்திரமான அமுத சுரபியையும் தங்கட்கு கொடுக்குமாறு கேட்டனர். சிங்களவர்கள் இவ்வரச தூதர்களை அவமரியாதையாக நடத்தினர். இதன்பயனாக கி. பி. 1010-ல் சீனர் இலங்கைமீது படையெடுத்து அரசனைச் சிறை செய்து அரசனையும் அவர் குடும்பத்தினரையும் சீனாவுக்கு கொண்டு சென்றனர்.

கோட்டை

கி. பி. 1412-ல் 6-ம் பராக்கிரமவாகு அரசுகட்டில் ஏறினான். இவன் 3 ஆண்டுகள் கூட்டு அரசனாக ஆட்சி செய்தபின் கி. பி. 1415-ல் அரசனாகி தலைநகரைக் கோட்டைக்கு மாற்றினன். இவன் இப்படிச் செய்வதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. கோட்டையில் நன்கு அரண் செய்யப்பட்ட கோட்டை இருந்ததால் றைகமத்திலும் பார்க்க

கூடிய பாதுகாப்பு அளிக்கக்கூடியதாயிருந்தது. மேலும் நீர்கொழும்பு தொட்டு காலிவரை பரந்திருந்த கறுவாத் தோட்டங்களை கோட்டையிலிருந்து கட்டுப்படுத்தவும் கூடியதாயிருந்தது. 6-ம் பராக்கிரவாகுவே இலங்கையை ஆண்ட மாமன்னர்களுள் கடைசி மாமன்னனாகத் திகழ்ந்தான். இக்காலத்தில் இவன் ஒருவனே இலங்கையை ஆண்டான். இவன் அரசகட்டில் ஏறியபொழுது தென்மேற்கிலுள்ள தாழ்ந்த நிலப் பிரதேசத்திற்கே அரசனாயிருந்தான். மத்திய மலை நாடுகள் அல்லது கந்தை உட பஸ்றட்டை பாதி சுதந்திரம் உடைய நாடாயிருந்தது. கம்பளையிலிருந்த அரசன் இப்பிரதேசத்தை ஆண்டு 6-ம் பராக்கிரமவாகுவிற்கு இறை செலுத்தினன். வட இலங்கையில் சுதந்திரத் தமிழரசு இருந்தது.

பராக்கிரமவாகு இலங்கை முழுவதற்கும் தனி அரசனாக வேண்டுமென்று துணிந்தான். கம்பளை அரசன் இவனை நாயகனாக ஏற்றுக் கொண்டு இறை செலுத்தி வரலானன். தமிழ் அரசே வெற்றி கொள்ளப்படவேண்டியிருந்தது. கி. பி. 1446-ல் இவன் தனது சுவிகாரப் புத்திரன் சப்புமல் குமாரனை தமிழ் அரசை வெற்றிகொள்ள அனுப்பி வைத்தான். தமிழர்கள் தோற்கடிக்கப்பட வட இலங்கை சிங்களவர் ஆட்சிக்குள்ளானது. சப்புல் குமாரன் ஒரு துணை வேந்தனாக நியமிக்கப்பட்டான். இவ்வாறு 200 ஆண்டுகளுக்குப்பின் முழு இலங்கையும் ஓர் அரசன் ஆணைக்குட்பட்டது.

கி. பி. 454-ல் சோதி சித்தான என்ற கம்பளை மத்திரி ஒருவன் புரட்சி செய்தான். 6-ம் பராக்கிரமவாகு தனது இன்னொரு சுவிகாரப் புத்திரன் அம்புலுகல குமாரனை, புரட்சிக்காரர் தலைவனை அடக்கும் படி அனுப்பி வைத்தான். புரட்சி நசுக்கப்பட்டதுமல்லாமல் கம்பளை அரசன் பராக்கிரமவாகுவின் தலைமையையும் மீண்டும் ஒருமுறை ஏற்றுக்கொண்டான்.

பராக்கிரமவாகு ஒரு சிறந்த போர்வீரன் மாத்திரமல்ல. அவன் ஒரு மாமன்னனும் ஆவன். இவன் ஒற்றுமை, சமாதானம், ஒழுங்கு ஆகியவற்றை நாட்டில் நிலைநாட்டினன். அவன் பௌத்த மதத்தையும் நன்கு ஆதரித்தான். பௌத்த பிக்குகளை ஆதரித்து அநேக விகாரைகளைக் கட்டினன். இவன் கோட்டையில் கட்டிய புனித பற்கோயிலும் கொழும்புக்கு அண்மையிலுள்ள பெப்பினியன் விகாரையும் பிரதானமானவை. இவன் இலக்கிய வளர்ச்சிக்கு தனது ஆதரவை நல்கினன். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பல சிங்கள இலக்கியங்கள் வெளிவந்தன.

மீண்டும் உள்நாட்டுக் கலகங்கள்

6-ம் பராக்கிரமவாகு கி. பி. 1467-ல் பிறந்தான்; அவனுக்கு உரிமை மக்கள் இன்மையால் அவன் பேரன் 2-ம் ஜயவாகு அரசனனின் ஆனல் அவன் சுவிகாரப் புத்திரர் சப்புமல் குமார

னும், அம்புலுகல குமாரனும் அரச உரிமை தங்களைச் சார வேண்டுமெனவும், ஜயவாகுவிற்கு உரியது அல்ல என்றும் உணர்ந்தனர். எனவே அவர்கள் ஜயவாகுவைத்தாக்கி சிம்மாசனத் தைக் கைப்பற்றிக்கொண்டனர். சப்புமல் குமாரன் ஆரும் புவனேக வாகு என்ற பெயருடன் கி. பி. 1473 முதல் 1480 வரை அரசாண் டான். இவனைப் பின்தொடர்ந்து அவன் மகன் 7-ம் பராக்கிரமவாகு கி. பி. 1484 வரை ஆரசாண்டான். இவனிடமிருந்து அம்புலுகல குமாரன் சிம்மாசனத்தைக் கைப்பற்றி 8-ம் பராக்கிரமவாகு என்ற பெயருடன் அரசாண்டான். இவனுடைய ஆளுகையின்போது (கி. பி. 1484—1509) போர்த்துக்கீயர் இலங்கைக்கு முதல் முதல் வந்தனர். (கி. பி. 1505) 6-ம் பராக்கிரமவாகுவின் மரணத்தின்பின் கோட்டை யில் நிகழ்ந்த குழப்பங்களின் பயனாக யாழ்ப்பாணமும் கண்டியும் சுதந்திர நாடுகளாயின. போர்த்துக்கீயர் இலங்கைக்கு வந்தபோது இங்கு மூன்று இராச்சியங்கள் இருந்தன; வட இலங்கையில் (யாழ்ப் பாணம்) தமிழ் அரசு; மத்திய மலைநாடுகளில் (கண்டி) சிங்கள அரசு; தென்மேற்குப்பகுதி (கோட்டை) சிங்கள அரசு. கண்டிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பாதி சுதந்திரமுடைய கிராமத் தொ குதிகள் வன்னியார் எனப்படும் தலைவர்களால் ஆளப்பட்டுவந்தன. இக்கிராமங்கள் அடங்கிய பகுதி வன்னி எனப்பட்டது.

(பயிற்சி II c-யிலுள்ள வினுக்கட்கு விடைகள் காண்கவும்)

பயிற்சி II

(a) தம்பதேனியாக் காலம்

சுருக்கமான விடைகள் தருக:

1. தம்பதேனியாவை தலைநகராக்கிக்கொண்ட சிங்கள மன்னன் யார்?
2. அவன் கல்வி, இலக்கியத்திற்காக என்ன செய்தான்?
3. இவ்வரசனைப் பின்தொடர்ந்த அரசனின் பெயர் என்ன? அவன் இவனுக்கு என்ன உறவினன்?
4. 2-ம் பராக்கிரமவாகு இலங்கையின் எப்பிரிவுகளை தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்தான்?
5. அவன் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது இருந்த பகுதி எது?
6. அவன் பொலநறுவையில் என்ன செய்தான்?
7. அவன் பொலநறுவையிலிருந்து ஏன் அரசாளவில்லை?
8. சந்திரபானு என்பவன் யார்? இவன் இலங்கையை ஏன் முற்றுகையிட்டான்? அவன் இலங்கைக்கு எத்தனை படை

எழுச்சிகளை நடத்திவந்தான்? ஒவ்வொரு படையெழுச்சியி னதும் முடிவு என்ன?

9. இக்காலத்தில் இலங்கையைப்பற்றி பாண்டியவரலாறு என்ன சொல்லுகிறது?
10. 2-ம் பராக்கிரமவாகு இலங்கையிலுள்ள பிக்குகளின் அறிவை வளர்க்க என்ன செய்தான்?
11. பராக்கிரமவாகுவை ஏன் கலிகால சாகித்திய சர்வஞான பண் டிதர் என்கின்றனர்?
12. அதன் பொருள் என்ன?
13. அவனைத் தொடர்ந்துவந்த அரசன் யார்?
14. பராக்கிரமவாகுவிற்கு பின் வந்தவனை கொலை செய்தவன் யார்?

(a) யாப்பகவ, குருநாகல், கம்பளைக் காலங்கள்

இடைவெளிகளை நிரப்புக:

(a) 1-ம் புவனேகவாகு சிலகாலம்.....இருந்து அரசாட்சி செய்தான்.

(b) அவன் தனது இராசதானியை.....மாற்றினன் ஏனென்றால் அவன்.....படையெழுச்சியை அங்கிருந்து தடுக்கலாமென எண்ணினன்.

(c) அப்படியிருந்தும் பாண்டிய சேனாதிபதி.....இலங்கைக் குப் படையெடுத்து வந்து.....தோற்கடித்தான்.

(d) பாண்டிய சேனாதிபதி.....ஆகிய இரண்டையும் இந் தியாவுக்கு எடுத்துச் சென்றான்.

(e) கி. பி.....ல் இலங்கை பாண்டியராட்சிக்குட்பட்டது.

(f) 1302-ல் 3-ம் பராக்கிரமவாகு.....இருந்து ஆட்சி செய்ய முடிந்தது; அவன் பாண்டிய மன்னனை.....ஏற் றுக்கொண்டான்.

(g) இக்காலத்தில் ஆண்ட பாண்டிய மன்னன் பெயர்.....

(h) 1310-ல் 2-ம் புவனேகவாகு சிம்மாசனத்தை.....இடம் இருந்து கைப்பற்றி இராசதானியை.....மாற்றினன்.

(i) 4-ம் புவனேகவாகு.....இராசதானியாக்கிக் கொண் டான்.

(j) இவனைப் பின்தொடர்ந்த மன்னர்.....ஆக இருந்த படியால் உண்மையான அதிகாரம்.....கையில் இருந்தது.

(k) 3-ம் விக்கிரமவாகு கம்பளையில் இருந்து ஆட்சி செய்தபோது உண்மையான அதிகாரம்.....கையில் இருந்தது.

(l) வட இலங்கைத் தமிழரசர்கள்.....கைப்பற்றும் பொருட்டு சிங்களவர்களுடன் சண்டை செய்தார்கள்.

(m) அழகக்கோனர் வன்மைமிக்க ஒரு கோட்டையைக் கட்டினர்; அது.....எனப்பட்டது.

(n) தமிழரசர்கள் இறைதண்ட அனுப்பியவர்களை இவன் கோட்டையிலுள்ள.....

(o) தமிழரசனை.....துரத்திவிட்டான்.

(p) இத் தமிழரசனின் பெயர்.....

(c) நயிகம, கோட்டை

(a) அழகக்கோனரும் அவன் வழிவந்தோரும்.....இருந்து ஆட்சி செய்தனர்.

(b) வீர அழகேஸ்வரன் என்ற மன்னன் காலத்தில் ஒரு..... .....தூதுக் கோஷ்டி இலங்கைக்கு வந்தது.

(c) சீனர்.....ஆகிய இரண்டையும் தரும்படி கேட்டார்கள்.

(d) தூதுவர் இலங்கையில்.....பட்டனர்.

(e) இதன் பயனாக சீனப்.....ஒன்று இலங்கைக்கு வந்து.....அவன்.....சிறைப்படுத்திச் சீனாவுக்குக் கொண்டுசென்றது.

(f) 1415-ல் 6-ம் பராக்கிரமவாகு.....தலைநகராக்கினன்.

(g) அவன் அது.....கோட்டையாக இருந்தபடியாலும்.....காணிகளை அங்கிருந்து பரிபாலிப்பது எளிதென்றபடியாலும் அப்படிச் செய்தான்.

(h) .....அரசன் அவனுக்கு இறை செலுத்தினன்.

(i) அவன் சப்புமல் குமாரனை.....வெற்றிகொள்ளும்படி வட இலங்கைக்கு அனுப்பினன்.

(j) கம்பளையில் நிகழ்ந்த ஒரு.....அடக்க அம்புலுகல குமாரனை அனுப்பினன்.

சுருக்கமான விடைதருக:

1. 6-ம் பராக்கிரமவாகுவின் மரணத்தின்பின் உள்நாட்டுக் கலகம் கோட்டையில் எவ்வாறு ஏற்பட்டது?
2. கோட்டையின் உள்நாட்டுக் கலகத்தால் கண்டி, யாழ்ப்பாண மன்னருக்கு ஏற்பட்டது யாது?
3. போர்த்துக்கீயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கை மன்னன் யார்?
4. எவ்வாண்டு அவர்கள் இலங்கைக்கு வந்தார்கள்?
5. போர்த்துக்கீயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கை எத்தனை இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது? அவை யாவை?

அரசியல் வரலாறு II

புதிய மூன்று இராச்சியங்கள்

(a) யாழ்ப்பாணம்

தமிழர்கள் முதன்முதல் எப்பொழுது இலங்கைக்கு வந்தார்களென்பது வரையறவாகத் தெரியாது. தென் இந்தியாவும், தமிழகமும் இலங்கைக்கு வெகு அண்மையில் இருப்பதால் தமிழர்கள் பண்டு தொட்டே இலங்கைக்கு வந்திருக்கவேண்டும். அவர்கள் இங்குவந்து சிங்களவரிடையே குடியேறி சிங்களவராட்சியை ஏற்றுக்கொண்டனர்.

ஒவ்வொரு தமிழர் படையெழுச்சியுடனும் இலங்கையில் தமிழர் தொகை அதிகரிக்கலாயிற்று (195–200-ம் பக்கங்கள் பார்க்கவும்) கி. பி. 1017-ல் சோழர் இலங்கையை வெற்றிகொண்டு கி. பி. 1070 வரை சோழராட்சியை இலங்கையில் நிறுவியபோது மேலுமதிக தமிழர் இலங்கையை அடைந்தனர். இதற்கு முன்னரும் இருந்தபோதும் தமிழர் பிறிதான ஒரு தனித் தமிழரசை இலங்கையில் நிறுவவில்லை. அவர்கள் சிங்கள மன்னர் ஆட்சியில் இருந்தார்கள். 1-ம் விஜயவாகு, 1-ம் பராக்கிரமவாகு, நிசாங்கமல்லன் முதலாமரசர்கள் இலங்கை முழுவதையும் அரசாண்டார்கள். தமிழர்கள் அவர்கட்குக் கீழ்ப்படிந்து இருந்தனர்.

பிறிதான ஒரு தனித் தமிழரசு கி. பி. 1235-ல் மாகன் படையெழுச்சிக்குப் பின், சிங்களவரின் தென்மேற்கு இடப்பெயர்வுடன் நிறுவப்பட்டது. சிங்களவர் தென்மேற்குப் பக்கம் இடம் பெயரவும் தமிழர்கள் மாகன் தலைமையில் இங்கைநகரைத் தலைநகராக்கொண்டு பிறிதான ஒரு தமிழரசை வட இலங்கையில் நிறுவினர். வன்னிப் பிரிவுகளையும் தீவின் கிழக்குப் பிரிவையும் வன்னியர் எனப்படும் தலைவர்கள் ஆண்டுவந்தனர்.

இலங்கைத் தமிழரசின் வரலாறு அமைதி உடையதொன்றல்ல. வடக்கில் உள்ள தென்னிந்தியப் பேரரசர் அடிக்கடி அதனை முற்றுகையிட்டு வெற்றிகொள்ள முயன்றனர். தெற்கில் உள்ள சில சிங்கள அரசர் அதனை வெற்றிகொண்டு மீண்டும் தம்மாட்சிக்குட் கொண்டுவர முயன்றனர். பராக்கிரமவாகு வட இலங்கையைத் தாக்கி வெற்றி கண்டபோதிலும் இராச்சியத்தைப் பிடிக்கமுடியவில்லை என்பதை முன்னர் கண்டோம். கி. பி. 1284-ல் பாண்டிய சேனாதிபதி ஆரியச் சக்கரவர்த்தி இலங்கையை வெற்றிகொண்டு அதனைப் பாண்டியராட்சிப் பிரிவிலொன்றுக்கினன் என்றும் முன்னர் படித்தோம். அடுத்த 20 ஆண்டுகள் தமிழரசு பாண்டியராட்சிப் பிரிவில் ஒன்றுபிருந்தது. பாண்டியப் பேரரசு கி. பி. 1319-ல் தளர்வடையவும் மீண்டும் வட இலங்கை சுதந்திரத் தமிழரசு பெற்றது.

சிங்கள மன்னர் கம்பளையிலிருந்து ஆட்சிசெய்த காலத்தில் (கி. பி. 1344-1405) தமிழ் இராச்சியத்தில் ஆரியச் சக்கரவர்த்தி என்ற பெயருடைய ஒரு மன்னன் இருந்தான். இவனுடைய காலத்திற்முன் இபின் பட்டூற்ரு இலங்கையைத் தரிசித்து (ஆதம் மலைக்கு) சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்ருன். இவ்வாரியச் சக்கரவர்த்தியே 3-ம் விக்கிரமவாகுவின் ஆட்சிக் காலத்தில் (1356-1374) சிங்கள இராச்சியத்தை வெற்றிகொள்ள முயன்ருன். இவன் தரையாலும் கடலாலும் அனுப்பிய படைகளை கோட்டையில் கோட்டை அமைத்திருந்த அழகக்கோனூர் பின்வாங்கச் செய்தான்.

இதன் பின்பு விஜயநகரப் பேரரசர்களான வீரபக்ஷ, 2-ம் தேவராயர் என்போர் வட இலங்கைத் தமிழரசை வெற்றிகொண்டு தம்மாளைக் குட்படுத்தினர். 2-ம் தேவராயர் மரணத்தின் பின் விஜயநகரத்தில் குழப்பங்கள் உண்டாகவே வட இலங்கைத் தமிழரசு மீண்டும் சுதந்திரமடைந்தது. இச்சுதந்திரம் நீடித்து நிற்கவில்லை. கி. பி. 1446-ல் சப்புமல் குமாரன் தமிழிராச்சியத்தை வெற்றிகொண்டு 6-ம் பராக்கிரமவாகுவின் ஆட்சிக்குட்படுத்தினன். வட இலங்கைத் தமிழரசு தனது சுதந்திரத்தை மீண்டும் இழந்தது.

6-ம் பராக்கிரமவாகுவின் மரணத்தின் பின் உள்நாட்டுக் கலகம் கி. பி. 1473-ல் கோட்டையில் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பம் வட இலங்கைத் தமிழரசு மீண்டும் சுதந்திரமடைய வாய்ப்பு அளித்தது. கி. பி. 1621-ல் போர்த்துக்கீயர் இதைக் கைப்பற்றும்வரையும் சுதந்திரமுடையதாய் விளங்கியது.

பயிற்சி III


சுருக்கமான விடைகள் தருக:

1. தமிழர்கள் எப்போது முதன்முதல் இலங்கைக்கு வந்தார்கள்?
2. தொடக்கத்தில் பிறிதான ஒரு தமிழிராச்சியத்தை நிறுவினரா? அன்றேல் சிங்களவராச்சியில் அமைதியாக வாழ்ந்தனரா?
3. அவர்கள் தொகை இலங்கையில் எவ்வாறு அதிகரித்தது?
4. முதன்முதல் தமிழரசு இலங்கையில் எப்பொழுது நிறுவப்பட்டது?
5. வன்னியையும் கிழக்குப் பிரிவையும் ஆண்டவர்கள் யாவர்?
6. வட இலங்கைத் தமிழரசின் தென்னிந்திய விரோதிகள் யார்?
7. அவர்களின் தென்னிலங்கை விரோதிகள் யார்?
8. 2-ம் பராக்கிரமவாகுவால் தமிழரசை வெல்ல முடிந்ததா?
9. அ.து எப்போது பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியானது?
10. பாண்டியப்பேரரசிலிருந்து நீங்கி எப்போது சுதந்திரமடைந்தது?

11. இபின் பட்டூற்ரு இலங்கைக்கு வந்தபோது தமிழரசையாண்ட மன்னன் யார்?
12. இவ்வரசனைப்பற்றியும் இராச்சியத்தைப் பற்றியும் இபின் பட்டூற்ரு கூறுவது யாது?
13. சிங்கள இராச்சியத்தை வெற்றிகொள்ள முயன்ற வட இலங்கைத் தமிழரசன் யார்?
14. சிங்களவரை வெற்றிகொள்ள அவன் ஏன் ஆசைப்பட்டான்?
15. வட இலங்கைத் தமிழரசை வெற்றிகொண்ட இரு விஜயநகர மன்னர் யாவர்?
16. வட இலங்கைத் தமிழரசு விஜயநகராட்சியிலிருந்து நீங்கவும் அதனை வெற்றிகொண்ட சிங்கள மன்னன் யார்?
17. இவ்விராச்சியத்தை இவன் யாருடைய ஆட்சிக்குள் கொண்டு வந்தான்?
18. தமிழ் இராச்சியம் கோட்டையிலிருந்து நீங்கி எப்பொழுது சுதந்திரமடைந்தது?
19. பின்பு அவர்கள் தங்கள் சுதந்திரத்தை எப்போது இழந்தார்கள்?

(b) கண்டி

கண்டி இராச்சியத்தின் துவக்கம் மர்மமாயிருக்கிறது. பண்டு தொட்டு மத்திய மலைப்பிரதேசம் மலாயிரட்டை எனப்பட்டது. இலங்கையின் பூர்வ குடிகளான வேடர் வரத்தர்களான ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்டபோது மத்திய மலைப்பிரதேசங்கட்கு ஓடி ஒழித்தார்கள். இராசஇரட்டை, உறுகுணை என்ற இரு இராச்சியங்களும் படிப்படியாக வளர்ச்சி அடைந்துகொண்டிருந்தபோது மலாயிரட்டை தண்டனைக்கு பயந்தவர்களினதும் தங்கள் சூழ்ச்சிகளில் தோல்வி அடைந்தவரதும் புகலிடமானது. இலங்கையின் உள்நாட்டுக் கலகங்களில் தோல்வி அடைந்தவரும் நீதித் தீர்வைக்குப் பயந்தவரும் மத்திய மலைப்பிரதேசங்கட்கு ஓடி, அடர்ந்த காடுகளிலும் உயர்ந்த மலைகளிலும் சரண்புகுந்துகொண்டனர். சிறிது காலத்தின் பின் மலாய இரட்டை ஒரு தனிப் பிரிவாகி ஒரு குறுநிலத் தலைவரால் ஆட்சி செய்யப்பட்டது. கி. பி. 1017-ல் சோழர் இலங்கையை வெற்றிகொண்டபோது அவர்கள் மலாயிரட்டையை தங்கள் அதிகாரத்துக்குள் கொண்டுவரவில்லை. சோழர் ஆட்சியை எதிர்த்த சிங்களப் புரட்சிக்காரர் சோழரால் தோல்வி அடைந்தபொழுது மலாயிரட்டைக்கே ஓடினர்கள். சோழர்கள் வெற்றிகொண்டு அவர்கள் இலங்கையினின்றும் துரத்திய விஜயவாகு மலாயிரட்டையை முதல்முதல் தன்



புதிய மூன்று இராச்சியங்கள்

ஆணைக்குள் கொண்டுவந்தான். இலங்கை முழுவதுக்கும் தனி அரசனை விரும்பிய பராக்கிரமவாகு மலாயஇரட்டையை முதல் அடிப்படுத்தினன். தென்மேற்கு இடப்பெயர்வு துவக்கமான பின்பு மலாயஇரட்டை சிங்கள இராச்சியத்தில் ஒரு பிரிவானது.

கி. பி. 1344-ல் 4-ம் புவனேகவாகு தலைநகரை கம்பளையில் அமைத்தான். இக்காலம் முதல் அழகக்கோனர் அதிகாரத்துக்கு உயர்ந்த காலம்வரை கம்பளை சிங்கள் அரசின் இராசதானியாக விளங்கியது. பலம் இழந்த கம்பளை அரசர்கள் தமிழ் அரசனை ஆரியச் சக்கரவர்த்திக்கு கப்பங்கட்டி வந்ததாகத் தோற்றுகின்றது. அழகக்கோனர் ஆரியச் சக்கரவர்த்தியின் படைகளை வெற்றிகொண்டு அவர்களை வட இலங்கைக்கு துரத்தியபின் கப்பங்கட்டுதல் நின்றுவிட்டது. இதன்பின்பு உண்மையான அதிகாரம் இறைகமத்திலுள்ள சேனபதிகளின் கைக்குமாற கம்பளை அரசர்கள் சிற்றரசர்களாகி இறைகமத்திலும் பின்னர் கோட்டையிலுமுள்ள மன்னர்கட்கு திறை செலுத்தி வரலாயினர். 6-ம் பராக்கிரமவாகு தனது தலைநகரைக் கோட்டைக்கு மாற்றியபோது கம்பளை அரசர்கள் அவனை நாயகனாக ஏற்றுக்கொண்டு திறை செலுத்தி வந்தார்கள். கி. பி. 1463-ல் கம்பளை அரசரின் அமைச்சர்களில் ஒருவரான சோதி சித்ததன் திறை செலுத்த மறுத்தான். 6-ம் பராக்கிரமவாகு இப்புரட்சியை நசுக்கவும் கம்பளை அரசனை அவனுடைய முந்தியதானத்தில் நிறுவவும் அம்புலுகல குமாரனை அனுப்பினன். இதன் பின்பு பராக்கிரமவாகுவின் இறப்பு வரை கம்பளை அரசர்கள் கோட்டை மன்னர்கட்கு திறை செலுத்தி வந்தார்கள்.

மலாயஇரட்டையின் பிரதானமான பிரிவுகள் உருநுவரை, யட்டிநுவரை, அரிஸ்பற்று, கேவாஹெட்ட, தும்பறை என்பன. மலாய இரட்டை, கந்தஉடபஸ்இரட்டை எனப்பட்டது. பராக்கிரமவாகு இறந்தபோது கோட்டையில் உள்நாட்டுக் கலகங்கள் உண்டாயின. மலாயஇரட்டையின் தலைவர்கள் தங்கள் அரசன் விக்கிரமவாகுவிற்கு எதிராக புரட்சி செய்தனர். இவன் புரட்சி செய்தவர்களை மேற்கொண்டு தனது தலைநகரை செங்கடகலவுக்கு (கண்டி) மாற்றி தன்னை ஒரு சுதந்திர அரசனாகப் பிரகடனம் செய்தனர். இக்காலம்தொட்டு கி. பி 1815 வரை கண்டி இராச்சியம் பெரும்பாலும் சுதந்திர நாடாய் விளங்கியது.

பயிற்சி IV

இடைவெளிகளை நிரப்புக:

1. பண்டுதொட்டு மத்திய மலைப்பிரதேசம்.....எனப்பட்டது.
2. மலாயஇரட்டை.....ஆகியவர்களின் புகலிடமானது.
3. கி. பி. 1344-ல்.. .....தலைநகரைக் கம்பளையில் அமைத்தான்.

4. கம்பளை அரசர்கள்.....என்ற தமிழ் அரசனுக்கு கப் பங்கட்டினர்.
5. அழகக்கோனுர் ஆரியச் சக்கரவர்த்தியை வென்ற பின்..... .....இருந்த சேனதிபதிகள் கைக்கு அதிகாரம் மாறியது.
6. 6-ம் பராக்கிரமவாகு அரசனனபோது கம்பளை அரசர்கள் அவ னுக்கு.....செலுத்தினர்.
7. கம்பளை அரசனின் அமைச்சர்களின் ஒருவனுன.....பராக் கிரமவாகுவின் இராசாதிகாரத்திற்கு எதிராய் புரட்சி செய்தான்.
8. பராக்கிரமவாகு புரட்சியை அடக்க.....அனுப்பினுன்.
9. மலாயஇரட்டையின் பிரதான பிரிவுகள் (a)..... (b).....(c).....(d).....(e).....
10. மலாயஇரட்டை.....எனப்பட்டது.
11. 6-ம் பராக்கிரமவாகுவின் மரணத்தின் பின் மலாயஇரட்டை யின் தலைவர்கள் தங்கள் அரசன்.....எதிராகப் புரட்சி செய்தனர்.
12 விக்கிரமவாகு அவர்களை வெற்றிகொண்டு தலைநகரை..... .....அமைத்தான்.
13. அவன் தன்னை ஒரு.....அரசனுகப் பிரகடனம் செய்தான்.
14. கண்டி இராச்சியம்.....வரை பெருமளவு சுதந்திர முடையதாய் இருந்தது.

(c) கோட்டை

நிசங்கா அழகக்கோனுர் ஏரியும் சதுப்பு நிலங்களும் அகழிகளும் சூழ்ந்த அரண் ஒன்றைக் கோட்டையில் அமைத்தபோதுதான் இவ்விடத் தைப்பற்றி நாம் முதன்முதல் அறிந்துகொள்ளுகிறோம். இவன் இக் கோட்டையை ஆரியச் சக்கரவர்த்தியின் எதிர்ப்புகளுக்கு பாதுகாப்பா கவே அமைத்தான். ஆரியச் சக்கரவர்த்தியோடு பொருதி அவன் பெற்ற வெற்றியை நினைவூட்டும்பொருட்டு இக்கோட்டைக்கு ஜயவாதன புரக்கோட்டை எனப் பெயரிட்டான் கி. பி. 1415-ல், 6-ம் பராக்கிரமவாகு கோட்டையைத் தனது தலைநகராக்கிக்கொண்டான். தாழ்ந்த பிரதே சச் சிங்கள அரசு ''கோட்டை இராச்சியம்'' எனப்பட்டது. இவ்வரசனது ஆட்சியின் இறுதிக்காலத்தில் யாழ்ப்பாணமும், கண்டியும் இவனுக் குத் திறை செலுத்தின. கோட்டை அரசன் ஒரு பேரரசன் அல் லது சக்கரவர்த்தியாகக் கொள்ளப்பட்டான். பராக்கிரமவாகுவின் மர ணத்தின்பின் கோட்டையில் உள்நாட்டுக் கலகங்கள் உண்டாயின. யாழ்ப்பாணமும் கண்டியும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு கோட்டையினின்றும் விலகி தங்கள் சுதந்திரத்தை பிரகடனம் செய்து

கொண்டன. எப்படி என்றாலும் கோட்டை பேரளவுக்காயினும் இலங்கையின் பிரதான இராச்சியமாக விளங்கியது. 1505-ல் போர்த் துக்கீயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டை இராச்சியத்தின் நிலை இதுவே.

பயிற்சி V

இடைவெளிகளை நிரப்புக:-

1. .....முதலில் கோட்டையை அரண் செய்தான்.
2. 1415-ல்.....அதனைத் தன் தலைநகராக்கினுன்.
3. அவன் தனது ஆட்சிக்கால இறுதியில்.....ஆகிய இரு இராச்சியங்களையும் தனது ஆணைக்குட் கொண்டுவந்தான்.
4. பராக்கிரமவாகுவின் மரணத்தின் பின் கோட்டையில் உள்நாட் டுக் கலகம் உண்டாகவே கண்டியும் யாழ்ப்பாணமும்..... .....நாடுகள் ஆயின.
5. பேரளவுக்கு என்றாலும் கோட்டை இலங்கையின்..... இராச்சியமாகத் தொடர்ந்து இருந்தது.

VI விவசாயமும் வர்த்தகமும்

சிங்களவர்கள் இப்பொழுது ஈரலிப்புப் பிரதேசத்தில் இருந்தப டியால் (148-ம் பக்கத்திலுள்ள படம் பார்க்கவும்) நீர்ப்பாசன வேலை கள் ஒன்றும் செய்யப்படவில்லை. ஏனெனில் அவை வேண்டப்பட வில்லை. நீர் போதியளவு இருந்தபோதிலும் விவசாயம் கைவிடப்பட் டது. இது கீழ்வரும் காரணங்களுக்காய் இருக்கலாம். அரசர் கறுவா வியாபாரம் இலாபமுடையதெனக் கண்டதால் நெற் செய்கையைக் கைவிட்டனர். மக்களும் பலாக்காய், கிழங்குவகை, தேங்காய் முதலான உப உணவுப் பொருட்கள் வேண்டிய அளவு இருந்தபடியால் நெற் செய்கை கைவிடப்படுதல் பற்றி கவலையடையவில்லை. கடைசியாக அதி கமளவு நெல் செய்வதாயின் வரட்சி, ஈரலிப்புப் பருவங்கள் மாறி மாறி வரவேண்டும். ஈரலிப்புப் பிரதேசத்தில் போதியளவு ஈரலிப்புப் பருவம் இருந்தாலும் வரண்ட பருவம் இருப்பதில்லை.

ஈரலிப்புப் பிரதேசத்தில் கறுவா அதிகம் வளர்ந்ததுமன்றி இலங்கைக் கறுவாவுக்குப் போதிய மதிப்புமிருந்தது. இரத்தினக் கற்கள், யானை பாக்கு ஆகிய பொருட்களும் வெளிநாட்டு வியாபாரப் பொருட்களாம். 1-ம் புவனேகவாகு எகிப்து நாட்டுச் சுலுத்தானுடன் கறுவா, யானை இரத்தினக்கற்கள் அளிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டான்.

கறுவா வர்த்தகம் அரசனுக்குச் சொந்தமாயிருந்தது. ஒரு குறிக்கப்பட்ட சாதியார் கறுவாப்பட்டையெடுக்கும் தொழிலைச் செய்த னர்; இதை அவர்கள் அரசனுக்குச் செய்யவேண்டிய பணிகளில் ஒன்

ருகக் கொண்டனர். இவ்வர்த்தகத்தால் பயன்பெற்றவர்கள் அரசர்களும் இவ்வர்த்தகத்தை வேற்று நாடுகளில் நடத்திய அராபிய வர்த்தகருமாவர்.

பயிற்சி VI

1. (a) கி. பி. 1235-ல் விவசாயத்தை ஏன் கவனியாமல் விட்டனர்?
   (b) நெற் செய்கை செய்தலைப்பற்றி மக்களும் ஏன் கவலை கொள்ளவில்லை?
   (c) ஏன் நீர்ப்பாசன வேலைகள் செய்யப்படவில்லை.?
   (d) நெற் செய்கைக்கு ஈரலிப்புப் பிரதேசம் ஏன் உகந்தது அல்ல?
2. இக்காலத்து வெளிநாட்டு வர்த்தகப் பொருட்கள் யாவை?
3. இலங்கையில் கறுவா வர்த்தகம் யாரால் நடத்தப்பட்டது?
4. யார் அதனால் நன்மை அடைந்தனர்.

VII பௌத்த, இந்து மதங்கள்

இக்காலத்தில் தேரவாத பௌத்தமே இலங்கையில் போதிக்கப்பட்டது. ஆனால் மகாயான இந்து வழக்கங்கள் பௌத்தத்துடன் கலந்துகொண்டு வந்தன. இலங்கையின் வடபகுதி மக்கள் அனைவரும் இந்து மதத்தையே பின்பற்றினர்கள். இக்காலத்தைப்போல இந்துமத செல்வாக்கு பௌத்தத்தில் வேறெப்பொழுதாவது அதிகம் காணப்படவில்லை. மகாயானிகளின் செல்வாக்குக்கான சான்று போதிசத்துவருக்கு செலுத்தப்பட்ட வணக்கம் வளர்ந்துகொண்டு போனதிலிருந்து தெளிவாகிறது. இந்துமதச் செல்வாக்கு பலமடையவும், சிங்கள மன்னர்கள் சிங்கள இராச்சியத்தில் இந்துக் கோயில்களைக் கட்டினர்கள். உதாரணமாக 2-ம் பராக்கிரமவாகு இரத்தினபுரிக்கு அண்மையில் மகாசமன் தேவாலயத்தையும் 4-ம் பராக்கிரமவாகு அழுத்நுவரையில் விஷ்ணு கோயில் ஒன்றையும் கட்டினர்கள். தேவாலயங்களில் மாத்திரமல்ல பௌத்த விகாரைகளில் கூட இந்து தேவர்களையும் பௌத்தர் வணங்கினர்கள். உதாரணமாக கம்பளையிலுள்ள இலங்காதிலக விகாரையில் இந்து தெய்வங்கட்கும் இடம் அளிக்கப்பட்டது. பௌத்த சந்நியாசிகள்கூட இந்து தெய்வங்களான பிரமன், சிவன், விஷ்ணு ஆகியவர்களின் அருளை வேண்டினர்கள்.

பிற்காலத்தில் பௌத்த சங்கத்தின் பண்பு குன்றிப்போனதற்கு சான்றுகள் உண்டு. ஐந்து அரசர்கள் தகுதியில்லாத சந்நியாசிகளை சங்கத்திலிருந்தும் அகற்றி, ஏனையவர்கள் "வினய" விதிகட்கு அடங்கி நடக்கவேண்டுமென்று கட்டாயமும் செய்தனர்.

பயிற்சி VII

சுருக்கமான விடைகள் தருக:-

(a) இக்காலத்தில் இலங்கையில் போதிக்கப்பட்ட புத்த தருமம் யாது?

(b) மகாயான அநுசரணைகள் பௌத்தத்தில் இருந்தன என்பதற்கு சான்றுகள் யாவை?

(c) இக்காலம் பௌத்தத்தில் காணப்பட்ட இந்துமத அநுசரணைகட்கு உதாரணங்கள் தருக.

(d) தகுதியற்ற புத்த குருக்களை நீக்கிவிட்டு சங்க ஒழுக்கத்தை மீண்டும் நிலைநாட்டிய அரசர் எத்தனைபேர்?

VIII இலக்கியம்

இலங்கை வரலாற்றின் முன் இரண்டு காலங்களைப்போல இக்காலத்திலும் பெரும்பாலும் புத்த குருக்களே நூலாசிரியர்களாய் இருந்தனர். இக்காலத்தில் இலங்கையில் அநேக நூல்கள் எழுதப்பட்டன. ஏனெனில் அரசர்கள் நூலாசிரியர்களை ஆதரித்ததோடு சில அரசர்கள் தாங்களே நூல்களையும் எழுதினர்கள். நூல் ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் பௌத்த குருக்களாய் இருந்தபடியால் அவர்கள் எழுதிய நூல்களில் பல மதச்சார்பு உடையன. அன்றியும் அநேக நூல்கள் பாளி மொழியில் எழுதப்பட்டன. இக்காலம் எழுதப்பட்ட சமயச்சார்பு நூல்களில் பிரதானமானவை தூபவம்சம் ரெத்தவன ஹல விகாரை வம்சம் என்பன.

இக்காலத்தில் எழுதப்பட்ட நூல்களுள் போதிய தொகை நூல்கள் சிங்கள இலக்கியமாயிருத்தல், இக்கால இலக்கிய வரலாற்றின் பிரதானமான ஓர் அம்சமாகும். சிங்கள நூல்களில் பல, பாளி பாஷையிலிருந்த நூல்களின் மொழிபெயர்ப்புகளாம். இதற்கு தூபவம்சய, அத்தனகலவம்சய என்ற இரண்டு நூல்களையும் எடுத்துக் காட்டாக கூறலாம். இவை இரண்டும் முன்னர் குறிக்கப்பட்ட பாளி நூல்களின் மொழிபெயர்ப்புகளாம். கவ்சிலுமின, காவியசேகர, குதியகாவிய முதலாம் சமயச்சார்பான செய்யுள் நூல் பலவும் இக்காலத்தில் வெளிவரலாயின.

இக்காலத்து ஆசிரியர்கள் இந்திய சந்தேச அல்லது தூதுச் செய்யுட்களை போலத் தாங்களும் எழுதினர்கள். இச்செய்யுட்கள் அரசனுக்கு அல்லது அவர் குடும்பத்தில் ஒருவருக்கு ஆசீர்வாதம் வேண்டி கடவுளுக்கு அல்லது போதி சத்துவருக்கு தூது அனுப்புவதை பொருளாகக் கொண்டன. காளிதாசனுடைய மேகதூதம் ஒரு சந்தேச காவியமாகும் இலங்கையில் எழுதப்பட்ட சந்தேசங்கள் இதனை மாதி

ரியாகக்கொண்டன. இவ்வகையான சந்தேச நூல்கள் ஏழு இன்றும் உள. ஸ்ரீ ராகுல என்ற வித்தகராம் பௌத்த குரு இவற்றில் சில வற்றை எழுதினர். செலலிகினி சந்தேச, பறவி சந்தேச என்பன இவரால் எழுதப்பட்டன.

IX கட்டடக்கலையும் சிற்பமும்

இக்காலத்துக் கட்டடங்களிலும் சிற்ப வேலைகளிலும் அழியாதிருப் பன மிகச் சிலவே. இக்காலத்தில் கட்டப்பட்ட பெருங் கட்டடங்கள் இலங்காதிலக, கடலதேனியா என்ற இரு விகாரைகளுமாம். கட்டடக் கலையிலும் சிற்பத்திலும் தென் இந்தியச் செல்வாக்கு இக்காலத்தில் புலப்படுகின்றது. இக்காலத்தில் கட்டப்பட்ட அநேக கோயில்கள் தென்இந்திய இந்து ஆலயங்கள்போல் அமைவுற்றன. பொலநறுவை யிலுள்ள முதலாம் சிவன்கோயில் பாண்டியப் பேரரசிலுள்ள கற்கோ யில்களை ஒத்தது. கடலதேனியா விகாரை விஜயநகரப் பேரரசின் கட்ட டக்கலை ரீதியில் உள்ளது.

பயிற்சி VIII

சுருக்கமான விடைகள் தருக:

1. இக்காலத்து நூலாசிரியர்களில் பலர் யாரைச் சேர்ந்தவர்?
2. இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய சில அரசர்களின் பெயர்கள் தருக.
3. நூல்கள் எழுதிய சில அரசர்களின் பெயர்கள் தருக.
4. இக்காலத்தில் பாளி மொழியில் எழுதப்பட்ட இரண்டு நூல் களின் பெயர்கள் தருக.
5. இக்காலத்தில் எழுதப்பட்ட இரு சிங்கள நூல்களின் பெயர் கள் தருக.
6. சந்தேச செய்யுளைப்பற்றி சிறு குறிப்பெழுதுக. ஸ்ரீ ராகுல எழுதிய இரு சந்தேச நூல்கள் யாவை?
7. இக்காலம் கட்டப்பட்ட இரு பெரிய விகாரைகளின் பெயர்கள் என்ன?
8. கட்டடக்கலையில் விஜயநகர ரீதியைப் பின்பற்றி கட்டப்பட்ட கட் டடம் யாது?
9. பாண்டிய கட்டடக் கலையைப் பின்பற்றி கட்டப்பட்ட கட்டடத் தின் பெயர் என்ன?
10. இக்காலத்து இந்துக் கோயில்கள் எம்முறையைப் பின்பற்றிக் கட்டப்பட்டன?

17-ம் அத்தியாயத்தில் வினாக்கள்

1. "தென்மேற்காக இடப்பெயர்வு"—இச்சொற்றொடரை விளக் குக. இவ் இடப்பெயர்வுக்கான காரணத்தை ஆராய்க.
2. பண்டைய இலங்கையில் மூவகைத் துர்க்கங்கள் அல்லது கோட்டைகள் இருந்தன. அவை கிரிதுர்க்கம், வனதுர்க்கம், ஜலதுர்க்கம் என்பன. இக்காலத்து தலைநகர்களை ஒழுங்காகக் கூறி அவை ஒவ்வொன்றும் எவ்வகைத் துர்க்கமெனவும் கூறுக.
3. தலைநகர் அடிக்கடி மாற்றப்பட்டதுக்கான காரணங்களை சுருக் கமாக விளக்குக.
4. இக்காலத்து புறநாட்டு படையெழுச்சிகளைப்பற்றி சுருக்கமான ஒரு குறிப்பு வரைக.
5. கண்டி இராச்சியம் அல்லது யாழ்ப்பாண இராச்சியத்தைப் பற்றிய சரித்திரத்தை எழுதுக.
6. அரசரும், மக்களும் இக்காலத்தில் விவசாயத்தை ஏன் கை நெகிழ்ந்தார்கள்.
7. கறுவா வியாபாரத்தைப்பற்றி சுருக்கமான குறிப்பு வரைக.

இக்காலம் பௌத்தத்தின் மீது மகாயானமும், இந்துமத மும் செலுத்திய செல்வாக்குக்கு உதாரணங்கள் தருக.

9. சந்தேச செய்யுள் என்ற விஷயத்தை சுருக்கமாக விளக்குக.
10. இக்காலக் கட்டடக்கலையில் பாண்டிய, விஜயநகர செல்வாக் கள் காணப்படுதற்கு உதாரணங்கள் தருக.

கால அட்டவணை.

கி. மு. 600 தொடக்கம் கி. பி. 1600 வரையும்உள்ள காலத்தை அடக்கி 4 கால அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. மாணவருக்கு சரித்திர காலங்களை மனதில் அழுத்துவதற்கும் இலங்கையிலும் மறுபாகங்களிலும் ஒரே காலத்தில் நடந்த விஷயங்களை உணர்த்துவதற்கும் இவை மிகவும் உபயோகமானவை. குறுகியகால எல்லைகளுக்கு விபரச்செறிவுடன் மேலும் பல கால அட்டவணைகளைத் தாமாகவே செய்துகொள்ள மாணவர் தூண்டப்படவேண்டும்.